உ

ஓம்

தத் ஸத்.

ஸ்ரீ சங்கரபாஷ்யத்தின் ஸாராம்சங்களடங்கிய

த்வாதசோபநிஷத்.

தமிழ் மொழிபெயர்ப்பு.

நா, கி. ராஜாராமையரால்
ப்ரகடிக்கப்பட்டது.

MADRAS:
PRINTED AT THE ADDISON PRESS.

1914.

All Rights Reserved.

உ

ஓம்

தத் ஸத்.

ஸ்ரீ சங்கரபாஷ்யத்தின் ஸாராம்சங்களடங்கிய

த்வாதசோபநிஷத்.

தமிழ் மொழிபெயர்ப்பு.

நா. கி. ராஜாராமய்யரால்

பிரசுரிக்கப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE ADDISON PRESS.

1914.

All Rights Reserved.

உ

பரமஜீவகாருண்யரும்

தமிழ்க் கல்விக்கு போஷகரும்,

எனது அன்பருமான

கானாடுகாத்தான்

ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்களுக்கு,

ஒரு நன்றிக்கடன்

இஃது

சமர்ப்பிக்கப்பட்டது.

உ

பரோபகாரத்தன்மையும்

தமிழ்க் கல்விக்கு போஷகருமாய்,

எனது அன்பருமான

கானாடுகாத்தான்

ஸ்ரீமான் சா. ரம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்களுக்கு,

பெரு நேசத்துடன்

இந்நூல்

சமர்ப்பிக்கப்பட்டது.

ஓம்.

முகவுரை.

சுக துக்கங்களின் பற்றிலிருந்து விடுபடுதல் முக்தி. இஃது உண்மை யறிவினால் கைகூடும். 'உண்மை யறிவு' என்பதும், 'பிர்ம வித்தை' என்பதும் ஒரே பொருள்படும். பிர்மம் உண்மை, வித்தையென்பது அறிவு. இந்த அறிவுக்கிடமாகிய நூல்கள் அனைத்திலும் நம்ம நான்கு வேதங்களிலுள்ள உபநிஷத்துக்கள் சிறந்தவை. இது பற்றியே இவை வேதங்களின் 'ஞானகாண்டம்' எனப்படும்.

இவ்வுபநிஷத்துக்கள் நூற்றெட்டிருந்தாலும், இவற்றுள் பன்னிரண்டைத் தலைமையாகப் பெரியோர் கொண்டிருக்கின்றனர். மேற்கூறிய பிர்மவித்தையை அடைய இப்பனிரண்டைப் போன்ற ஸாதனம் இஹலோகத்திலே வேறில்லை. மேலும் அத்வைத ஸித்தாந்தத்தை நிலைநிறுத்திய ஸ்ரீசங்கரபகவத் பூஜ்ய பாதரும் இப்பன்னிரண்டுக்குத் தான் பாஷ்யம் செய்தருளி யிருக்கின்றார்.

ஸம்ஸ்க்ருத பாஷையின் பயிற்சி இக்காலத்தில் மிகவும், மலினமாய்விட்டது. இதனால், நம்மவர்களுக்கு இந்நூலினிடத்தே அளவிறந்த பக்தி விச்வாஸமிருந்தபோதிலும், இதன் ஆராய்ச்சி மிகவுங் குறைந்துபோயிருக்கின்றது. பிர்மவித்தைக்கு ஊன்றுகோலாகிய இந்நூல் நம்மவர்களுக்குப் பயன்படவேண்டுமென்ற கருத்துக்கொண்டே எனது காலஞ்சென்ற பிதா செய்திருந்த இவ்வுபநிஷத்துக்களின் மொழிபெயர்ப்பை சுத்தப்படுத்தி பிரசுரிக்கத்துணிந்தேன்.

அடியில் அச்சிட்டிருக்கும், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யர்களால், எனக்கு ஆசீர்வாதத்துடன்

ஓம்.

முகவுரை.

சுக துக்கங்களின் பற்றிலிருந்து விடுபடுதல் முக்தி. இஃது உண்மை யறிவினால் கைகூடும். 'உண்மை யறிவு' என்பதும், 'பிர்ம வித்தை' என்பதும் ஒரே பொருள்படும். பிர்மம் உண்மை, வித்தையென்பது அறிவு. இந்த அறிவுக்கிடமாகிய நூல்கள் அனைத்திலும் நம்ம நான்கு வேதங்களிலுள்ள உபநிஷத்துக்கள் சிறந்தவை. இது பற்றியே இவை வேதங்களின் 'ஞானகாண்டம்' எனப்படும்.

இவ்வுபநிஷத்துக்கள் நூற்றெட்டிருந்தாலும், இவற்றுள் பன்னிரண்டைத் தலைமையாகப் பெரியோர் கொண்டிருக்கின்றனர். மேற்கூறிய பிர்மவித்தையை அடைய இப்பனிரண்டைப் போன்ற ஸாதனம் இஹலோகத்திலே வேறில்லை. மேலும் அத்வைத ஸித்தாந்தத்தை நிலைநிறுத்திய ஸ்ரீசங்கரபகவத் பூஜ்ய பாதரும் இப்பன்னிரண்டிக்குத் தான் பாஷ்யம் செய்தருளி யிருக்கின்றார்.

ஸம்ஸ்க்ருத பாஷையின் பயிற்சி இக்காலத்தில் மிகவும், மலினமாய்விட்டது. இதனால், நம்மவர்களுக்கு இந்நூலினிடத்தே அளவிறந்த பக்தி விச்வாஸமிருந்தபோதிலும், இதன் ஆராய்ச்சி மிகவுங் குறைந்துபோயிருக்கின்றது. பிர்மவித்தைக்கு ஊன்றுகோலாகிய இந்நூல் நம்மவர்களுக்குப் பயன்படவேண்டுமென்ற கருத்துக்கொண்டே எனது காலஞ்சென்ற பிதா செய்திருந்த இவ்வுபநிஷத்துக்களின் மொழிபெயர்ப்பை சுத்தப்படுத்தி பிரசுரிக்கத்துணிந்தேன்.

அடியில் அச்சிட்டிருக்கும், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யர்களால், எனக்கு ஆசீர்வாதத்துடன்

கொடுக்கப்பட்டிருக்கும் ச்லோகாபத்திரத்தால், இப்பொழுதிலையப் பின் வரலாறும், உபயோகமும் பிழையற்று தெளிவாக முத்தையா வின் கருத்துக்கு முற்றிலும் ஒத்திருப்பதாய் கண்டு கொண்டேன்.

இவற்றை ஸாதாரண வழக்கின்படி, ஈச, கேந, கட, ப்ரச்ன முதலாக வெளியிடாமல், ரிக், யஜுஸ், ஸாம, அதர்வண என்ற நான்கு வேதங்களின் கிரமப்படி அவ்வவ் வேதங்களோடு சேர்ந்த உப நிஷத்துக்களைச் சேர்த்து வெளியிட்டிருக்கிறது. மொழிபெ யர்ப்புக்கிடையே ஸ்ரீசங்கரபாஷ்யத்தின் ஸாரங்களை (   ) இவ்விதமான இரட்டை வளைவுக்கு நடுவிலும், அவரது தாத்பர்ய திகளைச் சிறு எழுத்திலும் அச்சிட்டிருக்கிறது.

இவைகளில் முதல் நான்கு உபநிஷத்துக்களையும் சேர்த்து, முதல் பதிப்பாக அச்சடித்த 500 பிரதிகளும், ஸ்ரீமான் வெங் தாச்சி செட்டியார் உதவியால் இரண்டாம் பதிப்பாக, முதல் ஐந்து உபநிஷத்துக்களை தனித்தனியாக அச்சடித்த 1000 பிரதி களும், நம்ம சக்ரவர்த்தி டில்லி பட்டாபிஷேக விசேஷமாய் ஜன க்ஷ—களுக்கு இனமாக கொடுக்கப்பட்டன.

இப்பொழுது பன்னிரண்டு உபநிஷத்துக்களையும் சேர்த்து வெளியிடுகிறேன்.

சிதம்பரம்,
18-10-1913.

என். எஸ். ராஜாராம்

கொடுக்கப்பட்டிருக்கும் ச்லாகாபத்திரத்தால், இப்பொழுதைய பின் வரலாறும், உபயோகமும் பிறவும் தெளிவாக முதனூலின் கருத்துக்கு முற்றிலும் ஒத்திருப்பதாய் நன்கு விளங்கும்.

இவற்றை ஸாதாரண வழக்கின்படி, ஈச, கேந, கட, ப்ரச்ந முதலாக வெளியிடாமல், ரிக், யஜுர், ஸாம, அதர்வண என்னும் நான்கு வேதங்களின் கிரமப்படி அவ்வவ் வேதங்களோடு சேர்ந்த உப நிஷத்துக்களைச் சேர்த்து வெளியிட்டிருக்கிறது. மொழிபெயர்ப்புக்கிடையே ஸ்ரீசங்கரபாஷ்யத்தின் ஸாரங்களை ( ) இவ்விதமான இரட்டை வளைவுக்குறியிலும், ஆதாரச்ருதிகளைச் சிறு எழுத்திலும் அச்சிட்டிருக்கிறது.

இவைகளில் முதல் நான்கு உபநிஷத்துக்களையும் சேர்த்து, முதல் பதிப்பாக அச்சடித்த 500 பிரதிகளும், ஸ்ரீமான் [illegible] தாச்சி செட்டியார் உதவியால் இரண்டாம் பதிப்பாக, முதல் ஐந்து உபநிஷத்துக்களை தனித்தனியாக அச்சடித்த 1000 பிரதிகளும், நம்ம சக்ரவர்த்தி டில்லி பட்டாபிஷேக [illegible] முமுக்ஷுக்களுக்கு இனமாக கொடுக்கப்பட்டன.

இப்பொழுது பன்னிரண்டு உபநிஷத்துக்களையும் சேர்த்து வெளியிடுகிறேன்.

சிதம்பரம்,
18-10-1913.

என். எஸ். ராஜாராம்

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீகாமகோடி பீடாதிபதி

ஸ்ரீ சங்கராசார்யார் அருளிய

ச்லோகா பத்திரிகை.

ஸ்ரீசந்த்ர மௌளீச்வராய நம:.

ஸ்ரீமத் பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யரும், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதியும், ஜகத்குருவுமான, ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாருடைய அதிஷ்டானமான ஸிம்ஹாஸனத்தில் அபிஷேகம் பெற்ற ஸ்ரீமத் மஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ ஸம்யமீந்த்ரர்களுடைய சிஷ்யவர்யரான ஸ்ரீமத் சந்திரசேகர ஸரஸ்வதீ ஸ்ரீபாதர்களால், ஸமஸ்த கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், வேதோக்தமான ஆசாரத்தில் ஆழ்ந்தவரும், ஸ்ரீஸாம்பசிவ சரணாரவிந்தங்களை ஆராதிப்பதில் லக்ஷ்மீ கடாக்ஷ விசேஷத்தைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டவரும், நமது பிரிய சிஷ்யருமான ராஜாராம சர்மாவிற்கு காருண்ய ஸ்நேஹபூர்வமாக அனுக்ரஹிக்கப்பட்ட,

ச்லோகா பத்திரிகை.

நமது முக்ய பிரிய சிஷ்யரான காகட்டணம் வகீல் என். பி. ஸுப்ரமண்யய்யர், ஞானம், பக்தி, வைராக்யம் முதலிய ஸத்குண ஸம்பன்னராய், நமது பூர்வாசார்யர்களும், அத்வைதம் முதலிய ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களும், ஸாக்ஷாத் ஸ்ரீமத் ஈச்வரருடைய அவதாரபூதர்களுமான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்களுடைய மதத்தை அவலம்பித்து, ஸதாசார்யமுகமாய், விதிப்படி, உபநிஷத், பிரம்ம ஸூத்ரம், கீதை என்ற ப்ரஸ்தானத்ரயத்தை காலக்ஷேபஞ்செய்து, தன் ச்ரத்தையாலும், ஞானத்தாலும், முயற்சியாலும் அடைந்த இந்த அத்வைத சாஸ்திர ஞானத்தை, ச்ரத்தையுள்ள மற்றவர்களும் அடையவேண்டுமென்ற கருத்துடன் வேதாந்த சாஸ்திரங்களை திராவிட பாஷையில் (தமிழில்) மொழி பெயர்த்தார்.

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீகாமகோடி பீடாதிபதி

ஸ்ரீ சங்கராசார்யார் அருளிய

ச்லாகா பத்திரிகை.

ஸ்ரீசந்த்ர மௌளீச்வராய நம:.

ஸ்ரீமத் பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யரும், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதியும், ஜகத்குருவுமான, ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாளுடைய அதிஷ்டானமான ஸிம்ஹாஸனத்தில் அபிஷேகம் பெற்ற ஸ்ரீமத் மஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ ஸம்யமீந்த்ரர்களுடைய சிஷ்யவர்யரான **ஸ்ரீமத் சந்திரசேகர ஸரஸ்வதீ** ஸ்ரீபாதர்களால், சாந்த கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், வைதீகமான ஆசாரத்தில் இருப்பவரும், ஸ்ரீ ஸாம்பசிவ சரணாரவிந்தங்களை ஆராதிப்பதில் லக்ஷ்மீ கடாக்ஷ வீக்ஷணத்தை படைத்து அலங்கரிக்கப்பட்டவரும், நமது பிரிய சிஷ்யருமான ராஜாராம சர்மாவிற்கு நாராயண ஸ்மரணபூர்வமாக அனுக்ரஹிக்கப்பட்ட,

ச்லாகா பத்திரிகை.

நமது முக்ய பிரிய சிஷ்யரான நாகபட்டணம் வகீல் எஸ். பி. வைத்யநாதய்யர், ஞானம், பக்தி, வைராக்யம் முதலிய ஸத்குண ஸம்பன்னரால், நமது பூர்வாசார்யர்களும், அத்வைதம் முதலிய ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களும், ஸாக்ஷாத் ஸ்ரீமத் இந்துசேகருடைய அவதாரபுருஷர்களுமான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்களுடைய மதத்தை அவலம்பித்து, வேதாசார்யமுகமாய், விதிப்படி, உபநிஷத், பிரம்மஸூத்ரம், கீதை என்ற ப்ரஸ்தானத்ரயத்தை காலக்ஷேபஞ்செய்து, தன் சக்தியாலும், ஞானத்தாலும், முயற்சியாலும் அடைந்த இந்த அத்வைத சாஸ்திர ஞானத்தை, சக்தியுள்ள மற்றவர்களும் அடையவேண்டுமென்ற கருத்துடன் வேதாந்த சாஸ்திரங்களை திராவிட பாஷையில் (தமிழில்) மொழிபெயர்த்தார்.

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீகாமகோடி பீடாதிபதி

ஸ்ரீ சங்கராசார்யார் அருளிய

ச்லாகா பத்திரிகை.

ஸ்ரீசந்த்ர மௌளீச்வராய நம:.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யரும், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதியும், ஜகத்குருவுமான, ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாளுடைய அதிஷ்டானமான ஸிம்ஹாஸனத்தில் அபிஷேகம் பெற்ற ஸ்ரீமத் மஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ ஸம்யமீந்த்ரர்களுடைய சிஷ்யவர்யரான ஸ்ரீமத் சந்திரசேகர ஸரஸ்வதீ ஸ்ரீபாதர்களால், ஸமஸ்த கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், வேதோக்தமான ஆசாரத்தில் ஆழ்ந்தவரும், ஸ்ரீஸாம்பசிவ சரணாரவிந்தங்களை ஆராதிப்பதில் லக்ஷ்மீ கடாக்ஷ வீக்ஷணத்தை பெற்று அலங்கரிக்கப்பட்டவரும், நமது ப்ரிய சிஷ்யருமான ராஜாராம சர்மாவிற்கு நாராயண ஸ்மரணபூர்வமாக அனுக்ரஹிக்கப்பட்ட,

ச்லாகா பத்திரிகை.

நமது முக்ய ப்ரிய சிஷ்யரான ககடப்பட்டணம் வக்கீல் என். பி. ஸுப்ரமண்யையர், ஞானம், பக்தி, வைராக்யம் முதலிய ஸத்குண ஸம்பன்னரார், நமது பூர்வாசார்யர்களும், அத்வைதம் முதலிய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களும், ஸாக்ஷாத் ஸ்ரீமத் ஈச்வரனுடைய அவதார புருஷர்களுமான ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர்களுடைய மதத்தை அவலம்பித்து, வேதாசார்ய முகமாய், விதிப்படி, ஸம்ஹிதை, ப்ராஹ்மணம், ஸூத்ரம், ஸ்லோக ரூப ப்ரஸ்தானத்ரயத்தை காலக்ஷேபஞ்செய்து, தன் சக்தியாலும், ஞானத்தாலும், முயற்சியாலும் அடைந்த இந்த அத்வைத சாஸ்திர ஞானத்தை, சக்தியுள்ள மற்றவர்களும் அடைய வேண்டுமென்ற கருத்துடன் வேதாந்த சாஸ்திரங்களை திராவிட பாஷையில் (தமிழில்) மொழி பெயர்த்தார்.

அவருடைய புத்ரரான என். எஸ். ராஜாராம சர்மா, அநேக ளில் ஐதரயம், தைத்திரீயம், கடம், சுவேதாச்வதரம், கேனம் என்ற ஐந்து உபநிஷத்துக்களை, வெகு ரமணீயமாய் அச்சிட்டு லௌகிக ப்ரயோஜனத்தை உத்தேசிக்காமல் 1500 பிரதிகளை வித்வான்க ளுக்கும், வித்யார்த்திகளுக்கும் கொடுக்கிறார்கள்; இனாமாய் கொடுக்க உத்தேசித்திருக்கிறார்.

மேலும், ஆங்கிலேய மஹாராஜாவும், ஆர்யாவர்த்த ஸார்வ பௌமரும், நம்மால் எப்பொழுதும் அவருடைய க்ஷேமலாபத் தைக்கோறப்பட்டவரும், ஆஸ்திக மதத்தை ரக்ஷிப்பதில் கீர்த்தி பெற்றவருமான ஸ்ரீமான் ஜார்ஜ் பூபதி, தன் சக்ரவர்த்தினி யுடன் ஹஸ்தினாபுரியில் பட்டாபிஷேக மஹோத்ஸவம் செய்த பொழுது, ராஜாராம சர்மாவின் லோகோபகாரத்துக்கான ப்ரயத்னத் தை விஞ்ஞாபனஞ் செய்யப்பெற்று, மஹாராஜாவவர்கள் அதை அங்கீகரித்து, அந்த விஷயத்தில் தனக்குண்டான ப்ரீதியை வெ ளியிடும் ஓர் ச்லாகா பத்திரிகையை அவருக்கு அனுப்பினார்.

ஒப்பாரும் மிக்காருமில்லாத நமது சக்ரவர்த்தி ஸந்நிதியிலி ருந்து கிடைத்த பத்திரிகை நம்மால் பார்க்கப்பட்டது. இந்த உபநிஷத் முதலிய வேதாந்தக்ரந்தங்களை மூலத்தோடு கூட வெகு அழகான தமிழ் நடையில் மொழிபெயர்த்திருப்பது, அநேகமாக மதவிவரங்களை அறிய விரும்புவோர்களுக்கு அத்யந்த உபகார மாயிருக்குமென்றும், நமது ஆர்யமத ஸித்தாந்தத்திற்கு ஸாரமா மான நிதியும், ஸமஸ்த ஜனங்களுக்கும் பரமபுருஷார்த்தங்களைக் கொடுக்கக்கூடியதுமான ஸ்ரீமத் பிரமவித்யையை போதிக்கும் உத்தம கிரந்தங்களை இப்படி ஸதாசார்யபுருஷர் காலக்ஷேபம் செய்வதில் இதைப் படிக்கும் ஆஸ்திகர்களுக்கு தேசமான விருப் பத்தை உண்டாக்குமென்றும் அபிப்பிராயப்படுகிறேன்.

ஆகையால் நமக்கு பரமஸம்மதமான இக்காரியத்தில் ப்ர வர்த்தித்திருக்கும் இவரை ஆஸ்திக சிரோமணிகளும், நமது சிஷ்யவர்க்கங்களும் யதாசக்தி ஆதரிக்கவேண்டுமென்று.

முகாம்
மகேந்திரமங்களம்,
19-6-12.

நாராயண ஸ்மிருதி

மஹா மஹோபாத்யாயர்

ரா. சந்திரசேகர சாஸ்திரிக

ப்ரதான அத்யாபகர்

ஸம்ஸ்கிருத கலாசாலை, மைலாப்பூர்.

“ஸம்ஸ்கிருத பாஷையில் திறமையுள்ளவர்கள் ஏ
ஆயிரத்தில் ஒருவர் இருக்கிறார். அப்படியிருக்கையில்
துக்களில் உபதேசிக்கப்படும் விஷயங்களை விசாரிக்கத் த
காரிகிடையவே கிடையாதென்று ஆலோசித்து, ராஜஸ்ரீ
பண்டிதர்களின் பூர்ண ஸகாயத்தையடைந்து வேதத்தி
சிக்கப்படும் அர்த்தத்தை யறிய விரும்புவோர்களின்
திற்காக ஸ்ரீ சங்கர பகவத்பாதாளால் வெளியிடப்பட்ட
தின் கருத்தை ஸுலபமான தமிழ் நடையில் மொழி
அச்சிடுகிறார். இதைப் படிப்பவர்களுக்கு ஸம்ஸ்கிரு
ஞானமில்லாமலே வேதாந்தார்த்தங்களெல்லாம் நன்று
டும். இதில் ஸந்தேகமில்லையென்று சந்திரசேகர சாஸ்
ஸம்மதியைத் தெரிவிக்கிறார்.”

1–2–1913.

(I) ருக்வேதம்.

---

1. ஐதரேயோபநிஷத்.

(I) ருக்வேதம்.

---

1. ஐதரேயோபநிஷத்.

ஓம்.

ஓம் தத்ஸத்.

ருக்வேதீய

ஐதரேயோபநிஷத்.

சாந்தி.

(இனிச் சொல்லப்படப்போகிற பிரம வித்யா பிராப்திக்கு இடையூறு நேராவண்ணம் சாந்தி சொல்லப்படுகிறது).

என்னுடைய (இவ்வுபநிடத்தைப் படிக்கும் விஷயத்தில் பிரவிர்த்தித்த) வாக் எக்காலத்திலும் மனதில் ஸ்திரமாக விருக்கட்டும்; என் மனதும் வாக்கில் ஸ்திதியை அடைகின்றது (வாக் மனங்கள் ஒன்றுக்கொன்று உதவியாய வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது). ஹே! ஜோதிரூபமான பரமாத்மாவே! எனது அஞ்ஞானத்தைப் போக்கடித்து பிரகாசத்தை அடையும்படி செய்க. ஹே, மனோவாக்குகளே! எனக்கு ஸ்ருதிசொல்லிய பிரம ஞானத்தை வெளியிடும் வேதத்தைக் கொண்டுவந்து சேர்க்கவர்களாகுங்கள். என்னால் கேட்கப்பட்ட வேதமும், அதனர்த்தமும், இவைகளை நான் மறவாமலிருக்கட்டும்; அத்தியயனஞ் செய்யப்பட்டு மறவாமலிருக்கிற வேதத்தை நான் இரவும் பகலும் அனுசந்தானஞ் செய்வேனாக. (படிக்கப்பட்ட வேதத்தில்) யதார்த்தமான வஸ்துவை (பிரமத்தை) சொல்லப்போகின்றேன். ரிதம் ஸத்தியம் (மனதால் வாக்கால் யதார்த்தத்தை விசாரித்து வாக்கால் உண்மையாய் சொல்லுவேன்). மேற்கூறிய பிரமமானது என்னையும் எனக்கு உபதேசிக்கின்ற குருவையும் ரக்ஷிக்கட்டும்.

ஓம்.

ஓம் தத்ஸத்.

ருக்வேதீய

ஐதரேயோபநிஷத்.

சாந்தி.

(இனிச் சொல்லப்படப்போகிற பிரம வித்யா பிராப்திக்கு இடையூறு நேராவண்ணம் சாந்தி சொல்லப்படுகிறது).

என்னுடைய (இவ்வுபநிஷத்தைப் படிக்கும் விஷயத்தில் பிரவிர்த்தித்த) வாக் எக்காலத்திலும் மனதில் ஸ்திரமாக இருக்கட்டும்; என் மனதும் வாக்கில் ஸ்திரத்தை அடைகின்றது (வாக் மனங்கள் ஒன்றுக்கொன்று உதவியாக வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது). தேவ! ஜோதிரூபமான பரமாத்மாவே! எனது அஞ்ஞானத்தைப் போக்கடித்து பிரகாசத்தை அடையும்படி செய்க. ஹே, மனோவாக்குகளே! எனக்குச் சொல்லிய பிரம ஞானத்தை வெளியிடும் சாஸ்திரத்தைக் கொண்டுவந்து சேர்க்க வாருங்கள். என்னால் கேட்கப்பட்ட சாஸ்திரம், அதனர்த்தம், இவைகளை நான் மறவாமலிருக்கட்டும்; அத்தியயனஞ் செய்யப்பட்டு மறவாமலிருக்கிற சாஸ்திரத்தை நான் இரவும் பகலும் அனுசந்தானஞ் செய்வேனாக. (படிக்கப்பட்ட சாஸ்திரத்தில்) யதார்த்தமான வஸ்துவை (பிரமத்தை) சொல்லப் போகிறேன். நான் ஸத்தியம் (மனதால் வாக்கால் யதார்த்தத்தை விசாரித்து வாக்கால் உண்மையாய் சொல்லுவேன்). மேற்கூறிய பிரம மானது என்னையும் எனக்கு உபதேசிக்கின்ற குருவையும் ரக்ஷிக்கட்டும்.

ஓம்.

ஓம் தத்ஸத்.

ருக்வேதீய

ஐதரேயோபநிஷத்.

சாந்தி.

(இனிச் சொல்லப்படப்போகிற பிரம வித்யா பிராப்திக்கு இடையூறு நேராவண்ணம் சாந்தி சொல்லப்படுகிறது).

என்னுடைய (இவ்விடத்தைப் படிக்கும் விஷயத்தில் பிரவிர்த்தித்த) வாக் என்னுடைய மனதில் ஸ்திரமாக இருக்கட்டும்; என் மனதும் வாக்கில் ஸ்திரமாய் அடைகின்றது (வாக் மனங்கள் ஒன்றுக்கொன்று உதவியுள்ள வென்றென்று பிரார்த்திக்கப்படுகிறது). ஹே! ஜோதிரூபமான பரமாத்மாவே! எனது அஞ்ஞானத்தைப் போக்கடித்து பிரகாசத்தை அடையும்படி செய்க. ஹே, மனோவாக்குகளே! எனக்கு நீர் சொல்லிய பிரம ஞானத்தை வெளியிடும் கிரந்தத்தைக் கொண்டுவந்து சேர்க்கவராகுங்கள். என்னால் கேட்கப்பட்ட கிரந்தம், அதனர்த்தம், இவைகளை நான் மறவாமலிருக்கட்டும்; அத்தியயனஞ் செய்யப்பட்டு மறவாமலிருக்கிற கிரந்தத்தை நான் இரவும் பகலும் அனுசந்தானஞ் செய்வேனாக. (படிக்கப்பட்ட கிரந்தத்தில்) யதார்த்தமான வஸ்துவை (பிரமத்தை) சொல்லப் போகின்றேன். நேரே ஸத்தியம் (மனதால் வாஸ்தவ யதார்த்தத்தை விசாரித்து வாக்கால் உண்மையாய்ச் சொல்லுவேன்). மேற்கூறிய பிரமமானது என்னையும் எனக்கு உபதேசிக்கின்ற குருவையும் ரக்ஷிக்கட்டும்.

ஸ்ரீ சங்கர பாஷ்யப் பிரதீக சங்கிரஹம். இந்த ஐதரேயோபநிஷத்து ருக்வேதத்தின் ஐதரேய பிராஹ்மணத்திலுள்ள இரண்டாவது ஆரண்யகத்திலுள்ளது. இதன் முன்னே வெறுங் கர்மங்களைச் சொல்லியாகி முடிந்தது.

"ஞானத்துடன் கூடிய கர்மத்துக்குப் பரமாவதி [illegible], அதுவும் பிராணவித்தையை யறிவதுடன் முடிந்தது. பிராணனென்று ஒரு தேவன் இருக்கின்றான்; அத்தேவனுக்கு வாக் முதலிய இந்திரியங்களெல்லாம் இவர்கள் விபூதிகளாம், விஸ்தாரங்களாம். ஒரு மனுஷன் இந்தப் பிராணாத்மாவாக ஆகின்றான்; இவ்விதம் தேவதையாயின் தன்மை பெறுவதுதான் [illegible]தான் மோக்ஷம். ஞானத்துடன் கூடிய கர்மத்தால் இதைவிட அதிகமாய் ஒன்றுங் கிடைக்காது" என்று சிலர் கூறுங் கக்ஷியை மறுத்துக் கேவலமான ஆத்ம ஞானமே மோக்ஷ ஸாதனமென்று ஸாதிக்கும்பொருட்டு இந்த உபநிஷத் ஆரம்பிக்கப்படுகிறது. கர்ம ஸாதனமின்றி கேவல ஞானமாத்திரம் போதுமாவென்ற கக்ஷியை விஸ்தாரமாக எடுத்துப்பேசி, முடிவில் கேவல ஞானமே போதியதென்று ஸித்தாந்தப் படுத்துவதற்காகவே இந்த உபநிஷத் சொல்லப்பட்டதென்று பிரதீகத்தில் கூறப்படுகிறது.

ஸ்ரீ சங்கர பாஷ்யப் பிரதீக சங்கிரஹம். இந்த [illegible] ருக்வேதத்தின் ஐதரேய பிராஹ்மணத்திலுள்ள [illegible] ஆரண்ய கத்திலுள்ளது. இதன் முன்னே வெறுங் கர்மங்களைப் [illegible] முடிந்தது.

"ஞானத்துடன் கூடிய கர்மத்துக்குப் பயனாவது [illegible], அது வும் பிரணவத்தை யறிவதுடன் முடிந்தது. பிராணனென்று [illegible] இருக்கின்றான்; அத்தேவனுக்கு வாக் முதலிய இந்திரியங்களெல்லாம் [illegible] வர்கள் விபூதிகளாம், விஸ்தாரங்களாம். ஒரு புருஷன் [illegible] மாவாக ஆகின்றான்; இவ்விதம் தேவதை யாகின்றதே புருஷார்த்தம். இது தான் மோக்ஷம். ஞானத்துடன் கூடிய கர்மத்தால் இதைவிட அதிகமாக ஒன்றுங் கிடைக்காது" என்று சிலர் கூறுங் கக்ஷியை மறுத்துக் கேவலமான ஆத்ம ஞானமே மோக்ஷ ஸாதனமென்று சாதிக்கும்பொருட்டு இந்த உப நிஷத் ஆரம்பிக்கப்படுகிறது. கர்ம ஸாதனமின்றிக் கேவல ஞானம் [illegible] போதுமாவென்ற கக்ஷியை விஸ்தாரமாக எடுத்துப்பேசி, முடிவில் கேவல ஞானமே போதியதென்று சித்தாந்தப் படுத்துவதற்காகவே இந்த உபநிஷத் சொல்லப்பட்டதென்று பிரதீகத்தில் கூறப்படுகிறது.

ஓம்.

ஓம் தத்ஸத்.

ஐதரேயோபநிஷத்.

முதல் அத்தியாயம்.

கண்டம் 1.

1. (நாம ரூபங்களாக விகாரப்பட்டுக் காணப்படுகின்ற) இந்த ஜகத்தானது, ஸ்ருஷ்டிக்கு முன் ஒரே ஆத்மாவாக இருந்தது. அவனையன்றி வேறொன்றுமில்லை; அந்த ஆத்மா லோகங்களைச் ஸ்ருஷ்டிப்பேனென்று ஆலோசித்தனர்.

2. அங்ஙனம் ஆலோசித்து இவ்வுலகங்களைச் ஸ்ருஷ்டித்தனர்; அவைகளாவன, அம்பஸ்: ஸ்வர்க்கலோகமும், அதன்மேல் உள்ள மஹா, ஜந, தப, ஸத்ய முதலிய இந்த உலகங்களும்; மரீசி: ஸூர்ய கிரணங்களால் வியாபிக்கப்பட்ட அந்தரிக்ஷ லோகம்; மரம்: ஜீவன்கள் சாகும் பூமி, பூலோகம்; ஆபம்: ஜலஸம்பந்தமான பூமிக்குக் கீழ்ப்பட்ட உலகங்கள். இந்த உலகங்களை, ஜலத்தைப் பிரதானமாகவுடைய பஞ்சபூதங்களைக்கொண்டு ஸ்ருஷ்டித்தனர்.

3. இப்பொழுது என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட உலகங்கள் பரிபாலிக்கப்படாவிடின் நாசமுறும். ஆதலால், லோக பாலர்களை ஸ்ருஷ்டிப்பேனென்று மீண்டும் ஆலோசித்தார். அங்ஙனம் யோசித்து, மேற்கூறிப் போந்த பஞ்சபூதங்களினின்றும் ஓர் புருஷாகாரமாகத் திரட்டி அதைப் பிண்டமாக ஆக்கினர்.

4. அப்பிண்டத்தைக் குறித்து ஸங்கல்பஞ்செய்தார். அதினின்றும் முகமுண்டாயிற்று. பக்ஷியின் முட்டைபோல், அம் முகத்தினின்று வாக் இந்திரியம் உண்டாயிற்று. அதினின்

றும் அக்கினி தேவதை உற்பவித்தது. பிறகு நாசிகள் - அவை களிலிருந்து க்ராணேந்திரியம் உண்டாயிற்று; அதினின்றும் எங்குமுள்ள வாயு தேவதை உண்டாயிற்று. பிறகு கண் கள் - அவைகளின்றும் சக்ஷுரிந்திரியம்; அதினின்றும் ஆதித்திய தேவதை. பிறகு காதுகள் - அவைகளின்றும் ச்ரோத்ரேந்தி ரியம்; அதினின்றும் திக் தேவதை. பிறகு தோல் - அதினின் றும் லோமங்களாகிற ஸ்பர்சேந்திரியம்; அதினின்றும் ஓஷதி முதலியவற்றிற்கு அதிஷ்டான தேவதையாகின்ற [illegible] தேவதை. பிறகு அந்தக் கரணத்திற்கு அதிஷ்டானமாயிருக்கின்ற ஹிருதய கமலம் - அதினின்றும் மன இந்திரியம்; அதினின்றும் சந்திர தேவதை. பிறகு நாபி (கொப்பூழ்) அதினின்றும் அபானேந்திரி யம்; அதினின்றும் மிருத்யு தேவதை. பிறகு [illegible] அதி னின்றும் ரேதஸாகின்ற உபஸ்தேந்திரியம்; அதினின்றும் அப் தேவதை (வருணன்). இங்ஙனமாக லோக பாலர்களை ஸ்ருஷ் டித்தனர்.

கண்டம் II.

1. இந்த (அக்கினி முதலிய இந்திரிய) தேவதைகள் [illegible] தான இந்த ஸம்ஸார ஸாகரத்தில் விழுந்தார்கள்; ([illegible] ணம் - அவித்தியா காம கர்மங்களை ஆதாரமான [illegible] ஜலமுள்ளது; சோகம், ஜரை, மரணம் முதலிய பெரிய முதலை களால் சூழப்பட்டது; அநாதி; முடிவற்றது; கரையற்றது; பிடிப்பில்லாதது; விஷயேந்திரியங்களை ஆஸ்ரயித்து, [illegible] தால் க்ஷணகாலம் ஆறுதலுள்ளது; பிந்து இந்திரியங்கள், [illegible] தம், ஆசை இவையாகிற காற்றினால் [illegible] அநேக அநர்த்தங்களாகின்ற அலைகளையுடையது; [illegible] உண்டான ரோதனங்களாகிற பெருங் [illegible] யுடையது; சத்தியம், நேர்மை, தானம், தயை, அஹிம்சை, தமம், சமம், திருதி முதலான ஆத்ம குணங்களாகின்ற [illegible] மாகின்ற ஓடத்தைக் கொண்டே கடக்கத்தக்கது. அதனை

சேர்வதற்கு ஸத்ஸங்கம், சர்வத்தியாகம் இவையாகும் மார்க்கமுள்ளது; மோக்ஷமாகின்ற அக்கரையுள்ளது).

அந்த ஆத்மாவானவர் மேற்கூறிய பிரகாரம் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட புருஷ பிண்டத்தைப் பசி, தாகம் இவைகளுடன் சேர்த்துவைத்தனர். இதனால் மேற்படி பிண்டத்தினின்றும் வெளிப்பட்ட தேவதைகளுக்கும் பசி, தாகம் உண்டாயிற்று. அப்பொழுது நாங்கள் எவ்விடமிருந்து அன்னஞ் சாப்பிடுவோமோ அவ்விடத்தை எங்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று அத்தேவதைகள் பிரம்மத்தை நோக்கி வினவினார்கள்.

2. அதற்கு ஈசுவரன் பசுவின் உருவைப்போல் ஒரு பிண்டத்தைச் சிருஷ்டித்து இதில் இருங்களென்று காண்பித்தனர். தேவதைகள் இஃது எங்களுக்குப் போதியதல்லவென்று சொன்னார்கள். பிறகு ஒரு குதிரையைச் சிருஷ்டித்து அதனைக் காண்பித்தனர். அதுவும் போதாதென்றார்கள்.

3. அதன் பிறகு ஒரு புருஷனைக் காண்பித்தார். இஃது போதுமென்று ஒப்பினார்கள். அப்படியானால், அதனுள் பிரவேசியுங்களென்று சொன்னார்.

4. அக்கினி—வாக்குமாய் முகத்திலும், வாயு—பிராணனாக மூக்கிலும், ஆதித்தியன்—சக்ஷுரிந்திரியமாகக் கண்களிலும், திக்குகள்—ச்ரோத்ரேந்திரியமாகக் காதுகளிலும், ஓஷதி வனஸ்பதிகள்—ஸ்பர்சேந்திரியமாகத் தோலிலும், சந்திரன்—மனமாக இருதயத்திலும், மிருத்யு—பாயு இந்திரியமாக நாபியிலும், ஜலம்—உபஸ்தேந்திரியமாக உபஸ்தத்திலும் பிரவேசித்தார்கள்.

5. பசி, தாகம் இவ்விரண்டும் எங்களுக்கு இருப்பிடம் ஏற்படுத்த வேண்டுமென்று ஈசுவரனைக் கேட்டன; அதற்கவர் இத்தேவதைகளினிடம் இருங்களென்றார்; அவர்கட்குக் கிடைக்கும் ஆகாரத்தில் உங்களுக்கும் பாகமுண்டென்றார்; ஆதலால் எந்தத் தேவதைக்கு ஹவிஸ் கொடுக்கப்படினும் அதில் பசி, தாகம் இவைகளுக்கும் பாகமுண்டு. (அதாவது பசி, தாகமிருப்பதால் இந்திரிய தேவதைகளும் அன்னத்தைக் கிரகிக்கின்றார்கள்.)

13. இவ்விதமுண்டான (இவ்விதம் காரணமாக [illegible] கின்ற உபாதியுடன் சேர்ந்த) ஜீவன் அஹங்கார[illegible] "இச் சரீரத்தில் வேறு யாதிருக்கிறது. எல்லாம் நான்" என்று அபி மானங்கொண்டு ஆரோபித்துக் கொள்ளுகின்றான். இவ்விதம் நீடூழிகாலம் அறியாமையால் உறங்குகிறது. [illegible] பரம கிருபாநிதியாகிய ஆசாரியருடைய உபதேசத்தால் விழித் துக்கொண்டு, மேற்குறித்த இதம்ப்ரஹ்மத்தை [illegible] தன் னிடத்திற் [illegible] பார்க்கின்றான்.

14. ஆகலால் இதம்ப்ரஹ்மத்துக்கு இதந்திரனென்று பெயர். (இதந்திரன் இதனைப் பார்க்கிறவன்; இங்கு ஆரோபிக்கப்படு கின்ற பிரத்தியகாத்மா சரீரத்தில் இருக்கிறதாக [illegible] ஆத்மாவையே பார்க்கின்றார்; அதாவது [illegible] யிருக்கின்றார்). அவரை இந்திரனென்று பரோக்ஷமாகச் சொல்லு கின்றார்கள். (பூஜ்யர்களின் பெயரை நேரில் [illegible] லும், பரோக்ஷமாகச் சொல்வது பிரியமல்லவா; [illegible] கெல்லாம் பூஜ்யராயுள்ள ஈசனாகிய அவ்வனை [illegible] தடை என்ன?).

இவ்வத்தியாயத்தின் முக்கிய தாத்பரியம். [illegible] ஆக்கி, அளித்து, அழிப்பவன், அனைவர்க்கும், [illegible] தாகிய பரமாத்மா, இந்த எல்லா ஜகத்தையும் [illegible] யின்றி ஆகாசாதி கிரமமாகத்தானே சிருஷ்டித்து அதை ஆத்மாவாய்த் தானே அறிந்துகொள்ளும் பொருட்டு, சகல சரீரங்களின் [illegible] லுந் தானே பிரவேசித்து, தனது ஆத்மாவைப் [illegible] கிறேனென்று அறிந்துகொள்ளுகிறார். ஆகலால் எல்லாச் சரீரங்களிலும் ஒரே ஆத்மாவேயன்றி வேறில்லை என்பது இதன் தாத்பரியம்.

சிருஷ்டிக் கிரமத்தில் அனேக விதங்களில் [illegible] தென்ற ஆக்ஷேபத்துக்கு சமாதானம் இரண்டு சொல்லப்படுகின்றன. (1) சிருஷ்டி கிரமஞ் சொல்லியது அர்த்தவாதம். அதாவது ஆத்ம ஸ்வரூபத் தின் லக்ஷணத்தை எளிதில் போதிப்பிக்கவேண்டிய [illegible] காரம்போல் ஒரு கட்டுக்கதையாகக் கூறப்பட்டது. ஆத்மாவை அறிய வேண்டியது முக்கியமே தவிர சிருஷ்டிக் கிரமந் தெரிந்துகொள்வதில் யாதொரு பயனுமில்லை. (2) ஆங்ஙனமில்லாவிடினும், மாயாவிசார [illegible]

கின்ற ஈச்வரனுக்கு யாதுதான் செய்யவியலாது? மாயைக்கு யாதும் அசம்பாவிதமில்லை; யாவும் கூடும். ஆத்மாவை அறிவதற்குச் சாஸ்திரோபதேசமே விதியென்க வேறொன்றுமில்லை. ஆதலால் ஆத்மரூபத்தைப் போதிக்க உபநிஷத் முதலிய சாஸ்திரங்கள் பிரவிர்த்தித்திருக்கின்றன. எதுவரை தன் ஆத்மாவை யறியாமலிருக்கின்றானோ அதுவரை அவித்தையாலுண்டான உபாதி தர்மங்களைத் தனக்கென்று கருதி பிரமன் முதல் ஸ்தம்பப் பூச்சி ஈறாகவுள்ள ஜன்மங்களை அடிக்கடி மீண்டு மீண்டு மெடுத்து அவித்யா காம கர்ம வசத்தால் சம்சரிக்கின்றான். இவ்விதம் ஒவ்வொரு தடவையிலு மடைந்த தேகேந்திரியக் கூட்டத்தை விட்டொழிகிறான். பிறகு வேறு கூட்டத்தை யடைகிறான். இவ்விதம் அடிக்கடி ஜனன மரண துக்கத் துக்குள் இடர்ப்பட்டு உழல்கின்றான். இத்தகைமை வாய்ந்தவன் எப்படிப்பட்ட அவஸ்தைகளுடன் இருக்கிறான் என்பதைப்பற்றிச் சுருதி பின்னே மொழிகின்றது.

13. இவ்விதமான [illegible] (இவ்விதம் [illegible] கின்ற உபாதியுடன் சேர்ந்த) ஜீவன் [illegible] இச் சரீரத்தில் [illegible] மானங்கொண்டு ஆரோபித்துக் கொள்ளுகின்றான். [illegible] [illegible] பாப கிருபாதிகளாகிய [illegible] தாக்கொண்டு, [illegible] னிடத்திற் [illegible].

14. ஆகையால் [illegible] (இதந்திரன் [illegible]; [illegible] கின்ற [illegible] ஆத்மாவைப் பார்க்கின்றார்; [illegible] பிருக்கின்றார்). அவனை [illegible] கின்றார்கள். (பூஜ்யர்களின் [illegible] ளார், [illegible] கெல்லாம் பூஜ்யராயுள்ள [illegible] தனையென்ன?).

இவ்வத்தியாயத்தின் முக்கிய தாத்பர்யம். [illegible] அளித்து, அழிப்பவன், [illegible] தாகிய பரமாத்மா, [illegible] மன்றி ஆகாசாதி [illegible] தானே அறிந்துகொள்ளும் [illegible] லும் தானே பிரவேசித்து, [illegible] கிறேனென்று அறிந்துகொள்ளுகிறார். [illegible] ஒரே ஆத்மாவேயன்றி வேறில்லை யென்பது இதன் தாத்பர்யம்.

சிருஷ்டிக் கிரமத்தில் அநேக விவகாரங்களில் [illegible] தென்ற ஆக்ஷேபத்துக்கு சமாதானம் [illegible] (1) சிருஷ்டி கிரமஞ் சொல்லியது அர்த்தவாதம். [illegible] தின் லக்ஷணத்தை எளிதில் போதிப்பிக்கவேண்டிய [illegible] காரம்போல் ஒரு கட்டுக்கதையாகக் கூறப்பட்டது. ஆத்மாவை [illegible] வேண்டியது முக்கியமே தவிர சிருஷ்டிக் கிரமம் தெரிந்துகொள்வதில் யாதொரு பயனுமில்லை. (2) ஆங்ஙனமில்லாவிடினும், [illegible]

றின்ற ஈசுவரனுக்கு யாதுதான் செய்யவியலாது? மாயைக்கு யாதும் அசம்பாவிதமில்லை; யாவும் கூடும். ஆத்மாவை அறிவதற்குச் சாஸ்திரோபதேசமே விதியென்க வேறொன்றுமில்லை. ஆதலால் ஆத்மரூபத்தைப் போதிக்க உபநிஷத் முதலிய சாஸ்திரங்கள் பிரவிர்த்தித்திருக்கின்றன. எதுவரை தன் ஆத்மாவை யறியாமலிருக்கின்றானோ அதுவரை அவித்தையாலுண்டான உபாதி தர்மங்களைத் தனக்கென்று கருதி பிரமன் முதல் ஸ்தம்பப் பூச்சி ஈறாகவுள்ள ஜன்மங்களை அடிக்கடி மீண்டு மீண்டு மெடுத்து அவித்தியா காம கர்ம வசத்தால் சம்சரிக்கின்றான். இவ்விதம் ஒவ்வொரு தடவையிலு மடைந்த தேகேந்திரியக் கூட்டத்தை விட்டொழிகிறான். பிறகு வேறு கூட்டத்தை யடைகிறான். இவ்விதம் அடிக்கடி ஜனன மரண துக்கத்துக்குள் இடர்ப்பட்டு உழல்கின்றான். இத்தகைமை வாய்ந்தவன் எப்படிப்பட்ட அவஸ்தைகளுடன் இருக்கிறான் என்பதைப்பற்றிச் சுருதி பின்னே மொழிகின்றது.

இரண்டாம் அத்தியாயம்.

கண்டம் IV.

இந்த ஜீவன் வைராக்கியத்தால் அல்லாமல் [illegible] கர்மங்களை யியற்றி இவ்வுலகத்தினின்றும் [illegible] லோகத்தை யடைந்து, அந்த கர்ம பலன் [illegible] முடிந்தவுடன் கிரமமாக இவ்வுலகத்தைப் பெற்று அன்ன ரூபமாய் [illegible] களில் வீழ்த்தப்படுகின்றான். அப்புருஷனிடம் முதல் முதல் [illegible] கர்ப்பமாக விருக்கின்றான். இவ்விஷயம் விஸ்தாரமாக இந்த அத்தியாயத்தில் எடுத்துரைக்கப்படும்.

1. இந்த ஜீவன் முதலில் புருஷனிடம் கர்ப்பமாயிருக்கின்றான். யாதொன்றெனில், அன்னமயமான தேகத்தின் எல்லா அங்கங்களினின்றும் ஸாரமாக உண்டாகின்ற ரேதஸ் என்கிற தனதாத்மாவைத் தன்னிடமே பிதா தரிக்கின்றான். அந்த ரேதஸை ஸ்திரீயினிடம் எப்பொழுது ஸம்போக காலத்தில் வெளி விடுகிறானோ அப்பொழுது அந்த ஜீவனுக்கு முதல் ஜென்ம முண்டாகின்றது. (அதாவது முதலிலுண்டாகிற அவஸ்தை).

2. அந்த ரேதஸ் ஸ்திரீயினிடம் பிரவேசித்தவுடன் அவளோடே சார்ந்ததாக ஆகிவிடுகின்றது. (அதாவது தன் சொந்த அங்கமாகிய ஸ்தனம் முதலானது எப்படித் தன் தேகத்துடன் ஒத்ததா யிருக்கின்றதோ அப்படியே போலாக). ஆகையால் அந்தக் கர்ப்பம் இவளை ஹிம்சிக்கின்றதில்லை. அவள் இவனிடமுண்டான கர்ப்பத்தைப் பாதுகாக்கின்றாள்.

3. அங்ஙனங் கர்ப்பத்தைப் பாதுகாக்கின்ற அவளும் காப்பாற்றப்படவேண்டியது. அவள் கர்ப்பத்தைத் தரிக்கின்றாள். பத்தாவது மாதத்தில் குமாரன் ஜனிக்கின்றான்; பிதாவுடைய ஆத்மாவே புத்திர ரூபமாக உண்டாகின்றான். அவ்விதம் பிறந்த குமாரனை பிதா ஜாதகர்ம முதலான கிரியைகளால், தன்னைப் போலப் பாவிக்கின்றான். அங்ஙனஞ் செய்வது மற்றவர்களின்

உலக சந்ததிகள் விருத்தியாகும் பொருட்டு. (அதாவது புத்திரோத்பத்தியானது சந்ததி விருத்திக்குமட்டுமேயன்றி மோக்ஷத்திற்கல்ல). இவ்விதம் மாதாவின் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டு வருவது இந்த ஜீவனுடைய இரண்டாவது ஜன்மம் (அதாவது இரண்டாவது அவஸ்தை).

4. இவ்வித முண்டான புத்திராத்மா, பிதாவிற்குப் புண்ணிய கர்மங்களைச் செய்ய பிரதிநிதியாகிறான். (அதாவது பிதாவுக்குப் பிரதியாக இருந்து புண்ணிய கர்மங்களைச் செய்கின்றான்). அப்பொழுது இந்தப் பிதாவான ஆத்மா கிருதகிருத்யனாக வயோதிகத்தை யடைந்து மரிக்கின்றான். (அதாவது இத்தேகத்தை விடுகின்றான்). அங்ஙனம் விட்டவன் கர்ம வசத்தால் வேறு ஜன்மத்தை யடைகின்றான். இஃது ஜீவனுடைய மூன்றாவது ஜன்மம் (அதாவது மூன்றாவது அவஸ்தை).

5. “கர்ப்பத்திலிருந்துகொண்டே, இந்த வாக் அக்னியாதி தேவர்களின் எல்லா ஜன்மங்களையு மறிந்துகொண்டேன்; முன்னர் என்னை இரும்பைப்போலத் தகர்க்கப்படாமல் இருக்கின்ற அநேக சரீரங்கள் கீழு (அதாவது நிகிருஷ்ட உலகங்களில்) ரக்ஷித்தன; இப்பொழுது பருந்து வலையினின்றும் அறுத்துக் கொண்டு தப்பி ஓடுவதுபோலத் தத்வ ஞானத்தாலுண்டான சாமர்த்தியத்தினால் இந்தச் சரீரத்தைப் பிளந்துகொண்டு வெளிக்கிளம்புகின்றேன்” என்று கர்ப்பத்திலிருந்துகொண்டே வாமதேவர் சொன்னார்.

6. இப்படிப்பட்ட ஞானியான வாமதேவர், இச்சரீரத்தை விட்டுக் கிளம்பி, ஸ்வர்க்கத்தில் எல்லாக் காமங்களையும் பெற்று அமிருதரானார்.

மூன்றாம் அத்தியாயம்.

கண்டம் V.

1. (முமுக்ஷுக்களாயிருக்கின்ற பிராமணர்கள் ஒருவர்க்கொருவர் பிரச்னம் பண்ணிக்கொள்ளுகின்றதாவது):

எவனை இவர் ஆத்மாவென்று சாக்ஷாத்காரமாய் உபாஸிக்க வேண்டுமோ அவர் யார்? இருவர்களுக்குள் எவர் ஆத்மா? (தேகத்தில் செய்கைக் கருவிகளாக இருப்பதா? அல்லது செய்பவனாக இருப்பதா?). எதனால் ரூபத்தைப் பார்க்கின்றானோ, எதனால் சப்தத்தைக் கேட்கின்றானோ, எதனால் கந்தங்களை முகருகின்றானோ, எதனால் வசனங்களைப் பாஷிக்கின்றானோ, எதனால் இது நல்லது, இது கெட்டது என்றறிகின்றானோ அந்த ஆத்மா யாரெனில்:

2. ஹிருதயமென்று கூறப்பட்டிருப்பதோ, மனமென்று உரைக்கப்பட்டதோ, அதனை விளக்கிறோமாம். (இவ்விரண்டு கரணங்களின் சேர்க்கை பிராணனென்றுஞ் சொல்லப்படும்; இந்தக் கரணமன்றோ நாம் உபாஸிக்கவேண்டிய ஆத்மா வாருமோ? ஆகாது. மற்று யாது? இந்த ஹிருதயமென்ற ரூபமான கரணத்தைக்கொண்டு எவன் உபலப்திமானா அவனேன்றே, எவனுடைய கரணத்திற்கு அடியிற்கண்ட வ்ருத்திகள் அந்தக்கரண விருத்திகளாயிருக்கின்றனவோ, அதுவன்றோ உபாஸிக்கத்தக்க ஆத்மாவென்று நிச்சயித்துக்கொண்டார்கள்). அவ்விருத்திகளாவன:— ஸம்ஜ்ஞானம் (சேதன பாவம், பிராணித்வம்); ஆக்ஞானம் (ஈச்வர பாவம்); விஜ்ஞானம் (லௌகிக ஞானம்); ப்ரஜ்ஞானம் (அறிவு); மேதா (படித்ததைத் தரிக்கும் சாமர்த்தியம்); திருஷ்டி (இந்திரியங்களால் எல்லாவற்றையு மறிவது); திருதி (தைரியம்); மதி (நினைவு); மனீஷா (சொந்த புத்தி); ஜூதி (மனதிற்கு வருந் தாக்காவஸ்தை); ஸ்ம்ருதி

(ஞாபகம்); ஸங்கல்பம் (ஏற்பாடு); க்ரது (நிர்மாணம்); அஸு (ஜீவித்துக்கொண் டிருக்கும்படியான விருத்தி); காமம் (கிட்டாததில் ஆசைவைத்தல்); வசம் (ஸ்திரீ முதலியவர்களிடத்தில் இச்சை); இவைகளெல்லாம் பிரக்ஞானத்தின் பெயர்கள் (அதாவது, சுத்தப் பிரக்ஞானமாக விருப்பது பிரமம்; அப்பிரமத்துக்கு மேற்கூறப்பட்ட ஸம்ஞாநாதி அந்தக்கரண விருத்திகள் காமிகயங்கள், உபாதிகளாக விருக்கின்றன. இவ்வுபாதிகளுடன் சேர்ந்த நாம ரூபாத்மகமாக விருக்கும் பிரமமாகின்றது).

3. (இத்தகைய பிரக்ஞான ரூபமாக இருப்பதே பிரமம்; இவ்வித பிரமம் எல்லாச் சரீரங்களிலும் புகுந்து, அந்தக்கரணோபாதிகளிற் சேர்ந்து பல ஜலாசயங்களில் ஒரே சூரியன் பல சூரிய பிம்பங்களாகத் தோன்றுவதுபோல, ஒவ்வொரு பிராணியினிடத்தும் பின்னமாகத் தோன்றுகின்றது). இவரே இந்திரன், இவரே ப்ரஜாபதி (முற்கூறப்பட்ட முதல் முதல் உண்டானவர்), இவரே தேவர்கள் (மேலே பகரப்பட்ட அக்கினியாதி தேவர்கள்); இவரே பிருதிவி முதலான பஞ்சபூதங்கள்; இவரே க்ஷுத்ர சரீரங்கள் (ஸர்ப்பாதி ஜந்துக்கள்); இவரே பீஜங்கள் (காரணங்கள்). இன்னும் மற்றுமுள்ளவைகளானவை:—அண்டத்திலுண்டாகின்ற ஜந்துக்கள், கர்ப்பப் பையிலுண்டாகின்ற ஜந்துக்கள், வியர்வையிலுண்டாகிற ஜந்துக்கள், முளைக்கின்ற விருக்ஷங்கள், அசுவங்கள், கோக்கள், புருஷர்கள், யானைகள், இன்னும் மற்றுமுள்ள பிராணிகள் யாவும், பக்ஷிகள், ஸ்தாவரம் (கல் முதலியன) எல்லாம் இவரே. யாவும் பிரக்ஞா நேத்திரம் (அதாவது பிரக்ஞையையே நேத்திரமாக, அதாவது நடத்துகிற கர்த்தாவாக வைத்துக்கொண்டிருக்கின்றது). யாவும் பிரக்ஞானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. உலகமே பிரக்ஞா நேத்திரம். பிரக்ஞையே பிரதிஷ்டை; பிரக்ஞானமே பிரமம்.

ஓம்.

ஓம் தத்ஸத்.

க்ருஷ்ண யஜுர்வேதீய

தைத்திரீயோபநிஷத்.

சாந்தி.

இவ்வுபநிஷத்தின் முதல் வல்லி முதல் அநுவாகமே
இதற்குச் சாந்தியாகும்.

ஸ்ரீ சங்கர பாஷ்ய ப்ரதீகச் சுருக்கம்.—விதித்த உபாஸனங்களாக விருக்கின்ற நித்திய கர்மங்களைப்பற்றியும், காம்யார்த்தங்களாக விருக்கின்ற நைமித்திகக் கர்மங்களைப்பற்றியும், கர்மகாண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது. கர்மங்களுடைய பலன் ஸம்ஸாரமே. இக்கப் பக்ஷத்தில் கூட துக்கங்கள் இரண்டுமிருக்கின்றன. நித்திய கர்ம மென்னுமவைகள் கர்மங்கள் போதா. ஆதல் பற்றிக் கர்மங்களுக்கு ஹேதுவாக விருப்பதை நிவர்த்திசெய்யும் பொருட்டு இப்பொழுது பிரம வித்தையைப்பற்றி ஆரம்பிக்கப்படுகின்றது. கர்மத்துக்கு ஹேது காமம்—இச்சை. இச்சையே கர்மத்தில் செலுத்தித் தூண்டுகிறது. இச்சை யில்லாதவனுக்குப் பிரவிர்த்தியில்லை. அவன் பதார்த்தங்களில் ஞாபகம் வைக்காமல் தன்னிடத்திற் றிருப்தியாயிருக்கின்றான்.

தன் ஆத்மாவையறிய விரும்புவோருக்கு எந்த விஷயங்களில் விருப்பமற்றுப்போகும். தன் ஆத்மா என்றது பிரமம். அதையறிந்தவன் உத்தமமான கதியை யடைகிறான். அவைகயால் அவித்தையைத் தள்ளித் தன்னிடத்திலேயே தானிருப்பது பரப் பிராப்தி என்றது. காம்யங்களாகவும், பிரதிஷித்தங்களாகவு மிருக்கிற கர்மங்களை ஆரம்பிக்காமலும், அங்ஙனம் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி கர்மங்களுடைய பலனை அநுபவித்துத் தீர்க்கும்படி செய்தும், விரோதத்தைப் போக்காத நித்திய கர்மங்களை அநுஷ்டானஞ் செய்துகொண்டு மிருந்தால் யாதொரு முயற்சியு மில்லாமலே ஸ்வாத்மா வஸ்தானம் (தன்னிடத்திற்றானிருத்தல்—பிரவிர்த்தியில்லாமை) உண்டாகும். அது மோக்ஷம். கர்மத்தால் சுவர்க்கம் கிடைப்பதுபோல் அதனாலும் மோக்ஷம் உண்டாகிறதென்று கூறுதலொவ்வாது. ஏனெனின், கர்மங்களுள் பலவிதமுண்டு; அவைகளின் பலன்களும் அங்ஙனமே. அநேக ஜன்மாந்தரங்களில் செய்யப்பட்ட கர்மங்களின் விருத்த பலன்கள், ஒரே ஜன்மத்தில் அநுபவிக்கப்படுதலுங் கூடாவையா. அதனாலே, கர்மங்கள் மேன்மேலுஞ்செய்யப்படின், பலன்களும் அங்ஙனமே விருத்தியாகும். முடிவு காலஞ் சம்பவிக்காது. அந்தந்த கர்மத்தின் பலனை அநுபவிக்க சரீரங்கள் உண்டாகிக்கொண்டேவரும். அதனாலே ஜனன மரணங்கள் முடிவின்றிச் சம்பவிக்கும். அப்பொழுது மோக்ஷம் கிடைக்காது. நித்திய கர்மங்கள் ஆரப்த கர்ம பலன்களை நிவர்த்தி செய்யமாட்டா. அநாரப்த பல கர்மங்களை அழிக்கவுமாட்டா. ஆதல்கொண்டே நித்திய கர்மங்கள் மோக்ஷத்துக்குப் போதாவாம். ஞானமில்லாவிடின் கர்ம ஹேதுக்களா யிருக்கிற காமங்களுக்கு ஒழிவு நேரிடாது. ஆத்மாவை அறியாதவனுக்குக் காமம் இருந்துகொண்டே யிருக்கும். தன் ஆத்மாதான் பரப்பிரமம். மோக்ஷ சாதனமாக விருக்கவில்லையென்று கருதி நித்திய கர்மங்களைச் செய்யாமலிருக்கவுங்கூடாது. செய்யாவிடின் கெடுதியுண்டு. உலகத்தில் எதற்கு

ஆரம்பமுண்டோ அது நசிக்கும். ஆதலால் கர்ம ஆரம்பத்தினுல்
முண்டாகாது. வித்யையுடன் கூடின கர்மங்களுக்கு நித்திய மோ
ஸாமர்த்தியமுண்டென்பது அமையாது. இது முற்றும் விரோதம்
முள்ளதற்கு நித்தியத்துவமில்லை. மோக்ஷம் ஆரம்பம் என்று க
பொருந்தாது. எனெனின், மோக்ஷம் பாவ ரூபமுள்ளது (எப்பே
முள்ளது). இல்லாதது உண்டானுல் அது ஆரம்பம் என்று செ
ஆதல்பற்றி அவித்தியா காம கர்மோபாதான ஹேது நிவர்த்தியானு
மங் யவஸ்தானமென்ற மோக்ஷம் ஸித்திக்கும். தன் ஆத்மாவே
அதை யறிந்தாற்றுன் அவித்தியா நிவர்த்தி யுண்டாகும்; அவ்வித்
யை உபதேசிப்பதற்காகவே உபநிஷத் பிரவிர்த்தித்தது. பிரமத்தின்
தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதால் உபநிஷத் என்ற நாமஞ் ஸித்தித்

சீக்ஷாவல்லி

என்ற

முதல் அத்யாயம்

அநுவாகம் I.

(வித்யாப்ராப்தியாகிய இஷ்டம் நிர்விக்னமாக நிறைவேறும் பொருட்டுச் சாந்தியைக் கைக்கொள்ளுகிறதாவது):— எங்களுக்கு (எங்களுக்கும், குருவுக்கும்) (பிராணவிருத்திக்கும், பகலுக்கும் அபிமான தேவதையாகிய) மித்திரனும் (சூரியனும்); (அபான விருத்திக்கும், இரவுக்கும் அபிமான தேவதையாகிய) வருணனும்; (நேத்திரத்திலும், ஆதித்ய மண்டலத்திலும் அபிமானதேவதையாகிய) அர்யமாவும் (சூரியனும்); (பலத்தில் அபிமான தேவதையாகிய) இந்திரனும்; (வாக்கிலும், புத்தியிலும் அபிமான தேவதையாகிய) பிருகஸ்பதியும்; (பாதங்களில் அபிமான தேவதையாகிய) விஸ்தாரமான அடிகளுள்ள விஷ்ணுவும், சுகத்தைச் செய்யட்டும். பிரம்மத்தின் பொருட்டு நமஸ்காரஞ் செய்கிறேன். ஹே, வாயுவே! (பிராணனே) உனக்கு நமஸ்காரம். நீயே பிரத்யக்ஷமான பிரம்மமாயிருக்கிறாய். உன்னையே அவ்விதஞ் சொல்லப்போகிறேன். நீயே, ருதம் (புத்தியால், சாஸ்திரப்படி நிச்சயமான விஷயம்). நீயே சத்தியம். அவ்வாக்கு மயமான மெய்ப்படி வாயினின்று சொல்லப்படுவதான சத்தியமான என்னையும் குருவையும் ரக்ஷிக்கட்டும். (ஓம் சாந்தி என்று மூன்று தடவை கூறுவதின் பயன் யாதெனில், வித்யா ப்ராப்திக்கு ஆத்தியாத்மிக, ஆதிதைவிக, ஆதிபௌதிகங்களாகிய விக்னங்கள் ஒழிவுறட்டுமென்று).

அநுவாகம் II.

இனி சீக்ஷாத்தியாயம் (வேதத்திலுள்ள அக்ஷரங்களை உச்சரிக்கும் படியால் அதை யறிந்துகொள்வதற்காக ஏற்பட்டுள்ள உச்சாரண லக்ஷணமுள்ள சாஸ்திரம்) கூறப்படுகிறது.

1. எழுத்து, 2. ஸ்வரம் (உதாத்தம் முதலியன), 3. ரை (ஹ்ரஸ்வம் முதலியன), 4. பலம் (ப்ரயத்ன வி 5. ஸமதை, 6. சேர்க்கை—இவை அறியத் தெரியவேண்

அநுவாகம் III.

இப்பொழுது ஸம்ஹிதோபநிஷத் சொல்லப்படுகிறது. ஸம் னின், அக்ஷரங்களுடைய சேர்க்கை—அதாவது சப்தங்கள்; இந்த உ கிரந்தத்திலுள்ள சப்தங்கள் அர்த்த ஞான விஷயத்தில் கிரந்த ட யறியும்படியான புத்தி ஸ்வய சாத்தியமன்றாகையால், அர்த்த விசா முன்னரே சப்தங்களை உபாஸித்தால் அதற்குப் பலன்கள் உண்டெ னத் சப்த உபாஸனைக்கிரமம் சொல்லப்படுகிறது. அந்த ஸம்ஹிதா உ ஸம்பந்தமான யசஸும் தேஜஸும் எங்களிடத்திலிருக்கட்டும் என் யன் பிரார்த்திக்கின்றான்.

1-3. ஸம்ஹிதா விஷயமான தர்சனத்தைப்பற்றி இ னிக் கூறுவோம். ஞான விஷயமாயிருக்கிற ஐந்து அ ருண்டு; அவற்றிற்கு அதிகரணங்களென்று பெயர். (ஸ கத்தைக விஷயமாகப் பாவித்து, நாம் தர்சனம் செய்கிற அக்ஷரங்களில் இதனுடைய கூறுபாடும் லோகாதி ஐந்து பதார்த்தங்களால் விசேஷிக்கப்பட்ட அதாவது அந்தப் தங்களின் விஷயமான ஞானம் இருக்கிறதென்று பாவிக்க விக்கவேண்டும்).

சொல்லப்பட்ட ஐந்து அதிகரணங்களாவன:—1. அதி (உலக ஸம்பந்தமுள்ளது). 2. அதிஜ்யோதிஷம், (ஜ்யோதி பந்தம்). 3. அதிவித்யம், (வித்யா ஸம்பந்தம்). 4. அதி (ப்ரஜா ஸம்பந்தம்); 5. அத்யாத்மம், (ஆத்ம ஸம்பந்தம் இவைகளுக்கும் மஹா ஸம்ஹிதா: (பெரிய சேர்க் என்று பெரியோர்கள் கூறுவார்கள். (இவைகளுள் ஸம் ஹிதையுள்ள அடங்கான பதார்த்தங்கள் சொல்லப்படு முதலாவதாகப் பிருதிவி பூர்வ ரூபம் (முந்தின வர்ணம்): வது ஒரு ஸம்ஹிதையின் சப்தத்தில் முதல் அக்ஷரத்தைப் யாகக் காணவேண்டும்). ஸ்வர்க்க லோகம் உத்தர ரூப

வர்ணம்); ஆகாசமே (அந்தரிக்ஷம்) ஸந்தி; (மேற்படி [illegible], ஸ்வர்க்க லோகமும் பூமியும் [illegible]). வாயு ஸந்தானம் (மேற்படி இரண்டையும் [illegible] அந்தப் பதார்த்தம்). அதிஜ்யோதிஷம் :—பூர்வ ரூபம்—அக்னி; உத்தர ரூபம்—ஆதித்தியன்; ஸந்தி—[illegible]; ஸந்தானம்—[illegible]. அதிவித்தை :—பூர்வ ரூபம்—[illegible]; உத்தர ரூபம்—[illegible]; ஸந்தி—வித்தை; ஸந்தானம்—உபதேசித்தல். அதிப்ரஜை :—[illegible] மாதா; உத்தர ரூபம்—பிதா; ஸந்தி—பிரஜை; [illegible]. அத்யாத்மம் :—பூர்வ ரூபம்—[illegible]; உத்தர ரூபம்—[illegible] வாய்; ஸந்தி—வாக்கு; ஸந்தானம்—[illegible]. இவ்விதம் [illegible] ளில் மேற்கூறப்பட்ட [illegible] பாஸிக்க வேண்டும். இங்ஙனம் [illegible] பிரஜை, பசுக்கள், பிரமதேஜஸ், அன்னம், ஸ்வர்க்கம், [illegible] இவைகளுடன் சேர்க்கப்படுகிறான். ([illegible] கிறவனுக்கு மேற்படி பலன் கிடைக்கிறது. [illegible] கிறவனுக்கு பிரம வித்தைக்குரிய [illegible].

அநுவாகம் IV.

ஸ்ரீ காமனுக்கும் (ஸம்பத்தை இச்சிக்கிறவனுக்கும்), [illegible] கும் (ஞாபகசக்தியை [illegible]) ஜப, [illegible] படுகின்றன.

1. வேத காமன் செய்யும் ஜபம் யாதெனில், [illegible] தங்களுக்கெல்லாம் சிலாக்கியமா யிருக்கிறதோ, [illegible] யிருக்கிறதோ, வேதங்களுக்கெல்லாம் [illegible] னின்றும் உண்டாயிற்றோ, [illegible] அந்த ஓங்காரமானது எனக்கு [illegible]; ஹே, தேவ! அமிருதத்துவத்துக்கு [illegible] ஞானத்தைத் தரித்துக்கொண்டவனாக [illegible]; என் [illegible] சரீரம் அந்த ஞானத்தைக் [illegible] என்னுடைய நாக்கு மதுரமான வார்த்தைகளை [illegible] காதுகள் மிகுந்த பொருள்களைக் கேட்கட்டும்; ஹே, ஓங்காரமே!

நீ பிரமத்துக்குப் பிரதீகமாக (விக்ரகமாக) இருக்கின்றனை ; கிகப் பிரக்ஞையால் மூடப்பட்டிருக்கிறாய். ஆகவே நான் நான் கேட்டிருப்பதைக் காத்தி. (கேட்டதைமறவாமலிருக்கச் செ

2. ஸ்ரீ காமன் செய்யும் ஹோமமாவது : "எந்த யானவள் (சம்பந்தமானது) எனக்கு வஸ்திரங்களையும், கோ யும், அன்னபானாதிகளையும் சீக்கிரமாகத் தருவித்துக் கொ கின்றனளோ, விஸ்தாரமாகச் செய்து கொடுக்கின்றனளோ, ஸ்ரீயைப் பசு முதலியவைகளுடன் எனக்குக் கொடு."

(இது "ஸ்வாஹா" வென்று ஹோமஞ் செய்யுஞ் சொல்லப்படுகிறது).

"பிரமசாரிகள் (பிரம வித்துக்கள்) என்னிடம் அனுகட் (அதாவது அவர்களை நான் தினமும் பண்ணும்படி செய்ய அவர்கள் விசேஷமாக வரட்டும் ; அவர்கள் அதிகமாக வர (அதாவது அநேகம் பெரியோர்களை நான் பார்க்கட்டும்) ; கள் என்னை தமப்படுத்தட்டும் (பஹிரிந்திரிய நிக்ரஹத்தைச் செய்யட்டும்) ; அவர்கள் என்னை சமப்படுத்தட்டும் (ரிந்திரிய நிக்ரஹத்தைச் செய்யட்டும்).

3. "ஜனங்களுக்குள் யசஸ்வியாக நான் ஆகட்டும் ; அதிக வரியவானாக நானாகட்டும் ; உன்னிடத்தில் நான் பிர கின்றேன் ; நீ என்னிடம் பிரவேசி. அதாவது உன்னி நான் ஐக்கியமாகட்டும் ; பலவும் போகுமுள்ள உன்னி சோதிக்கின்றேன் ; (எப் பாபத்தைப் போக்குகின்றதோ எவ்விதம் உலகத்தில் பள்ளம் கண்ட விடத்தில் ஜலம் போகு (ஜனங்களை ஜரைக்குட்படுத்தி) மாதங்கள் (காலம்) செ கின்றனவோ, அவ்விதம் நான்கு திக்குகளினின்றும் பிரம துக்கள் என்னிடம் வரட்டும். எல்லாத் துக்க பாபங்களையும் சந் செய்யக்கூடிய ஸ்தானமாக இருக்கின்றாய் ; ஆகலால் னைப் பிரகாசப்படுத்து ; என்னை அடைந்து, எனக்கு அனுக்கி செய்."

அத்தியாயம் V.

முன் அத்தியாயத்தில் [illegible] பட்டது. இப்பொழுது [illegible] கூறப்படுகிறது. அதாவது [illegible] அந்தர்யாமியைப் [illegible]

1-3. [illegible] கேனம். [illegible] காதுகளைப் [illegible] [illegible] வியாபிக்கிறார் [illegible] (இது) [illegible] கப்பட்டது).

[illegible] இந்த [illegible] கடவுளை [illegible] மூன்று [illegible] (பிராணன்); [illegible] கின்றன. [illegible] திரன், சந்திரன் [illegible] றன. [illegible] வாயு. [illegible] கள். இவைகளை [illegible] ராஜ்யத்தை அடைந்தான்; [illegible] ளர்கள் [illegible] தேவர்கள் இவனுக்கு [illegible]

அத்தியாயம் VI.

பிரமம், ஒரு [illegible] உபமதி [illegible], அத்த [illegible], அவன்

உபாஸனேயும் இங்கெடுத்து ஓதப்படுகின்றன. ஞானக் கிராமமி லனோம் விஷ்ணுவை உபாஸிக்கின்றதேபோ, அங்ஙனம் என்றும் ஹ்ருத்ஸ்தானத்தில் பிரமத்தை உபாஸிக்கவேண்டியது.

1-2. உள் ஹ்ருதயத்தில் ஆகாசமிருக்கின்றது; பத்ம மொட்டுப்போன்ற ஒரு மாம்ஸபிண்டம் தைத்திரீயமானது; அதில் நாடிகள் இருக்கின்றன; அதைக் காமக்கோசமாக்கிதை மூடியிருக்கின்றது; அதற்குக் கண்ணோபோல், மனத்தில், இன்னும் நாமத்தை விட்டுவில் ஓர் வெளியிருக்கின்றது; அந்த ஆகாசத்தில், மனோமயமான (விஞ்ஞான) புருஷன் (எல்லா உலகங்களிலும் பூரணமாக வியாபிக்கின்றவன்) இருக்கின்றான்; அவன் மரணமற்றவனாக தகாசமானவன். (இவ்விதம் பிரம ஸ்வரூபத்தை அறிந்து அனுபவிக்கவே பிரமத்தின் மார்க்கம் வகுக்கப்படுகின்றது). அந்த இருதயத்திலிருந்து, சுழுமுனையை செல்கின்றது; இரண்டு தாளாயிக்கு மேலுயில் அந்த ஒரு மாம்ஸபிண்டம் தொங்குகின்றது. (அதனால் உள் அதற்குமேல் கேசங்களுக்குப் புறத்தே, சப்தத்துடன். விசுவாஸி இருதயத்திலிருந்து போகுமிடமாய், சிரஸின் பாகிலைத் திறந்து, புறத்தேயுள்ள மண்டத்து பிரம்மாலோகம் வெளியேறுகின்ற இந்திர ஸ்வரூப பிரம்மத்தின் மார்க்கம். இங்ஙனம் வெளியேறுமவன், பூ: என்ற வியாஹ்ருதி ஆகாரமுள்ள அக்னியில் சேர்கிறான். பிறகு புவ: என்ற வியாஹ்ருதி ஆகாரவாயில். பிறகு, "ஸுவ:" என்ற வியாஹ்ருதி ஆகாரமான ஆதித்யனில் சேர்கிறான்; அதன் பிறகு "மஹ" என்ற வியாஹ்ருதி ரூபமான பிரமத்தில் சேர்கின்றான்; அங்கே ஸ்வராஜ்யத்தைப் பெறுகின்றான்; மனதின் எல்லாம் பதி யென்ற பிரமத்தை அடைகின்றான். வாக்கு, சக்ஷுஸ், ஶ்ரோத்ரம், விஞ்ஞானம் இவைகளுக்கெல்லாம் பதியாய் அதனால் பதிப் பெறுகின்றான். இதுதவிர மேலும் அடைகின்றான்; ஆகாசம்போன்ற ஸூக்ஷ்ம சரீரத்தையுடையதாகவே ஆகின்றான்; ஸத்யமாகிய ஸ்வரூப ஸ்வரூபமா-

அத்யாயம் V

முன் [illegible]

[illegible]

1-3. [illegible]

[illegible]

[illegible]

அத்யாயம் VI.

[illegible]

உபாஸனையும் இங்கெடுத்து ஓதப்படுகின்றன. ஞானக் கிரம நிலையில் யாங்ஙனம் விஷ்ணுவை உபாசிக்கின்றோமோ, அங்ஙனம் என்று கூறப் புகுந்த ஸ்தானத்தில் ப்ரமத்தை உபாசிக்கவேண்டியது.

1-2. உள் ஹ்ருதயத்தில் ஆகாசம் இருக்கின்றது; தாமரைப் பூ வடிவமுள்ள ஒரு மாம்ஸ பிண்டம் [illegible] இருக்கின்றது; அதுவே பிராணன் இருக்குமிடம்; அநேக நாடிகளுடன் கூடிய ஆகாசத்தில் இருக்கின்றது; அதற்குக் கீழே, காம்பு போல், [illegible], இரண்டு [illegible] ஒர் [illegible] இருக்கின்றது; அந்த ஆகாசத்தில், மனோமயமான (விஞ்ஞானமய ஸ்வரூபனான) புருஷன் (எல்லா சரீரங்களிலும் பூர்ணமாக வியாபித்திருக்கின்றவன்) இருக்கின்றான்; அவன் மரணமில்லாதவன்; பிரகாசமுள்ளவன். (இவ்விதம் பிரம ஸ்வரூபத்தை [illegible] விஞ்ஞானமய [illegible] பிரத்யக்ஷமாய்க் காண்பித்துக் கூறப்படுகின்றது). அந்த இருதயத்துக்கு மேல், [illegible] நாடி செல்கின்றது; இரண்டு தாடைகளுக்கு நடுவில் [illegible] ஒரு மாம்ஸ பிண்டம் தொங்குகின்றது. (அதுவே இந்திரயோனி); அதற்கு மேல் கேசங்கள் பிரிந்த ஸ்தானத்தில், [illegible] இந்த நாடி இருதயத்திலிருந்து [illegible], [illegible] இந்த [illegible] வழியாக [illegible] செல்லுகின்றது. இது பிரம்ம லோகத்துக்குப் போகும் [illegible] வெளிப்படுகின்றது. இது [illegible] பிரம்மத்தைப் பிராப்திக்கும் வழியாகும். இங்ஙனம் விஞ்ஞான [illegible] வெளிப்படும் போது, பூ: என்ற வியாஹ்ருதி ரூபமான அக்னியில் சேர்கிறான். பிறகு புவ: என்ற வ்யாஹ்ருதி ரூபமான வாயுவில். பிறகு "ஸுவ:" என்ற வியாஹ்ருதி ரூபமான ஆதித்யனில். பிறகு "மஹ" என்ற வியாஹ்ருதியை சேருகின்றான்; அதன் பிறகு [illegible] பிரமத்தில் சேருகின்றான்; அப்பொழுது [illegible] ஸ்வாராஜ்யத்தைப் பெறுகின்றான்; மனதிற்கெல்லாம் பதியாயிருக்கும் [illegible] பிரமத்தை அடைகின்றான். [illegible] [illegible], விஞ்ஞானம் இவைகளெல்லாம் பதியாகின்றான். [illegible] அதனால் [illegible] அடைகின்றான். இங்கு [illegible] [illegible]; ஆகாசம் போன்ற [illegible] [illegible] ஆகின்றான்; [illegible]

ப்ல சித்திமை யமை அதால் [illegible] இன்றி யமையாதென்பது இந்த [illegible] பரியம்).

அநுவாகம் IX.

விக்ஞானத்திருல் [illegible] பட்டிருக்கின்றமையால் [illegible] மோவென்று கருதி, அது [illegible] புருஷார்த்த சாதனமிருக்கிறதென் [illegible].

1. ரிதம் ([illegible] கிரமமாகவும் [illegible] (வேதாத்தியயனம்), அர்த்த [illegible] கிறது; ப்ரவசனம் ([illegible] அத்தியயனஞ் செய்தல், அல்லது [illegible] மூன்றும் அநுஷ்டிக்கப்பட வேண்டும். [illegible] நடத்தல், போதல்) [illegible] முதற்கொண்டு [illegible] கள் அநுஷ்டிக்கப்பட வேண்டும்" [illegible] கிறது. ஏனெனில், இவ்விரண்டும் [illegible] வேண்டியதென்பதைக் காட்டும் பொருட்டு); [illegible] விருதங்கள்) செய்யப்பட வேண்டும். [illegible]: ([illegible] ஹடம்) செய்யப்பட வேண்டும். [illegible]: ([illegible]) செய்யப்பட வேண்டும். அக்நிகள் (அக்னி [illegible] கள்) செய்யப்பட வேண்டும். அக்னி [illegible] வேண்டும்; அதிதிகளைப் பூஜிக்க வேண்டும்; [illegible] வேண்டும் (லௌகிக வியவகாரம் அதாவது [illegible] காரியங்களைச் செய்ய வேண்டும்); [illegible] டும்; பிரஜன: (பிறப்பித்தல், அதாவது [illegible] னிடத்தில் பிரவேசித்தல்) செய்ய வேண்டியது; [illegible] திரோத்பத்தி — புத்திரனுக்கு விவாக [illegible]

னது) நடத்தவேண்டும்; சத்தியமே கைக்கொள்ளற்பாலது என்று 'ராதீதரர்' கருதினர். தபசே செய்யப்பட வேண்டியதென்பது 'பௌருசிஷ்டி'யினுடைய கொள்கை. ஸ்வாத்தியாயப் பிரவசனங்களை அனுஷ்டிக்க வேண்டியவைகளென்றும், அதே தபஸ் என்றும் 'மௌத்கல்யர்' கொள்கை.

அநுவாகம் X,

இப்பொழுது ஆரம்பிக்கப்படும் ஜபமானது, பிரம வித்தியோத்பத்தி நிமித்தம் அத்தியயனஞ் செய்யப்பட வேண்டிய மந்திரம்.

1. "நான் ஸம்ஸார விருக்ஷத்தினுடைய பிரேரயிதா (அந்தர்யாமியாயிருந்து நடத்துகிறவன்); ஒரு மலையின் உச்சியைப்போல் என்னுடைய கீர்த்தி உயர்ந்திருக்கின்றது; பவித்திரமான ஞானத்தை (பிரமத்தை) மேலான காரணமாக உடையவனாயிருக்கிறேன்; சூரியனிடம் இருக்கின்ற அமிருதமான ஆத்தும தத்துவத்தைப்போல் நான் ஆத்ம தத்துவமாக இருக்கின்றேன்; பிரகாசமுள்ள தனத்தைப்போன்ற ஆத்ம தத்துவமாக இருக்கின்றேன்; மேதாவான புத்தியுள்ளவனாயிருக்கிறேன்; மரணமில்லாதவனாயும், குறைவற்றவனாயும் இருக்கிறேன்" என்பது, பிரம ஞானியாகிய 'திரிசங்கு' என்ற ரிஷியின் வேத வசனம் (ஆத்மா ஒன்றென்னும் அறிவை அடைந்தபின் வசனம். இந்த மந்திரத்தைப் பிரம வித்தியார்த்திகள் ஜபிக்கவேண்டும்).

அநுவாகம் XI.

வேதாத்தியயனஞ் செய்த பிறகு சிஷ்யனுக்குக் குரு செய்யும் உபதேசக் கிரமம் இப்பொழுது சொல்லப்படுகிறது. பிரம்ம விஞ்ஞானத்துக்கு முன் சிரௌதஸ்மார்த்த கர்மங்கள் நியமமாகச் செய்யப்பட வேண்டுமென்ற பொருளு மெடுத்துரைக்கப்படுகின்றது. கர்மங்களால் சம்ஸ்காரஞ் செய்யப்பட்ட விசுத்த சித்தமுடையவனுக்கே ஆத்தும ஞானமுண்டாகும். இங்கு ஞானோத்பத்தி நிமித்தஞ் செய்யப்படவேண்டிய நியமம் சொல்லப் படுகிறது. உபதேசம் எவ்விதமெனில் :—

1. வேதாத்தியயனம் [illegible] ஆக்ஞாபிக்கின்றார்; ஸத்தியமுரை, [illegible] யயநத்தினின்றும் தவறுதலை [illegible] செய்யாமலிருக்கக்கடவை); [illegible] ரிடத்தில் தக்ஷிணை [illegible] குச் சூத்ரம் அறுக்காதே. [illegible] கொண்டு [illegible] யத்தினின்றும் தவறுதலை [illegible] தே; ஆத்ம ரக்ஷணத்தினின்றும் [illegible] றும் தவறாதே; ஸ்வாத்தியாய [illegible] லடையாதே.

2. தேவ, பித்ரு கார்யங்களினின்றும் [illegible] யாதே; மாதாவைத் தெய்வமாக [illegible] பிதாவைத் தெய்வமாகப் பாவித்து [illegible] மாகப் பாவித்து உபாஸி; அதிதியைத் [illegible] உபாஸி; எவை இகழப்படாதவையோ [illegible] எவை சிஷ்டாசார லக்ஷணங்க [illegible] அக்கர்மங்களைக் கைக்கொள்; [illegible] நன்னடையுள்ள கர்மங்களை [illegible]

3. எவர்கள் நமக்குள் ச்ரேஷ்டர்களோ [illegible] களுக்கு வேண்டிய உபசாரம் புரி; [illegible] கொடு; அசிரத்தையுடன் கொடாதே; ஸ்ரீ [illegible] யுடன் கொடு; பயத்துடன் கொடு; [illegible]

4. எந்தக் கர்மத்திலாவது, [illegible] கை நேரிடின் அவ்விஷயத்தில், [illegible] தேசத்துள்ள, யோக்கிய [illegible] கள் யாங்ஙனம் ஒழுகுகிறார்களோ, [illegible] செய்த கர்மக் தோஷத்தினால் [illegible] அவ்விஷயத்திலும் யோக்கியர் [illegible] நட; இதுவே ஆதேசம் (விதி); [illegible]

[illegible]

அத்தியாயம் XII.

[illegible]

[illegible]

பிரமாநந்தவல்லீ [illegible]

[illegible]

இரண்டாம் அத்தியாயம்

அநுவாகம் 1

(இனிக் கூறப்படும் [illegible]
னுஞ் சாந்தி இங்கு சொல்லப்படுகிறது.)

[illegible] ([illegible]
களுக்குப் பிரயோஜனம் [illegible]
யத்தில் சாமர்த்தியத்தை [illegible]
பிரம வித்தை [illegible]
கொருவர் [illegible]

(கர்மங்களுக்கு விரோதமின்றியுள்ள [illegible]
ளான உபாசனைகள் சொல்லப்பட்டன; [illegible]
பற்றியும், வியாஹ்ருதி ரூபமாகவும் [illegible]
துரைக்கப்பட்டது; இப்பொழுது, [illegible]
யிருக்கின்றது. அந்தப் பிரயோஜன அக்ஞானத்தை [illegible]
உபாதியற்ற ஆத்ம தர்சனத்தின் பொருட்டு [illegible]
படுகிறது. பிரம்ம வித்தைக்கும் பிரயோஜனம் அக்ஞான [illegible]
சம்சாரமில்லாமை; பிரம்ம வித்தையில் [illegible]
வில் அதனுடைய பிரயோஜனம் [illegible]

பிரமத்தை அறிந்தவன் பர [illegible]
மென்பது [illegible] சொல்லப்படுகிறது; பர [illegible]
தான்; பிரமத்தை அறிந்தவன் [illegible]
தாத்பரியம்). இப்பொருளில் [illegible]
யம், ஞானம், அநந்தம், பிரம [illegible]
டிருக்கிறது; (அந்தப் பிரம [illegible])
மாயும், ஞானமாயும், அனந்தமாயும் இருக்கின்ற [illegible]
வுண்டோ அதுதான் பிரமம்.

பிரமானந்தவல்லீ

[illegible]

இரண்டாம் அத்தியாயம்

அனுவாகம் 1

(இனிக் கூறப்படும் [illegible] [illegible] னெருசாந்தி இங்கு சொல்லப்படுகிறது.

[illegible] ([illegible] [illegible] களுக்குப் [illegible] [illegible] யத்தில் சார்க்கியத்தை [illegible] பிரம வித்தை அறி[illegible] [illegible] கொருவர் [illegible] [illegible]

(கர்மங்களுக்கு விரோதமின்றியுள்ள [illegible] ளான உபாசனைகள் சொல்லப்பட்டன; [illegible] பற்றியும், வியாஹிருதி [illegible] [illegible] துரைக்கப்பட்டது; இப்பொழுது, [illegible] மிருக்கின்றது. அந்தப் [illegible] உபாதியற்ற ஆத்ம தர்சனத்தின் பொருட்டு [illegible] படுகிறது. பிரம்ம வித்தைக்கும் பிரயோஜனம் [illegible] சம்சாரமில்லாமை; பிரம்ம வித்தையில் [illegible] லில் அதனுடைய பிரயோஜனம் [illegible]

பிரமத்தை அறிகிறவன் [illegible] மென்பது [illegible] சொல்லப்படுகிறது; [illegible] தான்; பிரமத்தை அறிகிறவன் [illegible] தாத்பரியம்). இப் பொருளில் இந்த ([illegible]) [illegible] யம், ஞானம், அநந்தம், பிரம" வென்ற [illegible] டிருக்கிறது; (அந்தப் பிரமம் [illegible]) [illegible] மாயும், ஞானமாயும், அனந்தமாயும் இருக்கின்ற [illegible] வுண்டோ அதுதான் பிரமம்.

(பின்பாக்கம்). இவ்வித [illegible]
சொல்லப்படுகிறது.

இனிச் சொல்லப் [illegible]
வாயினை என்று [illegible]
புருஷனுக்கும், (அன்னமய [illegible]

அநுவாகம் II

“பிருதிவியை ஆச்ரயித்து [illegible]
ளாம் அன்னத்தினின்றும் [illegible]
உஜ்ஜீவிக்கின்றன; முடிவில் அன்னத்தை [illegible]
வகைகளில் எல்லாப் [illegible]
கின்றது (காரணமாயிருக்கின்றது). [illegible]
கும் ஔஷதம் (மருந்து)” [illegible]
“எவர்கள் அன்னத்தை [illegible]
விருந்து உண்டா [illegible], அதனால் [illegible]
லேயே சொல்லப்பட்டிருக்கிறது” என்று [illegible]
களோ, அவர்கள் எல்லா அன்னத்தையும் [illegible]
(ஸ்தூல சரீரம் பெற்ற மக்கள். அப்படியே [illegible]
மாத்திரம் கிடைக்கும், வேறு [illegible]
பது பொருள்).

எது உண்ணப்படுகின்றதோ, அதனை [illegible]
உண்கிறதோ அது அன்னம் என்று [illegible]
மயம் முதல் இங்கு சொல்லப்பட்டுள்ள [illegible]
அந்நோக்கால் ஆத்மாவாக [illegible]
உண்மையாக விஷயங்களிலிருந்து விலக்கி [illegible]
மேன்மேலும் பிராணமயாதி கோசங்கள் [illegible]
கின்றன). இந்த அன்னமயத்தைக் காட்டிலும் [illegible]
ளிருப்பதாய் முன்பு பிராணமய ஆத்மா ([illegible]) [illegible]
கிறது; இந்தப் பிராணமயத்தினால் (ஆகாச வாயுவினால் [illegible]
அன்னமய சரீரம் நிரம்பியிருக்கிறது; அது, பிராண
இந்தப்படி புருஷாகிருதியை அடைந்திருக்கிறது

அதிகாரம் III.

அதிகாரம் IV.

(பின்பக்கம்). இவ்வுலகில் [illegible]
சொல்லப்படுகிறது.

இனிச் சொல்ல [illegible]
லாயினை என்று [illegible]
புருஷனுக்கும், (அன்ன [illegible]

அநுவாகம் II

"பிருதிவியை ஆச்ரயித்து [illegible]
லாம் அன்னத்தினின்று [illegible]
உஜ்ஜீவிக்கின்றன; [illegible]
வினையில் எல்லா பூதங்களுக்கும் [illegible]
கின்றது (காரணமாயிருக்கின்றது). [illegible]
கும் ஔஷதம் (மருந்து)" [illegible]
"எவர்கள் அன்னத்தை [illegible]
விருந்து உண்டா [illegible]
மேலிய செல்வ [illegible]"
கனோ, அவர்கள் எல்லா [illegible]
(ஸ்தூல சரீரம் பிராண [illegible]
மாத்திரம் கிடைக்கும், [illegible]
பது பொருள்).

எது உண்ணப்படுகின்றதோ, அதை [illegible]
உண்கிறீர்கள் அது அன்ன [illegible]
மயம் முதல் இந்து [illegible]
அக்ஞானத்தால் ஆகாரமாக [illegible]
உண்மையாக [illegible]
மேன்மேலும் பிராணமயாதி [illegible]
கின்றன). இந்த அன்னமயத்துக்கு [illegible]
விருப்பதாயுள்ள பிராணமய ஆகாச ([illegible]) [illegible]
கிறது; இந்தப் பிராணமயத்தினால் ([illegible]
அன்னமய சரீரம் நிரம்பியிருக்கிறது; அது [illegible]
இந்தப்படி புருஷாகிருதியை அடைந்திருக்கிறது. [illegible]

அதிகாரம் III.

அதிகாரம் IV.

தவன் [illegible]

மையகோசம் [illegible]

இதைக் காட்டிலும் [illegible]

கோசமிருக்கிறது. இதனுடைய [illegible]

கிறது. இதன் ஆகிருதி [illegible]

தாகும்.

இதற்குச் [illegible]

மஞ் செய்யவேண்டும்; [illegible]

ஆகஸ்மிக [illegible]

ரிதம்-வலது [illegible]

அல்லது [illegible]

மத்திய [illegible]

நாபிக்குக் [illegible]

கங் கூறப்படுகிறது.

அத்யாயம் [illegible]

"விஞ்ஞானமுள்ளவன் [illegible]

கர்மங்களையுஞ் செய்கின்றான்; [illegible]

டக்கத்திலுள்ளான விஞ்ஞான [illegible]

கள்; அவ்விதமறிந்தவன் [illegible]

பாபங்களை யெல்லாம் [illegible]

வான்" என்று.

இது முந்தின [illegible]

இதைக் காட்டிலும் [illegible]

மயகோசமிருக்கிறது. இதனுடைய [illegible]

நிரம்பி யிருக்கிறது. இதன் ஆகிருதி [illegible]

சரித்திருக்கிறது; இதற்குப் [illegible]

ஆசை)-சிரஸ் (ஆனந்தக் [illegible]

சிரஸ்போல முதன்மையானது); [illegible]

உண்டாகுஞ் சந்தோஷம்)-வலது [illegible]

அத்யாயம் VI.

தலைன் [illegible]
மயமேகோசம் [illegible]
இதைக் காட்டிலும் [illegible]
மேகோசமிருக்கிறது. இதனை [illegible]
கிறது. இதன் ஆகிருதி [illegible]
தாகும்.

இதற்கு [illegible]
மஞ் செய்யவேண்டும்; [illegible]
ஆதல்பற்றி [illegible]
ரிதம்-வலது பக்கம்; [illegible]
அல்லது [illegible]
மத்திமரிருக்கும் [illegible]
ஞானேந்திரியங்களுக்குக் காரணமான [illegible]
கங் கூறப்படுகிறது.

அநுவாகம் ௫

“ விஜ்ஞான [illegible]
கர்மங்களையுஞ் செய்கின்றன; [illegible]
டக்கத்திலுண்டான விஜ்ஞான [illegible]
கள்; அவ்விதம் [illegible]
பாபங்களை யெல்லாம் [illegible]
வான் ” என்று.

இது முந்தின [illegible]
இதைக் காட்டிலும் வேறாயும் [illegible]
மயமேகோசமிருக்கிறது. இதனால் [illegible]
நிரம்பி யிருக்கிறது. இதன் ஆகிருதி [illegible]
சரித்திருக்கிறது; இதற்குப் பிரியம் ([illegible]
ஆசை)-சிரஸ் (ஆனந்தத்துக்குப் பிரியம் [illegible]
சிரஸ்போல முதன்மையானது); [illegible] ([illegible]
உண்டாகுஞ் சந்தோஷம்)-வலது பக்கம்; [illegible] ([illegible]

அதிகாரம் VI

தை நாம் பார்க்குங்கால், சூரியன் ஜலத்தில் [illegible] பிராணிகளிடத்தில் அவர் பிரவேசித்திருப்பதாகச் சொல்ல [illegible] பிக்கப்பட்டிருக்கிறதே யன்றி, ஜலத்திலே [illegible] வீட்டில் ஓர் மனிதன் பிரவேசிக்கிறதுபோல [illegible] தாக பொருள்படுத்தக்கூடாது.

அப்படிப் பிரவேசித்து ஏற்பட்ட [illegible] வஸ்துக்களையும் [illegible] அப்படியல்லாத வஸ்துக்களையும், [illegible] சிரய வஸ்துக்களையும், [illegible] ளையும், வியவகார சம்பந்தமான [illegible] சம்பந்தமான பொய் வஸ்துக்களையும், [illegible] யும், மற்றுமுள்ள யாவையும் [illegible] வஸ்து வென்று சொல்லப்படுகிறது. [illegible] யில் வரும் மந்திரம் [illegible].

அநுவாகம் VII.

“ இந்த ஜகத், சிருஷ்டிக்கு முன்னர் [illegible] தது. (நாமரூப விசேஷத்தால் வியாக்கியா [illegible] ரூபமாய், பிரமமாக விருந்தது); அதினின்றும் [illegible] யிற்று (நாமரூப விசேஷத்தால் வியாக்கியா [illegible] ஜகத் உண்டாயிற்று); அந்த அஸத், தன்னை [illegible] செய்துகொண்டது ; ஆகையால் அது (பிரமம்) [illegible] சொல்லப்படும். (சுகிருதமென்றால் [illegible] புண்ணியம்).” என்று.

இது (இந்தப் பிரமவஸ்து) [illegible] மாய் (மாதுர்ய ரஸ பதார்த்தமாய்) இருக்கிறது; [illegible] யடைந்தவனுக்கு ஆநந்த முண்டாகும்; [illegible] தில் ஆநந்த ரூபமாக விருக்கிறது. [illegible] பிராணாபாந விர்த்திகளை உண்டுபண்ணுவது யார்? [illegible] தைச் சுகப்படுத்துகிறது; எப்பொழுது [illegible] கைய காணப்படாததாயும், சரீரமில்லாததாயும், [illegible]

அதிகாரம் VIII.

தை நாம் பார்க்குங்கால், சூரியன் [illegible], பிராணிகளிடத்தில் அவர் [illegible] பிக்கப்பட்டிருக்கிறதே யன்றி, [illegible], வீட்டில் ஓர் மனிதன் [illegible] தாக பொருள்படுத்தக்கூடாது.

அப்படிப் பிரவேசித்து [illegible] வஸ்துக்களையும் [illegible], அப்படியல்லாத வஸ்துக்களையும், [illegible] சிரய வஸ்துக்களையும், [illegible] ளையும், வியவகார சம்பந்தமான [illegible] சம்பந்தமான [illegible] வஸ்துக்களையும், [illegible] யும், மற்றுமுள்ள [illegible] வஸ்து வென்று [illegible] யில் வரும் மந்திரம் [illegible].

அநுவாகம் VII.

“ இந்த ஜகத் [illegible] தது. (நாமரூப விசேஷத்தால் [illegible] ரூபமாய், பிரமமாக விருந்தது); [illegible] யிற்று (நாமரூப விசேஷத்தால் [illegible] ஜகத் உண்டாயிற்று); அந்த [illegible] செய்துகொண்டது; ஆகையால் அது (பிரமம்) [illegible] சொல்லப்படும். (சுகிருதமென்பது [illegible] புண்ணியம்).” என்று.

இது (இந்தப் பிரமவஸ்து) சுகிருதமாக [illegible] மாய் (மாதுர்ய ரஸ பதார்த்தமாய்) இருக்கிறது; [illegible] யடைந்தவனுக்கு ஆநந்த முண்டாகும்; அதுவே [illegible] தில் ஆநந்த ரூபமாக விருக்கிறது. அதுவே [illegible] பிராணபான விருத்திகளை உண்டுபண்ணுவது [illegible] தைச் சுகப்படுத்துகிறது; எப்பொழுது [illegible] கைய காணப்படாததாயும், சரீரமில்லாததாயும், [illegible]

அதிகாரம் VIII

தை நாம் பார்க்குங்கால், சூரியன் ஜலத்தில் பிரதிபிம்பித்த [illegible]போல், பிராணிகளிடத்தில் அவர் பிரவேசித்திருப்பதாக [illegible] கற்பிக்கப்பட்டிருக்கிறதே யன்றி, ஜகத்திலே [illegible] வீட்டில் ஓர் மனிதன் பிரவேசிக்கிறதுபோல [illegible] தாக பொருள்படுத்தக்கூடாது.

அப்படிப் பிரவேசித்த பிறகு [illegible] வஸ்துக்களையும் [illegible] வஸ்துக்களையும், அப்படியல்லாத வஸ்துக்களையும், ஆதார வஸ்துக்களையும், அநாசிரய வஸ்துக்களையும், புத்தியுள்ள [illegible] ளையும், வியவகார ஸம்பந்தமான ஸத்திய வஸ்துக்களையும், அதற்கு ஸம்பந்தமான பொய் வஸ்துக்களையும், [illegible] வஸ்துக்களையும், மற்றுமுள்ள யாவற்றையுமாகி [illegible] வஸ்து வென்று சொல்லப்படுகிறது. [illegible] யில் வரும் மந்திரமாவது.

அநுவாகம் VII.

“ இந்த ஜகத், சிருஷ்டிக்குமுன் [illegible] அஸத்தாக விருந்தது. (நாமரூப விசேஷங்களில்லாததால் [illegible], அவ்வியாகிருத ரூபமாய், பிரம்மமாக விருந்தது); அதினின்று [illegible] யிற்று (நாமரூப விசேஷங்களில் [illegible] விபாகமடைந்த ஜகத் உண்டாயிற்று); அந்த அஸத், தன்னை [illegible] செய்துகொண்டது; ஆகையால் அது (பிரம்ம) ‘ஸுகிருதம்’ என்று சொல்லப்படும். (ஸுகிருதமென்றால் [illegible], அல்லது புண்ணியம்).” என்று.

இது (இந்தப் பிரம்மம்) ஸுகிருதமாக விருப்பதால், ரஸமாய் (மாதுர்ய ரஸ பதார்த்தமாய்) இருக்கிறது; அந்த ரஸத்தை யடைந்தவனுக்கு ஆநந்த முண்டாகும்; அதே [illegible] தில் ஆநந்த ரூபமாக விருக்கிறது. அதே அவ்வப் [illegible] பிராணாபாந விர்த்திகளை உண்டுபண்ணுவது யார்? அது [illegible] தைச் சுகப்படுத்துகிறது; எப்பொழுது ஒருவன் இந்த [illegible] கைய காணப்படாததாயும், சரீரமில்லாததாயும், இன்னதென்று

[illegible]

அநுவாகம் VIII.

"அவரிடத்துள்ள பயத்தினால் காற்று வீசுகிறது; சூரியன் உதயமாகிறான்; அக்நியும் இந்திரனும், ஐந்தாவதாகிய மிருத்யுவும் அவரவர் காரியங்களைச் செய்கின்றனர்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அதிகாரம் IX.

[illegible]

[illegible]

பிருகுவல்லி.

என்ற

மூன்றாவது அத்தியாயம்.

அநுவாகம் I.

"ஸஹநாவது" என்ற சாந்தி சொல்லப்படுகிறது; (மேற்சொன்னபடி அறிந்தவனுக்குப்) புண்ணிய பாபங்கள் ஜன்மாரம்பத்தைப் பயக்கமாட்டாவென்று முன் வல்லியில் விவரிக்கப்பட்டு பிரம வித்தியா முடிவெய்தியது. இப்பொழுது அந்தப் பிரமவித்தைக்குச் சாதனமான தபஸ் (ஏகாக்கிரசித்தத்தோடு பரியாலோசனை செய்து பாஹ்யேந்திரயங்களை அடக்கிப், பிரம விசாரத்தில் புத்தியை நிலைநிறுத்துவது) கூறப்படுவதோடு, அன்னமயாதி விஷயங்களும் உபாசனைகளுஞ் சொல்லப்படுகின்றன).

(அடியில் கண்ட கதை வித்யாஸ்துதியின் பொருட்டு சொல்லப்படுகிறது); வருணனுடைய புத்திரன், பிருகு வென்ற ஓர் ரிஷி, தன் பிதாவிடஞ் சென்று, "பிரமத்தைப் பற்றி எனக்கெடுத்துரைக்க வேண்டு" மென்று கேட்டார்; (பிதா சொல்லுகிறார்) சரீரம், பிராணன், சக்ஷுஸ், சுரோத்திரம், மனஸ், வர்க் முதலியன பிரமத்தை யறியும் வழிகள்; மேலும், பிரமத்தின் லக்ஷண மென்னவெனில், இந்தப் பிரம்மாதி ஸ்தம்ப பரியந்த முள்ள பூதங்கள் எதினின்று முண்டாயினவோ, உண்டானவை எதனால் பிழைத்திருக்கின்றனவோ, நாசகாலத்தில் எதனிடஞ் சென்று லயமடைகின்றனவோ, அது பிரமம்; (இப்படிப்பட்ட பிரமத்தை, சரீராதி வாயிலாக அறியவேண்டு மென்பது தாத்பரியம்); அதைப் பிரமமென் றறிய இச்சைகொள்க. இதைக் கேட்ட பிருகு தபஸ் செய்யத் தொடங்கினார் (ஏகாக்கிரசித்தனாகவிருந்து ஆலோசித்தார்).

அநுவாகம் II.

அன்னத்தை பிரமமென் றறிந்தார்; ஏனெனில், அன்னத்தினா லிப்பூதங்க ளுண்டாயின; அதனால் பிழைத்திருக்கின்றார்

கள்; அதிலேயே சென்றடைகிறார்கள். இங்ஙன மறிந்து, மீண்டும் யோசித்துப் பார்த்து (அன்னம் உத்பத்தியாகி நாசமடையுந் தன்மையுளதாதலால் அது பிரமமாகமாட்டாது என்று ஆசங்கை யுற்று) மீண்டும் பிதாவிடத்திற் சென்று, "பிரமத்தைப் பற்றிக் கூறுக" வென்று வினவினர். (பிதா சொல்லுகிறார்) தபசினால் பிரமத்தை யறிய இச்சைகொள்; அதே பிரமம் (அதாவது, தபசினாலேயே பிரமத்தை யறியவேண்டியது. செம்மையாக யோசித்துப் பார்க்கப் பார்க்கத் தெரியும்). இதனைக் கேட்ட பிறகு மீண்டும் பரியாலோசிக்க லாயினார்.

அநுவாகம் III, IV, V, VI.

பிராணனை பிரமமென் றறிந்தார்; இவ்வாறு மனம், விக்ஞானம், ஆநந்தம் இவைகளை யொன்றன்பின் னொன்றாக வறிந்தார். (அதற்குத் தக்கபடி இந்நான்கு அநுவாகங்களையும் இரண்டாவது அநுவாகம்போல் பொருள்படுத்தவேண்டும்). (ஆறாவது அநுவாகத்தி னிறுதியில் சுருதி சொல்லுகிறதாவது): இந்தப் பார்க்கவீ, வாருணீ வித்தையானது, இருதயாகாச குகையில் பிரதிஷ்டிதமா யிருக்கிறது. (அதாவது அங்கிருந்து காணப்படும் பிரமத்தைப் பற்றி இங்கு விசாரிக்கப்படுகிறது). இவ்வித மறிந்தவன் பிரமமாகவே ஆகிவிடுகிறான். அன்னமுள்ளவனாகவும், அன்னத்தைப் புஜிக்கத் தீப்தாக்நியுள்ளவனாகவும், மஹா புருஷனாகவும், பசுக்கள், பிரஜை, கீர்த்தி இவைகளுடன் கூடியவனாகவும் ஆகிவிடுகிறான்.

அநுவாகம் VII.

(அன்னத்தின் வாயிலாகப் பிரம விக்ஞானம் உண்டாவதால்) அன்னத்தை நிந்திக்கக் கூடாது; அது விரதமாக உபதேசிக்கப் படுகிறது; பிராணனே அன்னமயமாயும், சரீரம் அன்னத்தைக் கொடுக்கிறதாயு மிருக்கிறது; பிராணன் சரீரத்தில் பிரதிஷ்டிதமாயும், சரீரம் பிராணனிற் பிரதிஷ்டிதமாயு மிருக்கிறது, (ஒன்

முதல் அத்தியாயம்.

வல்லீ I.

1. வாஜசிரவஸ் (என்ற பெயருடைய ஓர் ரிஷி, விசுவஜித் என்ற யாகத்தைச் செய்து அதன் பலனை அடைய) இச்சித்தவ ராக, எல்லா உடைமையையுந் தானஞ்செய்தார். அவருக்கு நசி கேதஸ் (என்று பெயருள்ள) ஒரு புத்திர னிருந்தான்.

2. (மேற்படி ரிஷியால்) தக்ஷிணைகள் கொடுக்கப்படும்பொ ழுது, அதி பாலியனுகிய (மேற்படி) குமாரனுக்கு ஒரு சிரத்தை உண்டாயிற்று. (அதாவது அவனுக்கு நல்ல வழியிற் புத்தி உண்டாயிற்று). (அடியில் கண்டபடி அவன் நினைத்தான்).

3. "ஜலத்தைக் குடித்தும், புல்லைத் தின்றும், பாலைக் கறந் தும், இனி ஈனுவதற்குத் தகுதியில்லாதிருக்கும் இப்படிப்பட்ட பசுக்களைத் தானஞ் செய்கிற ஒருவன், அசுகமாயிருக்கிற லோ கங்களை யடைகிறுன்" என்பதாக; (அதாவது தன்பிதா நல்ல தானஞ் செய்யவில்லை; அவர் இச்சித்த பலனை எப்படி அடை வர்? தன்னையாவது தானஞ் செய்து பலனை யடையட்டுமென்று நல்லெண்ணங் கொண்டான்).

4. "ஹே, பிதா, என்னை யாருக்குக் கொடுக்கப்போகுதீர்" என்று பிதாவைக் கேட்டான். (பாலன் பிதற்றுகிறுனென்று நினைத்துப் பிதா சும்மாவிருந்தார்); (குமாரன் அந்தப்படியே பிதாவை) இரண்டாந்தரங் (கேட்டான்). (அதற்குஞ் சும்மா விருந் தார்). மூன்றுவது தடவையுங் கேட்டான். (அதற்குப் பிதா கோபங்கொண்டவராய்) உன்னை யமனுக்குக் கொடுக்கப்போகிறே னென்றுர்.

5. (இங்ஙனம் பிதா கூறலும் புத்திரன் தனிமையில் உட் கார்ந்துகொண்டு விசனப்படுகிறதாவது): (நம்முடைய பிதாவுக் கிருக்கிற) அனேகர்களுள் (புத்திரர்கள் அல்லது சிஷ்யர்களுள்

நான்) முதன்மையவன் (உத்தமன்); (அல்லது) மத்தியமன் ஆகவிருக்கட்டும்; (அதமனல்ல;) அங்ஙனமிருக்க, என்னை யமனுக்குக் கொடுத்தனரே); யமனுக்கு என்னால் என்ன பிரயோஜனம்? (கோபத்தின்மேல் அப்படிச்சொற்றதாகத் தோன்றுகிறது; ஆயினுமவர் வாக்குப் பொய்யாகப் போகக்கூடாது என்று ஆலோசித்து, பச்சாத்தாபப் பட்டுக்கொண்டிருக்கிற பிதாவைப்பார்த்துச் சொல்லுகிறதாவது):

6. "(நம்முடைய) பூர்விகர்களுடைய (நடையை) யோசித்துப் பாருங்கள்; (இப்பொழுது இருக்கிற) மற்றவர்களுடைய (நடையையும்) யோசித்துப்பாருங்கள்; மனுஷ்யன் பயிர்போல நசிக்கிறான்; பயிர்போல மறுபடியும் உண்டாகிறான்"; (சத்தியம் பெரிது, விசனப்படவேண்டாம், என்னை யமனுக்குக் கொடுத்துவிடலாமென்று நசிகேதஸ் சொன்னான்).

7. (இப்படிச் சொன்னவுடனே பிதா சத்தியத்தைக்காப்பாற்றப் புத்திரனை யமனிடத்திற்கு அனுப்பினார்; அப்படியே புத்திரன் யமாலயத்திற்கு வந்து மூன்று தினங் காத்துக்கொண்டிருந்தான்; ஒன்றுங் கேள்வி முறையில்லை. யமன் தூங்கிக்கொண்டிருந்தான்; அவனை மந்திரிகள் எழுப்பிச் சொன்னதாவது): "அக்கினியாயிருக்கிற ஒரு விப்ரன், அக்கினி போல வீடுகளில் பிரவேசிக்கிறான். அவனுக்குச் சாந்தியைச் (பாத்யம், அல்லது உபசாரம்) (பெரியோர்கள்) செய்கிறார்கள். (ஆதலால், இப்பொழுது உன் வீட்டுக்கு அதிதியாக வந்திருக்கிற நசிகேதனுக்கு நீ உபசாரஞ் செய்யும் பொருட்டு அர்க்கியபாத்தியங் கொடுக்க) ஹே! யமனே, ஜலத்தைக்கொண்டுவா" (என்றும்).

8. "யாருடைய வீட்டில் ஒரு அதிதி, சாப்பிடாமல் வசிக்கிறானோ, அந்த அல்ப புத்தியுள்ள புருஷனுடைய ஆசையையும், இஷ்ட பிராப்தியை எதிர்பார்த்தலையும் ஸத்ஸங்கப் பலனையும், நல்ல வாக்கினால் உண்டாகும் பலனையும், யாகத்தினால் உண்டாகும் பலனையும், மற்று ஆசிரமத்திற்குரிய தர்மத்தினால் உண்டாகும் பலனையும், எல்லாப் புத்திரர்களையும், பசுக்களையும் இவைகளையெல்லாம் இது அழித்துவிடுகின்றது.

9. (இவ்விதங் கூறியவுடன் யமன் எழுந்து நசிகேதஸனுக்கு மரியாதை செய்து, சொல்லுகிறதாவது): "ஹே ! பிராம்மணா, அதிதியாகவும், நமஸ்காரத்துக்கு அர்ஹனாகவு மிருந்துகொண்டு என் கிருஹத்தில் போஜனஞ் செய்யாமல் மூன்றிரவு நீ வசித்திருக்கிறாய். உனக்கு நமஸ்காரம்; எனக்கு மங்கள மிருப்பதாகுக. ஆகையால் மூன்று வரங்களைக் கேட்டுக் கொள்ளும்" (என்று).

10. (நசிகேதஸ் மறுமொழி சொல்லுகிறதாவது):—"(என் பிதா) கௌதமர் என்னைப் பற்றி விசாரமற்றவராகவும், சந்தோஷமனமுள்ளவராகவும், (என்மேலிருந்த) கோபத்தை விட்டவராகவும், இருக்கும்படியாகவும், உம்மிடத்தினின்றும் விடுபட்டுப்போகிற என்னை (அவர் அலக்ஷியஞ் செய்யாமல், இவன் நம்முடைய குமாரனென்று) பூர்வ ஞாபகத்தை யுடைத்தானவராய் என்னைப் பார்த்துப் பேசும்படியாகவும் (நீர் செய்யவேண்டுமென்று) மூன்று வரங்களுள் ஒன்றாகக் கேட்கிறேன்" (என்று).

11. (யமன் சொல்லுகிறதாவது): "(உன் பிதா) ஔத்தாலகி என்றும் ஆருணி யென்றும் பெயருள்ளவர், உன்னிடத்தில் முன்னிருந்த பிரீதியுள்ளவராகவும், பூர்வ ஞாபகத்தை யடைந்தவராகவும், இரவுகளில் சுகமாக நித்திரை செய்யக் கூடியவராகவும் (அதாவது விசாரமற்றவராகவும்) கோபமில்லாதவராகவும் இருப்பார். மிருத்தியு விடத்திலிருந்து விடுபட்டுப்போன உன்னைப் பார்ப்பார்" என்று.

12. (நசிகேதஸ் சொல்லுகிறதாவது): "சுவர்க்க லோகத்தில் யாதொரு பயமுமில்லை; அவ்விடத்தில் நீர் இல்லை. (அதாவது உம்மால் பயமில்லை). கிழத்தனத்தால் (ஒருவனுக்குப்) பயமுமில்லை. பசி, தாகம் இவ்விரண்டையுங் கடந்து, சோகத்தையுங் கடந்தவனாய், சந்தோஷத்தை யடைகிறான்" (என்று).

13. "ஹே ! யமனே ! (அப்படிப்பட்ட) ஸ்வர்க்கத்தைக் கொடுக்கத்தக்கதாகவும், அமிருதத் தன்மையை அடையுமாறு செய்யத்தக்கதாகவு மிருக்கின்ற அக்கினியை, நீர் ஸ்மரித்து,

சுவர்க்கப் பிராப்தியில் சிரத்தையுள்ள என்னைப்பற்றி அதனிடத் திற்சேர்க்கும் (அதாவது சுவர்க்கம் எனக்குக் கிடைக்கும்படி செய் யும்) இதை இரண்டாவது வரமாகக் கேட்கிறேன்" (என்றான்).

14. (யமன் சொல்லுகிறதாவது):—"ஹே! நசிகேத! அப் படிப்பட்ட ஸ்வர்க்கத்தைக் கொடுக்கத்தக்கதான அக்கினியை அறிந் தவனாக (நான்) உனக்குச் சொல்லுகிறேன். (அதைக்கேள்) எது உன்னுல் பிரார்த்திக்கப்பட்டதோ அது, என் வசனமென்று அறி; (அதாவது நீ கேட்ட வரம் கொடுக்கிறேன்); இந்த அக்கினியை ஸ்வர்க்கலோகப்பிராப்தியின் சாதனமாகவும் (ஜகத்துக்கு) ஆசிரய மாகவும், (வித்வான்களுடைய) புத்தியில் வைக்கப்பட்டிருக்கிற தாகவும் நீ அறிந்துகொள்" (என்றான்).

15. (மிருத்யுவானவர்) லோகத்துக்கு ஆதியாயிருக்கிற அந்த அக்கினியிடத்தில் இவனைக்குறித்தும் (நசிகேதஸைப்பற்றி) சொன்னார். பின்னும் (அக்கினிசயனத்துக்கு) எப்படிப்பட்ட கற் கள், எவ்வளவு கற்கள் (வேண்டியதோ அவைகளைப்பற்றியும்) எப்படி (அந்த யாகம் செய்யவேண்டியதோ அதைப்பற்றியும் நசிகே தஸுக்குச் சொன்னார்). அவனும் (நசிகேதஸும்) (தான் தெரிந்துகொண்டதைத் தெரிவிக்க) மிருத்யுவால் சொல்லப்பட்ட படி சரியாகத் திருப்பிச் சொன்னான். அப்படிச் சொன்னதில் மிருத்யு சந்தோஷப்பட்டு, மறுபடியும் சொல்லுகிறார்.

16. ப்ரீதியுள்ளவராயும், மகாத்மாவாயுமிருக்கிற மிருத் யு "மறுபடியும் உனக்கு வரம் (நான்காவது வரம்) கொடுக்கி றேன்." என்றும்; "இந்த அக்கினி உன்பெயராலேயே அழைக்கப் படப்போகிறது" என்றும்; "விசித்திர ரூபமாயிருக்கிற இந்த மாலையை ஸ்வீகரித்துக்கொள்" என்றும், நசிகேதஸுக்குச் சொன் னார் (அல்லது கர்மமயமாயிருக்கிற கதியை ஸ்வீகரித்துக்கொள் என் றார்; அதாவது, கர்மத்தைக் கைக்கொள் என்றார்).

17. (மறுபடியும் கர்மத்தை ஸ்துதி செய்கிறார்). "மூன்று முறை அக்கினி சயனஞ் செய்தவனும், (மாதா, பிதா, குரு) இம் மூவர் சொற்படி கேட்டவனும், (யாகம், அத்தியயனம், தானம்)

இம்மூன்று காரியங்களைச் செய்தவனும், ஜன்மத்தையும், மிருத்தியுவையுந் தாண்டுகிறான். ஸர்வஞ்ஞனாகவும், ஸ்துத்தியனாகவு மிருக்கிற (அக்நி) தேவனை அறிந்து பார்த்து, இந்தச் சாந்தியை (விராட் சம்பந்தமான பதத்தை-நல்ல கதியை) அடைகிறான்''.

18. ''எந்த வித்துவான் மூன்றையும் (மேலே 15-ம் மந்திரத்திற் காண்க) அறிந்து, அக்நி சயனத்தை மூன்று தரஞ் செய்கிறானோ, அவன் முதலில் மிருத்தியு பாசங்களை யகற்றிக்கொண்டு, சோகத்தைத் தாண்டினவனாய், ஸ்வர்க்கலோகத்தில் சந்தோஷப் படுகிறான்''.

19. ''(எந்த அக்நியை) இரண்டாவது வரத்தால் நீ கேட்டனையோ, ஸ்வர்க்கத்திலுள்ள அக்நியைப்பற்றிய இந்த வரம், ஹே நசிகேத! (உனக்குக் கொடுத்துவிட்டேன்). இந்த அக்நியை உன் பெயராலேயே ஜனங்கள் அழைப்பார்கள். மூன்றாவது வரத்தைக் கேள்''.

20. (நசிகேதஸ் கேட்கிறான்): ''இறந்துபோன மனுஷ்யனுடைய ஆத்மா, வேறு தேகத்தை யடைகிறதென்று சிலரும்; அப்படி யில்லையென்று சிலருஞ் சொல்லுகிறார்கள். இந்த சந்தேகத்தை எனக்கு நிவர்த்தி செய்யும். இதுதான் மூன்றாவது வரம்''.

21. (யமன் சொல்லுகிறார்): ''இந்த விஷயத்தில், பூர்வத் தேவர்களுக்குங் கூட சந்தேக மிருந்திருக்கிறது. நன்றாக அறியத் தகுந்ததன்று. இந்த (ஆத்ம விஷய) தர்மம் மிகவுஞ் சூக்ஷ்மமானது. ஹே! நசிகேத! வேறு வரத்தைக் கேள்! என்னை நிர்ப்பந்தப்படுத்தாதே; எனக்காக இந்த வரத்தை விட்டுவிடு''.

22. (நசிகேதஸ் சொல்லுகிறான்): ''இது தேவதைகளாலுங்கூட சந்தேகிக்கப்பட்டதல்லவா? ஹே! மிருத்தியுவே! நன்றாக அறியத்தகாதது என்று நீருஞ் சொல்லுகிறீர்; இதைச் சொல்ல உம்மைத் தவிர வேறொருவருங் கிடைக்கமாட்டார்கள்; இந்த வரத்துக்குச் சமமானதாய் வேறே வரமுங் கிடையாது''.

23. (ம்ருத்யு சொல்லுகிறார்): "சதாயுஸ் உள்ள புத்ர பௌத்ராதிகளைக் கேள்; வெகு பசுக்களையும், யானைகள், தங்கம், அசுவங்கள் இவைகளையுங் (கேள்); இராஜ்யத்தைக் கேள், எவ்வளவு வருஷம் நீ இச்சிக்கிறாயோ அவ்வளவு காலம் நீ ஜீவித்திரு".

24. "இன்னும் இதற்குத் துல்யமானதாக எந்த வரத்தை நினைக்கின்றனையோ அதைக் கேள்; தனத்தையும், சிரஞ்ஜீவித் தன்மையையுங் கேள். பூமியில் (அரசனாக) விருத்தி பெறு. விருப்பமுள்ளவர்களுக்குள் விருப்பம் நிறைவேறியவனாக உன்னைச் செய்து விடுகிறேன்".

25. "மனுஷ்ய லோகத்தில் எவ்வெவை காமங்கள் துர்லபங்களாயிருக்கின்றனவோ அவைகளையெல்லாம் உன்னிச்சைப்படி கேட்டுக்கொள்; இதோ இவர்கள் அப்ஸர ஸ்திரீகள், ரதங்களோடும் வாத்தியங்களோடும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஸ்திரீகள் மனுஷ்யர்களால் பெறக்கூடாதவர்கள்; இவர்களால் உனக்குச் சகல சிச்ருஷையையுஞ் செய்வித்துக்கொள்; ஹே! நசிகேத! மரண விஷயமான (பிரச்னத்தை மட்டிலும்) கேட்காதே".

26. (நசிகேதன் சொல்லுகிறான்): "நாளைக் காலை இருக்கப் போகின்றதோ இல்லையோவென்ற சந்தேகத்துக்குரியதாயிருக்கிற (அநித்தியமாயிருக்கிற இத்தகைய காமங்கள்) சர்வேந்திரியங்களுடைய தேஜஸையும், பழுதாக்கிவிடுகின்றன; எல்லா ஜீவிதமும் அற்பமே; ரதாதி வாகனங்களும், நிருத்திய கீதங்களும் உமக்கே இருக்கட்டும்". (எனக்கு வேண்டாம்; நான் கேட்ட வரத்தைத் தான் கொடுக்கவேண்டும்).

27. "மனுஷ்யன் தனத்தினால் திருப்தி படைவதில்லை; உம்மைப்பார்த்தால் (ஸாக்ஷாத்காரத்தில்) வித்தத்தை படைவோம். எவ்வளவு காலங் (கொடுக்க) நீர் சக்தியுள்ளவராயிருக்கிறீரோ (அவ்வளவு காலம்) ஜீவித்திருப்போம்; (அதுபோதாக) என்னுடைய அந்த வரமே கொடுக்கவேண்டியது".

28. "ஜரையற்றவர்களாயிருக்கிற தேவர்கள் முன்சென்று, (ஆத்மபாவத்தை) அறிந்தவனும், பூமியிலுள்ளவனும், ஜரையுள்ளவனும், மனுஷியனும், வர்ணத்தினாலேயும் ரதியினாலேயுஞ் சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்க அப்ஸரஸ் முதலானவர்களைத் (துச்சமென்று) அறிந்தவனுமிருக்கிற எவன் (எந்த விவேகி) தீர்க்காயுளை இச்சிப்பான்".

29. "எந்தப் பிரேத விஷயத்தில் இந்தச் சந்தேகத்தை அடைகிறார்களோ, ஹே! மிருத்யு! மகா பிரயோஜனகரமாயிருக்கிற பரலோக விஷயத்தில் எது (எந்த ஆத்மஞானம்) உண்டோ அதை எங்களுக்குச் சொல்லும்" என்று.

இந்த வரம், அதி ரகசியமானது; அதில் பிரவேசித்தவனாதலால் நசிகேதஸ் வேறு வரத்தைக் கேட்கமாட்டேன் என்று உறுதி கூறினான்.

வல்லீ II.

1. (மிருத்யு சொல்லுகின்றார்): சிரேயஸ் (நிராசை, மோக்ஷம்) என்பது வேறு; பிரேயஸ் (ஆசை, சம்சாரம்) என்பது வேறு. இவ்விரண்டும் நானாவிதமான பிரயோஜனங்களையுடையன. இரண்டும் மனுஷியர்களைக் கட்டுப்படுத்துகின்றன. அவைகளில் சிரேயஸைக் கைக்கொண்டவனுக்கு மங்களங் கிடைக்கும். பிரேயஸை வரித்தவன், பரமார்த்தத்தினின்றும் நழுவிப்போகின்றான்.

2. சிரேயஸும், பிரேயஸும் மனுஷியனை யடைகின்றன. விவேகி இரண்டையும் பகுத்தறிந்து பிரிக்கின்றான். பிரேயஸினின்றும் (பிரித்து) சிரேயஸைக் கைக்கொள்ளுகின்றான். மந்த புத்தியுள்ளவன், யோக க்ஷேம ஆசையினால் பிரேயஸை வரிக்கின்றான்.

3. அப்படிப்பட்ட நீ, பிரியர்களையும் (புத்திர பௌத்திராதிகளையும்), பிரிய ரூபர்களையும் (அப்ஸர ஸ்திரீ முதலியவர்களையும்) இச்சைகளையும் பகுத்தறிந்து தள்ளிவிட்டனை. எதில் அதிக மனி

தர்கள் மூழ்குகிறார்களோ அதாகவும், வித்தத்தைக் கொடுக்கத் தகுந்ததாகவு மிருக்கிற இந்த மாலையையும் நீ அடையவில்லை.

4. வித்தை யென்றும் அவித்தை யென்றும் அறியப்பட்டவை யாவோ, அவைகள் ஒன்றுக்கொன்று வெகுதூரம். ஒன்றுக் கொன்று விரோதமுடையன. பின்ன பலத்தைக் கொடுக்கத்தக் கன. நீ வித்தையை இச்சிப்பவனாக நினைக்கிறேன். ஏனென் றால், வெகு இச்சைகள் உன்னை அலைக்கவில்லை.

5. அவித்தையில் அகப்பட்டவர்கள், (காமிகள்) புத்திசாலி களாகவும், பண்டிதர்களாகவும் தங்களை எண்ணிக்கொள்ளு கின்றார்கள். கெட்ட வழியில் செல்கிறவர்கள்; மூடர்கள்; குரு டனால் வழிகாட்டப்பட்ட குருடர்களைப்போல விழுகிறார்கள்.

6. ஸம்ஸார தர்மத்தில் ஆசக்தியுள்ளவனும், வித்த மோ கத்திலே மூடனாயிருக்கிற அவிவேகியின் புத்தியில் பரலோக சாதகமான பிரம வித்தை விளங்காது. "இந்த (காணப்படுகிற) இதுதான் உலகம்; பரலோக மென்பது இல்லை" என்று நினைக் கிறவன், மீண்டும், மீண்டும் மிருத்யுவாகிய என் வசத்தில் வந்து அடைகின்றான்.

7. யாதொரு ஆத்மா, பல பேர்களினாலும் அடையக் கூடியதன்றோ, கேட்டவர்கள் பல ரிருந்தாலும் அவர்களால் யாதொன்று அறியப்படவில்லையோ. அந்த ஆத்மாவைப் பற்றி நன்றாகச் சொல்லுகிறவன் கிடைப்பது அரிது. அத்தகைய குருவால் உபதேசிக்கப்பட்டு அறிகிறவன் கிடைப்பதரிது.

8. தாழ்ந்த மனிதனால் சொல்லப்படில் ஆத்மா நன்கு அறி யப்படத் தக்கதன்று. இது பலவிதமாக ஆலோசிக்கப்படத் தகுந்தது. அணுவைக் காட்டிலும் அணு. தர்க்கத்திற் கடங் கொடாதது. பிரம ஞானமுள்ளவனால் போதிக்கப்பட்டால் அப் பொழுது சந்தேகத்துக் கிடமில்லை.

9. ஹே! சிரேஷ்ட! நசிகேத! இந்தப் பிரம ஞான புத்தி யானது, தர்க்கத்தினாலடையப் பெறலாகாது; நீக்கவும் முடியாது. பிரம ஞானியால் கூறப்பட்டால்தான் விளங்கும். அப்படிப்பட்ட

புத்தியை நீ அடைந்திருக்கின்றாய். சத்திய தைரிய முற்றவனாக விருக்கின்றாய். கேட்கிறவன் உன்னைப்போல் யாவனுளன்?

10. நீதியானது அநித்தியமென்று நான் அறிந்திருக்கிறேன். அநித்திய வஸ்துக்களால் நித்திய வஸ்து கிடைக்கமாட்டாது. அநித்திய வஸ்துக்களால் அக்நி யாகஞ் செய்யப்பட்டது; அதனால் (புண்ணியம் இருக்கிற வரையில்) நித்தியமான ய்ம அதிகாரத்தை (இந்தச் சுவர்க்கப் பதவியை) அடைந்திருக்கின்றேன்.

11. காமத்தின் முடிவாயும், ஜகத்தின் பிரதிஷ்டையாயும், யாகத்தின் பலனும், அபயஸ்தானமாயும், ஸ்துத்தியமாயும், மகத்தாயும், விஸ்தீர்ண கதியை யுடையதாயு மிருக்கின்ற ஸ்திதியை (பிரம லோகாதி பதவியை) நோக்கி, ஹே! நசிகேத! விவேகியாயுள்ள நீ தைரியத்தினால் (மேற்கூறப்பட்டன) யாவையும் விலக்கிவிட்டாய்.

12. வருத்தத்துடன் கண்டறியத்தக்கவரும், அதி ரகசியமானவரும், (ஒவ்வொன்றிலும்) பிரவேசித்திருக்கின்றவரும், புத்தியி லிருக்கிறவரும், பல அர்த்தங்களின் சிக்குதலுக் கிடையே யிருப்பவரும், புராணருமா யிருக்கிற அந்தத் தேவனை, அத்தியாத்ம யோகத்தினால் (விஷயங்களைத் தள்ளி ஆத்மாவையே தியானிக்கிறதனால்) விவேகி பரியாலோசித்து, சந்தோஷத்தையும், விசனத்தையும் விட்டுவிடுகிறான்.

13. இதை (நான் சொல்லப்போகின்ற பிரம வித்தையைக்) கேட்டு, கிரகித்து, (சரீராதி) தர்மத்தை விலக்கிவிட்டு, இந்தச் சந்தோஷகரமான ஆத்மாவை யடைந்து, மனுஷியன் சந்தோஷப்படுகிறான். நசிகேதஸின் பொருட்டு (மோக்ஷ) வீடு திறந்து வைக்கப்பட் டிருக்கிறதாக நினைக்கிறேன்.

14. (நசிகேதஸ் சொல்லுகிறான்): “தர்மத்தைக் காட்டிலும் வேறு; அதர்மத்தைக் காட்டிலும் வேறு; காரியத்தைக் காட்டிலும் வேறு; காரணத்தைக் காட்டிலும் வேறு; இருந்ததைக் காட்டிலும் வேறு; (இருக்கிறதைக் காட்டிலும் வேறு); இருக்கப்போகிறதைக் காட்டிலும் வேறு; இவ்வித மிருப்பதாக எதை நீர் அறிந்திருக்கின்றீரோ, அதை எனக்குச் சொல்லுக”.

15. (மிருத்யு சொல்லுகிறார்): "எதைப் பற்றிச் சர்வ வேதங்களுங் கூறுகின்றனவோ, எதைச் சர்வ தபங்களுஞ் சொல்லுகின்றனவோ, எதை இச்சித்து பிரம சரியத்தை அனுஷ்டிக்கின்றார்களோ, அதை உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். அதுதான் 'ஓம்' (என்ற அக்ஷரம்).

16. "இந்த அக்ஷரந்தான் பிரமம்; இதுதான் பரவஸ்து; இந்த அக்ஷரத்தை யறிந்து யார் எதை இச்சிக்கின்றாரோ, அது அவனுக்குக் கிடைக்கும்".

17. "இந்தப் பிடிப்பு உயர்ந்தது; இந்தப் பிடிப்பு பரமானது; இந்தப் பிடிப்பை யறிந்தவன் பிரம லோகத்தில் மகிமையை அடைகிறான்".

18. "(இந்த ஆத்மா பரமாத்மாவன்)? பிறப் பிறப்பில்லை; சர்வஞ்ஞன்; எதினின்றும் அவன் உண்டாகவில்லை; அவனிடமிருந்து யாரும் உண்டாகவில்லை. அஜன், நித்தியன், சாசுவதன், புராணன், ஹிம்ஸிக்கப்படுஞ் சரீரத்தில் ஹிம்ஸிக்கப்படாதவன்".

19. "கொல்லுகிறவன் கொலைசெய்ய நினைக்கிறான்; (அதாவது: நான் கொல்லப்போகின்றேன் என்று அபிமானங் கொள்ளுகிறான்); கொல்லப்படுகிறவன் (தான்) கொலையுண்டதாக நினைக்கிறான்; இவ்விருவர்களும் அறியாதவர்கள்; அவன் கொல்லுகிறவனுமல்ல; இவன் கொல்லப்படுகிறவனுமல்ல".

20. "ஆத்மா அணுவைக் காட்டிலுஞ் சிறிது; பெரியதைக் காட்டிலும் பெரிது, பிராணிகளுடைய இருதயத்திலிருக்கிறது; காமமில்லாதவன் அவனைப் பார்க்கிறான்; சோக மில்லாதவனாகின்றான்; (மனம் முதலான) காரணங்களுடைய பிரசாதத்தினாலே ஆத்மாவினுடைய மகிமையை (பார்க்கிறான்)".

21. "அந்த ஆத்மா உட்கார்ந்திருந்தே தூரத்தில் போகிறது; படுத்துக்கொண்டே எங்குஞ் செல்கின்றது; அப்படிப்பட்ட விருத்த தர்மத்தையுடைய தேவனை என்னையும் என் போன்றோரையும் விட அன்னியன் எவ்விதமறிவான்".

22. "சரீரங்களில் சரீரமற்றவனாயும், அநித்திய வஸ்துக்களில் நித்திய வஸ்துவாயும், மகானாயும், விபுவாயு மிருக்கிற ஆத்மாவை, விவேகி அறிந்து சோகத்தை அடையமாட்டான்".

23. "இந்த ஆத்மா, வேதாப்பியாஸத்தினாலாவது, படித்ததை மறவாமலிருக்கும் புத்தியினாலாவது, மிருதியாகக் கேட்டதினாலாவது அடையத்தக்கவ னல்ல; இந்த (ஸாதகன்) எதை (தன் ஆத்மாவைப்) பிரார்த்திக்கின்றானோ, அதனால் (தன் ஆத்மாவினால்) அறியப்படுகிறான்; (அதாவது பரமாத்மாவை தனதாத்மாவைக் கொண்டே அறியவேண்டியது). அந்தத் தனதாத்மாவினுடைய யதார்த்தமான சுவ ரூபத்தைப் பரமாத்மா பிரகாசப்படுத்துகின்றான்".

24. "துர்நடத்தையை விடாதவனாவது, இந்திரியங்களை அடக்காதவனாவது, ஏகாக்கிர சித்தமில்லாதவனாவது, ஒழிவடைந்த மனதில்லாதவனாவது இந்த ஆத்மாவை அடையமாட்டான்; பிரஞ்ஞானத்தினால் மட்டும் அடையத்தக்கது".

25. "எந்த ஆத்மாவுக்குப் புண்ணிய பாவங்க ளிரண்டும் புஜிக்கிற அன்னமா யிருக்கின்றனவோ, மிருத்தியு (மரணம்) அதற்கு ஊறுகாயாக விருக்கின்றதோ, யாரிடத்தில் இந்தப்படி எவன் அறிகிறானோ, அவன்தான் (ஆத்மா)".

வல்லீ III.

(மிருத்தியு சொல்லுகிறான்):—

1. (ஜீவாத்மா, பரமாத்மா இவ்விருவர்களுந்) சரீரத்தில், கர்மத்தினிடமிருந்து அவசியம் உண்டாகும் பலத்தைப் புஜிக்கிறவர்கள்; வெயிலும் நிழலும்போல (பரஸ்பரம் விருத்தர்களாயும்) இருக்கிறவர்கள்; புத்தியில் பிரவேசித்தவர்கள்; பரமாயிருக்கிற இருதயாகாசத்தில் பிரவேசித்தவர்கள்; பஞ்சாக்கினியையுடைய கிரகஸ்தர்களும், மூன்றுதரம் அக்நி சயனஞ் செய்தவர்களுமான பிரம வாதிகள் இங்ஙன முரைக்கின்றார்கள்.

2. கர்மிகளுக்கு எது சேதுவாக (கரை) யிருக்கிறதோ, அந்த நாசிகேதாக்நியை (அறிய) சக்தியுள்ளவர்களாயிருக்கின்றோம். எது அக்ஷரமாயும், பரமாயும், அபயமாயும், (ஸம்ஸார ஸாகரத்தைத்) தாண்ட இச்சையுள்ளவர்களுக்குக் கரையாயுமிருக்கின்றதோ, (அந்தப்) பிரமத்தை (அறியவும்) சக்தியுள்ளவர்களாயிருக்கின்றோம்.

3. ஜீவாத்மாவை, ரதத்திலிருக்கிற யஜமானனாகவும், சரீரத்தை ரதமாகவும், புத்தியை ஸாரதியாகவும், மனதைக் கடிவாளமாகவும் அறி.

4. இந்திரியங்கள் (சரீரமாகிய ரதத்திற்குக்) குதிரைகளென்றும், அவைகளின் (ரூபாதி) விஷயங்கள் (சரீரமாகிய குதிரைகள் போகிற) மார்க்கங்களென்றும், சரீரம், இந்திரியம், மனம் இம்மூன்றுடன் சேர்ந்திருக்கிற ஆத்மா ஸம்ஸாரி என்றும் (ஜீவாத்மா போக்தா) விவேகிகள் சொல்லுகிறார்கள்.

5. யாவனொருவன் (புத்தியாகிய ஸாரதியானவன்) அவிவேகியாய் எப்பொழுதும் அடக்கப்படாத மனதுடன் (கடிவாளத்தோடு) இருக்கின்றானோ, அவனுக்கு இந்திரியங்கள் வசப்படாமல், சாரதிக்கு முரட்டுக் குதிரைகள் போல.

6. யாவனொருவன், விவேகியாயிருந்து எப்பொழுதும் அடக்கப்பட்ட மனதுடனிருக்கின்றானோ, அவனுக்கு இந்திரியங்கள் வசப்படும், ஸாரதிக்கு நல்ல குதிரைகள் போல.

7. யாவனொருவ ஆத்மஞானமில்லா ஸாரதியையுடையவனாய், அவிவேகியாய் எப்பொழுதும் அடக்கப்படாத மனதுடன் கூடினவனாகவும், அசுசியாகவுமிருக்கின்றானோ, அவன் (தன் ஸாரதியைக் கொண்டு) அந்தப் பரம பதத்தைப் (பிரமத்தை) அடையமாட்டான்; மேலும், ஜனன மரண ஸம்ஸாரத்தை அடைவான்.

8. எவன் விவேகியாய் எப்பொழுதும் அடக்கப்பட்ட மனதுடன் கூடினவனாயும், சுசியானவனாயுமிருக்கின்றானோ, அவன் எதினின்றும் மறுபடி ஜனிக்கவில்லையோ அந்தப் பதத்தைப் (பிரமத்தை) அடைகின்றான்.

9. யாதொரு விவேகியா யிருக்கிற சாரதியானவன், அடக்கப்பட்ட மனமுள்ளவனாக விருக்கின்றானோ, அவன் ஸம்ஸாரகதியாகிற மார்க்கத்தின் முடிவை அதாவது விஷ்ணுவின் நிலையை (வியாபன சீலரா யிருக்கிற பரமாத்மாவின் நிலையை) அடைகிறான்.

10. இந்திரியங்களைக் காட்டிலும் அவைகளின் அர்த்தங்கள் (விஷயங்கள்) உயர்ந்தன; அர்த்தங்களைக் காட்டிலும் உயர்ந்தது மனஸ்; இதைக் காட்டிலும் உயர்ந்தது புத்தி; இதைக் காட்டிலும் உயர்ந்தது மகானா யிருக்கிற ஆத்மா (மகத் தத்வம், ஈசுவர தத்துவம், சூத்ராத்மா).

11. மகத் தத்துவத்தைக் காட்டிலும் உயர்ந்தது அவ்வியக்த தத்துவம் (மாயை, பிரகிருதி); இதைக் காட்டிலும் உயர்ந்தது பரம புருஷன் (பரமாத்மா); இதைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை; இதுதான் (அடையவேண்டிய) திக்கு; இதுதான் பரமானகதி (மோக்ஷம்).

12. இந்த ஆத்மா எல்லாப் பூதங்க ளிடத்திலும் மறைந்திருக்கின்றார்; பிரகாசப்படுகிறதில்லை, சூக்ஷ்ம தரிசிகளால் (விவேகிகளால்) சூக்ஷ்மமாயும், ஏகாக்கிரமாயு மிருக்கிற புத்தியைக்கொண்டு காணப்படுகிறார்.

13. விவேகியானவன், வாக் முதலான இந்திரியங்களை, மனஸில் அடக்கவேண்டியது; மனஸைப் புத்தி ஆத்மாவில் அடக்க வேண்டியது; அந்தப் புத்தி ஆத்மாவை, மகத்தா யிருக்கிற ஆத்மாவில் (மகத் தத்துவம்—ஈசுவர தத்துவம்—முன் உண்டான விஞ்ஞானம்) அடக்கவேண்டியது; அந்த மகத் ஆத்மாவைச் சாந்த ஆத்மாவில் (பரமாத்மாவில்) அடக்கவேண்டியது.

14. (ஹே! ஜந்துக்களே), (ஆத்மா ஞானம் பெற) எழுந்திருங்கள்! (அக்ஞான தூக்கத்திலிருந்து) விழித்துக்கொள்ளுங்கள்! நல்ல குருவை யடைந்து (ஆத்மாவை) யறியுங்கள்; இந்த மார்க்கம் (தத்துவ ஞான லக்ஷண மார்க்கம்) கத்தியின் நுனி; கூர்மையுள்ளது; எளிதில் போகக்கூடாதது; அடைதற்கரிய வழி.

15. எது (எந்த ஆத்மா) அசப்தமோ, அஸ்பர்சமோ, அரூபமோ, அவ்வியயமோ, அரஸமோ, நித்தியமோ, வாசனையற்றதோ, ஆதியந்த மில்லாததோ, மகத் தத்துவத்தைக் காட்டிலும் வேறானதோ, எப்போது முள்ளதோ, அதை யறிந்து (ஒருவன்) மிருத்யுவி னிடத்திலிருந்து விடுபடுவான். (மறு ஜன்ம மில்லை).

16. மிருத்தியுவா லுரைக்கப்பட்டதும், புராதனமாயிருக்கின்ற இந்த நசிகேகேத பாக்கியானத்தைச் சொன்னாலும், கேட்டாலும், வித்வான் பிரம லோகத்தில் (பரமாத்மாவிடம்) மகிமையை யடைகின்றான்.

17. எவன் பரிசுத்தனாய்ப் பரமமாயும், ரகஸியமாயு மிருக்கிற இந்த (கிரந்தத்தைப்) பிராம்மண ஸபையிலும், சிராத்த காலத்திலுங் கேட்கும்படி சொல்விக்கின்றானோ, அது (அவனுக்கு) அநந்தமான பலனைப் பயக்கின்றது.

இரண்டாம் அத்தியாயம்

வல்லீ IV.

1. ஸ்வயம்பூ (பரமாத்மா) தன் தன் விஷயபரங்களாயிருக்கின்ற இந்திரியங்களை அடிக்கிறார்; (அதாவது ஆத்மா ஞானிகளால் மட்டும் இந்திரியங்களை அடக்க முடியும்); ஆகையால் (உலகத்தவர்) சாமானியமாய் அநாத்ம பூதங்களைப் பார்க்கிறார்களே யன்றி அந்தராத்மாவைப் (பரமாத்மாவைப்) பார்க்கிறதில்லை; ஆனால் எவனேனுமோர் தைரியஸ்தன் அமிருதத்துவத்தை இச்சித்தவனாகவும், அடக்கப்பட்ட சக்ஷுராதி இந்திரியங்களையுடையவனுமாக, பிரத்தியக் ஆத்மாவைப் (பரமாத்மாவைப்) பார்க்கிறான்.

2. அவிவேகிகள், அநாத்ம பூதங்களாயிருக்கிற விஷயங்களைப் பின்றொடர்கின்றார்கள்; (ஆதல் பற்றி) அவர்கள் எங்கும் பரவி நிற்கின்ற மிருத்யுவின் பாசத்தை யடைகின்றார்கள்; ஆதல் கொண்டே தைரியசாலிகள் நித்தியமுள்ள அமிர்தத்துவத்தை (பிரமத்தை) அறிந்து, அநித்தியமான வஸ்துக்களைப் பிரார்த்திக்க மாட்டார்கள். (அந்த வஸ்துக்களில் இச்சைப்பட மாட்டார்கள்).

3. (யாது காரணமெனின்), மிதுன நிமித்தங்களாக (சுகத்தைக் கொடுக்கத்தக்கனவாக) இருக்கின்ற ரூப, ரஸ, கந்த சப்த ஸ்பரிசங்களாகிற விஷயங்களை (உலகத்தி லுள்ளவன்) இதனாலேயே (பரமாத்மாவினாலேயே, விஞ்ஞானத்தைக்கொண்டே) பார்க்கின்றான்; (அறிகின்றான்). (அறியவேண்டியது) இவ்விடத்தில் மிஞ்சியுள்ளது யாது? (ஒன்றுமில்லை; எல்லாவற்றையும் பிரமம் அறிந்திருக்கிறது); இதுதான் அது. (நசிகேதஸால் கேட்கப்பட்ட வஸ்துதான்).

4. (ஒருவன்) சுவப்ந மத்தியத்தையும், (சுவப்நத்தில் அறியப்பட்டதையும்), ஜாக்ரமத்தியத்தையும், (ஜாக்ரதாவஸ்தையில் அறியப்படுகிறதையும்), எதைக்கொண்டு பார்க்கின்றானோ, அந்த

மகானாயும், விபுவாயு மிருக்கப்பட்ட ஆத்மாவை அறிந்து, விவேகி விசனத்தை யடையமாட்டான்.

5. கர்ம பலத்தைப் புஜிக்கிறவனாயும், காலத்திரயத்திற்கு ஈசனாயு மிருக்கிற இந்த ஜீவாத்மாவை (இன்னதென்று) எவன் அறிகின்றானோ (அவன்), பிறகு (அப்படி யறிந்த பிறகு) (ஜீவனை) ரக்ஷித்துக்கொள்ள இச்சிப்பட மாட்டான்; இதுதான் அது (இந்த ஜீவாத்மாவும் அந்தப் பிரமந்தான்).

6. எவர் (அந்தப் பிரம, ஹிரண்ணிய கர்ப்பர்) ஆதியில் விக்ஞானத்தினின்றும் (பரமாத்மாவினின்றும், அது அதாகவே) பூதங்களுடன் உண்டாயினரோ, (சரீரங்களை உற்பத்தி செய்த பிறகு பிராணிகளின்) இருதயத்தில் பிரவேசித்து இருந்துகொண் டிருக்கிறாரோ, அவரை எவன் பூதங்களுடன் அறிகின்றானோ (அவன் பிரமத்தை அறிகின்றான்); இதுதான் அது; (இந்த ஹிரண்ணிய கர்ப்பரும் பிரமமே).

7. எவள் சர்வ தேவதாத்மிகையாயும், (சப்தாதி விஷயங்களைப்) புஜிக்கிறவளாயும், (பர பிரமத்தி லிருந்து) ஹிரண்ணிய கர்ப்ப ரூபமாய் உண்டானவளோ, எவள் பூதங்களுட னுண்டானவளோ, இருதயத்தில் பிரவேசித்து நின்றவளாயு மிருக்கிற மாயையை, எவன் அறிகின்றானோ அவனே பிரமத்தை அறிந்தவன். இதுதான் அது (இந்த மாயையும் அந்தப் பிரமந்தான்).

8. கர்ப்பிணிகளால் கர்ப்பம் நன்றாகக் காக்கப்படுகின்றதுபோல, அரணிக் கட்டைகளால் காக்கப்படுகின்றதாயும், ஜாக்கிரதை யுள்ளவர்களும், ஹவிஸ் முதலியவற்றை யுடையவர்களுமான மனிதர்களால் தினந்தோறும் ஸ்துதி செய்யப்படுகிறதுமான யாதொரு அக்கி யுண்டோ, இதுவும் அதுதான். (இந்த அக்கியும் பிரமமே).

9. எந்த ஆத்மாவி லிருந்து சூரியன் உதயமாகின்றானோ, எதில் அஸ்தமயத்தை யடைகின்றானோ, அதில் எல்லா தேவதைகளும் பிரவேசிக்கிறார்கள் (அதிலேயே அடங்கி யிருக்கிறார்கள்); ஒன்றும் அதைவிட அன்னியமா யிருக்கின்றதில்லை. இதுதான் அது (இந்தச் சூரியனும் பிரமமே).

10. எது இவ்விடத்தில் (இவ்வுலகத்தில் காரிய காரண ரூபமாகத் தோற்றப்பட்டு விளங்குகின்றதோ) அதுதான் அவ் விடத்திலுள்ளது (பரமபதத்தில் ஸ்வச்சமாக இருக்கப்பட்ட பிர மம்); (அப்படியே) அவ்விடத்தி லுள்ளதே இவ்விடத்திலு முள் ளது. இங்கு (பிரமம்) பின்ன ரூபமென்று எவன் அறிகின்றானோ, அவன் மரணத்துக்குமேல் மரணத்தை யடைகின்றான்.

11. இது (பிரமம்) மனஸினால் (ஆசாரி யாகமங்களால் ஸம்ஸ் கரிக்கப்பட்ட மனதால்) பெறத் தகுந்தது; இங்கு அவருக்குப் பின்னமாக ஒன்றுமில்லை; எவன் பின்னமென்று அறிகின்றானோ, அவன் மரணத்துக்குமேல் மரணத்தை யடைவான்.

12. ஆத்மா அங்குஷ்ட பிரமாணமுள்ள புருஷனாக மத்தியி லிருக்கிறது (அதாவது இருதய கமல ரந்திரத்தி லிருக்கிறது); உண்டானதற்கும், உண்டாகப்போகிறதற்கும் ஈசானனா யிருக் கின்றது; (ஒருவன் அதை அறிந்தால்) அவன் அதினிடத்தி னின்றுங் கூச்சத்தை யடையமாட்டான், (அதிலேயே சம்பந்தப் பட்டுப் போகின்றான்). இதுவும் அது. இந்த ஜீவ ஆத்மாவும் பிரமமே).

13. அங்குஷ்ட பிரமாணமுள்ள புருஷன், புகையில்லாத ஜோதி ரூபம் (அதாவது கர்மத்தில் சம்பந்தப்படாதவன்); உண் டானதற்கும், உண்டாகப்போவதற்கும் ஈசானன்; நாளைக்கு முள் ளவன் (நித்யன், கூடஸ்தன்); இதுவும் அது; (இருதயத்தில் சாக்ஷி பூதமா யிருக்கிற பரமாத்மாவும் பிரமமே).

14. கரடு முரடான விடங்களிலும், பர்வதங்களிலும் விழு கிற ஜலம் எப்படி சிதறிப் (பல ரூபங்களாக) விழுகின்றதோ, அங்ஙனமே (ஆத்மாவுடைய) தர்மங்கள் தனித்தனி யென்று எவன் அறிகின்றானோ, அவன் அப்படிப்பட்ட நானா ரூப சரீரங் களை யடைகின்றான் (ஜனன மரணத்தை யடைகின்றான்).

15. ஹே! கௌதம (நசிகேத)! (எப்படி) சுத்தமான ஸ்தலத்தில், சுத்தமான ஜலம் (ஏக ரசமாகச் சிதறிப்போகாமல் ஒரே தாரையாய்) இருக்கிறதோ, இப்படி யறிந்த முனியுடைய

யோகியுடைய) ஆத்மா, இப்படியே பரமாகிவிடுகிறது. (பிரமமாகவே ஆகின்றது).

வல்லீ V.

1. பிறப்பில்லாதவரும், வக்கிரமில்லாத விவேகமுள்ளவராயுமிருக்கிறவருக்கும் (பிரமத்துக்கு), ஒரு பட்டணம் (இருக்கிறது); (அது சரீரம்); அப்பட்டணத்துக்கு 11 துவாரங்கள்; (முகத்திலுள்ளவை 7; நாபி உள்பட கீழுள்ளது 3; பிரமரந்திரம் 1; ஆக, 11). இப்படிப்பட்ட பட்டணத்தை ஒருவன் தியானஞ்செய்யின் (அதிலிருக்கிறவரைத் தியானிப்பின்) விடுபட்டவனாய்த் துக்கத்தை யடையமாட்டான். அவனுக்கு ஜனன மரணமுமில்லை. இதுதான் அது. (இப்பட்டணத்தை யுடையவனும் அந்தப் பிரமமே).

2. அது (பிரமம்) கமனமுள்ளது; சொர்க்கலோகத்திலிருக்கப்பட்டது (ஆதித்திய ரூபமாக); எல்லோரையும் வசிக்கும்படி செய்யத்தக்கது; அந்தரிக்ஷத்தில் இருக்கப்பட்டது (வாயு ரூபமாக); அக்கினியாகவிருக்கின்றது; பூமியின்கண்ணுள்ளது; அதிதி ரூபமாகக் கிரகத்திற் செல்லத்தக்கது; மனுஷரிடமுள்ளது; தேவர்களிடமுள்ளது. சத்தியத்தில் அல்லது யக்ஞத்திலுள்ளது; ஆகாயத்திலுள்ளது; பூமியிலுண்டாகின்றவைகளாக (பயிர் முதலியவைகளாக) இருப்பது; ஜல ஜந்துக்களாயும், யக்ஞத்திலுள்ளவைகளாயுமுள்ளது; பர்வதத்திலுண்டானவைகளாக (நதி முதலியவைகளாக) இருக்கப்பட்டது. சத்தியமானது; மிகப் பெரிதானது.

3. எது (அந்தப் பிரமம்) (இருதயத்திலிருந்து) மேல் பிராணவாயுவை உயரக் கொண்டுபோகின்றதோ, அபான வாயுவைக் கீழே தள்ளிவிடுகிறதோ, (இருதய புண்டரீகத்தின்) மத்தியிலிருக்கின்றதோ, பஜிக்கத்தக்கதா யிருக்கின்றதோ, அதை எல்லாத் தேவர்களும் (சக்ஷு முதலான இந்திரியங்கள்) உபாசிக்கின்றனர்; (அதற்குத் தங்கள் சேவையைப் பயபக்தியுடன் செய்கின்றன).

4. தேகத்தை யுடையவரும், சரீரத்திலிருப்பவரும், (பிறகு) நழுவிப்போகிறவரும், தேகத்தை விட்டுப் போகிறவருமான இவருக்கு (ஆத்மாவுக்கு) இவ்விடத்தில் (தேகத்தில்) மிஞ்சியது யாது? (ஒன்று மில்லை); (அதாவது ஆத்மா பிரிந்தால் எல்லாத் தத்துவங்களும் பின்பற்றுகின்றன). இதுதான் அது; (இந்தத் தேகியுமே அந்தப் பிரமம்).

5. யாதொரு மனிதனும் பிராண வாயுவினாலாவது, அபான வாயுவினாலாவது பிழைத்திருக்கவில்லை; எதினிடத்தில் இந்த இரண்டும் ஆசிருதங்களாக விருக்கின்றனவோ, அந்த வேறு ஒன்றினாலே (ஆத்மாவினாலே) பிழைத்திருக்கின்றான்.

6. ஹே, கௌதம! இரகசியமாயும், நித்திய வஸ்துவாயுமிருக்கும் இந்தப் பிரமத்தைக் குறித்தும், ஆத்மா (அவிக்ஞானத்தால்) மரணத்தை யடைந்து (பிறகு) எப்படி ஆகிறானோ (அதைப் பற்றியும்) உனக்குச் சொல்லுகிறேன்; (சொல்லுகிறதும், அறிந்துகொள்ளுகிறதும்) மிகவுங் கஷ்டம்.

7. (அவித்தியா சம்பந்தமுள்ள) தேஹிகள், மரணத்துக்குப் பிறகு வேறு சரீரத்தை யடையும்பொருட்டு (சுக்கில பீஜத்தோடு கூடினவர்களாக) யோநித்துவாரத்தை (மீண்டும்) அடைகிறார்கள்; (இவர்களைக்காட்டிலும் அதமர்களாயிருக்கிற) மற்றவர்கள், ஸ்தாவர பாவத்தை (கல் முதலான ஞானமற்ற ரூபங்களை) யடைகிறார்கள். அவரவருக்குள்ள கர்மத்தின்படிக்குங் கேள்வினாலுண்டான ஞானத்தின்படிக்கும் (இவ்விதமாகிறது).

8. யாதொரு இந்தப்புருஷன் (ஆத்மா), (பிராணாதி தத்துவங்கள்) உறங்கும்பொழுது (அவித்தியா சம்பந்தத்தினால்) மேன்மேலும் இச்சையை வளர்த்துக்கொண்டு, விழித்துக்கொண்டிருக்கிறானோ, அவனே சுத்த வஸ்து; அதுதான் பிரமம்; அதுதான் அமிருதம் என்றுரைக்கப்படுகிறது; அதில் எல்லா உலகத்தவர்களும் ஆசிருத்தர்களா யிருக்கிறார்கள்; அதை ஒன்றுந் தாண்டுகிறதில்லை. (அதிலேயே அடங்கி இருக்கின்றது); இதுதான் அது (இப்படிப்பட்ட ஆத்மாவும் அந்தப் பிரமமே).

9. எங்ஙனம் ஒரே அக்கினியானது புவனத்தில் பிரவேசித்து (அந்தந்த எரிபண்டம்) வஸ்துவின் ரூபத்துக்குத் தக்கவாறு பிரதி ரூபப்படுகின்றதோ, அங்ஙனம் ஒன்றாயிருக்கிற ஆத்மா, ஸர்வ பூதங்களினுள்ளே யிருந்து, அதனதன் ரூபப்படி பிரதி ரூபமாகவும், வெளியிலும் (விகாரப்படாத ஸ்வரூபத்தை யுடையதாகவும்) இருக்கிறது.

10. எங்ஙனம் ஒரே வாயுவானது புவனத்தில் பிரவேசித்து அந்தந்த வஸ்துவின் ரூபத்துக்குத் தக்கவாறு பிரதிரூபப்படுகின்றதோ, அங்ஙனமே ஒன்றாகிய ஆத்மா ஸர்வ பூதங்களினுள்ளே யிருந்து, அதனதன் ரூபப்படி பிரதி ரூபமாகவும், வெளியிலும் இருக்கிறது.

11. எப்படி உலகத்திற்குச் சக்ஷுவா யிருக்கின்ற சூரியன், (கண்மையா) நேத்திர திருஷ்டியி லுண்டான (அசுத்த புரீஷாதி பார்வையிலுண்டான) வெளிப்பட்ட தோஷங்களால் சம்பந்தப்படுகிறதில்லையோ, அப்படி ஒன்றாயும், ஸர்வ பூதாந்தராத்மாவாயும், (விபரீத புத்தியின் அத்தியாசத்துக்கு) வெளிப்பட்டதாயிருக்கிற பரமாத்மா உலக துக்கங்களுடன் சம்பந்தப்படுகிறதில்லை.

12. ஒரே ஒருவன், (எல்லோரையும்) வசப்படுத்துகின்றவன், எல்லாப் பூதங்களினுள் ளிருக்கிற ஆத்மா. ஏகமா யிருக்கிற (தன்னை), பலவிதமாக எவன் செய்துகொள்ளுகின்றானோ அவனை, ஆத்மஸ்தனாக இருக்கிறவனை, எந்தத் தீரர்கள் பின்றொடர்ந்து பார்க்கின்றார்களோ, அவர்களுக்கே சாசுவதமான சுகம்; மற்றவர்க்கில்லை.

13. எவன் அநித்திய வஸ்துக்களுக்கு நித்திய வஸ்துவா யிருப்பவனோ, சேதன முள்ளவர்களுக்குச் சேதனத்தைக் கொடுப்பவனோ, ஒருவனாகவே யிருந்து பலருக்கு (அவரவர்களுக்குத் தக்கபடி) இச்சைகளைக் கொடுக்கின்றானோ, ஆத்மஸ்தனா யிருக்கின்ற அப்படிப்பட்டவனை எந்தத் தீரர்கள் பின்றொடர்ந்து பார்க்கின்றார்களோ அவர்களுக்கே சாசுவதமான ஒழிவு (ஸம்ஸாரத்தின் ஒழிவு); மற்றவர்களுக்கில்லை.

14. குறிப்பிட வொண்ணாததாயும், பரமமாயும், சுகரூபமாயு மிருக்கிற (பிரமத்தை), "அதுதான் இது" என்று (குறிப்பிட்டுக் காட்டி) நினைக்கின்றார்கள் (பெரியோர்கள்). எப்படி யதையறி யலாம்? எது விளங்குகின்றது? எது ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது?

15. அதினிடத்தில் சூரியன் பிரகாசிக்கின்றதில்லை; அப்படியே சந்திரனும், நக்ஷத்திரங்களும், மின்னலும்; (அங்ஙன மிருக்க) இந்த அக்னி எப்படி பிரகாசிக்கும்; எல்லாம் அதையே யனுசரித்து விளங்குகின்றன; அதனுடைய ஒளியினாலே இந்த ஜகத்தெல்லாம் விளங்குகின்றது.

மூன்றாம் அத்தியாயம்

வல்லீ VI.

1. இந்த (சம்சார விருக்ஷம்) அசுவத்த விருக்ஷம் (பழமையா னதும் சனிக்கக்கூடியதுமாயிருக்கின்ற தன்மையுள்ளது); அதற்கு வேர் ஊர்த்துவம் (மேல், பிரமம்), கிளைகள் கீழ் (அவ்யக்த காரணாதிகள்); நீண்ட காலமுள்ளது; அதே (அந்த மேலே) சுக்கிரமானது; அதே பிரமம்; அதே அமிருதம் என்று சொல்லப்படுகிறது; அதினிடம் எல்லா உலகங்களும் அடங்கும்; ஒருவரும் அதைக் கடந்து போகிறதில்லை (அதையும் தாண்டார்); இதுதான் அது. (ஆசாரியார் வியாக்கியானத்தில் சம்சார விருக்ஷம் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது).

2. பிராணம் இருந்து வெளிப்பட்டு இந்த ஜகத்திலுள்ள யாவும் அசைகின்றன. (அதுதான் தொழிலை நடத்துகிறது); அதினின்றும் எல்லாம் வெளிப்பட்டது; அது பெரிய பயம். வச்சிராயுதத்தைக் கைக்கொண்டது; எவர்கள் இதை அறிகிறார்களோ அவர்கள் அமிருதர்களாகிறார்கள்.

3. அதினிடத்திலிருந்துண்டான பயத்தினாலே அக்கி சுடுகின்றது. சூரியன் காய்கின்றான், இந்திரனும் வாயுவும் ஐந் தாவதான மிருத்யுவும் ஓடுகிறார்கள் (அவரவர் தொழிலை முயற் சியுடன் நடத்துகிறார்கள்).

4. (பிரமத்தை) அறிந்துகொள்ள இவ்விடத்திலேயே (ஜீவ னுள்ளவரை) சரீரம் போகுமுன்) சக்தியுள்ளவனாயிருந்தால் சரீரம் விழுகிறதற்கு முன் (சம்சாரத்தினின்றும் விடுபடுகின்றான்); (அப் படிச் சக்தியில்லாவிடில்) அதனாலே (அறியாததினாலே) பிராணி களிடத்திலேயும், சிருஷ்டிக்கப்பட்ட உலகங்களிடத்திலேயும், சரீ ரத்தை யடைகிறதற்கு யோக்கியனாகின்றான். (பின்பு ஜனன மரணத்தை

யடைகின்றான்) ; (ஆதலால் அதை யடைய இப்பொழுதே முயல வேண்டும் ; அதனை யடைவது கஷ்டம். அஃதெங்ஙனமெனில்).

5. கண்ணாடியில் எப்படி (பிரதி பிம்பம்) தோற்றப்படு கிறதோ, அப்படி (விவிக்தமாய்) ஆத்மாவில் (தன தாத்மாவில் தோன்றும்); எப்படிச்சொப்பனத்தில் தோற்றப்படுகிறதோ, அப் படி (அவிவிக்தமாய்) பிதுரு லோகத்தில் (தோன்றும்); எப்படி ஜலத்தில் பிரதி பிம்பம் தோற்றப்படுகிறதோ அப்படி (அவிவிக்த மாய்) கந்தர்வ லோகத்தில் (தோன்றும்); வெயில் நிழல்கள் போலே (விவிக்தமாய்) பிரம லோகத்தில் (தோன்றும்) ; (இப்படி பிரம லோகத்தில் ஸ்பஷ்டமாகத் தோன்றினும் அந்த லோகத்தை யடைகிறது மிகவுங் கஷ்டம், அநேக கர்மங்கள் செய்து முடிய வேண்டியிருக்கிறது; மற்றும் மேற்கூறிய உலகங்களிலோ ஸ்பஷ்ட மாகத் தோற்றப்படவில்லை ; ஆகையால் ஆத்மாவில் பிரமத் தைப் பார்க்க முயற்சி செய்யவேண்டும்).

6. (அததன் காரணமாகிய ஆகாசாதி யிடத்தினின்றும்) தனிப்பட்டுள்ள (சுரோத்திராதி) இந்திரியங்களுடைய தனிமை யையும், அவைகளின் உத்பத்தி நாசத்தையும் அறிந்து தைரிய சாலி துக்கத்தை யடையமாட்டான்.

7. இந்திரியங்களைக் காட்டிலும் மனஸ் பெரிது ; அதைக் காட்டிலும் புத்தி பெரிது ; அதைக்காட்டிலும் மகத்துவம் பெரிது ; அதைக்காட்டிலும் அவியக்தத்துவம் (பிரகிருதி) பெரிது.

8. அதைக் காட்டிலும் வியாபகனும், லிங்காகிதனுமி ருக்கிற புருஷன் (பிரமம்) பெரிது; எதை அறிந்து ஜந்து (சம்சார பந்தத்திலிருந்து) விடுபடுகிறானோ, அமிருதத்துவத்தையும் அடை கிறானோ, (அது பிரமம்).

9. அந்தப் பிரமத்தினுடைய ரூபம் திருஷ்டியில் நிற்காது ; ஒருவனும் இதைக் கண் முதலான இந்திரியங்களினால் அறிய மாட்டான் ; அது, இருதயத்திலிருக்கிற புத்தியாலும், (சங்கல்ப

விகல்பமில்லாமல் ஒழுகியிருக்கிற) மனனினாலும், (நல்ல) மனனினாலும் அடையத்தக்கது; எவர்கள் இதை யறிகின்றார்களோ அவர்கள் அமிருதர்களாகிறார்கள்.

10. எப்பொழுது ஐந்து ஞானேந்திரியங்களும் மனதுடன் (ஒழிவடைந்து) நிற்கின்றனவோ, புத்தியும் தன் வேலையை நடத்தாமலிருக்கிறதோ, (அப்பொழுது) அதை (அந்த அவஸ்தையை) பரமமான கதியென்று சொல்லுகின்றார்கள் (பெரியோர்கள்).

11. ஸ்திரமாயும், இந்திரியங்களின் தாரணமுள்ளதாயு மிருக்கிற இந்த (அவஸ்தையை) யோகமென்று கருதுகின்றார்கள்; அப்பொழுது (யோக விருத்தி காலத்தில்) (யோகி) ப்ரமாதத்தை யடையாதவனாகிறான் (இந்திரியங்களைக் கண்டவாறு வெளிப்படுத்துவதை யொன்றாதும் அநர்த்தத்தை யடையாதவனாகிறான்); (ஏனெனில்) யோகமென்பது உத்பத்தி நாசங்களல்லவா? (இந்திரியங்கள் தங்கள் தொழில்களைச் செய்யத் தொடங்குவதும் உடனே யவைகளை யடக்கிவிடுவதுமல்லவா)?

12. (ஆத்மா) வாக்கினாலாவது, மனத்தினாலாவது, சக்ஷுஸ் முதலிய விந்திரியங்களாலாவது அடையத்தக்கதன்று; "இருக்கிறது" என்று சொல்லுகிறவனைக் காட்டிலும், மற்றவரிடத்தில் (நாஸ்திகனிடத்தில்) எப்படி அது (ஆத்மா) கிடைக்கும்.

13. (ஆத்மா) "இருக்கிறது" என்று நினைக்கப்பட்டும் தத்துவ பாவமுடையதாக (யதார்த்த ஸ்வரூபமாக) அடையத்தக்கது; (அஸ்தி, நாஸ்தி) இந்த இரண்டிலும், "அஸ்தி" யென்றே யடையப்பட்ட ஆத்மாவுக்கு (ஜீவனுக்கு) தத்துவ பாவம் (வந்து) முன்னிற்கிறது.

14. (ஞானம் உண்டாவதற்கு முன்) புத்தியை ஆச்ரயித்துக் கொண்டிருந்த எல்லாக் காமங்களும் எப்பொழுது சிதறிப்போய் விடுகின்றனவோ அப்பொழுது மனிதன் அமிருதனாய்விடுகிறான்; இவ்விடத்திலேயே ப்ரஹ்மத்தை அடைகிறான் (ப்ரஹ்மமாகவே ஆகி விடுகிறான்).

15. (காமங்கள் எப்படி அற்றுப்போகுமெனின்) இவ்விடத்தில், புத்தியின் முடிச்சுகள் (அவித்தையினா லுண்டான "நான், என் சரீரம், என் தனம்" என்பது முதலிய அகம்பாவங்கள்) எல்லாம், எப்போது அவிழ்ந்து போகின்றனவோ (இல்லாமல் போய் விடுகின்றனவோ), அப்போது (காமங்கள் நசிக்கும்). மனிதன் அமிருதனாகிறான். இதுவரையில் உபதேசம் (இவ் வுபதேசம் போதியது).

16. (மந்தப் பிரம வித்துக்களைக் குறித்துச் சொல்லப்படுகிறதாவது) இருதயத்துக்கு (இருதயத்தினின்றும் வெளிப்பட்ட) நூறும் (அநேகம்), ஒன்றும் (முக்கியமாய் ஒன்றும்) நாடிகள் உண்டு; அவைகளில் (அந்த முக்கிய) ஒன்று மூர்த்தாவினின்றும் (பிளந்துகொண்டு பிர்மாந்திரத்தின் வழியாக) வெளிப்படும்படியானது (சுழும்னாநாடி); அதனால் உயரக் கிளம்பிச் சென்று அதின் வழியாய்ப் போய், (பிரம்ம லோக முதலானவைகளை யடைந்து, அவ்விடத்திலிருந்து பக்குவப்பட்டு, பிறகு, முடிவில்) அமிருதத்துவத்தை யடைகின்றான்; மற்ற நாடிகள் நானாவித கதியையுடையன; உத்கிரமணத்தில் (மரணத்துக்கு) நிமித்தமாயிருக்கின்றன (சம்சாரஹேது).

17. (இந்த உபநிஷத்தின் சாரம் யாதெனில்) புருஷன் (பிரமம்) அங்குஷ்ட மாத்திரன் (அங்குஷ்டப் பிரமாணமுள்ள இருதயத்தில் இருப்பவன்); அந்தராத்மா, எப்பொழுதும் ஜனங்களுடைய இருதயத்திலிருப்பவன். அப்படிப்பட்டவனை (ஆத்மாவை) தன்னுடைய சரீரத்திலிருந்து, தைரியத்துடன், முஞ்சத்தினின்றும் ஈஷிகையைப்போல் (முஞ்சம் என்ற ஒருவிதமான புல்லிலிருந்து அதநடுவி லிருக்கும் ஈர்க்கை எடுப்பதுபோல்) வெளிப்படுத்தவேண்டும். சுத்தனாயும் அமிருதனாயுமிருக்கிற அப்படிப்பட்டவனை அறியவேண்டியது. சுத்தனாயும் அமிருதனாயும் இருக்கிற அப்படிப்பட்டவனை அறியவேண்டியது.

18. (உபதேசத்துக்குப்) பிறகு, மிருத்யுவால் சொல்லப்பட்டதினின்றும் இந்த (பிரம) வித்தையையும், எல்லாயோக

விதிகளையும் அடைந்து (தெரிந்துகொண்டு), நசிகேதஸானவன் விரஜனாகவும் (தர்ம அதர்மங்களை விட்டவனாகவும்), விம்ருத்யுவாகவும் (காமம், அவித்தியை இவைகளற்றவனாகவும்), (பிறகு) பிரமத்தை யடைந்தவனாகவும் ஆகிவிட்டான். இப்படியே, எவன் அத்தியாத்மத்தைத் (ஆத்ம பாவத்தை) தெரிந்துகொள்ளுகின்றானோ அவனும் (இப்படிப்பட்ட பலனையடைவான்).

19. சாந்தி (ஏற்கெனவே அர்த்தம் முதலில் எழுதப்பட்டிருக்கிறது).

ஓம். சாந்தி! சாந்தி! சாந்தி.

கடோபநிஷத் முற்றிற்று.

ஓம்.

ஓம் தத்ஸத்.

க்ருஷ்ண யஜுர்வேதிய

ச்வேதாச்வதரோபநிஷத்.

சாந்தி.

எங்களைக் (சிஷ்யனையும், குருவையும்) காக்க. எங்களுக்குப்போஷணை தருக. எங்களுக்கு வித்யா விஷயத்தில் சாமர்த்தியந் தருக. தேஜஸ்விகளான எங்களால் பிரம்ம வித்யை அறியப்பட்டதாகுக. எங்களுக்குள் ஒருவருக்கொருவர் த்வேஷமின்றி யிருக்கட்டும். சாந்தி! சாந்தி! சாந்தி.

ஓம்.

ஓம் தத்ஸத்.

கிருஷ்ண யஜுர்வேதீய

ச்வேதாச்வதரோபநிஷத்.

சாந்தி.

எங்களைக் (சிஷ்யனையும், குருவையும்) காக்க. எங்களுக்குப்போஷணை தருக. எங்களுக்கு வித்யா விஷயத்தில் சாமர்த்தியந் தருக. தேஜஸ்விகளான எங்களால் பிரம்ம வித்யை அறியப்பட்டதாகுக. எங்களுக்குள் ஒருவருக்கொருவர் துவேஷமின்றி யிருக்கட்டும். சாந்தி! சாந்தி! சாந்தி.

மாயின், ஸவிசேஷ பிரமத்தைப் பற்றி அநேக சுருதிகளில் ஏன் எடுத்தோதப்படுகிறதெனின், உபாஸனார்த்தங் கூறப்பட்டிருக்கின்றதே யன்றி வேறில்லை.

இவ்வாறு பல சுருதி ஸ்மிருதி யுக்தி அநுபவத்தினால் பிரபஞ்சத்திற்குப் பொய்மை யிருப்பதாலும், பிரபஞ்சத்தில் பதார்த்தங்க ளொன்றற்கொன்று விலக்ஷணங்களாகக் காணப்பட்டு பரஸ்பரம் அத்தியாஸம் தோற்றப்படுவதாலும், அமூர்த்தமான ஆகாசத்தில் அஃதோ ரிடமென்றும், கறுப்பாக விருக்கின்றதென்றும் அத்தியாஸங் காணப்படுவது போன்று ஆத்ம வஸ்துவுக்கும், அனாத்ம வஸ்துக்களுக்கும் பரஸ்பரம் அவ்விதந்தோற்றப்படுவதாலும், "நான் ஸ்தூலித்துப்போனேன், நான் இளைத்துப்போனேன்" என்று பேசுவதைக்கொண்டு தன்னைத் தேகமாக அத்தியாசப் படுத்திக்கொள்ளுகிற அநுபவ மிருப்பதாலும், அந்த அத்தியாஸத்தை யொழிக்க ஞானம் வேண்டுவ தவசியம். அந்த ஞானம் உண்டாகும் பொருட்டு உபநிஷத் தொடங்கப்படுகிறது.

முதல் அத்தியாயம்.

1. ஓம். பிரமவாதிகள் சொல்லுகிறார்கள். (பிரமவாதிகள் ஓரிடங் கூடி, ஒருவருக்கொருவர் அடியிற் கண்டபடி பிரச்னம் செய்துகொண்டார்கள்). "இந்த ஜகத்திற்குக் காரணம், பிரமமா? (அல்லது இனிக் கூறப்போகும் காலம் முதலியதா? அல்லது காரணமே இல்லையா? காரண மெப்படிப்பட்டது? அதாவது உபதானமா, நிமித்தமா? அல்லது இரண்டுமா)? நாம் எதினின்றும் உண்டானோம்? எதனால் பிழைத்திருக்கிறோம்? முடிவில் எதிலே பிரதிஷ்டை செய்யப்படுகிறோம்? சுக துக்கங்களுள் எதனால் ஏவப்படுகின்றோம்? பிரமவித்துக்களே! சொல்லுங்கள்" என்று.

2. காலமா? (எல்லாவற்றினுடைய முடிவுக்கு ஏதுவாயிருக்கிறகாலமா)? ஸ்வபாவமா? (அக்கினிக்கு உஷ்ணம்போல் பதார்த்தத்தின் தன்மையா)? நியதியா? (புண்ணிய பாப ஸ்வரூபமான கர்மமா)? அல்லது யதிர்ச்சையா? (அகஸ்மாத்தாக நடக்கிற தென்பதா)? அல்லது விக்ஞான மயனாயிருக்கிற ஜீவனா, காரணம்? என்று யோசிக்குங்கால், இவைகளுள் ஒன்றேனுங் காரணமன்று, இவைகள் யாவுஞ் சேர்ந்துங் காரணமன்று; ஜீவனுஞ் சுவதந்திரமில்லாதவனாயும், சுக துக்கங்களுக் குட்பட்டவனாயு மிருப்பதால் காரணமாகமாட்டான்.

3. பிரமவித்துக்கள், இவ்வாறு தியான யோகத்தால் ஆலோசித்துப் பார்த்து, எவர் ஒருவராகவே யிருந்து, மேற்சொன்ன காலம் முதலிய எல்லாக் காரணங்களையும் நடத்திவைக்கின்றனரோ, அந்தப் பரமாத்மாவினுடையதும், தன் குணங்களால் (காரிய பூதங்களான பிருதிவி முதலியவைகளால்) மறைக்கப்பட்டிருக்கிறதுமான சக்தியே காரணமென்று கண்டார்கள், (அறிந்தார்கள்).

4. (பிரமம் ஓர் சக்கரமாக வர்ணிக்கப்படுகிறது); மாயை, பிரகிருதி, சக்தி, தமஸ், அவித்யை, சாயை, அக்ஞானம், அநிருதம், அவ்வியக்தம் முதலிய பெயர்களை யுடையதாய் யாவற்றிற்குங் காரணமாயும் ஆதாரமாயு மிருக்கின்ற மேற்படி பரமாத்மாவினு டைய சக்தியாகின்ற) ஓர் நேமி—அச்சையுடையது; (மேற்படி சக்தியின் சத்வ, ரஜஸ், தமஸ் என்ற) மூன் குணங்களால் வளைக் கப்பட்ட சூடமுள்ளது; பதினாறு (பூதங்கள் 5, அந்தக்கரண முள்பட இந்திரியங்கள் 11; ஆக 16 விகாரங்கள்; அல்லது உல கங்கள் 14; விராட் 1; சூத்திராத்மா 1; 16) காரியங்களாகின்ற முடிவுகளுடையது; (பிரத்யயங்கள்—தோற்றங்கள், அபிப்பிராயங் கள்—ஆகின்ற) ஐம்பது ஆரங்களையுடையது. (அவைகள் இத னடியிற் கூறப்படும்). (பத்து இந்திரியங்கள்; அவைகளில்— பத்து விஷயங்கள். ஆக) இருபது பிரதி ஆரங்களையுடையது. (பிருதிவி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், மனஸ், புத்தி, அகங் காரம் ஆக 8 பிரகிருதிகள்; மேல் தோல், உள் தோல், மாம்ஸம், இரத்தம், ஊன் ஜலம், எலும்பு, அதற்குள்ளிருக்கிற மஜ்ஜை, சுக்கி லம் ஆக 8 தாதுக்கள்; அணிமா-சிறிதுத்தன்மை-மகிமா-பெரிதுத் தன்மை, கரிமா-கனத்தன்மை, லகிமா-இலகுத்தன்மை, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆக 8 ஐசுவரியங்கள்; தர் மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம், அக்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம், ஆக 8 பாவங்கள்; பிரமன், பிர ஜாபதி, தேவ, கந்தர்வ, யக்ஷ, ராக்ஷஸ, பிதிரு, பிசாச ஆக 8 தேவர்கள்; தயை, க்ஷாந்தி (பொறுமை) அனஸூயை (பிறரி டம் அசூயைப்படாமலிருத்தல்) அசௌசம், அநாயாசம், மங்க ளம், அகார்ப்பண்யம், அஸ்பிருஹா ஆக 8 குணங்கள்; ஆக) நாற்பத்தெட்டு பிரகிருதி முதலியவைகளாகிற வட்டைகளால் வளைக்கப்பட்டது; (நானாரூபமான காமியம், ஆசையென்ற) ஒரே கயிற்றை (சுற்றுப்பட்டையை) யுடையது; (தர்மம், அதர் மம், ஞானம் என்ற) மூன்று மார்க்கங்களையுடையது. (பாப புண்ணியமாகின்ற) இரண்டு நிமித்தம்; (தேகேந்திரியம் முத லான அநாத்மாக்களிடத்தில் ஆத்மாபிமானம் வைப்பது மோகம்)

மோகமாகிற ஒரு பிரமையுடையது (சம்சாரத்துடையது). (இப்படிப்பட்ட ஆத்ம சக்கரத்தைத் தியாகஞ் செய்கின்றோம்).

[மேற்கண்ட 50 பிரத்தியயங்களாவன ; 5 விபரியயங்கள், வித்தியாஸ நினைப்புகள் ; தமஸ் ; மோகம் ; மஹா மோகம் ; தாமிஸிரம் ; அந்ததாமிஸிரம். ;

தமஸ், 8 விதம் ; அவ்யக்த பிரகிருதி முதலான இவற்றில் 8 பிரகிருதிகளிடத்தில் ஆத்ம பிரதீதி யுண்டாவது 8 வித தமஸ் ;

மோகம் 8 விதம். 8 ஐச்வரியங்களில் மோகம் வைப்பது.

மஹா மோகம் 10 விதம் ; காணப்பட்டது 5 ; கேட்கப்பட்டது 5 ; சப்தாதி விஷயங்கள் 10 ; இவற்றில் அபிநிவேசம், மஹா மோகம். தாமிஸிரம் 18 விதம் ; மேற்கண்ட பல விஷயங்களுடன் 8 ஐச்வரியங்களால் பிரயத்தனஞ் செய்து காரியஞ் சித்திக்கா விடில் அதனால் உண்டாகும் கோபம் தாமிஸிரம் ;

அந்ததாமிஸிரம் 18 விதம் ; மேற்கண்டபடி பிரயத்தனஞ் செய்து பலனுண்டாகி அனுபவிக்கின்றபோது மரண காலஞ் சமீபித்துவிட்டால் அப்போது உண்டாகும் சோகம், அந்ததாமிஸிரம்.

28 சக்திகள் ; இந்திரியங்களுடைய பார்வை முதலான பாவ சக்திகள் 10 ; அந்தகம் முதலான அபாடவ சக்திகள் 10 ; அந்தக் கரணத்திற்கும் புருஷார்த்த யோக்கியதையுள்ள வித்திகளுடைய விபரீதத்தால் சக்திகள் 8 ; ஆக. 28 சக்திகள்.

9. துஷ்டிகள் ; பிரகிருத்யாதி 4 ; விஷயோபரமங்கள் 5. ஆக 9. அவைகளாவன :—

1. பிரகிருதி பரிணாம முண்டாகில் நாம் கிருதார்த்தர்களாகி விட்டோ மென்று நினைப்பது பிரகிருதி துஷ்டி.

2. ஆசிரமாதியைப் பெற்று சந்தோஷப்படுவது உபாதான துஷ்டி.

3. எப்போதிலும் முக்தி நமக்கு அவசியங்கிடைக்கு மென்று சந்தோஷப்படுவது கால துஷ்டி.

4. பாக்கிய மின்றி ஒன்றுமில்லை, அதனால் இங்கிதமே மோக்ஷமென்று சந்தோஷப்படுவது பாக்கிய துஷ்டி.

விஷயங்களைச் சம்பாதிப்பது அசக்கியம் ஆனதால் அது வேண்
ட ஒழிவடைவது ஒருவித துஷ்டி.

அவைகளைக் காப்பாற்றுவது வருத்தமென்று ஒழிவடைவது ஒரு
டி.

அவைகட்குத் தோஷ மிருப்பதால் வேண்டாமென் றொழிவுரு
த திருப்தி.

அவை கிடைத்தால் மேன்மேலும் ஆசையைக் கொடுக்கின்றன ;
அவைகளின் சங்கம் வேண்டாமென் றொழிவடைவது ஓர்வித

அவைகளைச் சேர்ந்தால் பரஹிம்சாதி தோஷம் சம்பவிப்பதால்
மென் றொழிவடைவது ஓர்வித திருப்தி ஆக 9.

டு ஸித்திகள் :—

ஊஹம் என்பது உபதேச மின்றி ஜன்மாந்திர சம்ஸ்கார வசத்
டாகுந் தத்துவ ஞானம்.

சப்தம் என்றது சாஸ்திர வாராய்ச்சி யின்றி கேள்வியினுலுண்
ானம்.

அத்தியயநம் சாஸ்திர வாராய்ச்சியினு லுண்டாகும் ஞானம்.

அத்தியாத்மிக வருத்தத்தைச் சகிப்பதா லுண்டாகும் ஞானம்.

அதிபௌதிக வருத்தத்தைச் சகிப்பதா லுண்டாகும் ஞானம்.

அதிதைவிக வருத்தத்தைச் சகிப்பதாலுண்டாகும் ஞானம்.

சுகிருத் பிராப்தி, குருவை யடைவதா லுண்டாகும் ஞானம்.

தானம், ஆசாரியருக் குரித்தான வஸ்து தானத்தினு லுண்டான
ஆக 8 சித்திகள்.;

ந 50 பிரத்தியயங்கள்).

(பிரமம் ஓர் நதியாக வர்ணிக்கப்படுகின்றது), (5 ஞானேந்
ளாகிற) ஐவகை ஜலங்களுள்ளது ; ஐந்து காரணங்களா
ஞ்ச பூதங்களால்) உக்கிரமாயும் வக்கிரமாயு மிருக்கின்றது.
ண்களாகிற) ஐந்து அலைகளுள்ளது ; (சக்ஷுராதி ஜன்ய
ஐந்து (புத்திகளுக்குக் காரணமாகிய மனஸை) மூல
டையது ; (சப்தாதி விஷயங்களாகிற) ஐந்து சுழல்களுள்

ளது; (கர்மம், ஜன்மம், ஜரை, வியாதி மரணமாகிற) ஐந்து (துக்கங்களாகிற) வேகமுடையது; (அவித்யை அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம்) என்ற க்லேசங்களாகிற ஐந்து பர்வங்களுடையது. இப்படிப்பட்ட நதியை தியானஞ் செய்கிறோம்.

6. யாவற்றிற்கும் ஜீவனஸ்தானமாயும், லயஸ்தானமாயும், பெரிதாயுமிருக்கிற இந்தப் பிரம்ம சக்ரத்தில் ஜீவன் (தான் வேறென்றும், ஈசுவரன் வேறென்றும் பிரித்துக்கொள்வதினாலும், அநாத்மாவாகிய தேகாதிகளைத் தானென்று நினைப்பதினாலேயும் தேவ மனுஷ்ய திர்யக் முதலான பலவித யோனிகளில் ஜனித்தும், மரித்தும்) சுற்றுகிறான்; பிறகு பரமாத்மாவை தானென்று அறிவதினால் மோக்ஷத்தை யடைகிறான்.

7. (வைராக்யமாகப் பிரமஞ் சொல்லப்பட்டது; அதையறிவதனால் மோக்ஷஞ் சித்திக்குமோவென்ற ஆசங்கைக்கிடமே அப்படியில்லை யென்று நிரூபிக்கப்படுகிறது). பிரமம், அநேக சுருதிகளால் உபதேசிக்கப்பட்ட உத்க்ருஷ்டமான வஸ்து; அதிலே (போக்தா, போக்யம், ப்ரேரிதா அல்லது ஜீவன், ஜகஜ்ஜீவன், ப்ராக்ஞன்) என்ற இம்மூன்றும் ப்ரதிஷ்டையாகவிருக்கின்றன, (ஆச்ரயமாகச் செய்யப்படுகின்றன). மேலும், அந்தப் பிரமம் அக்ஷரமான வஸ்து (நாசமற்றது). பிரமத்தினின்று வேறாயிருக்கிற அந்த வஸ்துவைப் பிரமவித்துக்கள் அறிந்து அதில் லீனர்களாகவும், அதிலேயே தியானபரர்களாகவும் இருந்து ஜன்மாதியினின்று விடுபடுகிறார்கள்.

8. (ஜீவேசவர்களுக்கு உண்மையில் பேதமிருந்தாலும் வியவகார தசையில் பேதத்தை யடைந்து விளங்கி அங்ஙனம் அறிவதால் அமிருதத்துவம் உண்டாகிறதென்று காட்டப்படுகிறது). வியக்தம், (விகாரப்பட்ட காரியம்); அவியக்தம், (காரணம்); க்ஷரம், (நாசமடைகிறது); அக்ஷரம், (அவிநாசி); இவ்விரண்டுஞ் சேர்ந்த இந்தப் பிரபஞ்சத்தை, ஈசுவரன் (பரமாத்மா) பரிக்கிறார், (தாங்குகிறார்); அநீசன், (ஜீவனும்) தாங்குகிறான்; ஆனால் இந்த ஜீவன் அவித்யாதத்காரிய பூத தேகேந்திரியாதிகளால் கட்டுப்

. (போக் திருத்வ பாவ மிருப்பதனால்; பிறகு உபாதி
ன பிரமமா யிருப்பதாகத் தானே யறிந்து எல்லாப்பாசங்
றும் விடுபடுகிறான்).

(இன்னும் பேதங் காண்பிக்கப்படுகிறது) ஞ:, (ஈசு
வுஞ்ஞ:, (ஜீவன்), இவ்விருவரும், பிறப்பு முதலானது
கள். இன்னு மொருத்தி யிருக்கிறாள், அவள் மாயை;
பிறப்பு முதலானதும் அற்றவள் தான்; போக்திரு
ர்த்தத்துடன் சேர்ந்தவள். இம்முறையில் ஈசுவரன் அநந்த
தேச கால வஸ்து இம்மூன்றுவித பேதங்களினால் பரிச்
றவராயும்), விசுவ ரூபராயும், அகர்த்தரா யிருக்கிறார்;
மூன்றையும் அறியும்பொழுது (சாதகன்) மோக்ஷத்தை
ன்.

(இப்பொழுது மாயைக்கும், ஈசுவரனுக்கும் பேதங்
கட்படுகிறது). பிரதானம் (மாயை) க்ஷரம், நாசமடை
ர: (அவித்யாதிகளை நசிக்கச் செய்கிறவர்) ஈசுவரன்,
க்ஷரன். இந்த ஏகனாயிருக்கிற ஈசுவரன் மாயையையும்
ம் நடத்துகிறார். அப்படிப்பட்ட வஸ்துவை தியானிப்ப
(நானே பிரமம் என்று) யோசிப்பதினாலும், அப்படி
யறிவதினாலும் விசுவ ரூபமான மாயைக்கு நிவர்த்தி
மோக்ஷங் கிடைக்கும்.

அத்தகைய தேவனை யறிந்தால் (அவித்யாதி) பாசங்
வும் அற்றுப்போகும்; அவித்யாதி கிலேசங்களுடன்
ரின் காரியமான) ஜன்ம மிருத்யு முதலானவைகளும்
ம்; அந்தப் பரமேசுவரனை தியானஞ் செய்வதால், தேக
றகு (அர்ச்சிராதி மார்க்கத்தின் வழியாய்) விராட் ஆகிற
து சுவ ரூபத்தை யடைந்து, எல்லா ஐசுவரியத்தையும்
அதாவது ஸ்வர்க்காதி போகங்களை யனுபவித்து அங்கி
ய அவைகளை யெல்லாம் ஒழித்து) ஆப்தகாமனாய்,
ய், (பூர்ணானந்த அத்துவிதீயமா யிருக்கிற பிரமமாகி)
.

12. (எதனால் பரம புருஷார்த்த முண்டாகிறதோ, அதனை இங்ஙனம் அறிக). இப்படிப்பட்ட கேவலாத்மா, நித்தியமாக அறிதற்குரியது. தன்னுத்மாவிலேயே இருக்கிறது; அறிதற்குரியது இதைக்காட்டிலும் வேறொன்றுமில்லை; ஜீவன், ஜகத், ஈச்வரன் இம்மூன்றும் அறியப்படும் பிரமம் அறியப்படும்.

13. அரணிக் கட்டையி லிருக்கின்ற அக்நி ஸ்வரூபம் காணப்படவில்லையோ, கடைந்த பிறகு ஸ்வரூபம் காணப்படுகிறதோ, அப்படி ஆத்மா தன் தேகத்தில் தெரியவில்லை; தியானத்தால் கடைந்து பார்த்தால் புலப்படும்.

14, 15. (எப்படிக் கடைகிற தென்றால்), தேகமாகிற கீழ் அரணியில் பிரணவமாகிற மேல் அரணியைக் கொண்டு, தியானமாகிற மத்தினால் கடைவதால். மறைந்திருக்கிற வெண்ணெயாகிற தேவன் வெளிப்படுவான். (இன்னும் எப்படி யிருக்கிறதென்றால்), எள்ளுக்குள் எண்ணெயையும், தயிருக்குள் வெண்ணெயையும், ஊற்றிலுள்ள ஜலத்தையும், அரணிக்குள் அக்கினியையும் மறைந்திருக்கிறது. அதுபோல் சத்தியமார்க்கத்தினிருப்பவன் தபசால் (தியானத்தால்) பார்க்கிறான்.

16. (எப்படிப் பார்க்கிறான் என்றால்), க்ஷீரத்தில் நெய் வியாபித்திருப்பதுபோல ஆத்மாவை ஸர்வ வியாபியானவனாய், ஆத்ம வித்தையாகிற தபஸுக்குக் காரணமானவனாய், உபநிஷத்தினால் அறியப்படும் வஸ்துவானவனாய் பார்க்கிறான்.

இரண்டாம் அத்தியாயம்.

---

1. (தியானத்திற்குச் சாதனம் அதாவது யோக விஷயங் கூறப்படுகிறது). சூரிய தேவானவர் முதலில் தியானயோககாலத்தில்) மனதைப் பிரமத்தினிடத்தில் பொருந்தச் செய்து, அக்னி ஜோதியைக் காட்டி, இந்தச் சரீரத்திலுள்ள புத்திகளை வெளிப்பட்ட விஷயங்களினின்று இழுத்து விடட்டும் (புத்தியை அடக்கட்டும்).

2. அப்படி சூரியனுடைய அனுக்கிரகம் இருக்கும்போது அடக்கப்பட்ட மனதால் நாம் பிரமப் பிராப்திக்குச் சக்தர்களாக ஆவோம்.

3. ஸவிதாவானவர், மனஸை அடைக்கி, மனஸ் முதலான கரணங்களைப் பிரம சுகத்தை யடையத்தக்கனவாகவும் திவ்யமான பெருஞ் ஜோதியைப் பார்க்க சாமர்த்தியமுள்ளனவாகவுஞ் செய்யட்டும்.

4. எவர்கள் மனதையும், மற்றக் கரணங்களையும் அடக்குகிறார்களோ அந்த விப்பிரர்கள், வியாபகராயும், பெரியவராயும், சர்வக்ஞராயு மிருக்கிற ஸவிதாவினுடைய தயவை முதலில் ஸம்பாதிக்கவேண்டும்.

5. பிரமம் உங்களைச் சேரட்டும்; நமஸ்காரங்களால் சுலோகங்கள் வரட்டும். திவ்ய ஸ்தானத்திலிருக்கும் எல்லாப் பிரம புத்திரர்களும் இதைக்கேட்கட்டும்.

6. எதில் அக்னி கடையப்படுகிறதோ, எதில் வாயு அடக்கப்பட்டு சப்தங்கள் உரத்த குரலில் சொல்லப்படுகின்றனவோ, சந்திரன் எதில் அதிகரிக்கப்படுகிறதோ, அந்த யக்ஞ கர்மத்தில் மனது பிரவிர்த்திக்கிறது. (அதாவது போகத்துக்காக முதலில் மனஸ் கர்மத்திலே பிரவிர்த்திக்கிறது).

7. நீடித்திருக்கும் பிரமத்தை, சூரியனுடைய அனுக்கிரகத்தால் ஸேவிக்கவேண்டும். அந்தப் பிரமத்தினிடத்தில் நிஷ்டையை அதாவது தியானத்தைச் செய்யவேண்டும். அப்படி நீ செய்வாயாகில் பூர்வமாயிருக்கிற கர்மங்கள் உன்னைத் தொடமாட்டா.

8. மார்பு, கழுத்து, தலை இம்மூன்றுகளையும் உன்னதமாயுடைத்தாயிருக்கிறதும், சமமாயிருக்கிறதுமான சரீரத்தை ஸ்தாபனஞ் செய்துகொண்டு இந்திரியங்களை ஹிருதயத்தில் மனதினால் அடக்கிப் பிரணவமென்கிற தோணியினால் பயங்கரங்களான எல்லா ஸம்சார நதிகளையும் வித்வான் கடக்கவேண்டும்.

9. விவேகியானவன், பிராண வாயுக்களை அடக்கிச் சரியான நடத்தையுள்ளவனாக (அதாவது நித்திய பூஜனம் முதலியன கைக்கொண்டவனாய்) பிராண வாயு குறைந்தால் மூக்கினால் சுவாசம் விடுகிறவனாக, நடுவாக நிற்பவனாக, துஷ்டக் குதிரைகளுள்ள ரதத்தைப்போல் இம்மனதைத் தரிக்கவேண்டும்

10. சமபூமியிலும், சுத்தமான இடத்திலும், பொடிக்கல், மணல், அக்கினி, சப்தம், ஜலம், கட்டடம் இவைகளில்லாத இடத்திலும் மனதிற்கு அனுகூலமும், பார்வைக்குப் பீடையில்லாததும், ஏகாந்தமானதும், காற்றில்லாததுமான இடங்களிலும் பரமாத்மாவின்மீது சித்தத்தைச் சேர்க்கவேண்டும்.

11. இவ்வாறு யோகஞ் செய்கிறவனுக்குப் பனி, புகை, சூரியன், வாயு, நெருப்பு, மின்மினிப்பூச்சி, மின்னல், ஸ்படிகம், சந்திரன் இவைகளுடைய ரூபங்கள் பிரமத்தைக் காட்டுவன போன்று முதலில் பார்வைக்குப் புலப்படும்.

12. ஐந்து வகைப்பட்டதாகிய யோக குணம் பிரவிர்த்திக்குங்கால், பிருதிவி அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் இவைகள் வெளிப்படையாகும். அப்பொழுது அப்படிப்பட்ட யோகாக்கினி மயமான சரீரத்தை யுடையவனுக்கு ரோகமும் இல்லை, ஜரையுமில்லை, துக்கமுமில்லை.

13. லகுவாயிருத்தல், ரோகமில்லாமலிருத்தல், ஆசையற்றிருத்தல், தேகம் வர்ணமுள்ளதாயிருத்தல், தொனி ரம்மியமா

விருத்தல், சுகந்தமுடைமை, சுபமா யிருத்தல், மூத்திர புரீஷம் அல்பமா யிருத்தல் இவற்றை முதலாவது யோகப் பிரவர்த்தி யென்று கூறுகிறார்கள்.

14. தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்ட ஓர் பிம்பம் எப்படி முதலில் மண் முதலான பூச்சினாலே மலினமாக விருந்து பிறகு அக்நி முதலியவற்றால் தேஜோமயமாயும், வெளுப்பாயும் விளங்குகிறதோ, அப்படி அந்த ஆத்ம தத்துவத்தைத் தேகியானவன் பார்த்து, ஏகனாகவும், கிருதார்த்தனாகவும், சோக மற்றவனாகவும் ஆகிறான்.

15. யோகி தன் ஆத்ம தத்துவத்தினால் பிரம தத்துவத்தைத் தீபத்தைத் தீபத்தாற்போல் எப்பொழுது பார்க்கிறானோ, அப்பொழுது பிறப்பில்லாதவனாகவும், நித்தியனாகவும், ஸர்வ தத்துவங்களால் விசுத்தனாகவு மிருக்கிற தேவனை யறிந்து, ஸர்வ பாசங்களினின்றும் விடுபடுகிறான்.

16. இந்தத் தேவனே திக்கு, மூலை திக்கு; ஸர்வன், முன்னுண்டானவன்; கர்ப்பத்தி லிருக்கிறவன்; உண்டான சிசு; இனி ஜனிக்கப்போகிறவன், இங்ஙனமாக விருந்தபோதிலும், எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியேகமாகத் தனிப்பட்டு நிற்கிறான், எல்லாப் பிராணிகளுடைய முகமாகவு மிருக்கிறான்.

17. எந்தத் தேவன் அக்நியிலும், ஜலத்திலும், விசுவ புவனத்திலும், ஓஷதிகளிலும், விருக்ஷங்களிலு மிருக்கிறானோ, அந்தத் தேவனை நமஸ்காரஞ் செய்கிறேன், நமஸ்காரஞ் செய்கிறேன்.

மூன்றும் அத்தியாயம்.

1. எவன் ஒருவனேகனை மாயாவியாகத் தன் சக்திகளினால் ஈசுவரத்தன்மை அடைகின்றானோ, எவன் ஒருவனே, எல்லா ஜனங்களையும் உற்பத்திக் காலத்திலும், சக்தி யுண்டாகிற காலத்திலுந் தன் சக்திகளினால் காவலாக ஆளுகின்றானோ, அந்தத் தேவனை அறிகிறவர்கள் மரண மில்லாதவர்களாகிறார்கள்.

2. (எப்படி பரமாத்மா ஒருவரோ) அது காரணமாகவே, ஒரே ருத்திரன்; ஞானிகள் அவனைத் தவிர இரண்டாவதாக ஒன்றையும் பார்க்கவில்லை; எவன் தன் சக்திகளால் எல்லா ஜனங்களையும் நியமனஞ் செய்கிறானோ, அந்தப் பரமாத்மாவையும், ஜனங்களுக்குளேயுள்ளவனையும், எல்லாப் புவனங்களையும் படைத்து, அழித்து முடிவு காலத்தில் இழுத்துக்கொள்ளுகிறவனையு மிருக்கிறவன்.

3. எங்குங் கண்களுள்ளவராயும், எங்கும் முகமுள்ளவராயும், எங்குங் கைகளுள்ளவராயும், எங்கும் பாதங்களுள்ளவராயு மிருக்கிற ஒரே தேவன், புவியையும், ஆகாசத்தையுஞ் சிருஷ்டித்து மனுஷியர்களைக் கைகளாலும், பக்ஷிகளைச் சிறகுகளாலுஞ் சேர்த்துவைக்கிறார். (அதாவது அதற்கேற்றுத் தக்க சக்தியையுண்டாக்கிறார்).

4. எவர் தேவர்களுக்கு உற்பத்திக் காரணமாயும், சக்தியைக் கொடுக்கிறவராயும், விச்வத்தை பரிபாலிக்கிறவராயும், ருத்திரனாயும், சர்வஞ்ஞராயும் இருந்து பூர்வத்தில் ஹிரண்ய கர்ப்பனைப் படைத்தாரோ அவர் நம்மை சுபபுத்தி யுடையவர்களாகச் செய்யட்டும்.

5. ஹே ருத்திர! கிரியிலிருந்து சுகத்தைப் பரப்புகிறவனே! யாதொரு உன்னுடைய மங்களகரமாயும், கோரமில்லாததாயும், புண்ணியத்தைக் கொடுக்கிறதாயு மிருக்கிற தேக முண்டோ அந்த அத்தியந்த மங்களகரமா யிருக்கிற தேகத்துடன் எங்களை நோக்குக (கடாக்ஷம் செய்யும் — கிருபை செய்யும்).

6. மலையிலிருந்து நன்மை தருபவனே, மலையிலிருந்து காப்பவனே, எய்யும் பொருட்டு எந்தப் பாணத்தைக் கையில் தரித்துக்கொண்டிருக்கிறீரோ, அந்தப் பாணத்தை மங்களமாகச் செய்யும்; புருஷனையும் ஜகத்தையும் ஹிம்சிக்காமலிரும்.

7. பிரபஞ்சத்துக்கு வேறாயும், பிரமனுக்கு வேறாயும், பெரிதாயும், சரீரந்தோறுஞ் சர்வ பூதங்களிடத்திலும் மறைந்திருக்கிறதாயும், பிரபஞ்சத்துக்கு ஒரே ஆவரண பூதமாயுமிருக்கிற அந்த ஈசனை யறிந்து அமிருதர்களாகிவிடுகிறார்கள். (இது காரணாத்மனுவஸ்தானம்)

8. இந்தப் புருஷனை மகானாகவும், பிரகாச ரூபமுள்ளவனாகவும், அக்ஞானத்துக்குப் புறம்பா யிருக்கிறவனாகவும் நான் அறிகிறேன். அவரையே அறிந்து மிருத்யுவைத் தாண்டுகிறான். மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை.

9. எதைக்காட்டிலுஞ் சிரேஷ்ட வஸ்துவாவது, கீழ்ப்பட்ட வஸ்துவாவ தில்லையோ, எதைக்காட்டிலும் பெரிய வஸ்துவாவது சிறிதாவது இல்லையோ, எது விருக்ஷம்போல் ஆகாயத்தில் நிற்கிறதோ, அந்தப் புருஷனால் எல்லாம் நிறைந்திருக்கின்றன.

10. காரிய ரூபமா யிருக்கிற ஜகத்துக்கும், அதற்குக் காரண ரூபமா யிருக்கிற ஈசுவரனுக்கும் வேறாயிருக்கிறதும், ரூப ரஹிதமாயும், தாபத்திரய ரஹிதமாயு மிருக்கிறது எதுவோ, அதை அறிந்தவர்கள் அமிருதர்கள். மற்றவர்கள் துக்கமாகிற ஸம்ஸாரத்துவத்தை யடைகிறார்கள்.

11. எல்லா முகங்களையும், தலைகளையும், கழுத்துக்களையும் உடையவராயும், எல்லாப் பிராணிகளுடைய புத்தியிலிருப்பவராயும், ஸர்வ வியாபியாயும், பகவானாயும், சிவனிருக்கிறபடியால் அவரை சர்வகதனென்று சொல்லப்பட்டது. (பகவான் என்பதற்கு அர்த்தம்:— எல்லா ஐசுவரியத்தையும், வீரியத்தையும், யசஸையும், ஸ்ரீயையும், ஞானத்தையும், வைராக்கியத்தையும் உடையவர்).

12. (இன்னும் எப்படி யிருக்கிறாரென்றால்) மகான், ஸமர்த்தர் (உதய ஸ்திதி சம்ஹார விஷயத்தில்); அந்தக்கரணத்துக்குப் பிரவர்த்தகர்; ஸுநிர்மலமா யிருக்கிற பரமபதப் பிராப்தியைக் கொடுக்கிறவர்; பரிசுத்தர்; நாச மில்லாதவர்.

13. அங்குஷ்டப்பிரமாண முள்ளவர் (அங்குஷ்டப்பிரமாண முள்ள ஹ்ருதயத்தி லிருப்பதால் அவருக்கு அந்தப் பிரமாணஞ் சொல்லப்பட்டது); புருஷர்; யாவ ருள்ளத்து மிருப்பவர்; எப்பொழுதும் எல்லாருடைய ஹ்ருதயத்திலு மிருப்பவர்; ஹ்ருதயஸ்தமா யிருக்கிற மனதால் மறைக்கப்பட்டவர்; ஞானேசன்; இவ்வாறாக எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் அமிருதர்கள்.

14. அநேக சிரசுகளை யுடையவர், புருஷர், அநேக நேத்திரங்களை யுடையவர்; அநேக பாதங்களை யுடையவர்; புவன மனைத்தும் வியாபித்துப் பத்து அங்குலப் பிரமாணத்துக்கு மேலாக விருக்கிறார்; (அதாவது, எல்லாவற்றிலும் வியாபித்தும் எல்லாவற்றிற்கும் மேலாயு மிருக்கிறார்; அல்லது நாபிக்குப் பத்து அங்குலத்துக்கு மேலிருக்கிற ஹ்ருதயத்தி லிருக்கிறவர்).

15. எது அன்னத்தினால் வளர்க்கப்படுவதா யிருக்கிறதோ, (அதாவது இப்போது காணப்படுகிறதோ), எது உண்டாயிற்றோ, எது உண்டாகப்போகிறதோ, அப்படிப்பட்ட இது வெல்லாம் இந்தப் புருஷன்தான். மோக்ஷத்துக்கு நாயகன்.

16. எங்குங் கைகாலுள்ளவர்; எங்குங் கண், தலை, முக முள்ளவர்; எங்குங் காதுள்ளவர்; லோக முழுதுஞ் சூழ்ந்து கொண்டிருக்கிறார்.

17. (இவரை) எல்லா இந்திரியங்களையும் பிரகாசப்படுத்து கிறவராகவும், எல்லா இந்திரிய மில்லாதவராகவும், யாவற்றிற்கும் பிரபுவாகவும், ஈசனாகவும், யாவற்றிற்கும் மேலான இடமாகவும், மகத்தான காரணமாகவும் (அறியவேண்டும்).

18. ஒன்பது துவாரமுள்ள பட்டணமாகிய தேகத்தில் தேகியாக (ஜீவாத்மாவாகவும்), ஸ்தாவர ஜங்கமாத்மகமா யிருக்கிற

ஜகத்தையும் வசிப்படுத்துகிறவராகவும் இருந்துகொண்டு
டா வெளியில் அசைகிறார்.

1. பாதமில்லை, விரைவாகச் செல்கிறவர்; கரங்களில்லை,
க்கூடியவர்; கண்களில்லை, பார்க்கிறவர்; காதில்லை, கேட்
அறியவேண்டியதை அறிகிறவர்; இவரை அறிகிறவ
இவரை முதலாவது மகா புருஷனைச் சொல்லுகிறார்கள்.

. அணுவைக் காட்டிலும் அணு; பெரியதைக்காட்டிலும்
க இந்த ஜந்துவுடைய ஹ்ருதயத்தில் ஆத்மா இருக்கிறார்;
ப்பட்ட விஷய போக சங்கற்ப ரஹிதனாயும், மகானுயு
ம ஈசனை, ஈசுவரனுடைய அனுக்கிரகத்தால், சோகமில்லா
பார்க்கிறான்; (அதாவது ஒருவன் பார்த்தால் அவனுக்குச்
கிடையாது).

. இவரை ஜரையில்லாதவரென்றும், புராதனரென்றும்,
மாவென்றும், விபுத்துவத்தால் எங்கும் நிறைந்தவரென்
வருக்கு உத்பத்தியும் அபாவமு மில்லையென்று பெரி
ர் கூறுகிறார்களே அவரென்றும், நித்தியரென்றும் நான்
றன்.

நான்காம் அத்தியாயம்.

1. எவர் ஒருவரோ; ஜாதி முதலியவை இல்லாதவரோ; அநேக சக்திகளின் சேர்க்கையால் அநேக ஜாதிகளைத் தனக்கு யாதொரு பிரயோஜனமில்லாமல், தரித்துக்கொள்ளுகிறாரோ, எவரிடத்தில் இந்தப் பிரபஞ்சமானது ஆதியிலும் (உற்பத்தியிலும்) அந்தத்திலுஞ் சேருகிறதோ அந்தத் தேவர் நல்லபுத்தியோடு நம்மைச் சேர்த்துவைக்கட்டும்.

2. அதுவே அக்னி; அதுவே ஆதித்யன்; அதுவே வாயு; அதுவே சந்திரன்; அதுவே சுக்கிரன் (முதலிய நக்ஷத்திரங்கள்); அதுவே பிரமம்; அதுவே ஜலம்; அதுவே பிரஜாபதி (பிரமன்).

3. நீயே, ஸ்திரீ; புருஷன்; குமாரன்; குமாரி; கிழவன் கழியால் வஞ்சிக்கிறாய்; பிறந்தவனாக விருக்கிறாய்; எங்கும் முக முள்ளவன்.

4. நீயே நீலபக்ஷி; பச்சைப்பக்ஷி; செங்கண்ணுள்ள பக்ஷி; மேகம்; ருதுக்கள்; சமுத்திரங்கள்; அநாதியாயிருக்கிறதும், வியாபகமாக விருக்கிறதுமாய், எவனிடத்தில் எல்லாப்புவனங்களும் உண்டாயிற்றோ, அதுவாயாக இருக்கிறாய்.

5. செம்மை, வெண்மை, கருமை நிறமுள்ளவளாயும் (ரஜஸ, ஸத்வ, தமோகுண முள்ளவளாயும்), அநேக பிரஜைகளைச் சிருஷ்டிக்குமவளாயும், தனக்குச் சமான வடிவத்தை யுடையவளாயும், பிறக்காதவளாயு மிருக்கிற ஒருத்தியை (மாயையை), பிறக்காத ஒருவன் (ஜீவாத்மா) சேவித்துக்கொண்டு (சொன்னபடி கேட்டுக்கொண்டு), அநுசரித்துக்கொண்டு இருக்கிறான். மற்றொரு பிறக்காதவன் (பரமாத்மா) போகத்தைப் புசித்த இவளை விட்டுவிடுகிறான்.

6. இரண்டு கருடபக்ஷிகள், சேர்க்கையுள்ளவைகள், சிநேக முள்ளவைகள், (ஜீவன்; பரமாத்மா) ஒரே விருக்ஷத்தில் (சரீரத்

தில்) ஆசிரயித்திருக்கின்றன; அவைகளில் ஒன்று (ஜீவன்) கர்ம பலத்தை ருசியுடன் சாப்பிடுகிறது; மற்றொன்று (பரமாத்மா) சாப்பிடாமல் எங்கும் பார்த்துக்கொண்டிருக்கிறது.

7. ஒரே விருக்ஷத்திலே (சரீரத்திலே) போக்தாவாக இருக்கும் புருஷன் (ஜீவன்) மூழ்குகிறவனாக, அக்ஞானத்தினாலே மோகம் பிடித்து துக்கப்படுகிறான்; அவன் எப்பொழுது கஷ்டப்பட்டு கண்டுபிடிக்கப்படும் வேறான ஈசனையும் (பரமாத்மாவையும்), (இந்த ஜகத்) அவனுடைய மகிமை யென்பதையுங் கண்டு கொள்ளுகிறானோ, அப்பொழுது துக்கமில்லாதவனாகிறான்.

8. வேதங்களால் அறியப்படத்தக்கவரும், நாசமில்லாதவரும், உயர்ந்தவரும், ஆகாயம்போ லிருக்கிறவருமான யாதொருவரிடத்தில் எல்லாத்தேவர்களும் ஆசிரயித் திருக்கின்றார்களோ, அப்படிப்பட்டவரை அறியாதவன் வேதத்தினால் என்ன செய்யப் போகிறான்? அறிந்தவர்கள் கிருதார்த்தர்களாகிறார்கள்.

9. எதை வேதங்களென்றும், யக்ஞங்களென்றும், கிரதுக்களென்றும், விரதங்களென்றும், சென்றது, இருக்கிறது, இனி வரப்போகிறது இவைகளென்றும் வேதங்கள் சொல்லுகின்றனவோ, (இது நிர்க்குண பிரமம்), மாயியான அவர் (மாயையில் சம்பந்தப்பட்ட ஈசுவரன்) இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தார். அந்தப் பிரபஞ்சத்தில் இன்னொருவன் (ஜீவன்) மாயையினால் கட்டுப்பட்டு, ஸம்ஸாரத்திலே திரிகிறான்.

10. பிரகிருதியென்பது மாயையென்றும், மாயையுள்ளவன் ஈசுவரனென்றும் அறியவேண்டும். அந்த ஈசுவரனுடைய அவயவ பூதங்களாகிற வஸ்துக்களால் இந்த ஜகத் நிறைந்திருக்கிறது.

11. எவர் மூலப் பிரகிருதி யாகிய மாயையிடத்திலும், அந்த மாயையே பின்ன பின்ன பிரகிருதியா யிருக்கிற மாயையிடத்திலும் இருக்கிறாரோ, ஒருவரோ, எவரிடத்தில் எல்லாம் லயத்தை அடைகின்றனவோ, முக்தியைக் கொடுக்கிறவராயும், ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவராயும், தேவனாயு மிருக்கிற அந்த ஈசுவரனை நன்றாக விசாரித் தறிந்தவர்கள் மோக்ஷத்தை யடைகிறார்கள்.

12. எவர், தேவர்களுக்கு உற்பத்தி காரணராயும், சக்தியைக் கொடுக்கிறவராயும், விசுவத்தைப் பரிபாலிக்கிறவராயும், உருத்திரனும், சர்வஞ்ஞனாயும் இருந்து பூர்வத்தில் ஹிரண்யகர்ப்பரை உண்டுபண்ணினாரோ, அவர் நல்ல புத்தியோடு நம்மைச் சேர்த்துவைக்கட்டும்.

13. எவர் தேவர்களுக்கு அதிபதியோ, எவரிடத்தில் பிரஜைகள் ஆசிரயித்திருக்கிறார்களோ, இரண்டு கால் பிராணிகளுக்கும், நாங்கால் பிராணிகளுக்கும் எவர் ஈசனோ அந்தத் தேவனை ஹவிஸால் பூஜிக்கிறோம்.

14. மலையாமல் மறைக்கப்பட்டு ஒன்றுந் தெரியாமலிருக்கிற இந்த ஜகத் மத்தியில் சூக்ஷ்மத்திலுஞ் சூக்ஷ்மமாயும், விசுவத்தைச் சிருஷ்டித்தவராயும், அநேக ரூபங்களை யுடையவராயும், விசுவத்தை ஒரே சுற்றாகச் சுற்றிக்கொண்டிருக்கிறவராயு முள்ள சிவனை யறிந்து ஒருவன் மோக்ஷத்தை யடைகிறான்.

15. அவரே எக்காலத்திலும் இப்புவனத்துக்கு ரக்ஷகர்; விசுவத்துக்கு அதிபதி; எல்லாப் பூதங்களிலும் மறைந்திருக்கிறவர்; எவரிடத்தில் ரிஷிகளும், தேவர்களும் மனதை நாட்டிச் சேர்ந்திருக்கிறார்களோ, அவரையே அறிந்து மிருத்யு பாசத்தை சேதிக்கிறான்.

16. நெய்யின் ஸாரம்போல் அதி சூக்ஷ்மமாயும், சிவனாயும், எல்லாப் பூதங்களிலும் மறைந்திருக்கிறவராயும், விசுவத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிறவராயும் உள்ள தேவனை யறிந்து, எல்லாப் பாசங்களிலிருந்தும் விடுதலையாகிறான்.

17. இவர் விசுவத்தைச் சிருஷ்டித்தவர்; மகாத்மா; எப்பொழுதும் ஜனங்களுடைய ஹிருதயத்தி லிருப்பவர்; ஹிருதயத்தாலும், விவேக புத்தியாலும், மனதாகிற ஞானத்தினாலேயும் அறியத்தகுந்தவர்; இவரை அறிந்தவர்கள் அமிருதர்களாகிறார்கள்.

18. எப்பொழுது அஞ்ஞானம் நீங்குகிறதோ, அப்பொழுது பகலு மில்லை, இராத்திரியு மில்லை, இருக்கிற தென்பது மில்லை

து மில்லை; சிவன் மட்டுந் தான் நிற்கும்; அது
ூரியனால் புகழத்தகுந்தது. அதே நித்தியமாயும்
ரயுமுள்ள ஞானம்;

ரை உயரத்திலாவது, பக்கத்திலாவது, மத்தியிலா
ில் ஒருவருங் கிரகிக்க முடியாது; இவருக்குச்
ஸ்து இல்லை. இவர் பெயர் மகத்தா யிருக்கிற

ருடைய ரூபம், இந்திரியங்களுக்குக் கோசர மில்
; எவனும் இவரைக் கண் முதலான இந்திரியங்
மாட்டான். ஹ்ருதய குகையிலிருக்கிற இவரைச்
றனும், மனதினாலும் அறிந்தவர்கள் அமிருதர்க
ள்.

ரார்த்தனை) நீ, இறப்பு பிறப்பு இல்லாதவன்;
பாரத்தினின்றும் பயமடைந்த ஒருவன் உன்னைச்
கிறான். ஹே, உருத்திர! உன்னுடைய தக்ஷிண
னைக் காப்பாற்று.

களுடைய புத்திரர், பௌத்திரர், ஆயுசு, கோக்கள்,
ரர்களா யிருக்கிற வேலைக்காரர்கள், இவர்களிடத்
த்திர! நீர் நாசத்தைச் செய்யவேண்டாம்; கோபங்
ப்படுத்த வேண்டாம்; ஏனென்றால் இந்த ஸதஸில்
ட உம்மை யழைக்கிறோம்.

ஐந்தாம் அத்தியாயம்.

1. நாசமற்றதாயும், பிரமமாயும், அநந்தமாயும் இருப்பவை யிரண்டு; வித்தையொன்று; அவித்தையொன்று; இந்த இரண்டும் எதனிடத்தில் மறைவாக வைக்கப்பட்டிருக்கின்றதோ, இவைகளில் அவித்தை நாசமானது; வித்தை மோக்ஷமானது; இந்த இரண்டையும் எவர் நியமனஞ்செய்கின்றாரோ அவர் அந்நியர் (பரமாத்மா).

2. எவர் ஸ்தானந்தோறும், சகல ரூபங்களிடத்திலும், எல்லாம் உண்டாகிற விடத்திலும் இருக்கின்றாரோ; சர்வக்ஞராயும், முதலில் தானே யுண்டானவராயும் இருக்கின்றாரோ, அவர் பிரமனை ஞானங்களுடன் சேர்க்கிறார்; உண்டானவனைப் பார்க்கிறார் (முதலில் பிரமனை உண்டுபண்ணினார்).

3. பரமாத்மாவாயிருக்கிற இந்தப் பிரபஞ்சத்தில் ஒவ்வொரு சிருஷ்டிக் கூட்டத்தையும், சம்ஹாரமாகச் செய்து மறுபடியுஞ் சிருஷ்டிக்கிறார்; மறுபடியும் மரீசி முதலான பதிகளைச் சிருஷ்டித்து, சர்வாதிபத்தியஞ் செய்கிறார்.

4. சூரியனைப்போல், மேல், கீழ், குறுக்கு முதலான திக்குகளைப் பிரகாசப்படுத்திக்கொண்டு விளங்குகிறார்; இந்தப்படிப் பகவான், வரேண்யர், தேவர், ஏகர் தன்னுடைய ஆத்ம ரூபமா யிருக்கிற எல்லாவற்றிலு மிருக்கின்றார்.

5. எவர் ஒவ்வொன்றுக்கு முள்ள ஸ்வபாவத்தைப் பக்குவப்படுத்துகிறாரோ, பக்குவப்படத்தக்கதான எல்லாவற்றையும் விகாரப்படுத்துகிறாரோ, மூன்று குணங்களை ஏற்படுத்துகிறாரோ, அவர் ஏகர். விச்வத்திலிருக்கிறார்.

6. உபநிஷத்துக்களிலே மறைந்திருக்கிற அந்தப் பிரமத்தை எந்தப் பிரமன் அறிந்தாரோ, அவரும், மற்றுந் தேவர்கள், ரிஷிகள் அறிந்தார்களோ, அவர்களும் அதே மயமாய் அமிருதர்களாகிவிட்டார்கள்.

ஜீவாத்மா) குணத்தோடு கூடினவர், பலத்துக்கும், கர்
கர்த்தா; செய்யப்பட்ட கர்மத்தின் பலனை அனுபவிக்
ச்வரூபர்; முக்குண முள்ளவர்; மூன்று வழியுள்ளவர்;
ாடம், பித்ரு யானம், அமாதி மார்க்கம்); பஞ்ச பிராண
ரி; தன்னுடைய சுவ கர்மங்களுடன் சஞ்சரிக்கிறார்.

அங்குஷ்ட மாத்திரர்; சூரியனுக்குச் சமான ரூப முள்
நல்பம், அகங்காரம் இவைகளுடன் கூடினவர்; புத்தி
ோடும், தன் சொந்தமான (ஜராதி) குணத்தோடுஞ்
தார்க்கழியின் நுனி ஆணியைப்போல் சிறிதாக
ம் வேறுகமட்டுந் தோற்றப்படுகிறார். (பரமாத் மாத்மா
வேறில்லை).

ரு வாளுடைய நுனியை நூறு பாகஞ்செய்து, அதில்
நத நூறு பாகஞ் செய்யின், அதில் ஒரு பாகம் ஜீவன்;
பரமாத்மாவின் அநேக அம்சங்களில் ஒரு அம்சம்
நானமுடையவன், நாசமில்லாதவன்.

இவன் (ஜீவாத்மா) ஸ்திரீயு மல்ல; புருஷனு மல்ல;
மல்ல; எந்தெந்தச் சரீரத்தை எடுக்கிறானோ அதனால்
கிறான்.

சங்கற்பம்; பிறகு த்வக் இந்திரிய வியாபாரம்; பிறகு
றகு ஆசை; இவைகளால் (கர்மங்கள் செய்யப்படுகின்
நந்த கர்மங்களுக்குத் தக்கபடி ரூபங்கள், அந்தந்த
யோனி இவைகளை மனுஷியன் அடைகிறான். போஜ
ம், மழை இவைகளினால் சரீரம் விருத்தியை அடை

ேதஹியானவன் (ஜீவாத்மா) ஸ்தூல, சூக்ஷ்மங்களா
நேக ரூபங்களைத் தன் குணங்களால் (விகித, பிரதி
யானு குணங்களால்) சுற்றிக்கொண்டிருக்கிறான்.
ையைக்குத் தக்க குணங்களாலும், ஆத்ம குணங்களா
ந்த ரூபங்களுக்குச் சேர்த்துவைக்கிற காரணமாயும்,
வறானவனுயுங் காணப்படுகிறான்.

13. குழப்பமுள்ள ஸம்ஸாரத்தின் நடுவிலே, ஆதி, அந்தம் இல்லாதவனும், விச்வத்துக்குச் சிருஷ்டி கர்த்தாவாயும், அநேக ரூபங்களை யுடையவனும், விச்வத்தை ஒரே கர்த்தாகச் சுற்றிக் கொண்டிருக்கிறவராயு மிருக்கிற தேவனை அறிந்து, ஸர்வ பாசங் களினின்றும் விடுபடுகிறான் (ஜீவன்).

14. சுத்தமான அந்தக்கரணத்தால் கிரஹிக்கப்படத் தக்கவ ராயும், அசரீரியென்று பெயருள்ளவராயும், பாவத்தையும் அபா வத்தையும் உண்டுபண்ணுகிறவராயும், சிவனாயும் (சுத்தராயும்), கலைகளைச் சிருஷ்டிக்கிறவராயு மிருக்கிற தேவனை யார் அறிவார் களோ அவர்கள் தேகத்தைத் தியஜிக்கிறார்கள்.

ஆறாம் அத்தியாயம்

1. கலங்கிய அறிவுடையவராகிச் சில பண்டிதர்கள் (இந்த உலகத்தின் தோற்றத்திற்குக் காரணம்) இயற்கைதானென்றும், வேறு சிலர் காலமே (காரணம்) என்றுஞ் சொல்லுகிறார்கள். உலகத்தில் ஈசனுடைய மஹிமையாலேதான் இந்தப் பிரம சக்கரம் * சுழலுகின்றது.

2. நித்தியமாக இவ்வுலகனைத்தையுஞ் சூழ்ந்திருப்பவன், அறிஞன், காலத்திற்குக் காலமாக இருப்போன், (எல்லாக்) குணங்களுமுடையோன், எல்லாமுணர்ந்தவன்,—இவனது ஆணையின் படி இங்கு மண், நீர், தீ, காற்று, வெளி எனக் கருதப்படுஞ் சிருஷ்டி (யனைத்தும்) சுழன்றுகொண்டிருக்கிறது.

3. அத் தொழிலைச் செய்து (இவ்வுலகத்தைப் படைத்து), பின் மீண்டும் ஆலோசிப்பவனாகித் தத்துவத்தை (ஆத்ம தத்துவத்தைத்) தத்துவத்துடன் (பிரகிருதி தத்துவங்களுடன்) சேர்ப்பிக்கிறான். அதாவது, ஒன்றோடும், இரண்டோடும், மூன்றோடும், எட்டோடும் (இவ்வெண்ணுள்ள தத்துவங்களுடனும்) காலத்தோடும், ஸூக்ஷ்மமாகிய ஆத்ம குணங்களோடும் (சேர்ப்பிக்கின்றான்).

4. குணங்களுடன் சேர்ந்த கர்மங்களைப் (படைப்புத் தொழில்களைச்) செய்து, எவன் அவற்றில் அவற்றின் தன்மைகளை ஏற்படுத்துகிறானோ, அவன் (அந்த ஈசன்) அவையில்லாதபோது, அத் தொழில்கள் அழிந்துவிட்ட காலத்தில், தொழில் நீங்கியவனாய், (பிரகிருதி) தத்துவங்களினின்றும் பிரிந்து நிற்கின்றான்.

5. அவன் ஆதி, எல்லா ஸம்யோக (புணர்ப்பு) நிமித்தங்களுக்கும் ஹேதுவாவோன். முக்காலங்களுக்கும் மேற்பட்டவன். காலமில்லாதவனாகவுங் காணப்பட்டவன். அகிலரூபனும், ஜகத்தாகியவனும், ஸ்வ சித்தத்தி லுள்ளவனும், பூர்வனுமாகிய அந்தத் தேவனை உபாஸனை செய்து;

---

* முதல் அத்தியாயம் 4-ம் மந்திரத்தைக் காண்க.

6. அவன் விருக்ஷம் (ஜகத்), காலம், இவற்றின் ஆகாரங்களுக்கு அப்பாலுள்ளவன், அவற்றினின்றும் வேறானவன், அவனால் இந்தப் பிரபஞ்சம் சுழன்றுகொண்டிருக்கிறது. தர்மத்தை வஹிப்பவனும், பாபத்தை அழிக்கின்றவனும், ஜகத்தின் தலைவனும், ஆத்மாவிலுள்ளவனும், அம்ருதனும், அனைத்தையுந் தரிப்பவனும் (ஆகிய அந்த ஈசனை) உணர்ந்து;

7. ஈச்வரர்களிலே உயர்ந்தவனுமாகிய மஹேச்வரன், தேவதைகளிலே உயர்ந்த தேவதை, தலைவர்களிலே தலைவன், உயர்ந்தனவற்றிலெல்லாம் உயர்ந்தவன், புவனேசன், வணங்கத்தகுந்தவன், அவனை அறிகின்றோம்.

8. அவனுக் காரியமுமில்லை, கரணமுமில்லை. அவனுக்கு ஒப்புயர்வு காணப்படுகின்றதில்லை. இவனது சக்தியை உயர்ந்ததென்றும், பலவிதமானதென்றும் கேள்வியுறுகின்றோம். (இந்தச் சக்தி) இயற்கையானது, ஞானம், பலம், தொழில் (எனு மிவையாக நிற்பது).

9. அவனுக்கு, உலகத்தில் யாதுந் தலைவனில்லை; அவனுக்கோர் இறைவனில்லை; அவனுக்கோர் குறியுமில்லை; அவன் (எல்லாவற்றிற்கும்) காரணம்; காரணாதிபர்களின் தலைவன்; அவனைப் பிறப்பிக்கவனும், அவனுக் கதிபனும் இல்லை.

10. எந்த ஒரே தேவன், சிலந்திப் பூச்சியைப் போலத் தனது இயல்பினின்றும், பிரக்ருதியிற் பிறந்த நூல்களால் தன்னை மூடிக் கொள்ளுகிறானோ, அவன் நமக்கு அழிவற்ற ப்ரம நிலையைத் தருக.

11. ஒருவனேயாகிய தேவன், எல்லா வஸ்துக்களிலும் மறைந்து நிற்பவன், எங்கும் நிறைந்தவன், எல்லாப் பூதங்களுக்கும் அந்தராத்மா, கர்மங்களுக் கெல்லாந் தலைவன், எல்லாப் பொருள்களினிடத்தும் இருப்பவன், ஸாக்ஷி, சேதனமானவன், நிர்க்குணன்;

12. செய்கையற்றிருக்கும் பலவாகிய சத்துக்களில் ஒரே ப்ரக்ருதிக்கே தொழில் விகாரங்களுண்டு, ஜீவர்களுக்கில்லை. ஜீவர்களுக்கிடையே ஒரே காரணத்தைத் தன் மாயையால் பலவாக இருப்ப

ர ஒரே வினையாக இருந்து, பலவிதமானவற்றைச் செய் ந்டமாவினிட மிருப்பவன் அவனை எந்தத் தீரர்கள் அறி ர, அவர்களுக்கே சாசுவதமான் ஆநந்த முண்டு, மற்ற ில்லை.

நித்தியர்களுக்குள்ளே நித்தியன், சேதனர்களுக்குள் ான், தான் ஒருவனாக இருந்து பலவற்றின் விருப்பங் நபவன், ஸாங்கிய யோகத்தா லறியத்தக்கவன், அந்தக் ய தேவனை அறிந்தோன் எல்லாத் தளைகளினின்றும் றான்.

அங்கு (அவனிடத்திலே) சூரியன் பிரகாசிப்பதில்லை. நக்ஷத்திரங்களும் பிரகாசிப்பதில்லை. இந்த மின்னல் வீசுவதில்லை. இந்த அக்கினி (பௌதிக அக்கினி) ஒளிதரும்? அவன் ஒளி தருவதனையே எல்லாம் பின் சிர்கின்றன. அவனது ஒளியினால் இஃததனைத்தும் ா றது.

அவன் இந்தப் புவனத்தி னிடையே ஒரே (ஹம்ஸ:- அழிப்பவன்) ஹம்ஸமாக நிற்பவன், அவனே தண் ளே புகுந்திருக்குந் தீயாகுபவன், அவனை அறிந்துத் வன் மரணத்தைக் கடத்தல்வேண்டும். (மோக்ஷம்) ற்கு வழியில்லை.

அவன் அனைத்தையுஞ் செய்தவன், அனைத்தையும் ர, தன்னைத்தானே பிறப்பித்தோன், (பிறப்பில்லாத ிஞன், காலத்திற்குக் காலன், (எல்லா) குணங்களு ன, ஸர்வத்தையு முணர்ந்தோன், பிரதானத்திற்கும் கும்) ஜீவர்களுக்கும் பதியாவோன், ஸம்ஸாரத்தின் ஸ்திதி, பந்தம், இவற்றிற்கு ஹேதுவாக இருப்பவன்.

தன்மயன், அமிருதன், ஈசனாக நன்கு நிலைபெற்றவன், எங்கு மிருப்பவன், இவ் வுலகத்தை ரக்ஷிப்பவன்,)வ் வுலகத்திற்கு நித்தியத் தலைவன். அவனல்லாது ஹேதுவிருந்து ஆட்சி புரிவதில்லை.

18. எவன் பூர்வத்தில் (சிருஷ்டியின் தொடக்கத்தில்) பிரமனைப் படைத்து, அப் பிரமனுக்கு வேதங்களைக் கொடுத்தவனோ, ஆத்ம ஞானத்தைப் பிரகாசமுறச் செய்யும் அந்தத் தேவனை, மோக்ஷத்தில் விருப்பமுடைய நான் சரணமடைகிறேன்.

19. அமிசங்க ளில்லாதவனை, செய்கை யில்லாதவனை, சாந்தனை, பழிப்பில்லாதவனை, மாசற்றவனை, அமிருதத்தின் உயர்ந்த அணையை, நன்கு கொளுத்துண்ட விறகிலுள்ள நெருப்புப்போன்றவனை, (நான் சரணமடைகின்றேன்).

20. எப்போது மனிதர் ஆகாயத்தைத் தோல்போல மடிக்க வல்லவராவார்களோ, அப்போது அந்த (ஆத்ம) தேவனை அறியாமல் துக்கத்தின் முடிவுண்டாகும். (ஆத்ம ஞானமின்றி துக்க நிவிருத்தி ஏற்படுதல் அசம்பாவித மென்பது கருத்து).

21. மிகுந்த பரிசுத்த முடையதும், ரிஷி கணங்களுக்கு உரியதும் ஆகிய பிரம வித்தையைத் தவப் பெருமையாலும், ஈசனருளாலும் அறிந்த சுவேதாசுவதரன், நான்கு ஆசிரமங்களையுங் கடந்த மேலோருக்கு நன்கு எடுத்துக் கூறினான்.

22. வேதாந்தத்திலே பரம ரஹஸ்யமானதும், முன் கல்பத்திலே ஆராய்ச்சி செய்யப்பட்டதும் ஆகிய இந்தப் பிரம வித்தையை மன ஒடுக்கமில்லாதவனுக்கும், புத்திர னில்லாத சிஷ்யனுக்குங் கொடுக்கலாகாது.

23. எவனுக்கு ஈசனிடத்திலே மிகுந்த பக்தி யுளதோ, ஈசனிடத்துள்ளது போலவே, குருவினிடத்தும் பக்தி யிருக்கின்றதோ, அந்த மஹாத்மாவினிடம் இந்த அர்த்தங்கள் கூறப்பட்டுப் பிரகாசமடைகின்றன. அந்த மஹாத்மாவினிடம் பிரகாசமடைகின்றன.

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

சுவேதாசுவதரோபநிஷத் முற்றிற்று.

ஓம்.

ஓம் தத்ஸத்.

சுக்ல யஜுர்வேதீய

ஸம்ஹிதோபநிஷத்

என்ற

ஈசோபநிஷத்.

சாந்தி.

ஓம், அது (பிரமம்) பூர்ணம் (ஆகாசம்போல எங்கும் நிறைந்தது). இதுவும் (உபாதிகளையுடையதாய், விபாகமாகக் காணப்படுவதும், காரியாத்மகமாயிருக்கின்ற ஜீவனும்) பூர்ணம். அந்தப் பூர்ண வஸ்துவினின்றும் இந்தப் பூர்ண வஸ்து உதயமாயிற்று. இந்தப் பூர்ண வஸ்துவானது (ஜீவன்) வித்தையினால் பூர்ணத்வத்தைக் கிரகித்தால் பூர்ணமேய பரமாத்மாவாகத்தான் மிஞ்சி நிற்கிறது; (அதாவது, பரமாத்ம வஸ்துவினிடத்திலிருந்து அன்னிய வஸ்துபோல உபாதிகளால் விளங்குகின்ற ஜீவனென்பவன் தன்னை, அந்தப் பூர்ணமான பிரமமென்று அறிந்து, அவித்தையினால் உண்டான நாமரூபாதி கொள்கைகளை நிவர்த்திசெய்து, தன்னை பிரமம் என்று அறிந்தால், அவன் அந்தப் பிரமமாகவே ஆகிவிடுகிறான்).

ஓம்.

ஓம் தத்ஸத்.

சுக்ல யஜுர்வேதீய

ஸம்ஹிதோபநிஷத்

என்ற

ஈசோபநிஷத்.

சாந்தி.

ஓம், அது (பிரமம்) பூர்ணம் (ஆகாசம்போல எங்கும் நிறைந்தது). இதுவும் (உபாதியுடையதாயும், விகாரத்தோடு கூடினதும், காரியாத்மகமாயுமிருக்கின்ற ஜீவனும்) பூர்ணம். அந்தப் பூர்ண வஸ்துவினின்றும் இந்தப் பூர்ண வஸ்து உத்பவமாயிற்று. இந்தப் பூர்ண வஸ்துவானது (ஜீவன்) வித்யையினால் பூர்ணத்வத்தைக் கிரகித்தால் பூர்ணமேயாகிய பரமாத்மாவாகத்தான் மிஞ்சி நிற்கிறது; (அதாவது, பரமார்த்த ஸத்யமான வஸ்துவினிடத்திலிருந்து அன்னிய வஸ்துபோல உபாதியால் விளங்குகின்ற ஜீவனாகிய தன்னை, அந்தப் பூர்ணமான பரமமென்று அறிந்து, அவித்யையினால் உண்டான நாமரூபாதி கல்மஷங்களை நிவர்த்தி செய்து, தன்னை பிரமம் என்று அறிந்தால், அவன் அந்தப் பிரமமாகவே ஆகிவிடுகிறான்).

(இந்த உபநிஷத்தை "வாஜஸனீய ஸம்ஹிதோபநிஷத்" என்றும், "ஈசாவாஸ்யோபநிஷத்" என்றும் வழங்குவதுண்டு).

ஓம்.

ஓம் தத்ஸத்.

ஈசோபநிஷத்.

---

1. இந்த ஜகத்திலே எவ்வெவ் வஸ்து இருக்கின்றதோ அவையாவும் பரமாத்மாவால் மூடப்பட்டிருக்கின்றது; (அதாவது, ஒவ்வொன்றிலும் அவ ரிருக்கிறார்; அவரன்றி யொன்றுங் கிடையாது). அதை (அந்த ஜகத் ப்ரபஞ்சத்தை) தள்ளிவிட்டு அவரை மட்டும் ஆதரி (பஜி, காப்பாற்று). அப்படி விட்டுவிட்ட நீ யாதொருவருடைய தனத்திலும் (உன்னுடையதா யிருப்பினும் அல்லது பிறருடையதா யிருப்பினும்) ஆசைவைக்காதே.

2. (ஆத்ம ஞான மில்லாத மநுஷன்) இவ்விடத்தில் (உலகத்தில்) நூறு வருஷ காலம் (அதாவது அவன் ஆயுள்பரியந்தம்) விகித கர்மங்களைச் செய்துகொண்டு பிழைத்திருக்க இச்சிக்கட்டும். இப்படிப்பட்ட நரனான உனக்கு இந்தக் கர்மானுஷ்டானத்தைக் காட்டிலும் உன்னைக் கெட்ட கர்மம் தொடாதபடி செய்யும் வழி வேறில்லை.

3. ஆத்ம ஞான மில்லாத ஜனங்கள் அஞ்ஞானமாகிற இருளால் மறைக்கப்பட்டிருக்கிறார்கள். எவர்கள் ஆத்ம ஹத்தி செய்கிற ஜனங்களோ (ஆத்மாவை மறந்து விடுகிறார்களோ) அவர்கள் (தேகத்தை விட்டு) அவைகளை (ஸ்தாவரம் வரையிலுள்ள வேறு சரீரங்களை) அடைந்து (ஸம்ஸாரத்தில்) பிரவேசிக்கிறார்கள்.

4. (பரம தத்துவம் எப்படிப்பட்ட தென்றால்), சலிக்காதது (ஒரே ரூபமானது, விகாரப்படாதது). ஒன்று. மனதைக் காட்டிலும் அதிக வேகமுள்ளது (ஒரு விஷயத்தில் மனது பிரவேசிக்கிறதற்கு முன் ஆத்ம தத்துவம் முன்னேறுகிறது). இதை இந்திரியங்கள் அடைகிறதில்லை (இந்திரியங்களால் கண்டுபிடிக்க

முடியாது). முந்தி யுள்ளது (ஆகாசம்போல எப்போதும் எங்கும் வியாபித்திருக்கின்றது). அது சீக்கிரம் போகின்ற இந்திரியாதிகளைத் தாண்டி முன்னே போகிறதுபோ லிருக்கிறது. தான் மாறுபடாமல் இருக்கிறது. அதன் சந்நிதியில் வாயு கர்மங்களைச் செய்வித்துக்கொண்டிருக்கிறான் (அதினால் பிராண வாயு முதலியன தத்தம் சேஷ்டைகளை நடத்திக்கொண்டு வருகின்றன).

5. அதுவே சலிக்கிறது, சலியாமலு மிருக்கிறது. அது (ஆத்ம ஞான மில்லாதவர்களுக்குத்) தூரமாயும் (ஞானிகளுக்கு) சமீபமாயு மிருக்கிறது. அது இந்த எல்லா ஜகத்துக்குள்ளேயும் வெளியிலேயு மிருக்கின்றது.

6. எவனொருவன் ஆத்மாவிடத்தில் எல்லாப் பூதங்களையும், எல்லாப் பூதங்களிடத்திலும் ஆத்மாவையும் பார்க்கிறானோ அவன் அதனின்றும் (எதையும்) இகழ்வதில்லை (இகழ்தல், இரக்கம் முதலான பாசங்கள் இவனைத் தொடமாட்டா).

7. ஆத்ம ஞானிக்கு எந்தக் காலத்தில் எல்லாப் பூதங்களுந் தானாக வாகிவிடுமோ அப்போது ஒன்றாகவே பார்த்துக்கொண்டிருக்கிற அவனுக்கு ஆசை யேது? சோக மேது?.

8. அந்த ஆத்மா எங்கும் வியாபி. தேஜஸ் உள்ளவர். காயமில்லாதவர் (சூக்ஷ்ம தேக மில்லாதவர்). புண்க ளில்லாதவர். நரம்பில்லாதவர் (ஸ்தூல தேக மற்றவர்). சுத்தர். புண்ணியத் தோடு நிறைந்தவர். கவி (மனோரம்யமான பார்வை யுள்ளவர்). புத்திமான் (மனதை யடக்குகிறவர்). யாவற்றிற்கும் மேலாக விருப்பவர். தானே உண்டானவர். நித்தியர்களா யிருக்கின்ற பிரஜாபதிகளின் பொருட்டு அந்தந்த பூத கர்ம பலத்துக்குத் தக்கபடி செய்யவேண்டிய அர்த்தங்களை ஏற்படுத்துகிறார்.

9. எவர்கள் அவித்தையை (கர்மத்தை) உபாஸிக்கிறார்களோ, அவர்கள் கொடிய தமஸில் (அஞ்ஞானத்தில்) பிரவேசிக்கின்றார்கள். எவர்கள் வித்தையில் (தேவதா ஞானத்தில்) இன்புற்றவர்களா யிருக்கிறார்களோ, அவர்கள் இன்னும் அதிகமான

தமஸில் பிரவேசிக்கின்றார்கள்; (இதனால் கேவலக் கர்மானுஷ்டான
மும் கூடாது, கர்மத்தைச் சுத்தமாய் விட்டு கேவலத் தேவதா
ஞானமுங் கூடாதென்பது தாத்பரியம்).

10. எங்கட் பெரியோர்கள் எவைகளை (கர்மத்தையும், ஞானத்
தையுங் குறித்து) விஸ்தாரமாகச் சொல்லி யிருக்கிறார்களோ,
அவர்களுடைய (வசனமாகிய) "வித்தையால் (கிடைக்கப்பட்ட
பலன்) வேறு, அவித்தையால் (கிடைக்கப்பட்ட) பலன் வேறு"
என்பதை நாம் கேட்டிருக்கின்றோம்.

11. எவன் வித்தை அவித்தை இவ்விரண்டையுஞ் சேர்த்து
அறிகிறானோ (அநுஷ்டிக்கிறானோ) அவன் அவித்தையினால் மிருத்
யுவை (ஞானம் கர்ம மிரண்டையும்) தாண்டி, வித்தையினால்
அமிருதத்தை (தேவதாத்மபாவத்தை) அடைகிறான்.

12. எவர்கள் அசம்பூதியை (அவ்யாக்ருதமென்ற பிரகிரு
தியை, காரியமாகாத, வடிவு பெறாத மூலப் பிரகிருதியை) உபா
சிக்கிறார்களோ அவர்கள் மிக இருண்ட தமஸில் (அஞ்ஞானத்
தில்) பிரவேசிக்கிறார்கள். எவர்கள் சம்பூதியில் (பிரமன் முத
லான காரிய பிரமத்தினிடத்தில்) இன்புற்றவர்களாயிருக்கிறார்
களோ, அவர்கள் மிகவும் இருண்ட தமஸில் பிரவேசிக்கிறார்கள்;
(இதனால் கேவலப் பிரகிருதியை மட்டும் உபாசிக்கக்கூடாது.
கேவலக் காரிய பிரமத்தை மட்டும் உபாசிக்கக்கூடாது).

13. எங்கட் பெரியோர்கள் எவைகளை (பிரகிருதியையும், காரிய
பிரமத்தையும் பற்றி) விஸ்தாரமாகச் சொல்லி யிருக்கிறார்களோ,
அவர்களுடைய (வசனமாகிய) "சம்பூதியால் (அடையப்பட்ட
பலன்) வேறு அசம்பூதியால் (அடையப்பட்ட பலன்) வேறு"
என்பதை நாம் கேட்டிருக்கின்றோம்.

14. எவன் சம்பூதி, விநாசம் (அசம்பூதி) இவ்விரண்டை
யுஞ் சேர்த்து அறிகிறானோ (உபாசிக்கிறானோ) அவன் விநாசத்
தால் மிருத்யுவை (அதர்ம காமாதி தோஷத்தா லுண்டாவதைத்)
தாண்டி, சம்பூதியால் அமிருதத்தை (அணிமாதி ஐசுவரியப்
பிராப்தி பலனை) அடைகின்றான்.

15. (அமிருதத்தை யடைய மார்க்க மென்னவெனில், சூரியப் பிரார்த்தனை). ஹே! பூஷன்! (சூரியனே) ஜோதிர் மயமான மறைப்பினால் பிரமத்தினுடைய முகம் (அதனிடம் போகும் வழி) மூடப்பட்டிருக்கிறது. ஆகையால், அதை நீ ஸத்ய தர்மனாகிய நான் பார்க்கும்பொருட்டு (அடையும் பொருட்டு) திறந்து விடு.

16. ஹே! பூஷனே (போஷிக்கிறவரே), ஏக ரிஷியே! எமனே! (எல்லாவற்றையுந் தம்மிடத்தில் அடக்கிக்கொள்ளுகிறவரே); சூரியனே (பிராணன்களையும் ரஸங்களையும் இழுத்துக் கொள்ளுகிறவரே); பிரஜாபத்யா! (பிரமத்தின் புத்திரனே), (உம்முடைய) கிரணங்களை (என்னை விட்டு) திருப்பிவிடும், ஒன்றாகச் சேரும் (இழுத்துக்கொள்ளும்). உம்முடைய ஜோதியாகிற மிகுந்த சோபனமுள்ள ரூபத்தைப் பார்க்கின்றேன். அந்தப் புருஷனே (சூரிய மண்டலத்திலுள்ள புருஷன், பிரமம்) நான்.

17. (இறந்துபோகிற என்னுடைய) வாயு (பிராணன்) அநிலமான அமிருதத்தை (ஸர்வாத்மகமா யிருக்கப்பட்ட சூத்திராத்மாவை) அடையட்டும். பிறகு, இந்தச் சரீரம் பஸ்மமாகப் போகட்டும். ஹே! க்ரதுவே! (ஸங்கல் பாத்மா, ஜீவாத்மா) ஓம் (பரமாத்மாவை) ஸ்மரி. (ஏற்கனவே செய்யப்பட்டிருக்கிற) கர்மத்தையும் ஸ்மரி. ஹே! க்ரதுவே, 'ஓம்' என்பதை ஸ்மரி, கர்மத்தை ஸ்மரி.

18, ஹே! அக்நியே! (பரமாத்மாவே), ஹே! தேவனே! எல்லாக் கர்மங்களையும் பிரஞானங்களையும் அறிந்தவர்களாக எங்களைக் கர்ம பல போகத்தின் பொருட்டு நல்ல வழியில் நடத்தும். எங்களுடைய கொடிய பாபத்தை நாசப்படுத்தும். உமக்கு நாங்கள் மிகவும் நமஸ்காரஞ் சொல்லுகின்றோம்.

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

ஈசோபநிஷத் முற்றிற்று.

ஓம்.

ஓம் தத்ஸத்.

சுக்ல யஜுர்வேதீய

ப்ராஹ்மணோபநிஷத்

என்ற

பிருஹதாரண்யகோபநிஷத்.

சாந்தி.

ஓம். அது (பிரமம்) பூர்ணம். இதுவும் (ஜீவனும்) பூர்ணம். அந்தப் பூர்ணவஸ்துவி லிருந்தும் இந்தப் பூர்ணவஸ்து உதயமாயிற்று. இந்தப் பூர்ணவஸ்து (ஜீவன்), வித்தையினால் பூர்ணத்வத்தைக் கிரகித்தால் பூர்ணமாகிய பரமாத்மாவாகத்தான் மிஞ்சி நிற்கிறது. ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

ர பாஷ்ய ப்ரதீகச் சுருக்கம் :—ஸம்ஸாரத்தினின்றும் நிவி
டய இச்சிப்பவர்களுக்கு அந்த ஸம்ஸாரத்திற்கு ஹேதுவாக
பிருத்திசெய்ய ஸாதனமான 'ப்ரஹ்மாத்மைகத்வவித்தையை'
றும் ஒன்றென்ற அறிவு) அடையும் பொருட்டு 'உபநிஷத்'
ள்ள பிரமவித்யை சொல்லப்படுகின்றது.

ஆரண்யத்தில் சொல்லப்பட்டதாலும், பெரிதாயிருப்பதாலும்
யக' உபநிஷத் என்ற பெயர்கிடைத்தது (பிருஹத்-பெரிது,
டு).

டத்தின் சம்பந்தம் இதன் ஆரம்பத்தில் சொல்லப்படுகின்
ண்டமும், ஞானகாண்டமும் சேர்ந்த எல்லா வேதங்களும்,
ாணத்தினாலாவது, அனுமான பிரமாணத்தினாலாவது கண்டு
'இஷ்டவஸ்து பிராப்தி' (விரும்பியதை அடைதல்),
து பரிஹாரம்' (விரும்பாததைக் களைதல்) எனுமிவற்றிற்கு
யத்தை வெளிப்படுத்துவதில் சிறந்தனவாகும். ஏனென்றால்,
ய எல்லாமனிதர்களுக்கும் 'நமக்கு நன்மை வரவேண்டும்,
வரலாகாது' என்ற எண்ணமிருக்கின்றது. உலகத்தில்
தெரியப்படும் விஷயங்களில் மேற்படி நோக்கத்திற்குரிய
ிந்து நடத்துவதற்கு வேதங்களைத் தேடவேண்டுவதில்லை.
மாந்தர மடைதற்குரிய ஓர் ஆத்மவஸ்து நம்மிடமிருக்கிற
றதவர்களுக்கும் வேதங்கள் அவசியமில்லை. ஆதலால், அப்
மா ஒன்று உண்டென்று நம்புவோர்களுக்குமட்டும் இந்த
ர்த்திக்கின்றது. ஆத்மா உண்டு என்பது ஸித்தம். ஆனால்,
க்ஷமாகத் தெரியவில்லை. அப்படிப் பிரத்யக்ஷமாகத் தெரிந்
இல்லையென்று சொல்லுகின்ற பௌத்தாதிகள் நமக்கு
க்கு) விரோதிகளாக இருப்பார்களா? அனுமானத்தாலும்
ன்று தெரியவில்லை. ஆதலால், வேதங்களின் பிரமாணத்
ஆத்மா உண்டென்று நம்புகிறவர்களுக்கு ஜன்மாந்திரத்தில்
இஷ்டப்பிராப்தி, அரிஷ்டபரிஹாரம், இவற்றிற்கு வேண்
ளை எடுத்துக் காட்டும்பொருட்டு கர்மகாண்டம் சொல்லப்

இஷ்டானிஷ்டப் பிராப்திபரிஹார இச்சைக்குக் காரணமாக
வ, போக்திருத்வ சுவரூப அபிமான லக்ஷணமாகவும் இருக்
னத்தை, அதற்கு விரோதமான பிரம ஞானத்தினாலே யல்
தமாய் போக்கடிக்க முடியாது. எதுவரை மேல்படி அஞ்

ஞானம் நீக்கப்படவில்லையோ, அதுவரை கர்மபல விஷயத்திலுண்டாகும் ராகத்வேஷமுதலிய இயற்கைத் தோஷங்களுடன் கூடியவனாக, அசாஸ்திரீயகர்மங்களைச் செய்யத்தொடங்கி, அப்படி அநேக கர்மங்களைச்செய்து அதனால் ஸ்தாவராந்தமான அதோகதியில் போகின்றான்.

ஒருவனோ, சாஸ்திரகர்மங்களினால் ஸமஸ்கரிக்கப்பட்டு, தர்மமான கர்மத்தைச் செய்கிறான். அப்படிப்பட்ட கர்மம், ஞானத்துடன் கூடியதென்றும், கேவலம் என்றும் இரண்டு வகைப்படும்.

கேவல கர்மத்திற்கு (ஞானமில்லாமல் செய்கிற கர்மத்திற்கு) பிதிர்லோகப் பிராப்தியுண்டு. மற்றோர் கர்மத்திற்குப்பலன் தேவலோகம்முதல் பிரமலோகம்வரையில் பிராப்தி. இப்படி பிரமன்முதல் ஸ்தாவரம் வரையுள்ள பூதங்கள் ஸ்வபாவமான அவித்யாதி தோஷமுள்ளவர்களாகவும், ஸம்ஸாரகதியாகிய நாமம், ரூபம், கர்மம் இவற்றைத் தழுவியவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இப்பொழுது வியாகிருதமாக (விரிவுடையதாக)க் காணப்படுகிற ஜகத்தானது, சிருஷ்டிக்குமுன், அவ்யாகிருதமாக (விஸ்தாரப் படாததாக, சூக்ஷ்மமாக) இருந்தது. இந்த ஸம்ஸாரமோ, விதையினின்றும் முளைபோல, அவித்தையால் உண்டாக்கப்பட்டது. அது, ஆத்மாவினிடம் கிரியா காரக பல லக்ஷணமாக ஆரோபிக்கப்பட் டிருக்கின்றது. அநாதியாகவும், அனந்தமாகவு மிருக்கின்ற ஸம்ஸாரத்தினின்றும் நிவிருத்தியை இச்சிப்பவனுடைய அஞ்ஞானத்தைப் போக்கடிக்கும்பொருட்டு, அதற்கு விரோதமான ஆத்ம ஞானத்தை அவனுக்கு உபநிஷத் போதிக்கின்றது.

அச்வமேதத்தைப்பற்றி இந்த உபநிஷத்தின் தொடக்கத்தில் சொல்லுவதேன்? என்றால், அச்வமேதக் கிரியையில் எவர்களுக்கு அதிகாரமில்லையோ, அவர்களுக்கு இதையறிந்தால் அந்த யாகத்திற்குள்ளதிலும் சிறந்த பயன் கிடைக்குமென்பது பற்றியேயாம். மேலும், எல்லாக் கர்மங்களிலும் மேலானது அச்வமேதம். இது முதலிய எல்லாக் கர்மங்களுக்கும் பலன் ஸம்ஸார விஷயமாகவே யுள்ளதென்று காட்டும்பொருட்டுத்தான் அச்வமேதத்தைப்பற்றி முதலில் சொல்லப்பட்டது. நித்ய கர்மங்களுக்கும் ஸம்ஸார விஷயபலனே. அந்தப்பிரகாரம் சுருதி பிரமாணம் இருக்கின்றது. ஆதலால், காமாதிதோஷ கர்ம பீஜ பூத அவித்யா நிவிருத்தியின்பொருட்டு இத்த பிரமவித்தை ஆரம்பிக்கப் படுகின்றது.

முதல் அத்தியாயம்.

பிராமணம் 1.

இவ்வுப நிஷத்தின் முதல் இரண்டு அத்தியாயங்களில் பிரவர்க்கம் என்றும், உபஸத் என்றும் அச்வமேதயாகத்தின் அங்கங்கள் சொல்லப்படுகின்றன. அவை பிரமஞானத்துக்கு அவசியமல்ல. இந்த அத்தியாயத்தில் முதலில் அச்வமேதயாகம் பிரஜாபதி ஸ்வரூபமாக (ஸகுண பிரமஸ்வரூபமாக) வர்ணிக்கப்படுகிறது. அதாவது, இந்த யாக கர்மத்திற்கு அவ்வளவு மகிமை யிருப்பதை காண்பிவிக்கின்றது. எப்படி யென்றால்.

1-2. அச்வமேதிய அச்வத்திற்கு உஷா (வெடியற்காலவேளை) வானது சிரஸ்; சூரியன், நேத்திரம்; காற்று, பிராணன்; வைசுவா நர அக்னி, வாய்; ஸம்வத்ஸரம், தேகம்; ஸ்வர்கலோகம், பின்தட்டு; ஆகாசம், வயிறு; பிருதிவி, பாதங்கள் வைக்குமிடம்; திக்குகள், பார்சுவங்கள் (பக்கங்கள்); மூலைதிக்குகள், விலாவிலும்புகள்; ருதுக்கள், அங்கங்கள்; மாஸங்களும், பக்ஷங்களும், கணுக்கள்; அஹோ ராத்திரிகள், பிரதிஷ்டை பாதங்கள்; நக்ஷத்திரங்கள், இலும்புகள்; நபஸ் (ஆகாயத்திலுள்ள மேகங்கள்), மாம்ஸம்; மணல்கள், ஜீர்ணஸ்தியாகாத அன்னம்; நதிகள், குத நாடிகள்; பர்வதங்கள், யக்ருத், க்லோமகம் என்ற மாம்ஸகண்டங்கள்; செடிகளும், மரங்களும், மயிர்கள்; மத்தியாந்நம்வரை காலம், கொப்பூழுக்கு மேல்பாகம்; மத்தியாந்நத்திற்குமேல் காலம், கொப்பூழுக்கு கீழ்பாகம்; மின்னல், வாய் பிளக்குதல்; இடி, சினுத்தல்; மழை, மூத்திரம்; வாக்கு (சப்தம்), வாய்; பகல், முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற சுவர்ண பாத்திரம்; இரவு, பின்னால் வைக்கப்பட்டிருக்கின்ற வெள்ளிப் பாத்திரம்; தங்கபாத்திரம் வைக்குமிடம் கீழ் சமுத்திரம், வெள்ளிபாத்திரம் வைக்குமிடம் மேல்சமுத்திரம்; இந்த இரண்டு பாத்திரங்களும் அச்வத்திற்கு மகிமையை கொடுக்கின்றன. இந்தக் குதிரை, 'ஹய' மென்ற பெயருள்ளதாய் தேவர்களை தூக்குகின்

றது; 'வாஜீ' என்று கந்தர்வர்களையும், 'அர்வா' என்று அசுரர்களையும், 'அச்வம்' என்று மனிதர்களையும், தூக்குகின்றது. இதற்கு பந்து, ஸமுத்திரம்; இதற்கு யோனீ (காரணம்), ஸமுத்திரம் (பரமாத்மா). (இந்த அச்வம், பிரஜாபதி; தூக்குதல் என்றால் இருக்கும்படி செய்தல்).

பிராமணம் 2.

1. இங்கு (இந்த ஸம்ஸார மண்டலத்தில், இந்த ஜகத் இருக்கின்றவிடத்தில்), ஸிருஷ்டிக்கு முன்னால், (நாமம், ரூபம் இவைகளால் குறிப்பிடப்படும் காரியம், அல்லது, வஸ்து) யாதொன்றும் இல்லாமலிருந்தது. மிருத்யுவினால் இந்த ஜகத் மூடப்பட்டிருந்தது (தன்னிடத்தில் அடைக்கிக் கொள்ளப்பட்டிருந்தது; ஒரு பெரிய விருக்ஷமாக பரிணமிக்கும் ஸத்தை ஒரு விதை படைக்கிக் கொண்டிருப்பது போல்). மிருத்யு வென்றால் பக்ஷிக்க (அநுபவிக்க) இச்சையுள்ள ஆத்மா (ஹிரண்ய கர்ப்பனென்ற பிரஜாபதி, மாயையில் பிரதி பிம்பித்த ஆத்மா, ஸகுண பிரமம். அதாவது, நிர்குண வஸ்துவினிடமிருந்து, ஜகத் காரணமான, ஜகத்தைத் தனக்குள் அடைக்கிக் கொண்டிருந்த, மாயையுடன் கூடிய ஆத்மா, ஸகுண பிரமம் உண்டாயிற்று). அந்த மிருத்யு (ஸிருஷ்டிக்க வேணுமென்ற இச்சைகொண்டு), (மனதாகிற) ஆத்மாவுடன் சேருவோமென்று நினைத்தது (அதாவது மனஸ் தத்துவத்தை, மகத் தத்துவத்தை உண்டாக்கிற்று).

இது (அங்ஙனம் மனதுடன் கூடிய பிரஜாபதியென்ற, மிருத்யுவென்ற ஆத்மா) தன்னைத்தானே பூஜித்துக்கொண்டது (ஸிலாகித்துக்கொண்டது). (அஹங்கார தத்துவம் உண்டாயிற்று). அதினின்றும் (ஆகாசம், வாயு, தேஜஸ் இவைகளின் வழியாய்) ஜலம் உண்டாயிற்று. 'பூஜிப்பவனாயிருக்கின்ற எனக்கு ஜலம் உண்டாகட்டும்' என்று நினைத்ததின் பிறகு ஜலம் உண்டாயிற்று. (ஜலத்திற்கு காரணம் பூஜ்யமான 'அர்க்க' மென்ற அக்னியாகையால்) அந்த 'அர்க்க' அக்னிக்கு (மேல் கூறிய அச்வமேத யாகத்திற்

குறிய அக்னிக்கு) பூஜ்யத்துவம் ஸித்திக்குது. இவ்விதம் யார் அறிகின்றாரோ அவனுக்கு ஜலம் (சுகம்) கிடைக்கும்.

2. அந்த ஜலம் பூஜ்யதையுள்ளது; அது பால் ஆடைபோல் கெட்டிப்பட்டது. அது பிருதிவியாயிற்று; அந்த பிருதிவியில் மிருத்யு கிளைப்பாரினார். அப்படிப்பட்டவரிடமிருந்து தேஜோரஸமாகிற அக்னி உண்டாயிற்று (பிரஜாபதி, விராட், பிரதமஜர், சரீரி, அண்டத்திற்குள்ளிராகின்ற விராட் உண்டாயிற்று).

3. அவர் (அந்த விராட், உண்டான பிரஜாபதி) தன்னை மூன்று விதமாக செய்துகொண்டார்; ஆதித்யன், வாயு, அக்னி இம் மூன்றாக (செய்துகொண்டார்). அவர்தான் எல்லா பூதங்களினுடைய பிராணன். அவர் மூன்றாக பிரிக்கப்பட்டவர். (ஒரு பாகம் அக்னி யானதால் அச்வமேத யாகத்திற்குறிய அக்னி இவ்விதம் சுத்த ஜன்மத்தையுடையது என்று காண்பிக்கப்படுகிறது). அதற்கு, கிழக்குதிக்கு—சிரஸ்; ஈசான்யம்—அக்னி; இந்த இரண்டு மூலைகளும்—கைகள்; மேற்கு—புச்சம் (முழங்கால் பாகம்); வாயு, நிருருதி மூலைகள்—பிருஷ்டபாகங்கள்; தெற்கு, வடக்கு இவ்விரண்டும் பார்சுவங்கள்; ஸ்வர்க்கம்—பின்பக்கம்; ஆகாசம்—வயிறு; இது (பிருதிவி)—மார்பு; இப்படிபட்ட அக்னியாகிற பிரஜாபதி ஜலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இப்படி யறிந்தவனுக்கு எங்கேபோனாலும் பிரதிஷ்டையுண்டு.

4. அந்த மிருத்யு ‘எனக்கு இரண்டாவது ஆத்மா (சரீரம்) உண்டாகட்டும்’ என்று நினைத்தார். அப்படி நினைத்து, பக்ஷிக்க (அனுபவிக்க) இச்சையுள்ள ஆத்மாவென்ற மிருத்யு, மூந்தி உத்பத்தியான மனதுடன் (அநாதியாயிருக்கின்ற) த்ரயீவித்யாவென்ற வேதவாக்கை மிதுனமாகச் சேர்த்தார். (அதாவது, சிருஷ்டிகிரம விஷயத்தில் வேதங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றதென்பதைப்பற்றி மனதால் ஆலோசித்தார்). அப்படி நினைத்ததில் ரேதஸ் (பிரதம புருஷனுக்கு காரணமான ஞான கர்ம ரூபமான ஒரு விதை) உண்டாயிற்று. அது ஒரு வருஷம் கர்பத்திலிருந்து, ஒரு வருஷத்தை நிர்மாணகர்த்தாவாக, பிரஜாபதி (பிர

தமஜன், பிரமன்) கர்பத்திலிருந்தது. அதற்கு முன் ஸம்வத்ஸரமென்றது கிடையாது. எவ்வளவுகாலம் கர்ப்பவாஸமோ அவ்வளவு காலத்திற்குத்தான் ஸம்வத்ஸரமென்று பெயர் கிடைத்தது. அந்த ஒரு வருஷத்திற்குப் பிறகு அண்டத்தைப் பிளந்தார். மிருத்யுவானவர் மேற்கூறிய கர்பத்திலிருந்த பிரதமஜனென்கிற பிரஜாபதியை உண்டாக்கினார். அப்படி உண்டுபண்ணப்பட்டவரை வாயை பிளக்கும்படி செய்தார். அது 'பாண்' என்று சப்தம் செய்தது. அந்த சப்தம் தான் வாக்காக (சப்தமாக) ஆயிற்று.

5. அந்த மிருத்யு மேற்கூறிய பிரதமஜனாயிருக்கின்ற குமாரனைப்பார்த்து, நமக்கு எப்பொழுதாவது சாப்பிடவேணுமென்ற இச்சை வந்தால் இவனை ஹிம்ஸித்து சாப்பிடுவோம் என்று எண்ணங்கொண்டார். (ஆனால், இவனைமாத்திரம் சாப்பிட்டால் அன்னம் கொஞ்சமாய்விடும்; நமக்கு தீர்க்க காலம் உண்ண வேண்டுவதற்காக வெகு அன்னம் வேண்டுவது. விதையாகிற இவனை அடித்துவிடின் பிறகு பயிர்கள் உண்டாகமாட்டா. ஆனதால்) வெகு அன்னத்தை உண்டு செய்வோம் என்று நினைத்து, முன்போல், வேதத்தை மனதால் ஆலோசித்து, ஸ்தாவர ஜங்கமாத்மகமாயிருக்கின்ற இந்த ஜகத்தையும், வேறும் எதெதெல்லாமிருக்கின்றதோ அவைகளையும், மூன்று வேதங்களையும், சந்தஸ்களையும், யஞ்ஞங்களையும், பிரஜைகளையும், பசுக்களையும் ஸ்ருஷ்டித்தார். (வேதங்கள் அநாதிகளாக விருந்தாலும் கர்மங்களில் விநியோகிக்கும்படி வ்யக்தமாக்கினார் என்று அர்த்தம்). எதை எதை உண்டாக்கினரோ அவைகளை யெல்லாம் (சகல பிராணிகளிடமும் ஆத்மாவாகயிருந்து) தின்குகிறதற்கு இச்சையுள்ளவரானார். எல்லாவற்றையும் உண்ணுகிறவரானதால், அவருக்கு, 'அதிதி' என்ற பெயர் கிடைத்தது. அவர் எல்லாவற்றையும் பக்ஷிக்கின்றவர். அவருக்கு எல்லாம் அன்னம். இப்படி யறிபவனுக்கு எல்லாம் கிடைக்கும்.

6. அவர் ஒரு பெரிய யஞ்ஞத்தை மறுபடியும் செய்ய இச்சித்தார். (முன் கல்பத்தில் செய்திருப்பதால் இந்த கல்பத்திலும் செய்யக்கோரினதால் மறுபடியும் என்று சொல்லப்பட்டது).

இளைப்பு அடைந்தார். தபித்தார். அப்படிப்பட்டவரிடமிருந்து, யசஸும் வீர்யமும் உண்டாயின. பிராணனே யசஸும் வீர்யமும் (பிராணங்கள் கண்முதலியன; வீர்யமெனில் பலம்). பிராணன் இல்லாவிடின் எதுவும் எப்படியுண்டாகும்? சரீரமிடமிருந்து பிராணன் போய்விடின் சரீரம் அமேத்தியமாய் கெட்டுப்போகும். அப்படி சரீரத்திலிருந்து பிராணன் பிரிந்துபோய்விடினும், அந்த சரீரத்தில் ஓர் அபிமானமானது இருந்தது. (அங்ஙனம் அபிமானித்து யாதுசெய்தாரென வினவின் அடியில் சொல்லப்படுகிறது).

7. இந்த என் சரீரம் மேதார்ஹமாக (யஞ்ஞத்திற்குரியதாக) ஆகுக; சரீரவானாக ஆவோம் என்று நினைத்தார். எக்காரணத்தால் பிராணன் போய்விடின் சரீரம் 'அச்வத்தாக' (கெட்டு) போகின்றதோ அக்காரணத்தால் சரீரம் 'அச்வ' மாயிற்று. அது எப்பொழுது மேதார்ஹமாயினதோ அப்பொழுது அச்வமேதம் என்ற யாகத்திற்கு அப்பெயர் கிட்டியது. அச்வமேத சங்கதியை இவ்விதம் தெரிந்துகொள்ளவேண்டியது. அந்த அச்வமேத குதிரையை கல்பிவித்து அதை கட்டாமல் விட்டுவிட நினைத்தார். அதை அவ்விதம் ஒரு ஸம்வத்ஸரம் விட்டு வைத்து பிறகு தன்னிடம் அதை ஆலம் பனம் செய்துகொண்டார் (யாகத்தில் உபயோகித்தார்). மற்ற பசுக்களை தேவதைகளின் பொருட்டு கொடுப்பிவித்தார். ஆதலால், இப்பொழுதும் யாகம் செய்கின்றவர்கள் தேவதாசம்பந்தமாயும், பிரஜாபதி சம்பந்தமாயும், மந்திர சம்ஸ்கிருதமாயிருக்கின்ற பசுவை யாகம் செய்கின்றார்கள். எவர் தன் தேஜஸால் இந்த ஜகத்தை தபிக்கச் செய்கிறாரோ அந்த ஆதித்யன் அச்வமேதமாயிருக்கிறார். (அந்த யஞ்ஞத்தின் பலனாக விருக்கிறார்). அவருக்கு ஸம்வத்ஸரம் சரீரம். இந்த பார்த்திவ அக்கினியானது அர்க்கனாக விருக்கிறது (ஸாதன பூதமாக விருக்கிறது; க்ருதுரூபமாக விருக்கிறது). இவருக்கு மூன்று உலகங்களும் சரீரங்கள். இந்த அக்னியும், ஆதித்தியனும் அர்காச்வமேதங்களாக (க்ருது பலங்களாக) இருக்கின்றார்கள். (க்ருது, பலன், யஜமானன்) எல்லாம் ஒரே தேவதையாகத்தான் இருக்கின்றது. (அதாவது) மிருத்யு பிரஜாபதியே எல்லாமாக இருக்

கின்றார். இங்ஙனமறிந்தவன் மரணத்தை ஜயிக்கின்றான். இவனை மிருத்யு அடைவதில்லை. மிருத்யு ஆத்மாவாகவே இவன் ஆகுகின்றான். இத்தேவதைகளில் ஒன்றாக ஆகிவிடுகிறான்.

பிராமணம் 3.

1. பிரஜாபதியினிடமிருந்து உண்டானவர்கள் இரண்டு வகுப்பார்கள் (அவருடைய பிராண வாக் முதலிய தத்துவங்கள்). (1) தேவர்கள், (2) அசுரர்கள். (தேவர்கள்—சாஸ்திரஜனிதமாயிருக்கின்ற ஞானத்தையும், கர்மத்தையும் கைக்கொண்டவர்கள். அசுரர்கள்—ஸ்வாபாவிக பிரத்யக்ஷ அனுமான ஜனிதமாயும் திருஷ்ட பிரயோஜனமுள்ளதாயுமிருக்கின்ற ஞானத்தையும் கர்மத்தையும் கைக்கொண்டவர்கள்; தங்கள் தங்கள் அஸுக்களில் பிராணங்களில் ரமிக்கின்றவர்கள்; அல்லது ஸுரர்கள், தேவர்கள், அன்றியில் இருட்டவர்கள்). ஆதலால், தேவர்கள் (ஸாத்வீக பிராண வாக் முதலான தத்துவங்கள்) கொஞ்சமாயிருக்கின்றார்கள். அசுரர்கள் (அஸாத்வீக தத்வங்கள்) அதிகத் தொகையுள்ளவர்கள். இவர்கள் இந்த லோகங்களின் நிமித்தியத்தில் (சுபாவிகமாயும், அப்படி இல்லாததாகவும் இருக்கின்ற கர்ம, ஞான சாத்யமாயிருக்கிற பல விஷயங்களில்) ஒருவருக்கொருவர் விரோதமடைந்தார்கள். தேவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டதாவது—'யக்ஞத்தில் உத்கீதத்தால் (ஸ்தோத்திராதி நல்ல காரியங்களால்) அசுரர்களைத் தாண்டிவிடுவோம்' என்று.

2. அத்தேவர்கள் (இவ்விதம் நிச்சயங்கொண்டு) தங்களுக்குள் வாக் அபிமான தேவதையை (வாக்கை)ப் பார்த்து "எங்கள் பொருட்டு உத்கீத மந்திரத்தை கானம் செய்யுங்கள்" என்று சொன்னார்கள். (எப்பொழுதும் ஆத்மாவை வாழ்த்துக; நல்ல வார்த்தை சொல்லிக்கொண்டிருக்குக என்று பொருள்). அவ்விதம் சரிதான் என்று வாக்கு சொல்லிக்கொண்டு உத்கீதத்தை கானம் செய்தது. அங்ஙனம் செய்வதினால் உண்டான போகத்தை (ஞானபலத்தை) தேவர்களுக்குச் சேர்ப்பிவித்தது. எது

சோபனவாக்காகச் சொல்லப்பட்டதோ அதை(கர்மபலத்தை) வாக்குத்தானே வைத்துக்கொண்டது. அசுரர்கள், இதைக்கருதி, மேல்கண்ட பிரகாரம் உத்கீதத்தால் தேவர்கள் தங்களைச் ஜெயித்து விடுவார்களென்று நினைத்து, அந்த வாக்கை, பாபத்தினால், அடித்தார்கள். பாபமென்றால், வாக்கிற்கு அனனுரூபமா யிருக்கின்ற வார்த்தைகளைச் சொல்லுதல். (அதாவது, அஸப்யம், பயம், அநிருதம் முதலிய வார்த்தைகளைப் பேசும்படி வாக்கை அசாத்வீக தத்வங்கள் செய்தன).

3. (மேற்கூறியவாறு கிராணேந்திரிய விஷயத்தில் அஸாத்வீக தத்வங்கள் அடித்தன).

4. (சக்ஷுரிந்திரிய விஷயத்திலும் மேல் கூறியதுபோல்).

5. (சுரோத்திரேந்திரிய விஷயத்திலும் மேல் கூறியது போல்).

6. (மன விஷயத்திலும் மேல் கூறியதுபோல்). இவ்விதமாக இந்த தேவர்கள் பாபத்தால் சம்பந்தப்பட்டு அடிபட்டுப் போனார்கள்.

7. இத்தேவர்கள், மறுபடியும், தங்களுக்காக உத்கீதத்தை கானஞ்செய்ய முக்கிய பிராணனைக் கேட்டார்கள். அப்பிரகாரமே அந்த பிராணன் கானம் செய்தது. இதைக் கண்டு அசுரர்கள் பாபத்தால் பிராணனை கெடுக்க இச்சித்தார்கள். ஆயினும் அவர்களால் முடியவில்லை. ஒரு ஓடின்சல்லி கருங்கல்லில் அடிபட்டு எவ்விதம் செதறிப்போகுமோ, அவ்விதம், பிராணனை அடிக்கச் சக்தியில்லாமல் தாங்களே குறுக்கும் நடுக்கும் செதருண்டு, நாசமடைந்தார்கள். ஆதலால் தேவர்கள் ஜெயித்தார்கள். இவ்விதம் அறிபவன் பிரஜாபதி ஸ்வரூபமாக ஆகுகிறான். இவனுடைய விரோதிகளும் அவமானம் அடைகிறார்கள்.

8. அத்தேவர்கள் இத்தகைய (அஸங்களுயிருந்து நம்முடைய தேவத்வத்தை அடைவிப்பிக்கின்ற) பிராணன் எவ்விடம் இருக்கிறதென்று விசாரித்தார்கள். அது முகத்தின் ஓட்டைக்குள் இருப்பதாக (தேகத்திலேயே யிருப்பதாக) கண்டுபிடித்தார்

கள். ஆதல்பற்றி அந்த பிராணன், "அயாஸ்யன்" (அஸங்கனாக விருந்து வாகாதிகளைச் சேர்த்து பிடித்துக்கொண்டிருப்பவர்), "ஆங்கிரஸன்," அங்கங்களுக்கு ஸாரமாயிருப்பவன்.

9. (இவ்விதம் சுத்தமுள்ள) இந்த பிராண தேவதை "தூ!" என்ற பெயருடையது. இந்த தேவதைக்கு மிருத்யு தூரமாயிருப்பதால் அந்தப் பெயர் கிட்டியது. இவ்விதம் அறிகிறவனுக்கு மிருத்யு வெகுதூரமிருக்கும்.

10. இந்தப் பிராணதேவதை வாகாதி தேவதைகளின் பாபமாகிய மிருத்யுவை யடித்து, திக்குகளின் முடிவு பிரதேசத்திற்கு துரத்திவிட்டது. அவ்விடமிருக்கும் துர்ஜனங்களிடம் இப்பாபங்களை யடையும்படி செய்தது. ஆதலால், அத்தகைய ஜனத்தைச் சேரக்கூடாது. பாபமாகிய மிருத்யுவை பின்தொடருவோம் என்ற பயங்கொண்டு அத்தகைய ஜனமிருக்கும் திக்கில் போகக்கூடாது.

11. வாக் முதலிய தேவதைகளின் பாபமாகின்ற மிருத்யுவை இந்த பிராண தேவதையடித்து அத்தேவதைகளின் அக்னி முதலிய தேவதா ஸ்வரூபத்தை யடையும்படி செய்தது.

12. முதன்மையாயிருக்கின்ற வாக்கை பிராணன் வகித்தது. அந்தவாக் எப்பொழுது மிருத்யுவைத் தாண்டியதோ அப்பொழுது அக்னியாகிவிட்டது. (அக்னி தேவதா ஸ்வரூபமாகிவிட்டது. அதாவது, சுத்தவாக் அக்னி தேவதை). மிருத்யுவைத் தாண்டி இந்த அக்னி மேலாக விளங்குகின்றது.

13. (கிராண விஷயத்தில் மேற்கூறிய பிரகாரம்) கிராணம் வாயுதேவதையாகி மிருத்யுவைத்தாண்டி மேல்கொண்டு அடிக்கின்றது.

14. (சக்ஷுஸ் விஷயத்தில் மேற்கூறிய பிரகாரம்) சக்ஷுஸ் ஆதித்திய தேவதையாகி மிருத்யுவைத்தாண்டி மேல்கொண்டு தபிக்கின்றது.

15. (சுரோத்திர விஷயத்தில் மேற்கூறிய பிரகாரம்) சுரோத்திரம் திக்தேவதையாகி மிருத்யுவைத்தாண்டி யிருக்கின்றன.

16. (மனஸ் விஷயத்திலும் மேற்கூறிய பிரகாரம்) மனஸ் சந்திர தேவதையாகி மிருத்யுவைத்தாண்டி விளங்குகின்றது. இங்ஙனம் யறிந்து பிராணனை உபாஸிக்கின்றவனை இந்த பிராண தேவதை அக்கினி முதலிய தேவதாபாவமாக வகிக்கின்றது. (அத்தேவதைகளாகிறான்).

17. பிறகு, அன்னமுதலியதை தான் உண்ணும்பொருட்டு இந்த பிராணன் ஆகானம் செய்தது (வேண்டிற்று). எது எது உண்ணப்படுகிறதோ அவை யெல்லாம் பிராணனால் சாப்பிடப் படுகிறது. அன்னத்தில் பிராணன் வைக்கப்பட்டிருக்கின்றது. (அன்ன மில்லாவிடில் பிராணன் போகிவிடும்).

18. இந்த வாக் முதலிய தேவதைகள் பிராணனை நோக்கி சொன்ன தென்னவெனில்—“இவ்வளவுதானோ! இந்த எல்லா அன்னத்தையும் உனக்கே வேண்டிக்கொள்ளுகிறதோ? அன்னமில்லாமல் நாங்கள் இருக்கமாட்டோம்! எங்களுக்கு உன் அன்னத்தில் பாகம் கொடு” என்று. (பிராணன் மறுமொழி) அப்படி உங்களுக்கு அன்னம் வேண்டுவதானால் என்னைச்சேருங்கள்.

(வாக் முதலிய தேவர்கள் சொல்லியது). ‘அந்தப் பிரகாரம்’ என்று சொல்லி பிராணனைசுற்றி வாக் முதலிய தேவர்கள் உட்கார்ந்தார்கள். ஆதல்பற்றி யாவனொருவன் பிராணனைக்கொண்டு அன்னத்தைச் சாப்பிடுகின்றானோ (அதாவது பிராணன் இருப்பதற்காக அன்னத்தை புஜிக்கின்றானோ) அவனுடைய வாக்முதலியவை திருப்தியை யடைகின்றன. இவ்விதம் பிராணனை அறிந்தவனை அவன் சுற்றத்தார் வந்தடைகின்றார்கள். அவர்களை காப்பாற்றுவனாகிறான். சிரேஷ்டனாகவும், எல்லோருக்கும் முன் போகின்றவனாகவும், அன்னாதனாகவும், அதிபதியாகவு மாகின்றான். இப்படி யறிந்தவனை பகைக்க விரும்புவோர், தங்களைச் சார்ந்தவர்களுக்கு, திருப்திசெய்ய மாட்டார்கள். யாதொருவன் இவ்வித மறிந்தவனை அனுசரிக்கின்றானோ அவன் இவ்விதம் அனுசரிப்பதால் தன்னைச் சார்ந்தோரை திருப்திசெய்ய சக்தியுள்ளவனாகின்றான்.

19. அங்கங்களுக்கெல்லாம் ரஸம் பிராணனே (இவ்விதம் மூன்று தடவை சொல்லப்படுகிறது). ஏனெனில், ஒரு அங்கத்தி லிருக்கும் பிராணன் போகுமாயின் அந்த அங்கம் சோஷித்துப் போகின்றது. ஆதலால் இது அங்கங்களுக்குள் ரஸம்.

20. இந்த பிராணன் தான் 'பிரஹஸ்பதி' என்பது. 'பிர ஹதீ' என்றால் "பிரஹதீ சந்தஸ்," ருக்வேதம்; அதற்கு பதி; ருக்வேதத்திற்கு அதிபதி. (பிராணனில்லாவிடின் ருக்வேதத் தைச் சொல்லமுடியாது).

21. இந்த பிராணனே 'பிரஹ்மணஸ்பதி' என்பது. 'பிரஹ் மம்' என்றால் யஜுர்வேதம். அதன் அதிபதி, "பிரஹ்மணஸ்பதி".

22. இந்த பிராணன்தான் 'ஸாமவேதம்'. வாக்கே ஸாம வேதம் 'ஸா' ஸ்திரீ லிங்கவாச்சியமாயிருக்கின்ற எல்லா வஸ்து விஷயங்களும், 'அம:' புல்லிங்கவாச்சியமா யிருக்கின்ற எல்லா வஸ்து விஷயங்களும், சேர்ந்து 'வாக்' என்றது. அந்த வாக்குக் தான் பிராணன். அதற்கு 'ஸாமம்' என்ற பெயர் கிடைத்தது. வேறு விதமாகவும் ஸாமத்வம் கிடைத்திருக்கின்றது. ஸமமாக விருக்குகை ஸாமம். (எவ்விதம் ஸமமெனில்) அந்த பிராணன், பயிர் கொல்லை பொம்மை யிடத்திலும், கொசுவினிடமும், யானை யிடத்திலும் ஸமமாயிருக்கின்றது. இம் மூன்று உலக ரூபமா யிருக்கின்ற பிரஜாபதியினிடத்திலும் ஸமம். எல்லா ஜகத்தினிட மும் ஸமம். ஆதலால், இவ்விதம் பிராணனாகிய ஸாமத்தை யறி கிறவன் அந்த தேவதையுடன் ஸாயுஜ்யத்தையும், ஸாலோகத்தை யும் யடைவான்.

23. 'உத்கீத' மென்று இந்த பிராணனைத்தான் சொல்லப்படு கிறது. பிராணன் 'உத்தாக' விருக்கிறது. எல்லாவற்றையும் உயர தூக்கிக்கொண்டிருக்கிறது. வாக்குத்தான் 'கீதம்' (கானம்). ஆனதால், வாக்குடன் சேர்ந்த பிராணன் 'உத்கீதம்' என்றது.

24. இவ் விஷயத்தில் ஓர் சரிதை இருக்கின்றது. சிகிதா யனருடைய பேரனான பிரமதத்தர் என்பவர் (ஒரு சமயம்) யஞ்ஞத் தில் ஸோமத்தைக் குடித்து ஓர் சபதஞ் செய்தார். (அது யாதெ னில்) 'வாக்குடன் கூடிய பிராணனால் தவிர வேறு தேவதையைக்

கொண்டு நான் கானஞ்செய்யின் நான் பொய்யனாகிவிடுவேன் அப்படி பொய்யனாகில் இந்த ஸோமக்கொடி எனது சிரஸை வெடிக்கும்படி செய்யட்டும்'. (ஆதலால் வாக்குடன் சேர்ந்த பிராணனுக்கு இவ்வளவு மகிமையுண்டென்பது காட்டப்பட்டது).

25. இத்தகைய ஸாம பிராணனுடைய பொருளை எவன் அறிகின்றானோ அவனுக்கு தனம் கிடைக்கும். மேற்படி பிராணனுடைய பொருள் யாதெனில், ஸ்வரம். ஆகலால் ருத்விக் காரியங்களை செய்பவன் நல்ல ஸ்வரம்வேணுமென்று கருதுகிறான். ஆகையால் அவ்விதமான நல்ல ஸ்வரமுள்ள வாக்கால் ஆர்த்விஜ்யம் செய்யவேண்டும். எவ்விதம் உலகத்தில் பொருள் உள்ளவனை எல்லோரும் அடைகிறார்களோ அவ்விதம் நல்ல ஸ்வரமுள்ள ருத்விக்குகளை யஞ்ஞத்தில் பார்க்க இச்சிக்கின்றார்கள். இவ்விதம் யறிபவனுக்கு பொருள் கிடைக்கும்.

26. ஸ்வரத்தை சுவர்ணமாக வர்ணிக்கப் படுகிறது. இவ்விதம் அறிந்தவனுக்கு தங்கம் கிடைக்கும்.

27. இந்த ஸாம பிராணனின் பிரதிஷ்டையை யறிபவனுக்கு மேன்மைகிடைக்கும். ஸாமத்தின் பிரதிஷ்டை வாக்காகவிருக்கின்றது. வாக்கில் பிராணன் பிரதிஷ்டிதமாயிருக்கின்றது. ஏனெனில், வாக்கால்தான் கானம் செய்யப்படுகின்றது. சிலர் அண்ணம் பிரதிஷ்டை என்று சொல்லுகிறார்கள்.

28. (இவ்விதம் பிராண விஞ்ஞானமுள்ளவனுக்கு ஜபகர்மம் சொல்லப்படுகிறது). பவமான ஸ்தோத்திரகாலத்தில் (யஞ்ஞத்தில்) பிரஸ்தோதா தன் காரியத்தை ஆரம்பிக்கும் சமயத்தில் அடியில் குறித்த மந்திரங்களை ஜபிக்கவேண்டும். (ஜபம்) 'அஸதோமாஸத்கமய' (ஸ்வாபாவிக கர்ம விஞ்ஞானத்தினின்றும் சாஸ்திரீய கர்ம விஞ்ஞானத்தில் என்னை சேர்க்குக). 'தமஸோமாஜ்யோதிர்கமய'. (அஞ்ஞானத்தினின்றும் ஞானத்தில் சேர்க்குக). 'மிருத்யோர்மா அமிருதம் கமய'. (மிருத்யுவினிடமிருந்து நழுவி அமிருத பாவத்தை யடையும்படி செய்குக). இந்த ஜபத்திற்கு பலன் எதை யிச்சித்தாலும் அடைகிறான்.

பிராமணம் 4.

1. ஆதியில் இந்த ஜகத் ஆத்மாவாக விருந்தது (ஆத்ம வஸ்துவுக்குள்ளடங்கியிருந்தது). முதலில், பிரதம புருஷனுன பிரஜாபதி புருஷரூபமாக தானுகவே ஆவிர்பவித்தார். அவர் ஆலோசித்தார். தன்னைத்தவிர வேறு யாதொன்றையும் அவர் காணவில்லை. 'அஹம்,' நான்தான் முன்னுலேயே இருக்கிறேன். என்று சொல்லிக்கொண்டார். ஆதலினுல், ஆத்மாவுக்கு 'அஹம்' என்ற பெயர் கிட்டியது. ஆதலால், உலகத்தில், இப்பொழுதும் கூட, யாதாவொருவன் கூப்பிடப்பட்டால், முதலில், 'நான்,' 'அவன்' என்று சொல்லிக்கொண்டு, பிறகு, தனக்கு குறிக்கப்பட்டிருக்கும் பெயரைச் சொல்லுகின்றான். இந்த பிரஜாபதியின் ஸ்திதியை ஞான, கர்மாநுஷ்டானங்களால் அடைய இச்சிப்பவர்களுடைய எல்லா கூட்டத்திலிருந்தும் அஞ்ஞான லக்ஷணமுள்ள சகல பாபங்களையும் போக்கடிய முந்தி உண்டாகிய பிரஜாபதி எரித்துப்போடுகிறார். இதனுல் அவருக்கு 'புருஷன்' என்ற பெயர் கிடைத்தது. இவ்விதம் அறிகிறவன் போக்கடியவாறு யறியாமல் பிரஜாபதி ஸ்திதியை அடையவிரும்புவோனை ஜயித்துப்போடுகிறான். (இப்படி பதிந்து நடந்தால் அல்லாது பிரஜாபதி ஸ்திதி கிட்டாது).

2. அந்த பிரதமபுருஷனுன பிரஜாபதி (நாசத்திற்கு காரணமாயிருக்கிற சரீரமுள்ளவராதலால்) பயந்தார். ஆதலால், உலகத்தில் ஒற்றையாய் தனித்திருப்பவன் பயப்படுகிறான். மறுபடி, "நம்மையன்றி வேறொருவருமில்லை! அங்ஙனமிருக்க நாம் ஏன் பயப்படவேண்டும்" என்று ஆலோசித்தார். பிறகு பயம் நீங்கிவிட்டது. ஏன் பயம் ஏற்பட்டதெனில், தனக்கு இரண்டாவதாக சரீரத்தை தனியென்று கருதினுல் பயம் ஏற்பட்டது (தன்னைத்தவிர வேறொன்றுமில்லை; எல்லாம் பிரமம்தான் என்று ஏகத்வதர்சனம் இருந்தால் பயமில்லை).

3. அந்த பிரஜாபதி தான் ஒருவராயிருந்ததால் சந்தோஷமடையவில்லை. ஆதலால், உலகத்திலும் ஒருவனுயிருந்தால் சந்தோஷம் கிடையாது. ஆகையால், தான் சந்தோஷமடையும்

பொருட்டு தனக்கு இரண்டாவதை (ஸ்திரீரூபமுள்ள ஒரு வஸ்துவை) இச்சித்தார். அங்ஙனம் இச்சித்தவுடன் ஸ்திரீபுருஷன் சேர்ந்த ரூபமுள்ளவரானார். அதாவது, தன்னை ஸ்திரீ புருஷ ரூபங்களாகிற இரண்டுவிதமாய் செய்துக்கொண்டார். அப்பொழுதுதான் பதியென்றும், பத்தினியென்றும் பெயருள்ளவர்கள் உண்டானார்கள். ஆதல்பற்றி, இந்த சரீரம் ஆத்மாவிற்கு பாதி விகாரப்பட்டது. (அதாவது, ஆத்மா புருஷரூபம்; சரீரம் ஸ்திரீ ரூபம்; ஆத்மாவின் மாயாரூபம் சரீரமாயிற்று; அதே ஸ்திரீ வ்யக்த்தமாயிற்று). இங்ஙனம் யாஞ்ய வல்க்கியர் கூறினார். ஆதலால், முன்பு ஸ்திரீவஸ்து சூன்யமாயிருந்த இந்த புருஷார்த்த ஆகாசமானது(வெளியானது, ஆத்மவஸ்து) ஸ்திரீரூபம்சேர்ந்து பூர்த்தியாயிற்று. அது தனிப்பட்டு ஸ்திரீயாக ('சதரூபா' என்று பெயருள்ளவளாக, பிரஜாபதியால் சிருஷ்டிக்கப்பட்டு) வெளிக்கு வந்தாள். அவளுடன் மனு பிரஜாபதியாக ஆன அந்த பிரதம புருஷன் சேர்ந்தார். அப்பொழுது மனுஷியர்கள் உண்டானார்கள்.

4. அந்த ஸ்திரீ, "தன்னிடமிருந்து சிருஷ்டிக்கப்பட்ட பெண்ணாகிய என்னை சேரவருகின்றாரே; இது என்ன அன்னியாயம்! நான் வேறு ரூபம்பெற்று மறைந்துவிடுவேன்" என்று ஆலோசித்து, உடனே பசுமாடாகி விட்டாள். அச்சமயத்தில், புருஷார்த்தம் ரிஷபமாகி அந்த பசுவைச்சேர்ந்தது. அதனால் மாடுகள் உண்டாயின. பிறகு அவள் பெண் குதிரை யானாள். அவர் ஆண்குதிரையானார். அவள் பெண்கழுதையானாள். அவர் ஆண்கழுதையானார். இங்ஙனம் ஒற்றைக் குளம்புள்ள மிருகங்கள் உண்டாயின. பிறகு அவள் பெண் ஆடாகவும், அவர் ஆண் ஆடாகவு மானார்கள். இங்ஙனம் உலகத்தில் எறும்புமுதல் ஸ்திரீ புமான் ரூபமுள்ள எல்லா ஜந்துக்களும் உண்டாயின.

5. இங்ஙனம் சிருஷ்டித்தவைகளை அந்த பிரஜாபதி ரக்ஷித்தார், அவைகளாகவே தான் இருந்து விளங்கினார். "எக்காரணத்தால் இவ்வெல்லா ஜகத்தை நாம் சிருஷ்டித்தமோ அக்காரணத்தால் நாமும் 'அபசிருஷ்டி' (கீழான சிருஷ்டி) ஆகவே இருக்கிறோம்" என்றார். ஆதலால், அவருக்கும் 'சிருஷ்டி'

என்றபெயர் கிடைத்தது. இங்ஙனம் அறிகிறவன் பிரஜாபதி போல் இந்த ஸ்ருஷ்டி கர்மத்தில் ஆகின்றான்.

6. பிறகு அந்த பிரஜாபதி கைகளால் முகத்தில் அழுத்தினார். அந்த யோனிகளில் (காரணத்தில்) நின்றும் அக்னியை ஸ்ருஷ்டித்தார். ஆதல்பற்றி, முகத்திலும், கைகளுக்குள்ளும் மயிர்களில்லை. யோனிகளுக்குள்ளும் (காரணத்திற்குள்ளும்) மயிர்களில்லை. யாகத்தில், "இந்ததேவனை பஜி, இந்ததேவனை பஜி" என்று சொல்லப்படுகின்ற தேவர்களெல்லாம் அந்த ஒரே தேவதைதான் (அதாவது, பிரஜாபதிதான்). பிறகு, அவர் ஈரமுள்ள வஸ்து எதெதுண்டோ அவைகளின் ரஸத்தைக்கொண்டு ஆத்மாவிடமிருந்து சந்திரனை ஸ்ருஷ்டித்தார். இந்த ஜகத்தில் உளதெல்லாம் அன்னமும் அன்னாதமாகவும் இருக்கின்றது. சந்திரன் அன்னமாயும், அக்னி அன்னாதமாயும் இருக்கின்றன. ('அதிஸ்ருஷ்டி,' அதாவது உத்க்ருஷ்டமான ஸ்ருஷ்டி சொல்லப்படுகிறது). தன்னுடைய உத்க்ருஷ்ட பாவத்தில் நின்றும் தேவர்களை ஸ்ருஷ்டித்தார். மர்த்தியனுகப்போன பிரஜாபதி மரணமில்லாத தேவர்களை ஸ்ருஷ்டித்தார். ஆதல்பற்றி இது பிரமனுடைய அதிஸ்ருஷ்டி என்று சொல்லப்படுகிறது. இங்ஙனம் அறிகிறவன் இந்த அதிஸ்ருஷ்டி விஷயத்திலும் பிரஜாபதியைப்போலாகின்றான்.

7. அந்த (அப்ரத்யக்ஷமாக ஆத்மாவுக்குள் அடங்கியிருந்த) இது (இப்பொழுது ப்ரத்யக்ஷமாக காணப்படுகின்ற ஜகத்) ஆதியில் அவ்யாக்ருதமாக (விகாரமின்றி, நாமரூபங்களுடன் பலவிதமாக ஆகாமல்) இருந்தது. இவ்விதம் அவ்யாக்ருதமாகவிருந்த ஜகத் நாமரூபங்களுடன் விகாரமடைந்து பல வஸ்துக்களாக ஆயிற்று. இந்த வஸ்துவிற்கு இந்தபெயர்; இந்த வஸ்துவிற்கு இந்த ரூபமுள்ளது என்று விகாரப்பட்டது. இப்பொழுதும் அங்ஙனமே விகாரப்பட்டிருக்கிறது. அத்தகைய இந்த ஜகத்தில் நாமரூபங்களுக்கு புரம்பாய் (நித்தியசுத்த புத்த முக்த ஸ்வபாவமுள்ளதாயும்) இராநின்ற ஆத்மா பிரவேசித்தார். கத்திப்பையில் எவ்விதம் கத்தி வியாபித்திருக்கின்றதோ, மரக்கட்டையில் எங்ஙனம் அக்னிவியாபித்திருக்கின்றதோ அங்ஙனம் ஆத்மா நகம்

முதல் அக்ரம்வரை வியாபித்து எங்கும் நிறைந்திருக்கின்றார். (அதாவது, கத்தியைப்போல் ஒன்றிலும் ஒட்டாமலும், அக்னியைப்போன்று எங்கும் தொட்டுக்கொண்டும் இருக்கின்றார்). எல்லாமாக விருந்து, பிராணன் தொழில் நடத்தும் சமயத்தில் பிராணன் என்றபெயர் அடைகிறார், வசநக்கிரியை செய்கையில் வாக் என்றும், அங்ஙனமே பார்க்கும்பொழுது சக்ஷுஸ் என்றும், கேழ்க்கும்பொழுது சுரோத்ர மென்றும், நினைக்கும்பொழுது மனது என்றும் பெயர்களைப் பெறுகிறார். இக்கர்மங்கள் அனைத்தும் ஆத்மாவிடமே யிருக்கின்றன. யாவனொருவன் ஆத்மாவை, பிராணன் சக்ஷுஸ் என்று தனித்தனியாகவும், ஒவ்வொன்றாகவும் இருப்பதாக எண்ணங்கொண்டு அவ்விதம் உபாசிக்கின்றானோ அவன் பிரம்மத்தை யறிந்தவ னல்லன். ஏனெனில், அங்ஙனம் நினைப்பதில் ஆத்மா அஸமஸ்தனாகின்றான். ஒவ்வொன்றாகவும், தனித்தனியாகவும் ஆகிறான். (அநேக தெய்வங்கள் ஏற்படுகின்றன; இஃது சரியல்ல). ஆதலால், எல்லாவற்றையும் சேர்த்து ஒரே ஆத்மாவாக உபாஸிக்க வேண்டும். அப்பொழுது எல்லாம் ஒன்றாகி விடுகின்றது. இந்த எல்லா ஜகத்திற்கும், அதுதான், (அந்த பிரமவஸ்து) போக்கிடமும், இருப்பிடமுமாக விருக்கின்றது. (இந்த ஜகத்தில் ஆத்மா ஒன்றுதான் ஸாரமுள்ளதென்று அறியவேண்டியது). ஏனெனில், இந்த ஆத்மா (ஜீவன்) ஆத்ம ஞானத்தால் இந்த (அநாத்ம சுவரூபமா யிருக்கின்ற) எல்லா ஜகத்தையு மறிகின்றான். (அதாவது ஆத்மாவான பிரமவஸ்து இன்னதென்று தெரிந்தால் அநாத்மவஸ்துவும் அறியப்படும்). உலகத்தில் களவுபோன பசு முதலியவைகளை கால் அடிகள் அடையாளங்கொண்டு எவ்விதம் தேடி கண்டுபிடிக்கின்றோமோ அவ்விதம் நமக்குத் தெரியாமல் மறைந்திருக்கின்ற ஆத்மாவை ஞானமாகின்ற அடையாளத்தைக்கொண்டு கண்டு பிடிக்கவேண்டியது. இப்படி அறிந்தவன் கீர்த்தியையும் (நாமரூபாநு பிரவேசத்தால் ஆத்மாவுக்குண்டான கியாதியையும்) சுலோகத்தையும் (பிராணாதி கூட்டத்தையும்) அடைகின்றான். (அதாவது, அத்தகைய பிரமவஸ்துவாகி விடுகிறான்; அல்லது, ஐக்கிய ஞானமாகிற கீர்த்தியையும், முக்தியாகின்ற சுலோகத்தையும் அடைகிறான்).

8. யாது காரணம்பற்றி அந்த ஆத்மாவை தேடவேண்டுமெனில், அந்த ஆத்மா அத்யந்தப்பிரியம் வைக்கத்தக்கது; புத்திரனைக்காட்டிலும் பிரியதரம், வித்தத்தைக்காட்டிலும் பிரியதரம்; இன்னும் உலகத்தில் யாதுயாது உண்டோ அவைகளைக் காட்டிலும் பிரியதரம்; மேலும் சமீபத்தில் நமக்குள்ளிருக்கின்றது. பிரம வஸ்துவைக்காட்டிலும் வேறாகவிருப்பதை பிரிய வஸ்துவென்று நினைக்கின்றவனை நோக்கி "நீ பிரியவஸ்துவென்று நினைக்கின்ற புத்திராதிகள் நசித்துப்போகுமே" என்று பிரமவித்து கேட்கட்டும். அங்ஙனம் கேட்க அவன் ஸமர்த்தன். ஆகலால் ஆத்மாவே பிரியவஸ்துவென்று அதை உபாசிக்கவேண்டும். அவ்விதம் உபாஸிப்பவனுடைய பிரியவஸ்துக்களெல்லாம் நசியா.

9. எந்த பிரமவஸ்துவின் வித்தையினால் எல்லாமாக நாம் ஆகிவிடுவோமென்று மனிதர்கள் நினைக்கின்றார்களோ அந்த வஸ்துவையே பிரமமென்று பெரியோர்கள் சொல்லுகின்றார்கள். எதனின் ஞானத்தால் எல்லாமாக ஆகிவிடுவதாகச் சொல்லப்படுகின்றதோ அந்தப் பிரமம் எவ்விதம் அறியப்படுகிறது?

10. சிருஷ்டிக்குமுன் இந்த ஜகத் பிரமமாகவே யிருந்தது. (பிரமம் நித்தியவஸ்து; அவரிடமிருந்து ஜகத் உண்டாயிற்று). அந்த பிரமம், 'நாமே பிரமமாகவிருக்கின்றோம்' என்றறிந்து நினைத்தது. (நம்மைத்தவிர வேறொன்றுமில்லை; நம்மிடமிருந்து தான் எல்லாம் உண்டாகவேண்டும் என்று எண்ணங்கொண்டது). ஆதலால், அது எல்லாமாகவாயிற்று. இந்தப்பிரகாரம் (நாம் பிரமமாகவிருக்கின்றோம் என்று) தேவர்களில் யார் அறிகிறார்களோ அவர்கள் அந்த பிரமமாகவே ஆகிறார்கள். அங்ஙனமே, ரிஷிகளிலும், மனிதர்களிலும் எவர் எவர் அறிகிறார்களோ அவர்களும் பிரமமாகவே ஆகிறார்கள். இந்த பிரகாரம் அறிந்து, 'நான்தான் மனு' 'நான்தான் சூரியன்' என்று வாமதேவ ரிஷி அறிந்துகொண்டார். இப்பவும் எவர்கள் மேல்சொல்லிய பிரகாரம் "நானே பிரமமாகவிருக்கின்றேன்" என்று அறிகிறார்களோ அவர்களும் பிரமமாக, எல்லாமாக ஆகிறார்கள். அவர்கள் தேவர்களைக்காட்டிலும் மேலானவர்கள். இத்தேவர்களுடைய ஆத்மாவாகவும் ஆகி

ஞர்கள். எவன் 'தன் ஆத்மாவைக்காட்டிலும் வேறு தேவதை யிருக்கின்றது; அதுவேறு, நாம்வேறு', என்று எண்ணங்கொண்டு, அவ்விதம் அன்னிய தேவதையை உபாசிக்கின்றுனோ, அவன் தெரிந்தவனல்லன்; அவன் மூடன்; அவன் பசுவுக்குசமம்; தேவதைகளுக்கு அவன் பசுவாக விருக்கின்றுன். எவ்வாறு ஒரு மனிதனை அனேகம் பசுக்கள் ஒத்தாசைசெய்து ஆதரிக்கின்றனவோ அவ்வாறு வெகு பசுஸ்தானீயனுயிருக்கின்ற ஒவ்வொரு மனிதனும் தேவர்களேயும், பிதிருக்களேயும், யாகம், சிராத்தம் முதலிய கர்மங்களால் ஆதரிக்கின்றுன். ஒரு பசுவை புலிமுதலானதால் கொண்டுபோகப்பட்டு காணுமற்போயின், ஒரு மனிதனுக்கு, அதனுல், வெகு வருத்தம் நேரிடுகின்றது. வெகு பசுக்கள் போய்விடின் கேழ்க்கவேண்டுமா? ஆதலால், மனிதர்கள் (பிரம ஞானிகளாக) தெரிந்தவர்களாகிவிட்டால் (அதாவது, யாகாதி கர்மங்களை விட்டுவிட்டால்) தேவர்களுக்கு, இவ்விஷயம், பிரயமில்லாததுதான்! (ஆகையால், மோக்ஷம் வேண்டுமென்ற இச்சையுள்ளவர்கள் முதலில் தேவர்களை அவசியம் உபாஸிக்கவேண்டும். அவ்விதம் செய்யின் தேவர்கள் அனுகிரகம் செய்வார்கள். தங்களுக்கு பிரியமுள்ளவர்களுக்கு அனுகிரகம் புறிவார்கள்; பிரியமில்லாதவர்களுக்கு பிரமஞானம் அடையவொட்டாமல் கெடுதிசெய்வார்கள். தாத்பரியம் யாதெனில், பிரமஞானம் அடையுமட்டும் கர்மங்களைச் செய்துகொண்டு தேவர்களை உபாஸிக்கவேண்டும்).

11. இந்த ஜகத் (சிருஷ்டிக்கு) முன் பிரமமாகவே யிருந்தது. அது ஒன்றுய் பிரிவுபடாமல் இருந்தது. (பிறகு, முன் சொல்லிய பிரகாரம் அக்னியாதிகளை சிருஷ்டித்தார். பிராமணர்களையும் சிருஷ்டித்தார். கர்மத்திற்கு அது போதவில்லை). பிரசஸ்தர்களாயிருக்கிற க்ஷத்திரியர்களைச் சிருஷ்டித்தார்; தேவ க்ஷத்திரியர்களையும், மனுஷிய க்ஷத்திரியர்களையும் சிருஷ்டித்தார். (தேவ க்ஷத்திரியர்கள் எவர்களெனில்) இந்திரன் (தேவ ராஜா); வருணன் (ஜல ஜந்துக்களுக்கு ராஜா); சந்திரன் (பிராமணர்களின் ராஜா); ருத்திரன் (பசுக்களுக்கு ராஜா); பர்ஜன்யன் (மின்னல் முதலியவைகளின் ராஜா); யமன் (பிதிர் ராஜா); மிருத்யு (ரோகங்

களுக்கு ராஜா); ஈசானன் (காந்திகளுக்கு ராஜா); ஆகலால், க்ஷத்திரியர்களைவிட உயர்ந்தவர்கள் இல்லை. ஆகலால், ராஜஸூய யாகத்தில் பிராமணர்கள் கீழ் இருந்து, மேலாகவிருக்கிற க்ஷத்திரியர்களை உபாஸிக்கின்றார்கள். க்ஷத்திரியனே யசஸை அடைகின்றான். அவனுக்கு பிராமணன் காரணம். ஆகலால், மேற்கண்ட யாகத்தில் ராஜா மேன்மையை யடைகின்றான். யாதொரு க்ஷத்திரியன் தனக்கு காரணமாகிய பிராமணனை கீழ்க்கணப்படுத்துகிறானோ அவன் தன் வம்சத்தை நாசம் செய்கின்றான் (அவனுக்கு வம்சம் அற்றுப்போகும்). உலகத்தில் மேன்மை ஸ்தானத்தை அவமானப்படுத்தினால் எவ்விதம் பாபியாகின்றானோ அவ்விதம் பாபியாகின்றான்.

12. க்ஷத்திரமும் போதவில்லை; கர்மத்திற்கு சாதனமான வித்தத்தை சம்பாதிக்க வேண்டியிருந்ததால் வைசியனை சிருஷ்டித்தார். வைசிய தேவகணங்களாவன:—வஸுக்கள்; ருத்திரர்கள்; ஆதித்தியர்கள்; விச்வே தேவர்கள்; மருத்துக்கள்.

13. அவைகளும் போதவில்லை; பரிசர்யணம் செய்பவர்கள் வேண்டியிருந்ததால் சூத்திரர்களைச் சிருஷ்டித்தார். எல்லாவற்றையும் போஷிக்கின்ற பிருதிவியையும் சிருஷ்டித்தார்.

14. கர்மபூர்த்திக்கு இவைகளும் போதவில்லை; சிரேயோரூபமாயிருக்கின்ற தர்மத்தையும் சிருஷ்டித்தார் (தர்மம்-விதி); அது க்ஷத்திரத்திற்கு க்ஷத்திரம் (அதாவது, க்ஷத்திரியனைக்கூட அடக்கி ஆளுகின்றது). ஆகலால், தர்மத்திற்கு மேலாக ஒன்றுமில்லை. ஆதலபற்றியே, பலவானை தர்மத்தால் துர்பலன் ஜயிக்கிறான், உலகத்தில் ராஜனுடன் விரோதப்படும் ஒரு குடும்பிபோன்று. தர்மம்தான் ஸத்தியம். ஆகலால், ஸத்யம் உரைப்பவர்களை தர்மத்தைக் கூறுகிறார்களென்றும், தர்மத்தைச் சொல்லுகிறவர்களை ஸத்யம் சொல்லுகிறவர்களென்றும் உலகத்தில் சொல்லப்படுகின்றது.

15. இப்பிரகாரம் அந்த பிரம வஸ்து (அவித்யா விஷயங்களாயிருக்கின்ற கர்மங்களை செய்யும்பொருட்டு) பிரம, க்ஷத்திரிய,

வைசிய, சூத்திரவென்ற நான்கு வர்ணங்களாக ஆயிற்று. அந்த பிரமம் தேவர்களுக்குள் அக்னி ரூபமாக பிராமணனாயிற்று. சிறிது விகாரமடைந்து மைற்ற மூன்று வர்ணங்களாயிற்று. ஆதலால், தேவர்களில் அக்னியிடம் கர்மத்தைச்செய்து அதன் பலனாகிய அதற்குறித்தான உலகத்தையடைய இச்சிக்கிறார்கள். மனிதர்களுக்குள் பிராமணத்துவ உலகத்தை யடையும்பொருட்டு இச்சிக்கிறார்கள். ஆதலால், இந்த அக்னி, பிராமண ரூபங்களாக பிரமம் பிராமணனாயிற்று. (அதாவது, அக்னியிடமும், பிராமணர்களிடமும் பிரமம் பிரத்யக்ஷமாயிருக்கின்றது; ஆதலால், அக்னியையும் பிராமணர்களையும் உபாஸிக்கவேண்டும்). யாவனொருவன் இந்த ஸாம்ஸாரிக உலகத்தைவிட்டு, தனக்குச் சொந்தமான உலகத்தை (அதாவது, தன்னிடமிருக்கின்ற ஆத்மாவை) பாராமல் (அறியாமல்) இறந்துபோகிறானோ, அவனை இந்த அறியப்படாமலிருக்கிற ஆத்மா போஷிக்கமாட்டாது (ரக்ஷிக்கமாட்டாது; காப்பாற்றமாட்டாது); எப்படி அத்தியயநம் செய்யப்படாத வேதம், கர்ம விதிகள் முதலியவைகளை தெரியப்படுத்துவதின் மூலமாய் பாலனம் செய்யாதோ அப்படிப்போல் போக்ஷிக்கமாட்டாது. ஆதலால் ஆத்மாவை யறியாதவன் எவ்வித மகத்தான புண்ணிய கர்மத்தைச் செய்யினும் அது பல அனுபோக முடிவில் நசித்துவிடும். ஆதலால், ஆத்மாவையே தன் உலகமாக உபாஸிக்க வேண்டும். அங்ஙனம் உபாஸிப்பவனுடைய கர்மம் நசிக்காது (அதாவது கர்மம் தொடாது; ஸம்ஸாரமில்லை; கர்மமிருந்தால் அல்லோ நசிக்கும், அது இல்லை). இவ்விதம் ஏற்பட்ட ஆத்மஞானி எது எதை இச்சிக்கின்றானோ அவைகள் எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறான்.

16. இந்த ஆத்மா (ஜீவன்; கிருகத்தலிருப்பவனும், கர்மாதிகாரியாகவும், சரீர பிண்டத்தி லிருப்பவனாகவும், அபிரம ஞானியாகவுமிருக்கின்ற ஆத்மா) எல்லா பூதங்களுக்குள்ளும் போக்கிய உலகமாக (போக்கியத்திற்கு இருப்பிடமாக) இருக்கிறான். எவ்விதமெனில், ஹோம யாகங்களால் தேவர்களுக்கு உலகம்; வேத அத்தியயனங்களால் ருஷிகளுக்கு உலகம்; சிராத்தாதி செய்வதி

னாலும், பிரஜாவிருத்திக்கு வேண்டிய கர்மங்கள் செய்வதினாலும் பித்ருக்களுக்கு உலகம்; மனிதர்களுக்கு இருப்பிடம், சாப்பாடு முதலியவைகளைக் கொடுத்து ஒத்தாசை செய்வதினால் மனிதர்களுக்கு உலகம்; புல், ஜலம் முதலியவைகளை கொடுப்பதினால் பசுக்களுக்கு உலகம்; வீடுகளிலுள்ள மிருக பக்ஷியாதிகளுக்கு ஆகாரம் கொடுப்பதினால் அவைகளுக்கு உலகம்; எப்படி உலகத்தில் ஒருவன் தன் இருப்பிடத்திற்கு நாசத்தைக் கருதமாட்டானோ அப்படி மேல்கண்ட பூதங்களெல்லாம் தங்கள் போக்கிய இருப்பிடமாகிய மேற்படி ஜீவாத்மாவிற்கு நாசத்தை இச்சிக்கமாட்டார்கள். (இந்தப்பிரகாரம்) அறியப்பட்டது; யோஜிக்கப்பட்டது. (கர்மங்களைச்செய்தால் தேவர்கள் ஜீவனைக் காப்பாற்றி இரக்ஷிப்பார்கள்; ஆதலால், கர்மத்தையும் விடக்கூடாது).

17. ஆத்மா (ஸ்வாபாவிகனாகவும், அவித்யாவானாயிருக்கிற ஜீவாத்மா) முதலில் (சம்ஸார சம்பந்தத்திற்குமுன்) ஒன்றாகவிருந்தான். (வேறொருவரும்கூட இல்லாமல் ஒன்றியாயிருந்தான்). அவன் (கர்மகர்த்தாவாகிய) தனக்கு (கர்மத்துக்கு காரணமாயிருக்கிற) ஸ்திரீயும், பிரஜையும் உண்டாக வேண்டுமென்றும், பிறகு கர்மத்தைச் செய்வேனென்றும் இச்சித்தான். ஆசை இவ்வளவன்றோ? (ஜாயா, புத்திர, வித்தகர்மங்களாக விருக்கிறதல்லவா). ஆசைப்பட்டாலும் முன்சொல்லிய பலன்களைகாட்டிலும் அதிகமாய் கிடைக்கமாட்டாது. ஆதலால், இக்காலத்திலும் உலகத்தில் ஒற்றையாயிருக்கிறவன் (முந்தி சொல்லியபடி) ஜாயா, புத்திர, வித்தகர்மங்களை இச்சிக்கின்றான். இவைகளில் ஏதேனும் ஒன்று கிடைக்காமல் குறைவுநேரிடின் தான் அஸம்பூர்ணனென்று நினைத்துக்கொள்ளுகிறான். அப்பொழுது அவனுக்கு அஸம்பூர்ணத்வம் உண்டாகிறது. இவன் மனதுதான் ஆத்மா (குடும்பபதி, புருஷன்) மனது பிரதானமாயிருப்பதால், வாக்குத்தான் ஜாயா, மனதுப்பிரகாரம் வாக்கு நடப்பதால், மேற்கண்ட இரண்டும் சேர்ந்ததால், பிராணன் பிரஜையாக உண்டாயிற்று. சக்ஷுஸ் மானுஷமாயிருக்கிற வித்தம்; அதனால் உலகத்தில் இருப்பதையெல்லாம் பார்க்கின்றோம். ச்ரோத்திரம் தைவமாயிருக்கிற வித்

தம்; சுரோத்திரத்தினாலன்றோ விஞானத்தைக் கேட்டறிகின்றோம். தேகம்தான் கர்மம்; தேகத்தால்தான் கர்மம் செய்யவேண்டுவதாயிருக்கிறது. இதுதான் பாங்க்தமான (ஐந்தால் நிறைவேற்றப் பட்ட) யஞ்ஞயம். இப்படி யறிபவனுக்கு பசு, புருஷன் எல்லாம் கிடைக்கும்.

பிராமணம் 5.

1-2. பிதாவாயிருக்கிற பிரஜாபதி தனது மேதையினாலும் (பிரஞையாலும்) தபஸாலும் எந்த ஏழு அன்னங்களை உண்டாக்கினாரோ அவைகள் இப்பொழுது சொல்லப்படுகின்றன. அவைகளில் ஒன்று ஸாதாரணம்; (அதாவது) உலகத்தில் உள்ள பிராணிகளெல்லாம் ஸாதாரணமாக சாப்பிடுகிற அன்னம், தினகப்படுகின்ற வஸ்துக்கள் ஸாதாரண அன்னம்; இந்த அன்னத்தை உபாஸிக்கின்றவன் (புசிக்கிறவன்) பாபத்தினின்றும் திரும்பமாட்டான்; இந்த அன்னம் மிசிரமாக எல்லோருக்கும் பொதுவாக விருக்கின்றது. தவிற, இரண்டு அன்னங்களை தேவர்கள் படையும்படி செய்தார்; அவைகளாவன, ஹுதம் (அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட அன்னம்); பிரஹுதம் (பலியாகப்போடப்பட்ட அன்னம்); இவ்விரண்டும் தேவர்களின் பொருட்டுத்தான் செய்யப்படுகின்றன. தரிச பூர்ணமாகிரியை சம்பந்தமான அன்னமென்று சிலர் சொல்லுகிறார்கள்; ஆதல்பற்றி, காமிய இஷ்டியைச் சார்ந்ததாக விருக்கமாட்டாது. ஒரு அன்னத்தை பசுக்களிடம் கொடுத்தார்: அந்த அன்னம்தான் பால்; மனிதர்களும், பசுக்களும் முதலில் பிறந்தவுடன் பாலைக்குடித்தல்லவா பிழைக்கின்றார்கள்? ஆதலால், பிறந்த குமாரனுக்கு முன்னர் பாலின் விகாரமாகிய நெய்யை நக்கும்படி செய்கிறார்கள்; அல்லது முலைப்பாலை குடிக்கும்படி செய்கிறார்கள்; பிறந்த கன்றுகுட்டியை இன்னும் புல்லுத்தினகவில்லை என்று சொல்லுகிறார்கள் (அதாவது, இன்னும் பால் குடித்துக்கொண்டிருக்கிறது என்றர்த்தம்); இந்த அன்னத்தில்தான் (பாலில்) எல்லா ஜகத்தும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது; பிராணனுடையது, பிராணனில்லாதது இவை எல்லாம் ஸ்தாபிக்கப்பட்டிருக்

கின்றன. எது ஒரு ஸம்வத்ஸரம் பாலினால் யாகம் செய்தால் ஒருவன் மரு மறணத்தை ஜயித்துப்போடுவான் என்று வேறு பிராமணங்களில் சொல்லப்பட்டிருக்கிறதோ அது அவ்விதமும் அன்று; அந்த பிரகாரம் ஒரு பகல் ஹோமம் செய்தாலே மிருத்யுவை ஜயிக்கிறான். ஆதலால் தேவர்களின் பொருட்டு அன்னத்தியங்களை கொடுக்கவேண்டும். அன்னங்கள் இவ்விதமாக திங்கப்படும்போது, எப்பொழுதும் ஏன் குறைவு இல்லாமலிருக்கிறதென்று கேட்கின், (அதற்கு பதில்) புருஷன் குறைவு இல்லாதவன்; அவன் தன் புத்தியால் எல்லா அன்னங்களையும் மறுபடியும் உண்டுசெய்கிறான். எவன் இவ்விதமாக அக்ஷிதி (குறைவில்லாத) பாவத்தை யறிகிறானோ அவனே முக்கியமாக அன்னத்தை புஜிக்கின்றான்; தேவத்வத்தை யடைகிறான்; அமிருதத்தைக் கொண்டு பிழைக்கிறான் (ஜனன மறணமற்றவன்).

3. (மைற்ற மூன்று அன்னங்கள் சொல்லப்படுகின்றன). மைற்று மூன்று அன்னங்களையும் பிதா ஆத்மாவிடம் இருக்கச் செய்தார். அவைகளாவன (i) மனது (அந்தக்கரணம்), (ii) வாக்கு, (iii) பிராணன். மனதுதான் முக்கியம்; எப்படியெனில், மனது பக்கத்தில் போயிருந்தால் சமீபத்திலிருப்பதை பார்க்க முடியாது; சமீபத்தில் சொல்வதை கேட்கமுடியாது; மனத்தால் தான் (அது இருந்தால்தான்) பார்க்கலாம், கேட்கலாம். காமம் (இச்சை), ஸங்கல்பம், சமுசய ஞானம், சிரத்தை (ஆஸ்திக்கிய புத்தி), அசிரத்தை, தைரியம், அதைரியம், லஜ்ஜை, புத்தி, பயம் இவைகள் முதலிய வைகளெல்லாம் மனதின் ரூபங்கள். மனத்தால் உணரவேண்டும் (அறியவேண்டும்). சப்தம்தான் வாக்கு; இந்த வாக்கு அதன் வாசக வஸ்துவாகவும், முடிவுள்ளதாகவு மிருக்கிறதை அநுசரித்துக்கொண் டிருக்கிறது. (அதாவது, அது வாசகவஸ்துவை பிரகாசப்படுத்துகின்றது). ஆனால், தான் அவ்விதமன்று (வேறொன்றால் பிரகாசப்படுத்தப்பட்ட தன்று, தானே பிரகாசிக்கத்தக்கது). (பிராணனைக்குறித்து சொல்லப்படுகிறது) பிராணன், பிராண, அபாந, வியாந, உதாந, ஸமாந என்று ஐந்துவிதம் (ஒவ்வொன்றிற்கும் விபரம் முன்சொல்லப்பட்டிருக்கி

றது). ஆதலால், எல்லாம் பிராணமயமாயிருக்கிறது. இந்த ஆத்மா வாங்மயமாயும், மனோமயமாயும், பிராணமயமாயு மிருக்கின்றது.

4-10. அடியில் கண்டவைகளெல்லாம் மேற்சொல்லிய வாக், மனது, பிராணன்களாக விருக்கின்றன.

(i) லோகம்.

வாக்—பூலோகம்; மனது—அந்தரிக்ஷம்; பிராணன்—சுவர்க்கம்.

(ii) வேதம்.

வாக்—ருக்வேதம்; மனது—யஜுர்வேதம்; பிராணன்—ஸாமவேதம்.

(iii) வாக்—தேவர்கள்; மனசு—பிதுருக்கள்; பிராணன்—மனுஷியர்கள்.

(iv) வாக்—பிதா; மனது—மாதா; பிராணன்—பிரஜை.

(v) வாக்—விஞாதம்; மனது—விஜிஞ்யாஸம்; பிராணன்—அவிஞாதம்.

விஞாதம் என்றால் செவ்வையாக அறியப்பட்டது; அது வாக்கின் ரூபம்; இவ்விதம் அறிந்தவனை வாக்கு காப்பாற்றுகிறது. விஜிஞ்யாஸம் என்றால் செவ்வையாக அறியப்படாததை யறிந்து சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்ளுதல்; இது மனதின் ரூபம்; இவ்விதம் யறிந்தவனை மனது காப்பாற்றும். அவிஞாதம் என்றால் அறியப்படாதது; இது பிராணனின் ரூபம்; இவ்விதம் யறிந்தவனை பிராணன் காப்பாற்றும்.

11. வாக்காகின்ற அன்னத்திற்கு சரீரம் (வெளிப்படையான ஆதாரம்) பிருதிவி; அதன் ரூபம் ஜ்யோதிர்மயம்; அதாவது அக்னி; வாக்கின் பரிமாணத்திற்கு தக்கவாறு பிருதிவியும், அக்நியும் அவ்வளவு பரிமாண முள்ளதாக யிருக்கின்றன.

12. மனதாகின்ற அன்னத்திற்கு ஸ்வர்கலோகம் சரீரம்; அதன் ரூபம் ஜோதிர்மயமான இந்த ஆதித்தியன்; மனதிற்கு

தகுந்தபடி ஸ்வர்கலோகமும், சூரியனும் யிருக்கின்றன. இந்த இரண்டின் சேர்க்கையால் பிராணன் உண்டாயிற்று. அதுதான் இந்திரன் (ஈசுவரன்); அதுதான் இந்த ஜீவன்; இவன் சத்துருவற்றவன்; இப்படி யறிந்தவனுக்கு சத்துருவில்லை.

13. பிராணனாகிற அன்னத்திற்கு ஜலம் சரீரம்; அதன் ரூபம் ஜோதிர் மயமான இந்த சந்திரன். பிராணனுக்கு தக்கபடி ஜலமும், சந்திரனு மிருக்கின்றன. இவை மூன்றும், வாக், மனது பிராணன் மூன்றும், சமமானவை; ஆதல்பற்றி அவை அனந்தங்கள் (முடிவற்றவை). இவைகளை அந்தமுள்ளவைகளாக உபாஸிக்கிறவர்கட்கு அந்தமுள்ள உலகந்தான் கிடைக்கும். அனந்தமாக உபாஸிக்கிறவன் அனந்த உலகத்தை யடைவான்.

14. அந்த பிரஜாபதி ஸம்வத்ஸராத்மா; (காலஸ்வரூபி, சந்திரதேவதை); பதினாறு கலைகளுள்ளவர்; அஹோராத்திரங்கள், திதிகள் பதினைந்து கலைகள்; பதினாறாவது கலை நித்தியமுள்ளது; இது சுக்கில பக்ஷத்தில் மற்ற பதினைந்து கலைகளில் ஒவ்வொன்றுடனும் சேர்ந்து வளருகின்றது; கிருஷ்ண பக்ஷத்தில் குறைவடைகிறது; நித்தியமாயிருக்கிற இந்த பதினாறாவது கலை அமாவாஸை ராத்திரியில் எல்லாப் பிராணிகளிடம் பிரவேசித்து, மறுதினம் முதல் வளர்ந்துகொண்டு வருகிறது. ஆதல்பற்றி, இந்த அமாவாஸை ராத்திரியில் யாதொரு பிராணிகளின் பிராணனையும் ஹிம்ஸிக்கக் கூடாது; இந்த சந்திரதேவதை பூஜை நிமித்தம், ஸ்பாவத்தில் பிராணிகளால் அமங்கலமென்று நினைக்கப்பட்டு ஹிம்ஸிக்கப்படுகிற பாபாத்மாவாகிய கரட்டோணனின் பிராணனைக் கூட ஹிம்ஸிக்கக் கூடாது.

15. எந்த ஆத்மா, ஸம்வத்ஸரः, பிரஜாபதி, ஷோடசகலாவென்று சொல்லப்படுகின்றாரோ அவர் நமக்கு பரோக்ஷமாக தெரியாமல் மறைந்திருக்கிறார் என்று நினைக்கவேண்டுவதில்லை. இதோ பிரதியக்ஷமாகவிருக்கிறார். அவ்விதமிருப்பவர் யார் எனில், இவ்விதம் அறிந்த ஒரு புருஷனே; ஜீவாத்மாதான். அவருக்கு தன் சொத்துக்கள்தான் பதினைந்து கலைகள்; ஆத்மா, சரீரம்தான்

பதினாறாவது கலை, நித்தியமாயிருக்கிற கலை; அவர் வித்தத்தினால் பூர்ணமாகிறார், குறைவு அடைகிறார்; சரீரம் எதுவோ அது நப்யம் (ஒரு சக்கிரத்தின் நடுஸ்தானம்; அச்சின் முக்கிய பிடிப்பு இடம்); வித்தம் அச்சக்கிரத்தின் பரிவாரங்கள், ஆரம் முதலியவைகள். எல்லா சொத்துகள் குறைவானாலும் ஒருவன் சரீரத்துடன் உயிருடனிருப்பானாகில் சொத்துடன் மறுபடியும் சேருவான்.

16. மனுஷ்யலோகம், பிதுற்லோகம், தேவலோகம் என மூன்று உலகங்கள் உள. முதல் உலகம், புத்திரனைக்கொண்டு ஜயிக்கப்படத்தக்கது; வேறொருவராலும் முடியாது. இரண்டாவது, கர்மத்தால் ஜயிக்கப்படத்தக்கது; வேறொன்றாலும் முடியாது. மூன்றாவது, பிரமவித்தையால் ஜயிக்கப்படத்தக்கது; வேறொன்றாலும் முடியாது. இந்த மூன்றாவது உலகம்தான் எல்லாவற்றிலும் சிரேஷ்டமுள்ளது. ஆதலால், வித்தையை பெரிதாகக் கொண்டாடுகிறார்கள்.

17. இனி 'ஸம்பிரத்தி' (புத்திரனிடம் ஒப்புவித்தல்) சொல்லப்படுகிறது. எச்சமயம் அது செய்யப்படவேண்டுமெனில், பிதா தான் இறந்துபோகிறதாக எப்பொழுது நினைக்கிறானோ அப்பொழுது புத்திரனை கூப்பிட்டு, அவனைப்பார்த்து, "நீ பிரமம்; நீ யஞ்ஞம்; நீ லோகம்" என்று சொல்லுகிறான். அதற்கு மறுமொழியாக புத்திரன் "நான் பிரமம்; நான் யஞ்ஞம்; நான் லோகம்" என்று சொல்லுகிறான். இவ்விதம் ஒன்றும் விளங்காமல் சொல்வதற்கு அர்த்தம் யாதெனில் (வேதம் சொல்கிறது, பிதா கூறுவது போல்). 'எந்த எந்த பிரமம் (வேதம்) என்றால் அத்யயனம் செய்யவேண்டுவதாக விருந்து செய்யப்பட்டும், செய்யப்படாமலுமிருக்கின்றதோ, அவையெல்லாம் நீ செய்யவேண்டியது. எந்த எந்த யஞ்ஞம் என்றால் செய்யப்பட வேண்டுவதாகவிருந்து செய்யப்பட்டதும், செய்யப்படாமலும் இருக்கின்றதோ அவைகளை எல்லாம் நீ இனி செய்யவேண்டும். எந்த எந்த லோகம் (பலன்) என்றால் ஜயிக்கப்பட வேண்டுவதாகவிருந்து, இதுவரையில் ஜயிக்கப்பட்டும், ஜயிக்கப்படாமலு மிருக்கின்றதோ அவைகளை எல்

லாம் நீ இனி ஜபிக்கவேண்டும்' என்றும், 'ஒரு கிரகஸ்தனால் செய்யப்பட வேண்டியவை இவ்வளவுமே. இவைகளெல்லாம் என்னிடமிருந்து வெளிப்பட்டு இவ்வுலகத்தினின்றும் என்னை ரக்ஷிக்க' என்றும் (அர்த்தம்). இவ்விதமாக புத்திரன் பிதாவை ரக்ஷிப்பதால் அனுசிஷ்டனாயிருக்கிற புத்திரனை 'லோக்யன்' என்று (பிதாவிற்கு லோகத்திற்கு ஹேதுவானவன் என்று) சொல்லுகிறார்கள். ஆதல்பற்றி, பிதா புத்திரனை 'இவன் லோக்யனாக விருக்கவேண்டும்' என்று உத்திரவுகொடுக்கிறான் (அனுசாஸிக்கிறான்). இவ்விதமறிந்த பிதா இவ்வுலகத்தைவிட்டுப் போனபோதிலும் திரும்ப இந்த வாக்கு, மனஸ், பிராணன் இவைகளுடன் புத்திரனை அடைகிறான். பிதாவினால் செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் ஏதேனும் குறைவாக விட்டிருந்தால் அதை புத்திரன் பூர்ணம் செய்து பிதாவை ரக்ஷிக்கின்றான். ஆதலால், அவனுக்கு 'புத்திரன்' என்ற பெயர் கிடைத்தது. இவ்வுலகத்தில் புத்திரனால் பிதா பிரதிஷ்டையுள்ளவனாக விருக்கிறான். இவனை தைவங்களாகவும், அமிருதங்களாகவுமிருக்கின்ற பிராணங்கள் (வாக்கு, மனஸ், பிராணன்) அடைகின்றன. எவ்விதமெனில்?

18. பிருதிவி, அக்னி லக்ஷணமுள்ள தைவியாகிய இந்த வாக்கு இவனிடம் பிரவேசிக்கின்றது; அதாவது, எது எது வாக்கால் சொல்லப்படுகிறதோ அவையெல்லாம் அமோகங்களாக விருக்கின்றன.

19. ஸ்வர்க்க, ஆதித்திய லக்ஷணமுள்ள தைவியாகிய மனது இவனிடம் பிரவேசிக்கின்றது. மனதில் சுகியாகவிருந்தால் அவனுக்கு துக்கம் இல்லை. எப்பொழுதும் சந்தோஷமுள்ளவனாக விருப்பான்.

20. ஜல, சந்திர லக்ஷணமுள்ள தைவியாயிருக்கிற பிராணன் இவனிடம் பிரவேசிக்கின்றது. அத்தகைய பிராணன் இவனிடம் சஞ்சரித்தும், சஞ்சரியாமலும் இருந்துகொண்டு குறைவு அடைகிறதில்லை, நாசமடைகிறதுமில்லை. இப்படியறிந்தவன் எல்லா பூதங்களின் ஆத்மாவாக விருக்கிறான். (சர்வக்ஞான பரமாத்மாவாக ஆகிவிடுகிறான்). இப்பிரகாரம் அவன் தேவதையாகிவிடுகி

றான். எவ்விதம் யாகம் முதலிய கர்மங்களால் எல்லா பூதங்களும் இந்த தேவதையை (பிரஜாபதியை) பூஜித்து காப்பாற்றுகின்றனவோ அவ்விதம் இப்பிரகாரம் அறிந்த ஞானியை எல்லா பூதங்களும் காப்பாற்றுகின்றன.

(இப்படியறிந்தவன் எல்லோரின் ஆத்மாவாகவும் ஆகிவிடுகிறான் என்று சொல்லப்படின் எல்லோருக்குமுள்ள துக்கம் இவனுக்கும் வந்துவிடுமேயென்று சந்தேகம்வரின், அதற்கு இடமில்லை, துக்கம் இவனை தொடாது என்று சொல்லப்படுகிறது). இந்த பிரஜைகளிடம் ஏதேனும் துக்கமிருப்பின் அது அவர்களிடம் இருக்குமேயன்றி இவனை (பிரமஞானியை) அணுகாது. தேவர்களை பாபம் சேருமா? சேராது!

21. பிறகு உபாஸனை சங்கதி (இந்த வாக்கு, மனது, பிராணன்களை எவ்விதம் உபாஸிக்க வேண்டுமென்ற விஷயம்) சொல்லப்படுகிறது. வாக் முதலிய காரணங்களை கர்மங்களைச் செய்யும் பொருட்டு பிரஜாபதி சிருஷ்டித்தனர். அவைகள் 'நான் பெரிது', 'நான் பெரிது' என்று சொல்லிக்கொண்டு ஒருவருக்கொருவர் விரோதமடைந்தார்கள். 'நான் பேசுகின்றதாக விருக்கிறேன் (மைற்ற காரணங்களால் கூடுமாவென்று)' வாக்கு குலாவிக்கொண்டது. அங்ஙனமே, 'நான் பார்க்கின்றவனாக விருக்கிறேன்' என்று சக்ஷுஸும், 'நான் கேட்கின்றவனாக விருக்கிறேன்' என்று சுரோத்திரமும், அவரவர்கட்கு தக்கவாறு மைற்ற காரணங்களும் குலாவின. இவர்களை 'சிரம' மென்ற மிருத்யு அடைந்தது. தம் தம் காரியங்களை செய்யவொட்டாமல் தடுத்துவிட்டது. ஆதலால், இப்பொழுதும் அதிகமாக பேசினால் வாக்கு சிரமத்தை யடைகிறது; அவ்விதமே நேத்திரமும், சுரோத்திரமும். இந்த சிரம மிருத்யு முக்கிய பிராணனைமட்டு மடையவில்லை. அத்தகைய பிராணனை அறியும்பொருட்டு மற்ற காரணங்கள் மனதுவைத்தன (அறிந்தன). (எவ்விதமெனில்) 'இந்த முக்கிய பிராணன் நம்முள் சிரேஷ்டனாக விருக்கிறது. சஞ்சரித்தும், சஞ்சரிக்காமலும், குறைவன்றியும், நாசமில்லாமலு மிருக்கின்றது. நாம் எல்லோரும் அதன் ஆத்மாவாக விருக்கின்றோம்' என்று எண்ணிக்கொண்

டு, அந்தப் பிராணனுடைய ரூபமாகவே ஆகிவிட்டன. ஆதலால், வாக்காதிகள் பிராணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவ்விதம் அறிந்தவன் எக்குலத்திலுள்ளவனோ அக்குலத்தை இவன் பெயரால் சொல்லுகிறார்கள். இவ்விதம் அறிந்தவனுடன் எவராகிலும் விரோதம் கொண்டால் அவன் சரீரம் வர வர சோஷித்துப் போய், கடையில் (கஷ்டப்பட்டு) இறப்பான். இது அத்யாத்மம் (ஆத்ம ஸம்பந்தமான விஷயம்).

22. இனி அதிதைவதம் சொல்லப்படும். தேவர்கள் ஒருவருக்கொருவர் விரோதமடைந்தார்கள். எவ்விதமெனில் "நான் ஜ்வலிக்கிறேன்" என்று அக்னியும், 'நான் தபிக்கச் செய்கிறேன்' என்று சூரியனும், 'நான் விளங்குகின்றேன்' என்று சந்திரனும், மற்ற தேவர்கள் தங்களுக்குத் தகுந்தவாறும் சொல்லிக்கொண்டார்கள். வாக்காதிகளுக்குள் பிராணன் எப்படி முக்கிய தேவதையோ, அப்படி அக்கினியாதி தேவர்களுக்குள் வாயு முக்கிய தேவதை. மற்ற தேவதைகளெல்லாம் அஸ்தமயத்தை யடைகின்றார்கள். வாயு தேவதை அப்படி அடைகிறதில்லை. எப்பொழுதும் தன் வேலையை நடத்திக்கொண்டிருக்கின்றது.

23. இவ்விஷயத்தில் இந்த மந்திரம் இருக்கிறது. "எதினின்றும் சூரியன் உதயமாகின்றதோ, எதில் அஸ்தமயத்தை யடைகிறதோ, அந்த வாயுவையும், பிராணனையும் தேவர்கள் உபாஸித்து விரதம் அனுஷ்டித்தார்கள். இப்பவும் செய்கிறார்கள். இனியும் செய்வார்கள்".

ஆதலால், மற்றோரும் இந்த ஒரு விரதத்தைச் செய்யவேண்டும், அதாவது, 'பிராணனம்', 'அபாநநம்', (அதாவது) வாயு விருத்தி (மூச்சை பிடித்து விட்டுச் செய்யும் யோகம்) செய்ய வேண்டும். அப்படி செய்யாவிடின் மிருத்யு நம்மிடம் வருமென்று பயந்து அங்ஙனம் செய்யவேண்டும். அப்படிச் செய்யின் அந்த வாயு பிராண தேவதையுடன் ஸாயுஜ்ய, ஸாலோக பதவிகள் கிட்டும்.

பிராமணம் 6.

1. (இந்த வியாகிருதமாக, அதாவது நாநாவிதமாக விகாரமடைந்திருக்கிற ஜகத்தின் அவஸ்தை, நிலைமை, இவ்விதம் விகாரமடையுமுன் எப்படி யிருந்ததெனில்) இம் மூன்றுகளாக விருந்தது. எவைகள் எனில் (i) நாமம், (ii) ரூபம், (iii) கருமம் (இவைகள்தான் இப்பொழுது காணப்படுகிற ஜகத்தாக வியாகிருதமாயின. இம் மூன்றும் ஆத்மாவன்று. அநாத்ம ஸ்வரூபங்களே). இந்த நாமங்களுக்கு வாக்கு சப்த சாமான்யமென்று சொல்லப்பட்டது; இந்த வாக்கு நாமங்களின் மூலமாயிருக்கின்றது. ஏனெனில், எல்லா நாமங்களும் வாக்கினிடமிருந்து உண்டானவை. இந்த வாக்கு எல்லா நாமங்களுக்கும் பொது (ஸாமான்யம்). ஏனெனில், எல்லா நாமங்களுடனும் இது ஸமமாயிருக்கிறது. இந்த வாக்குத்தான் பிரமம் (ஆத்மா, ஆத்மாலயம்). ஏனெனில், இது எல்லா நாமங்களையும் பரிக்கிறது (தாங்குகின்றது).

2. சக்ஷுஸ் ரூபங்களுக்கு மூலம் (ஆதாரம்). (முன் மந்திரத்தில் கூறியவாறு இந்த சக்ஷுஸுக்கு தக்கபடி பொருள்படுத்தவும்.

3. கர்மங்களுக்கு ஆத்மா (சரீரம்) ஆதாரம் (மூலம்). (முன் மந்திரம்போல் இதற்கு தகுந்தபடி பொருள்).

இம் மூன்றும் (நாம, ரூப, கர்மங்கள் மூன்றும்) ஸத்தாகச் சேர்ந்து ஒன்றாக விருக்கின்றன. இந்த சரீரம் ஒன்றானது, இம் மூன்றில் இருக்கின்றது. அது அமிருதம். ஸத்தியத்தால் மறைக்கப்பட்டிருக்கின்றது. அமிருதமென்றால் பிராணன். ஸத்தியமென்றால் நாமமும், ரூபமும்; இவ்விரண்டால் பிராணன் மறைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் அத்தியாயம்.

பிராமணம் 1.

1\. கருவங்கொண்டவராயும், பேசுவதில் திறமையுள்ளவரா யும், கார்க்கருடைய வம்சத்திலுள்ளவருமான பலாகி என்ற ஒரு வர் இருந்தார். அஜாதசத்ருவென்று பெயருள்ள ஒரு காசி தேசத் தரசனைப்பார்த்து அவர் 'உனக்கு பிரம வித்தையைக்குறித் துச் சொல்லுகிறேன்' என்று சொன்னார். அதற்கு ராஜா பதில் சொன்னதாவது, "இந்த வார்த்தையைச் சொல்லியதற்காக உமக்கு ஆயிரம் பசுக்களைக் கொடுக்கிறோம். உலகத்தில் ஜனங்கள் கொ டுக்க இச்சையுள்ளவ னிடத்திலும், கேட்க இச்சையுள்ளவனிடத் திலும் செல்லுகிறார்கள்". (அந்த கொடுப்பது முதலிய காரியம் என்னிடமும் உளதென்றெண்ணி என்னிடம் சேர்ந்தீரே என்று).

2\. கார்கியர் (அடியில் வருமாறு) சொன்னார். "(நமக்கு வெளியில்) ஆதித்தியனிடத்திலும், (நமக்குள்) சக்ஷுஸினிடத்தி லும், ஒரே புருஷனாக சக்ஷுஸ்ஸ்வழியாக இருதயத்தில் பிரவேசித் தும், கர்த்தா போக்தாவென்று சொல்லப்பட்டு எவர் விளங்கு கின்றாரோ அத்தேவதையை பிரமமென்று நான் உபாஸிக்கின் றேன்; அவரை நீரும் உபாஸிக்க".

அஜாத சத்ரு (இப்படிச் சொன்னவரை நோக்கி) சொல்லிய தாவது—'அப்படி சொல்லவேண்டாம்; அப்படிச் சொல்லவேண் டாம். (இது பிரம மன்று; நீர் சொல்லிய தேவதைக்கு குணம் இருக்கின்றது). எல்லா பூதங்களுக்கு மேலாக, சிரஸாக, ராஜா வாகவிருக்கிறார் என்றல்லவா அவரை நீர் உபாஸிப்பதாக சொல் லுகிறீர் (அது ஸகுணவஸ்துவன்றோ; அதை உபாஸித்தால் அதற் குத்தகுந்த பலன்தான் கிடைக்கும்). அவ்விதம் உபாஸிப்பவன் எல்லா பூதங்களுக்கும் மேலானவனாக, சிரஸாக, ராஜாவாக விருப் பான். (இது எனக்குத் தெரிந்த விஷயமே; இன்னும் வேறு ஏதா வது நீர் அறிந்திருந்தால் அதைச் சொல்லும்)'.

3. (மேற்கண்டபடி இவ்வாக்கியத்திலும், பின்வரும் 14-வது மந்திரம் வரையில் ஓர் ஓர் தேவதையை 'இது பிரமம்' 'இது பிரமம்' என்று கார்க்கியர் சொல்ல, 'அதுவல்ல, அதுவல்ல' வென்றும், ஒவ்வொன்றிற்கும் குணம் இன்னதென்றும், உபாஸிப்பவனுக்கு பலன் இவ்வளவென்றும் அஜாத சத்ரு பதில் சொல்லிக் கொண்டு வருகிறார். 2-வது மந்திரத்தில் சொல்லிய பிரகாரம் இருவருக்கும் ஸம்வாதம்; பின்வரும் மந்திரங்களில், ஒவ்வொன்றிலும் தேவதை, குணம், பலன் இவைகள் மட்டும் வெவ்வேறாக சொல்லப்படவேண்டியது. அதற்குத் தக்கவாறு ஸம்வாதத்தை பூர்த்திசெய்து கொள்ளவேண்டியது). தேவதை—சந்திரனிடத்திலும், மனதினிடத்திலும் இருக்கிற புருஷன்; குணம்—பெரிதான சுக்ல வஸ்திரத்தை யுடையவன்; அப்சரீரீ; ஸோம ராஜா. பலன்—ஸோமலதை பிழியப்படுகிறது (அதாவது, யஞ்ஞம் செய்யப்படுகிறது); விகாரப்படும் அன்னங்களெல்லாம் விருத்தியாகும். அவனுக்கிருக்கும் அன்னம் குறைவடையாது.

4. தேவதை—வித்யுத்திலும் (மின்னல்), த்வக் இருதயத்திலும் இருக்கிற புருஷன்; குணம்—தேஜஸ்வீ; பலன்—இவன் தேஜஸ்வீயாகவும், இவனுடைய பிரஜைகள் தேஜஸ்விகளாகவு மிருப்பார்கள்.

5. தேவதை—ஆகாசத்திலும், இருதயாகாசத்திலு மிருக்கிற புருஷன்; குணம்—பூர்ணமாகவும், குறைவு அன்றியுமிருப்பது; பலன்—புத்திர பசுக்கள் நிறைந்திருப்பான்; பிரஜைகட்கு பூர்ண ஆயுளுண்டு.

6. தேவதை—வாயுவினிடமும், பிராணனிடத்திலும் இருக்கிற புருஷன்; குணம்—பரமேசுவரன் (உயர்ந்தவன்); நரர்களால் எதிர்க்கப்படகூடாதவன்; பிறர்களால் ஜயிக்கக்கூடாத சேனையை (மருத் கணங்களை) யுடையவன். பலன்—ஜயசீலன்; சத்ருக்களை ஜயிக்கிறவன்; சத்ருக்களால் ஜயிக்கப்படாதவன்.

7. தேவதை—அக்னியிடமும், சித் இருதயத்தினிடமும் (ஞானம்) இருக்கிற புருஷன்; குணம்—பொருமை; பலன்—இவனும் இவனது பிரஜையும் சாந்தமுள்ளவர்களாக விருப்பார்கள்.

8. தேவதை—ஜலத்திலிடமும், ரேதஸ்ஸினிடத்திலும் இருக்கிற புருஷன்; குணம்—பிரதிரூபம் கொடுக்கிறது; பலன்—பிரதிரூபத்தை யடைகிறான்; தனக்கு பிரதிரூபமான பிரஜையை உண்டாக்கிறான்.

9 தேவதை—கண்ணாடியிலும் (பிரதி பிம்பம் காட்டுகின்ற வஸ்து) ஸ்வச்சமான இருதயத்திலும் இருக்கிற புருஷன்; குணம்—பிரகாசம்; பலன்—இவனும், இவனுடைய பிரஜைகளும் பிரகாசமுள்ளவர்களாக விருப்பார்கள்; தன்னைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் மேலாகவிருப்பான்.

10. தேவதை—சென்ற எதை சப்தமும் பின் தொடர்கிறதோ அது, பிராணன்; ஜீவன்; குணம்—ஜீவன எதுத்துவம்; பலன் பூர்ண ஆயுள்; அகால மிருத்யு இவனை பின்தொடராது.

11. தேவதை—திக்கிலும், சுரோத்திரங்களிலும் இருக்கிற புருஷன் (அசுவினி தேவதைகள்); குணம்—இரட்டையாகவும், பிரியாமலிருக்குகையும்; பலன்—இரண்டாவதை யுடையவனாக விருப்பான்; இவனுடைய கூட்டம் குறைவடையாது.

12. தேவதை—சாயா புருஷன், அந்தரான தேவதை; குணம்—மிருத்யு; பலன்—பூர்ணாயுள்; அகால மிருத்யுவில்லை.

13. தேவதை—பிரஜாபதி ஆத்மா, புத்தி ஆத்மா; குணம்—ஆத்மத்வம்; பலன்—இவனும் இவனுடைய பிரஜையும் ஆத்மவானாகவும், பாருஷ்யமுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

இதைக்கேட்டு கார்கியர் ஒன்றும் பேசாமல் இருந்தார்.

14. இவ்வளவுதானோ என்று அஜாதசத்ரு கேட்டார்; இவ்வளவுதான் என்று கார்கியர் சொன்னார்; அஜாதசத்ரு சொல்லுகிறார்—இதைக்கொண்டு எது அறியப்படவேண்டியதோ அது அறியப்படமாட்டாது. கார்கியர் சொல்லுகிறார்—இவ்வளவுதான் எனக்குத் தெரியும்; இனி நீர்தான் சொல்லவேண்டும்; உம்மிடம் வருகின்றேன்; நீர் குருவாகவிரும்; நான் சிஷ்யனாகவிருக்கிறேன்.

15. அஜாதசத்ரு சொல்லுகிறார்—'இப்படி சொல்வது விரோதம்; பிராமணன் குருவாக க்ஷத்திரியனையடைவது சரியன்று; நீர் குருவாகவே இரும்; நான் தமக்குத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன்'. இவ்விதம் சொல்லி கார்கியர் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு இருவரும் ஓர் இடத்தில் தூங்கிக்கொண்டிருக்கிற ஒருவனிடம் சென்றார்கள். தூங்குகிறவனைப்பார்த்து அஜாதசத்ரு 'ஹே! பிரஹன், பாண்டரவாஸ, ஸோம, ராஜா' வென்று சொல்லி கூப்பிட்டார். அவன் எழுந்திருக்கவில்லை. பிறகு கையால் தேகத்தை அடித்து எழுப்பினார். அப்பொழுது எழுந்தான்.

16. அஜாதசத்ரு 'இந்த விஞ்ஞானமயனாகவிருக்கிற புருஷன் (தட்டி எழுப்பினவுடன் எங்கிருந்து வந்தெழுந்தானோ அப்புருஷன்) தட்டி எழுப்பப்படுவதற்குமுன், எக்காலத்தில் தூங்கிக்கொண்டு அல்லது தூங்குகிறவனைப்போ லிருந்தானோ அக்காலத்தில் எவ்விடமிருந்தான்? எவ்விடமிருந்து வந்தான் அல்லது வந்தவன்போல் தோன்றினான்? உமக்குத் தெரியுமா? வென்று கேட்டார். கார்கியர் தனக்குத் தெரியவில்லையென்றார்.

17. அஜாதசத்ரு சொல்லுகிறார். இந்த விஞ்ஞானமயமான புருஷன் தூக்கத்தில் எவ்விடமிருந்தான் என்று கேட்கில், தன் சக்தியால் (விஞ்ஞானத்தால்) இந்த வாக்முதலிய தத்துவங்களின் சாமர்த்தியத்தை கிரகித்து தனது ஸ்தானமாகிய அந்தர் இருதய ஆகாசத்தில் படுத்திருக்கிறான். அவைகளை எப்பொழுது கிரகிக்கிறானோ அப்பொழுதுதான் இந்த புருஷன் தூங்குகிறான் என்று சொல்லப்படுகின்றது; அப்பொழுது, பிராணன் (கிராணேந்திரியம்) கிரிகிக்கப்படுகிறது; அவ்விதமே, வாக்கு, சக்ஷுஸ், சுரோத்திரம், மனது இவைகளும் கிரகிக்கப்படுகின்றன.

18. இந்தப் புருஷன் எப்பொழுது ஸ்வப்ன விருத்தியுடன் சஞ்சரிக்கிறானோ அப்பொழுது இந்த உலகங்கள் அவனுக்கு நிலைமைகள்; மகா ராஜாவைப்போல் அல்லது மகா பிராமணனைப்போ லிருக்கிறான்; அல்லது, உயர்ந்த ஸ்திதியையும் (தேவாதி தேகை) தாழ்ந்த ஸ்திதியையும் (திர்யக்முதலியதையும்) யடைகிறான்.

எவ்வாறு தன் பரிவாரங்களுடன் ஓர் மகாராஜன் தன்னிஷ்டப்படி திரிகின்றானோ அதுபோல் (சுவப்னகாலத்தில்) இந்த புருஷன் மேற்கூறிய தத்துவங்களைக் கிரகித்துக்கொண்டு தன் சரீரத்தில் தன்னிஷ்டப்படி திரிகின்றான்.

19. எக்காலத்தில் ஒன்றையும் அறியாமலிருக்கிறானோ, அதாவது காரணங்களின் சேஷ்டையன்றி இருக்கின்றானோ அப்பொழுதுதான் ஸுப்தன் என்று சொல்லப்படுகிறது.

சரீரத்தில் ஹிதங்களென்ற பெயருள்ள எழுபத்திரண்டாயிரம் நாடிகள் (நரம்புகள்) இருக்கின்றன. புண்டரீக ஆகாரமுள்ளதாகவும், இருதயமென்று பெயருள்ளதுமான ஓர் மாம்ஸ பிண்டத்தினின்று அந்நாடிகள் கிளம்பி (அரைசலை நரம்புகள்போல்) சரீரம் முழுமைதும் பரவியிருக்கின்றன. (புத்தியென்ற அந்தக்கரணம் இருக்கின்ற ஸ்தானந்தான் மேற்கூறிய இருதயம்) இந்த புத்தியினிடத்தில் விஞ்ஞானமயனை புருஷன் இருக்கின்றான் (அதிஷ்டித்து). (அதாவது, புத்தியை வியாபித்துக்கொண்டிருக்கிறான்; அதாவது, ஜலத்தில் சந்திரன் எவ்விதம் பிரதி பிம்பிக்கின்றானோ அவ்விதம் புத்தியில் பிரதி பிம்பித்துக்கொண்டு அந்த பிரதி பிம்பமூலமாக புத்திக்கு சக்தியை கொடுத்துக்கொண்டு தான் தனிப்பட்டு நின்றிருக்கிறான்). அந்த புத்தியினால் மற்றுமுள்ள சுரோத்திராதி காரணங்கள் ஏவப்படுகின்றன. (அதாவது, ஜாகரிதகாலத்தில் மேற்படி நாடிகளின் வழியாக, மீன் வலையைப்போல், புத்தி பரவப்படுகிறது; அப்பொழுது காரணங்களுக்கு சக்தியுண்டாகின்றது; தப்த லோஹத்தை அக்னி எங்கும் நிறைந்திருப்பதுபோல் புத்தி சரீரமுழுமைதும்பரவி நிற்கின்றது. அந்த வலை இழுக்கப்படுகிறது; அப்பொழுது எல்லாக் காரணங்களும் வேலையொழிந்து, சக்தியற்றுப்போய் இருக்கின்றன). அப்பொழுது இந்த புருஷன், ஒரு பாலனைப்போலாவது, மகா பிராமணனைப்போலாவது, (அல்லது) மகா ராஜனைப்போலாவது கவலையன்றி, காரியமில்லாமல், அத்யந்த சந்தோஷத்தை யநுபவித்துக்கொண்டு சுகமாகவிருக்கிறான். இதுதான் தூங்குகிறது என்று சொல்லப்படுகிறது.

20. ஊர்ண நாபி என்ற பட்டு பூச்சி எப்படி நூலை தன்னிடத்தினின்றும் கிளப்பிவிட்டு பிறகு தானே அதை இழுத்துக் கொள்ளுகிறதோ அப்படிப்போலும், அக்னியிடமிருந்து சிறு பொறிகள் எப்படி கிளம்புகின்றனவோ அப்படிப்போலும் இந்த ஆத்மாவிடமிருந்து தத்வங்கள் எல்லாமும், உலகங்கள், தேவர்கள், பூதங்கள் எல்லாமும் கிளம்பின (உண்டாயின). இந்த ஆத்மாவைகுறித்த உபநிஷத் வாக்கியம் ஸத்தியத்திற்கெல்லாம் ஸத்தியமாயிருக்கிறது. பிராணன் ஸத்தியம்; அதைவிட இது (ஆத்மா) ஸத்யம். (பிரமத்திற்கு வேறாக ஸம்ஸாரி என்று பெயருள்ள யாதொரு வஸ்துவும் இல்லை. அந்த பிரமமே ஒரு தசையில் அஸம்ஸாரி; மைற்றோர் தசையில் ஸம்ஸாரி. இந்த ஜகத் எதினின்றும் உண்டாயிற்றோ, எது மயமாயிருக்கிறதோ, எதனிடம் லயிக்கின்றதோ அதுதான் பிரமம். ஜகத் பஞ்ச பூதாத்மகமாயிருக்கிறது. பூதங்கள் நாம ரூபாத்மகங்கள். அவை ஸத்தியமென்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால், பிரமம் அந்த ஸத்தியத்திலும் ஸத்தியமாயிருக்கிறது).

பிராமணம் 2.

1. எவனொருவன் சிசுவை (மத்தியம் பிராணனை) ஸாதானமாகவும், ஸப்ரத்யாதானமாகவும், ஸஸ்தூணமாகவும், ஸதாமமாகவும் அறிகிறானோ அவன் ஏழு சத்ருக்களையும் ஜயிக்கிறான். (ஏழு சத்ருக்கள் என்றால், கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, மூக்குகள் இரண்டு, வாய் ஒன்று ஆகிய ஏழு இந்திரியங்களினால் கிரகிக்கப்படுகிற விஷயங்களைப்பற்றிய இச்சைகள். இவைகளை ஜயிக்கிறான், அதாவது, இந்திரியங்களை தன் ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுகிறான்). (சிசுவென்றால் மத்யம் பிராணன், அதாவது எந்த பிராணன் சரீர மத்தியத்தில் இருந்துகொண்டு ஐந்து விதமாக சரீரத்தை வ்யாபித்துக் கொண்டிருக்கிறதோ அது சிசுவென்று சொல்லப்படுகிறது; அது ஸாதானம், ஆதானத்துடன், இந்த சரீரத்துடன் கூடியிருக்கிறது; ஸப்ரத்யாதானம், சரீரத்தில் ஒவ்

வொரு ப்ரதேசத்திலும் சேர்ந்திருக்கிறது; ஸ்தூணம், பலமுள்ளதாயிருக்கிறது; ஸதாமம், அன்னமுள்ளதாயிருக்கிறது).

2. அதை (சிசுவாகிய பிராணனை) அநுஸரித்து ஏழு அக்ஷிதிகள் (குறைவற்றவை; எப்பொழுது முள்ளவை; பிராணன் உள்ளவரையில் இருக்கின்றவைகள்) (கண்களில்) இருக்கின்றன. (அவைகளாவன) நேத்திரத்தில் இருக்கிற சிகப்பு கோடுகளின் வழியாய் ருத்ர தேவதையும், கண் ஜலத்தின் வழியாய் பர்ஜன்ய (வருண) தேவதையும், கண்ணின் பொம்மை முழிவழியாய் ஆதித்ய தேவதையும், கருப்பு முழிவழியாய் அக்னி தேவதையும், வெள்ளை முழிவழியாய் இந்திர தேவதையும், கீழ் இமைவழியாய் பிருதிவி தேவதையும், மேல் இமைவழியாய் ஆகாச தேவதையும் இந்தப் பிராணனை அனுஸரித்திருக்கின்றன. பிராணனை இவ்விதம் அறிந்தவனுக்கு அன்னம் குறைவில்லாமலிருக்கும்.

3. இந்த விஷயத்தில் ஒரு மந்திரம் இருக்கிறது. அது என்னவென்றால்—"சிரஸானது சமஸ் உருவமுடையது; (அதாவது, யஞ்ஞத்தில் உபயோகப்படும் மடக்கு என்ற பாத்திரம் கீழ்வாயும் மேல்தட்டுமுள்ளது, அதாவது தலைகீழாக கவிழ்த்த மடக்குபோல இருக்கின்றது). அதில் நாநா ரூபமுள்ள யசஸ் (பிராணன்) வைக்கப்பட்டிருக்கிறது. அதனிடம் ஏழு ரிஷிகள் இருக்கிறார்கள் (ஸத்ய பதார்த்தங்கள், இந்திரியங்கள் இருக்கின்றன). சப்த ராசியுடன்கூடிய வாக் எட்டாவது ரிஷியாக இருக்கிறது. (ஏழு ரிஷிகளும் அடுத்த மந்திரத்தில் சொல்லப்படும்).

4. வலது காது, கௌதமர்; இடது காது, பாரத்துவாஜர்; வலது கண், விச்வாமித்ரர்; இடது கண், ஜமதக்னி; வலது மூக்கு, வஸிஷ்டர்; இடது மூக்கு, கசியபர்; வாக்கு, அத்ரி; வாக் திங்குகிறதால் அத்ரி என்று சொல்லப்படுகிறது. இப்படியறிந்தவனுக்கு எல்லாம் அன்னமாக விருக்கும் (ஆதாவது எல்லாவற்றையும் புஜிப்பான்).

பிராமணம் 3.

1. பிரமத்தினுடைய ரூபங்கள் இரண்டு இருக்கின்றன

(ஒன்று) மூர்த்தம் (உருப்படியுள்ளது);
மர்த்யம் (நாசமுள்ளது);
ஸ்திதம் (தங்குதலுள்ளது;
அளவுக்கடங்கியது);
ஸத் (பிரத்யக்ஷமானது;
கண்ணுக்கு தெரியக்கூடியது);

(இரண்டாவது) அமூர்த்தம் (உருப்படி இல்லாதது);
அமிருதம் (நாசமற்றது);
யத் (எப்பொழுது கதியுள்ளது;
அளக்கப்படகூடாதது);
த்யத் (அபரோக்ஷமானது;
கண்ணுக்கு தெரியக்கூடாதது).

2. பஞ்ச பூதங்களுக்குள் பிரதிவி, ஜலம், அக்னி, இம் மூன்றும் முதல் வகுப்பில் உள்ளன (அதாவது, மூர்த்தம் ஆவில் உள்ளன). இவைகளுக்குள் சூரியன் ஸாரமாயிருக்கிறது.

3. வாயுவும், ஆகாசமும் இரண்டாவது வகுப்பில் உள்ளன (அதாவது, அமூர்த்தம் ஆவில் உள்ளன). இவைகளுக்குள் மேற்படி சூரியனிடமிருக்கிற புருஷன் ரஸமாயிருக்கிறான். இது அதிதைவத விஷயம்.

4. அத்யாத்ம விஷயம் (சொல்லப்படுகிறது). சரீரத்திலுள்ள பஞ்ச பூத அம்சங்களில் பிரதிவி, ஜலம், அக்நி இம் மூன்றுகளின் அம்சமுள்ளது எதுவோ அதுமுதல் வகுப்பைச் சேர்ந்தது. இவைகளுக்குள் நேத்திரம் ரஸமாயிருக்கிறது.

5. சரீரத்திற்குள்ளிருக்கும் பிராண வாயுவும், ஆகாச வெளியும் இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தன. இவைகளுக்குள் வலது கண்ணிலிருக்கிற புருஷன் ரஸமாயிருக்கிறது.

6. இந்த புருஷனுடைய ரூபம் (சூரிய மண்டலஸ்த புருஷனுடைய, அக்ஷி புருஷனுடைய, லிங்காத்மாவினுடைய, ஹிரண்ய

கர்ப்பனுடைய, அப்பாகிருதத்திலிருந்து வந்த புருஷனுடைய, ஸகுண பிரமத்தினுடைய ரூபம்) எதுவெனில், வாஸநா ரூபமாயிருக்கிறது. (அநாதியாயும், அகாரணமுள்ளதாயு மிருக்கிற ஸ்வபாவம் என்பது வாஸனை). உலகத்தில் வாஸநா ரூபத்திற்கு திருஷ்டாந்தங்கள் எவையெனில், மஞ்சள் வஸ்திரம், வெளுப்பு கம்பிளி, பட்டுப் பூச்சி, அக்கினியின் காந்தி, வெள்ளை தாமரை, மின்னல் இவைகளைப்போல (ஸ்வபாவமுள்ளது). (இவைகளில் உள்ள வர்ணங்களும், காந்திகளும் ஸ்வபாவத்தில் உண்டானவை; விசித்திரமுள்ளவை; இவ்விதமாக, பலவிதமாகவும், விசித்திரமாகவும், பல பதார்த்தங்களை ஒட்டியிருக்கிறதான ஸ்வபாவ குணம் என்பதே ஸகுண பிரமத்தின் ரூபமாயிருக்கிறது. நிர்குண பிரமமே இப்பிரகாரம் ஸகுணமாயிற்று; இரண்டும் ஒன்றே, வெவ்வேறு அல்ல; தேசமாத்திரம் வேறு; தேசைக்குத்தக்க பெயர் மாத்திரந்தான் உண்டு). ஒரு தடவை மின்னல் பிரகாசித்தால் எல்லாம் பிரகாசமாய்த் தெரிகின்றன; இப்படி போல ஸ்வபாவமுள்ளது. மேற்படி பிரமத்தை இவ்விதம் அறிந்தவனுக்கு ஸ்ரீ (கியாதி) யுண்டு. அந்த பிரமத்திற்கு ஆதேசம் (குறிப்பு, அடையாளம், குறித்துக் காட்டுதல்) எதுவெனில், நேதி, நேதி (என்பது). (அதுவுமில்லை, இதுவுமில்லை என்பது; அதாவது குறிப்பு அடையாளமில்லை). இந்த 'நேதி, நேதி' என்ற அடையாளத்தைக் காட்டிலும் வேறு ஆதேசம் ஒன்றுமில்லை. அதற்கு பெயர் என்னவெனில், 'ஸத்யஸ்ய ஸத்யம்' (ஸத்யத்திற்கெல்லாம் ஸத்யம்). பிராணங்கள் ஸத்யமாயிருக்கின்றன. பிரமம், இவைகளைக் காட்டிலும் ஸத்யமாயிருக்கிறது (அதாவது, அத்யந்த ஸத்யம், பிராணனைக்காட்டிலும் உயர்ந்தது).

பிராமணம் 4.

(ஸம்ஸாரம் அவித்யா விஷயமாயிருக்கிறது; அதற்கு கர்மம் அங்கமாயிருக்கிறது; பிரத்யக் ஆத்ம (பிரமஞானம்) வித்யா விஷயமாயிருக்கிறது; அதற்கு ஸந்யாஸம் அங்கமாயிருக்கிறது; (ஸந்யாஸமென்றால் எல்லா கர்மங்களையும் விட்டுவிடுதல்). அந்த ஸந்

யாஸ விஷயம் ஒரு கதை ரூபமாக இந்த பிராமணத்தில் சொல்லப் படுகிறது).

1. யாஞ்ய வல்க்யர் என்பவர் தன் பார்யையாகிய மைத்ரேயி என்பவளைப்பார்த்து சொன்னதாவது—"அடியே! கேள்! நான் இந்த கிரஹஸ்த ஆச்ரமத்தில் நின்றும் உயர்ந்த ஆச்ரமத்திற்குப்போக இச்சிக்கிறேன். ஆதலால், நான் உன்னையும், மற்றொரு பார்யையாகிற இந்த காத்யாயனி என்பவளையும் பிரித்துவைக்கிறேன் (சொத்துக்களை உங்களுக்கு பங்கிட்டு கொடுத்து தனிப் படுத்துகிறேன்)".

2. மைத்ரேயி பதில் சொன்னதாவது—"ஹே! ஸ்வாமி! வித்தத்தினால் பூர்ணமாயிருக்கப்பட்ட இந்த எல்லா பூமியும் எனக்கு இருந்தால் நான் எப்படி மிருதாவாக (மரணத்தை யடைந்தவளாக) இருப்பேன்? (அதாவது, வித்த ஸாதனமிருந்தால் நான் அதின் ஸாதனத்தினால் யாகாதி கர்மங்களைச்செய்து ஏன் அமிருதத்வத்தை அடையக்கூடாது? நீரோ அமிருதத்வத்தை யடைகிற நிமித்தம் வித்தத்தை விடவேண்டுமென்று சொல்லுகிறீரே! அதென்ன?)".

யாஞ்யவல்க்யர்—"அப்படியல்ல; உபகரணங்கள் உள்ளவர்கள் ஜீவனம் செய்கிறதுபோல், உனக்கு சொத்திருந்தால் நீயும் பிழைத்துக்கொண்டு சுகமாகவிருக்க வேண்டியதர்க்காக நான் சொன்னேன். வித்த ஸாதனத்தினால் ஒருபொழுதும் அமிருதத்வம் கிடைக்கமாட்டாது".

3. மைத்ரேயி—அப்படியானால் எதினால் எனக்கு அமிருதத்வம் கிடைக்கமாட்டாதோ அதைக்கொண்டு நான் என்னசெய்யப் போகிறேன். ஆதலால் எனக்கு வித்தம் வேண்டியதில்லை. எதினால் அமிருதத்துவத்தை நான் அடையக்கூடுமோ அதை எனக்கு சொல்லும்.

4. யாஞ்யவல்க்யர்—ஹே! பிரியே! நீ நல்ல வார்த்தை சொல்லுகிறாய். இங்குவா; உட்காரு. நான் உனக்கு சொல்லுகிறேன். சொல்லுகிறதை கவனமாய் கேள்.

5. பிரியே! ஒரு பத்னி தன் பதியின் பிரயோஜனத்திற்காகவா அவனிடம் பிரியமாக விருக்கிறாள்? அல்ல; தன் ஆத்ம பிரயோஜனத்திற்காக பிரியமாயிருக்கிறாள். அங்ஙனமே ஒரு பதி தன் பத்னியிடத்தில்; ஒரு தகப்பன் தன் பிள்ளைகளிடத்தில்; அப்படியே ஒருவன் வித்தத்தினிடத்தில்; அப்படியே ஒருவன் பிராமணனிடத்தில்; அப்படியே ஒருவன் க்ஷத்திரியனிடத்தில்; அப்படியே ஒருவன் உலகத்தார்களிடத்தில்; அப்படியே ஒருவன் தேவர்களிடத்தில்; அப்படியே ஒருவன் பூதங்களிடத்தில்; அப்படியே ஒருவன் எல்லாவற்றினிடத்திலும்; (இவ்விதமாக எல்லாம் தன் ஆத்மாவின்பொருட்டு நடக்கிறது; ஆனதால் ஆத்மாதான் பெரிது). அது (ஆத்மா) பார்க்கப்படத்தக்கது; கேட்கப்படத்தக்கது; நினைக்கப்படத்தக்கது; தியானம் செய்யப்படத்தக்கது; ஆத்மாவின் தர்சனம், சிரவணம், நினைப்பு, தியானம் இவைகளால் எல்லாம் அறியப்பட்டுப்போகும்.

6. (ஆத்மா அறியப்பட்டால் எல்லாம் அறியப்பட்டுப்போகும் மென்பது குற்றமல்ல; ஆத்மாவிற்கு அன்னியமாய் ஒன்றும் கிடையாது; எல்லாம் ஆத்மாவாகவே யிருக்கிறது). ஒரு பிராமணனை யாதொருவன் தன் ஆத்மாவுக்கு வேறாக அறிகிறானோ அவனை பிராமணன் தள்ளிவிடுவான் (மதிக்கமாட்டான்; ஒத்தாசை செய்யமாட்டான்; தன்னை சரியாக அறியவில்லையென்று பிரஸாதம் செய்யமாட்டன்). அப்படியே க்ஷத்திரியன், உலகங்கள், தேவர்கள், பூதங்கள், எல்லாம்-இவைகளை யாதொருவன் தன்னாத்மாவுக்கு (பிரமத்தற்கு) வேறாக அறிகிறானோ அவனை இவைகள் அலக்ஷியம் செய்துவிடுவார்கள். ஆதலால் இவைகளெல்லாம் ஆத்மாவே.

7. (எல்லாம் ஆத்மாவென்று எப்படி கிரகிக்க கூடுமெனில், அதற்கு திருஷ்டாந்தங்கள் சொல்லப்படுகின்றன). (ஒரு திருஷ்டாந்தமாவது) எப்படி ஒரு பெரிய பேரீ வாத்திய சப்தமானது வெளிப்பட்ட இதர சப்தங்களை கேட்கப்படவொட்டாமல், தனக்குள்ளடக்கிக்கொண்டு, தான் மாத்திரம் மேல்கொண்டு கேட்கப்படுகிறதோ; பேரீ சப்தத்தில் அல்லது பேரீ அடியில் இதர சப்

தங்கள் உள்ளடங்கிப் போகிறதோ (அப்படிப்போல் ஸ்வப்ந ஜாகிரத தெசைகளில் பிரஞானத்தைக் காட்டிலும் வேறொன்றுமில்லை; அதுவே மேல்கொண்டு இருக்கிறது; அதாவது, இது இல்லாவிடில் மைற்ற இந்திரியங்களுக்காவது, அவையவங்களுக்காவது தொழில் இல்லை. இதுவே எல்லாமாக விருக்கிறது).

8. (இங்ஙனமே வேறு திருஷ்டாந்தம், சங்கு சப்தம்). சங்கு சப்த விஷயத்தில் இதர சப்தங்கள் அடைங்கிப் போகின்றன.

9. (இங்ஙனமே வீணாவாத்ய சப்தம்). வீணாவாத்ய சப்தத்திலும் வீணையின் உயர்ந்து பேசுகிற ஒத்து ஸ்வரம் மற்றுமுள்ள சிறிய ஸ்வரங்களை உள்ளடக்கிக் கொள்ளுகின்றது.

10. (எப்படி அக்னியிலிருந்து பொறி, புகை, தணல், ஜ்வாலை என்ற பெயர் உள்ளதுகளாக கிளம்புகின்றனவோ; இவைகள் வெளிக் கிளம்புமுன் அக்னி ஒன்றாகவே இருக்கிறதோ, அப்படிப் போல் ஏகமாயும், பிரஞான கனமாயுமிருக்கிற பிரமத்தினிடமிருந்து நாம ரூப விகிருதமாயிருக்கிற ஜகத்தானது உண்டாகிறது. என்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

மூட்டப்பட்ட ஈற வொருள்ள அக்னியிடமிருந்து பலவிதமான பொகைகள் எப்படி வெளிப்படுகின்றனவோ அப்படி இந்த மகாபூதமாகிய பரமாத்மாவினிடமிருந்தும் மூச்சுக் காற்றுபோல் (அதாவது, யாதொரு பிரயத்னமன்றி, தனக்குத்தானே சுவாஸம் வருகிறதுபோல்) நான்கு வேதங்களும், இதிஹாஸமும், புராணங்களும், வித்யையும், உபநிஷத்துக்களும், ச்லோகங்களும், மந்திரங்களும், வியாக்யானங்களும் வெளிக்கிளம்பின. இவைகள் அவருடைய ச்வாஸங்கள்.

11. (அந்த பிரஞான கனமாகிய பிரமத்திற்கு வேறாக ஒன்றுமில்லை; ஆனதால் ஜகத்தும் பிரமமயந்தானென்பது மேற்கண்டபடி உத்பத்தி ஸ்திதி காலங்களில் மட்டும்தான் தெரியப்படுமென்று சொல்லக்கூடாது, பிரளயகாலத்தில்கூட அப்படியே என்பதற்கு சொல்லப்படுகிறது).

நதிகள், வாபி, கூபம், தடாகமுதலிய ஜலங்களுக்கெல்லாம் எப்படி சமுத்திரம் ஒன்றே இருப்பிடமோ (அதாவது, இந்த ஜலங்களெல்லாம் சமுத்திரத்தில் சேர்ந்து, தங்கள் நாமரூபங்களை விட்டு, பிரிவு படாமல் கலந்து ஒன்றாகிவிடுகின்றனவோ); எல்லா ஸ்பர்சங்களுக்கும் த்வக்கும், எல்லா ரஸங்களுக்கு நாக்கும், எல்லா கெந்தங்களுக்கு மூக்கும், எல்லா ரூபங்களுக்கு நேத்திரமும், எல்லா சப்தங்களுக்கு காதுகளும், எல்லா ஸங்கல்பங்களுக்கு மனதும், எல்லா வித்தைகளுக்கு ஹிருதயமும், எல்லா கர்மங்களுக்கு கைகளும், எல்லா ஆனந்தங்களுக்கு உபஸ்தமும், எல்லா விஸர்கங்களுக்கு பாயுவும், எல்லா மார்க்கங்களுக்கு கால்களும், எல்லா வேதங்களுக்கு வாக்கும் எப்படி இருப்பிடமாயிருக்கின்றனவோ; (அதாவது, அந்தந்த தத்வமில்லாவிடில் அதனின் விஷயங்கள் எவ்விதம் கிரகிக்கப்பட முடியாதோ, அப்படிப்போல் இந்த நாமரூப ஆத்மகமாயிருக்கிற ஜகத் பிரளயகாலத்தில் அந்த பிரஞ்ஞானகனமாகிய பிரமத்துடன் சேர்ந்து ஒன்றாகப்போகிறது; ஆதலால் ஜகத்திற்கு இருப்பிடம் பிரமமே).

12. (இந்த சங்கதியை குறித்து இன்னும் விசேஷமாக சொல்லப்படுகிறது).

எப்படி ஜலத்தில் போடப்பட்ட உப்புகட்டியானது ஜலமாகவே ஆகிவிடுகிறதோ; அதை மறுபடியும் ஜலத்திலிருந்து உப்பாக எடுக்க எப்படி முடியவில்லையோ; அந்த ஜலத்தில் எந்த எந்த இடத்திலிருந்து எடுத்து ருசி பார்த்தாலும் அதெல்லாம் எப்படி உப்பாகவே இருக்கிறதோ, அப்படிப்போல், ஏ! மைத்ரேயீ! கேள்! மகத் பூதமாயும், அனந்தமாயும், அபாரமாயும், விஞ்ஞானகனமாயுமிருக்கிற (திருஷ்டாந்தத்தில் ஜலஸ்தானீயமாகிய) பிரமத்தினிடத்தில், (உப்புக்கட்டி ஸ்தானீயமாகிற) இந்த ஜகத் லயத்தையடைகிறது. மேலும், இந்த ஸத்ய வாச்சியங்களாயிருக்கிற பஞ்ச பூதங்களினிடமிருந்து எல்லாம் உண்டாகி அதிலேயே லயிக்கின்றன; அதை யடைந்தபிறகு தன் தன் நாமரூபம் போய்விடுகிறது.

இவ்வாறு யாஞ்ய வல்கியர் மைத்ரேயிக்குச் சொன்னார்.

13. இதற்கு மைத்ரேயீ சொல்லுகிறதாவது—அந்த பிரமத்தை பிரஞானகனமென்று ஒரு பெயர்வைத்துச் சொன்னீர்கள்; அதைப்போய் அடைந்தால், பெயர் இல்லாமற் போய்விடும் என்றும் சொன்னீர்கள்; (இவைகள் ஒன்றற்கொன்று விரோதமாகவிருக்கின்றனவே; எப்படி அக்னி, உஷ்ணமாகவும் சீதமாகவுமிருக்கும்); இந்த விஷயத்தில் எனக்கு (சரியாக) தெரியாமலிருக்கிறது; அதை தெரியவைக்கவேண்டும்.

யாஞ்ய வல்கியர்—நான் தெரியப்படாத சங்கதியை உனக்கு சொல்லவில்லையே; நான் சொல்லியிருக்கிறது விஞானத்துக்குப் போதுமே.

(நான் சொல்லியது யாதெனில், அவித்யா சம்பந்தமான பேதகொள்கை யற்றுப்போய்விட்டால், அப்பொழுது, அது நிமித்தமாயிருக்கிற பெயர் விசேஷம் நசித்துப்போகும். எப்படியெனில், ஜல உபாதியால் தோணப்படுகிற சந்திர பிரதிபிம்பம், அந்த உபாதி நீங்கிய உடன் பிரதி பிம்பம் போய்விடுகிறதோ, அப்பொழுது பிரதி பிம்பம் என்ற பெயருக்கும் நாசம் வருகிறதோ, நிஜ சந்திரன்மட்டும் மிஞ்சுகிறதோ; அப்படிப்போல், அவித்யா ஜனிதபேத கொள்கையாகிய உபாதி போய்விட்டால் ஜகத்தும், பெயரும் நாசமடைந்து, அந்த பிரஞான கனம் ஒன்றாக மிஞ்சும், என்று நான் சொன்னதற்கு தாத்பரியம்).

14. எந்த காரணத்தால் (எந்த பேத பாவமிருந்தால், அத்வைதமாயிருக்கிற பிரமத்தினிடத்தில்) த்வைதம் (அது வேறு, இது வேறு என்ற பாவம்) ஒருவனுக்கு உண்டாகிறதோ, அக்காரணத்தால் (அந்த பேத பாவமிருந்தால், அல்லது இருக்கும் வரையில்) இதரன் (அன்னியன், ஆத்மாவுக்கு வேறாக விருப்பவன்) இதர வஸ்துவை பார்க்கிறான், கேட்கிறான், மோருகிறான், பேசுகிறான், நினைக்கிறான், அறிகிறான் என்று ஏற்படுகிறது; அவனுக்கு எல்லாம் ஆத்மாவாக தோன்றி, அத்வைத ஞானம் உண்டானால், அப்பொழுது எவன், எதைக்கொண்டு, எவற்றை பார்க்கிறான், கேட்கிறான், மோறுகிறான், பேசுகிறான், நினைக்கிறான், அறிகிறான் (அதாவது, பார்க்கிறவனும் வேறில்லை; பார்க்கப்படு

கிற வஸ்துவும் வேறில்லை; எதனால் பார்க்கப்படுகிறதோ அந்த காரணமும் வேறில்லை; எல்லாம் ஒன்றாகப் போகின்றது. அப்பொழுது நாமரூபங்களுக்கு நாசம் வருகிறது).

எந்த காரணத்தைக்கொண்டு ஒருவன் இவை எல்லாவற்றையும் அறிகிறானோ, அதை எதனால் அறிகிறது. ஹே! (மைத்ரேயீ), அறிகிறவனை எதனால் அறிகிறது (அதைக்கொண்டுதான் பார்க்கவேண்டும்; வேறு ஒன்றைக் கொண்டுமல்ல; எல்லாம் ஒன்றுதான்).

பிராமணம் 5.

(அமிருதத்துவத்திற்கு ஸாதனம் ஏது என்று மைத்ரேயீயால் கேட்கப்பட்டது. அது ஸந்யாஸாங்க விஷயமாயிருக்கிற ஆத்மஞானம். ஆத்மா அறியப்பட்டால் எல்லாம் அறியப்பட்டுப் போகிறது. ஆத்மா எல்லாவற்றைவிட பிரியவஸ்து. ஆகலால், ஆத்மா பார்க்கத்தக்கது, கேட்கத்தக்கது, அறியத்தக்கது. இவையெல்லாம் ஆத்மாவேயென்று சொல்லப்பட்டது.

இதற்கு ஹேது வசனம் என்னவெனில்—எல்லாம் ஆத்மாவிடமிருந்து உண்டாகின்றன; அதனால் இருக்கின்றன; அதில் லயமடைகின்றன—என்பது. இது சரிதானோவென்று சந்தேகம் நிகழ அதை நிவர்த்திசெய்ய இந்த பிராமணம் துவக்கப்படுகிறது. எதனால் பிருதிவிமுதலிய இந்த ஜகத் வஸ்துக்கள் பரஸ்பரம், ஒன்றற்கொன்று உபகாரிய, உபகாரக பூதங்களாக விருக்கின்றனவோ; உலகத்தில் எவைகள் ஒன்றற்கொன்று உபகாரிய உபகாரகமாயிருக்கின்றனவோ, அவைகள், ஒரே காரணத்திலிருந்து உண்டாகியும் ஒரே காரணத்துடனிருந்தும், ஒரே காரணத்தில் லயமடைகிறதாயும் காணப்படுகின்றனவோ, அக்காரணத்தால் பிருதிவ்யாதி லக்ஷணமுள்ள இந்த ஜகத் அவ்விதமே இருக்கக்கூடுமாயிருக்கிறது, என்று இந்த பிராமணத்தில் சொல்லப்படும்).

1. இந்த பிருதிவி எல்லா பூதங்களுக்கும் (பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தம்) மது (தேன்) ஒப்பந்தம் இருக்கிறது; (அதாவது, ஒரு

14. இந்த ஆத்மா மது (காரிய காரண ஸங்காதமாக பரிணமித்தவனும், மனுஷியாதியாக ஆனவனும், பிரத்யக் ஆத்மாவாயும், பரமாத்மாவாயும், ஸர்வாத்மாவாயும், அமூர்த்த பிரமமாயும் இருப்பவர், மது); அத்யாத்மம், முன் சொல்லியதுபோல்.

15. அந்த ஆத்மாதான் இந்த ஆத்மா (ஜீவாத்மா); எல்லா பூதங்களுக்கும் அதிபதி, ராஜா. ஒரு வண்டி சக்கிர நாபியில் (நேமியில்) ஆரங்கள் எப்படி கோர்க்கப்பட்டிருக்கின்றனவோ அப்படிப்போல இந்த ஆத்மாவிடம் எல்லா பூதங்களும் கோர்க்கப்பட்டிருக்கின்றன.

16–17. (இந்த இரண்டும் மது பிராமணத்தைப் பற்றிய மந்திரங்கள்; வேதத்தில் பிரவர்க்கிய பிரகாணத்தில் சொல்லப்பட்ட ஒரு கதையைப் பற்றியது; அச்வினீ தேவர்களுக்கு தத்யஞ்ச் என்ற அதர்வணர் சொல்லியது).

இந்த மது வித்தைதான் அதர்வண ததீசியால் அச்வினிகளுக்கு சொல்லப்பட்டது. அச்வினிகள் செய்த (பின் கூறப்படும்) காரியத்தைப் பார்த்து வேதம் சொல்லுகிறதாவது—ஹே! ஜனங்களே! உங்கள் ஸௌகரியத்திற்காக செய்யும் கெட்ட காரியங்களை, பர்ஜன்யன் (மேகத்திலிருந்து) மழையைப்போல, வெளிப்படுத்துகிறேன். குதிரைமுகம் தரித்து அதர்வண ததீசியால் சொல்லப்பட்ட மது வித்தை இதுதான். வேதம் மறுபடி சொல்லுகிறதாவது—ஹே! அச்வினீகாள்! நீங்கள் அதர்வண ததீசியின் மேல் ஒரு குதிரை தலையை ஏற்படுத்தினீர்கள். தன் வாக்குப்படி அவர் இந்த ஆதித்ய மதுவையும், மது வித்தையையும் சொன்னார். இது வெகு ரகஸியமாய் இருக்கவேண்டியது.

18. இதுதான் அந்த மது; எதுவெனில், அச்வினீ தேவர்களுக்கு தத்யஞ் சொல்லியது; எப்படி சொன்னாரெனில்—'எது ஆதியில் இரண்டு கால் நாலு கால் ஜீவன்களை உண்டு செய்ததோ, அதே, பக்ஷியாக, லிங்க சரீரமாக ஆகி அந்த சரீரங்களில் பிரவேசம் செய்ததோ, அந்த வஸ்துவாகிய ஆத்மாவுக்குத்தான் புருஷன் என்று பெயர். (புரி தேகத்தில், சய:—இருக்கிறார்)

இவருல் ஒன்றும் உள்ளே மூடப்படாமல் இருக்கவில்லை; வெளியில் சூழப்படாமல் ஒன்றும் இருக்கவில்லை'.

19. இதுதான் அந்த மது; எதெனில், அச்வினீ தேவர்களுக்கு ததியஞ் சொல்லியது; எப்படி சொன்னூர் எனில்—'எது ஒவ்வொரு ரூபத்திலும் அந்த ரூபமாகவே இருந்துகொண்டிருக்கிறதோ இந்த இவருடைய ரூபம் அவரை தெரிவிக்கும்பொருட்டு ஏற்பட்டிருக்கிறது. (அவர் நாமரூபங்களாக ஆகாவிடில் நிருபாதிக ரூபமாயும், பிரஜ்ஞானகனமாயுமிருக்கிற அவர் எப்படி அறியப்படுவார்).

அந்த பரமேசுவரானவர் தன் மாயைகளால் (பிரஜ்ஞைகளால்) வெகு விதமான ரூபங்களை அடைகிருர். ஒரு ரதத்தில் குதிரைகள் கட்டப்பட்டிருப்பதுபோல், அவரிடத்தில் அநேகங்களாயிருக்கிற இந்திரியங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த இந்திரியங்களாகிற குதிரைகள் யாதெனில், அவைகளும் இவரே (அதாவது இவரே இந்திரிய ரூபங்களாகவுமிருக்கிருர்). அவர்தான் பிரமம், ஆதியில்லாதவர், அந்தமில்லாதவர், இவரொருவரே ஒன்றுமில்லாத தன்மையுள்ளவர்; இவருக்கு வேருக ஒன்றுமில்லை. அவர்தான் ஆத்மாவென்று சொல்லப்படுகிற பிரமம். எல்லா ஆத்மாவாகவும், எல்லாவற்றையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறவர்.

பிராமணம் 6.

இதில் மது பிராமணத்தைப்பற்றிய குரு சிஷ்ய வம்சங்கள் சொல்லப்படுகிறது. கடை குரு ஸ்வயம்பூ பிரமன், ஹிரண்யகர்பர்; (அதாவது, ஸகுண பிரமம்); இதற்குமேல் வம்சம் என்பது கிடையாது. அவருக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

மூன்றும் அத்தியாயம்.

பிராமணம் 1.

1. விதேகதேச ராஜாவாகிய ஜனகர் வெகு தக்ஷிணையுள்ள ஒரு பெரிய யஞ்ஞம் செய்தார். அதற்காக குரு தேசத்திலிருந்தும், பாஞ்சால தேசத்திலிருந்தும் பெரியோர்களான அனேக பிராமணர்கள் வந்திருந்தார்கள். இவர்களுக்குள் எவர் உத்தமமான பிரமனிஷ்ட பிராமணன் என்று அறிந்துகொள்ள ஜனகர் விருப்பமுற்றார். (அதற்காக அடியில்கண்ட ஒரு உபாயம் செய்தார்). ஆயிரம் பசுக்களை கொண்டுவந்து, ஒவ்வொன்றின் கொம்புகளிலும், கொம்பு ஒன்றுக்கு, ஐந்து, கால்பலம் தங்கம் கட்டி, ஒரு கொட்டகையில் கட்டிவைத்தார்.

2. பிறகு அந்த பிராமணர்களை பார்த்து ஜனகர் சொன்னதாவது—'ஹே! பெரியோர்களே! உங்களுக்குள் எவர் பிரமனிஷ்டராயிருக்கிறாரோ அவர் இந்த கோக்களை கொண்டு போகட்டும்' என்று. அதற்கு ஒருவரும் தான் பிரமனிஷ்டனென்று சொல்லத் துணியவில்லை. இப்படியிருக்கையில் யாஞ்ய வல்க்யர், தன் சிஷ்யனாகிய ஓர் பிரமசாரியைக் கூப்பிட்டு, 'அடே! அப்பா! இந்த மாடுகளை வீட்டிற்கு ஓட்டிக்கொண்டுபோ' வென்றார். அந்தப்படியே அவன் செய்தான். நாமெல்லோரு மிருக்கும்பொழுது யாஞ்ய வல்க்யர் மாத்திரம் எவ்விதம் தான் பிரமனிஷ்டனென்று சொல்லிக்கொள்ளலாம் என்று மைற்ற பிராமணர்களுக்கு கோபம் உண்டாயிற்று. அந்த யஞ்ஞத்தில் ஹோதாவாயிருந்த அச்வலர் என்றவர் யாஞ்ஞ்ய வல்க்யரை 'நாமெல்லோருக்குள் நீர் தான் பிரமனிஷ்டனாயிருக்கிறீரோ' வென்று கேட்டார். யாஞ்ய வல்க்யர்—பிரமனிஷ்டனின்பொருட்டு நாம் நமஸ்காரம் செய்வோம். நாம் எல்லோரும் கோகாமர்களா யிருக்கிறோம் (அங்ஙனமிருக்க பிரமனிஷ்டத்துவம் எப்படி சித்திக்கும்) என்றார். இதற்கு அச்வலர் (பரிக்ஷையாக) அவரை கேட்கத் தொடங்கினார்.

3. அச்வலர்—ஹே! யாஞ்யவல்க்யரே! இந்த யாகவஸ்துக்களெல்லாம் மிருத்யுவினால் (கர்மமாகிய மிருத்யுவால்) ஆப்தமாயும், வசீகிருதமாயும் இருக்கின்றனவே. எந்த ஸாதனத்தால் யஜமானன் (யஞ்ஞம் செய்கிறவன்) அந்த மிருத்யுவைத் தாண்டுகிறான்? யாஞ்யவல்க்யர்—ஹோதாவாகிற அக்னியால், வாக்கால்; (அதிதைவிக யஞ்ஞத்தில் ஹோதா அக்னி; அத்யாத்ம யஞ்ஞத்தில் ஹோதா வாக்; யஞ்ஞத்தில் ஹோதாவை, அக்னி ஸ்வரூபமாகவும், வாக் ஸ்வரூபமாகவும் பாவித்து யஞ்ஞத்தை நடத்தினால் மிருத்யுவை கடக்கலாம்). வாக்குத்தான் ஹோதாவும், அக்னியுமாயிருக்கிறது. இப்படி அபேதமாயறிந்துவிட்டால் அதுதான் முக்தி; (விடுதலை); அதுதான் அதிமுக்தி (மிருத்யுவை தாண்டின விடுதலை).

4. அச்வலர்— இவைகளெல்லாம் இராப்பகலாகிய காலத்தினால் (காலமென்ற மிருத்யுவால்) ஆப்தமாயும் (அளக்கப்பட்டும்) வசீகிருதமாயுமிருக்கிறது. இந்த காலத்தை எதனால் தாண்டுகிறது? யாஞ்யவல்க்யர்—அத்வர்யுவாகிற ஆதித்யனால், நேத்திரத்தால் (அதிதைவிக யஞ்ஞத்தில் ஆதித்யன் அத்வர்யு; அத்யாத்மத்தில் நேத்திரம் அத்வர்யு; இந்த பாவனையால் மிருத்யுவை கடக்கலாம்). (இப்படி அபேதமாய் யறிந்துவிட்டால்) அதுதான் முக்தி; அதுதான் அதிமுக்தி.

5. அச்வலர்—பூர்வபக்ஷம், அபரபக்ஷமென்கிற காலத்தினால் ஆப்தமாயும் வசீகிருதமாயும் இருக்கிறதே, எதனால் அந்த காலத்தை தாண்டுகிறது? யாஞ்ய வல்க்யர்—உத்காதாவென்கிற வாயுவால், பிராணனால். (இதற்கு தகுந்தபடி முன்போல் முக்தி, அதிமுக்தி).

6. அச்வலர்—அந்தரிக்ஷம் யாதொரு பிடிப்பில்லாமல் வெளியாக விருக்கிறதல்லவா! எவ்வழியால் யஜமானன் ஸ்வர்க்கத்திற்கு போகிறான்? யாஞ்ய வல்க்யர்—பிரமன் என்ற ருத்விக்காகிய சந்திரன், மனஸ் வழியாக போகிறான். (இதற்கு தக்கவாறு முன்போல் முக்தி, அதிமுக்தி). இது அதிமோக்ஷமென்றது. இனி சம்பத்துக்கள் சொல்லப்படும்.

7. அச்வலர்—இந்த யஞ்ஞத்தில் எவ்வளவு ருக்குகளால் ஹோதா ஹோமம் செய்வான்? யாஞ்யவல்க்யர்—மூன்றுகளால். அச்வலர்—அவைகள் எவை?. யாஞ்யவல்க்யர்—அநுவாக்யா; யாஜ்யா; சஸ்யா. அச்வலர்—இவைகளால் எதை ஜயிக்கிறான்? யாஞ்யவல்க்யர்—எதெது பிராணனுள்ளவைகளோ அவைகளெல்லாம் ஜயிக்கிறான்.

8. அச்வலர்—இந்த யஞ்ஞத்தில் எவ்வளவு ஆஹுதிகள் அத்வர்யு செய்கிறான்? யாஞ்யவல்க்யர்—மூன்று. அச்வலர்—அவைகள் எவை? யாஞ்யவல்க்யர்—ஜ்வலிக்கிறது; வெடிக்கிறது; பூமியில் கீழேபோகிறது. அச்வலர்—எதை இவைகளால் ஜயிக்கிறான்? யாஞ்யவல்க்யர்—முதலால் தேவலோகத்தையும், இரண்டாவதால் பிதிருலோகத்தையும், மூன்றாவதால் மனுஷ்ய லோகத்தையும் ஜயிக்கிறான்.

9. அச்வலர்—இந்த யஞ்ஞத்தை எவ்வளவு தேவதைகளால் பிரமன் என்ற ருத்விக், தெக்ஷண திக்கிலிருந்துகொண்டு, ரக்ஷிக்கிறார்? யாஞ்யவல்கியர்—ஒரு தேவதையால். அச்வலர்—அது யார்?. யாஞ்யவல்க்யர்—மனஸ்; மனஸ் அனந்தம், முடிவில்லாதது (அதாவது, மனஸின் விர்த்திகள் முடிவில்லாதது; அனேகம்). அந்த மனோபிமானி தேவர்களும் அனந்தர்கள். அந்த மனஸால் லோகத்தை ஜயிக்கிறான்.

10. இந்த யஞ்ஞத்தில் உத்காதா எவ்வளவு ஸ்தோத்ர வசனங்களால் ஸ்தோத்திரம் செய்கிறான்? யாஞ்யவல்க்யர்—மூன்றுகளால். அச்வலர்— அவை எவை? யாஞ்யவல்க்யர்—அநுவாச்யா; யாஜ்யா; சஸ்யா. அச்வலர்—அவைகள் எப்படிபட்டன? யாஞ்யவல்க்யர்—அத்யாத்ம விஷயத்தில் முதலாவது பிராணன், இரண்டாவது அபானவாயு, மூன்றாவது வியானவாயு. அச்வலர்—இவைகளால் எதை ஜயிக்கிறான்? யாஞ்யவல்க்யர்—முதலால் பிருதிவியையும், இரண்டாவதால் அந்தரிக்ஷத்தையும், மூன்றாவதால் ஸ்வர்க்கலோகத்தையும் ஜயிக்கிறான்.

இப்பிறகாரம் கேட்டபிறகு ஹோதாச்வலர் பேசாமலிருந்துவிட்டார்.

பிராமணம் 2.

(ஸ்வாபாவிகமாயிருக்கிற அஞ்ஞானத்தினின்றும் விடுதலைக்கு மிருத்யுவானது ஆஸ்பத மில்லாமலிருக்கிறது. அந்த மிருத்யு கிரகாதிகிரஹ லக்ஷணமுள்ளதாயிருக்கிறது. கிரகமென்றால், பிடித்துக்கொள்கிற சக்தியுள்ளது; வசப்படுத்திக்கொள்ளுகிற சக்தியுள்ளது. அதிகிரஹமென்றால், கிரஹத்தையும் பிடித்துக்கொள்ளுகிற சக்தியையுடையது. அந்த மிருத்யுவினிடமிருந்து விடுபடவேண்டியது அவசியமாயிருக்கிறது. அதற்காக மேற்படி மிருத்யுவின் லக்ஷணம் விஸ்தாரமாக சொல்லப்படுகிறது).

1. (அச்வலருக்கு பிறகு) ஆர்த்தபாகர் என்ற ருஷிக் கேள்வை கேட்கிறார். ஆர்த்தபாகர்—கிரஹங்கள் எவ்வளவு? அதிகிரஹங்கள் எவ்வளவு?. யாஞ்யவல்க்யர்—கிரஹங்கள் எட்டு; அதி கிரஹங்கள் எட்டு. ஆர்த்தபாகர்—அவை எவைகள்? எப்படிபட்டனவைகள்?.

2. யாஞ்யவல்க்யர்—பிராணன் (என்கிற கிராணேந்திரம்) கிரஹம். அது அபானவாயுவாகிய (அதாவது அபானவாயுவாகத்தால் உண்டாகிற) கந்தத்தால் கிரகிக்கப்படுகிறது. கந்தத்தால் (கந்த சக்தியால்) அன்றோ ஒருவன் எல்லாவற்றையும் முகருகிறான். (கந்த விஷயத்தால் கிராணேந்திரியத்திற்கு சக்தியுண்டாகிறது; ஆதலால் கிராணம் கந்தத்தால் கிரகிக்கப்படுகிறதாக சொல்லப்படுகிறது).

(இவ்விதமாகவே கீழ்ச்சொல்லிய மற்ற எழு கிரஹங்கள், அதி கிரஹங்களுக்கும் ஸங்கர்ப்பம் பார்த்துக் கொள்க).

3–9. வாக் இந்திரயம், கிரஹம்; நாமம் (சொல்) அதிகிரஹம். நாக்கு (ரஸனேந்திரியம்)கிரஹம்; ரஸநா (ருசி) அதிகிரஹம். நேத்திரம் கிரஹம்; ரூபம் அதிகிரஹம். சுரோத்ரம் கிரஹம்; சப்தம் அதிகிரஹம். மனஸ் கிரஹம்; காமம் (இச்சை) அதிகிரஹம். கை கிரஹம்; கர்மம் (செய்கை) அதிகிரஹம். த்வக் கிரஹம்; ஸ்பர்சம் அதிகிரஹம்.

10. ஆர்த்தபாகர்—இவைகளெல்லாம் (உண்டாகி நசிக்கின்றதெல்லாம்) மிருத்யுவிற்கு அண்ணமா யிருக்கிறதல்லவா! இந்த மிருத்யு எதற்கு அண்ணமாயிருக்கிறது? அந்த தேவதை யாது? (அதாவது மிருத்யுவிற்கு மிருத்யு வுண்டோ). யாஞ்யவல்க்யர்—எல்லாவற்றிற்கும் அக்னி மிருத்யுவாகவிருக்கிறது. ஏனெனில் அக்னி எல்லாவற்றையும் பஸ்மப்படுத்துகிறது. இதற்கு மிருத்யு ஜலமாயிருக்கிறது. ஜலத்தினால் அக்னி அணைந்துபோகிறது. இப்படிமேற்கண்ட மிருத்யுவுக்கு மிருத்யு உண்டு. (அதாவது, புருஷப்பிரயாஸம்; பிரயாஸத்தால் மிருத்யுவாகிற வாக்முதலிய இந்திரயங்களை யடக்கலாம்; அப்பொழுது மோக்ஷம் கிடைக்கும்; மிருத்யுவை ஜயிக்கலாம்).

11. ஆர்த்தபாகர்—இந்த (பிரமவித்தாகிய, முக்தனாயிருக்கிற) புருஷன் எப்பொழுது மறித்துப்போகிறானோ அப்பொழுது அவனுடைய வாகாதி பிராணன்கள் உயரகிளம்பி போகிறதுகளா, இல்லையா? யாஞ்யவல்க்யர்—இல்லை; இங்கேயே (இந்த சரீரத்திலேயே, பரமாத்மாவிடத்திலேயே) கலந்துபோகின்றன (அலைகள் ஜலத்தில் போல). அப்பொழுது மறித்துப்போனதாக எவ்விதம் சொல்லக்கூடுமெனில், அவன் மிருதனல்ல; ஆனால் துருத்திபோல் வெளிவாயுவால் பூரிக்கப்பட்டவனாகவும், உப்பிப்போனவனாகவும், சேஷ்டையன்றி படுத்துக்கொண்டிருக்கிறான்.

12. (பிராணன்கள் மாத்திரம் கலந்து போகின்றனவா, அவைகளின் பிரயோகங்களும், ஏவுகிற விஷயங்களும் கூடவா எல்லாம் கலந்து போகின்றன என்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

ஆர்த்தபாகர்—எப்பொழுது இந்த பிரமவித்தாகிய புருஷன் மறிக்கிறானோ அப்பொழுது இவனை விடாமலிருக்கிறது எது?

யாஞ்யவல்க்யர்—பெயர் மாத்திரம் எஞ்சியிருக்கிறது; மைற்றதெல்லாம் போகின்றன. பெயர் முடிவற்றது; விச்வே தேவர்களும் முடிவற்றவர்கள்; அந்த முக்தன் மேற்படி தேவதாஸ்வரூபங்களாக, கலந்துபோய், பெயரைக்கொண்டு, அனந்தமாயிருக்கிற லோகத்தை ஜயிக்கிறான்.

13. ஆர்த்தபாகர்—அவித்வான், இறந்துபோனால், அவனுடைய வாக் அக்னியையும், பிராணன் வாயுவையும், நேத்திரம் ஆதித்யனையும், மனஸ் சந்திரனையும், ச்ரோத்ரம் திக்குகளையும், சரீரம் பிருதிவியையும், ஆத்மா ஹ்ருதயாகாசத்தையும், தேக மயிர்கள் ஔஷதிகளையும், தலைமயிர்கள் மரங்களையும், லோகிதமும் ரேதஸும் ஜலத்தையும் போய் கலந்து விடுகின்றனவே! அப்பொழுது இந்த புருஷன் எவ்விடமிருக்கிறான்? எதை ஆச்ரயித்துக்கொண்டிருக்கிறான்? எதை ஆச்ரயித்து மறுபடியும் காரிய காரண ஸங்காதமாகிய தேகத்தை யடைகிறான்? யாக்ஞவல்கியர்—உனக்கு தெரியவேண்டியதை சொல்லுகிறேன்; இந்த ஜனக் கூட்டத்தில் பேசமுடியாது; தனிமையில் போவோம், வாரும்.

இவ்விதமாய் சொல்லி, இரண்டு பேர்களும் (யாக்ஞவல்க்யரும், ஆர்த்தபாகரும்) தனிமையிற் போனார்கள். அவர்கள் யோசித்தார்கள். அவர்கள் முடிவாக பேசிக்கொண்டது என்னவெனில்—கர்மத்தை ஆச்ரயித்துக் கொண்டிருக்கிறான். (அதாவது, இவனுடைய பிராணன்களெல்லாம் முன்சொன்னபடி அதில் கலந்துபோகின்றன; இவனுடைய கர்மமட்டும் எஞ்சியிருக்கிறது). அந்த கர்மத்திற்கு தக்கபடி மறுபடியும் தேகத்தை யடைகிறான்; புண்யகர்மத்தால் (சாஸ்திரோக்த நல்ல கர்மத்தால்) புண்யசாலியாகவிருந்து சுகங்களை யனுபவிக்கின்றான்; பாப கர்மங்களைச் செய்தால் பாபியாகி அநேக துக்கங்களை யடைகிறான். இந்தப்படி அவர்களிருவரும் தாங்கள் பேசிக்கொண்டிருந்தது மாத்திரமல்ல. எல்லோருக்கும் தெரியும்படி பிரசித்தமும் செய்தார்கள். இந்தப்படி பேசியதின்மேல் ஆர்த்தபாகர் ஒழிவு அடைந்தார்.

பிராமணம் 3.

(பிரதீகம்—பந்தனமென்றது கிருஹாதி கிருஹலக்ஷணமாயிருக்கிறது. அதுதான் மிருத்யுவென்று சொல்லப்படும். அதினின்று விடுதலைதான் மோக்ஷம். இது கூடும். முக்தனுக்கு ஒரு பக்கத்திலும் கதி கிடையாது. பெயர் மட்டும் மிஞ்சினவனாய், எல்லாவற்றையும் விட்டவனாய், தீபம் அணைவதுபோல் வியாபாரம் ஒடுங்கி, எங்கும் நிறைந்து, கலந்து, ஒன்றாய்போகி

ருன். முக்தனுடையவும், அமுக்தனுடையவும் காரியகரணங்கள், ஸமான மான ஸ்வகாரணத்தில் போயடைந்தபோதிலும், முக்தனுக்கு புனருத்பத்தி யில்லை; மற்றோருக்கு உண்டு. எதனுடன் சேர்ந்தால் ஸம்ஸரண முண்டா குமோ அது கர்மமென்பது நிச்சயம். அந்தக் கர்மம் க்ஷயித்தால்தான் மோக்ஷ முண்டாகும். கர்மம் இரண்டுவிதம்; புண்ணியம் பாபம்; பாபம் செய்தால், ஸ்வபாவதுக்க பகுளமுள்ள ஸ்தாவர ஜங்கமங்களிலும், நரக திர்யக் பிரேதா திகளிலும் விழுந்து துக்கத்தை யனுபவிக்கின்றான். புண்ணிய கர்மமோ சர்வ புருஷார்த்த ஸாதனமாயிருக்கிறது. ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு புண்யம் செய்கிறானோ அவனுக்கு அவ்வளவுக் கவ்வளவு பலமுண்டு. ஆனால் புண்ய கர்மத்தால் மட்டும் மோக்ஷம் கிடைக்கமாட்டாது. வித்யா ஸஹித மான கர்மத்தாலும் மோக்ஷம் கிட்டாது. கிரியா காரக பல வர்ஜிதமாயிருக் கிற வஸ்துவினிடத்தில் கர்ம வியாபாரம் செல்லாது. 'வித்யா ஸகித கர்மம், மந்திர சர்க்கிராதியுடன் கலந்த விஷதத்யாதிபோல், மோக்ஷமாகிற காரியாந் திரத்தை ஆரம்பிவிக்கும்', என்று சொல்லக்கூடாது. ஏனெனில், மோக்ஷத திற்கு ஆரம்பமென்பது இல்லை; பந்தன நாசமே மோக்ஷம்; பந்தன மென் றது அவித்யை; கர்மத்தால் அவித்யைக்கு நாச முண்டாகாது. உத்பத்தி, ஆப்தி, விகாரம், ஸம்ஸ்காரம் இவைகள் கர்ம ஸாமர்த்தியத்தால் உண்டா கின்றன. ஆதலால் மோக்ஷம் கர்மத்தின் காரியமாகாது. ஞானத்தின் காரியம் மோக்ஷமென்று உபசாரமாகச் சொல்லப்படுகிறதே தவிர, வாஸ்த வத்தில் அப்படியுமன்று. அஞானம் நீங்கினால் ஞானம்; அஞானம் ஒரு மறைவாகவிருக்கிறது; அதை நீக்கிவிட்டால் ஞானம் எப்பொழுது மிருக் கிறது; அப்படியே மோக்ஷமுமிருக்கிற. மோக்ஷத்திற்கு மறைவு அஞானத் தை தவிற வேறொன்றுமில்லை. அஞானத்தை ஞானம், விரோதியாயிருப் பதால், அடிக்கும். கர்மம் அஞானத்திற்கு விரோதியன்று; அது எவ்விதம் அஞானத்தைய் யடிக்கும்? நித்திய கர்மம் அஞானத்தை நிவர்த்தி செய்யவும் மாட்டாது; பலனை மோக்ஷமென்று சொல்லக்கூடாது; பலனுக்கு க்ஷீணம் (குறைவு) உண்டு; மோக்ஷம் அவ்வாறன்று. 'நித்திய கர்மம், மைற்ற கர் மங்களுக்கு வேறானதால், அதின் பலனும் வேறாகவிருக்கட்டும்' என்று சொல்லக்கூடாது. கர்மமென்பது ஸமம்தான். ஆதாலால், நித்ய கர்மத் திற்கு பலன் மோக்ஷமன்று. ஆனால், யாது பலன் எனில், இது ஆத்மாவை ஸம்ஸ்கரிக்கின்றது, சுத்தப்படுத்துகிறது; ஆத்மஞானத்திற்கு இவனை, பரி சுத்தம்செய்து, தயார்செய்து வைக்கின்றது. ஞானத்துடன் கூடிய நித்ய கர்மம் ஆத்மஞான உத்பத்திக்கு ஸாதனமாயிருக்கிறது. விகித கர்மங்களை செய்யாமலிருப்பதாலும், நிஷித்த கர்மங்களை செய்வதாலும், ரொம்பவும் கீழ்ப்பட்ட ஜன்மங்கள் கிடைப்பதில் ஸந்தேகமில்லை. இதற்கு வேத வர்க்

யங்கள் பிரமாணம்; அதற்கு அன்னியதா பாவம் இல்லை. கர்மத்திற்கு, ஆகையால், மோக்ஷ பலனில்லை. கர்மத்திற்கு பலன் ஸம்ஸாரமே,—என்று காண்பிக்க இந்த பிராமணம் துவக்கப்படுகிறது).

1. பிறகு, புஜ்யு: வென்ற லாஹ்யாயநி யாஞ்யவல்க்யரை (அடியில் வருமாறு) கேட்டார். 'ஹே! யாஞ்யவல்க்யரே! மத்ர தேசத்திற்கு, அத்யயனார்த்தம்போய், அவ்விடங்களில் சுற்றிக் கொண்டு வரும்பொழுது, காப்யரென்ற பதஞ்சலருடைய கிரகத் திற்கு வந்தோம். அவருடைய புத்ரீ அவ்விடம் இருந்தாள். அவள் ஒரு கந்தர்வனால் பிடிக்கப்பட்டிருந்தாள். அந்தக் கந்தர் வனை 'நீ யார்' என்று கேட்டோம். 'நான் ஆங்கிரஸன் என்ற ஸுதன்வா' என்று சொன்னான். நாங்கள் லோகங்களின் முடி வை அவனைக் கேட்டபொழுது, 'அச்வமேத யாகம் செய்தவர்கள் எங்கு இருந்தார்கள்' (அவர்கள் எங்குபோய் சேருகிறார்கள்) என்று கேட்டோம். (அவன் அதற்கு பதில்சொல்லி, எங்களுக்கு திருப்தியாகிவிட்டது). அந்தக் கேழ்வியை உம்மைக் கேட்கி றேன். உமக்கு தெரிந்ததைச் சொல்லும்'.

2. யாஞ்யவல்க்யர்—அச்வமேத யாஜிகள் எங்கே போகிறார் கள் என்பதைப்பற்றி அந்த கந்தர்வனே சொல்லியிருக்கிறானே! (நானும் சொல்லுகிறேன், கேள்). ஒரு தினத்தில் சூரியனுடைய ரதம் எவ்வளவுதூரம் போகிறதோ, அதற்குமுப்பத்திரண்டுமடங்கு விஸ்தீரணமுள்ளதாயிருக்கிறது இந்த லோகம் (விராட் சரீரமுள்ள தும், பிராணிகளுக்கு கர்மலோபயோகமுள்ளதுமான லோகம், ஸ்வர்கலோகம்). அதை மேற்படி அளவுக்கு இரண்டு மடங்கு விஸ்தீரணம் பூமி சுற்றிக்கொண்டிருக்கிறது. அந்த பூமியை மேற்படி அளவுக்கு இரண்டு மடங்கு ஸமுத்ரம் சுற்றிக்கொண் டிருக்கிறது. அவ்விடத்தில், அண்ட கபாலங்களுக்கு மத்தியில், கத்திமுனை, ஈசிறகு, இவைகளைப்போல், அதி சூக்ஷ்மமான இடை வெளியிருக்கிறது. அதின் வழியாக இந்திரன் (யாகத்தால் திரு ப்தியடைந்த ஈசுவரன்), ஒரு பக்ஷி ரூபங்கொண்டு, இந்த யாகம் செய்தவர்களை, கொண்டுபோய், வாயுதேவதையிடம் கொடுத்தார். வாயு தன்னிடமே வரவழித்துக்கொண்டார். இந்தப்படி வாயு

வையே அவர் (அந்த கந்தர்வன்) கொண்டாடினார் (சிலாகித்தார்). வாயு, வ்யஷ்டியாகவும் (தனித்தனியாகவும்), ஸமஷ்டியாகவும் (மொத்தமாகவும்) இருக்கிறார். இந்தப்படியறிந்தவன் மிருத்யுவை ஜயித்துப்போடுகிறான். இதைக்கேட்டு புஜ்யு ஒழிவடைந்தார்.

(அச்வமேதயாகம் செய்தவர்களுக்கு வாயு லோகம் கதி; மோக்ஷமில்லை).

பிராமணம் 4.

1. பிறகு, உஷஸ்தரென்ற சாக்ராயணர் யாஜ்ஞயவல்க்யரை (அடியில் வருமாறு) கேட்கிறார்.

(க்ரஹாதி க்ரஹங்களால் பிடிக்கப்பட்ட ஸம்ஸாரி என்ற ஒருவன் இருக்கிறானோ, இல்லையோ?. இருந்தால் அவன் யார்?. இதைப்பற்றி செவ்வையாக தெரியவேண்டியதற்காக இந்த கேள்வி ஏற்பட்டிருக்கிறது).

எது, ஹே! யாஜ்ஞயவல்க்யரே!, சாக்ஷாத்தாகவும் (மறைவில்லாமலும்) அபரோக்ஷத்தாகவும் (முக்கியமாயும்) இருக்கின்றதோ, எது சர்வாந்தரமாயும் (எங்கும் நிறைந்ததாயும்) இருக்கிறதோ அந்த ஆத்மா எவர்? எப்படிபட்டவர்? சொல்லுங்கள்.

யாஜ்ஞயவல்க்யர்—எந்த ஆத்மா பிராணவாயுவால் (மூக்கால்) சுவாசம் விடும்படி செய்கிறதோ, அபான, வ்யாந, உதான வாயுக்களால் அதநின் சேஷ்டைகளை நடத்தும்படி செய்கிறதோ அவர் தான் ஸர்வாந்திர ஆத்மா. (அதாவது, அந்தந்த இந்திரியத்தை தத்தம் தொழிலை நடத்தும்படி ஏவுகிறதுதான் அந்த உன்னுடைய ஆத்மாவாக விருக்கிறது; அதாவது, உன்னிடத்திலிருக்கிற ஆத்மா, ஜீவன், அதே பரமாத்மா).

2. உஷஸ்தர்—இது மாடு, இது குதிரை யென்றதுபோல் ஆத்மாவைக்குறித்துக் காட்டுவதாக பிரதிஜ்ஞை செய்துகொண்டீரே, அங்ஙனமிருக்க பிராண சேஷ்டாதி அடையாளங்களினால் மட்டும் காட்டுகிறீர்! அந்த ஸர்வாந்தர ஆத்மா எப்படிப்பட்டது செவ்வையாய் சொல்லும்.

யாஞ்யவல்க்யர்—[நான் அந்த பிரதிஞைப் பிரகாரம் நடந்தேன். ஆனால் கடம்போல் நேரில் உருப்படியாக காண்பிக்க முடியாதப்பா. ஏனெனில் அதன் ஸ்வபாவம் அப்படிப்பட்டது, விஷயீகரிக்க முடியாது; (இந்திரியத்திற்கு கோசரமல்ல). திருஷ்டி இரண்டுவிதம்; ஒன்று லௌகிக திருஷ்டி; இரண்டாவது, ஆத்மாவின் நித்ய திருஷ்டி; முதலாவது, உண்டாகும், நசிக்கும்; இரண்டாவது நித்யம், அழிவில்லாதது]. இந்த லௌகிக திருஷ்டிக்கு திருஷ்டாவாக விருப்பதை (அதாவது, இந்த திருஷ்டியின் தொழிலை எது ஏவுகிறதோ அதை) நீ பார்க்கமாட்டாய்; அப்படியே, லௌகிக சுருதிக்கு ச்ரோதாவாயிருக்கிறவரை நீ கேட்கமாட்டாய்; அப்படியே, மதிக்கு மந்தாவாயிருக்கிறவரை நீ நினைக்கமாட்டாய்; அப்படியே விஞானத்திற்கு விஞாதாவாயிருக்கிறவரை நீ அறியவுமாட்டாய்; அப்படிப்பட்டவர்தான் ஸர்வாந்தர ஆத்மா. இவரைக்காட்டிலும் அன்னியவஸ்து (இந்த கார்ய காரணாத்மமாயிருக்கிற சரீரம்) ஆர்த்தம், நாசமுள்ளது. (பிரமத்தை பிரத்யக்ஷமாய் கடாதிகள்போல் கையால் பிடித்துக் காட்டமுடியாது). இதன்மேல், உஷஸ்தர் ஒழிவடைந்தார்.

பிராமணம் 5.

(ஸம்பிரயோஜகமாயிருக்கிற பந்தம் இன்னதென்றும், அதனால் கட்டுப்பட்டவன் இன்னான் என்றும், அப்படிபட்ட ஒருவன் உண்டென்றும், அவன் தனிப்பட்டவனாக தெரியவருகிறான் என்றும் சொல்லப்பட்டது; இப்பொழுது அந்த கட்டிலே நின்றும் விடுதலைக்கு ஸாதனமாகிய ஸந்யாஸத்துடன் கூடிய ஆத்மஞானம் சொல்லப்பட வேண்டியதற்காக கஹோல பிரச்னமென்ற இந்த பிராமணம் ஆரம்பிக்கப்படுகிறது).

1. கஹோலர் என்ற கௌஷீதகேயர் யாஞ்ய வல்க்யரை கேட்கிறார். ஹே! யாஞ்யவல்கியரே! ஸாக்ஷாத்தாயும், அபரோக்ஷாத்தாயும் இருக்கிற பிரமம் எதுவோ, ஸர்வாந்தர ஆத்மா எதுவோ, அதை செவ்வையாய் சொல்லும். (அதாவது, எவரை அறிந்தால் பந்தனம் விடுபடும்?).

(முந்திய பிராமணத்தில் உஷஸ்தர் கேட்டபடியே இவரும் கேட்கிறாரே! இந்த ப்ரச்னத்திலும் அதே ஆத்மாவைப்பற்றியா அல்லது வேறு ஆத்மாவைப்பற்றியா என்று சந்தேகம்வர பாஷ்யக்காரர் நிவர்த்திசெய்கிறதாவது—ஒரே ஆத்மாவைப்பற்றிதான்; இன்னும் விசேஷித்து சொல்லப்பட வேண்டியதர்க்காக இரண்டாம் தடவை கேட்கப்படுகிறது. முதல் ப்ரச்னத்தில் ஆத்மா பத்தன் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது இரண்டாவது ப்ரச்னத்தில் அசநாயாபி பாஸாதிகளைத் தாண்டியவனென்று சொல்லப்படுகிறது. ஆனால், ஒரே ஆத்மா பத்தனையும், அதற்கு விரோதமாக அசனயாதி அதீதனையும் சொல்லப்படுகிறதெனில், அது தோஷமன்று. ஏனெனில், ஸம்ஸாரித்வம், நாமரூப விகார கார்ய காரண லக்ஷண ஸங்காதோபாதி பேத ஸம்பர்க்க ஜனித ப்ராந்தி மாத்திரமாயிருக்கிறதென்று அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, ஆத்மாவிற்கு ஸம்ஸாரித்வம், ரஜ்ஜுஸர்ப்பம்போல், தோற்றமே தவிர யதார்த்தமன்று. வஸ்து வெவ்வேறுயென்ற வ்யவஹாரமானது, பிரமஸ்வரூபத்தை தெரியவொட்டாமல் மறைத்துக்கொண்டிருக்கிற அவித்யை உள்ளவரையில் இருந்துகொண்டேயிருக்கும். ஆதலால் ஆத்மா ஒன்றேதான். லோக வ்யவஹாரகாலத்தில்மட்டும், ஜீவாத்மாவென்றும், பரமாத்மாவென்றும் சொல்லப்படுகிறது. ஆத்மா உபாதியால் பத்தன்போல் காணப்படுகிறான். அப்பொழுது அவனுக்கு ஜீவன் என்று பெயர் வ்யவஹரிக்கப்படுகிறது. உபாதி நீங்கிவிட்டால் பரமாத்மா வென்று சொல்லப்படுகிறது).

யாஞ்யவல்கியர்—உன்னிடத்திலிருக்கிற ஆத்மாவே, அவனே ஸர்வாந்திரன்.

கஹோலர்—அவர் யார்? எப்படிபட்டவர்?.

யாஞ்யவல்க்யர்—எவர், பசி, தாகம், சோகம் (துன்பம் அல்லது வ்யஸனம்), மோஹம் (தெரியாத்தனம்), ஜரை (கிழத்தனம்), மிருத்யு (மரணம், தேகத்தின்முடிவு) இவைகளையெல்லாம் கடந்து இருக்கிறாரோ அவர்தான் ஆத்மா, ஸர்வாந்தரர்.

அப்படிப்பட்ட ஆத்மாவை பிராமணர்கள் (பிரம வித்துக்கள்) அறிந்து, புத்திர ஏஷணையிலிருந்து (கல்யாணம் செய்துகொள்ளுகிற இச்சையிலிருந்தும்), வித்த ஏஷணையிலிருந்தும் (கர்மத்திற்கு ஸாதனமாகிய பணம் ஸம்பாதிக்க வேணுமென்கிற இச்சையிலிருந்தும்), லோக ஏஷணையிலிருந்தும் (அந்த கர்மத்தால் ஸ்வர்காதி லோகங்களை படையவேணுமென்ற இச்சையிலிருந்தும்) கிளம்பி, பிக்ஷை எடுத்துக்கொண்டு போகிறார்கள். (அதாவது, பிரமஞானத்திற்கு ஸாதனம், இந்த மூன்று இச்சைகளையும் விட்டுவிடுவதுதான்). இம் மூன்று இச்சைகளும் ஒன்றற்கொன்று சம்பந்தமுள்ளவை (அதாவது, ஒன்றற்கொன்று ஸாதன ஸாத்யமாயிருக்கின்றன). எது புத்ரேஷணையோ அது வித்தேஷணை. எது வித்தேஷணையோ அது லோக ஏஷணை. இந்த ஏஷணையைத் தள்ளி மற்ற இரண்டுகள் மட்டும் இருக்கின்றனவென்று சொல்லலாம்.

(ஸன்யாஸமென்றால் எல்லாவற்றையும் தள்ளக்கூடாது. பரிவிராட்டாக விருந்தாலும் அவனுக்கு வேதாத்யயனம் விதிக்கப்பட்டிருக்கிறது. அதை தள்ளிவிட்டால் அவன் சூத்ரனுக்கு ஸமானம். மேலும், பரிவிராட்டாக விருந்தபோதிலும் குருக்கள், பெரியோர்கள், அதிதிகள், ஹோமம், ஜபம், போஜனம், ஆசமனம், ஸ்வாத்யாயம் இவைகளில் யஞோபவீதியாயிருக்க வேண்டுமென்றுசொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், யஞோபவீதாதி லிங்க பரித்யாகம் செய்வது சரியேயில்லை; அது குருட்டுத்தனம். ஏஷணைகளை ஏன் விடவேண்டியதெனில்—அவைகள் அவித்யாவிஷயங்கள்; பிரமஞானம் வித்யா விஷயமாயிருக்கிறது. இருளும் வெளிச்சமும் இரண்டும் சேர்ந்து ஒரேயிடத்தில் எப்படி இருக்கமாட்டாதோ, அப்படி அவித்தையும், வித்யையும் சேரமாட்டா, ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதால். ஆதலால், அவித்யா விஷயமாயிருக்கிற ஏஷணைகளை விடவேண்டியதுதான் ஸன்யாஸம். பாரிவ்ராஜ்யாச்ரமத்திற்குகூட யஞோபவீதாதி ஸாதனங்களும், லிங்கங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் பாரி வ்ராஜ்யமே வ்யுத்தமான லக்ஷணம், ஸர்வ கர்ம ஸாதன பரித்யாக லக்ஷணம். அதை பிரமவித் அடையவேண்டும்).

ஆதலால், பிராமணன், பாண்டித்யத்தை (ஆத்மஞானத்தை) யடைந்து, (ஏஷணைகளை விட்டுவிட்டு), பால்யத்துடன் (ஆத்மஞான பலத்துடன்) இருக்கவேண்டியது. இவ்விதம் பாண்டித்யத்தையும், பலத்தையும் அடைந்தால் அவன் முனி ஆகிறான் (மனன சக்தி யுள்ளவனாகிறான்). பிறகு அமௌனத்தையும் (ஆத்ம ஞானமும், அனாத்ம பிரத்யயதிரஸ்காரமும்), மௌனத்தையும் (அனாத்ம பிரத்யயதிரஸ்காரத்தின் முடிவையும்) யடைகிறான். அப்பொழுது தான் அவனுக்கு பிராமண்யத்வம் கிடைக்கின்றது. பிறகு, அவன் எந்த நடவடிக்கைகளுடன் சேர்ந்திருந்த போதிலும் அவன் பிராமணனாகவே யிருக்கிறான். இப்படி பிரம ஸ்வரூபியாகிய பிரம வித்தைக்காட்டிலும் அன்னியமா யிருக்கப்பட்ட வஸ்துவெல்லாம் ஆர்த்தம், நாசமுற்றது. (ஆத்மாதான் நித்தியவஸ்து). இதைக் கேட்டபின்பு கஹோலர் ஒழிவடைந்தார்.

பிராமணம் 6.

(ஸாக்ஷாத்தாயும், அபரோக்ஷாத்தாயும் யிருக்கிற எந்த வஸ்து, ஸர்வாந்தரர் என்று முன் சொல்லப்பட்டதோ அந்த ஸர்வாந்தர ஆத்மாவின் ஸ்வரூபம் சொல்லவேண்டியதற்காக இந்த பிராமணம் ஆரம்பிக்கப்படுகிறது. பிருதிவி முதலான ஐந்து பூதங்களும் பகிரந்தர் பாவமாக, சூக்ஷ்ம ஸ்தூல தாரதம்ய கிறமமாக வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பூதமும் அதற்கு மேல்பட்ட பூதத்தால் வ்யாபிக்கப் பட்டதாயும், ஒவ்வொரு பூதத்திற்கும் அதற்கு மேல்பட்டது காரணமாயும், ஒவ்வொரு பூதத்தை விட அதற்கு மேல்பட்டது சூக்ஷ்மமாயும் இருக்கிறது. அதாவது, ஒவ்வொரு பூதமும் அதற்கு கீழ்பட்ட பூதத்திற்குள் அந்தர்யாமியாயிருந்து வ்யாபித்துக்கொண்டும், அதற்கு வெளியில் தனிப்பட்டு இருந்துகொண்டும் இருக்கிறது. எப்படியெனில்— பிரதிவிக்குள் ஜலம் கோர்த்துக்கொண்டு, வ்யாபித்துக்கொண்டும், சமுத்திரம் முதலியதுபோல் பூமிக்கு வெளிப்பட்டு தனிமையில் இருந்துகொண்டும் இருப்பதுபோல. இந்தப்படி மேன்மேலாக பிரமலோகம்வரை சொல்லப்படுகிற, அதாவது எதற்குமேல் ஒன்று

மில்லையோ அந்த ஸர்வாந்தரவஸ்துவாகிய, பிரமம், தனக்கு கீழ்பட்ட எல்லா பூதங்களிலும், உள்ளும் வெளியிலும் யிருந்துகொண்டு, அதாவது எல்லாமாகவும் அதுவே யிருந்துகொண்டு, இருக்கிறது. அதைத்தவிர வேறொன்றுமில்லை. மேலும், ஸர்வாந்தரமாயிருக்கிற கௌனை, அமுக்ய, ஆத்மாவான ஜீவன், ஒவ்வொரு பூதத்தையும் தள்ளிப்பார்த்து, மேலாகப்போய், அதாவது, ஸர்வ ஸம்ஸார நிர்முக்தனாய், பரபிரம வஸ்துவாகவே இருக்கிறான் என்ற அர்த்தமும் இதனால் காட்டப்படுகிறது).

1. பிறகு, கார்கியென்ற வாசக்னவீ என்ற ஸ்திரீ யாஞ்ய வல்கியரை கேட்கிறாள்-இந்த பிருதிவி ரூபமாயிருக்கிற எல்லாம் ஜலத்தில் ஓதமாயும் ப்ரோதமாயும் இருக்கிறதே (ஒரு வஸ்திரத்தில் உண்டை நூலும் பாகு நூலும் கலந்துகொண் டிருப்பது போல, பூமி, ஜலத்தில் கோர்வையடைந்திருக்கிறதே), ஜலம் எதனிடம் ஓதமாயும் ப்ரோதமாயுமிருக்கிறது? (அதாவது ஜலத்திற்கும் மேற்பட்ட சூக்ஷ்மமாயும், காரணமாயும், வ்யாபகமாயு மிருக்கப்பட்ட பூதம் யெது?).

யாஞ்யவல்க்யர்—கேள்! ஹே! கார்கி!. வாயுவில்; (அதாவது ஜலத்தைக் காட்டிலும் வாயு சூக்ஷ்மமாயும், காரணமாயும் வ்யாபகமாயுமிருக்கிறது).

(ஜலத்திற்கு அடுத்த அக்னி என் சொல்லப்பட வில்லையென்றால், அக்னிக்கு பூமி, ஜலம் இவைகளின் ஸம்பந்தமின்றி யிருப்பு இல்லாததால், அவைகளில் அடங்கி யிருக்கிறதென்று எண்ணி சொல்லப்படவில்லை).

கார்கி—எதில் வாயு ஓதமாயும் ப்ரோதமாயும் இருக்கிறது.

(இவ்வாறு ஒவ்வொரு பூதத்தைப் பற்றியும் தனித்தனி கேள்வி கேட்கப்படுகிறது. ஒருமித்து அதற்கு உத்திரங்கள் இவிடத்தில் சொல்லப்படுகின்றன).

யாஞ்யவல்க்யர்—வாயு, அந்தரிக்ஷலோகங்களிலும்; இவைகள் கந்தர்வலோகங்களிலும் (அந்தரிக்ஷத்திற்கு மேல் இருக்கிறதும் கந்தர்வாதிகள் சஞ்சாரம் செய்யும் லோகங்கள்); இவை ஆதி

த்ய லோகங்களிலும் (சூரிய மண்டலங்களிருக்கிற வெளி); இவை சந்திரலோகங்களிலும்; இவை நக்ஷத்ர லோகங்களிலும்; இவைகள் தேவ லோகங்களிலும்; இவை இந்திர லோகங்களிலும்; இவைகள் பிரஜாபதி லோகங்களிலும் (விராட் சரீராம்பக பூத லோகங்களிலும்); இவைகள் பிரமலோகங்களிலும் (அண்டங்களை படைத்த பிரமன் என்ற தேவதை யிருக்குமிடம்) ஒதமாயும், ப்ரோதமாயுமிருக்கின்றன.

கார்கி—பிரமன் லோகம் எதில் ஒதமாயும் ப்ரோதமாயு மிருக்கின்றது?

யாஞ்யவல்க்யர்—இனிமேல் கேட்கவேண்டாம்; நிறுத்திவிடு; கேட்டால் உன் தலை வெடித்துப்போகும். (இதுவரையில் நியாய பிரகாரமும், அனுமான பிரகாரமுமாய் கேட்டது சரியே. இனி ஆகமப்பிரகாரம் தான் கேட்கவேண்டும். அதாவது, இதற்கு மேல் வேதத்தில் சொல்லப்படுகிறது பிரமவஸ்து. அதை வேறு விதமாக சொல்லமுடியாது).

பிறகு கார்கி ஒழிவடைந்தாள்.

பிராமணம் 7.

(இப்பொழுது பிரமலோகத்திற்கும் அந்தரதமமாயிருக்கிற சூக்ஷ்மவஸ்து இதில் சொல்லப்படுகிறது).

1. உத்தாலகர் என்ற ஆருணி: யாஞ்யவல்க்யரை கேட்கிறார்.

மத்ர தேசத்தில், யாகத்தைபற்றிய வேதாத்யயனம் செய்யக் கருதி, நாங்கள் வஸித்துக்கொண்டிருந்தோம். பதஞ்சலரென்ற காப்யரின் கிரகங்களிலிருந்தோம். அவருக்கு ஒரு பார்யை இருந்தாள், அவள் ஒரு கந்தர்வனால் பிடிக்கப்பட்டிருந்தாள், அக்கந்தர்வனை 'நீயார்?' என்று கேட்டோம் 'நான் கபந்தன் என்ற ஆதர்வணன்' என்று சொன்னான். அவன் பதஞ்சலரையும், சிஷ்யர்களையும் பார்த்து கேட்டதாவது :— 'எந்த ஸூத்திரத்தினால் (கயிற்றால்) இந்த லோகமும் (இந்த ஜன்மமும்), பரலோகமும் (வரப்போகிற ஜன்மமும்), எல்லா பூதங்களும் கோர்த்து கட்டப்பட்

டிருக்கிறதோ, அந்த ஸூத்திரம் எது? உனக்கு தெரியுமா? வென்றார். அதற்கு பதஞ்சலர் தனக்குத் தெரியாதென்று சொன்னார். 'எவர் இந்த லோகத்தையும், பரலோகத்தையும், எல்லா பூதங்களையும், உள்ளுக்குள் ளிருந்துகொண்டு, நடத்திவைக்கிறாரோ அந்த அந்தர்யாமி எவர்?' என்று மேற்படி கந்தர்வன் மறுபடியும் கேட்க, அதற்கும் பதஞ்சலர் தெரியாதென்று சொன்னார். 'அந்த ஸூத்திரத்தையும், அந்தர்யாமியையும் எவன் அறிகிறானோ, அவன்தான் பிரமத்தையறிந்தவன், லோகங்களை யறிந்தவன், தேவர்களை யறிந்தவன், வேதங்களையறிந்தவன், பூதங்களையறிந்தவன், (தன்) ஆத்மாவை யறிந்தவன், எல்லாவற்றையுமறிந்தவன்' என்று மறுபடியும் கந்தர்வன் சொன்னான். பிறகு, நாங்கள் கேட்டுக்கொண்டதின்பேரில், அந்த ஸூத்திரத்தையும், அந்தர்யாமியையும் அவன் யெடுத்துச்சொன்னான். அப்படி நான் அறிந்து கொண்டிருக்கிறேன். அது உமக்கு தெரியாவிடில், ஹே! யாஞ்யவல்க்யரே! ராஜா கொடுத்த மாடுகளை நீர் எப்படி ஓட்டிக் கொண்டு போகக் கூடும்! உம்முடைய தலை வெடித்துப்போகும்!

யாஞ்யவல்க்யர்—அந்த ஸூத்திரத்தையும், அந்தர்யாமியையும் நான் அறிவேன்.

உத்தாலகர்—பிராகிருத மனுஷ்யன் தனக்குத் 'தெரியும், தெரியும்' என்று தன்னைப்புகழ்ந்து கொள்ளுவன்! உமக்கு தெரிந்தால் சொல்லும்!.

2\. யாஞ்யவல்க்யர்—அந்த ஸூத்திரம் வாயு தேவதை தான். வாயு தான் எல்லாவற்றையும் கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஒரு தேகத்திலிருந்து வாயு வெளியே போய்விட்டால், அவன் பிரேதமாகப் போய்விட்டான் என்றும், அவனுடைய அங்கங்கள் நழுவிப்போய் விட்டதாகவும் சொல்லுகிறார்கள்.

உத்தாலகர்—அது சரிதான்; பிறகு, அந்தர்யாமியைச் சொல்லும்.

3\. யாஞ்யவல்க்யர்—யாரொருவர் பிருதிவியில் இருக்கிறாரோ (அதாவது பிருதிவிக்குள் ளிருக்கிறாரோ), எவரை பிருதிவி

தேவதை யறியவில்லையோ, எவருக்கு பிருதிவி தேவதைக்குள்ள சரீரம் இருக்கிறதோ (அதாவது, பிருதிவி மயமாயிருக்கிறரோ), எவர் பிருதிவிக்குள்ளிருந்து அதை நியமனம் செய்கிறரோ, அவர் தான் உனக்குள்ளும், எனக்குள்ளும், எல்லோருக்குள்ளும் இருக்கிறர்; அவர்தான் அந்தர்யாமி, அமிருதர்.

4-23. (பிருதிவி விஷயத்தில் சொன்னது போல அடியில் கண்ட இருபது விஷயங்களிலும் பொருள் படுத்திக்கொள்ள வேண்டும்). அதிதைவதவிஷயங்கள்—ஜலம், அக்னி, அந்தரிக்ஷம், வாயு, ஸ்வர்க்கலோகம், ஆதித்யன், திக்குகள், சந்திரநக்ஷத்திரங்கள், ஆகாசம், (வெளி), தமஸ், தேஜஸ்; அதிபூதம்—எல்லா பூதங்கள் பிராணிகள்); இனி அத்தியாத்மம்—பிராணன், வாக், சக்ஷுஸ், சுரோத்ரம், மனஸ், த்வக், விஞானம், ரேதஸ்.

(இந்த அந்தர்யாமி) பார்க்கப்படாதவர், ஆனால் பார்க்கிறவர்; கேட்கப்படாதவர், ஆயினும் கேட்கிறவர்; நினைக்கப்படாதவர், ஆனால் நினைக்கிறவர்; அறியப்படாதவர், ஆனால் அறிகிறவர்; இவரைக்காட்டிலும் திருஷ்டா, சுரோதா, மந்தா, வேறொருவருமில்லை. இவர்தான் உன்னிடத்திலிருக்கிற ஆத்மா, அந்தர்யாமி, அமிருதர், இவரைத்தவிர மற்றதெல்லாம் அழிவுள்ளது.

பிறகு உத்தாலகர் ஒழிவடைந்தார்.

பிராமணம் 8.

1. பிறகு, வாசக்னவீ என்றவன் அவ்விடமிருந்த பிராமணர்களைப் பார்த்து சொல்லுகிறன்—ஹே! பிராமணர்களே! இந்த யாஞ்யவல்க்யரை இரண்டு கேள்விகள் கேட்கப்போகிறேன். அவைகளுக்கு இவர் உத்திரம் சொல்லிவிட்டால், பிரமத்தைப் பற்றிச்சொல்லுகிற இவரை, உங்களுக்குள் ஜயிக்கிறவர் ஒருவருமில்லை.

பிராமணர்கள்—கேள்! ஹே! கார்கி!

2. வாசக்னவீ—ஹே! யாஞ்யவல்க்யரே! உம்மை இரண்டு கேள்விகள் கேட்கப்போகிறேன்; சூரர்களான காசிராஜா அல்லது

விதேஹராஜா, தன்னுடைய அம்பில் இரண்டு பாணங்களைத் தொடுத்து விடுவதற்கு எப்படி தயாராகவிருப்பார்களோ, அப்படிப் போல் இரண்டு கேள்விகள் உம்மை கேட்கப்போகிறேன். (ஜாக்கிரதையாக உத்திரம் சொல்லும்).

யாஞ்யவல்க்யர்—கேள்! ஹே! கார்கி!

3. கார்கி கேள்வி—த்யௌ என்ற பார்க்கப்படுகிற ஆகாசத்திற்கு மேலாக எது உள்ளதோ; (அண்டகபாலதி) பூமிக்கு கீழ் எது உண்டோ; இரண்டிற்கும் மத்தியில் எதெது உளதோ; இன்னும் இருந்து, இருக்கிற, இருக்கப்போகிற எவைகள் உண்டோ அவைகள் எல்லாம் (அதாவது, இந்த ஸூத்ராத்மகமாயும், வ்யாகிருதமாயுமிருக்கிற இந்த ஜகத்தெல்லாம்) எதனிடம் ஓதமாயும், ப்ரோதமாயும் இருக்கிறது?.

4. யாஞ்யவல்க்யர்—அவ்யாகிருதமாயிருக்கிற ஆகாசத்தில் (வெட்டவெளியில்) ஓதமாயும் ப்ரோதமாயுமிருக்கிறது.

5. கார்கி—சரிதான்; இதை சொல்லிவிட்டீர். உமக்கு நமஸ்காரம். என் இரண்டாவது கேள்விக்கு உத்திரம் சொல்ல தயாராகவிரும்.

யாஞ்யவல்க்யர்—கேள்! கார்க்கி!

6. (முதல் கேள்வியை கார்க்கி உருதிப்படுத்துகிற நிமித்தம் மற்றொருதடவை கேட்கிறாள்).

7. (யாஞ்யவல்க்யர் முன்சொன்ன உத்திரம் கொடுத்தார்).

கார்க்கி.—அந்த ஆகாசம் எதில் ஓதமாயும் ப்ரோதமாயும் இருக்கிறது? (இரண்டாவது கேள்வி).

8. யாஞ்யவல்க்யர்—ஹே! கார்க்கி! நீ எதைக்குறித்து கேட்கின்றனையோ அது அக்ஷரம் (நாசமற்றது) என்று பிரமவித்துக்கள் சொல்லுகிறார்கள். அது எப்படிப்பட்டதெனில், ஸ்தூலமுமன்று; அணுவுமல்ல; குட்டையுமன்று; நெட்டையுமல்ல; சிவப்புவர்ணமுள்ளது மன்று; ஈரமுள்ளதுமன்று; வாயுவுமல்ல; ஆகாசமுமன்று; சேர்க்கையுள்ளதுமல்ல; ரஸமுள்ளதுமன்று;

கந்தமுள்ளதுமன்று; கண்ணுள்ளதுமல்ல; காதுள்ளதுமன்று; வாக்குள்ளதுமல்ல; மனதுள்ளதுமன்று; (லௌகிக) தேஜஸ் உள்ளதுமல்ல; பிராணமுள்ளதுமன்று; முகம் (த்வாரம்) உள்ளதுமல்ல; அளவற்றது; உள்ளற்றது; வெளியற்றது; அது ஒன்றையும் உண்ணுகிறதுமில்லை; ஒன்றால் உண்ணப்படுவதுமில்லை (அதாவது, யாதொரு விசேஷணத்தாலும் சொல்லப்படாத வஸ்து).

9. (இப்படி சொல்லப்படாத வஸ்துவாயிருந்தால், அது இருக்கிறது என்பது என்ன நிச்சயம்? அது யிருக்கிறதாக எதால் அறியக்கூடுமென்றால்—அனுமானப்பிரமாணத்தால், அதாவது அடையாளங்களால் அறியக்கூடுமென்பதைபற்றி இனி சொல்லப்படுகிறது).

யாஞ்யவல்க்யர்—இந்த அக்ஷர வஸ்துவின் உத்திரவினால் சூர்ய சந்திரர்கள் அவர் அவர்களின் தொழில்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். உதயாஸ்தமனங்களும், விருத்தி க்ஷயங்களுமெல்லாம், நியதமாய், நடந்துவருகின்றனவன்றோ! இது ஒரு அடையாளம். இவருடைய ஆஞையால் பூமியும், ஆகாசமும் தரிக்கப்பட்டதுகளாக விருக்கின்றன. பூமி கீழே விழாமலும், ஆகாசம் பிரியாமலும் இருக்கிறதன்றோ! இது ஒரு அடையாளம்.

இவருடைய ஆஞையால், கால அவயவங்களான நிமிஷம், முகூர்த்தம், பகல், இரவு, பக்ஷம், மாஸம், ருது, ஸம்வத்ஸரம் இவைகள், நியதமாய், அது அது வந்துகொண்டிருக்கின்றன. அந்தந்தக் காலம் அதனின் லக்ஷணப்படி இருக்கிறதன்றோ! இது ஒரு அடையாளம்.

இவருடைய ஆஞையால், நதிகளும், நதங்களும் தங்கள், தங்கள் பர்வதங்களில் நின்றும் அந்தந்த காலத்தில் பிரவாகித்துக் கொண்டிருக்கின்றன. இது ஒரு அடையாளம்.

இவருடைய ஆஞையால் தானம் கொடுப்பவர்களை மனிதர்கள் புகழுகிறார்கள். (அதாவது, தானம் கொடுக்கிறவன் பலத்தை யடைகிறான்; அந்த பலத்துடன் அவனை சேர்த்துவைக்கிறவர் ஒருவர் இருக்கிறார் என்று தோணப்படுகிறதல்லவா), அவ்விதமே,

யாகம் செய்கிறவர்களை தேவர்கள் பின்தொடருகிறார்கள். மேலும், தர்வியை பிதிருக்கள் பின்தொடருகிறார்கள். (அதாவது, தேவர்களும், பிதிருக்களும் யாக ஹோமாதிகளால் உண்டாகும் பலத்தை புஜித்து, அதனால் சந்தோஷமடைந்து மனிதர்களுக்கு சுகத்தைக் கொடுக்கிறார்கள். அந்த சுகங்களுடன் சேர்த்துவைக்கிறவர் ஒருவர் இருக்கவேண்டுமென்று தோணப்படுகிறது; மேலும், இதனால், யாக ஹோம தானாதி கர்மங்களுக்கு ஈச்வரனிடமிருந்து பலபிராப்தியுண்டென்றும், அவைகளை செய்யவேண்டுமென்றும், தேவர்களும் பிதிருக்களும் உண்டென்றும் ஏற்படுகிறது).

10. (இதைக்கொண்டு அக்ஷரவஸ்து ஒன்று இருக்கிறதென்று ஏற்படுகிறது. அவனை யறியாவிடில் ஸம்ஸாரமுண்டு; அறிந்தால் அந்த ஸம்ஸாரத்திற்குச்சேதம் (நீக்கம்) ஞாயம் என்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

யாஞ்யவல்க்யர்—இந்த அக்ஷர வஸ்துவை அறியாமல் யாவனொருவன் இவ்வுலகத்தில், அநேக வருஷகாலம், ஹோமம், யாகம், தபஸ்களைச் செய்தாலும், அதற்கு முடிவு உண்டு. (அதாவது, அந்த கர்மங்களின் பலத்தை அனுபவித்தபிறகு அந்தக் கர்மங்கள் நசித்துவிடுகின்றன; அறிந்து செய்தால் அனந்தமான பலம் கிடைக்கும்). அந்த அக்ஷர வஸ்துவை யறியாமல் எவன் இவ்வுலகத்தை விட்டுப்போகிறானோ அவன் கிருபணன். (அதாவது, அடிமைபோல் ஸம்ஸாரத்திற்குட்பட்டு அடிக்கடி ஜனனமரணத்துடன் கூட்டு அலையுவான்). அறிந்து போனால் அவன்தான் பிராமணன் (பிரமத்தை யறிந்தவன்; மோக்ஷத்தையடைந்தவன்; அவனுக்கு ஸம்ஸாரமில்லை).

11. (அந்த அக்ஷர வஸ்து அசேதனம் என்று சொல்லுவோமெனில், அது கூடாதென்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

அந்த அக்ஷரவஸ்து பார்க்கப்படாதது, (ஆனால்) அது பார்க்கும்; கேட்கப்படாதது, அது கேட்கும்; நினைக்கப்படாதது, அது நினைக்கும்; அறியப்படாதது, அது அறியும். பார்க்கிறவன் முதலா

ன்து இவரைக்காட்டிலும் வேறு இல்லை. (அதாவது எல்லாம் இவர்தான்). அப்படிப்பட்ட இந்த வஸ்துவினிடத்தில் தான் ஆகாசம் ஓதமாயும், ப்ரோதமாயுமிருக்கிறது.

12. கார்கீ—'ஹே! பிராமணர்களே! கேளுங்கள்! இந்த யாஞ்யவல்க்யரை நமஸ்காரம் செய்து அவரை விடவேண்டியது தான். இவரை உங்களுக்குள் ஜயிக்கிறவர் ஒருவருமில்லை' என்று சொல்லிவிட்டு கார்க்கி ஒழிவடைந்தாள்.

(மேல்கண்ட அந்தர்யாமி பிராமணத்தில், ஆத்மா எல்லாவற்றினிடத்திலும், சேதனுதாதுவாக அந்தர்யாமியாக விருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்றற்கொன்று ஏதாகிலும் விசேஷமுண்டா? அல்லது எல்லாவற்றினிடமும் ஸாமானியமாய் (ஸமமாய்) இருக்கிறதா? என்ற இவ்விஷயத்தில் சிலர், அந்த அக்ஷர வஸ்துவின் ஈஷத்பிரசலதாவஸ்தா அந்தர்யாமியென்றும்; அத்யந்தபிரசலதாவஸ்தா ஜீவன் என்றும்; சிலர், பிண்டம், ஜாதி, விராட், ஸூத்திரம், தைவம் என ஐந்து அவஸ்தைகள் உளதென்றும்; சிலர் மேற்படி ஐந்துடன், அவ்யாகிருதம், ஸாக்ஷி, க்ஷேத்ரஞன் என்ற மூன்றும் சேர்ந்து எட்டு அவஸ்தைகள் உளதென்றும்; சிலர் இவைகள் எல்லாம் அதனுடைய சக்திகள் என்றும்; சிலர் இவைகள் அதனுடைய விகாரமென்றும் சொல்லுகிறார்கள். இந்த கல்பனைகள் எல்லாம் கூடாது. ஆனால் பேதங்கள் எவ்விதம் உண்டாகின்றனவெனில்—உபாதிபேதத்தால் உண்டாகின்றன. உபாதியன்றி கேவலம் சுத்தமாய் இருக்கும் பொழுது ஆத்மா பரபிரமம் என்று சொல்லப்படுகிறது. நித்ய நிரதிசய ஞானசக்தி யுள்ளபோது ஈசுவரனென்று சொல்லப்படுகிறது. அவித்யா காமகர்ம விசிஷ்ட கார்யகரண உபாதியுள்ளபோது ஸம்ஸாரி யென்றும் ஜீவன் என்றும் சொல்லப்படுகிறது. அவ்வண்ணமே, அந்த ஆத்மாவே தேவதா ஜாதி பிண்ட மனுஷ்ய திர்யக் ப்ரேதாதி கார்ய கரண உபாதிகளால் அந்தந்த பெயருள்ளதாயும் அந்தந்த ரூபமுள்ளதாயு மாகின்றது).

பிராமணம் 9.

(பிருதிவி முதலியவைகளுக்கு ஒன்றிற்கொன்று மேலாக ஸூக்ஷ்மதாரதம்ய க்ரமமாக ஓதப்ரோத பாவமும்; பிரமத்திற்கு ஸர்வாந்தரத்வமும்; அப்பிரமத்திற்கு அவித்யாக்ருத விஷயங்களில் ஸூத்ரபேதங்களில் நியந்த்ருத்வமும் சொல்லப்பட்டது. வ்யாக்ருத விஷயத்தில், அடையாளம் செவ்வையாக தெரியும் என்பதுபற்றி, அந்த பிரமத்தின் ஸாக்ஷாத் அபரோக்ஷத்வமானது, நியந்தவ்ய தேவதாபேத ஸங்கோசமூலமாய் அறியப்படுகின்றது என்று இந்த சாகல்யபிராமணம் ஆரம்பிக்கப்படுகிறது).

1. பிறகு, விதக்தர் என்ற சாகல்யர் யாஞ்யவல்க்யரை கேட்கிறார்—'தேவர்கள் எவ்வளவு பெயர்கள்?'

யாஞ்யவல்க்யர்—வைச்வதேவ மென்ற யாகமந்திரங்களில், நிவித் தென்று ஒரு மந்திரமிருக்கிறது. அதில் எவ்வளவு சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவு உள.

சாகல்யர்—எவ்வளவு சொல்லும் ?

யாஞ்யவல்க்யர்—மூன்றும் மூன்று நூறும்; மூன்றும் மூன்று ஆயிரமும்; (இன்னமும் எண்ணிக்கையை குறுக்கி கேட்க கேட்க) 33-6-3-2-1½-1 தேவர்கள்.

சாகல்யர்—303 உம், 3003 உம் என்று சொன்னீர்களே, அவர்கள் யெவர்கள் ?

2. யாஞ்யவல்க்யர்—இவர்கள் தேவர்கள் அன்று; சரியான தொகை 83 தேவர்கள்தான். இவர்களின் விபூதிகள் (மகிமைகள்) தான் மேற்சொன்ன 303 உம், 3003 உம், (மூலத்தில் கேள்வி உத்திரங்களாக விருந்தாலும் இவ்விடத்தில் முக்ய பொருள்மாத்திரம் எழுதப்படுகிறது). 33 தேவர்கள் யாரெனில், 8 வஸுக்கள், 11 ருத்ரர்கள்; 12 ஆதித்யர்கள்; 1 இந்திரன்; 1 பிரஜாபதி; ஆக 33 தேவர்கள்.

3. 8 வஸுக்களாவன. அக்னி, பிருதிவி, வாயு, அந்தரிக்ஷம், ஆதித்யன், த்யௌ (ஸ்வர்க்கம்), சந்திரன், நக்ஷத்ரங்கள்—

ஆக 8 வஸுக்கள். பிராணிகளின் கர்மபலத்திற்கு தக்கபடி, கார்யகரண ஸங்காத ரூபமாக. (சரீர இந்திரிய ஸமுதாய ஆகாரமாக), தாங்களே பரிணமித்துக்கொண்டு, இந்த ஜகத்தை ஆச்ரயித்துக்கொண்டும், அதை பிழைத்திருக்கும்படி செய்வதால் இவைகளுக்கு வஸுக்கள் என்ற பெயர் ஏற்பட்டது.

4. ருத்ரர்கள் 11—கர்ம, ஞான இந்திரியங்கள் 10; ஆத்மாவென்ற மனஸ் 1, ஆக 11 ருத்ரர்கள். இவர்கள் சரீரத்தைவிட்டு போகும்பொழுது, மரித்துப்போனவனைச் சார்ந்தவர்களை அழும்படி செய்வதால் இவர்களுக்கு ருத்திரர்கள் என்ற பெயர் கிடைத்தது.

5. ஆதித்யர்கள் 12-ஒரு வருஷத்தின் அவயவங்களான 12 மாதங்களும், 12 ஆதித்யர்கள். இவர்கள், அடிக்கடி புரண்டு வந்துகொண்டு, பிராணிகளின் ஆயுளையும், கர்ம பலத்தையும் கிரகித்துக்கொண்டு போவதால் இவைகளுக்கு ஆதித்யர்கள் என்ற பெயர் கிடைத்தது.

6. இந்திரனென்பது மேகம்; அதாவது, இடி; வஜ்ரம், வீர்யம், பலம்; (அதாவது பிராணிகளை எது பயப்படுத்துகிறதோ, ஹிம்சிக்கின்றதோ அதுதான்).

பிரஜாபதி யென்பது யஞ்யம்; அதாவது யஞ்யபசு; யஞ்சம் பசு ஸாதனத்வமானதால் பசுவென்று சொல்லப்படுகிறது.

7. 6 தேவர்கள் எவர்கள்? அக்னி, பிருதிவி, வாயு, அந்தரிக்ஷம், ஆதித்யன், த்யௌ:, இவை ஆறுதான்; மற்றதேவர்களெல்லாம் இந்த ஆறுக்குள் அந்தர்பாவமாயிருக்கிறார்கள்.

8. 3 தேவர்கள் எவர்கள்? இந்த மூன்று உலகங்களும் தான்; (அதாவது) பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம். பிருதிவியும் அக்னியும் சேர்ந்து முதலாவது; அந்தரிக்ஷமும் வாயுவும் சேர்ந்து இரண்டாவது, ஸ்வர்க்கமும் ஆதித்யனும் சேர்ந்து மூன்றாவது. இந்த மூன்றிற்குள் எல்லாம் அடங்கியுள்ளது.

2 தேவர்கள் எவர்கள்? அன்னமும் பிராணனும்; இவைகளுக்குள் எல்லாம் அடக்கம். $1\frac{1}{2}$ தேவன் எவர்? வாயுதான்.

9. வாயு ஒன்றாயிருக்கும்பொழுது எவ்விதம் $1\frac{1}{2}$ யென்று சொல்லப்படுகிறதெனில்—இந்த வாயுவிருந்தால் எல்லாம் விருத்தி யடைகிறது; அதனால் $1\frac{1}{2}$ பங்குள்ளதென்று சொல்லப்படுகிறது.

1 தேவன் எவன்? பிராணன்; இதை 'த்யத்' என்றும் சொல்லுகிறார்கள். இதுதான் ஸர்வ தேவதாத்மகமாயிருக்கிற பிரமம்; இந்தப்பிரகாரம் இது ஒன்றாகவும், பலதாகவுமிருக்கிறது.

10. (இப்பொழுது அந்த பிராணனாகிற பிரமம் 8 விதமாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது). எவருக்கு பிருதிவி சரீரமாகவும், அக்னி லோகமாகவும் (பார்வை, நேத்திரம்), ஜ்யோதிஸ் மனஸாகவும் இருக்கின்றதோ; அந்தபுருஷனை, எல்லா ஆத்மாக்களுக்கும் பரமான (மேலான) அயநம் (ஆச்ரய ஸ்தானம்) என்று எவன் அறிகிறானே அவன் தான் (ஸத்யத்தை) யறிந்தவனென்று சொல்லப்படுவான்.

சாகல்யர்—(என்ன! யாஞ்ஞவல்கயரே தெரியாமல் இருக்கும் பொழுது, மிகவும் தெரிந்ததுபோல் சொல்லுகிறீர்). எவரை, எல்லா ஆத்மாக்களுக்கும் பராயணமாயிருக்கிறதாக சொல்லுகிறீரோ அவரை அப்படிபட்டவர் என்று நான் அறிவேன். அப்படி சொல்வது போதாது. இன்னும் எப்படிபட்டவர்? சொல்லும்!

யாஞ்யவல்க்யர்—அவர் சாரீரபுருஷன்; (பார்த்திவ அம்சன்); இன்னும் என்ன விசேஷமிருக்கிறதென்று கேளும் வேண்டுமாயின்.

சாகல்யா—அந்த சாரீர தேவனுக்கு தேவதை எது? (அதாவது எதினின்று அது உண்டாயிற்று, வெளிக்கிளம்பிற்று).

யாஞ்யவல்க்யர்—அந்த தேவதை அமிருதம். (அதாவது, புஜிக்கப்பட்ட அன்னத்தின் ரஸம்; அந்த ரஸத்தால், மாதாவிடம் லோஹிதம் உண்டாகிறது; அது, த்வக், மாம்ஸ, ருதிரரூபமாக விருக்கிறது; அந்த அன்ன ரஸத்தால் பிதாவிடத்தில் சுக்லமுண்டாகிறது; அது, அஸ்தி, மஜ்ஜை, சுக்லரூபமாக விருக்கிறது; அதுதான் விதை; இந்த சுக்லமும் சோணிதமும் சேர்ந்து சிசு உண்டாகிறது, பார்த்திவாம்சம் பிராணன் உண்டாகிறான்).

11. (இனி சொல்லப்படப்போகிற ஏழுவித பிராணன் விஷயத்தில், மூலத்தில் ஸம்பாஷணை ரூபமாக விருக்கிறது. இதில் விசேஷங்கள் மட்டும் எடுத்துக்காண்பிக்கப்படுகின்றன).

கர்மம் (ஸ்திரீ இச்சை) சரீரம்; ஹிருதயம் (புத்தி) பார்வை; ஜோதிஸ் மனஸ்—இது காமமயபுருஷன்; ஸ்திரீ தேவதா.

(எட்டு விதத்திற்கும் ஜோதிஸ் மனஸானதால் இனி சொல்லப்படும் ஏழுடனும் சேர்த்துக்கொள்க).

12. ரூபங்கள் (வெளுமை, கருப்பு முதலிய ஸாதாரணரூபங்கள்) சரீரம்; சக்ஷுஸ் பார்வை;—இது ஆதித்ய புருஷன்; ஸத்யம் (சக்ஷுஸ்) தேவதா.

13. ஆகாசம் சரீரம்; சுரோத்திரம் பார்வை; இது பிராதிசுருத்க புருஷன் (கேட்டதற்கு மறுமொழி சொல்லுங்காலத்தில் அதிக கவனமாய் காதுகொடுத்து கேட்கப்படுகிறது; சுரோத்ரத்திற்கு பிராதிசுருத்கம் என்று சொல்லப்படுகிறது). திக்கு தேவதை.

14. தமஸ் (இருள்) சரீரம்; ஹிருதயம் பார்வை; இது சாயாமயபுருஷன்; மிருத்யு (மரணம்) தேவதை.

15. ரூபங்கள் (பிரகாசங்களான ரூபங்கள்) சரீரம்; சக்ஷுஸ் பார்வை; இது ஆதர்சேபுருஷன் (பிரதிபிம்பபுருஷன்); அஸு: (பிராணன்) தேவதை.

16. ஜலம் சரீரம்; ஹிருதயம் பார்வை; இது அப்ஸுபுருஷன்; வருணன் தேவதை.

17. ரேதஸ் சரீரம்; ஹிருதயம் பார்வை; இது புத்ரமய புருஷன்; பிரஜாபதி (பிதா) தேவதை.

18. (பிராணன் எட்டு விதமாகவும், ஒவ்வொன்றையும் தேவ, லோக, புருஷன் என்று மூன்றுவிதங்களாகவும் பிரித்து, உபாஸநார்த்தம் சொல்லப்பட்டது. இப்பொழுது திக்கு விபாகமாக, ஐந்துவிதமாக பிரிக்கப்பட்ட பிராணனுக்கு ஆத்மாவிடம் உபஸம்ஹாரம் சொல்லப்படுகிறது).

யாஞ்யவல்க்யர்—ஹே! சாகல்யா! இந்த பிராமணர்கள் அணைந்துபோன நெருப்புத்தணல் உள்ள இடமாக உன்னை நினைக்கிறார்கள் (அதாவது, என்னால் தகிக்கப்பட்டவனாக, என்னால் ஜயிக்கப்பட்டவனாக, தாங்கள் பயந்துகொண்டு நினைக்கிறார்கள். அது உனக்குத் தெரியவில்லை).

19. சாகல்யர்—நீர் என்ன இந்த பிராமணர்களைபற்றி அதிகமாய்பேசுகிறீர். நீர் எந்த (எப்படிப்பட்ட) பிரமத்தை யறிந்து இவ்விதம் பேசுகிறீர்?

யாஞ்யவல்க்யர்—தேவர்களுடனும், அதின் பிரதிஷ்டைகளுடனுமிருக்கின்ற திக்குகளை யறிந்திருக்கிறேன் (அதாவது, திக்கு விஷயமா யிருக்கிற பிரம விஞானம் எனக்குத் தெரியும்; நானே அந்த திக்கு பிரமமாயிருக்கிறேன்).

சாகல்யர்—அப்படி உமக்கு தெரிந்தால் சொல்லும்.

20. சாகல்யர்—இந்தக் கிழக்கு திக்கில் எந்த தேவதை யிருக்கிறார்?

யாஞ்யவல்க்யர்—ஆதித்யதேவதை.

சாகல்யர்—அந்த ஆதித்யன் எதில் பிரதிஷ்டிதனாயிருக்கிறான்?

யாஞ்யவல்க்யர்—அத்யாத்மமாயிருக்கிற கண்ணினிடமிருந்து ஆதித்யன் உண்டாகிறான்.

சாகல்யர்—அந்தக் கண் எதில் பிரதிஷ்டிதமாயிருக்கிறது?

யாஞ்யவல்க்யர்—ரூபங்களில்; (சக்ஷுஸ் ரூபாத்மகமாயிருக்கிறது). கண்ணால் ரூபங்களைப் பார்க்கிறான்.

சாகல்யர்—ரூபங்கள் எதில் பிரதிஷ்டிதமா யிருக்கின்றன?

யாஞ்யவல்க்யர்—ஹிருதயத்தில்; (புத்தி மனஸ் இவைகளில்). புத்தியால் ரூபங்களை தெரிந்துகொள்கிறார்கள். புத்தியால் ரூபஸ்மரணம் உண்டாகிறது. (அதாவது, நேத்திரத்துடன் மனஸ்கூடச் சேராவிடில் நேத்திரம் பார்க்கமாட்டாது).

சாகல்யர்—இது இப்படி யிருக்கட்டும்.

21. (இனி சொல்லப்போகிற நான்கு திக்குகள் விஷயத்திலும் மூலத்தில் முன்போல் ஸம்பாஷணையுள்ளது. இதில் விசேஷங்கள்மாத்திரம் எழுதப்படுகிறது).

தெற்குதிக்கு—யமன் தேவதை; யமன் யஞ்யத்தில் பிரதிஷ்டிதன் (யஞ்யத்தால், கர்மத்தால், யமன், மரணதேவதை ஸம்பவிக்கிறது); யஞ்யம் தக்ஷிணையில் பிரதிஷ்டிதம் (தக்ஷிணையால் யஞ்யம் முடிவுபெறுகிறது); இது சிரத்தையில் (சிரத்தையிருந்தால்தான் தக்ஷிணை கொடுக்கப்படும்). இது ஹிருதயத்தில் பிரதிஷ்டிதம்.

22. மேற்குதிக்கு—வருணதேவதை; இது ஜலத்திலும், ஜலம் ரேதஸிலும், ரேதஸ் ஹிருதயத்திலும் பிரதிஷ்டிதங்கள்.

23. வடக்குதிக்கு—ஸோமதேவதை (சந்திரனும், ஸோமலதையும் சேர்ந்தது); இது தீக்ஷையிலும் (யாகதீக்ஷைசெய்துகொண்டவன் தான் ஸோமலதைக்கு அதிகாரி), தீக்ஷை விஷயத்திலும், விஷயம் ஹிருதயத்திலும் பிரதிஷ்டிதங்கள்.

24. துருவதிக்கு (மேருவுக்கு மேலாகவிருக்கிறதும், எப்பொதும் பிரகாசமுள்ளதுமான திக்கு)—அக்னி தேவதை; இது வாக்கிலும், வாக்கு ஹிருதயத்திலும் பிரதிஷ்டிதங்கள்.

சாகல்யர்—ஹிருதயம் எதில் பிரதிஷ்டிதமாயிருக்கிறது?

25. ஹிருதயம் நம்முடைய சரீரத்தைவிட வேறு இடத்தில் இருக்கிறதென்று நீ நினைத்தால் உன் சரீரத்தை நாய்களும், பக்ஷிகளும் கொத்திதின்னும். (அதாவது ஹிருதயம் சரீரத்தில் பிரதிஷ்டிதம்).

26. சாகல்யர்—நீயும் (உன் சரீரமும்), ஆத்மாவும் எதில் பிரதிஷ்டிதங்களாயிருக்கிறது?

யாஞ்யவல்க்யர்—பிராணவாயுவில்; இது அபானவாயுவில்; இது வ்யானவாயுவில்; இது உதானவாயுவில்; இது ஸமானவாயுவில்; அதுதான் பிர்மம்; நேதிநேதி என்று நிர்தேசம் செய்யப்பட்டிருக்கிறவர்; இந்திரியங்களால் கிர்கிக்கப்படாதவர்; சித

றிப்போகாதவர்; ஒன்றிலும் சேராதவர்; ஒன்றிலும் கட்டுப்படாதவர்; நாசமில்லாதவர்.

இந்த எட்டு ஆயதனங்கள், எட்டு லோகங்கள், எட்டு தேவர்கள், எட்டு புருஷர்கள் உளதோ, இந்த புருஷர்களை எவர், நிச்சயமாய் அவகாசப்படுத்தி, தன் ஆத்மாவில் திரகித்துக்கொண்டு (தன்னாத்மாவாகவே யறிந்துகொண்டு), உபாதிதர்மங்களை தாண்டியிருக்கிறாரோ, அவராகிய உபநிஷத் பிரதிபாத்யனாயிருக்கிற புருஷனைப்பற்றி (ஹே! சாகல்யா) உன்னைக்கேட்கிறேன். நீ அதைச் சொல்லாவிடில் உன் தலை வெடித்துப்போகும்!.

அதை சாகல்யர் தெரிந்துகொள்ளவில்லை; அவர், தலைவெடித்து இறந்துபோனார். உடனே அவருடைய சிஷ்யர்கள், திருடர்கள் போல், அவருடைய எலும்புகளை ஸம்ஸ்காரம் செய்ய எடுத்துப்போய் விட்டார்கள்.

27. யாஞ்யவல்க்யர்—'ஹே! மகான்களான பிராமணர்களே! உங்களுக்குள் எவர் என்னை கேட்க இச்சிக்கிறாரோ, அவர், அல்லது எல்லோரும் சேர்ந்து, என்னை கேட்கட்டும். அல்லது, நான், உங்களுக்குள் எவரையாவது, அல்லது எல்லோரையும் சேர்ந்தாவது, கேட்க நீங்கள் இச்சித்தால், கேட்கிறேன்?

இதற்கு பிராமணர்கள் ஒன்றும் மறுமொழி சொல்லவில்லை.

28. ஆனதால், அடியில்கண்ட ச்லோகங்களைக் கொண்டு தானே கேட்கிறார்.

யாஞ்யவல்க்யர்—'உலகத்தில் ஒரு புருஷன், ஒரு விருக்ஷத்திற்கு ஸமானமென்பது ஸத்யமான சங்கதி; எப்படியென்றால், விருக்ஷத்தின் இலைகள் புருஷனுடைய மயிர்கள்; பட்டை, மேல் தோல்; பட்டையிலிருந்து பால் பெருகுகிறதுபோல், தோலிலிருந்து ரக்தம் பெருகுகிறது; சகலங்கள் (துண்டுகள்) மாம்ஸ கட்டிகள்; பட்டைக்குள்ளிருக்கிற வெள்ளைப்பட்டை, மேல் தோலுக்குள்ளிருக்கிற வெள்ளைத்தோல்; மரக்கட்டைகள் எலும்புகள்; கட்டைக்குள்ளிருக்கிற வைரம், மஜ்ஜை; (ஆனால் இப்பொழுது சொல்லப்படும் விஷயத்தில் வித்தியாஸமிருக்கிறது). மரம் வெட்

டுப்பட்டால், மறுபடியும் புது துளிராக துளிர்க்கிறது; அதுபோல் புருஷனிடம் நாம் பிரத்யக்ஷமாகப்பார்க்கவில்லை. ஆதலால் ஒரு கேள்வி இருக்கின்றது. (அதாவது) இறந்துபோன மனுஷியன் மறுபடியும் எங்கு இருந்து உண்டாகிறான்? இதற்கு, ரேதஸ்ஸிலிருந்து உண்டாகிறான் என்று சொல்லக்கூடாது. ஏனென்றால், உயிருள்ள மனுஷியனிடத்திலிருந்து மாத்திரம்தான் ரேதஸ் உண்டாகிறது. மேலும், விருக்ஷவிஷயத்தில், மாத்திரின்றும் புதிதாய் துளிர்க்கிறதுமாத்திரமல்ல; விதையினின்றும் விருக்ஷம் மறுபடியும் உண்டாகிறது. ஆயினும், விதை வேர்கள் சகிதமாய் விருக்ஷத்தை நாசம்செய்துவிட்டால், அப்பொழுது விருக்ஷம் மறுபடியும் உண்டாகிறதில்லை. ஆனதால், வெட்டப்பட்ட மனுஷியன் மறுபடி எதினின்று உண்டாகிறான்? தானாக பிறக்கிறான் என்றும் சொல்லக்கூடவில்லை; ஏனென்றால், நசித்தது எப்படி தானாக உண்டாகும்? அதலால், எவர் இவனை மறுபடியும் உண்டுபண்ணுகிறார்?'

(இதற்கு பிராமணர்கள் உத்திரம் சொல்லாததினால், இவர்கள் யாஞ்யவல்க்யரால் ஜயிக்கப்பட்டார்கள். உடனே ராஜா கொடுத்த பசுக்களை இவர் ஓட்டிக்கொண்டுபோய்விட்டார். இத்துடன் கதை முடிவுபெற்றது).

(பிறகு, இந்தக்கேள்விக்கு உத்திரம் வேதமே சொல்லுகிறதாவது).

"விஞானமாயும், ஆனந்தமாயுமிருக்கப்பட்டதும், பிரமமாயும், கர்மடனுக்கும் ஆத்மவித்துக்கும் பராகதியாயும் இருக்கப்பட்ட ஆத்மாதான் மறுபடியும் இவனை உண்டுபண்ணுகிறார்".

(ஆனந்த சப்தம் பிரமத்திற்கு விசேஷணமாக சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி சுருதிவாக்யங்கள் அனேகமிருக்கின்றன. அந்த ஆனந்தம் அறியப்பட்டால் அந்த விசேஷணம் சரியாகவிருக்கும். இதற்கு விரோத சுருதிகளும் அனேகம் இருக்கின்றன. எல்லாம் ஒன்று, இரண்டாவது இல்லை' யென்ற சுருதியிருக்கிறதல்லவா? அப்படி யிருந்தால் ஆனந்தம் அறியப்படுகிற விஷ

யத்தில், அறிகிறவன் ஒருவன், அறியப்படுகிற அனந்த வஸ்து ஒன்று, என இரண்டு ஏற்படுகின்றன. அப்பொழுது ஏகத்வ சுருதிக்கு விரோதம் யேற்படுகிறது. ஆதலால், இந்தவிஷயத்தில் கொஞ்சம் விசாரணை செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. மேலும், மோக்ஷத்தில் 'அறியப்படுகிற ஸாகம் இல்லை' யென்று சிலரும், 'அறியப்படுகிற நிரதிசயஸாகம் இருக்கிறது' யென்று சிலரும் சொல்லுகிறார்கள். ஏகத்வ விஷயத்தில் விக்ஞானத்திற்கு (அறிவுக்கு) உபபத்தி இல்லை யென்று சொல்லக்கூடாது; சப்தபிரமாணமிருப்பதால் கூடாது. அக்னிக்கு குளுமை குணமும், ஜலத்திற்கு உஷ்ணகுணமும் இருக்கிறதென்று ஒரு வசனமிருந்தால் அது யதார்த்தத்தில் ஸம்பவிக்குமா? ஆதலால், சப்தபிரமாணம் போதுமா? பிரத்யக்ஷ பிரமாணம் வேண்டாமா? வென்ற சந்தேகம் வர, ஸமாதானம் இருக்கிறது. பிரத்யக்ஷ பிரமாண மிருக்கிறது; எப்படியெனில், 'நான் சுகியாயிருக்கிறேன்' என்று சொல்லுகிறான். தன்னுடைய சுகத்தைத்தானே அறிகிறான். ஆதலால், பிரமவிஞானமான ஆனந்தத்தை பிரமவித் தானே அறிகிறான்; அதாவது தன்னைத்தானே அறிகிறான்).

நான்காம் அத்தியாயம்.

பிராமணம் 1.

1. ஒரு நாள் விதேக ராஜாவான ஜனகர் ஸிம்ஹாஸனத்தி லிருக்கும்போது, யாஞ்யவல்க்யர் அங்குவந்தார்.

ஜனகர்—மறுபடியும் எதற்காக வந்தீர்? இன்னும் பசுக்களை இச்சித்து கேட்கவா, அல்லது, அதி சூக்ஷ்மங்களான கேள்விகளை என்னிடம் கேட்கவா?

யாஞ்யவல்க்யர்—இரண்டு விஷயங்களுக்கு மாகத்தான்.

2. உனக்கு எவராவது ஆசாரியர் எதாவது சொல்லியிருந் தால், அதைச் சொல்லும், கேட்கிறேன்.

ஜனகர்—ஜித்வாவென்ற சைலினி, வாக்கே பிரமமென்று எனக்குச் சொன்னார்.

யாஞ்யவல்க்யர்—உபநயநம்வரையில் மாதாவால் போஷிக்கப் பட்டும், சாஸிக்கப்பட்டும், அதற்குமேல், ஸமாவர்த்தன பர்யந்தம் பிதாவால் சாஸிக்கப்பட்டும், பிறகு, ஆசாரியனால் போதிக்கப் பட்டு, இவ்விதம் கிரமமாக ஞானத்தையடைந்தவன் யறிந்து சொல்லுகிற ஒப்பந்தம் அந்த சைலினி சொன்னார். அது சரி தான்; வாக்கில்லாத ஊமையனுக்கு என்னவிருக்கிறது? (அதா வது, ஊமையனுக்கு ஞானம் உண்டாகமாட்டாது). அந்த பிர மத்திற்கு ஆயதனம் (சரீரம்) இன்னதென்றும், பிரதிஷ்டை (மூக் காலத்திலும் ஆச்ரயம்) இன்னதென்றும் அவர் சொன்னாரா?

ஜனகர்—அவர் எனக்கு சொல்லவில்லை.

யாஞ்யவல்க்யர்—அப்பொழுது, கால் பங்குதான் பிரமத்தை பற்றி சொல்லியிருக்கிறார். (முழுவதும் சொல்லவில்லை; இன்னம் முக்கால்பங்கு இருக்கிறதே. இந்த கால் பங்கு தெரிந்தால்மட்டும் போதாதே; அவ்வளவு பலன் யடையமுடியாதே).

ஜனகர்—உங்களுக்கு தெரிந்தால் சொல்லுங்கள்.

யாஞ்ஞவல்க்யர்—வாக்கு (வாய்)த்தான் ஆயதனம் (சரீரம்). ஆகாசம் (அவ்யாகிருத ஆகாசம்) பிரதிஷ்டை. இதை பிரஜ்ஞை யாக (அறிவு என்று) உபாஸிக்கவேண்டும்.

வாக்கால் நம்முடைய பந்துவென்று அறியப்படுகிறது. அது போல், நான்கு வேதங்களும், இதிஹாஸ, புராண வித்யையும், உபநிஷத்துக்கள், ச்லோகங்கள், மந்திரங்கள், இஷ்டம், ஹுதம், அசிதம், பாயிதம், இந்த ஜன்மம், வருகிற ஜன்மம் இவைகளும், எல்லா பூதங்களும் அறியப்படுகின்றன. ஆகலால் வாக்குத்தான் பரபிரமம். வாக்கு பிரமவித்தை விடுகிறதில்லை. இப்படியறிந்து வாக்கை உபாஸிக்கிறவனை எல்லா பூதங்களும் ரக்ஷிக்கின்றன. சரீரபாதனத்திற்கு பிறகு இவன் தேவனாகி தேவத்வத்தை யடைகிறான்.

ஜனகர்—இந்த வித்தையை சொன்னதர்க்காக உமக்கு யானைக்கு சமானமாயிருக்கின்ற ஆயிரம் ரிஷபங்களை கொடுக்கிறேன்.

யாஞ்ஞவல்க்யர்—சிஷ்யனை கிருதார்த்தனாக செய்யாமல் அவனிடமிருந்து ஒன்றும் பெறக்கூடாதென்று என் பிதா எண்ணியிருந்தார். (அந்தப்படி என் அபிப்பிராயமும் உளது).

3. (மூலத்தில் கீழ்சொல்லியபடி சம்பாஷணை ரூபமாய் உள்ளது. இதில் விசேஷங்கள்மாத்திரம் எழுதப்படும்).

பிராணன் (வாயு தேவதை) பிரமம்; அதற்கு பிராணவாயுவே சரீரம்; ஆகாசம் பிரதிஷ்டை; அதை பிரியவஸ்துவாக உபாஸிக்கவேண்டும். பிராணனை காப்பாற்ற எதை வேண்டுமானாலும் செய்கிறான்; அயாஜ்யனை யஜிப்பிவிக்கிறான்; வாங்கப்படாததை வாங்கிக்கொள்கிறான்; பிராணன் போய்விடுமென்று, பயந்துகொண்டு, வதாசங்கைப்படுகிறான். (மற்ற பாகம் முன்போல்).

4. (வார்ஷ்ணர்). சக்ஷுஸ் (ஆதித்திய தேவதா) பிரமம்; நேத்திரம் சரீரம்; ஆகாசம் பிரதிஷ்டை; ஸத்யவஸ்துவாக உபாஸிக்கவேண்டும்; கண்ணாலே பார்க்கிறான்; பார்க்கப்படுகிறதுதான் நிஜம் என்று சொல்லுகிறார்கள்.

5. (பாரத்வாஜர்) சுரோத்ரம் (திக் தேவதா) பிரமம்; காது சரீரம்; ஆகாசம் பிரதிஷ்டை; அனந்தமாக உபாஸிக்கவேண்டும்; திக்குகளுக்கு முடிவில்லை; ஒரு திக்கில் போகப்போக இடம் கொடுத்துக்கொண்டேயிருக்கும்.

6. (ஸத்யகாமர்) மனஸ் (சந்திரதேவதை) பிரமம்; மனஸ் சரீரம்; ஆகாசம் பிரதிஷ்டை; ஆனந்தமாக உபாஸிக்கவேண்டும்; மனஸினால் ஒரு ஸ்திரீ பிரார்த்திக்கப்படுகிறாள்; அவளிடத்தில் அனுரூபமான புத்திரன் உண்டாகிறான்; இதுதான் ஆனந்தம்.

7. (சாகல்யர்) ஹிருதயம் (பிரஜாபதி தேவதை) பிரமம்; ஹிருதயம் சரீரம்; ஆகாசம் பிரதிஷ்டை; ஸ்திதியாக உபாஸிக்க வேண்டும்; ஹிருதயத்தில் எல்லாம் அடக்கம்.

பிராமணம் 2.

1. ஜனகர் ஆஸனத்திலிருந்து எழுந்து, யாஞ்யவல்க்யரின் சமீபம்சென்று, நமஸ்காரம் செய்து, தனக்கு உபதேசம் செய்யும் படி யாஞ்யவல்க்யரைக் கேட்டார்.

யாஞ்யவல்க்யர்—உலகத்தில் ஒரு பெரிய மார்க்கத்தை, ஸ்தல வழியாக ரதமூலமாயாகிலும், அல்லது ஜலவழியாக கப்பல் மூல மாகிலும் எவ்விதம் ஒருவன் அந்த மார்க்கத்தைக்கடந்து குறிப் பிட்ட இடம் போய்ச் சேருவானோ அவ்விதம் இந்த உபநிஷத்துக் களைக்கொண்டு இந்த ஸகுண பிரமங்களை யறிந்து ஸமாஹித ஆத் மாவாக விருக்கிறீர். ஒருவன் வேதாத்யனம் செய்தவனாகவும், பூஜ்யனாகவும், பணக்காரனாகவும், உபநிஷத்துக்களை கேட்டவனாக விருந்தபோதிலும், அவனுக்கு பிரமஞானமில்லாவிடில், அவன் கிருதார்தனாகமாட்டான். ஆதலால், கேளும் இந்த தேகத்தை விட்டபிறகு ஸமாஹிதாத்மாவாயிருக்கிற நீர் எங்கே போகப்போ கிறீர்? (எந்த வஸ்துவை யடையப்போகிறீர்). உமக்குதெரியுமா?

ஜனகர்—அது எனக்கு தெரியாது.

யாஞ்யவல்க்யர்—அதை நான் சொல்லுகிறேன்.

ஜனகர்—சொல்லும்.

2. யாதொரு ஆத்மா வலது கண்ணில் அந்தர்கத புருஷனாக விருக்கிறானோ, ஆதித்யாந்தர்கத புருஷனே அவருக்கு 'இந்த:' (பிரகாசமுள்ளவர்) என்று பெயர். அவரை 'இந்திரன்' என்றும் பரோக்ஷமாகச் சொல்லுகிறார்கள். தேவர்கள் பிரத்யக்ஷ நாமகிரகணத்தை வேண்டார்கள். (ஜாகிரதா அவஸ்தையில், ஆத்மா, வைச்வாநரன் என்ற பெயருள்ளதாய், வலது கண்ணில் அந்தர்கதமாயிருக்கிறது. அதை யறிந்தவனாக, அதாக, நீர் இருக்கிறீர்).

3. இந்த இடது கண்ணில் புருஷரூபமாயிருக்கப்பட்ட வஸ்து மேற்படி வைச்வாநரனுடைய பத்னீ, விராட்ஸ்வரூபம் (அன்னம், போஜ்யவஸ்து). (அதாவது, மேற்படி வைச்வாநரன் அத்தா, இந்திரன்; மேற்படி பத்னீ, விராட், அன்னம், இந்திராணீ; இந்த இரண்டுகளும் ஸ்வப்னாவஸ்தையில் ஒன்றாய் கலந்திருக்கின்றன ; அப்பொழுது இந்த ஆத்மாவிற்கு 'தைஜஸன்' பிரகாசரூபன் என்று பெயர்). இவர்களின் ஸ்தானம் எதுவெனில், அந்தர் ஹ்ருதய ஆகாசம் (ஹிருதயத்தின் மாம்ஸ பிண்டத்தியிலிருக்கிற வெளி). இவர்களுக்கு அன்னம் எதுவென்றால், அந்தர் ஹிருதயத்திலிருக்கிற ரக்தகட்டி. (அதாவது, உண்ணப்படுகிற அன்னம் இரண்டு விதமாக பரிணமிக்கின்றது. ஸ்தூலமாயிருக்கிற ஒன்று கீழே விழுந்துவிடுகிறது; மற்றொன்று அக்னியால் பக்வப்பட்டு இரண்டு விதமாகிறது. மத்தியமரஸமானது ரக்தமுதலியது ஆகி இந்த பாஞ்ச பௌதிகமாயிருக்கிற சரீர பிண்டத்தை பலப்படுத்துகிறது. மற்றும் அதி ஸூக்ஷ்மமாயிருக்கிற ரஸம் மேற்சொன்ன ரக்த கட்டியாக பரிணமிக்கிறது. இது அன்னமாயிருக்கிறது; அதாவது, ஹிருதயத்தில் இந்திரன், இந்திராணியென்று பெயர்பெற்று இரட்டையாகவும், தைஜஸனென்று பெயருள்ளதாயும், லிங்காத்மாவாகவுமிருக்கிற ஜீவனுக்கு ஸ்திதி ஹேதுவாயிருக்கிறது. அதாவது, அன்னமில்லாவிட்டால், ஜீவன் தேகத்தில் தங்கமாட்டாது). இவர்களுக்கு 'பிராவணம்' (மறைவு, படுதா) எதுவென்றால், அந்தர் ஹிருதயத்தில் வலைபோல் எது வுண்டோ அதுதான் (அதாவது அனேக நாடிசித்திரங்கள்)? இவர்களுக்கு, (ஸ்வப்ன ஜாகிரத காலங்களில் சஞ்சரிக்கின்ற) மார்க்கங்

கள் யாதெனில்—ஹிருதய தேசத்திற்கு மேல்போகும் நாடி; எப்படி உலகத்தில் மயிர்கள் அனே ஆயிரபின்னமாகவும், சூக்ஷ்மங்களாகவுமிருக்கின்றனவோ அப்படி 'ஹிதா' வென்று பெயருள்ள அனேக சூக்ஷ்ம நாடிகள் ஹிருதயத்தினின்றும் கிளம்புகின்றன; அதில் பிரதிஷ்டிதங்களாயிருக்கின்றன. இந்த நாடிகள் வழியாக அன்னம் போகின்றது; ஆத்மாவும் போகிறார். ஆகலால், தைஜஸன், வைச்வா நரனைக்காட்டிலும் சூக்ஷ்மான்ன உபசிதனாயிருக்கிறான்.

4. (இப்படிப்பட்ட தைஜஸன், சுழுப்தியவஸ்தையில், கேவலம் பிராணனாய்மாத்திரம் இருக்கிறான்; அதாவது சேஷ்டையன்றியில் இருக்கிறான். அப்பொழுது இவனுக்கு 'பிராஞன்' என்று பெயர்).

அப்பொழுது இவனுக்கு கிழக்குதிக்கு, கிழக்கு பிராணன்கள்; அப்படியே ஒவ்வொருதிக்கு விஷயத்திலும்; எல்லாதிக்குகளும் எல்லா பிராணன்களாயிருக்கின்றன. (இந்தப் பிரகாரம், பிரமவித், ஸர்வாத்மகமாயிருக்கிற, பிராணாத்மகமாயிருக்கிற பிரஞாத்மத்வத்தையடைந்து, கடைசியில் துரீயாவஸ்தையில் பிரத்யக் ஆத்மாவாகிய) 'நேதி' 'நேதி' யென்று குறிக்கப்படுகிற பரப்பிரமதத்வத்தை யடைகிறான். அப்பொழுது அவன் செதரிப்போகிறதில்லை; சேருகிறதில்லை; வருத்தப்படுகிறதில்லை; நசிக்கிறதில்லை; அப்படிப்பட்ட அபயத்தை (ஜனன மாணாதி நிமித்த பயசூன்யமான வஸ்துவை), ஹே! ஜனக; நீ அடையப்போகிறாய், கேள்!.

ஜனகர்—எந்த அபயத்தை எங்களுக்கு அடையும்படி செய்தீரோ அந்த அபயம் உம்மையும் அடையட்டும்; உமக்கு நமஸ்காரம். இந்த உபதேசத்திற்கு நான் எதை கொடுக்கப்போகிறேன்! இதோ! இந்த விதேஹ ராஜ்யம் இருக்கிறது; நான் இருக்கிறேன் அடிமையாக (யதேஷ்டம் எதையும் எடுத்துக்கொள்ளலாம்).

பிராமணம் 3.

(பிரமத்தை தெரிந்துகொள்ளவேண்டியதற்காக, விஸ்தாரமாக, அதிக தர்க்கத்துடன், ஜாகிரத், ஸ்வப்னாதி துவாரமாய் இப்பொழுது சொல்லப்படு

கிறது. ஆத்மாவிற்கு ஸத்பாவம் இல்லையென்ற சங்கையை நிவர்த்தி செய்து, அவருக்கு வ்யதிரிக்தத்வம், சுத்தத்வம், ஸ்வம் ஜ்யோதிஷ்த்வம் அலுப்தசக்தி ஸ்வரூபத்வும், நிரதிசயானந்த ஸ்வபாவம், அத்வைதத்வம் இவைகளை யறியவேண்டியதென்று இந்த பிராமணம் ஆரம்பிக்கப்படுகிறது.

இவைகளின் விதி தெரிந்துகொள்ளவேண்டிய நிமித்தம் ஒரு கதையாக சொல்லப்படுகிறது. வித்யா ஸ்துதி நிமித்தம் வர தானாதிகள் ஸூசிக்கப்படுகின்றன).

1. யாஜ்ஞவல்க்யர் (ஒருகாலத்தில்) ஜனகரிடம் சென்றார். ராஜாவுக்கு தான் ஒன்றும் சொல்லுகிறதில்லை என்ற எண்ணத்துடன் (தன் யோக க்ஷேமார்த்தம்) போனார். (அவர் அப்படி ஸங்கல்பம் செய்துகொண்டு போனாலும், ஜனகரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் உத்திரவுசொல்லும்படி நேரிட்டது; ஏனெனில்) முந்தி அக்னி ஹோத்ர விஷயமாய் இருவருக்கும் ஸம்வாதம் நடந்தகாலத்தில் யாஜ்ஞவல்க்யர் (ஜனகரிடம் சந்தோஷப் பட்டு) ஜனகருக்கு வரம் கொடுத்திருந்தார். அது கேள்விகளைக் கேட்கிற வரம்; அந்த வரத்தை ராஜா இப்பொழுது உபயோகப் படுத்திக்கொண்டார்.

2. ஜனகர்—இந்த புருஷன் (ஜீவன்) என்ன ஜோதிஸ்ஸாக விருக்கிறான்? (அதாவது, எந்த ஜோதிஸால், எந்த ஜோதிஸின் உதவியைக்கொண்டு வ்யவஹாரத்தை செய்கிறான்?).

யாஜ்ஞவல்க்யர்—ஆதித்ய ஜோதிஸ்; இந்த ஜோதிஸின் உதவியால் பிழைத்திருக்கிறான், எல்லாவற்றையும் கண்ணால் பார்க்கிறான், வேண்டிய விடங்களுக்குப் போகிறான், காரியங்களைச் செய்கிறான், திரும்பவருகிறான். (சக்ஷுரிந்திரியத்திற்கு ஸூரிய பிரகாசத்தின் உதவியிருந்தால் அதின் தொழிலை செவ்வையாய் நடத்தும்).

ஜனகர்—இது சரிதான்.

3. ஜனகர்—ஸூரியன் அஸ்தமித்துவிட்டால், அப்பொழுது இந்த ஜீவனுக்கு எந்த ஜோதிஸ் உண்டு?

யாஜ்ஞவல்க்யர்—சந்திர ஜோதிஸ்; அதின் வெளிச்சத்தைக் கொண்டு எல்லாவற்றையும் நடத்துகிறான். (இதுவும் சக்ஷுரிந்திரியத்திற்கு உதவி).

4. ஜனகர்—சூர்ய, சந்திரர்களிருவரும் அஸ்தமித்துப் போனால் எந்த ஜோதிஸ் உண்டு?

யாஞ்யவல்க்யர்—அக்னி ஜோதிஸ்; அக்னியாகிற தீபம் முதலியதின் வெளிச்சத்தைக்கொண்டு எல்லாவற்றையும் நடத்துகிறான். (இதுவும் சக்ஷுரிந்திரியத்திற்கு உதவி).

5. ஜனகர்—மேற்படி மூன்று ஜோதிஸ்களும் இல்லாவிடில் அப்பொழுது இந்த ஜீவனுக்கு எந்த ஜோதிஸ் உளது?

யாஞ்யவல்க்யர்—வாக் ஜோதிஸ்; (அதாவது, சப்தம்; ஒரு வெளிச்சமுமில்லாமல் சுத்த இருளாயிருக்கும் காலத்தில் சக்ஷுரியந்திரியத்திற்கு தொழில் இல்லாமலிருக்கிறது. அப்பொழுது சுரோத்ரேந்தியத்திற்கு தொழிலுண்டாகிறது). அதைக்கொண்டு வ்யவஹாரத்தை நடத்துகிறான். (அங்ஙனமே, கந்தத்தால் கிராணேந்திரியத்திற்கும், ரஸத்தால் ரஸனேந்திரியத்திற்கும், ஸ்பரிசத்தால் த்வக் இந்திரியத்திற்கும் தொழில் உண்டாகிறது).

6. ஜனகர்—மேற்படி ஜோதிகளெல்லாம் இல்லாமல்போனால் அப்பொழுது ஜீவனுக்கு யாது ஜோதிஸ் உளது?

யாஞ்யவல்க்யர்—ஆத்மாவாகிற ஜோதிஸ்; இதனால் பிழைத்திருக்கிறான்; எல்லா வ்யவஹாரத்தையும் நடத்துகிறான்.

(ஜாகிரத் விஷயத்தில், சக்ஷுஸ் முதலிய பகிர் முகங்களாயிருக்கின்ற கரணங்கள் ஆதித்யாதி ஜோதிஸ்களால் அனுக்கிரகிக்கப்பட்டால், அப்பொழுது இந்த ஜீவனுக்கு வ்யவஹாரம் அதிக தெளிவாக ஏற்படுகிறது; இப்பிரகாரம், ஜாகிரத காலத்தில், தன்னுடைய அவயவக் கூட்டத்திற்கு வேறாகவிருக்கிற ஜோதிஸால் காரிய ஸித்தியாகின்றது. ஆதலால், எல்லா பாஹ்ய ஜோதிஸ்களும் அஸ்தமித்துப் போய்விட்டால், ஸ்வப்ன ஸுஷுப்தி காலங்களிலும், அப்படியே சில நேரம் ஜாகிரத காலத்திலும், தன்னுடைய அவயவக் கூட்டத்திற்கு வேறாகவிருக்கிற ஒரு ஜோதிஸால் காரிய ஸித்தியாகின்றது; எப்படியென்றால், ஸ்வப்னத்தில் பந்துவின் வரவு முதலான யாவற்றையும் பார்க்கிறான்; தூங்கி எழுந்திருந்த பிறகு தான் ஸுகமாய் தூங்கினதாக சொல்லுகிறான். அப்பொழுது ஏதுவோ ஒரு ஜோதிஸ் வ்யதிரிக்தமாக விருந்து தானே இவைகளையெல்லாம் அவன் அறிந்திருக்க வேண்டும். ஆதலால், காரிய காரண ஸ்வாவய ஸங்காத வ்யதிரிக்தமாயும்,

ஆதித்யாதி பாகிய ஜோதிஸ்போல் வேறு ஒன்றினாலும் இல்லாமல் தானே பிரகாசமுள்ளதாயும் இருக்கிற ஒரு ஜோதிஸ் இந்த சரீரத்திற்குள் இருக்க வேண்டும். அதைத்தான் ஆத்ம ஜோதிஸ் என்று சொல்லப்படுகிறது.

மேலும், இந்த ஜோதிஸ் ஆதித்யாதி ஜோதிஸ்களைக்காட்டிலும் விலக்ஷணமாயும், பூதஸம்பந்தமில்லாமலும் இருக்கிறது. சக்ஷுராதியினால் கிரகிக்கக் கூடாததாயுமிருக்கிறது. ஆதலால், இதுதான் எல்லாவற்றிற்கும் ஹேதுவாயிருக்கிறது. இப்படிப்பட்ட விலக்ஷணமான ஜோதிஸ் ஒன்று இல்லையென்று சொல்லக்கூடாது; தேகத்திற்கே தர்சனாதி கிரியையிருக்கிறது, வேறு வஸ்துவில்லையென்றும் சொல்லக்கூடாது. அப்படியிருந்தால், ஜாகிரத காலத்தில் காணப்பட்ட வஸ்துவிற்கு மாத்திரம்தான் ஸ்வப்னத்தில் தர்சனம் கிடைக்கும்; அப்படியில்லையே; பிறவிக்குருடன் ஸ்வப்பனத்தில் முன் பார்க்கப் படாததையெல்லாம் பார்க்கிறான்; அல்லது, குருடனாயிருந்தவன் தான் ஜாகிரதகாலத்தில் பார்க்காத ஹிமவத பர்வதத்தின் சிகரத்தைப் பார்த்தேன் என்று சொல்லுகிறான். ஆதலால், எவன் ஸ்வப்னத்தில் பார்க்கிறானோ, அவனே பார்க்கிறவன், ஆத்மா; தேகம் பார்க்கிறதில்லை; நினைக்கிறவனும், பார்க்கிறவனும் ஒருவன்தான்; கண்ணை மூடிக்கொண்டிருக்கிறவனும் நினைத்துப் பார்ப்பதினால் முன் பார்க்கப்பட்ட வஸ்துவை பார்க்கிறான்; ஆதலால், கண்ணுக்குத்தானே பார்க்கிற சக்தியில்லை; பார்க்கிறவன் ஒருவன் இருக்கிறான்; மிருதமாய்போன தேகத்திலிருக்கிற கண்ணுக்கு பார்வை சக்தியிருக்கிறதா? இல்லையே; ஆதலால், தேகத்திற்கு தர்சனாதி கிரியை இல்லை. கண் முதலானதற்கும் தர்சனாதி கிரியையில்லை; 'நான் பார்த்தேன், பார்க்கிறேன்'என்று சொல்லுகிறான்; தன் கண் பார்த்ததாக சொல்லவில்லை; அதாவது, பார்த்த கர்த்தா வேறுயென்று யேற்படுகிறது. ஆனால், மனஸ் பார்த்தது என்று சொல்லுவோமானால், அப்படியும் சொல்லக்கூடாது; ஏனென்றால், 'என் மனஸ்' என்று சொல்லுகிறான்; அதாவது, மனஸும் ஒரு விஷயமாய்ப் போய்விடுகிறது. ஆதலால், இவைகளை யெல்லாம் காட்டிலும் வ்யதிரிக்தமான ஜோதிஸ் ஒன்றுயிருக்கவேணுமென்பது ஸித்தமாயிருக்கிறது.

காரிய காரண ஸங்காதத்திற்கு ஸமான ஜாதீயமான ஜோதிஸ் உள்ளேயிருக்கவேணும் என்று சொல்வதும் பிசகாயிருக்கிறது. எப்படியென்றால், ஒரு வஸ்துவிற்கு, அதற்கு ஸமான ஜாதீயமுள்ள வஸ்துவே உபகாரம் செய்யவேண்டுமென்ற நியமமில்லை; அக்னியானது பார்த்திவ ஸம்பந்தமான கட்டை முதலியதால் ஜ்வலிக்கப்படுகிறது; மின்னல் அக்னியும், ஜடா அக்னியும் ஜலத்தால் ஜ்வலிக்கப்படுகின்றன; மனுஷியன் தனக்கு

ஸமான ஜாதியாயில்லாமலிருக்கிற மிருகத்தாலேயும் உபகரிக்கப்படுகிருன். ஆதித்யாதி காரணங்களால் வ்யதிரிக்தமாயும், உள்ளுக்குள் ஜோதி ரூபமாக ஒரு ஆத்ம வஸ்து இருக்கிறதென்பது ஸித்தம்).

7. ஜனகர்—அந்த ஆத்மா எவர்? (அதாவது, தேகேந்திரிய, மனஸ் இவைகளுக்குள் எதில் இருக்கிருர்?)

யாஞ்ஞவல்க்யர்—எந்த, இந்த ஆத்மா, பிராணன்களுக்குள் விஞானமயனுகவும், ஹ்ருதிபுத்தியில் அந்தர் ஜோதி ரூபமாயும், 'புருஷன்' என்று சொல்லப்பட்டவராயுமிருக்கிருரோ அவர்தான் (அந்த ஆத்மா).

ஒரு பச்சை மணியை, பாலில் போட்டால், அந்த பால் முழுவதிலும் பச்சையின் சாயை எப்படி அடிக்கிறதோ, அப்படிப்போல், ஆத்மா, தன் சாயையை புத்தியில் விழும்படி செய்கிருர், அந்த புத்தி ஆத்மாவிற்கு ஸமீபமாயிருப்பதால்; அந்த புத்தி மேற்படி ஆத்ம ஜோதியின் பிரதி சாயையாயிருக்கிறது. அதனுல், ஆத்மாபிமான புத்தி, விவேகிகளுக்குக்கூட முதன்மையானது; பிறகு, மனஸ், இந்திரியங்கள், தேகம் இப்படி வரிசையாக ஒன்றுக்கொன்று அவபாஸகங்களாக விருக்கின்றன.

பூர்ணமாயிருப்பதால் 'புருஷன்' என்ற பெயர் கிடைத்தது.

ஸர்வகரணங்களுக்கும் அனுகிராஹகங்களாவிருக்கிற ஆதித்யாதி வெளிப்பட்ட ஜோதிஸ் அஸ்தமத்தை யடைந்தால், புத்திக்குள் ஜோதிரூபமாயிருக்கிற ஆத்மாவாகிய புருஷன், அந்தக்கரண வழியாய், கரணங்களுக்கு அநுகிராஹகமாயிருக்கிருர். இந்த ஸ்வயம் ஜோதிஸ் இல்லாவிட்டால் கார்யகாரண ஸங்காதத்திற்கு வ்யவஹாரம் உண்டாகமாட்டாது. வ்யவஹாரமெல்லாம் அபிமானத்துடன் கூடியதாயிருக்கிறது; அதாவது, இச்சையிருந்தால் தான் வ்யவஹாரம் உண்டு; புத்தியால் இச்சையுண்டாகிறது; புத்தி ஆத்ம ஸ்வரூபம்; ஆதலால், ஆத்மாவாகிய அந்தர் ஜோதிஸ் இல்லாவிட்டால் ஒரு வ்யவஹாரமும் இருக்கமாட்டாது. ஜாகிர்தகாலத்தில் கார்யகரணங்களின் வ்யாபார ஸமூஹத்தின் வ்யாகுலத்தால் ஆத்மா தெரியப்படுகிறதில்லை).

(யாஞ்ஞவல்கயர்—மேற்சொல்லிய விதத்தால்) அந்த ஆத்மா புத்தியுடன் ஸமமப்பட்டதாக (அதாவது, புத்திரூபமாக, புத்தியுடன் கூடினதாக, புத்திவழியாக, புத்தியைப்போல் தோணப்படுவதாக) விருந்துகொண்டு, இஹ லோகத்திலும், பரலோகத்திலும் ஸஞ்சரிக்கிருன். (அதாவது, ஸஞ்சரிப்பவர்போல் தோற்றப்படு

கிறார்). நினைக்கிறவர்போலும், போகிறவர்போலும் தோற்றப்படுகிறார். (புத்தியில் ஸம்பந்தப்பட்டதால் அப்படி. தொழில் உள்ளவர்போல் தோற்றப்படுகிறாரேயல்லாது யதார்த்தத்தில் ஸ்வதமாய் அவருக்கு யாதொரு தொழிலுமில்லை).

(லோகத்தில், ஒரு வெளிச்சம், அதாவது ஒரு மத்தாப்பூ, சிகப்பு முதலிய பல வர்ணமுள்ளதாக, பதார்த்தங்களை விளங்கும்படி செய்துகொண்டு, தானும் அப்படியே சிகப்பு முதலிய பல வர்ணமாயிருப்பதுபோல் எப்படி தோற்றப்படுகிறதோ, அப்படி ஆத்மா புத்தியை பிரகாசப்படுத்திவைத்துக் கொண்டு தானும் புத்திரூபமாக விருக்கிறதுபோல், தோற்றப்படுகிறது).

யாஞ்ஞவல்க்யர்—(மேல்சொல்லியது எப்படி யென்றால் சொல்லப்படுகிறது) அந்த ஆத்மா ஸ்வப்னமாக ஆகி (ஸ்வப்ன விருத்தியையுடைய புத்தியை விளங்கச்செய்துகொண்டு) இந்த லோகத்தையும் (ஜாக்ரத வ்யவஹார லக்ஷணமாயும், காரியகாரண ஸங்காதாத்மகமாயும், லௌகிக சாஸ்திரீய வ்யவஹாராத்மகமாயுமிருக்கிற இந்த உலகத்தையும்), மிருத்யுவுடைய ரூபங்களையும் (அவித்யாகாரிய காரணங்களையும்) தாண்டுகிறார் (கடந்து போகிறார்).

(அதாவது, விவிக்தமாயிருக்கிற தன்னுடைய ஜோதிஸால், ஸ்வப்னத்மிகமாயிருக்கிற புத்தியின் விருத்தியை விளங்கச்செய்துகொண்டு விருக்கிறார்; ஸ்வயம் ஜோதிஸ் ஸ்வபாவமாயிருக்கிற இந்த ஆத்மா, விசுத்தராக, கர்த்திரு கிரியா காரக பல சூன்யராக விருக்கிறார். ஸஞ்சான ஹேதுவானது புத்தி ஸாதிருச்யமே தவிர வேறில்லை).

(புத்தியாகிற விஞ்ஞானத்தைத்தவிர வேறாக ஆத்மா வென்பது ஒன்று இல்லையென்று பூர்வபக்ஷிகளின் பக்ஷத்தை யெடுத்து விஸ்தாரமாய் பாஷ்யத்தில் பேசப்படுகிறது. புத்திக்கு மாறுதல் உண்டாவதால் அது ஆத்மாவாக மாட்டாது; 'அது கெட்டுப்போய்விட்டது, கெடாமல் இருக்கிறது' யென்று ஒரு வஸ்து, தனிமையில் யிருந்துகொண்டு யறிந்துகொடிருக்கிறதே, அது ஆத்மாகவிருக்கிறது; புத்திக்கு வேறாகவும் ஸ்வச்சமாகவுமிருக்கிறது—யென்று பாஷ்யத்தில் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது).

8. அந்த ஆத்மாவாகிய புருஷனை (தேகேந்திரிய சங்காதமாகிற) சரீரத்தை யடைந்து, அதினாலுண்டானவனைக, பாபங்களுக்கு ஆச்ரயங்களாயிருக்கிற காரிய காரணங்களுடன் ஸம்பந்தப்

படுகிறான். அவனே இந்த தேகத்தை விட்டு உயர கிளம்பி மேற்படி பாபங்களுக்கு ஆச்ரயங்களாயிருக்கிற காரிய காரணாதிகளை விட்டுவிடுகிறான்.

(ஸ்வப்ன ஜாகிரத காலங்களில் இந்த ஆத்மா, ஒரே தேகத்திலிருந்து கொண்டு பாப ரூபங்களாயிருக்கிற காரிய கரணங்களை அங்கீகரித்துக் கொண்டும், விட்டு விட்டுக்கொண்டும், எப்பொழுதும் எப்படி ஸஞ்சரிக்கிறானோ, அப்படி அந்த புருஷனே இஹ, பரலோகங்களில், ஜன்ம மரணங்களுடன்கூட, காரிய கரணங்களின் அங்கீகாரம், அதன் விடுதலே, இவைகளையடைந்துகொண்டு மோக்ஷபரியந்தம் ஸஞ்சரிக்கிறான்).

9. (இஹ, பரலோகங்கள் இல்லை; ஸ்வப்ன ஜாகரிதங்கள் பிரத்யக்ஷமாய் தெரிகின்றன; அப்படிபோல் தெரியாதபடியால், இவைகள்தான் மேற்படி லோகங்களாக விருக்கவேண்டும்; வேறு இல்லையென்று ஆக்ஷேபம் நிகழ அதற்கு சொல்லப்படுகிறது).

இந்த புருஷனுக்கு இரண்டு ஸ்தானங்களே உள்ளன; ஒன்று, இந்த லோகம்;(அதாவது,பிரத்யக்ஷமாய் அனுபவிக்கப்படுகிறதும், ஜன்ம, சரீர, இந்திரியங்களால் வேதனை செய்யப்பட்டதுமான ஸ்தானம்). இரண்டாவது, பரலோகம்; (அதாவது, சரீராதிகளை விட்ட பிற்பாடு அனுபவிக்கும்படியான ஸ்தானம்). இந்த இரண்டிற்கும் மத்தியில் ஸந்த்யமாயிருக்கிறது ஸ்வப்னஸ்தானம்; இது மூன்றாவதாகவிருக்கிறது. ஆத்மா இந்த ஸந்திஸ்தானத்திலிருந்துகொண்டு இந்த லோகத்தையும், பரலோகத்தையும் பார்க்கிறான்.

(எப்படியென்றால், ஜாகரிதகாலத்தில் அனுபவிக்கப்பட்ட விஷயங்களை ஸ்வப்னத்தில் பார்க்கிறான்; இதனால் இஹ லோகத்தைப்பார்க்கிறானென்று யேற்பட்டது. ஜாகரிதகாலத்தில் யனுபவிக்கப்படாத விஷயங்களையும் ஸ்வப்னத்தில் பார்க்கிறான்; இதனால் இஹலோகானுபவத்தை தவிற வேறு லோகானுபவமிருக்கிறதென்று யேற்படுகிறது. அதனால், பரலோகத்தைப் பார்க்கிறான் யென்று சொல்லப்படுகிறது).

(ஸ்வப்னத்தில், எவ்விதம், எதை யாசிரயத்துக்கொண்டு, எவ்விதியால் பார்க்கிறான் என்றால் அதற்கு சொல்லப்படுகிறது). பரலோக பிரதிபத்திக்கு (அடைவுக்கு) ஸாதனமாயும், வித்யா, காம, பூர்வபிரஜ்ஞா லக்ஷணமுள்ளதுமான ஸாதனங்களில் எப்படி

பட்டதுடன் கூடியிருக்கிருனே (அதாவது, இவனுடைய பாப புண்யத்திற்கு தக்கபடி), அந்த ஸாதனங்களாகிய பிடிப்புக்குத் தக்கபடியும், அப்பிடிப்பை ஆசிரயித்துக்கொண்டும், பாபபலங்களாயிருக்கிற துக்கங்களேயும், புண்ய பலங்களாயிருக்கிற ஸுகங்களேயும் பார்க்கிருன்.

(ஆத்மா, எப்பொழுதும், காரியகாரண ஸங்காதமாயிருக்கிற சரீரத்தில் ஸம்பந்தப்பட்டுக்கொண்டே தெரியப்படுகிருன். ஆதலால், அந்த சரீரம் எப்படி அஸத்தாக விருக்கிறதோ, அப்படி அவனும் அஸத்துத்தான் என்று சொல்வோமானல், அது கூடாதுயென்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

ஆத்மா, எப்பொழுது மிகவும் ஸ்வப்னதசையை யடைகிருனே, அப்பொழுது, அவன் எல்லாவற்றையும் காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்கிறதும், ஜாகிரதகாலத்தில் பிரத்யக்ஷமாய் காணப்படுவதுமான இந்த லோகத்தின் அம்சத்தையடைந்து (அதாவது, திருஷ்ட ஜன்மவாஸனையில் ஸம்பந்தபட்டவனுக), தானே இந்த தேகத்தை கீழ்விழத்தள்ளி, தானே ஒரு ஸ்வப்ன சரீரத்தை யுண்டுபண்ணிக்கொண்டு, தன்னுடைய காந்தியாலும் (அதாவது, ஸர்வ வாஸனுத்மாகமாயும், விஷயபூதமாகவுமிருக்கிற அந்தக்கரண விருத்தி பிராகாசத்தாலும்), தன்னுடைய ஜோதியாலும் (அதாவது விஷயீபூதமாயிருக்கிற விளிக்த ஸ்வரூபத்தினுலேயும்), ஸ்வப்னதசையை யடைகிருன். அப்பொழுது தான் ஸ்வயம் ஜோதிரூபமாயிருக்கிருன்.

10. (ஸ்வப்னத்தில் இந்திரியங்களுக்கும், அனுகிராஹங்களாயிருக்கிற ஆதித்யாதிகளுக்கும் அபாவமிருப்பதால் ஆத்மா ஸ்வப்னகாலத்தில் விவிக்தஸ்வபாவமுள்ளதாயிருக்கிறது. ஸ்வப்னத்தில் இந்திரியங்கள் இல்லாமலிருந்தபோதிலும் விஷயங்கள் யனுபவிக்கப்படுகிறதே, அப்படியிருக்க, இந்திரியாபாவத்தால் விலக்ஷணமென்று யெப்படி சொல்லலாம் என்ருல், அதற்கு சொல்லப்படுகிறது).

ஸ்வப்னத்தில் ரதங்களும் இல்லே; குதிரைகளும் இல்லே; மார்க்கங்களும் இல்லே; ஆனல் இவைகளே யெல்லாம் ஆத்மா தா

னே சிருஷ்டித்துக்கொள்ளுகிறான். அப்படியே, ஸுகங்களுமில்லை; ஸந்தோஷமுமில்லை; அதிக ஸந்தோஷமுமில்லை; 'அப்படியே ஓடைகளுமில்லை; குளங்களுமில்லை;' நதிகளுமில்லை; ஆனால், இவைகளையெல்லாம் ஆத்மா தானே உண்டுபண்ணிக்கொள்ளுகிறான். அவனே கர்த்தாவாய் இருக்கிறான். (அதாவது, கர்த்தாவைப்போல் தோணப்படுகிறான்; யதார்த்தத்தில் கர்த்தாவன்று; வாஸனாமயமாயிருக்கிற புத்தியின் விருத்தி இதற்கெல்லாம் கர்த்தாவாயிருக்கிறது).

11. இந்த அர்த்த விஷயத்தில் அடியில்கண்ட ச்லோகங்கள் இருக்கின்றன. அவைகளாவன—

ஆத்மா, சரீரத்தை ஸ்வப்ன பாவத்தால் நிஷ்சேஷ்டையாக விழச்செய்து, அஸுப்தனாயிருக்கிற இந்த ஆத்மா, ஸுப்தங்களாகவிருக்கிற எல்லா பாவங்களையும் தன் திருஷ்டியால் பார்க்கிறார் (அதாவது, வாஸனாகாரத்தால் உண்டாயிருக்கின்றனவும், அந்தக்கரண விருத்தியை யனுஸரித்துக்கொண்டிருக்கின்றவும், ஆத்ம ஸம்பந்த வெளிஸம்பந்த பட்டதுகளாகவும், தன் ஸ்வரூபம் மேல் கொண்டதால் அஸ்தமயத்தை யடைந்ததுகளாகவுமிருக்கிற எல்லா பாவங்களையும் பார்க்கிறான், எல்லாவற்றையும் பிரகாசப்படுத்துகிறான்). (ஜோதிஷ்மத்தாயிருக்கிற இந்திரிய மாத்ரா ரூபத்தை கிரஹித்துக்கொண்டு), மறுபடியும் கர்மத்தினால் ஜாகரித ஸ்தானத்தைப் போயடைகிறான். ஹிரண்மயனை புருஷனையும், (அதாவது, சைதன்ய ஜோதி ஸ்பாவமுள்ள புருஷனையும்), ஏக ஹம்ஸனையும் (இஹலோக பரலோகங்களில் ஸஞ்சரிக்கிறவனையும்) இருக்கிறான்.

12. ஸ்வப்ன காலத்தில், நிகிருஷ்டமாயிருக்கிற பொந்தாகிற இந்த சரீரத்தை பிராணனைக்கொண்டு காப்பாற்றும்படி செய்துவிட்டு, அந்த சரீரத்தைவிட்டு வெளிக்கிளம்பி ஸஞ்சரித்துக்கொண்டு, தான் அமிருதனாகவும், ஹிரண்மய புருஷனாகவும், ஏக ஹம்ஸனாகவும் இருந்துகொண்டு தன்னிஷ்டப்படிபோகிறான்.

13. மேலும், ஸ்வப்னத்தில், இந்த ஆத்மா தேவாதிபாவமாயிருக்கிற உயர்ந்ததாயும், திரியகாதிபாவமாயிருக்கிற நிகிருஷ்

டமாயிருக்கிற பல ரூபங்களை யெடுத்துக்கொள்ளுகிறான். ஸ்திரீகளுடன் ரமிக்கிறதுபோல் காணப்படுகிறான்; சிறிக்கிறவன் போலும், பயரூபங்களைப் பார்க்கிறவன்போலும் காணப்படுகிறான்.

14. ஆத்மாவின் விளையாட்டுவனமாகிய கிராமம், ஸ்திரீ, அன்னமிழுதலிய வாஸனை நிர்மிதமாயிருக்கிற ஸ்தலத்தை எல்லா ஜனங்களும் பார்க்கிறார்கள். அந்த ஆத்மாவை ஒருவரும் பார்க்கிறதில்லை. (இது கஷ்டம், ஆச்சரியம்; ஜனங்களின் துர்பாக்கியம்; ஆதலால், ஜனங்களிடத்தில் இரக்கம்வைத்து, சுருதி, ஸ்வப்னத்தில், விவிக்தமாய், ஸ்வயம் ஜோதிஸ் ஒன்று இருக்கிறதென்று காண்பிவிக்கிறதென்று தாத்பரியம்).

தூங்குகிறவனை சீக்கிரம் எழுப்பக்கூடாதென்று லோகத்தில் பிரஸித்தமாயிருக்கிறது. (ஏனென்றால், தூங்குகிறகாலத்தில், ஆத்மா, சரீரத்தை பிராணனைக்கொண்டு ரக்ஷிக்கும்படி செய்துவிட்டு, வெளியில் இஷ்டப்படி ஸஞ்சரிக்கப் போய்விடுகிறார்; அப்பொழுது இந்திரியங்களுக்கு தொழில் இல்லை; ஆத்மா மறுபடியும் வந்து சேர்ந்தால்தான் இந்திரியங்களுக்கு தொழில் உண்டாகிறது; சீக்கிரத்தில் எழுப்பினால் அப்பொழுது ஒருக்கால் ஆத்மா, வெளிஸஞ்சாரத்திலிருப்பதால், இந்திரியங்களுக்கு தொழில்களுண்டாகிறதில்லை; ஆதலால், மறுபடியும் தூங்கப்படுகிறான்; எழுந்திருக்கிறதில்லை; இந்திரியங்களும் வசப்படுகிறதில்லை).

ஆத்மா மறுபடியும் தேகத்தில் வந்து சேர்ந்தால் ஒழிய இவனுடைய இந்திரிய தொழில் இல்லாமைக்கு யாதொரு வைத்தியமுமில்லை. (ஆகையால் சீக்கிரம் தூங்குகிறவனை எழுப்பக்கூடாது).

'எது ஜாகரிதகாலத்தில் காணப்படுகிறதோ, அதுவே ஸ்வப்னகாலத்திலும் காணப்படுகிறது; ஆதலால் அது வேறு, இது வேறு என்பது இல்லை' என்று சிலர் சொல்லுகிறார்கள் (இரண்டும் ஒன்றுதான் என்று சொல்லுகிறார்கள்). (அது சரியல்ல; ஸ்வப்னத்தில் இந்திரியங்கள் ஒழிவுயடைந்து போகிறபடியால், இந்திரியங்களுக்கு தொழில் யடைங்கிபோன பிறகுதான் ஸ்வப்னம் காணுகிறான்; அப்பொழுது இந்திரியங்களுக்கு வேறாக விருக்கிற

ஒரு ஸ்வயம் ஜோதிஸ் இருக்கவேணுமென்று ஏற்படுகிறதல்லவா). ஆதலால், ஸ்வப்னத்தில் வ்யதிரிக்தமான ஒரு ஸ்வயம் ஜோதிஸ் இருப்பது நிச்சயமாயிருக்கிறது.

ஜனகர்—இந்தப்பிரகாரம் எனக்கு உபதேசம் செய்ததற்க்காக உமக்கு ஆயிரம் கோக்கள் கொடுக்கிறேன். இன்னும், ஸம்சாரத்திலிருந்து எப்படி மோக்ஷம் உண்டாகுமோ அதைப்பற்றி, மேலும், சொல்லுங்கள்.

15. யாக்ஞவல்க்யர் மேலும் சொல்லுகிறார். (ஸ்வப்னத்தில் இந்திரியங்களுக்கு ஒழிவு இருந்தாலும், ஸந்தோஷம், பயம் முதலானவை காணப்படுகின்றன; அப்பொழுது ஆத்மா சரீரத்திலிருந்துகொண்டு தானே பார்க்கிறான். ஜாகரிதத்தில் சரீரத்தில் கட்டுப்பட்டிருக்கிறதாக பிரத்யக்ஷமாகத் தெரியவருகிறது. ஆதலால், எப்பொழுதும் சரீரத்தில் கட்டுப்பட்டிருப்பதால் ஒரு நாளும் மோக்ஷமில்லை யென்று வரத்தெரிய, அப்படியன்று, மோக்ஷமுண்டு; ஆத்மா எப்பொழுதும் அஸங்கன் என்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

இந்த ஆத்மா, ஸ்வப்னகாலத்தில், மித்திர, பந்து ஜன தர்சனம் முதலியதால் ஸந்தோஷங்களை யடைந்து, அநேக விதமாக, இச்சைப்படி திரிந்து, அதனால் சிரமத்தை யடைந்து, புண்யபாப பலத்தை பார்க்கிறவன்போல் இருந்துகொண்டு, பிறகு, ஸுஷுப்தியை யடைகிறான். அதன்பிறகு, வந்த கிரமப்படி ஸுஷுப்தியிலிருந்து ஸ்வப்னவஸ்தைக்குப்போகிறான். அந்த ஸ்வப்னத்தில் எதைப்பார்க்கிறானோ, அதாவது, எந்த எந்த புண்ணிய பாப பலத்தைப்பார்க்கிறானோ, அதனால் இவன் கட்டுப்படுகிறதில்லை. ஆதலால் ஆத்மா அஸங்கன் என்பது நிச்சயம். (லோகத்தில், ஸ்வப்ன காலத்தில் ஒருவன் ஏதாவது ஒரு துன்மார்க்கமான காரியம் செய்ததாகக் கண்டேன் என்று சொன்னால், அதற்காக அவனை நிந்திக்கிறார்களா, அல்லது தண்டிக்கிறார்களா? இல்லையே; ஆதலால், ஸ்வப்னத்தில் கண்ட பாப புண்ய பலத்தால் அவன் கட்டுப்பட்டிருக்கவில்லை).

ஜனகர்—இந்த உபதேசத்திற்காக நான் உமக்கு ஆயிரம் பசுக்கள் கொடுக்கிறேன். இன்னும் மோக்ஷத்தைப்பற்றி மேல் சொல்லும்.

16. யாஞ்ஞவல்க்யர்—(ஆத்மா தன் இச்சைப்படி போகிறான் என்று முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது; மறுபடியும் இப்பொழுது அவன் அஸங்கன் என்று சொல்லப்படுகிறது. ஒன்றுக்கொன்று விரோதப்படுகிறது. இச்சைப்படி போகிறவன் என்றால் அவனுக்கு கர்த்திருத்வம் ஸ்தாபிக்கப்படுகிறதே, இப்படியிருக்க எப்படி அகர்த்தாவாகவிருப்பான் என்றால், அதற்கு சொல்லப்படுகிறது).

ஸுஷுப்திக்கு பிறகு, ஸ்வப்னத்தில் வந்த இந்த ஆத்மா, ஸந்தோஷப்பட்டு, திரிந்து, சிரமப்பட்டு, புண்ணிய பாப பலன்களை பார்க்கிறவன் போலுமிருந்து, மறுபடியும், வந்த கிரமப்படி ஜாகரிதத்தில் பிரவேசிக்கிறான். ஸ்வப்னத்தில் பார்த்த பாப புண்ய பலத்தோடு ஸம்பந்தப்படுகிறவன் அல்ல.

ஜனகர்—இந்த உபதேசத்திற்காக நான் உமக்கு 1000 கோக்கள் கொடுக்கிறேன். இன்னும் மோக்ஷத்தைக்குறித்து மேல் சொல்லும்.

17. யாஞ்ஞவல்க்யர் — (ஸ்வப்னத்திலுண்டான தோஷங்களால் எப்படி இவன் ஸம்பந்தப் படுகிறதில்லையோ அப்படியே ஜாகரிதகாலத்தில் உண்டாகும் தோஷங்களுடன் இவன் ஸம்பந்தப் படுகிறதில்லை யென்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

இந்தப்படி ஜாகரிதத்திற்கு வந்த ஆத்மா, அங்கும், ஸந்தோஷமடைந்து, திரிந்து, சிரமப்பட்டு, புண்ய பாப பலத்தை பார்க்கிறவன்போல் இருந்து, மறுபடியும், வந்த கிரமமாக ஸ்வப்னாவஸ்தைக்குப் போகிறான்.

(ஸ்வப்னத்திலிருக்கட்டும், ஜாகரிதத்தில் புண்ய பாப கர்மங்களைச் செய்கிறானே, அதை நாம் பிரத்யக்ஷமாக பார்க்கிறோமே, அப்படியிருக்க, ஜாகரிதத்திலும் ஆத்மா, அஸங்கன், அகர்த்தாவென்று எப்படிச் சொல்லலாம் என்ற ஆக்ஷேபத்திற்கு ஸமாதா

ணம் என்னவெனில்—ஆத்மா ஜாகரிதத்திலும் அகர்த்தாதான், இவன் ஒன்றும் செய்கிறதில்லே; ஆனுல் எவர்கள் செய்கிருர்க ளென்ருல், புத்தியாதி தத்வங்கள் செய்கின்றன; இந்த ஆத்மா வின் ஸன்னிதியில் அவைகள் தொழில்களே நடத்துகின்றன. ஆனுல், ஆத்மா அவர்களே பிரகாசப்படுத்திவைக்கிருன்; அதாவது, அததின் தொழிலே நடத்தும்படி அததற்கு, சன்னதி விசேஷத் தால், சக்தியை கொடுக்கிருன். சூரிய வெளிச்சத்தில், இருவர் கள், ஒருவருக்கொருவர் சண்டை செய்யும்படி நேரிட்டது; ஆத லால் இது சூரியனுடைய பிசகு என்று சூரியனுக்கு தோஷத்தை கல்பிவிக்கக் கூடுமா? அப்படிபோல், ஸன்னிதான விசேஷத்தால் புத்தியாதிகளே பிரகாசப்படுத்திவைக்கிற ஆத்மாவிற்கு கர்த்தி ருத்வ தோஷம் சொல்லக்கூடாது. ஆதலால் ஜாகரிதத்திலும் இவன் அகர்த்தாதான்).

18. (ஜாகிரத், ஸ்வப்ன, சுழுப்தி இம் மூன்று அவஸ்தைக ளிலும் ஆத்மா ஒன்றிலிருந்து மற்ருென்றிற்கு கிரமமாக போய்க் கொண்டிருக்கிருர் என்றும், ஒவ்வொரு அவஸ்தையிலும் வ்யதி ரிக்தராய் இருக்கிருர் என்றும் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸஞ்சார கிரமம் இப்பொழுது ஒரு திருஷ்டாந்தத்தால் காட்டப் படுகிறது).

எப்படி லோகத்தில் ஒரு பெரிய மீன், ஜலத்தின் வேகத்தால் அசைக்கப்படாததாக, ஒரு நதியில், இக்கரையிலிருந்து அக்கரைக் கும், அக்கரையிலிருந்து இக்கரைக்கும் போய்வந்துகொண்டிருக் கிறதோ, அப்படி இந்த ஆத்மா, ஒன்ருலும் அசைக்கப்படாதவ ருய், அஸங்கருய், ஸ்வப்னத்திலிருந்து ஜாகிரதத்திற்கும், ஜாகிர தத்திலிருந்து ஸ்வப்னத்திற்கும் போய்வந்துகொண்டிருக்கிருர்.

19. (ஸ்வயம் ஜோதிஸாயும், கார்யகாரண ஸங்காதமாகிய சரீரத்திற்கு வேருகவுமிருக்கிற ஆத்மா காம கர்மங்களால் ஸம்பந் தபட்டவரல்லவென்று சொல்லப்பட்டது; இந்த ஆத்மா ஸம்ஸார தர்மம் யுடையவரல்ல, அவருக்கு ஸம்ஸாரித்வம் உபாதி நிமித்தம், அது அவித்யையால் ஆரோபிதம் மென்றும் சொல்லப்பட்டிருக்கி றது. மேற்படி மூன்று அவஸ்தைகளில் ஒவ்வொன்றிலும் வெவ்

வேறு ரூபம் யுடையவரென்றும் சொல்லப்பட்டது. ஜாகிரதத்தில் இந்த ஆத்மா அவித்தையால் சரீரத்தில் ஸம்பந்தபட்டவராகவும், கார்ய காரண ஸங்காதராகவும் தோற்றப்படுகிறார்; ஸ்வப்னத்தில் காமத்தோடு கூடினவராகவும், சரீரத்தோடு ஸம்பந்தப் படாதவராகவும் தோற்றப்படுகிறார். ஸுஷுப்தியில் ஒன்றிலும் ஸம்பந்தப்படாதவராக, அஸங்காராக விருக்கிறார்; அதாவது, தன்னுடைய எதார்த்த ஸ்வரூபத்தை யடைகிறார். அது எப்படி யென்று திருஷ்டாந்தத்துடன் சொல்லப்படுகிறது).

எப்படி லோகத்தில், ஆகாசத்தில் ஒரு பருந்து அல்லது கருடபக்ஷி, வெகுதூரம் பரந்து திரிந்து, அந்த சிரமத்தால் தன் இரண்டு இரக்கைகளை யடைக்கிக்கொண்டு, அந்த சிரமபரிஹாரத்திற்காக தன் பொந்தில் வந்து சேருமோ, அப்படிப்போல், ஆத்மா, ஜாகிரத ஸ்வப்ன அவஸ்தைகளில் சஞ்சரித்த சிரமபரிஹாரத்திற்காக, எந்த அவஸ்தையில் யாதொரு இச்சையும் யிச்சிக்கப்படுகிற தில்லையோ, யாதொரு ஸ்வப்னத்தையும் பார்க்கிறதில்லையோ அந்த அவஸ்தையாகிற ஸுஷுப்தியில் போகிறார். (அதாவது, ஸர்வ ஸம்ஸார விலக்ஷணமாயும், ஸர்வகிரியா காரக பல ஆயாஸ சூன்யமாயும், தன் பொந்தாயுமிருக்கிற தன்னையே தன்னிடத்திலேயே பிரவேசிக்கிறார்).

20. (இந்த ஆத்மாவின் ஸ்வபாவம் ஸர்வ ஸம்ஸார தர்ம சூன்யமாயிருக்கிற பக்ஷத்தில் அவருக்கு ஸம்ஸார தர்மம் யிருக்கிறதாக தோற்றப்படுகை பரோபாதி நிமித்தந்தான்; அது என்னவெனில், அவித்யை தெரியாமை, மோகம். இந்த அவித்யை, ஸ்வபாவமாயுள்ளதா? அல்லது ஆகந்துகமாய் வருகிறதா? ஆகந்துகமாயிருந்தால்தான் மோக்ஷமென்பது கூடும். அதினுடைய ஆகந்துகத்வம் எப்படி கூடும்? அல்லது, அவித்யை ஆத்மாவின் குணமல்லவென்று எப்படி யேற்படும்? எல்லா அநர்த்தத்திற்கும் விதையாயிருக்கிற அவித்யையின் ஸ்வபாவத்தைப்பற்றி சொல்ல இந்த கண்டிகை ஆரம்பிவிக்கப்படுகிறது).

இந்த புருஷனுக்கு, சரீரிக்கு, ஹிதாவென்று பெயருள்ள அனேக நாடிகள் (நரம்புகள்) இருக்கின்றன. ஒரு மயிரை ஆயி

ரம் பாகமாக பிளந்தால் அதில் ஒரு பிளப்பு எவ்வளவு பரிமாண முள்ளதோ, அவ்வளவு இந்நாடிகள் உள்ளன, அதாவது அத்யந்த ஸூக்ஷ்மமாயிருக்கின்றன. அவைகள் வெளுப்பு, நீலம், பச்சை, மஞ்சள், சிகப்பு வர்ணங்களுள்ள ரஸத்தால் நிறைந்திருக்கின்றன.

(இப்படிப்பட்ட ஸூக்ஷ்மமுள்ள நாடிகளில், பதினேழு அவயவங்களுள்ள லிங்க சரீரமிருக்கிறது. எல்லா வாஸனைகளும் அதை ஆச்ரயித்துக்கொண்டிருக்கின்றன; மேற்படி வாஸனைகள் மேல்பட்டதும், கீழ்பட்டதுமான ஸம்ஸாரகர்ம அனுபவத்தால் உண்டானவைகளாயிருக்கின்றன. இந்த லிங்க சரீரம் வாஸனைகளுக்கு ஆச்ரயமாயும், ஸ்வச்சமாயும், நாடிகளுக்குள்ளிருக்கிற ரஸ ஸம்பந்தத்தால் தர்மாதர்மத்தால் ஏவப்பட்ட தொழிலுள்ளதாயுமிருக்கிறது; ஸ்திரீ, ரதம் முதலிய உருப்படி விசேஷங்களாகிற வாஸனைகளால் விளங்கப்படுகிறது).

எப்பொழுது தன்னை யாரோ வந்து அடிக்கிறதுபோலும், வசப்படுத்துகிறதுபோலும், யானைவந்து துறத்துகிறதுபோலும், தான் ஓடிப்போய் ஒரு குழியில் விழுகிறதுபோலும், ஸ்வப்னத்தில், பார்க்கிறானோ அப்பொழுது அவன் பார்க்கிறது நிஜமல்ல; பொய்; யதார்த்தத்தில் ஒருவன் அடிக்கிறதுமில்லை; யானையுமில்லை; அது துறத்துகிறதுமில்லை; குழியில் விழுகிறதுமில்லை. ஆனால், அது அவித்யா வாஸனையினாலுண்டான கேவலம் பிராந்தி, பொய் தோற்றம். (நிகிருஷ்ட தர்மத்தாலுண்டான அந்தக்கரண விருத்தியைச்சேர்ந்த தோற்றம்). ஜாகிரத் காலத்தில் எதையாகிலும் பயத்தைப் பார்க்கிறானோ அந்த அவித்யா வாஸனையினால் ஸ்வப்னத்தில் அந்த பயத்தைத்தான் பார்க்கிறதுபோல் எண்ணுகிறான். (யதார்த்தத்தில் ஒன்றுமில்லை; அவித்யை இப்படிப்பட்டதாயிருக்கிறது).

(அவித்யை போய் வித்யை மேல்கொண்டால் அப்பொழுது வித்யை எப்படிபட்டதாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது).

எப்பொழுது ஜாகிரத்காலத்தில் இவன் தன்னை தேவனாகவும், ராஜாவாகவும், (அதாவது) எல்லாம் தானாக எண்ணுகிறானோ

அப்பொழுது ஸ்வப்னத்திலும் அப்படியே நினைக்கிறான், பார்க்கிறான். அப்படி இவனுக்கு ஸர்வாத்ம பாவம் வந்துவிட்டால் பரமலோகத்தை யடைகிறான் (அதாவது, பரமாத்மாவாக ஆய்விடுகிறான்).

(ஸர்வாத்ம பாவமில்லாமல், நாம் அதல்ல, நாம் வேறு, அது வேறு, என்று கீழ்ப்பட்ட நினைப்பு எதுவுண்டோ அதுதான் அவித்யையாயிருக்கிறது. அதனால் அனாத்ம பாவம் யுண்டாகி அபரலோகம் கிடைக்கிறது; அதாவது புனர் ஜனன மரணம் கிடைக்கிறது. ஆனதால், அவித்யை இழுக்கப்பட்டால், வித்யை மேல்கொண்டால், அப்பொழுது ஸர்வாத்ம பாவம், மோக்ஷம் உண்டாகிறது. எப்படி ஸ்வப்னத்தில் ஸ்வயம் ஜோதித்வம் பிரத்யக்ஷமாக காணப்படுகிறதோ, அப்படிப்போல், வித்யா பலன் காணப்படுகிறது. அப்படியே, வித்யை மறைந்துபோய், அவித்யை மேல்கொண்டால் அப்பொழுது அவித்யையின் பலன் காணப்படுகிறது. வித்யையால் ஸர்வாத்மாவாக ஆகிறான். அவித்யையால் அஸர்வாத்மாவாக ஆகிறான். இல்லாவிடில், இவன் என் புரிபட்டவனாயிருப்பான்? அன்ய பாவ முள்ளவனாயிருப்பான்? வியக்தனாயிருந்தால் அதனால் விரோதப்படுகிறான்; விரோதப்பட்டால் அடிக்கப்படுகிறான். எல்லாம் இவனாக விருந்துவிட்டால் விரோதமுமில்லை, அடியுமில்லை.

இந்தப்படி அவித்யையின் ஸ்வபாவம் சொல்லப்பட்டது. பின்னமாய் நினைத்தால் காமம் உண்டாகிறது; அதனால் கர்மம் உண்டாகிறது; அதனால் பலன்; அப்பொழுது ஸம்ஸாரித்வம். இது அவித்யையின் காரியம். அவித்யை ஆத்மாவினுடைய ஸ்வபாவமல்ல; வித்யை மேல்கொண்டால் அவித்யை தானாய்ப் போய் விடும்; ரஜ்ஜு—ஞானம் வந்த உடன் ஸர்ப பிராந்தி போய்விடுவது போல். ஆதலால், அவித்யை ஆத்மாவின் தர்மமல்ல; ஸ்வாபவத்திற்கு ஒரு நாளும் ஹானிவராது; சூரியனுடைய உஷ்ணகுணமும், பிரகாச குணமும் போய்விடுமா? ஆனால், அவித்யை போய் விடுகிறதே; ஆதலால் அது ஆத்மாவின் ஸ்வபாவமல்ல. ஆதலால் மோக்ஷமென்பது கூடும்).

21. (இப்பொழுது வித்யாபலனையும், கிரியாகாரக சூன்யமாயும் ஸர்வாத்ம பாவமாயு மிருக்கிற மோக்ஷமென்பது பிரத்யக்ஷமாக காண்பிவிக்கப்படுகிறது).

ஸுஷுப்தியில் ஆத்மாவிற்கு எப்படிப்பட்ட ரூபமென்றால்—அதிச்சந்தம், காமத்தைக் கடந்த ரூபம்; அபஹத பாப்மம், பாபங்களுக்கு ஹேதுவாயிருக்கிற தர்மாதர்மமில்லாத ரூபம்; அபயம், பயத்திற்கு ஹேதுவாயிருக்கிற அவித்யா வர்ஜித ரூபம். (அதாவது, இந்த ஆத்மாவிற்கு நித்யமாயிருக்கிற ஸ்வரூபமானது சைதன்ய ஜோதிஸ்வரூபம்; அப்படிப்பட்ட ரூபத்தால் எல்லாவற்றையும் பிரகாசப்படுத்திவைக்கிறார்).

(ஸுஷுப்தியில் ஆத்மா நஷ்டமாய்ப் போகாமல் தன் ரூபத்துடன் இருக்கிறார் என்றால், எதனால் அந்த காலத்தில் அவர் தன்னையும் அறியவில்லை, வெளிப்பட்ட வஸ்துக்களையும் யறியவில்லையென்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

எப்படி லோகத்தில் அத்யந்த காமமுள்ள ஸ்திரீ புருஷர்கள் ஒருவருக்கொருவர் செவ்வையாகச்சேர்ந்து ஸம்பந்தப்படும்பொழுது, அவர்களுடைய இருமனசும் ஒன்றாக ஆகி, லோகத்தை மறந்து, வெளிப்பட்டதையாவது உள்பட்டதையாவது யாதொன்றையும் அறியாமலிருக்கிறார்களோ, அப்படிப்போல், இந்த ஜீவன் ஸுஷுப்தி காலத்தில் தன் நிஜஸ்வரூபமாகிய பரஞ்ஜோதியுடன் கலந்து, ஒன்றாகி, ஒன்றையும் யறிகிறதில்லை.

(ஆனால், அனேக ஜீவராசிகள் யிருக்கின்றார்களே, ஆதலால், அனேக ஜீவாத்மாக்கள் இருக்கின்றார்கள் என்றால், அப்படியன்று. ஒரு பெரிதான உப்பு கட்டியிலிருந்து, சிறு சிறு துணுக்குகள் விழுந்தால், அவைகள், எப்படி பெரிய கட்டியிலிருந்து பிரிபட்டதாக காணப்படுகிறதோ, அப்படி பிரிபட்டிருந்தபோதிலும் அந்த துணுக்குகளுக்கு உப்பின் ஸ்வபாவம் போகிறதில்லையோ, அப்படிப்போல், பரமாத்மாவினுடைய அம்சங்களான ஜீவர்களின் ஸ்வபாவம் ஒன்றுதான். இன்னும் எப்படி அந்த பரமாத்மா அனேக

தேகங்களில் பிரவேசித்திருக்கிறதென்றால், ஒரே சந்திரனுடைய பிரதிபிம்பங்கள் அனேக ஜலாசயங்களில் அனேக சந்திரன்களாக தோற்றப்படுகிறதோ, அப்படிப்போல் அனேக தேகங்களில் ஒரே ஆத்ம பிரதிபிம்பங்கள் அனேக ஆத்மாக்களாக தோற்றப்படுகின்றன.

நா நாத்வத்திற்கு காரணம் அவித்யை; அந்த அவித்யை புரிந்துபோய்விட்டால் அப்பொழுது எல்லாம் ஒன்றாய் போய்விடுகிறது. ஞான, ஞேய, காரகன் இவைகளின் புரிவு இல்லாவிடில் விசேஷ விஞ்ஞானத்தின் உத்பத்தியாவது, அல்லது காமமாவது எங்குயிருக்கும்; இருக்கமாட்டாது. ஆதலால் சுழுப்தி காலத்தில் ஆத்மாவின் ஸ்வபாவம் எப்படிபட்டதென்றால், கீழ் சொல்லப்படுகிறது).

ஆப்த காமம், எல்லா காமமும் இவரிடம் வந்து சேர்ந்து ஐக்கியமாய்விட்டதால் அடையப்பட்ட காமமுள்ளவர்; ஆத்மகாமம், அப்பொழுது ஆத்மவஸ்துவைத் தவிர வேறு யாதொன்றும் இல்லாததினால் ஆத்மாவையே, அதாவது தன்னையே, காமமாக யுடையவர்; அகாமம், அப்பொழுது காம்மிய விஷயம் ஒன்றும் இல்லாததால் காமமற்றவர்; சோகாந்தரம், யாதொரு சோகமுமற்றவர்.

22. (ஆத்மா ஸ்வயம் ஜோதிஸ்வரூபராயும், அவித்யா காம கர்ம விநிர்முக்தராயும் இருக்கிறார் என்று சொல்லப்பட்டது. ஆத்மாவிற்கு அஸங்கத்வமும், மேற்படி அவித்யா காம கர்மங்களுக்கு ஆகந்துகத்வமிருப்பதாலும் அப்படி சொல்லப்பட்டது. இந்த விஷயத்தில் ஒரு ஸந்தேக மிருக்கிறது. ஸுஷுப்தி காலத்தில் ஜீவன் பரத்துடன் ஏகீபாவமாய் விடுகிறபடியால், ஸ்திரீ புருஷர்களைப்போல் ஒன்றும் யறியவில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறதே, அப்பொழுது தானே ஸ்வயம் ஜோதிஷ்டத்வம் வருகிறது; அதையும் ஏன் ஆகந்துகம் என்று சொல்லக்கூடாது? இந்த ஸந்தேகத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டுத்தான் ஸ்திரீ புருஷ திருஷ்டாந்தம் சொல்லப்பட்டது; அதனால் ஸ்வயம் ஜோதிஷ்டத்வம் எப்பொழுதுமிருக்கிறது. ஆனால் அது ஸுஷுப்தி காலத்தில்

ஸ்பஷ்டமாய் கிரகிக்கப்படுகிறது. அப்பொழுது யாதொரு கர்மத்தினுலும் ஸம்பந்தபடாதவனுயிருக்கிருன். எப்படியென்றுல்).

பிதா அபிதாவாக ஆகிவிடுகிருன். (அதாவது, புத்திர ஸம்பந்த நிமித்தமான கர்மத்திலிருந்து விடுபடுகிருன்; அப்படிபட்ட கர்மத்தால் ஸம்பந்தபடுகிறதில்லை). அப்படியே மாதா; அப்படியே, கர்மத்தால் ஜயிக்கப்பட்டதும், ஜயிக்கப்படவேண்டியதுமாயிருக்கிற லோகங்கள்; அப்படியே கர்மாங்க பூதர்களாயிருக்கிற தேவர்களும்; அப்படியே ஸாத்ய ஸாதன ஸம்பந்த விதாயகமாயிருக்கிற வேதங்களும்.

(அப்படியே அசுபகர்த்தினுலும் ஸம்பந்தப்படுகிறதில்லை) திருடன் திருட்டு கர்மத்துடன் ஸம்பந்தபடுகிறதில்லை; அப்படியே சிசுஹத்தி செய்தவன்; அப்படியே சாண்டாலன் (பிராமண யோனியில் சூத்ர பீஜத்திற்கு பிறந்தவன்); அப்படியே பௌல்கஸன் (க்ஷத்திரிய யோனியில் சூத்ர பீஜத்திற்கு பிறந்தவன்); அப்படியே ச்ரமணன் (ஸந்யாஸி); அப்படியே தாபஸன் (வானப்ரஸ்தன்); மேலும், யாதொரு புண்ணிய பாபங்களுடன் சம்பந்தப்படுகிறதில்லை. அப்பொழுது (ஸுஷுப்தியில்) ஹிருதயத்தினுள்ள (புத்தியை ஆச்ரயித்துக்கொண்டிருக்கிற) எல்லா சோகத்தையும் (காமத்தையும்) தாண்டினவனுய் ஆகிருன். (இதனுல் காமம் ஆத்மாச்ரயமல்ல).

23. (ஸ்திரீ புருஷர்களைப்போல் ஐக்கியபாவமிருப்பதால் ஸுஷுப்தியில் ஆத்மா ஒன்றையும் பார்க்கிறதில்லையென்றும், ஸ்வயம் ஜோதிஸ் என்றும் சொல்லப்பட்டது; ஸ்வயம் ஜோதிஷ்டத்வம் என்றுல் சைதன்யாத்ம ஸ்வபாவம்; அதாவது, அக்னிக்கு உஷ்ண ஸ்வபாவமிருப்பதுபோல, ஆத்மாவிற்கு மேற்படி ஸ்வபாவமிருக்கிறது. அப்படியிருக்க அந்த ஸ்வபாவம் ஆத்மாவை எப்படி விடும்? அப்பொழுது எப்படி யறியாமலிருப்பார்? சரிதான், அறிகிருர் என்றுலும், அப்பொழுது ஒன்றையும் யறியவில்லையென்று சொல்லப்படுகிறதே. ஒன்றுக்கொன்று விரோதப்படுகிறதே என்றுல், அப்படி விரோதமில்லை என்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

ஸுஷுப்தியில் அவர் பார்க்கவில்லை யென்று சொல்லுகிறதானது, அவர் அப்பொழுது பார்த்துக்கொண் டிருக்கிறவராக விருந்தே பார்க்காமலிருக்கிறார் என்று அர்த்தம்.

(அது எப்படி பார்க்கிறவர் என்று சொல்லலாம்? ஷுஸுப்தியில் மனஸ் முதலிய யாதொரு காணமுமில்லையே யென்றால்).

திருஷ்டாவினுடைய திருஷ்டிக்கு நாசம் வாறாது; அந்த திருஷ்டிக்கு அவிநாசித்வம் இருப்பதால் (அதாவது, பார்க்கிறவன் என்று சொன்னால் பார்க்கிறதொழில் இருந்தால் அல்லவோ அவனை அப்படி சொல்லலாம்; அந்த தொழில் இல்லாவிடில் அவனை பார்க்கிறவன் என்று சொல்லலாமா? ஆத்மா திருஷ்டாவென்று பேர் பட்டிருக்கிறதே! அப்படியிருக்க திருஷ்டித்வம் எப்படிபோகும்; போகாது; ஆதித்யாதிகள் எப்படி ஸ்வபாவமான ஜோதிஸால் எல்லாவற்றையும் பிரகாசப்படுத்துகிறதோ, அப்படிப்போல், ஆத்மா, நாசமற்ற, எப்பொழுதுமுள்ள ஜோதிஸ்ரூபமான திருஷ்டியினால் எல்லாவற்றையும் பிரகாசப்படுத்துகிறார். அப்படி திருஷ்டி ஒருநாளும் அவரை விட்டுப்போகாது. இதனால்தான் பார்த்துக்கொண்டேயிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது).

(இது சரிதான்; அவர் பார்க்கிறதில்லை யென்று மறுபடியும் சொல்லப்படுகிறதே, அது விரோதமல்லவா? யென்றால்).

தனக்கு வேறாக, இரண்டாவதாக விருக்கிற யாதொரு விஷயத்தையும் பார்க்கிறதில்லை யென்று அர்த்தம். (விசேஷ தர்சனமில்லை; தன்னைக்காட்டிலும் வேறாகவும், புரிபட்டதாகவும் எதாகிலும் இருந்தால் அல்லவோ அதை பார்க்கிறார் என்று சொல்லலாம்; அப்படிபட்ட விஷயம் ஒன்றுமில்லையே, ஆகலால் பார்க்கிறதில்லையென்று சொல்வது யுக்தமாயிருக்கிறது).

24–30. (பார்வை விஷயத்தில் சொல்லப்பட்டதுபோல் அடியில் கண்ட எழு விஷயங்களிலும் அந்தந்த விஷயத்திற்கு தக்கபடி பொருள்படுத்தவேண்டும்).

அப்படியே மோருகிறதில்லை; ருசிபார்க்கிறதில்லை; பேசுகிறதில்லை; கேட்கிறதில்லை; நினைக்கிறதில்லை; ஸ்பரிசிக்கிறதில்லை; அறிகிறதில்லை.

(அக்னிக்கு ஔஷ்ண்யம், பிரகாசம், ஜ்வலனம் என்ற பேதமுள்ள தர்மங்களிருப்பது போல் ஆத்மாவிற்கு திருஷ்டியாதி தர்மபேதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றதே, அப்பொழுது நாநாத்வம் உண்டாகிறதே, யென்றால், அப்படியில்லை; அப்படிப்பட்ட பேதங்களைக் காட்டுகிறதற்காக திருஷ்டியாதி தர்மங்களை எடுத்து சொல்லவில்லை; ஆனால் ஸுஷுப்தியில் ஆத்மா யறிகிறதில்லை என்று சொல்லப்பட்டதால் அவருக்கு சைதன்ய ஜோதிஸ் ஸ்வபாமில்லை யென்ற சங்கை வரத்தெரிய, அந்த சங்கையை நிவர்த்திசெய்ய வேண்டிய நிமித்தம் அப்படி பேதபேதமாக எடுத்து காண்பிக்கப்பட்டதே தவிற வேறில்லை.

ஜாகிரத் ஸ்வப்நங்களில் சக்ஷுராதி அனேக உபாதி யிருப்பதால், அவைகளின் வழியாக, ஆதமாவினுடைய சைதன்ய ஜோதிஸ் ஸ்பாவம் தோணப்படுகிறது. அந்த உபாதிகளின் வ்யாபாரங்களற்ற ஸுஷுப்தியில் மேற்படி ஸ்வபாவம் செவ்வையாக விளங்கப்படாமலிருப்பதால், உபாதிகளிருப்பதுபோல் காட்டி, மேற்படி ஸ்வபாவம் செவ்வையாய் எடுத்து காண்பிவிக்கப்படுகிறது. ஆதலால், ஸுஷுப்தியில் திருஷ்டியாதிபேத தர்மங்கள் இல்லை. ஆத்மா, உப்புக்கட்டிபோல், பிரஞான ஏகரஸகனரென்றும், விஞானம் ஆனந்தம், ஸத்யம், ஞானம் பிரஞானம் என்றும் அனேக சுருதிகளால் சொல்லப்படுகிறது. இது பிரமாணம். இதற்கு திருஷ்டாந்தமும் இருக்கிறது. எப்படி லோகத்தில் ஸ்வச்ச ஸ்வபாவமுள்ள ஸ்படிகமானது மஞ்சள், நீலம், சிகப்பு முதலிய வர்ணமுள்ள உபாதி சமீபத்திலிருக்கும்பொழுது அந்தந்த வர்ணமாகத் தோணப்படுகிறதோ, அப்படி, ஆத்மா உபாதி பேதங்களாக, பலதாக தோணப்படுகிறார். ஸ்படிகம் ஒன்றுதான்; அப்படியே ஆத்மாவும் ஒன்றுதான். சக்ஷுராதி உபாதிபேத ஸம்யோகத்தால் அந்த பிரஞானகனத்திற்கு திருஷ்டியாதி சக்திபேதம் தோணப்படுகிறது. எப்படி ஆதித்யாதி ஜோதிஸானது, அது சம்பந்தப்பட்ட வஸ்துவின் வர்ணமாக, காணப்படுகிறதோ, அப்படி ஆத்மா, உபாதியால், பேததர்மமுள்ளவராக தோணப்படுகிறார்.

ஆதலால், அவயவமில்லாத வஸ்துவில் நாநாத்வம் கல்பிவிக்கக்கூடாது. ஏனென்றால், அதற்கு திருஷ்டாந்த மில்லை.

ஆகாசம் எங்கும் போகிறது என்று சொல்வதும், பரமாணுக்களுக்கு கந்த ரஸாதிகுணம் உண்டு என்று சொல்வதும் கல்பனைகள்தான். ஆகாசம் போகிறதுமில்லை, வருகிறதுமில்லை; அது எங்கும் நிறைந்திருக்கிற வெட்டவெளி. பரமாணுவென்பது கந்தாத்மகமாயிருக்கிற அதி சூக்ஷ்மமான அவயவம்; அதற்கு மறுபடியும் கந்தத்வத்தை கல்பிவிப்பது சரியன்று.

அப்படிப்போல் ஆத்மாவிற்கு தர்மபேதங்கள் கல்பிவிக்கப்பட்டிருக்கிறன வே யன்றி யதார்த்தத்தில் பேதங்கள் இல்லை).

31. (ஜாக்ரத் ஸ்வப்னங்களில் போல், ஸுஷுப்தியில் ஆத்மாவிற்கு வேறானதாயும், புரிபட்டதாயுமிருக்கிற யாதொரு விசேஷத்தையும் ஆத்மா பார்க்கிறதில்லை யென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவருக்கு இப்படிபட்ட ஸ்வபாவம் இருக்கிற பக்ஷத்தில் ஏன் ஜாகிரத் ஸ்வப்னங்களில் மேற்படி ஸ்வபாவம் மாறுபட்டு போய், விசேஷத்தை ஆத்மா அறிகிறார்? அல்லது, விசேஷ விஞானமே இவருடைய ஸ்வபாவமாயிருக்கிற பக்ஷத்தில் ஏன் அது சுழுப்தியில் இல்லாமல்போய்விடுகிறது? என்ற ஸந்தேகம் வர அதற்காக அடியில் சொல்லப்படுகிறது).

ஜாக்ரத் ஸ்வப்னங்களில் ஆத்மாவிற்கு அன்னியமாயும், புரிபட்டதாயுமிருக்கிற வஸ்துக்கள் இருக்கின்றனபோல் அவித்யையால் தோற்றப்படுகிறபடியால், அன்யன் அன்யவஸ்துவைப் பார்க்கிறதுபோலும், மோருகிறதுபோலும், ருசிக்கிறதுபோலும், பேசுகிறது போலும், கேட்கிறது போலும், நினைக்கிறது போலும், தொடுகிறதுபோலும், அறிகிறது போலும் தோணப்படுகிறது. (எதார்தத்தில் ஆத்மா ஒன்றும் செய்கிறதில்லை; ஆதலால் ஆத்மாவிற்கு எப்பொழுதும் ஒரே ஸ்வபாவம்தான்).

32. (ஸுஷுப்தியில் அந்த அவித்யை சாந்தமாய் போய் விடுவதால், அப்பொழுது ஜீவன் ஸ்வயம் ஜோதிஸ் ஸ்வபாவமாகிற பரமாத்மாவுடன் கலந்து) ஜலம்போல் ஸ்வச்சமாயும், ஏகராயும், திருஷ்டாவாயும், அத்வைதராயும் ஆகிறார். அவரே பிர்மலோகம் (பிரமமாகிற லோகம், ஸ்தானம்), ஹே! ஸம்ராட்! கேளும், யென்று யாஞ்யவல்க்யர் சொன்னார்.

மறுபடியும் அவர் உபதேசிக்கிறதாவது—இதுதான் (ஸுஷுப்தியில் பரமாத்மாவுடன் ஐக்கியமாகிறதுபோல் ஐக்கியமாகிறதுதான்) ஜீவனுக்கு பரமமான (உத்தமமான) கதி; இதுதான் ஸம்பத்துக்கெல்லாம் உயர்ந்தது; இதுதான் பரமமான ஆனந்தம்; இந்த ஆனந்தத்தின் ஒரு அம்சத்தை பிடித்துக்கொண்டு (பிரமன்

முதல் மனுஷ்யன் வரையுள்ள) மற்ற பூதங்கள் பிழைத்திருக்கின்றன. (அதாவது, மேற்படி ஆனந்திலே நின்றும், அவித்யையால் புரிபட்ட ஸ்வபாவ முள்ளவர்களாக விஷயேந்திரியங்களுடன் சேர்ந்து இருக்கிறார்கள்).

33. (இப்பொழுது பிரமன் முதல் மனுஷ்யன்வரையிலுள்ள பூதங்களுடைய ஆனந்தங்களின் அளவு, தாரதம்ய கிரமமாக சொல்லப்படுகிறது; உப்புக் துண்டுகளினால் உப்பு மலையை அறிகிறதுபோல் அந்த பிரமானந்தத்தை யறியவேண்டிய நிமித்தம் சொல்லப்படுகிறது).

மனுஷ்யர்களுக்குள் எவன் எல்லா அவயவங்களுடன் கூடியவனே, ஸமிருத்தியுள்ள உபபோக உபகரணங்கள் உள்ளவனே, எல்லாருக்கும் எஜமானனே, மனுஷிய ஸம்பந்தமான யாவத்து போகங்களுடன் ஸம்பன்னனே அந்த மனுஷ்யனுடைய ஆனந்தம் மனுஷ்யர்களின் பரம ஆனந்தமென்று சொல்லப்படும். இந்த ஆனந்தத்திற்கு நூறு பங்குகள் கொண்டது ஜிதலோகர்களான (சிராத்தம் முதலிய கர்மங்களால் ஸந்தோஷத்தையடைந்தும், இந்த லோகத்தில் தங்கள் பெயரை விளங்கச் செய்துகொண்டும், ஸ்வர்கத்தில் சுகத்தை யனுபவித்துக்கொண்டிருக்கிற) பிதிர்க்களுடைய ஆனந்தம். இதற்கு நூறு பங்குள்ளது கந்தர்வர்களுடைய ஆனந்தம், இதற்கு நூறு பங்குள்ளது கர்ம தேவர்களினுடைய (யாகாதி கர்மங்களால் தேவத்வத்தை யடைந்தவர்களின்) ஆனந்தம். இதற்கு நூறு பங்குள்ளது ஆஜான தேவர்களின் (பிறப்பிலேயே தேவர்களாயிருக்கிறவர்களின்) ஆனந்தம்; மேலும், மனுஷ்யர்களுக்குள் எவன் வேதாத்யயனஞ் செய்தவனையும், பாபரஹிதனையும், இச்சையற்றவனையுமிருக்கிறானே அவனுடைய ஆனந்தம் இந்த ஆஜான தேவர்களின் ஆனந்தத்திற்கு சமானமானது. இந்த ஆனந்தத்திற்கு நூறு பங்குள்ளது பிரஜாபதியுடைய (விராட் புருஷனுடைய) ஆனந்தம்; மேலும், முன் சொல்லப்பட்ட சுரோத்ரியன், அவ்ருஜினன், அகாமஹதன் மேலான படியிலிருந்தால் அவனுடைய ஆனந்தம் இந்த பிரஜாபதி ஆனந்தத்திற்கு சமானம். இந்த ஆனந்தத்திற்கு நூறு பங்குள்

ளது பிரம்மானந்தம் (ஹிரண்யகர்பருடைய ஆனந்தம்); மேலும், மேற்சொன்ன சுரோத்ரியன், அவ்ராஜினன், அகாமஹதன் இன்னும் மேலானபடியில் இருந்தால் அவனுடைய ஆனந்தம் இந்த பிரம்மானந்தத்திற்கு ஸமம். இதுதான் பரம ஆனந்தம்; இந்த பரமானந்தம் தான் பிரமலோகம், ஹே! ஸம்ராட்! கேளும்! என்று யாக்ஞ்யவல்க்யர் சொன்னார்.

ஜனகர்—இதற்காக உங்களுக்கு ஆயிரம் மாடுகள் கொடுக்கிறேன். இன்னும் மேல் மோக்ஷத்தைப்பற்றி சொல்லுங்கள்.

இப்படி ஜனகர் சொல்ல, யாக்ஞ்யவல்க்யர் பயமடைந்தார். எதற்காகவெனில், மிகவும் புத்திசாலியாயிருக்கிற ஜனக ராஜா, தான் என்ன முடிவுகள் சொல்லியிருந்தபோதிலும் அவைகள் போதாவென தடுத்து மறுபடியும் மோக்ஷ ஸங்கதியைப்பற்றி கேட்கிறாரே என்று பயந்தார்.

34. (இவ்வளவு தூரம் யாக்ஞ்யவல்க்யர் சொல்லியிருக்க, மறுபடியும் ஜனகர் பிரச்னம் செய்வானேனென்றால், விஞானமயருயிருக்கிற ஜீவாத்மா ஸ்வப்பனத்தில் ஸ்வயம் ஜோதிராத்மாவாக காட்டப்பட்டார்; ஜாகிரத் ஸ்வப்னங்களில் ஆத்மாவிற்கு கார்ய காரண வ்யதிரிக்தத்தையும், காம கர்ம பிரவிவேகமும், அஸங்கராயிருப்பதைகொண்டு, மகாமத்ஸ்யாதி திருஷ்டாந்தத்தினால் காண்பிவிக்கப்பட்டது; ஸ்வப்னத்தில் அவித்யையின் காரியமாயிருப்பதாகவும் காட்டப்பட்டது; அவித்யையின் இருக்குகையும் நிர்தாரணம் செய்யப்பட்டது; இல்லாமலிருக்கிற ஒரு வஸ்துவை உண்டு என்று சொல்லும்படியான குணமுள்ள அத்யாரோபண ரூபத்வமும், அனாத்ம தர்மத்வமும் நிர்த்தாரணம் செய்யப்பட்டது; வித்யையின் கார்யமும், ஸர்வாத்ம ஸ்வபாவமும், ஸ்வப்னத்தில் பிரத்யக்ஷமாக அறியப்படுகிறதாகவும் காட்டப்பட்டது; அந்த ஸர்வாத்ம பாவம்தான் பரலோகமென்றும் ஸர்வாத்ம பாவம் ஆத்மாவினுடைய ஸ்வபாவமென்றும், அவித்யா, காமகர்மாதி ஸர்வஸம்ஸார தர்ம ஸம்பந்த அதீதமான ரூபமென்றும், அப்படி ஸுஷுப்தியில் செவ்வையாக கிருகிக்கப்படுகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது; ஸுஷுப்தியில் ஸம்பிரஸாதம், பரமசுகமென்றும் சொல்லப்பட்டது; அவித்யா காரியங்களாகவும், ஹேதுவுள்ளதுகளாயுமிருக்கிற மோக்ஷம், பந்தம் இவைகளும் எடுத்துச் சொல்லப்பட்டன; ஆனால் இவைகளெல்லாம் திருஷ்டாந்த பூதங்களாக சொல்லப்படுகின்றன. எதைக்குறித்து திருஷ்டாந்தமாக சொல்லப்பட்டதோ அந்த மோக்ஷ பந்தங்களைப்பற்றி இப்பொழுது ஸவிஸ்தாரமாக சொல்ல வேணுமென்பதர்க்காக மறுபடியும் ஜனகர் கேள்விகேட்டார்.

எப்படி இந்த ஜீவன், ஸுஷுப்தியில், மிருத்யு ரூபங்களாயிருக்கிற கார்ய கரணங்களை விட்டுவிட்டு, மறுபடியும் அவைகளை வகித்துக்கொண்டு, மகாமத்ஸ்யம்போல், ஜாகிரத் ஸ்வப்னங்களில் ஸஞ்சரிக்கிறானோ, அப்படி அவன், பிறந்தும், இறந்தும் மிருத்யு ரூபங்களுடன் சேர்ந்துகொண்டும், பிரிந்துகொண்டும், இஹபரலோகங்களில் ஸஞ்சரிக்கிறான். இந்த ஸஞ்சரணமானது திருஷ்டாந்த பூதமாக சொல்லப்பட்டது. அந்த ஸஞ்சாரணத்தை விஸ்தாரமாகவும், தெளிவாகவும் சொல்லும்பொருட்டு இது ஆரம்பிக்கப்படுகிறது. ஸுஷுப்தி ஸ்தானமானது மோக்ஷத்தினுடைய திருஷ்டாந்தம்).

ஸம்ப்ர ஸாதத்திலேயிருந்து (ஸுஷுப்தியில்), அதினின்றும் நழுவி ஸ்வப்னத்தில் வந்து, அவ்விடத்தில் ஸந்தோஷமடைந்து, திரிந்து, சிரமப்பட்டு, புண்ய பாபங்களையும் காணுகிறதுபோல் கண்டு மறுபடியும் ஜாகிரத் தசைக்கு இந்த ஜீவன் வருகிறான்.

35. (இனி ஸம்ஸாரம் வர்ணிக்கப்படுகிறது).

எப்படி லோகத்தில், அதிக பாரம்யேற்றப்பட்ட ஒரு வண்டியானது, வண்டிக்காரனுடன் கூடியதாய் சப்தம் செய்துகொண்டு போகிறதோ, அப்படிப்போல், இந்த சரீரத்திலுள்ள ஆத்மா (லிங்க சரீரத்தை உபாதியாயுள்ள ஆத்மா, ஜீவாத்மா), ஸ்வயம் ஜோதிஸ் ஸ்வபாவமுள்ள பரமாத்மாவால் அதிஷ்டிதனாகை, பிரகாசப்படுத்தப்பட்டவனாகை, ஜாகிரத ஸ்வப்னங்களைப்போல், இஹ பர லோகங்களில் பாப ஸம்ஸர்க வியோக லக்ஷணமுள்ள ஜன்ம மரணங்களால் ஸஞ்சரிக்கிறான்; மேற்படி வண்டியைப்போல் கதறிக்கொண்டு போகிறான்.

(அதாவது, சைதன்யாத்ம ஜோதிஸால் விளங்குகிறதும், பிராணனை பிரதானமாய் வைத்துக்கொண்டிருக்கிறதுமான லிங்க சரீரம் போகும்பொழுது, அதை உபாதியாயுடைய ஆத்மாவும் போகிறதுபோல் தோணப்படுகிறது. ஆத்மா எங்கும் நிறைந்த வஸ்துவானதால் அது போகிறதென்று சொல்லக்கூடாது).

எப்பொழுது அப்படி போகிறான் என்றால், மேல் மூச்சு வாங்கும்பொழுது போகிறான்.

(இந்த கஷ்ட சங்கதிகள் எல்லாம் வைராக்யம் வரவேண்டியதற்காக சொல்லப்படுகிறது).

36. (மேற்படி பெருமூச்சு எந்த காலத்தில், எதனிமித்தம், எப்படி, எதற்காக உண்டாகிறதென்றால் அதைப்பற்றி சொல்லப் படுகிறது).

சிரஸ் பாண்யாதியையுடைய, பிண்டமுள்ள பிராகிருதனான புருஷன், எப்பொழுது கிழத்தனத்தினாலாவது, வியாதியினாலாவது தேக கார்சியத்தை யடைகிறானோ, அப்பொழுது, மாம்பழம், அத்திப்பழம், அரசம்பழம் இவைகள் அதனின் பிடிப்பாகிய காம்புகளிலிருந்து விழுகின்றனபோல், சக்ஷுராதி அங்கங்களிலிருந்து விடுபட்டு (ஸுஷுப்தியில் தேகத்தை காப்பாற்றும்படி பிராணனை வைத்துவிட்டு ஆத்மா ஸஞ்சரிக்கப்போகிறதுபோல் அன்று, மரணத்தில் பிராணனுடனும், சுத்தமாய் இந்திரியங்களை விட்டு விட்டு), மறுபடியும் வேறு ஒரு தேகத்தையடையும்பொருட்டு, வந்த வழிப்படி கிளம்பிப்போகிறான்.

(அவனுடைய கர்மபலத்துக்கு தக்கபடி போகங்களை யனுபவிக்கவேண்டி மறுபடியும் ஜனிக்கிறான்).

37. (இந்த சரீரத்தை விட்டுப்போகிறவனுக்கு தேஹேந்திரிய வியோகம் வந்து விடுவதால் வேறு தேகத்தைக் கிரகிக்கிற விஷயத்தில் ஸாமர்த்யம் இல்லை; அல்லது, ஒரு ராஜனுக்கு வேலைக்காரர்கள் கிரஹம் கட்டி தயார்செய்வதுபோல், இவனுக்கு வேறு தேகத்தைச்செய்து காத்துக்கொண்டிருக்கும் அன்யர்களுமில்லை; இப்படியிருக்க வேறு சரீரத்தை கிரகிக்கிறது எப்படியென்றால், சொல்லப்படுகிறது).

எப்படியானால், லோகத்தில், ஒரு ராஜா தன் ராஜ்யத்தில், ஒரு ஊருக்கு வரும்பொழுது அந்தக் கிராமத்திலுள்ள உக்ரர்களும் (க்ருமத்திலுள்ள திருடன் முதலானவர்களை தண்டிப்பதற்காக பாபகர்மங்களைச் செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள், பிராமண ஸ்திரீகளுக்கும் சூத்ரர்களுக்கும் உண்டானவர்கள்), ஸூதர்களாகிற கிராம பெரிதனக்காரர்களும் (பிராமண ஸ்திரீக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தவர்கள்) அன்னங்கள், பானங்கள், விடுதிகள் இவைகளெல்லாவற்றையும் தயார்செய்து வைத்துக் கொண்டும், ராஜாவருகிறார், வருகிறார் என்று சொல்லிக்கொண்டும்

தயாராகவிருப்பார்களோ அப்படிப்போல் இந்த ஸம்ஸாரியை எதிர்பார்த்துக்கொண்டு, எல்லா பூதங்களும் (சரீரத்தை உண்டு பண்ணத்தக்க பஞ்ச பூதங்களும், கரணங்களுக்கு அநுகிரகம் செய்யத்தக்க எல்லா தேவதைகளும்), வேறொரு சரீரத்தை உண்டு பண்ணிவைத்துக்கொண்டும், இந்த பிரமம் (போக்தா) வருகிறார், வருகிறார் என்று தயாராகவிருப்பார்கள்.

38. (இப்படிப்போகிற சரீரியுடன் எவர்கள் கூடப்போகிறார்கள் என்றால்).

எப்படி ஒரு இடத்திற்குபோக இச்சைகொண்ட ஒரு ராஜனுடன், மேற்கண்ட அவருடைய பரிவாரங்கள், சொல்லப்படாமலே, தனக்குதானாய், எதிர்முகமாய் போவார்களோ, அப்படிப்போல், மரணகாலத்தில் இந்த ஆத்மாவுடன் வாகாதி எல்லா பிராணங்களும் முன்னோடிப் போகின்றன; அப்பொழுதுதான் மேல் மூச்சு உண்டாகிறது.

பிராமணம் 4.

(இதில் இன்னமும் ஸம்ஸாரத்தைபற்றி சொல்லப்படுகிறது. இந்த ஆத்மா இந்திரியங்களிலிருந்து விடுபடுகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விடுதலை எக்காலத்தில், எவ்விதம் உண்டாகிறதென்று விஸ்தாரமாய் சொல்லப்படுகிறது).

1. இந்த ஆத்மா எப்பொழுது துர்பலத்தை (தேகதௌர்பல்யத்தை) யடைந்து, விவேக அபாவத்தை யடைகிறதுபோல் இருக்கிறதோ (ஆத்மாவிற்கு ஸ்வதமாக விவேகா பாவமில்லாததால், போல், என்று சொல்லப்பட்டது), அப்பொழுது இந்த பிராணங்கள் (வாக் முதலிய இந்திரியங்களின் சக்திகள்) அவரை பின்தொடருகின்றன; (அதாவது, ஆத்மா அவயவங்களில் நின்றும் செவ்வையாகவும், சுத்தமாகவும் விடுபட்டுப்போகிறார்). (அது எப்படியென்றால்) இந்த ஆத்மா தேஜோ மாத்திரர்களாயிருக்கின்ற சக்ஷுஸ் முதலிய கரணங்களை (அதாவது, அந்த கரணங்களின் சக்திகளை) செவ்வையாக (கொஞ்சமேனும் பாக்கியில்லாமல்)

இழுத்துக்கொண்டு, ஹிருதயத்தை (புண்டரீக ஆகாரத்தை) யடைந்து, அவ்விடத்தில் அபிவ்யக்த விஞானராக யிருக்கிறார் (அதாவது, உள் அறிவு மாத்திரம் இருக்கிறது; இந்திரியங்கள் ஒன்றும் சலிக்கின்றதில்லை). எப்பொழுது சக்ஷுஸ் ஸம்பந்த மான புருஷன் (சக்ஷுஸ் அபிமானிதேவதை, ஆதித்யன்) அந்த சக்ஷுஸை விட்டு திரும்பிவிடுகிறானோ அப்பொழுது ரூபத்தைப் பார்க்க சக்தியற்றவனாகிறான்

2. அந்த சக்ஷுஸ் ஜோதிஸ் ஆத்மாவுடன் கலந்து ஒன்றா கிறது; அதினால் சுற்றத்தார்கள் இறந்துபோகிறவன் பார்க்கவில் லையே என்று சொல்லுகிறார்கள். அப்படியே (கிராணேந்திரியா பிமானி தேவதை, அதாவது அதிலிருக்கிற ஆத்மஜோதிஸின் அம்சம், அதைவிட்டு பிரிந்தவுடன்) அவனுக்கு வாஸனை தெரிய வில்லையே என்று சொல்லுகிறார்கள். அப்படியே நாக்கு, வாக்கு, காது, மனஸ், த்வக் இவைகளின் விஷயங்களிலும் அறிவில்லை யென்றும் சொல்லுகிறார்கள். (மேற்கண்ட) ஹிருதய சித்ரமுக மானது மேற்படி கரணங்களின் தேஜோமாத்திரைகளுடனும் ஆத்ம ஜோதிஸ்ஸுடனும் விளங்கிக்கொண்டிருக்கிறது. இப்ப டிபட்ட ஜோதிஸ்ஸுடன் விஞானமயனாயிருக்கிற (லிங்கோபாதி யுள்ள) ஜீவன் வெளிக்கிளம்பிப்போகிறான்.

(எவ்வழியாக போகிறான் என்றால்), (ஆதித்ய லோக பிராப்த் திக்கு நிமித்தமான ஞானம் அல்லது கர்மம் இவனுக்கு யிருந்தால்) கண் வழியாக ஜீவன் வெளிப்போகிறான்; (பிரமலோக பிராப்திக்கி அப்படி இடமிருந்தால்) உச்சித்தலை வழியாக போகிறான்; அப்ப டியே, அவனுடைய ஞானகர்மங்களுக்கு தக்கபடி சரீரத்தின் மைற்ற அங்கங்களின் வழியாகப்போகிறான். அந்த விஞானாத் மாவை பின்தொடர்ந்து (ஒரு ராஜனை ஸர்வாதிகாரியான மந்திரி போல்) பிராணன் போகிறது. அதை பின்பற்றி (பரிவாரஜனங் கள்போல்) வாக் முதலிய கரணங்கள் போகின்றன. அப்பொழுது (மரணகாலத்தில்), (இவனுடைய கர்மத்திற்கு தக்கபடி, அந்தக்க ரண விருத்தி விசேஷத்தை யாசிரியித்துக்கொண்டிருக்கிற வாஸ னாத்மகமான) விசேஷ விஞானமுள்ளவனாயிருக்கிறான். அப்படி பட்ட விஞானத்துடனும் போகிறான்.

(ஆதலால், வாஸனைகள் நல்லதாக விருந்தால் அதற்கு தக்க படி நல்லகெதி கிடைக்கும்; ஆதலால், மரணகாலத்தில் ஸ்வாதந்த்ரயம் வரவேண்டிய நிமித்தம் யோகதர்மானுஷ்டானமும், யோகாப்யாஸமும், எல்லா புண்யங்களின் ஸம்பாதனத்தையும் சிரத்தையுள்ள விவேகிகளால் செய்யப்படவேண்டியதென்று எல்லா சாஸ்திரங்களின் விதியாயிருக்கிறது. மரணகாலத்தில் இவைகளையெல்லாம் ஸம்பாதிக்க முடியாது. கர்மத்தால் இழுக்கப்பட்டவனுக்கு ஸ்வாதந்திரியம் எங்கு இருக்கும். ஆதலால் முன்னடியே புண்யாதிகளை ஸம்பாதித்து வைத்துக்கொள்ளவேண்டும். மேற்குறித்த ஸ்வாதந்தர அபாவம் முதலான அனர்த்தத்தைப் போக்கடிக்க வேண்டியதற்காக தான் இந்த உபநிஷத்துக்கள் பிரவிருத்திக்கின்றன. அவச்யமாய் வரவேண்டிய அநர்த்தத்தைப் போக்கடிக்க வேறு உபாயமில்லை).

(நிறைந்த பாரத்துடன் கதறிக்கொண்டுபோகிற ஒரு வண்டியில் உட்கார்ந்து போகிறவன் போல ஆத்மா தேகத்தை விட்டுப் பிரிந்துபோகிறான் என்று சொல்லப்பட்டது. அவனுக்கு போகும்வழியில் சாப்பிட அன்னம் எதுவெனில் கீழ்சொல்லப்படுகிறது).

இவன் ஸம்பாதித்திருக்கிற வித்யா (ஞானம்), இவன் செய்திருக்கிற கர்மம், பூர்வ பிரஜ்ஞை (சென்றுபோன கர்மானுபவ வாஸனை) இம்மூன்றுகளுடன் போகிறான். (இம்மூன்றுகளும் வழிக்கு அன்னமாயிருக்கின்றன; அதாவது, இவைகளுக்கு தக்கபடி பலபோகங்களையும், சிரமங்களையும் அனுபவிக்கின்றான்).

(இப்பிராமணத்தின்) தாத்பரியம்—இந்த வாஸனை அதிர்ஷ்ட கர்மத்தின் ஆரம்பத்திலும், ஏற்கனவே செய்யப்பட்ட கர்மங்களின் பரிபாகத்திலும் அங்கமாயிருக்கிறது; அதாவது, இந்த வாஸனைக்கு தக்கபடி அவைகள் உண்டாகின்றன. அந்த வாஸனை இல்லாவிடில் எவர்களுக்கும், எவ்விதமாகவும் கர்மத்தைச் செய்யவும், கர்மபலத்தை யனுபவிக்கவும் முடியாது. அப்யாஸமில்லாத விஷயத்தில் இந்திரியங்களுக்கு ஸாமர்த்தியமில்லை. பூர்வானுபவ வாஸனையுடன் பிரவிருத்தமாயிருக்கிற இந்திரியங்களுக்கு இந்த ஜன்மத்தில் அப்யாஸமில்லாமல் ஸாமர்த்தியமுண்டாகிறது. உலகத்தில் சிலருக்கு அப்யாஸமில்லாமலே சித்திரம் எழுதுகிறது முதலான கர்மங்க

ளில் ஸாமர்த்தியமிருப்பதை நாம் பார்க்கிறோம். எளிதான கர்மத்தில்கூட சிலருக்கு ஸாமர்த்தியம் இல்லாமலிருப்பதையும் பார்க்கிறோம். ஆதலால் இதெல்லாம் பூர்வானுபவ வாஸனை நிமித்தமாக விருக்கிறது. ஆதலால், பூர்வ பிரஜ்ஞையால் அல்லாமல் எவனுக்கும் கர்மம்செய்கிற விஷயத்திலும், ஏற்கனவே செய்யப்பட்ட கர்மத்தின் பலத்தை யனுபவிக்கிற விஷயத்திலும் பிரவிருத்தி யுண்டாகமாட்டாது. ஆகையால் இம்மூன்றும் மேற்படி வண்டியில் செல்லுகிறவனுக்கு வழிக்கண்ணமாயிருக்கின்றன. இப்பிரகாரம் இம்மூன்றும் கர்மதேகாந்தர பிரதி பத்தியுபயோக ஸாதனமாயிருப்பதால் சுபமாயிருக்கிற வித்தையையும் கர்மத்தையும் ஆசரிக்கவேண்டும். அப்படி யாசரித்தால் இச்சையான தேகத்தையெடுத்து இஷ்டப்படி யனுபவிக்க லாம்).

3. வித்யை, கர்மம், பூர்வ பிரஜ்ஞை இம்மூன்றுகளுடன், ஒரு பக்ஷி ஒரு விருக்ஷத்தைவிட்டு மற்றொரு விருக்ஷத்திற்குப்போகிறதுபோல், ஆத்மா முந்திய தேகத்தைவிட்டு வேறு தேகத்திற்குப்போகிறது. கட்டாயமாக வரவேண்டிய சரீரத்துடன் கர்மபலத்தை யனுபவிக்கும்படியான ஸ்தலத் திற்கு நயிப்பிவிக்கப்படுகிறான். இதில், பூர்வ தேகத்திலிருந்த கரணங்கள் இருந்தபடியே புது தேகத்தில் புகர்ந்து தொழிலை செய்கின்றனவா? அல் லது, ஒரு குடத்திற்குள் வைக்கப்பட்டிருக்கிற ஒரு தீபத்தின் வெளிச்சம், அந்த குடத்தை எடுத்துவிட்டால் அந்த வெளிச்சம் எங்கும் பறவுகிறதோ, அப்படி கரணங்கள் இந்த தேகத்தை விட்டவுடன் எங்கும் வியாபித்து, பிறகு, சுருங்கி, வேறு தேகத்தில் வந்து புகருகின்றனவா?. அல்லது மனோமாத்திரமாக விருக்கின்றவா? அல்லது, எவ்விதம் என்று சொல்லப் படுகிறது.

ஒரு புல்லட்டையானது எவ்விதம் ஒரு திருணத்திலிருந்து மற்றொரு திருணத்திற்குப் போகிறதோ, (அதாவது, ஒரு திரு ணத்தை விட விட அந்த விட்டபாகம் மற்றொரு திருணத்தில் போய்), கடையில் இதை முழுமையும் விட்டதும், அதை முழுவ தும் வியாபித்துக்கொண்டும் ஆகிவிடுகிறதோ, அப்படி, இந்த சரீர ஆத்மா, இந்த சரீரத்தை விட்டு, அவித்யையைப் போக்கடித்து (அதாவது, சேதனத்வமாக செய்துகொண்டு), தன்னைச் சுருக்கிக் கொண்டு இன்னொரு தேகத்திற்குப்போகிறது.

4. (இப்படி தேகாந்தர ஆரம்பவிஷயத்தில் நித்ய உபாதான காரணமாயிருக்கிற பஞ்சபூதங்களில் நின்றும் அம்சம் யெடுத்து வேறு தேகம் செய்யப்படுகிறதா ? அல்லது, அபூர்வமான ஒரு தேகம் செய்யப்படுகிறதா வென்றால் சொல்லப்படுகிறது).

ஒரு தட்டான் எவ்விதம் ஒரு பெரிய தங்க கட்டியிலிருந்து ஒரு துணுக்கை யெடுத்து, அதனால் நூதனமாயும், அழகாகவும் இருக்கப்பட்ட ஒரு நகையைச் செய்கிறானோ, அவ்விதம் அளவற்றதாகவிருக்கிற பஞ்சபூதங்களிலிருந்து ஒரு அம்சத்தை யெடுத்து அவித்தையைப்போக்கடித்து, நூதனமாகவும், அழகாகவுமிருக்கிற வேறு தேகத்தை தானே யுண்டுசெய்துகொள்ளுகிறான். அந்த தேகம் பிதிருலோக போக்யத்துக்குத் தக்க தேகமாகவாவது, அப்படியே, கந்தர்வ, தைவ, பிராஜாபத்ய, பிரம்மலோக போக்யத்துக்குத் தக்க தேகமாகவாவது இருக்கும்.

5. அப்படிப்பட்ட ஆத்மாத்தான் பிரமம் (பரமாத்மா); விஞ்ஞானமயன் (புத்திமயன், ஜீவன்); மனோமயன் (மனஸில் எண்ணுகிறவன்); பிராணமயன் (ஐந்து விருத்திகளை யுடையவன்); சக்ஷுர்மயன் (கண் வழியாகப்பார்க்கிறவன்); காதுவழியாக கேட்கிறவன்; பிருதிவீமயன் (பிருதிவீ அம்சம் அதிகமுள்ளசரீராங்கன்); ஜலாம்சம் அதிகமுள்ள சரீராங்கன்; வாயு அம்சமதிகமுள்ள சரீராங்கன்; ஆகாசமயன்; தேஜோமயன் (தேவர்கள்); அதேஜோமயன் (பிரேதாதி சரீரங்கள்); காமமயன் (இச்சையுள்ளவன்); அகாமமயன் (இச்சையில்லாதவன்); கோபமுள்ளவன்; கோபமில்லாதவன்; தர்மமயன்; அதர்மமயன்; ஸர்வமயன் (எல்லாமாகவிருக்கிறவன்); அந்தமயன் (எதெது பரோக்ஷமாகவிருக்கிறதோ அந்த வஸ்து மயமாகவிருப்பவன்); இந்த மயன் (பிரத்யக்ஷமான வஸ்துமயமாகவிருப்பவன்); எப்படி செய்ய இச்சையோ அப்படிச் செய்கிறவன்; எப்படி நடக்க இச்சையோ அப்படி நடக்கிறவன்.

ஸாது காரியத்தைச் செய்கிறவன் ஸாதுவாக விருக்கிறான்; பாபத்தைச் செய்கிறவன் பாபியாகிவிடுகிறான்; புண்ணியம் செய்தால் புண்ணியசாலி; பாபம் செய்தால் பாபி. (அதாவது, அதற்கு உண்டான பலத்தை யனுபவிக்கக் கடமைப்படுகிறான்).

ஆதலால் சொல்லுகிறார்கள்—இந்த புருஷன் (ஜீவன்) காமமயன் என்றும் (காமம் பாப புண்ணியத்திற்கு காரணம்; பாப

புண்ணியம் சரீர கிரஹணத்திற்கு காரணம்); எப்பொழுது காம முண்டாயிற்றோ அப்பொழுது ஒரு நிச்சிய புத்தி யுண்டாகிறது; எப்பொழுது நிச்சிய புத்தியுண்டோ அப்பொழுது கர்மத்தைச்செய்கிறானோ அப்பொழுது அதனால் சம்பந்தப்பட்டுப் போகிறான் (அதாவது, அதனுடைய பலன்களை யனுபவிக்கும்படி நேரிடுகிறது). (ஆதலால், காமம் இந்த ஸம்ஸாரத்திற்கு மூலமாக விருக்கிறது; அதை யறுத்துவிடவேண்டியது).

6. இந்த விஷயத்தில் அடியில்கண்ட மந்திரம் இருக்கிறது. அதாவது, இந்த ஜீவன் ஆசையால் கட்டுப்பட்டவனாக (கர்மபலத்துடன் கட்டுப்பட்டவனாக), அந்தக் கர்மத்துடன்கூட அந்த குறிப்பை யடைகிறான்; (எதை யெனில்) எதனிடம் இவனுடைய அபிலாஷை நிச்சயமாக வைக்கப்பட்டிருக்கிறதோ அந்த மனஸாகிற குறிப்பை (யடைகிறான்). (ஆதலால், ஸம்ஸாரத்திற்கு காமமே மூலமென்பது ஸித்தம்; காமத்தை விட்டுவிட்ட பிரமவித்திற்கு கர்மங்களிருந்தபோதிலும் அவைகளுக்கு பலன்கள் இல்லாமல் போய்விடும்).

(அந்தக் குறிப்பையடைந்து எது செய்கிறான் யெனில்) எந்தெந்த கர்மத்தை இவ்வுலகில் செய்திருக்கிறானோ அந்த கர்மங்களுடைய பலன்களையெல்லாம் யனுபவித்து, மறுபடியும் கர்மங்களைச்செய்ய, கர்மத்தை பிரதானமாக வைத்துக்கொண்டிருக்கிற இந்த உலகத்திற்கு செல்லுகிறான். (காமமுள்ள ஸம்ஸாரியின் கதி இதுவே).

காமமற்றவன் ஒரு பக்கத்திலும் பிறக்கிறதில்லை; காமமில்லாதவனுக்கு கிரியையில்லை; காமமில்லாதவன் மோக்ஷத்தை யடைகிறான். அகாமயமானன் யாரெனில், அகாமன் (காமமில்லாதவன்); (அகாமன் யாரெனில்) நிஷ்காமன் (தன்னிடமிருந்து காமங்கள் வெளிப்பட்டுபோனவன்); (நிஷ்காமன் யாரெனில்) ஆப்தகாமன் (எவனால் எல்லாக் காமங்களும் யடையபட்டதுகளோ அவன்); (ஆப்தகாமன் யாரெனில்) ஆத்மகாமன் (எவனுக்கு ஆத்ம வஸ்துவைத்தவிற வேறொன்றிலும் காமமில்லையோ அவன்). அப்படிப்பட்டவனுடைய பிராணன்கள் உயரக்கிளம்பிப் போ

கின்றதில்லை; இவ்விடத்திலேயே (தேகத்தை விடாமலே) பிரமமாகி, பிரமத்தை யடைகிறான்.

(எவனுக்கு ஆத்மா ஸர்வமாக விருக்கிறதோ அவனுக்கு ஆத்மாவைக்காட்டிலும் வேறான வஸ்து இச்சிக்கவேண்டுவதாக ஒன்றும் இல்லை. அப்படிப்பட்டவனுக்கு இச்சிக்கப்படவேண்டுவது யாதொன்றுமில்லாததால் கர்மமில்லை. எவர்கள் பிரத்யவாயம் வருமென்று நினைத்து கர்மங்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் ஆத்மாவாக தோற்றமில்லை. அவர்கள் பிரமவித்துக்கள் அன்று. ஆத்மாவைக் காட்டிலும் பிரத்யவாயம் என்பது ஒன்று வேறாக இருக்கிறது என்ற பாவம் உண்டாகிறபடியால் பிரமவித்துக்கள் ஆகமாட்டார்கள். ஆத்மா அசநாயத்யதீதன், நித்யன், பிரத்யவாயத்தில் ஸம்பந்தப்படாதவன் என்று எவனால் யறியப்படுகிறதோ அவன்தான் பிரமவித். ஆதலால், காமமற்றவன் மோக்ஷத்தை யடைகிறான்).

7. (இந்த ஆத்மா பிரமமாகவே யிருக்கிறபொழுது, பிரமமென்றது வேறுபோல் பிரமத்தை யடைகிறான் என்று சொல்லப்படுவானேனெனில்—பிரமத்தை யடைகிறான் என்பது உபசாரவார்த்தையல்லாது வேறில்லை; தேகங்கள் மாத்திரம் வெவ்வேறாக விருக்கின்றனவே தவிர ஆத்மா ஒன்றுதான்.

இதில், ஸம்ஸாரம் வர்ணிக்கப்பட்டது; ஸம்ஸாரத்திற்கு ஏதுவாயிருக்கிற அவித்யா, கர்ம, பூர்வ பிரஜ்ஞைகளைப்பற்றியும் சொல்லப்பட்டது; உபாதி பூதங்களாகவும், காரியகாரண லக்ஷணங்களாகவுமிருக்கின்ற எந்த பூதங்களால் சூழப்பட்டவனாக ஸம்ஸாரித்வத்தை யனுபவிக்கிறானோ அவைகளைப்பற்றியும் சொல்லப்பட்டது; அவைகளுக்கு ஏதுக்களான தர்மா தர்மங்களை, முதலில், பூர்வபக்ஷமாகக் காட்டி, பிறகு, காமமே ஸாக்ஷாத் ஹேதுவாக விருக்கிறதென்று காண்பிவிக்கப்பட்டது; பிறகு, ஸர்வாத்ம பாவமான மோக்ஷமும் சொல்லப்பட்டது; மோக்ஷத்திற்கு காரணம் ஆத்மகாமதாவென்றும் சொல்லப்பட்டது; ஆத்மஞானம் இல்லாமல் அது உண்டாகமாட்டாது; அதற்கு காரணம் பிரமவித்யா;

பந்தன காரியம் அவித்யா; மோக்ஷமும், மோக்ஷ ஸாதனமும் சொல்லப்பட்டன; இவைகளை உருதிப்படுத்திச் சொல்வதற்காக இந்த பிராமணம் யேற்பட்டிருக்கிறது; அதாவது).

இவ்விஷயத்தில் அடியில்கண்ட ச்லோகம் இருக்கிறது:— எப்பொழுது இவனுடைய ஹ்ருதயத்தில் ஆசிரயித்துக்கொண்டிருக்கிற (புத்திர, வித்த, லோக முதலான லக்ஷணமுள்ள) எல்லா ஆசைகளும், வேருடன், அற்றுப்போகின்றனவோ, அப்பொழுது, மர்த்தியன் அமிருதன் ஆகிறான். பிரமத்தைச் சேருகிறான். ஆதலால், வித்வானுடைய பிராணன்கள் உயரக் கிளம்பிப்போகிறதில்லை; இருந்த விடத்திலேயே ஸ்வகாரணமாயிருக்கிற புருஷனாகிய பிரமத்தினிடத்தில் ஐக்கியமாகின்றன.

(இவ்விதம் ஐக்கியமாகிவிட்டால், எப்படி ஸர்வாத்மாவாக ஆகி, மறுபடியும் ஒரு தேகத்தை யடையாமல், ஸம்ஸரிக்காமலிருக்கிறான் என்றால், அதற்கு திருஷ்டாந்தத்துடன் சொல்லப்படுகிறது). லோகத்தில், ஒரு பாம்புச்சட்டையானது அந்தப் பாம்பால் விடப்பட்டு மிருதமாக புத்தண்டையில் கிடக்கிறதோ, அப்படிப்போல், இந்தச்சரீரம், பாம்பு ஸ்தானீயமாகிய ஜீவனால் விடப்பட்டு, இறந்துபோய், கீழே கிடந்து போகிறது; அப்பொழுது, ஆத்மா அமிருதனாகிய பிரமதேஜஸாகவே ஆய்விடுகிறான்.

(ஜனகர்). இப்படி உபதேசித்ததற்காக தங்களுக்கு (யாஞ்ய வல்க்யருக்கு) இன்னம் ஆயிரம் மாடுகள் கொடுக்கிறேன்.

8. (ஆத்மகாமனாகிய பிரமவித்திற்குத்தான் மோக்ஷம் என்பதற்கு விஸ்தாரமாக அநேக மந்திரங்கள் சொல்லப்படுகின்றன).

இவ்விஷயத்தில் அடியில்கண்ட மந்திரங்கள் உள:—

ஸூக்ஷ்மமாயும் (அறியப்படுகிறது வருத்தமானதால் ஸூக்ஷமம்), விஸ்தாரமாயும் (ஸ்பஷ்டமான தாண ஹேதுவாயிருப்பதால் விஸ்தாரம்), புராணமாயும் (எப்பொழுதுமுள்ளதாயும்) இருக்கிற மார்க்கம் பிரமவித்தை என்றது; இது என்னால் அடையப்பட்டது (வேத புருஷன்சொல்); பின்னும், என்னால் அனுபவிக்கப்பட்டது; அப்படிப்பட்ட மார்க்கத்தால் பிரமவித்துக்கள் ஸ்வர்க்

கலோகமான பரபிரமத்தை யடைகிருர்கள். இந்த தேகத்தை விடுவதற்கு முன்னமே (அதாவது, ஜீவந்தர்களாகவிருக்கும்பொழுதே) யடைகிருர்கள்.

9. (இந்த மோக்ஷ மார்க்கத்தில் சில முமுக்ஷுக்கள் விரோத சங்கதிகள் சொல்லுகிருர்கள்; எப்படியென்ருல்).

இந்த மார்க்கத்தில் சுத்த வெளுப்பாக இருக்கிறதென்று சிலரும், மஞ்சள் நிறமுள்ளதென்று சிலரும், கருப்பு என்று சிலரும், பச்சையென்று சிலரும், சிகப்பு என்று சிலரும் பலவிதமாகச் சொல்லுகிருர்கள். (அதாவது, ச்லேஷ்மாதி ரஸங்களால் நிறைந்திருக்கின்றதும், பலவர்ணங்களாகத் தோற்றப்படுகின்றதுமான ஸுஷும்ண முதலிய நாடிகளின் வழியாக இருக்கிறதென்று, அதாவது கேவலம் யோகாப்யாஸத்தால் மட்டும் பிரமத்தை யடையலாமென்று சொல்லுகிருர்கள்; அப்படியல்ல; இவைகள் மோக்ஷமார்க்கங்கள் அன்று; ஸம்ஸாரத்திற்குப்போகும்படியான மார்க்கங்களே; பிரம்மாதி லோகங்களுக்கு இந்த மார்க்கத்தின் வழியாகப்போகலாம்; மறுபடியும் திரும்பத்தான் வேண்டும். பின்னர் மோக்ஷமார்க்கம் எது வென்ருல்). ஆத்ம காமத்தால் ஆப்தகாமனுகி, எல்லாக் காமங்களையும் விட்டு, அணைந்த தீபம் போல், சக்ஷுராதி இந்திரியங்களின் விருத்திகள் ஒழிவடைந்து இருக்குகையானது ஞாநமார்க்கம். இந்த மார்க்கத்தின் வழியாக பிரமவித் மாத்திரம் பிரமத்வத்தை யடைகிறதில்லை; பிரமவித்திற்கு அன்னியனும் யடைகிருன்; அவன் யாரெனில்—முன்னால் புண்யம்செய்து, பிறகு ஏஷணைகளைவிட்டு, பரமாத்ம தேஜஸில் தன்னுத்மாவைச் சேர்த்தவனும் (அதாவது யோகியும்) யடைகிருன்.

10. எவர்கள் அவித்யயை (ஸாத்ய ஸாதக லக்ஷணமாயிருக்கிற கர்மத்தை) உபாஸிக்கிருர்களோ அவர்கள் இருளாகிற தமஸை (ஸம்ஸாரத்திற்கு கொண்டுபோகும் கெதியை) யடைகிருர்கள். அந்த அவித்தைக்கு உபயோகமாயிருக்கிற வேதங்களின் கர்மகாண்ட வித்தையில் எவர்கள் ரதாளாக விருக்கிருர்களோ அவர்கள் இன்னமும் அந்த தமஸையடைகிருர்கள்.

11. (அப்படி அவர்கள் தமஸையடைவதால் என்ன தோஷம் ஸம்பவிக்கிறதெனில்).

தமஸால் சூழப்பட்டிருக்கிற அஸுகமான லோகங்களை யடைகிறார்கள்; மறுபடியும் ஸம்ஸாரத்தை யடையும்படி செய்கிறது; இவர்கள் அவித்வான்கள்; புத்தியில்லாத பிராகிருத ஜனங்கள்.

12. எந்த புருஷன் தன் ஆத்மாவை ஸர்வ பிராணி பிரத்யய ஸாக்ஷியாகவும், நேதி நேதியென்று நிர்தேசிக்கப்பட்டவனாகவும், ஸர்வ பூதஸ்தனாகவும், நித்யனாகவும், சுத்தனாகவும், புத்தனாகவும், முக்தனாகவுமிருக்கிற பரமாத்மாவாக விருக்கிறோம் என்று அறிகிறானோ, அவன், எதை இச்சித்துக்கொண்டு, எதன் பிரயோஜனத்தின்பொருட்டு தன் சரீரத்தை வருத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். (அப்படிப்பட்டவனுக்கு யாதொரு காமமுமில்லையென்று தாத்பரியம்; காயக்லேசம் வேண்டியதில்லை).

13. யாருடைய ஆத்மா, நாம் பரபிரமமாயிருக்கிறோம் என்று அனுபவிக்கப்பட்டு, ஸாக்ஷாத் கரிக்கப்பட்டிருக்கிறதோ அவன்தான் விச்வகிருத், ஜகத்தை உண்டாக்கினவன். ஸர்வத்தையும் சிருஷ்டித்தவன். ஸர்வமும் அவனுடைய லோகம்; கஹநமாயிருக்கிற இந்த தேகத்தில் பிரவேசித்திருக்கிற ஆத்மா அவனுடைய லோகமே (அதாவது, பரமாத்மாவே).

14. நாம், இவ்விடத்தில், தீர்க்க காலம் அஞான நித்ரா மோகிதர்களாகவிருந்து, பிறகு, எப்படியோ வருத்தப்பட்டு பிரமத்வத்தையடைந்து, அறிந்தவர்களாக ஆகிவிட்டோம். (இது பிரம ஸாக்ஷாத்கார அனுபவம் வேண்டுமென்பதைக் காட்டுகிறது). இல்லாவிடில் (அப்படி அறிந்து கொள்ளாவிடில்) பெரிய நஷ்டம் உண்டாகும். (எப்படியெனில்) அறிந்தவர்கள் அமிருதத்வத்தை யடைகிறார்கள். தெரியாதவர்கள் துக்கத்தை யடைகிறார்கள்.

15. எப்பொழுது ஒருவன், (எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு பரம காருணிகனாகிய ஆசாரியனையடைந்து அவரிடமிருந்து பிரஸாதம்பெற்ற) பிறகு, உண்டான யாவற்றிற்கும், உண்டாகப்போ

கிற யாவற்றிற்கும் ஈசனாயிருக்கப்பட்ட ஆத்மாவைப் பார்க்கிறானோ, அப்பொழுது அவனுக்கு அவரிடத்திலிருந்து ரக்ஷணை வேண்டியதில்லை. (அதாவது, அத்துடன் அவன் ஒன்றாக கலந்து போவதால் ரக்ஷணை அவசியமில்லை; தனிப்பட்டுபயந்து நின்றால் அன்றோ இவன் ஈசுவரனுடைய ரக்ஷணையை எதிர் பார்க்க வேண்டும்).

16. ஸம்வத்ஸரமென்ற காலாத்மா, எந்த ஈசானனைக்காட்டிலும் (பரமாத்மாவைக்காட்டிலும்) கீழ்ப்பட்டதோ, அது தன் அவயவங்களாகிய அஹோராத்ரங்களுடன் இருக்கிறது. இது ஜோதிகளுக்குள் ஜோதியாக விருக்கிறது. (அதாவது, ஆதித்யாதி ஜோதிகளைப் பிரகாசப்படுத்துகிறது). அதுதான் அமிருதம்; ஆயுஸ். இவ்விதமாக காலாத்மாவை தேவர்கள் உபாஸிக்கின்றார்கள். ஆனதால், அவர்கள் மரணமில்லாதவர்களாகவும், தீர்க்காயுஸ் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

17. மேலும், எந்த பிரமத்தில் ஐந்து, ஐந்து ஜனங்களும், ஆகாசமும்வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்த ஆத்மாவை அமிருதமான பிரமமென்று நினைக்கிறேன். (கந்தர்வர்கள், பிதிருக்கள் தேவர்கள், அசுரர்கள், ரக்ஷஸ்கள் இவைகள் ஐந்து). அப்பொழுது நான் வித்வானாகவும், அமிருதனாகவும் ஆய்விடுகிறேன்.

18. மேலும், எவர்கள் அந்த பிரமத்தை பிராணனுக்கு பிராணனாகவும் (அதாவது பிராணனுடைய தொழிலை நடத்தும்படி பிரேரணைசெய்கிற ஜோதிஸாகவும்), நேத்திரத்திற்கு நேத்திரமாகவும், சுரோத்திரத்திற்கு சுரோத்திரமாகவும், மனஸுக்கு மனஸாகவும் இருக்கிறதாக அறிகிறார்களோ அவர்கள் அந்தப் பிரமத்தை சிரந்தன வஸ்துவாகவும், முன்னியே யிருக்கிறதாகவும் நிச்சியமாய் அறிகிறார்கள்.

19. (அந்த பிரம தர்சன ஸாதனம் சொல்லப்படுகிறது). ஆசார்யரால் உபதேசிக்கப்பட்டு, பரமார்த்த ஞானத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட மனஸால் அந்தப் பிரமம் பார்க்கப்படவேண்டியது. இவ்விடத்தில் நாநாவாக(பலதாக)ஒன்றுமில்லை. எல்லாம் பிரமமே.

எவன் இவ்விடத்தில் பலதாக பார்க்கிறானோ அவன் மரணத்தில் நின்றும் மரணத்தையடைகிறான் (அதாவது, ஸம்ஸாரமுண்டு).

20. இந்த பிரமம் ஒரே பிரகாரமாகவே பார்க்கப்படவேண்டியது. (அதாவது, விஞான கந ஏக ரஸமாகப் பார்க்கப்படவேண்டியது). அது இன்னும் எப்படிபட்டதெனில், அப்ரமேயம், அளவிலகப்படாதது; நித்யமுள்ளது; தர்மா தர்மாதி மல மற்றது; அவ்யாக்ருத ஆகாசத்தைக்காட்டிலும் உயர்ந்தது; பிறப்பில்லாதது; எல்லாவற்றைக்காட்டிலும் பெரிது; நாசமற்றது.

21. இப்படிப்பட்ட ஆத்மாவை புத்திமானாகிய பிராமணன் (குருபதேசத்தாலும், சாஸ்திரத்தாலும்) அறிந்து, அதனால் முடிவான பிரஞையை யடையட்டும். (அதாவது, இந்த பிரஞையைக் கொடுக்கத்தக்க ஸாதனங்களாகிற ஸந்யாஸ, சம, தம முதலியவைகளைச் செய்யட்டும்). வெகு சப்தங்களை தியானம் செய்ய வேண்டாம். (ஓம் கார, ஸ்வல்ப அக்ஷரத்தை தியாநம் செய்தால் போதும்; அல்லது, அதிக பேச்சுகளை வளர்த்திச் சொல்லவேண்டாம்). அப்படி அதிகப் பேச்சுகள் பேசுவது வாக்கிற்கு சிரமமேதவிற வேறு பிரயோஜனமில்லை.

22. (இதில், பந்த மோக்ஷங்கள், அதின் ஹேதுக்களுடன், சொல்லப்பட்டன. பிறகு, மோக்ஷ ஸ்வரூபமும் விஸ்தாரமாக சொல்லப்பட்டது. இந்த ஆத்மவிஷயத்தில் எல்லா வேதமும் உபயோகப்படும் என்பதைப்பற்றிச் சொல்ல இந்த கண்டிகை ஆரம்பிக்கப்படுகிறது; அதாவது, காமிய விஷயமாயிருக்கிற பாகம் தவிற மைத்தபாகமெல்லாம் உபயோகப்படும்).

அப்படிப்பட்ட இந்த ஆத்மாவானவர் மகான் (எல்லாவற்றையும் காட்டிலும் பெரிது); பிறக்காதவர்; பிராணன்களுள் விஞானமயமுள்ளது; அந்தர் ஹிருதயத்திலிருக்கிற ஆகாசத்தில் புத்தி விஞானத்துடன் கூடினவர் (அல்லது, சுழுப்தி காலத்தில் ஹிருதயாகாசமென்ற பெயருள்ள நிரூபாதிகராகவும், விஞானமயராகவும், ஸ்வஸ்வரூபியாயுமிருக்கிற பரமாத்மாவிடத்தில் கலந்து, சேர்ந்துயிருக்கப்பட்ட ஜீவன்). (பிரமன், இந்திரன் முதலான) எல்லோரையும் தன்வசப்படுத்திக் கொண்டிருப்பவர்; அப்படிப்

பட்ட எல்லோரையும் ஆளப்பட்டவர்; (மந்திரி முதலானவர்களின் ஒத்தாசையின்பேரில் ஆளுகின்ற ஒரு ராஜாவைப்போல் அன்று, ஆனால்) எல்லோருக்கும் அதிபதி; ஸ்வதந்திரர்; ஸாதுவாகவிருக்கப்பட்ட கர்மத்தால் அவர் பெரியவராகப் போகிறதில்லை; அஸாதுவாக விருக்கப்பட்ட கர்மத்தால் அவர் கீழ்ப்பட்டவருகப் போகிறதில்லை; (அதாவது, அவர் எக்கர்மத்துடனும் ஸம்பந்தப்படவில்லை).

மேலும், இவர் ஸர்வேசுவரர்; (பிரமன்முதல் ஸ்தம்ப பூச்சிவரையுள்ள) எல்லா பூதங்களுக்கும் அதிபதி; அப்படிப்பட்ட எல்லா பூதங்களையும் இரக்ஷிக்கிறவர்; இந்த பதினான்கு லோகங்களையும் அதனின் நிலையை விட்டுப் பிசகாமல் நிலைநிறுத்தி தரித்துக்கொண்டிருக்கிற ஸேது, கரையாயிருக்கிறவர்; இப்படிப்பட்ட, உபநிஷத்தினுல் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிற புருஷனை பிராமணர்கள் (பிரம, க்ஷத்திரிய, வைச்யர்கள் எல்லோரும்) வேதாநுவசனத்தினுல் (வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற கர்மகாண்ட விதிப்படி அனுஷ்டிப்பதினுல்) அறிய விரும்புகிருர்கள்; (அதாவது, காம்ய பாகங்களாயிருக்கிற கர்மங்கள் அல்லாத மற்ற நித்ய கர்மங்களை பிராமணன் கட்டாயமாக அனுஷ்டிக்கவேண்டும்; உபநிஷத்தாலேயே அறியப்படவேண்டிய பிரமத்தை இந்த நித்யகர்மானுஷ்டானத்தால் எப்படி அறியக்கூடுமெனில், அப்படிப்பட்ட கர்மத்தை யனுஷ்டிப்பதால் சித்தத்திற்கு சுத்தி யுண்டாகிறது; அப்படி சுத்தமுள்ளவர்கள்தான் ஆத்மாவை தடையன்றி அறிய சக்தியுள்ளவர்களாயிருக்கிருர்கள்).

(எப்படிபட்ட வேதானு வசனத்தால் என்றால்) யஞ்ஞத்தாலும், தானத்தாலும், தபஸாலும் (அறிய விரும்புகிருர்கள்). (இவைகளெல்லாம் காமிய ரகிதமாகவிருக்கவேண்டும்). இவைகளால் விசுத்த ஆத்மாவாகி, பிறகு, பிரமத்தையறிந்து முனிகளென்ற யோகிகளாகிவிடுகிருர்கள். (இந்தப்படி காம்யவர்ஜிதமாயிருக்கிற நித்ய கர்மத்தால் உண்டான ஞானோத்பத்தி மூலமாக மோக்ஷ ஸாதனத்வம் உண்டாகிறது; மநநம், நினைப்பு, அதாவது தத்தேகத்யானம், இதனுல் முனியென்று பெயர்).

இந்த ஆத்மாவையே தங்களுக்கு லோகமாக இச்சிக்கிறவர்கள் ஸர்வகர்மங்களையும் விட்டுவிட்டுப் போகிறார்கள்.

(கர்மங்களை எப்படி விட்டு எங்குபோகிறார்கள் என்றால் அதற்கு சொல்லப்படுகிறது; அர்த்தவாதமாக, அதாவது, அதிகஸ்தோத்திரமாகச் சொல்லப்படுகிறது). பூர்வத்தில் உள்ள வித்வாம்ஸர்கள் பிரஜையினால் நமக்கு என்ன பிரயோஜனமென்று (எண்ணி) பிரஜையை இச்சிக்கிறதில்லை.

அப்படிப்பட்ட நமக்கு இந்த ஆத்மாதான் லோகமென்று கைக்கொண்டு, புத்திரேஷணை, வித்தேஷணை, லோகேஷணை இம்மூன்றையும் விட்டு விட்டு பிக்ஷைவாங்கி திரிகின்றார்கள். (இந்த சங்கதி முன்னும் சொல்லப்பட்டிருக்கிறபடி இங்கு உள்ளது).

(இந்த ஆத்ம லோகத்தை இச்சித்தால் அதையடைய ஸாதனமாயிருக்கிற கர்மங்களை ஏன் ஆரம்பிவிக்கக்கூடாது? ஏன் கர்மம் முதலான எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டுமென்றால், சொல்லப்படுகிறது; ஆத்மலோகத்திற்கு கர்மங்களால் ஸம்பந்தமில்லை; ஆத்மாவை இச்சிக்கிறவர்கள் கர்மத்தை விட்டுவிடத்தான் வேண்டும்; அந்த ஆத்மா யாதொருஸாதனம், பலம் இவைகளின் வழியாகவாவது கர்மங்களுடன் ஸம்பந்தப்படுகிறதில்லை; எதனால் எனில்). அவர் 'நேதி நேதி' (அதுவுமல்ல, இதுவுமல்ல) யென்ற பெயரால் சொல்லப்பட்டவர்; கிரகிக்கப்படாதவர்; குறைவு படாதவர்; யாதொன்றிலும் ஸம்பந்தப்படாதவர்; நாசமில்லாதவர்; இப்படிப்பட்டவரை பாபகர்மமாவது, புண்யகர்மமாவது தாண்டுகிறதில்லை (அதாவது, ஒருவன் பாபத்தைச்செய்துவிட்டு, பாபத்தைத் தெரியாத்தனமாகச் செய்துவிட்டோம், என்ன செய்கிறது என்று பச்சாதாபப் பட்டினாலாவது புண்ய கர்மத்தைச் செய்து, நாம் இப்படிப்பட்ட புண்யத்தைச் செய்திருக்கிறோம், நமக்கு என்ன குறைவு என்று சந்தோஷப் பட்டினாலாவது ஆத்ம ஞானம் வந்துவிடாது); ஆனதால், பாப புண்யங்கள் ஸன்யாஸியாகிய ஆத்மவித்திற்கு குறைந்துபோய்விடும்; மேலும் அப்படிப்பட்ட ஆத்மாவை செய்யப்பட்டதும், செய்யப் படாததுமாயிருக்கிற நித்ய கர்மங்களும் தாண்டுகிறதில்லை (அதாவது, அப்

படிப்பட்ட கர்மங்களும் ஆத்மவித்திற்கு ஸம்பந்தப்படமாட்டா; ஆத்மவித்தானவன் ஆத்மவித்யை என்ற அக்னியால் எல்லாக் கர்மங்களை சாம்பலாக அடித்துப்போடுகிறான்; ஆதலால், பிரம வித்திற்கு கர்ம ஸம்பந்தமேகிடையாது).

23. இப்படிப்பட்ட ஆத்மா ருக்கினால் (வேத மந்திரத்தால்) செவ்வையாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறார்; அவர் நித்யர்; பிரமவித்தினுடைய மகிமையாயிருக்கிறார்; அவர் புண்யகர்மத் தால் விருத்தியை யடைகிறதுமில்லை; பாபகர்மத்தால் விகாரப்படு கிறதுமில்லை; அந்த மகிமையை யறிந்தவன்தான் பதவித் (மகிமை ஸ்வரூபத்தை யறிந்தவன்); அந்த மகிமையை யறிந்து தர்மாதர்ம லக்ஷணமுள்ள கர்மத்துடன் ஸம்பந்தப்படுகிறதில்லை; ஆதலால், இப்படி யறிந்தவன் சாந்தனாகவும் (பகிரிந்திரிய வியாபாரமற்றவ னாகவும்), தாந்தனாகவும் (அந்தரிந்திரிய விருத்தி யில்லாதவனாக வும்), உபரதனாகவும் (எல்லா ஏஷணைகளையும் விட்ட ஸன்யாஸியா கவும்), திதிக்ஷுவாகவும் (சுக துக்காதி இரட்டைகளை பொருத் துக்கொண்டவனாகவும்), ஸமாஹிதனாகவும் (இந்திரிய வியாபாரங் களை சுத்தமாக விட்டுவிட்டு, ஆத்மாவினிடத்தில் ஏகாக்ரசித்தமுள் ளவனாகவும்) ஆகி தன்னிடத்திலேயே ஆத்மாவைப் பார்க்கிறான். எல்லாவற்றையும் ஆத்மாவாகப் பார்க்கிறான். இவனை புண்ய பாபங்கள் செல்லுகிறதில்லை. இவன் அவைகளைத்தாண்டிவிடுகி றான். இவனை கிருதா கிருதங்களாயிருக்கிற கர்மங்கள் (இஷ்ட பல பிரத்யவாயங்களை யுண்டுபண்ணிக்கொண்டு, அவைகளால்) வருத்தப்படுத்துகிறதுமில்லை. அப்படிப்பட்ட கர்மங்களை இவன் எரித்துப்போடுகிறான். இவன் அபாபனாயும், தர்மாதர்ம மற்றவ னாயும், விரஜனாயும், இச்சையற்றவனாயும், ஸம்சயமற்றவனாயும், பிராமணனாயும், பிரமத்தையறிந்தவனாயு மாகிவிடுகிறான். இது தான் பிரமலோகம், ஹே! ராஜாவே! என்று யாஞ்யவல்க்யர் சொன்னார்.

ஜனகர்—தங்களுக்கு என்னுடைய விதேக ராஜ்யங்களைக் கொடுத்துவிட்டேன்; நானும் உங்களுக்குத் தாஸனாக ஆகிவிட் டேன்.

24. (இந்த ஜனக யாஜ்ஞ்யவல்க்ய கதையால் சொல்லப்பட்ட) இந்த ஆத்மா மகான்; அஜன்; அன்னாதன் (எல்லா பூதங்களிடத் திலுமிருந்துகொண்டு அன்னத்தை புஜிக்கிறவர்); வஸுதானர் (பிராணிகளுக்குத் தகுந்த கர்ம பலன்களைக் கொடுக்கிறவர்); இப் படி அவரை எவன் அறிகிறானோ அவன் வஸுவை (தனத்தை, பலத்தை) யடைகிறான்.

25. (இப்பொழுது எல்லா ஆரண்யகத்திலும் சொல்லப் பட்ட மொத்த அர்த்தம் எதுவுண்டோ அது சொல்லப்படுகிறது).

அப்படிப்பட்ட இந்த ஆத்மா (முன் சொல்லப்பட்ட ஆத்மா) மகான்; அஜன்; அஜரன்; அமரன்; அமிருதன்; அபயன்; அபய மாயிருக்கிற பிரமம். இப்படி யார் அறிகிறானோ அவன் அந்த அபய பிரமமாகவே ஆய்விடுகிறான்.

(இதுதான் எல்லா உபநிஷத்துக்களுடைய அர்த்தமாயுமி ருக்கிறது; இந்த அர்த்தத்தை செவ்வையாக யெடுத்துப் போதிக் கவேண்டிய நிமித்தம் ஆத்மாவினிடத்தில் உத்பத்தி, ஸ்திதி, பிரளயம் முதலானவைகளையும், கிரியை, காரகன், பலன் இவைகளை யும் அவரிடத்தில் இல்லாமலிருக்கும்பொழுதே இருக்கின்றன வென்று அத்யாரோபணம் செய்யப்படுவதின் மூலமாக கல்பிக்கப் பட்டது. பிறகு, நேதி நேதி என்றது முதலானதால் அந்த அத்யாரோபணத்தை விலக்கி தத்வம் சொல்லப்பட்டது. எப்படி யானால், ஒன்று, இரண்டு முதலான ஸங்கியைகள் சில கோடு அடையாளத்தால் காட்டப்பட்டபோதிலும், ஸங்கியை அந்தக் கோடாக ஆகமாட்டாதோ; எப்படியானால் 'அ' காரம் முதலான அக்ஷரங்கள் ஒரு காகிதத்தில் மையால் எழுதப்பட்டு காண்பிவிக் கப்பட்டபோதிலும் அக்ஷரம் அந்தக்காகிதம் ஆகமாட்டாதோ அப்படிப்போல் உத்பத்தியாதிகள் ஆத்மாவினிடத்தில் ஆரோபி விக்கப்பட்டபோதிலும் அவர் அவைகளாகமாட்டார். அவர் ஒன்றிலும் ஸம்பந்தப்படாமல் சுத்தமாயிருக்கிறார்).

பிராமணம் 5.

(ஆகமத்தையே முக்கியமாக வைத்துக்கொண்டிருக்கிற மது காண்டத்தினால் பிரமதத்வம் சொல்லப்பட்டது. பிறகு, அதை

யறிகிறதற்கு ஸாதனமாயிருக்கிற யாஞ்ஞவல்கீய காண்டத்தால் பக்ஷ ப்ரதிபக்ஷவாதங்கள் மூலமாக விசாரிக்கப்பட்டது. மறுபடியும், சிஷ்யாசார்ய ஸம்பந்தமாக, கேள்வி உத்தரமூலமாக, விஸ்தாரமாக விசாரிக்கப்பட்டது. இப்பொழுது நிகமனம் (தீர்மாணம்) செய்யும்பொருட்டு மைத்திரேயீ பிராமணம் ஆரம்பிக்கப்படுகிறது),

1. யாஞ்ஞவல்கியருக்கு இரண்டு பத்நிகள் இருந்தார்கள்; மைத்திரேயி யென்றும், காத்யாயனீ யென்றும். மைத்திரேயீ பிரமத்தைப்பற்றி சொல்லத்தக்கவள். காத்யாயனீ ஸ்திரீ பிரஞையுள்ளவள் (அதாவது, கிருஹகிருத்யங்கள்மட்டு மறிந்தவள்). யாஞ்யவல்க்யர் கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து ஸன்யாஸாச்ரமத்திற்குப்போக உத்தேசமுள்ளவராக சொல்லுகிறார்.

2–15. இந்த மந்திரங்களின் அர்த்தம் இவ்வுபநிஷத்தின் இரண்டாவது அத்யாயத்தின் 4-வது பிராமணத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

(ஜீவனுள்ளவரையில் கர்மங்களைச்செய்து கொண்டிருக்கவேணுமென்று அநேக சுருதிவிதிகள் இருக்கின்றனவே, அவைகளுக்கும் ஞானகாண்ட சுருதிகளுக்கும் விரோதப்படுகின்றதே, அதற்கு சமாதானம் என்ன வென்று சங்கித்துக்கொண்டு, பாஷ்யத்தில், அதைக்குறித்து பல ஆக்ஷேப சமாதானங்கள் யெடுத்துக்காட்டி, கடையில் தீர்மாணம்:—நான்கு ஆச்ரமங்களுள், முந்திய மூன்று ஆச்ரமங்களில் கர்மங்களை யனுஷ்டிக்க கர்மகாண்டம் பிரவிருத்தித்திருக்கிறதென்றும், நான்காவது ஆச்ரமமாகிய ஸந்யாஸ ஆச்ரமத்திற்கு ஞான காண்டம் யேற்பட்டிருப்பதாகவும், ஒன்றற்கொன்று விரோதப்படாதென்றும் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இது முழுவதும் மூலத்தில் பார்க்கத்தகுந்தது).

பிராமணம் 6.

1-3. இந்த யாஞ்ஞவல்கீய காண்டத்திற்கு ரிஷிகளின் வம்சம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐந்தாம் அத்தியாயம்.

பிராமணம் 1.

இனி கிலாகாண்டமென்றது ஆரம்பிவிக்கப்படுகிறது. நான்காவது அத்யாயத்தில் ஸாக்ஷாத் அபரோக்ஷாத்தாயும், ஸர்வாந்தராயும், நிருபாதிகராயும், அசநாயாதீதராயும், நேதி நேதி யென்று குறிப்பிட்டவராயுமிருக்கிற பிரமத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதை யறிவதால் ஸோபாதிக ஜீவாத்மா அமிருதத்தை யடையவேண்டும். அதற்கு ஏற்கனவே சொல்லப்பட்ட ஸாதனங்கள் போக, சொல்லப்படாதனவும், கிரமமாக முத்தியை யடைவிப்பிக்கக்கூடிய ஸாதனங்களாகின்ற ஓம்காரம், தமம், தானம், தயை இவைகள் சொல்லப்படுகின்றன.

1. ஹரி: ஓம்!. அது (பரபிரமம்) பூர்ணமானவஸ்து. இதுவும் (ஸோபாதிகராயும், நாம ரூபஸ்தமாயும், வியவஹாராபந்நமாயும், கார்யாத்மக மாயுமிருக்கிற ஜீவனும்) பூர்ணவஸ்து; (ஆகாசம்போல் எங்கும் நிறைந்தவஸ்து). அந்த பூர்ண வஸ்துவினின்றும் இந்த பூர்ணவஸ்து கிளம்பிற்று. இந்த பூர்ண வஸ்துவிற்கு (ஜீவனுக்கு) வித்தையால் பூர்ணத்வத்தை கிரகித்தால் பூர்ணமாகிய பரமாத்மாவாகத்தான் மிஞ்சி நிற்கிறது. (அதாவது, பாமார்த்த ஸ்வரூப வஸ்துவினிடத்தில் நின்றும் அன்னிய வஸ்துப்போல யுண்டாகி விளங்குகிற ஜீவனாகிய தன்னை, அந்த பூர்ணமான பரபிரமமென்று யறிந்து, அவித்தையாலுண்டான நாமரூபாதிகொள்கையை நிவர்த்திசெய்து, நான் பிரமமாயிருக்கிறேன் யென்று யறிந்தால் அவன் அந்த பிரமமாகவே ஆகிவிடுகிறான். பாஷ்யத்தில், இந்த மந்திரார்த்தைப்பற்றி பலவித ஆக்ஷேபணைகள்வர, அவைகளையெல்லாம் கண்டித்து, பாஷ்யக்காரர் தன்னுடைய மேல்கண்ட அர்த்தத்தை ஸாதித்திருக்கிறார்).

ஓம்! கம் (ஆகாசம்) பிரமமாயிருக்கிறது; (ஓம் என்ற பிரணவத்திற்கு ஏற்கனவே அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது). (எப்படிப்பட்ட ஆகாசமென்றால்) புராணமாய் (நிரந்தரமாய்) இருக்கிற சித் ஆகாசம் (பூத ஆகாசமன்று); வாயு ஸம்பந்தமான ஆகாச

மென்று கௌரவியாயணீ என்ற ரிஷி சொன்னார்; இந்த ஓம்கா ரத்தை வேதம் என்று பிரமவித்துக்கள் சொல்லுகிறார்கள்; (ஏ னெனில்) இதனால் அறியப்படவேண்டியது அறியப்படுவதால் வேதமென்று சொல்லப்படவேண்டும் (ஓம்காரம் பிரம உபாஸ னத்திற்கு ஸாதகமாயிருக்கிறது; இது பிரமத்திற்கு விக்கிரகமா யும், ரூபமாயும், நாமமாயுமிருக்கிறது; ஓம்மென்று சொல்லி பிர மத்தை தியானிக்கவேணுமென்று சொல்லப்பட்டிருக்கிறது; இது பிரமத்தையறிய ஒரு பலமான பிடிப்பாயிருக்கிறது; இந்த ஓம் நிருபாதிகமாயிருக்கிற பரபிரமத்திற்கும், ஸோபாதிகமாயிருக்கிற ஜீவாத்மாவிற்கும் நாமமாயும், ரூபமாயுமிருக்கிறது).

பிராமணம் 2.

(இப்பொழுது தமாதி ஸாதனங்கள் மூன்று சொல்லப்படு கின்றன).

1. பிரஜாபதியின் குழந்தைகள் மூன்று வகுப்பார்கள்; தேவர்கள், மனுஷ்யர்கள், அஸுரர்கள். இவர்கள் தங்கள் பிதா வினிடத்தில் பிரம சரியத்தை யனுஷ்டித்தார்கள் (அதாவது, பிதாவை தங்கள் குருவாக வகித்து சிஷ்யர்களாக விருந்தார்கள்).

தேவர்கள்—ஹே! குருவே! எங்களுக்கு யாது உபதேசம் செய்கிறீர்கள் (என்று கேட்டார்கள்).

பிதா—'த' என்ற அக்ஷரத்தை நான் உங்களுக்கு உபதேசிக் கிறேன். நீங்கள் அதையறிந்து கொண்டீர்களா? (என்று சொன் னார்).

தேவர்கள்—அறிந்துகொண்டோம்!

பிதா—அப்படி யறிந்திருந்தால் அது என்ன சொல்லுங்கள் (என்றார்).

தேவர்கள்—ஸ்வபாவத்தில் நீங்கள் (தேவர்கள்) அதாந்தர்க ளாகவிருக்கிறீர்கள். ஆதலால் தாந்தர்களாக விருங்கள் என்று உபதேசித்தீர் அன்றோ!.

பிதா—ஆம்; சரி. செவ்வையாக யறிந்தீர்கள். (தமம் என் றால் அந்தரிந்திரிய நிக்கிரகம்).

2. பிறகு மனுஷ்யர்கள் தங்களுக்கு என்ன உபதேசிக்கி றீர்களென்று பிதாவைக் கேட்டார்கள். அதற்கு பிதா அந்த 'த' என்ற அக்ஷரத்தையே மறுபடியும் சொன்னார்.

பிதா—அறிந்தீர்களா? (என்று கேட்டார்).

மனுஷ்யர்கள்—அறிந்தோம் (என்றார்கள்).

பிதா—என்ன? (வென்று கேட்டார்).

மனுஷ்யர்கள்—ஸ்வாபவத்தில் நீங்கள் லுப்தர்களாக, ஆசை யுள்ளவர்களாக விருக்கிறீர்கள். ஆதலால், கூடியவரையில் தா னத்தைச் செய்யுங்கள் யென்று நீங்கள் உபதேசித்தீர்யன்றோ?

பிதா—ஆம்! செவ்வையாக யறிந்தீர்கள்.

3. பிறகு, அஸுரர்கள் தங்களுக்கு யாது உபதேசம் என்று பிதாவைக் கேட்டார்கள். பிதா அந்த 'த' என்ற அக்ஷ ரத்தையே மறுபடியும் சொன்னார்.

பிதா—அறிந்தீர்களா? (என்று கேட்டார்).

அஸுரர்கள்—அறிந்தோம் (என்றார்கள்).

பிதா—என்ன? (வென்றார்).

அஸுரர்கள்—ஸ்வபாவத்தில் நீங்கள் குரூரர்கள்; ஆதலால் பி ராணிகளிடத்தில் தயவுபுரியுங்கள் என்று உபதேசித்தீர் அன்றோ!

பிதா—ஆம், செவ்வையாக யறிந்தீர்கள்.

அப்பொழுது இந்த அர்த்தத்தை தேவீ வாக்கும் சொல் விற்று; (எவ்விதமெனில்) மேகத்திலிருந்தும் த, த, த என்று வாக்கு (சப்தம்) உண்டாயிற்று. இதனால், தமம், தானம், தயை இம் மூன்றும் வேண்டுமென்று உபதேசம்.

(இந்தப் பிரகாரம் பிரஜாபதியால் நமக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிற தென்று நினைத்து தமம், தானம், தயை இவைகளை எல்லோரும் அனுஷ் டிக்கவேண்டும். மேற்படி தேவாதி மூன்று வகுப்பார், 'த' என்று மாத்திரம் சொல்லியதைக்கொண்டு, யெப்படி தமாதிகளை அர்த்தம் செய்துகொண் டார்கள் என்றால்—தங்களிடத்திலிருக்கிற குறைவு தங்களுக்குத் தோன்றி அக்குறைவைத்தான் திருத்த உபதேசித்தார் என்று நினைத்து, அவரவர்க ளுக்குத் தக்கபடி அர்த்தம்செய்து கொண்டார்கள். நன்றாக தெரிந்தவர்க ளாதலால், ஜாடையாகச் சொன்ன உபதேசத்தைக் கொண்டு ஸங்கதியை

யறிந்து கொண்டார்கள். தேவர்களுக்கு தமமும், மனுஷ்யர்களுக்கு தானமும், அஸுரர்களுக்கு தயவும் சொல்லப்பட்டிருப்பதால் யெவ்விதம் மூன்றையும் மனுஷ்யர்கள் யனுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறதென்றால்—எல்லா குணங்களும் யெல்லோருக்கும் பொதுவே; ஆனால், அந்தந்த குணம் அவரவர்களுக்கு உரித்தாக சாஸ்தியாக விருக்கின்றது; அல்லது, வேறொரு ஸமாதானமிருக்கிறது—அதாவது, மனுஷ்யர்களுள் மூன்று வகுப்புகள் உள்ளன; எப்படியெனில், தமத்தை தவிற மைற்ற குணங்களால் நிறைந்தவர்கள் தேவர்கள் என்றும், அவ்விதமே லோபம் ஜாஸ்தியாக யுள்ளவர்கள் மனுஷ்யர்கள் என்றும், குரூரமாயிருக்கப்பட்ட மனுஷ்யர்கள் அஸுரர்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆதலால் மேற்படி மூன்றையும் மனுஷ்யர்கள் யனுஷ்டிக்கவேண்டும்).

பிராமணம் 3.

(இம் மூன்று குணங்களையும் கைக்கொண்டால் அவன் ஆத்ம உபாஸனைக்கு அதிகாரியாகிறான். நிருபாதிக பிரமத்தில் தர்சன விஷயம் முன் சொல்லப்பட்டது; இப்பொழுது ஸோபாதிக பிரமத்தை உபாஸிப்பதால் உண்டாகும் பலங்களைப்பற்றி சொல்லப்படுகிறது).

1. எது ஹிருதயமோ (ஹிருதயத்திலிருக்கிற புத்தியோ) அதுதான் பிரஜாபதி; அதுதான் பிரமம்; அதுதான் எல்லாமாக விருக்கிறது. 'ஹிருதயம்' என்றது மூன்று அக்ஷரங்களுள்ளது. அவைகளில், 'ஹிரு' என்றது முதல் அக்ஷரம்; இந்த ஹிருதயாத்மாவின் பொருட்டு, தன் இந்திரியங்களும், அதனின் விஷயங்களும் தங்கள் தங்கள் பலத்தை (இந்த அக்ஷர மூலமாக) கொடுக்கின்றன. (ஹிருதயமும் அவ்விதமே போக்தாவாகிய ஜீவனுக்கு பலத்தைக் கொடுக்கிறது). இப்படி யறிபவனுக்கு மேற்படி பலம் கிடைக்கும்.

'த' வென்றது இரண்டாவது அக்ஷரம்; இதுவும், இந்த ஹிருதயாத்மாவின் பொருட்டு, தன்னிந்திரியங்களாலும், விஷயங்களாலும் தங்கள் தங்கள் வீரியத்தைக் கொடுக்கிறது. (ஹிருதயமும் இப்படியே ஜீவனுக்கு வீர்யத்தைக் கொடுக்கிறது). இப்படி யறிபவனுக்கு மேற்படி பலங்கள் உள. 'ய' வென்றது

மூன்றாவது அக்ஷரம்; இது ஸ்வர்கத்திற்கு செல்லும்படி செய்கிறது. இப்படி யறிகிறவன் ஸ்வர்கத்திற்குப் போகிறான்.

பிராமணம் 4.

(இந்த ஹிருதயமென்று பெயருள்ள பிரமத்தை ஸத்யமென்று யுபாஸிக்க வேணுமென்று சொல்லப்படுகிறது).

1. அந்த ஹிருதயமென்று பெயருள்ள பிரமமானது ஸத்யமாக விருந்தது. (ஸத்—பிருதிவி, ஜலம், அக்நி; த்யத்—வாயு, ஆகாசம்; அல்லது, ஸத்—மூர்த்தம், த்யத்—அமூர்த்தம்). இவ்விதம் மகத்தாயும், பூஜ்யமாயும், முந்தியதாயுமிருக்கிற பிரமத்தை ஸத்யமென்று யார் யறிகிறாரோ அவன் இந்த எல்லா உலகங்களையும் ஜயிக்கிறான். அஸத்யமென்று யார் அறிகிறாரோ அவன், சத்ருவினால் போல, லோகங்களால் ஜயிக்கப்படுகிறான்.

பிராமணம் 5.

(அந்த ஸத்ய பிரமத்தையே இதில் ஸ்தோத்திரம் செய்யப்படுகிறது. முந்தியுண்டானது என்று சொல்லப்பட்டதற்கு காரணமும் சொல்லப்படுகிறது).

1. ஆதியில் (அவ்யாகிருதமாயும், பீஜபூதமாயுமுள்ள) அப்புக்கள் (அக்னி ஹோத்ராதிகளால் உண்டான திரவரூபமாயிருக்கிற ஜலம்; அதாவது, மைத்த பூதங்களுடன் கூடிய அவ்யாகிருத் பஞ்ச பூதங்கள்) இருந்தன. அந்த அப்புக்கள் ஸத்யத்தை (வ்யாகிருத பஞ்ச மகாபூதங்களை) சிருஷ்டித்தன. ஸத்யம் என்றது பிரமம் (அதாவது, ஹிரண்யகர்ப்பர் என்ற ஸூத்ராத்மா). அந்த ஸத்ய பிரமம் பிரஜாபதியாகிய விராட் சரீரத்தையும், பிரஜாபதி தேவர்களையும் சிருஷ்டித்தன. அத்தேவர்கள் அந்த பிரமத்தை ஸத்யமென்று யுபாஸித்தார்கள். 'ஸத்ய' மென்றது மூன்று அக்ஷரங்கள் உள்ளது; ஸ—தி—யம்; இவைகளில் முதலாவதும், கடை அக்ஷரமும் ஸத்ய அக்ஷரங்கள்; மத்தியில் இருக்கிற 'த' அநிருதம்; இரண்டு ஸத்யத்திற்கும் நடுவில் அகப்பட்டிருப்பதால் ஸத்யம் மேல்கொண்டிருக்கிறது. இப்படி யறிந்தவனை அநிருதம் ஹிம்ஸிக்கமாட்டாது.

(அக்னிஹோத்திரத்தால் உண்டான திரவ வஸ்துவாகிற அப்பு என்றதால் முன்னால் மனுஷ்யர்களால் அக்னி ஹோத்தி ராதிகள் செய்யப்பட்டு அந்த ஆஹுதிகள் எல்லாம் திரவ ரூப மாக இருந்திருக்கவேண்டும் என்றும், அதாவது அக்னி ஹோத் திராதி கர்மங்களின் பலன் ஜகத் சிருஷ்டி என்றும், யேற்படுகி றது; இதனால், இப்பிராமணத்தில் கல்பாந்திர சிருஷ்டி சொல்லப் படுகிறதே தவிர ஆதி சிருஷ்டி சொல்லப்படவில்லை யென்று அர்த்தமாகிறது).

2. (இப்பொழுது அந்த ஸத்தியமாகிற பிரமத்திற்கு ஸ்தா னங்கள் சொல்லப்படுகின்றன).

இதோ காணப்படுகிற ஆதித்யனிடத்தில் இருக்கிற புருஷன் அந்த பிரமமே; நமது வலது கண்ணில் இருக்கிற புருஷன் அந்த பிரமமே; இவ்விரண்டுகளும் ஒன்றுக்கொன்று உபகாரோபகாரியங் களாக விருக்கின்றன. எப்படியென்றால், ஆதித்ய புருஷன் தன் ரச்மிகளின் பிரகாசத்தால் கண்ணை அனுகிரகித்து அதில் பிரதிஷ் டிதமாயிருக்கிறது. அக்ஷி புருஷன் இந்திரியங்களால் ஆதித்யனை பிரகாசப்படுத்தி, அனுகிரகித்து அதில் பிரதிஷ்டிதமாயிருக்கிறது.

எப்பொழுது பிராணன்போகும் காலம் சமீபிக்கிறதோ அப் பொழுது ஆதித்யன் ரச்மிகளன்றி அதாவது சுத்தமாக சந்திரனைப் போல உஷ்ண பிரகாசமன்றி, கண்ணுக்கு தோன்றுகிறது; ரச்மி கள் மறுபடி இவனை அனுகிறதேயில்லை

3. அந்த ஆதித்ய மண்டலத்திலிருக்கிற புருஷனுக்கு வியா ஹ்ருதிகள் அவயவங்களாக விருக்கின்றன; எப்படியென்றால், பூ: என்றது ஒரு அக்ஷரம்; அது சிரஸ், தலை; இது ஒன்றாவது. புவ: என்றது இரண்டு அக்ஷரங்கள்; இவைகள் இரண்டு கைகள். ஸுவ: என்றது இரண்டு அக்ஷரங்கள்; இவைகள் இரண்டு பாதங் கள். 'அஹ:' (பகல்) என்றது இந்த பிரமத்திற்கு ரகஸ்யமான பெயர்; அந்தகாரத்தை யடிக்கிறது அல்லது விட்டுவிடுகிறது என்று 'அஹ:' என்ற பெயர் வந்தது. இங்ஙனம் அறிகிறவன் பாபங்களையடிக்கிறான் அல்லது விட்டுவிடுகிறான்.

4. அக்ஷி புருஷன் விஷயத்திலும் வியாஹ்ருதிகள் மேல் கண்டபடி அவயவங்கள்; இந்த புருஷனுக்கு 'அஹம்' என்றது ரகஸ்ய பெயர்; இதற்கு மேல் கண்டபடியே பொருள் உள்ளது; பலனும் மேற்கண்டபடியே.

பிராமணம் 6.

1. (பிரகிருத பிரமத்திற்கு உபாதிகள் அனேகமாயிருப்பதால், மனஸை உபாதியாக வைத்துக்கொண்டிருக்கிற பிரமத்தை யுபாஸிக்கிற விதம் சொல்லப்படுகிறது).

இந்த புருஷன் மனோமயனாயிருக்கிறான்; மனஸால் அறியப் படுகிறவனாயிருக்கிறான். அந்தர் ஹ்ருதயத்தில், நெல்லு அல்லது யவம், இவைகளின் அளவுபோல, ஸத்ய வஸ்துவாய், காந்தியாக விளங்குகிறான். எல்லாவற்றிற்கும் ஈசானன்; எல்லாவற்றிற்கும் அதிபதி; எல்லாவற்றையும் சாஸிக்கிறான்.

பிராமணம் 7.

(மேற்படி ஸத்ய பிரமத்திற்கு விசிஷ்ட பலனும் சொல்லப்படுகிறது).

அந்த பிரமத்தை 'வித்யுத்' மின்னல் யென்று சொல்லுகிறார்கள். 'விதாநாத்'—மேகாந்தகாரத்தை பிளப்பதினால், பாபங்களை பிளப்பதினால் இவ்விதம் சொல்லப்படுகிறது. இப்படி யறிபவனுடைய பாபங்களும் பிளந்துபோகின்றன. மின்னல் போல் பிரமமன்றோ?.

பிராமணம் 8.

1. (வாக் பிரமமென்று சொல்லப்படுகிறது).

வாக்கை வேதங்களை கறக்கிற பசுமாட்டைப்போல் உபாஸிக்கவேண்டும். மேற்படி வாக்காகிற மாட்டுக்கு நான்கு ஸ்தனங்களுள. (i) ஸ்வாஹாகார:. (ii) விஷட்கார:. (iii) ஹந்தகார:. (iv) ஸ்வதாகார:. முந்திய இரண்டு ஸ்தனங்களைக்கொண்டு (யாகாதிகளில்) தேவர்கள் பிழைக்கிறார்கள். மூன்றாவதைக்கொண்டு

மனுஷ்யர்களும், நான்கு வகைகொண்டு பித்ருக்களும் பிழைக்கின்றார்கள். அந்த மாட்டுக்கு பிராணன் ரிஷபமாயிருக்கிறது. (பிராணனால் வாக் பிறந்துகொண்டிருக்கிறது). மனஸ் கன்று குட்டியாயிருக்கிறது. (மனஸால் வாக் பெருகிறது; அதாவது மனஸால் ஆலோசிக்கப்பட்டு வாக் வெளிப்புறப்படுகிறது).

பிராமணம் 9.

1. (ஜடராக்கினி பிரமம் என்று சொல்லப்படுகிறது).

ஒரு புருஷனுக்குள்ளே வயிற்றில் யிருக்கிற வைச்வாநரன் யென்ற அக்னியை உபாஸிக்கவேண்டும். அந்த அக்னி சாப்பிடப் படுகிற அன்னத்தையெல்லாம் பக்குவப்படுத்துகிறது. அதற்கு ஒரு சப்தமுண்டு; இருகைகளால் இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டால் ஒரு சப்தம் கேட்கப்படுகிறதல்லவா? அதுதான் அந்த சப்தம். பிராணன் போகிற சமயத்தில் அப்படிபட்ட சப்தம் கேட்கப்படமாட்டாது.

பிராமணம் 10.

1. (இத்தகைய உபாஸனைகளின் கதியும், பலனும் சொல்லப்படுகிறது).

எப்பொழுது ஒரு வித்வான் இந்த லோகத்தை (தன் சரீரத்தை) விட்டுப்போகிறானோ அப்பொழுது அவன், முதலில், வாயு மண்டலத்தை யடைகிறான். அந்தரிக்ஷத்தில் சென்று வாயுவால் அசைக்கப்படாதவனாயிருக்கிறான்; அந்த வாயு, தனக்குள், ஒரு ரதசக்கிரத்திலுள்ள துவாரப்பிரமாணம் இடங்கொடுக்கிறது; அதின் வழியாக உயரக்கிளம்பி சூர்யமண்டலத்தைச் சேருகிறான். அந்த ஆதித்யன், பிரமலோகத்திற்குப்போக இச்சிக்கிறவர்களுக்கு மார்கத்தை தடைசெய்துகொண் டிருந்தபோதிலும், இந்த வித்வானுக்கு தன்னிடத்தில் ஒரு லம்பரம்யென்ற வாத்தியத்திலுள்ள துவாரப் பிராமணம் இடம் கொடுக்கிறான். அதன் வழியாக உயரக்கிளம்பி சந்திரமண்டலத்தை யடைகிறான். அந்த சந்திரன் தன்னிடத்தில், ஒரு பேரீ வாத்தியத்திலுள்ள துவாரப் பிராமணம்

இடம் கொடுக்கிறான். அதன் வழியாக உயரக்கிளம்பி பிரஜாபதி லோகத்திற்குப் போகிறான். அந்த லோகம் மனோதுக்க வர்ஜித மாயும், சரீரதுக்க வர்ஜிதமாயும் இருக்கிறது. அந்த லோகத்தில் சாசுவத வருஷங்களாக (வெகு காலமாக) விருக்கிறான்.

பிராமணம் 11.

1. யாவன் ஒருவன் ஜாரதியால் கிரகிக்கப்பட்டு வருத்தப் படும் காலத்தில் அந்த வருத்தத்தை தான் செய்யவேண்டிய ஒரு பெரிய தபஸ் ஸென்று நினைத்து அதை ஸஹித்துக்கொண்டிருக்கி றானோ அப்படிப்பட்ட ஞானம் இவனுடைய பாபத்தைப் போக்க டித்து, பரமலோகத்தை யடையும்படி செய்கிறது. அப்படியே, எவன் தான் மறித்த பிறகு தன் பிரேதம் வீட்டிலிருந்து சுடுகாட் டிற்கு கொண்டுபோகிறதும், அந்த பிரேதத்தை அக்னியில் போடு வதும் பரம தபஸ்ஸென்று இறந்துபோவதற்கு முன்னமே நினைத் து இறப்பு விஷயத்தில் விசனப்படாமல் தயாராக விருக்கிறானோ அவனும் பரம லோகத்தை யடைகிறான்.

பிராமணம் 12.

1. அன்னம் பிரமமென்று சிலர் சொல்லுகிறார்கள்; அப்படி யன்று. ஏனென்றால், அன்னம் பிராணனில்லாவிடில் கெட்டுப் போகிறது. பிராணன் பிரமமென்று சிலர் சொல்லுகிறார்கள்; அப்படியுமன்று. ஏனென்றால், அன்னம் இல்லாவிடில் பிராணன் குறுகிப்போகிறது. அன்னமும், பிராணனும் இரண்டும் சேர்ந்து மகிமையை யடைகின்றன. அதை பிரமமென்று சொல்லலாம். பிராதிருதர் என்றவர் தன் பிதாவைப்பார்த்து சொல்லுகிறார்.

(பிராதிருதர்) இப்படி இரண்டும் சேர்ந்து பிரமமென்று அறிந்தவன் தான் கிருதகிருத்யன். அவனுக்கு நன்மை செய்தா லும் அது அவனை மகிமைப்படுத்தாது; தீங்குசெய்தாலும் அவனை அது பாதகப்படுத்தாது.

(பிதா) ஹே! பிராதிருதா! அப்படிச் சொல்லாதே. இரண்டி லும் சேர்ந்து எவன் பரம கதியை யடைந்திருக்கிறான்? ஒருவரு

யில்லை; ஆனால், அப்படி யறிவதால் என்ன பிரயோஜனமெனில்:— அன்னம் என்பது 'வி'; இதில் எல்லா பூதங்களும் இருக்கின்றன பிழைத்திருக்கின்றன. பிராணன் என்பது 'ரம்'; இதனால் எல்லா பூதங்களும் ரமிக்கின்றன; தன் தன் தொழில்களை செய்துகொண்டு ஆனந்தப்படுகின்றன; இப்படி யறிந்தவனிடத்தில் எல்லா பூதங்களும் சந்தோஷப்படுகின்றன.

பிராமணம் 13.

1. 'உக்தத்தை' (ஒரு யாகத்தில் சொல்லப்படும் சஸ்தரமென்ற மந்திரத்தை) பிராணனாக உபாஸிக்கவேண்டும். ஏனென்றால், அது எல்லாவற்றையும் உயரக்கிளப்புகிறது; பிராணன் இல்லாவிடில் ஒருவன் எழுந்திருக்கமுடியுமா? இப்படியறிந்தவனுக்கு தீரனான புத்திரன் உண்டாகிறான். இது திருஷ்டபலன். அதிருஷ்டபலன் யாதெனில், அந்த உக்தத்தின் ஸாயுஜ்ய பதவியையும், ஸாலோகபதவியையும் யடைகிறான்.

2. யஜுஸை (யஜுர்வேத மந்திரத்தை) பிராணனாக உபாஸிக்கவேண்டும். பிராணனால் எல்லா பூதங்களும் சேருகின்றன. பிராணன் இல்லாவிட்டால் எப்படி ஒன்று மற்றொன்றுடன் சேருகிறதற்கு ஸாமர்த்தியமுண்டாகும். இப்படி யறிந்தவன் சிரேஷ்டனாயிருக்கிறான். யஜுஸின் ஸாயுஜ்ய, ஸாலோக்யத்தையும் யடைகிறான்.

3. ஸாமத்தை (ஸாமவேத மந்திரத்தை) பிராணனாக உபாஸிக்கவேண்டும். ஸாமமென்றால் பிராணன்; எல்லா பூதங்களையும் சேர்த்துவைக்கிறது. பலன் இதற்கு தக்கது, மேல் கண்டபடி.

4. க்ஷத்திரத்தை பிராணனாக உபாஸிக்கவேண்டும். பிராணன் தேகத்தை காயம் முதலான துன்பத்திலிருந்து அதற்கு மாம்ஸ விருத்தியை யுண்டுசெய்து ரக்ஷிக்கிறபடியால் (உபாஸிக்கவேண்டும்). இப்படியறிந்தவன், வேறொன்றால் ரக்ஷிக்கப்படாததை ரக்ஷிக்கத்தகுந்த பிராணனை யுடையவனாகிறான். க்ஷத்திரத்தின் ஸாயுஜ்ய ஸாலோகத்தையும் யடைகிறான்.

பிராமணம் 14.

1. (இப்பொழுது காயத்திரி உபாதி விசிஷ்ட உபாஸநம் சொல்லப்படுகிறது; எல்லா சந்தஸ்களுக்குள் காயத்திரி பிரதான முள்ளது. இது எல்லா சந்தஸ்களுக்கும் ஆத்மாவாக, பிராண னாக விருக்கிறது; இது பிராமண ஜந்மத்திற்கு ஹேதுவாயிருக்கி றது; அதாவது, இது உபதேசமானால்தான் பிராமணன் ஆகிறான். ஆனதால், இதன் உபாஸனை விதி சொல்லப்படுகிறது).

'பூமி,' 'அந்தரிக்ஷம்,' 'த்யௌ:' என்ற சப்தங்களில் இருக்கிற எட்டு அக்ஷரங்களும் காயத்திரிக்கு முதலாவது பாதம்; (அதா வது, காயத்திரியினுடைய முதல் பாதம்); மூன்று லோகத்திற்கும் ஆத்மாவாக விருக்கிறது. இப்படியறிந்தவன் மேற்படி மூன்று லோகங்களில் இருக்கிற தெல்லாவற்றையும் ஜயித்தவனாகிறான்.

2. 'ரிச:' 'யஜூம்ஷி' 'ஸாமாநி' என்ற சப்தங்களிலுள்ள எட்டு அக்ஷரங்களும் காயத்திரியின் இரண்டாவது பாதம்; (அதா வது மேற்படி மூன்றும் இரண்டாவது பாதம்); இது மூன்று வேதாத்மகமாயிருக்கிறது. இப்படியறிந்தவன் மேற்படி வேதங் களிலுள்ளதை எல்லாம் யறிந்தவன்.

3. 'பிராண,' 'அபான,' 'வ்யாந' என்ற சப்தங்களிலுள்ள எட்டு அக்ஷரங்களும் மேற்படி காயத்திரியின் மூன்றாவது பாதம். அதாவது, மூன்றாவது பாதம் மேற்படி மூன்று பிராணாத்மகமா யிருக்கிறது. இப்படியறிந்தவன் அந்த பிராணங்களுள்ள எல்லா ஜீவராசிகளையும் ஜயிக்கிறான்.

நான்காவதாயும், காணப்படுகிறதாயுமிருக்கிற பாதம் யெது வென்றால் சொல்லப்படுகிறது; இதோ, தபிக்கிற பரோரஜா; அதாவது, ஆதித்யமண்டல அந்தர்கதனாயிருக்கிற புருஷன்; ரஜோ குணத்தால் உண்டான ஸமஸ்த லோகத்தையும் தபிக்கிறவன். இப்படியறிந்தவன் ஸம்பத்தாலும், யசஸாலும் பெயர்போனவ னாகிறான்.

4. இப்படிபட்ட த்ரைலோக்ய த்ரைவித்ய பிராண லக்ஷண முள்ளதும், மூன்று பாதமுடையதுமான காயத்திரியானது நான்

காவது பாதமாகிய மேற்படி பரோ ரஜஸில் பிரதிஷ்டிதமா யிருக்கிறது. அப்படி நான்கு பாதங்களுடன் கூடிய காயத்திரி ஸத்யத்தில் பிரதிஷ்டிதமாயிருக்கிறது. ஸத்யமென்றால் சக்ஷுஸ்; எப்படியென்றால், ஒரு விஷயத்தைப்பற்றி விவாதப்பட்டுக்கொண்டிருக்கிற இரண்டு மனுஷ்யர்களில் ஒருவன் 'நான் பார்த்தேன்' என்றும், மற்றொருவன் "நான் கேழ்விப்பட்டேன்" என்றும் சொல்லிக்கொண்டு வந்தார்கள்; பார்த்ததாகச் சொல்லுகிறவனிடத்தில் நாம் நம்பிக்கை வைக்குகிறோமல்லவா? ஆதலால், சக்ஷுஸ் ஸத்யம்: அந்த ஸத்யம் பலத்தில் பிரதிஷ்டிதம்; பலமென்றால் பிராணன்; ஆதலால், பலம் பிராணனில் பிரதிஷ்டிதம்; ஆதலால் பலம் ஸத்யத்தைக்காட்டிலும் பெரிதுயென்று சொல்லுகிறார்கள். அந்த பிராணன் ஆத்மாவில் பிரதிஷ்டிதமாயிருக்கிறது; இந்த காயத்திரி 'கயாக்களை' ரக்ஷிக்கிறது; 'கயா' வென்றால் பிராணங்கள், அதாவது வாகாதி இந்திரியங்கள். இதனால் அதற்கு 'காயத்திரி' என்ற பெயர் உண்டாயிற்று. அப்படிப்பட்ட ஸவித்ரு தேவதாத்மகமாயிருக்கிற காயத்திரியை ஆசாரியர் சிஷ்யனுக்கு உபதேசிக்கிறார். எந்த சிஷ்யனின்பொருட்டு மேற்படி காயத்திரி உபதேசிக்கப்படுகிறதோ அவனுடைய பிராணன்களை அந்த ஸாக்ஷாத் பிராணனாகிற ஜகத்தின் ஆத்மா நாகாதிகளில் விழுவதில் நின்றும் ரக்ஷிக்கிறார்.

5. இந்த காயத்திரியை சிலர் அனுஷ்டுப், அதாவது வாக், ஸரஸ்வதீ யென்று சொல்லுகிறார்கள். அப்படியன்று. சிலர் ஸாவித்திரியென்று சொல்லுகிறார்கள்; அப்படியுமன்று. இந்த காயத்திரியை யறிந்தவன் வெகு தானம் வாங்கினாலும் சரி, அது காயத்திரியின் ஒரு பாதத்திற்குகூட ஈடாகமாட்டாது. (அதாவது, காயத்திரியை யறிந்தவனுக்கு எவ்வளவு தானம் வாங்கினாலும் தோஷமில்லை).

6. காயத்திரியை யறிந்தவன் இந்த மூன்று லோகங்களையும் தானம் வாங்கட்டும்; அது ஒரு பாதத்திற்கு சரியாயிருக்கும்; அதாவது, முதல் பாதத்தின் பலன் அனுபவிக்கப்பட்டது; பிரதிக்ரஹத்தால் தோஷமில்லை. அப்படி மூன்று வேதங்களின் வித்

தையை தானம் வாங்கட்டும்; அது இரண்டாவது பாதத்தின் பலன்; பிரதி கிரஹத்தால் தோஷமில்லை. அப்படியே எல்லாப் பிராணிகளையும் தானம் வாங்கட்டும்; அது மூன்றுவது பாதத்தின் பலன்; பிரதிகிரஹத்தால் தோஷமில்லை. நான்காவது பாத விஷயத்தில் வாங்கப்பட்ட எதனுலேயும் தோஷமில்லை. காயத்திரி இப்படிப்பட்ட மகாத்மியம் உள்ளது.

7. காயத்திரியின் உபஸ்தான மந்திரம் இப்பொழுது சொல்லப்படுகிறது. ஹே! காயத்திரி! ஒரு பதம், இரண்டு பதங்கள், மூன்று பதங்கள், நான்கு பதங்கள் உள்ளவளாயிருக்கிறுய். (இது ஸோபாதிகமாக சொல்லப்பட்டது). (நிருபாதிகமாயிருக்கும்பொழுது) யாதொரு பதமுமில்லாதவளாயிருக்கிறுய். உனக்கு நமஸ்காரம் செய்கிறேன். உன்னுடைய நான்காவது பாதத்திற்கு நமஸ்காரம். உன் பொருட்டு இந்த (என்) சத்ரு தன் காரியத்தையடையாமலிருக்கட்டும். என் காமங்கள் நிறவேறட்டும்.

8. இந்த விஷயத்தில் ஜனகர் புடிலரைப் பார்த்து சொல்லுகிறுர்.

(ஜனகர்) நீர் காயத்திரி தெரிந்தவர் என்று சொல்லிக்கொள்ளுகிறீரே! தானம் வாங்கிய தோஷத்தால் யானையாகப்போய் அவதிப்படுகிறீரே!

(புடிலர்) நான் காயத்திரியின் முகத்தை தெரிந்து கொள்ளவில்லை; ஆதலால் தான் இப்படி துன்பப்படுகிறேன்.

(ஜனகர்) அதினுடைய முகம் அக்னி; அது தெரிந்தவனுடைய எல்லா பாபங்களையும் பெறித்துவிடும்; அவன் பரிசுத்தனுகவும், அஜரனுகவும் அமிருதனுகவும் ஆகிறுன்.

பிராமணம் 15.

1. (ஞானத்துடனும் கர்மத்துடனும் சேர்ந்திருக்கப்பட்டவர்கள் மரண காலத்தில் சூரியனை அடியில்கண்டபடி பிறார்த்திக்க வேண்டியது).

ஹே! பூஷன்! (போஷிக்கிறவரே); ஜோதிர் மயமாயிருக்கிற மண்டலத்தால் மூடப்பட்டிருக்கிற ஸத்யமென்று பெயருள்ள பிரமத்தின் முக்கியமான ஸ்வரூபத்தை பார்க்கும்பொருட்டு, ஸத்யத்தையே தர்மமாகவுடைய என்பொருட்டு மறைவை நீக்கிவிடு; ஹே; பூஷன்! எல்லாவற்றையும் பார்க்கிற முக்கிய நேத்திரமே! எல்லாவற்றையும் தனக்குள் யடக்கிக் கொள்ளுகிறவரே! ரஸங்களை செவ்வையாக இழுக்கிறவரே!. பிரஜாபதி புத்திரரே!. மேற்படி ஸ்வரூபத்தை நான் பார்க்கும்பொருட்டு கிரணங்களை இழுத்துக் கொள்ளும்! தேஜஸை குறைத்துக்கொள்ளும்!. கல்யாண தமமாயிருக்கிற உன்னுடைய ரூபத்தை நான் பார்க்கிறேன். வியாஹிருதிகளை அவயவங்களாகவுடைய யாதொரு புருஷன் உண்டோ அந்த புருஷனாகவே நான் ஆகிறேன். என் சரீரபாதனந்தரம் என் பிராணவாயு வெளிப்பட்ட வாயுவுடன் கலந்து போகட்டும். அப்படி மற்ற தேவதைகளும் அததன் வெளிப்பட்ட தேவதைகளுடன் கலந்து போகட்டும். இந்த தேகமும் சுடப்பட்டு பஸ்மமாய் போன பிறகு பிரதிவியுடன் கலந்து போகட்டும்.

(ஸங்கல்ப பூதமாயிருக்கிற, மனஸில் இருக்கிற அக்னியை பிறகு அடியில்கண்டபடி பிரார்த்திக்கவேண்டும்).

ஹே! ஓம்! (ஓம்காரத்தை பிரதீகமாயுடையவரே). மனோமய ரூபமுள்ளவரே! என்னால் செய்யப்பட்ட காரியத்தை நினைத்துப் பார், நினைத்துப்பார், நினைத்துப்பார்! மரணகாலத்தில் உன்னை ஸ்மரிக்கிறேன். நீர் பிரஸாதம் செய்யுக. ஹே! அக்னியே! கர்மபலத்தை படையும்பொருட்டு எங்களை நல்வழியில் சேரும். பிராணிகளின் எல்லா பிரஞானத்தையும் யறிந்த தேவ! எங்களிடமிருந்து கடுமையான எல்லா பாபங்களையும் போக்கடியும். உமக்கு வெகு நமஸ்கார கிரியையால் பரிசாரம் செய்கிறோம்!.

ஆறாம் அத்தியாயம்.

பிராமணம் 1.

1. ஓம்! எவனொருவன் ஜ்யேஷ்டமாயும், சிரேஷ்டமாயும் இருக்கிற வஸ்துவை அறிகிறானோ அவன் தன்னைச் சார்ந்தவர் களுக்குள் ஜ்யேஷ்டனாயும், சிரேஷ்டனாயுமிருப்பான். அப்படிப் பட்ட வஸ்து பிராணன்தான். (ஜ்யேஷ்டத்வம் எவ்வாறுயெனில்—சக்ஷுராதி இந்திரியங்களைக்காட்டிலும் பிராணன் மூந்தியது; ஆதியில் சுக்ல சோணிதம் சேர்ந்து கர்பமுண்டாகிறபொழுது, பிராணன் இல்லாவிடில் எப்படி உண்டாகும்; ஆதலால், முதலில் பிராணன், பிறகுதான் மைற்ற சக்ஷுராதி இந்திரியங்கள்). ஜ்யேஷ்டத்வமும், சிரேஷ்டத்வமும் கிடைக்கவேண்டுமென்று இச்சித்து பிராணனை உபாஸிக்கிறவர்களைக்காட்டிலும், அப்படியறிந்தவன் மேலானவன். (இதனால் சிரேஷ்டத்வமும் கிடைத்தது).

2. எவனொருவன் வஸிஷ்ட வஸ்துவை யறிகிறானோ அவன் தன்னைச் சார்ந்தவர்களுக்குள் வஸிஷ்டனாயிருக்கிறான். வஸிஷ்டம் என்பது வாக்குத்தான். (வஸிஷ்டன் என்றால், தன்னைச் சார்ந்தவர்களை வஸிக்கும்படி செய்கிறவன்). அப்படியாகவேண்டுமென்று இச்சிக்கிறவர்களுக்குள்ளும் வஸிஷ்டனாயிருக்கிறான்.

3. பிரதிஷ்டாகுணமுள்ளதை யறிந்தவன், எல்லாவிடத்திலும், காலத்திலும் ஸமமாயிருப்பான். பிரதிஷ்டாவென்றால் சக்ஷுஸ். கண்ணால்தான் நல்லவழியும், கெட்டவழியும் தெரியும்.

4. ஸம்பத் குணமுள்ளதையறிந்தவன் எது எதை இச்சிக்கிறானோ அது எல்லாவற்றையும் அடைவான். ஸம்பத் என்றால் சுரோத்ரம். காதுகளிருந்தால்தான் வேதங்களைகேட்டு அதில்கண்ட கர்மங்களைச் செய்யலாம். அதனால் காமங்களை யடைகிறான்.

5. ஆயதனத்தை (ஆச்ரயத்தை) யறிந்தவன், தன்னைச் சார்ந்தவர்களுக்கும், இதரர்களுக்கும் ஆச்ரயமான இடமாயிருப்

பான். (அதாவது எல்லோரையும் ரக்ஷிக்க சக்தியுண்டு). ஆயதனமென்றால் மனஸ். (மனஸ் எல்லா இந்திரியங்களுக்கும், விஷயங்களுக்கும் ஆச்ரயம்; மனஸ் இல்லாவிடில் இந்திரியங்களுக்கு விர்த்தியிராது).

6. பிரஜாபதியையறிந்தவன் பிரஜையாலும், பசுக்களாலும் நிறம்பினவனாக விருப்பான். பிரஜாபதியென்றால் ரேதஸ். (ரேதஸினால்தான் பிரஜைகள் உண்டாகின்றன).

7. இந்த பிராணன்களெல்லாம் (வாகாதி இந்திரியங்கள்) தங்களுக்குள் 'நான் பெரிது,' 'நான் பெரிது' என்று விவாதப்பட்டுக்கொண்டு, பிரமத்தினிடம் (பிரஜாபதியிடம்) சென்று, தங்களுக்குள் எவர் வஸிஷ்டர் (உயர்ந்தவர்) என்று கேட்டார்கள். எவர் இந்த சரீரத்தைவிட்டு வெளிப்புறப்பட்டுபோனால் சரீரம்கெட்டுபோகுமோ அவர்தான் பெரியவர் என்று பிரஜாபதி சொன்னார்.

8. அதன்மேரில் வாக் இந்திரியம் வெளிக்கிளம்பிப்போய், ஒரு வருஷம் இருந்து, பிறகுவந்து, 'நீங்கள் எப்படி பிழைத்திருந்தீர்கள், என்னையன்றி' என்று மற்ற இந்திரியங்களை கேட்டது. உலகத்தில் ஒரு ஊமையன், வாக்கால் பேசாமலிருந்தும், எவ்விதம் கண்ணால் பார்த்துக்கொண்டும், காதால் கேட்டுக்கொண்டும், மனஸால் நினைத்துக்கொண்டும், ரேதஸால் பிரஜையை யுண்டுபண்ணிக்கொண்டும், பிராணனால் பிழைத்துக்கொண்டுமிருக்கிறானோ அப்படி இருந்தோம் என்று மற்ற இந்திரியங்கள் சொல்லியதின் மேல் வாக்கு சரீரத்தில் பிரவேசித்தது.

9. பிறகு சக்ஷுஸ் வெளிக்கிளம்பிற்று. (இதற்கு மேல் கண்டபடி) குருடன் உயிருடனிருப்பதுபோல்.

10. சுரோத்திர விஷயத்தில் முன்போல். செவிடன் உயிருடனிருப்பதுபோல்.

11. மனஸ் மேல்கண்டபடி. மூடன் உயிருடனிருப்பது போல்.

12. ரேதஸ் மேல்கண்டபடி. நபும்ஸகன் உயிருடனிருப்பதுபோல்.

13. பிறகு, பிராணன், ஸிந்து தேசத்திலுண்டான லக்ஷண முள்ள ஒரு பெரிய குதிரை கால் (கட்டியிருக்கும்) முளைகளை பிடிங்கிக்கொண்டு எவ்விதம் கிளம்புமோ, அப்படி, மைற்ற வாகாதி இந்திரியங்களை பிடுங்கிக்கொண்டு கிளம்ப துவங்கியவுடன், மேற்படி வாகாதிகள், பிராணனை நோக்கி, 'அப்படி கிளம்பவேண்டாம், உன்னையன்றி நாங்கள் பிழைத்திருக்கமாட்டோம்' என்று சொல்லியன.

(பிராணன்) அப்படியானால், சிரேஷ்டனாயிருக்கிற எனக்கு பலி (கப்பம்) கொடுங்கள்.

(வாகதிகள்) அப்படியே கொடுக்கின்றோம்.

14. பலி கொடுக்கும்பொருட்டு அடியில் கண்டவாறு சொல்லியன.

வாக்—என் வஸிஷ்டத்வத்தை நீ எடுத்துக்கொள்.

சக்ஷுஸ—என் பிரதிஷ்டத்வத்தை நீ எடுத்துக்கொள்.

மனஸ்—என் ஆயதனத்வத்தை நீ எடுத்துக்கொள்.

ரேதஸ்—என் பிராஜாதித்வத்தை நீ எடுத்துக்கொள்; என்று.

(மறுபடி பிராணன் கேட்டதாவது) எனக்கு அன்னம் எது? இருப்பிடம் எது?. (வாகாதிகள்) அச்வம்முதல், புழுமுதல், பூச்சிமுதல், பக்ஷிமுதல் உலகத்திலுள்ள எல்லா பிராணிகளாலும் உண்ணப்படுகிற அன்னம் எது எது உளதோ அவையெல்லாம் உன்னுடைய அன்னம்.

(இவ்விதம் சொல்லப்பட்டதால் ஸர்வ அன்னத்தையும் பக்ஷிப்பதால் தோஷமில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். அது அஸத்தான வார்த்தை. பிராணன் இவ்விதமென்று அறியவேண்டி ஸ்தோத்திரமாக சொல்லப்பட்டது. இதர சாஸ்திரங்களால் என்னென்ன அன்னம் பக்ஷிக்கக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விதியை இது தடுக்கமாட்டாது).

வாகாதிகள்—ஜலம்தான் உனக்கு வஸ்திரம்.

இவ்விதமாக பிராணனுக்கு அன்னம் இது வென்று அறிகிறவன்கூட பக்ஷிக்கக் கூடாததை பக்ஷிக்கக் கூடாது, பிரதி கிரகிக்க

வும் கூடாது. ஆகலால் வித்வான்களாயும், ச்ரோத்ரியர்களாயுமிருக்கிற பிராமணர்கள் போஜனத்திற்கு முந்தியும், பிந்தியும் ஆசமனம் செய்கிறார்கள். (இவ்விதம் வேதோக்த ஆசமனம் செய்வதால்) பிராணனுக்கு வஸ்திரம் கொடுக்கிற பாவனையுண்டாகிறது. (ஸ்மிருதியில் சொல்லிய ஆசமனம் அன்னபக்ஷண தோஷபரிஹாரத்திற்காக ஏற்பட்டது).

பிராமணம் 2.

இது கிலாதிகாரமானதால் எதெல்லாம் முன் சொல்லப்படவில்லையோ அதெல்லாம் இதில் சொல்லப்படுகிறது. ஞானத்துடன்கூடிய கர்மம் செய்கிறவன் நல்ல கதியையடைய அக்னியை பிரார்த்திக்கிற சங்கதி சொல்லப்பட்டது. இதனால் அவன் செய்யும் கர்மத்திற்கு தக்கவாறு பலகதிகள் (மார்க்கங்கள்) இருப்பதாக தோன்றுகிறது. அப்படிப்பட்ட மார்க்கங்கள் எவ்வளவு உளதென்று காண்பித்து, எல்லா ஸம்ஸாரத்தின் கதி இதுதான் என்று சொல்லிமுடிப்பதற்காக இந்த பிராமணம் துவக்கப்படுகிறது. ஸ்வாபாவிகமாயும், சாஸ்திரீயமாயுமிருக்கிற ஞானத்திற்கு இவ்வளவுதான் ஸம்ஸார கதி, இவ்வளவுதான் கர்ம விபாகம் என்றும் சொல்லப்படுகிறது. கேவல கர்மத்தால் பிதுருலோகமும், ஞானத்துடன் கூடிய கர்மத்தால் தேவலோகமும் கிடைக்கும் என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விவரமாக எந்த மார்க்கத்தால் பித்ருலோகம், எந்த மார்க்கத்தால் தேவலோகம் என்பதைப்பற்றி சொல்லப்படவில்லை. அதை இதில் விவரமாக சொல்லப்படும். கடையில் சாஸ்திரத்தின் முடிவும் சொல்லப்படும். மேலும், அமிருதத்வம் இத்தகையதென்றும், கர்மத்தால் அமிருதத்வம் வரமாட்டாதென்றும் முன் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் அதற்கு ஹேது சொல்லப்படவில்லை. அந்த ஹேதுவும் இப்பொழுது சொல்லப்படும். கர்த்தாவிற்கு ஆஹுதி லக்ஷணமான கர்மத்தின் பலனும் சொல்லப்படும். மேற்படி கர்மத்தின் பலன் கர்த்தாவை அனுஸரிக்காமல் தானாக வுண்டாகிறதில்லை. அத்தகைய கர்மபலன் ஆறுவிதம் என்பதும், உத்திரமார்க்க பிரதிபத்தி ஸாதனமாயிருக்கிற பஞ்சாக்னி தர்சனமும் சொல்லப்படும். கர்மகாண்டத்திற்கு இவ்வளவுதான் நிலைமை, ஸ்திதி, பலன்—என்று காட்ட வேண்டுவதற்காக ஒரு கதை சொல்லப்படுகிறது.

1. ஒரு வித்வானாகிய ச்வேதகேது வென்ற ஆருணேயர், பஞ்சால தேசத்திலுள்ள வித்வாம்ஸ கூட்டத்திற்கு போனார்.

(அந்தக் கூட்டத்தை ஜயித்து) ப்ரவாஹனர் என்றும் ஜைபலி யென்றும் பெயருள்ள ராஜனிடம், அவருடைய வித்வத் கூட்டத்தையும் ஜயிக்க இச்சையுடன், சென்றார். அந்த ராஜா (இவருடைய வித்வத் கர்வத்தை முன்பதாகவேயறிந்து, இவரை வணக்கப்படுத்தக்கருதி) குமாரா—ரா—ரா வென்று நீட்டி கூப்பிட்டார் (அலக்ஷியம் என்ற கருத்து). அதற்கு ச்வேதகேது போ—ஒ—ஒ வென்று நீட்டி மறுமொழி சொன்னார்.

(ஸம்பாஷணை) ராஜா—பிதாவால் ஏவப்பட்டு வந்திருக்கிறீரோ?

ச்வேதகேது—ஆம். வேண்டிய ஸந்தேகங்களை கேட்கலாம்.

2. ராஜா கேள்விகள்.—

(i) மறித்துப்போகிறவர்களும், ஒரே நாடிவழியாகப் போகிறவர்களுமான இந்த பிரஜைகளுள், எவ்விதம் சிலர் ஒரு வழியாகவும், சிலர் வேறு வழியிலும் வித்யாஸப்பட்டு போகிறார்கள்? உனக்குத் தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

(ii) ராஜா—அப்படி சென்றவர்கள் எவ்விதம் மறுபடி இந்த லோகத்தை வந்தடைகிறார்கள்? தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

(iii) ராஜா—இவ்விதம் அடிக்கடி மரணத்தை யடைகின்ற வெகுபேர்களால் அந்தலோகம் (மேல் உலகம்) நிறம்பப்படவில்லை? தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

(iv) ராஜா—எவ்வளவு ஆஹுதிகள் செய்யப்பட்டால் ஜலம் புருஷாகிருதியாக கிளம்பி பேசுகின்றது? தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

(v) ராஜா—மனிதர்களுக்கு, மறித்தபின்னர், தேவயானமென்றும், பித்ருயானமென்றும் இரண்டு மார்க்கங்கள் உளதென்றும், அவைகளின் வழியாக எல்லாம் பொகின்றனவென்றும், அந்த மார்க்கங்கள், மாதாவாகிய இந்த பூமிக்கும், பிதாவா

கிய அந்த ஸ்வர்கத்திற்கும் மத்தியில் இருக்கின்றனவென்றும் (அதாவது, இவை அண்ட கடாஹத்திற்குள்ளிருக்கப்பட்ட வழிகள்; ஆத்யந்திகமான அமிருதத்வத்தை கொடுக்கும் மார்க்கங்கள் அன்று என்றும்) நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா? அந்த மார்க்கங்களின் பிரதிபத்தை, (அதாவது) அந்த மார்க்கங்களையடைய ஸாதனத்தை, (அதாவது) எந்த கர்மம் செய்யின் இவைகள் கிடைக்கும் என்பது தெரியுமா?

ச்வேதகேது—நீர் கேட்ட கேள்விகளில் யாதொன்றிற்கும் உத்திரம்சொல்ல எனக்கு தெரியாது.

3. பிறகு ராஜா ச்வேதகேதுவை 'இருங்கள்' என்று மரியாதை செய்தார். அதை அலக்ஷியம்செய்து தன் பிதாவிடம் திரும்பிச் சென்றார். அவ்விடம் சென்று கோபத்துடன் பிதாவை (அடியில்கண்டவாறு) கேட்கிறார்—எங்களுக்கு முன்னர் இவ்விதமாகத் தான் சொல்லிக் கொடுத்தீர்!.

பிதா—ஏன்! அப்பா! இப்படி துக்கப்பட வேண்டிய காரணம்?

ச்வேதகேது—சொல்லுகிறேன். கேளும்! அந்த எறிந்து போட்ட ராஜா, ஜைபலி, என்னை ஐந்து கேள்விகள் கேட்டான். அவைகளில் ஒன்றுக்காவது மறுமொழிகூற எனக்குத் தெரியவில்லை. (நீங்கள் எனக்கு வித்யாப்யாஸம் செய்ததில் என்ன பிரயோஜனம்).

பிதா—யாது கேள்விகள் கேட்டான்.

ச்வேதகேது—இன்ன இன்ன கேழ்விகள் என்று சொன்னேன்.

4. பிதா—அடேயப்பா! எனக்கு தெரிந்தது எல்லாம் உனக்கு கற்றுக்கொடுத்ததாக அறி. (இந்தக் கேள்விகளுக்கு உத்திரம் எனக்கும் தெரியாது). ஆகையால், வா! அந்த ராஜாவிடம்போய் கேட்போம்.

ச்வேதகேது—நீர்போம். (எனக்கு அவர் முகத்தில் விழிக்க இஷ்டமில்லை).

(பிறகு) மேற்படி பிதாவாகிய ஆருணி ராஜனிடம் சென்றார். இவருக்கு ராஜா வேண்டிய மரியாதை அளித்து, இவரைநோக்கி, 'வேண்டும் வரம் கேட்கலாம், வரம் கொடுக்கேன்' என்று சொன்னார்.

5. ஆருணி—வரம் கொடுப்பதாக பிரதிஜ்ஞைசெய்திருக்கிறீர் அல்லவா! தவரக்கூடாது' நான் வரம் கேட்கிறேன்; அதாவது, என் குமாரனை எந்த கேள்விகள் கேட்டினரோ அவைகளைப்பற்றி சொல்லும்.

6. ராஜா—இவைகள் தைவ ஸம்பந்தமானவை; இவைகள் வேண்டாம். மநுஷ்ய ஸம்பந்தமான வரத்தைக்கேளும்.

7. ஆருணி—எனக்கு ஹிரண்யம், பசு, குதிரை, தாஸீ, பரிவாரம் முதலியவையெல்லாம் நிறைந்திருக்கின்றன. அவைகளை நான் கேட்கவேண்டுவதுமில்லை. நீர் எனக்கு கொடுக்கவேண்டுவதுமில்லை. எனக்கு வேண்டிய, முன்சொன்ன, வரத்தையே கொடும்.

ராஜா—அப்படியானால், சாஸ்திரப்பிரகாரம் (குரு சிஷ்யக்ரமமாக) என்னை கேட்கவேண்டியது.

ஆருணி—அப்படியே கேட்கிறேன். நீர்தான் குரு; நான் சிஷ்யன். உபதேசம் செய்க.

(பிராமணன் க்ஷத்திரியனையாவது, க்ஷத்திரியன் வைச்யனையாவது உபதேசம் கேட்கும்கால், 'நான் சிஷ்யன்' என்று, வார்த்தையாக மாத்திரம் சொல்லவேண்டியதே தவிர நமஸ்காரம் முதலானது செய்யக்கூடாது). இப்பிரகாரம், ஆருணி வார்த்தையால் மட்டும் சொல்லி ராஜாவை உபதேசிக்கும்படி கேட்கிறார்.

8. ராஜா—ஹே! கௌதம! கோபித்துக்கொள்ளவேண்டாம்! என்னுடைய பிதா மஹரிடத்தில் உம்முடைய பிதா மஹர் வைத்திருந்த விச்வாஸம்போல் நீரும் என்மேல் பக்ஷம் வைக்கவும். நான் உமக்கு சொல்லப்போகிற வித்தையானது இதற்குமுன் ஒரு பிராமணனுக்கும் சொல்லிக் கொடுக்கப்படவில்லை; தெரியவுமாட்டாது. க்ஷத்திரியனிடமே பரம்பரையாக விருந்தது. அப்படிபட்

டதை உமக்குச் சொல்லுகிறேன். 'சொல்லமாட்டேன்' என்று யாராவது உமக்கு சொல்லலாமா? கூடாது.

9. ராஜா—அந்த லோகம் (த்யுலோகம், ஸ்வர்க்கலோகம், ஆகாசலோகம்) அக்னி. (அந்த லோகத்தை அக்னியாக பாவித்துக்கொள்ளவேண்டும்). அதற்கு, ஆதித்யன்—ஸமித்; அதன் கிரணங்கள்—புகை; பகல்—ஜ்வாலை; திக்குகள்—அணைந்த தணல்; மூலை திக்குகள்—பொறிகள்; இத்தகைய அக்னியில் இந்திராதி தேவர்கள் சிரத்தையை (ஜலத்தை) ஹோமம் செய்கிறார்கள். அதினின்றும் ஸோம ராஜா (சந்திரன்) உண்டாகிறான்.

[இவ்வுலகத்தில் ஒரு கல்பத்தில் ஜனங்களால் செய்யப்படும் அக்னிஹோத்ராதி கர்மமானது, அதின் ஸாதனங்களுடன், ஸூக்ஷ்ம ரூபமாக, அபூர்வம், அதிருஷ்டம் என்ற பெயர்களுள்ளதாக, அந்த கல்ப பிரளய காலத்தில், பரமாயிருக்கிற ஆத்மாவுடன் இருக்கிறது. அப்படிப்பட்ட கர்மம் மறுகல்ப சிருஷ்டி யாரம்பகாலத்தில் அந்தந்த கர்மத்திற்கு தக்கவாறு பரிணமத்தை யடைகின்றன. ஆதலால், இந்த எல்லா ஜகத்தும் அக்னிஹோத்ராஹுத்ய பூர்வ விபரிணாமாத்மகமாயிருக்கிறதென்று ஆஹுதிகளை ஸ்தோத்ரம் செய்யக்கருதி, லோக பிரத்யுத்தாபிதங்களான இந்த ஆறு பதார்த்தங்களை குறித்து கர்மகாண்டத்தில் விஸ்தாரமாக சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த ஞானகாண்டத்திலோவெனில், கர்மம்செய்கிற கர்த்தாவின் கர்ம பல விஷயத்தில் உத்திரமார்க்கமடைய ஸாதனமான த்யுலோகாக்னி முதலிய ஐந்து அக்னிகளின் தர்சனத்தைப்பற்றி (ஞானத்தைப்பற்றி) சொல்லப்படுகிறது. தேவர்கள் யெவரெனில், நம்முடைய ஆத்ம ஸம்பந்தமான பிராணன்களே; இந்தலோகத்தில் அவர்களே கர்மத்தை நடத்துகிறவர்களாக, ஹோதாக்களாக விருக்கிறார்கள்; அவர்களே அந்த லோகத்தில் தேவத்வத்தை யடைந்தவர்களாக இந்திராதி தேவர்களாக விருக்கிறார்கள்; அவர்களே த்யுலோகாக்னியில், பலத்தையடையும்பொருட்டு, ஹோமம் செய்கிறவர்கள்; அவர்களே பலத்தை யடைகின்றார்கள். ஹவிஸ் யாதெனில், ஹோமம் செய்யப்படும் பால் முதலான திரவ்யம்; அது அக்னியால் பக்ஷிக்கப்பட்டு, ஸூக்ஷ்ம ரூபமாக, யஜமானனுகிற கர்த்தாவுடன் இவ்விடத்தினின்றும், தூமாதி கிரமமாக, அந்தரிக்ஷத்திற்கு போகிறது; அங்குயிருந்து த்யுலோகத்திற்கு போகிறது; அது ஸூக்ஷ்மமான ஜலமாகவிருக்கிறது; அதற்கு 'சிரத்தா' வென்றும் பெயர்; அந்த ஸூக்ஷ்ம ஜலம் ஸோமமண்டலத்தை யடைந்து, கர்த்தாவிற்கு சரீராந்திரத்தை யுண்டுபண்ணுகிறது; ஆதலால் ஜலம் கர்மத்

திற்கு வேண்டியது முக்கியம்; ஆயினும், மற்ற பூதங்கள் வேண்டுவதில்லை யோவெனில், அப்படியன்று; ஜலம் ஜாஸ்தியாக வேண்டியதால் ஜலத்தை பிரதானமாக சொல்லப்பட்டது; கர்மத்தால் சரீரம் உண்டாகிறது; கர்மமோ ஜலத்தை அவச்யமாக வேண்டுகிறது; ஆதலால், சரீரம் உண்டாகிற விஷயத்தில் ஜலத்திற்கு பிராதாண்யம் சொல்லப்பட்டது; அதனுல் ஜலம் புருஷவாசமாக வ்யபதேசிக்கப்பட்டது. அக்னி ஹோத்ர கர்மத்தைக்குறித்து மாத்திரம் சொல்லப்பட்டிருந்தாலும், அது வேதோக்தங்களான எல்லா கர்மங்களையும் குறிக்கும், எல்லா கர்மங்களும் 'தாரா' வென்ற அக்னி சம்பந்த முளதாயிருப்பதால்.

த்யுலோகாக்னியைப்பற்றி சொல்லப்படுகிற இந்த மந்திரத்திற்கு தாத்பரியம் யாதெனில்— அக்னிக்குள்ள லக்ஷணத்தை காண்பிவிக்க 'ஆதித்யன்—ஸமித்' என்ற முதலியவைகளால் வர்ணிக்கப்பட்டது; இப்படிப்பட்ட த்யுலோகாக்னியில், தேவ சப்த வாசசியங்களாகிய பிராணன்கள், சிரத்தா சப்த வாச்சியமாகிற, கர்மானுபூதியாகிற அபூர்வமென்று பெயருள்ள சூக்ஷம கர்மத்தை ஹோமம் செய்கிறுன், (அதாவது போடுகிறுன்). அதாவது, இவ்வுலகத்தில் வைதோக்த கர்மங்களைச்செய்த ஒருவனுடைய பிராணன்கள், சரீரத்தை விட்டபிறகு, அவன் செய்த கர்மத்துடன், த்யுலோகத்திற்கு போகின்றன. அந்த கர்மத்தை த்யுலோகத்தில் வைக்கிறுன்; அதனுல், அதை த்யுலோகாக்னியில் போட்டதாக சொல்லப்படுகின்றது. மேலும், மேற்படி பிராணன்கள், கர்மத்துடன் கூடி, வேறு சரீரத்தை யடைய ஸோம மண்டலத்தை யடைகின்றன; அதாவது அம்மண்டலமாகின்றன; அதனுல் ஸோம ராஜா உண்டானுர் என்று சொல்லப்படுகின்றது].

10. பர்ஜந்யன் (இந்திரன், மழைக்கு அபிமானி தேவதை) அக்னி. (இரண்டாவது அக்னி). இதற்கு, ஸம்வத்ஸரம் (காலம்)— ஸமித்; மேகங்கள்—புகை; மின்னல்—ஜ்வாலை; இடி—தணல்; இடி மொழக்க சப்தங்கள்—பொறிகள்; இந்த அக்னியில், தேவர்கள் (பிராணன்கள்) ஸோம ராஜாவை ஹோமம் செய்கிறுர்கள். அக்னியின்றும், மழை உண்டாகிறது. (அதாவது, சந்திரனிடத்தில் நின்ற ஜலம், சூர்ய கிரணங்களால் இழுக்கப்பட்டு, மேகங்களாகி மழையுண்டாகிறது; அதாவது, மேற்கூறிய கர்ம பரிபாகம், பிராணனுடன் மழையாகிறது).

11. இந்த லோகம் (பூலோகம்) (மூன்றுவது) அக்னி. இதற்கு, பூமி—ஸமித்; பார்த்திவாக்னி—தூமம்; ராத்திரி—அர்ச்

சிஸ்; சந்திரன்—தணல்; நக்ஷத்திரங்கள்—பொறிகள்; இந்த அக்னியில் தேவர்கள் (பிராணன்கள்) மேற்படி மழையை ஹோமம் செய்கிறார்கள். அதினின்றும் அன்னம் உண்டாகிறது. (அதாவது, மழை பூமியில் விழுந்து, அதினின்றும் அன்னமாகிற நெல்லு முதலான தான்யங்கள் உண்டாகின்றன. அதாவது மேற்படி கர்மபரிபாகம் பிராணனுடன் அன்னமாகிறது).

12. புருஷன் (மனுஷ்யன்) (நான்காவது) அக்னி. அதற்கு, அவன் திறந்தவாய்—ஸமித்; பிராணன்—தூமம்; பேச்சு—அர்ச்சிஸ்; நேத்திரங்கள்—தணல்; ச்ரோத்திரங்கள்—பொறிகள்; இந்த அக்னியில், தேவர்கள் (பிராணன்கள்) அன்னத்தை ஹோமம் செய்கிறார்கள். அதினின்றும் ரேதஸ் உண்டாகிறது. (அதாவது, புருஷன் அன்னத்தை சாப்பிடுகிறான்; அதனால் அவனிடம் ரேதஸ் உண்டாகிறது; அதாவது மேற்படி கர்மபரிபாகம், பிராணனுடன் ரேதஸாகிறது).

13. ஸ்திரீ (ஐந்தாவது) அக்னி. உபஸ்தம்—ஸமித்; மயிர்கள்—தூமம்; யோனீ—அர்ச்சிஸ்; மைதுன வியாபாரம்—தணல்; அதனால் ஜனிக்கிற ஆனந்தம்—பொறிகள்; இந்த அக்னியில் தேவர்கள் (பிராணன்கள்) மேற்படி ரேதஸை ஹோமம் செய்கிறார்கள். அதனின்றும் புருஷன் உண்டாகிறான்; உண்டாகி, அவனுடைய கர்மபரிபாகம் எவ்வளவுகாலம் ஜீவித்திருக்கும்படி இடம் கொடுக்கிறதோ அவ்வளவு காலம் ஜீவித்திருக்கிறான். பிறகு அவன் மரிக்கும்பொழுது (இன்னது ஆகிறதென்று மேல் மந்திரத்தில் சொல்லப்படும்).

(இந்தப்படி நான்காவது கேள்விக்கு உத்திரம் நிர்ணயிக்கப்பட்டது; அதாவது, ஐந்து ஆஹுதிகளான பிறகு, ஜலம், புருஷாக்ருதியாகிறதென்று).

14. இறந்த உடல் அக்னியில் போடும்பொருட்டு புருஷனை தூக்கிக்கொண்டு போகிறார்கள். (ருத்விக்குகளாகிய புத்திராதிகள் அவனை அக்னியில் ஹோமம் செய்யும்பொருட்டு ச்மசானத்திற்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள்). அந்த அக்னி நிஜ

அக்னியே (முன் சொல்லியதுபோல் பரிகல்பிதமான அக்னி யன்று). அங்ஙனமே, தூமம், அர்ச்சிஸ், அங்காரம், விஸ்புலிங் கம் இவைகளெல்லாம் நிஜமானவைகள். அந்த நிஜ அக்னியில் இந்த புருஷனை ஹோமம் செய்கிறார்கள். அதினின்றும், புரு ஷன் பிரகாசமுள்ளவனாக உண்டாகிறான்.

15. (இப்பொழுது முதல் கேள்விக்கு உத்திரம் சொல்லப் படுகிறது).

இந்தப் பிரகாரம் பஞ்சாக்னி வித்தையை யறிந்த கிரகஸ்தர்க ளும், (அதாவது, ஞானத்துடன் கர்மத்தை யனுஷ்டிக்கிற கிர கஸ்தர்களும்), சிரத்தையுடன், ஸத்யமாகிற பிரமத்தை உபாஸிக் கின்ற வானப்ரஸ்தர்களும், ஸந்யாஸிகளும் மறித்தபிறகு அர்ச்சி ஸை (அர்ச்சிரபிமானி தேவதையை) யடைகிறார்கள்; (அதாவது, பிரகாசரூபியாகிறார்கள்); மேற்படி தேவதையால் வகிக்கப்பட்டு பகல் தேவதையை யடைகிறார்கள். அதிலிருந்து (கிரமமாக அத னால் வகிக்கப்பட்டு) சுக்லபக்ஷம், உத்திராயணம், தேவலோகம், ஆதித்ய மண்டலம், வித்யுத் (மின்னல்) வரிசையாக அந்தந்த தேவதைகளை யடைகிறார்கள். அங்குயிருந்து, மனதைக்கொண்டு பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு புருஷனால் பிரமலோகத்திற்கு கொண்டுபோகப்படுகிறார்கள். அப்பிரமலோகங்களில் உத்கிருஷ் டர்களாக அனேக பிரமகல்பங்கள் வஸிக்கின்றார்கள். அவர்க ளுக்கு புனராவிர்த்தி கிடையாது. (கல்பாந்தரங்களில் ஆவிர்த்தி உண்டு என தோணப்படுகிறது).

16. யஞ்யத்தாலும், தானத்தாலும், தபஸாலும் (விரதா திகளாலும்) லோகங்களை யார் ஜயிக்கிறார்களோ (ஞானமில்லாத கேவலகர்மிகள்) அவர்கள், இறந்தபிறகு, தூமதேவதையை யடை கிறார்கள். அதினின்றும் ராத்திரிதேவதையை; அதினின்றும் கிருஷ்ணபக்ஷத்தை; பிறகு, தக்ஷணாயனம், பிதுருலோகம், சந் திரலோகம், இவைகளை வரிசையாக யடைகிறார்கள். சந்திரனை யடைந்து அன்னமாகிறார்கள். இவ்வுலகத்தில் ஓர் யாகத்தில் ஸோம ரஸத்தை 'ஆப்யாயஸ்வ,' 'அபக்ஷீயஸ்வ' என்று சொல்லி ருத்விக்குகள் பக்ஷிப்பதுபோல், மேற்படி அன்ன பூதங்களான

கர்மிகளை தேவர்கள் பக்ஷிக்கிறார்கள். (அதாவது, வேலைக்காரர்களிடம் எஜமான்கள் வேலை வாங்குகிறதுபோல் தேவர்கள் இந்த கர்மிகளிடத்தில் வேலை வாங்குகிறார்கள்; அதாவது, அவர் அவர்களின் கர்மத்திற்கு தக்க பலத்தைக் கொடுத்து அதை அநுபவிக்கும்படி செய்கிறார்கள்). அந்தவிடத்தில் கர்மம் தொலைந்தபிறகு, ஆகாசத்தை யடைகிறார்கள். (எப்படியென்றால்—முன்சொல்லியபடி த்யுலோகாக்னியில் ஹோமம் செய்யப்பட்ட சிரத்தாவென்று பெயருள்ள அப்புக்கள் ஸோமாகாரமாக பரிணமப்பட்டு, கர்மிகளுக்கு, கர்மபலத்தை அநுபவிக்கும்பொருட்டு, அப்மயமான சரீரத்தை உண்டாக்கின்றன; அப்படிப்பட்ட அப்புக்கள், கர்மத்துடன் கூடிய ஜீவர்கள், கர்மம் க்ஷயித்தபிறகு வெய்யிலைக்கண்ட பனிகட்டிபோல் உருகி ஸூக்ஷ்ம ஆகாச பூதங்களாக ஆகிவிடுகின்றன). ஆகாசத்தினின்றும் வாயுவை யடைகின்றன; அதினின்றும் மழையை யடைகின்றன; (மழையாக ஆகின்றன); அவைகள் பூமியில் விழுகின்றன; பூமியிலிருந்து நெல்முதலான அன்னமாக உற்பத்தியாகின்றன; அந்த அன்னத்தை புருஷன் சாப்பிடுகிறான்; அன்னம் ரேதஸ் ஆகிறது; அந்த ரேதஸ் ஸ்திரீயிடம் விடப்பட்டு, கர்ப்பமாகி, அதினின்றும் மறுபடியும் உண்டாகிறார்கள். இவ்விதம் உண்டாகி மறுபடி லோகங்களை யடையும்பொருட்டு கர்மங்களைச் செய்கிறார்கள். பிறகு, இறந்து தூமாதி மார்க்கத்தால் மறுபடி சந்திரலோகத்தை யடைகிறார்கள்; இப்படி கிணற்றுச் சகடைபோல் போக்குவரத்தாக சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். (உத்திர மார்க்கத்தை யடைய, அல்லது உடன் முக்தியை யடைவதற்கு பிரமத்தை யறியாமலிருக்கிற பரியந்தம் இப்பிரகாரம் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்).

(உத்திரமார்க்கத்திற்கு வேண்டிய ஞானம், தக்ஷிணமார்க்கத்துக்கு வேண்டிய கர்மம், இவ்விரண்டையும் அநுஷ்டிக்காதவர்களுக்கு என்ன கதியெனில்) பூச்சி, புழு, கொசு, பக்ஷி முதலிய ஜன்மத்தை யடைகிறார்கள்.

(இந்தப்படி இந்த ஸம்ஸாரகதியானது ரொம்ப கஷ்டமாயிருக்கிறது; ஆதலால் தக்ஷிணோத்தர மார்க்கங்களுக்கு பிரதிபத்திஸாதக

னங்களான சாஸ்திரீயமான கர்மத்தையாவது, ஞானத்தையாவது கூடியமட்டில் அநுஷ்டிக்கவேண்டுவது அவசியமாயிருக்கிறது).

[இவ்வாறு ஐந்து கேள்விகளுக்கும் உத்திரங்கள் சொல்லப்பட்டன. எவ்வாறெனில்.

ஒன்றாவதிற்கு உத்திரம்—ஞானிகளும் கர்மிகளும், அக்னியில் போடப்படும் வரைக்கும் ஒரே மார்க்கமாய் போய், அதினின்றும் ஞானிகள் உத்தரமார்க்கத்திற்கு போகவேண்டிய நிமித்தம் அர்ச்சிஸையும், கர்மிகள் தக்ஷிண மார்க்கத்திற்குபோக நிமித்தம் தூமத்தையும் யடைகிறார்கள். இப்படி வழிகள் வித்யாஸப்படுகின்றன.

இரண்டாவது கேள்விக்கு உத்திரம்—கர்மிகள் ஸோமலோகத்தில் பலனை யனுபவித்து, கர்மம் க்ஷயித்தபிறகு ஸூக்ஷ்ம பூதர்களாக ஆகாசத்தை யடைந்து, அதினின்றும் வாயு, விருஷ்டி, அன்னம், ரேதஸ்களாகி, மேற்படி ரேதஸ் ஸ்திரீயினிடம் சேர்ந்து கர்ப்பமாகி ஜன்மத்தை யடைகிறார்கள்.

மூன்றாவது கேள்விக்கு உத்திரம்—ஞானிகளாகவாவது, கர்மிகளாகவாவது யிராமலிருக்கிறவர்கள், மறித்தபின்னர் கீடம் முதலான ஜந்துக்கள் ஜன்மத்தையடைந்து போகின்றனதால் அந்த லோகம் இறந்துபோனவர்களால் நிறம்பபடவில்லை.

நான்காவது கேள்விக்கு உத்திரம்—த்யுலோகாக்னியில் ஆஹுதி—1; பர்ஜன்யாக்னியில் ஆஹுதி—1; பூலோகாக்னியில் ஆஹுதி—1; புருஷாக்னியில் ஆஹுதி—1; யோஷாக்னியில் ஆஹுதி—1; ஆக ஐந்து ஆஹுதிகள் செய்யப்பட்ட பிறகு ஜலம் புருஷாகிருதியாகிறது.

ஐந்தாவது கேள்விக்கு உத்திரம்—தேவயானமாகிற உத்தரமார்க்க பிரதிபத்தி ஸாதனம்—ஞானத்துடன் கூடிய கர்மம்; பித்ருயானமாகிற தக்ஷிண மார்க்க பிரதிபத்தி ஸாதனம்—கேவல சாஸ்திரீய கர்மம்].

பிராமணம் 3.

(ஞானத்தினுடையவும், கர்மத்தினுடையவும் கதிசொல்லப்பட்டது. ஞானம் ஸ்வதந்திரம்; கர்மமானது தைவ, மானுஷவித்த இரண்டால் ஆகக்கூடியது. ஆகலால் வித்தம் சம்பாதிக்கவேண்டியது. அது நல்ல வழியில் சம்பாதிக்கவேண்டும். அவ்வித்தம் சம்பாதிக்கவேண்டுவதற்காக 'மந்தம்' என்ற கர்மம் இப்பொழுது சொல்லப்படப்போகிறது. அந்த கர்மம்செய்தால் மகத்வம், பெரியதனம், லித்திக்கும்; அதனால் வித்தமுண்டாகும்).

1. மகத்வத்தை கருதுகிறவன் (மேற்படி) மந்த கர்மத்தை எவ்விதம் செய்யவேண்டுமெனில்—உத்திராயணம் சுக்லபக்ஷத்தில், ஓர் புண்ணியதினத்தில் துவக்கி, அதுமுதல் பன்னிரண்டாம் நாள்வரை 'உபஸத்' விரதமாகவிருந்து, (பால்மட்டும் சாப்பிட்டு), அத்திக்கட்டையால் செய்யப்பட்ட 'கம்ஸம்' அல்லது 'சமஸ்' என்ற யஞ்ய பாத்திரத்தில், கூடியவரை, ஓஷதிகளையும், பலங்கள் முதலியவைகளையும் சேகரம் செய்து, சேர்த்து, ஜலத்தில் அலம்பி, பிறகு அக்னியைமூட்டி, அதை தர்ப்பையால் சுற்றி, ஆஜ்யத்தை சுத்தப்படுத்தி, புருஷ நக்ஷத்திரதினத்தில் 'மந்த'மென்கிற ஸர்வௌஷத பலமென்கிற இஷ்டியை (பாகத்தை) செய்யவேண்டும். (அதாவது, மேற்படி ஓஷதி, பலங்களை, மேற்படி சமஸ் அல்லது கம்ஸ பாத்திரத்தில் நெய், தயிர், பால் இவைகளில் கலந்து) ஹோமத்தை 'யாவந்தே' என்று முதலிய மந்திரத்தைச்சொல்லி செய்யவேண்டியது. (அந்த மந்திரத்தின் அர்த்தம்—எல்லா காமங்களையும் எனக்கு கொடுமென்று அக்னியை பிரார்த்தனை).

2–3. ஹோமம் செய்யவேண்டிய கிரமம்—அந்தந்த ஸ்வாஹாக்களைச்சொல்லி ஹோமம் செய்தபிறகு, அந்த ஸ்ருக்கிலிருக்கிற மிச்சமான நெய் முதலான திரவ்யத்தை மந்தத்தில், (அதாவது முன்சொன்ன பாத்ர விசேஷத்தில்) சொட்டவேண்டியது.

4. பிறகு, 'பிரமதஸி' முதலான மந்திரத்தைச் சொல்லி அந்த மந்தத்தைத் தொடவேண்டியது.

5. பிறகு, 'ஆமம்ஸி' முதலான மந்திரத்தைச் சொல்லி அந்த மந்தத்தை உயரத் தூக்கவேண்டியது.

6. பிறகு அதிலிருப்பதை நான்குதடவை ஆசமனம் செய்யவேண்டியது. (சாப்பிடவேண்டிய கிரமம் எப்படியெனில்) காயத்ரீயின் முதல் பாதத்தையும், 'மதுமதீ' மந்திரத்தின் முதல் பாதத்தையும், முதலாவது வ்யாகிருதியையும் சொல்லி முதல் ஆசமனம் செய்யவும். அங்ஙனமே இரண்டாவது அதின் பாதங்களைச் சொல்லி இரண்டாவது ஆசமனம். அப்படியே அத

தின் மூன்றாவதைச் சொல்லி மூன்றாவது ஆசமனம். முழு காயத்ரீ, முழு 'மதுமதீ', முழு வ்யாஹ்ருதிகளைச் சொல்லி நான்காவது ஆசமனம். பிறகு கைகளை அலம்பி, அக்னிக்கு பின்னால், கிழ்புறம் தலையை வைத்துக்கொண்டு படுத்துக்கொள்ளவும். பிறகு காலமே எழுந்து, 'திசாம்' என்ற மந்திரத்தைச் சொல்லி, ஆதித்ய உபஸ்தானம் செய்யவேண்டியது. பிறகு அக்னியின் பின்புறம் உட்கார்ந்து 'வம்ச' மந்திரத்தை ஜபிக்கவேண்டும்.

7–12. இத்தகைய மந்தத்தை உலர் கட்டையில் விட்டாலும் அந்தக் கட்டையினின்று கிளைகளும், இலைகளும் கிளம்பும். இவ்விதமென்று உத்தாலகர், வாஜஸனேயருக்கும், இவர் மதுகருக்கும், அவர் சூலருக்கும், அவர் ஜனகருக்கும், அவர் ஸத்யகாமருக்கும், அவர் தன் பல சிஷ்யர்களுக்கும் சொன்னார்கள். இந்தப்பிரகாரம் குரு சிஷ்யக் கிரமமாக சொல்லியிருக்கிறார்கள். இந்த உபதேசத்தை புத்திரனில்லாதவர்களுக்கும், சிஷ்யனில்லாதவர்களுக்கும் சொல்லக் கூடாது.

13. ஸ்ருவம், சமஸம், இத்மம், உபமந்தினீ, இந் நான்கும் அத்திக் கட்டையால் செய்யப்பட்டிருக்க வேண்டியதென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பாத்திரங்களில் நெல்லு, யவம், உளுந்து, திலம், கோதுமை, கொள்ளு, மொச்சை முதலிய பத்து தானியங்களை மாவாகச் செய்து, அதை பிசைந்து, அதை தயிர், தேன், நெய்களில் நனைத்து, இந்த மாவை ஹோமம் செய்யவேண்டியது. (இதற்கு பலன் முன் சொல்லப்பட்டிருக்கிறது).

பிராமணம் 4.

(ஜன்மமென்றது என்ன? புத்திரன் எவ்விதம் உண்டாகிறான்? எக்குணங்களுடன் சேர்ந்திருக்கிறான்? எவ்விதம் உலகத்தில் பிரசித்தனாகிறான்? இவைகளைப்பற்றி இந்த பிராமணத்தில் சொல்லப்படுகிறது.

புத்திர மந்தத்தை இச்சிக்கிறவன் முதலில் முன் சொல்லிய ஸ்ரீமந்தத்தை, ஸ்ரீயை அபேக்ஷித்த யாகத்தை, செய்து ருதுகாலத்தில் பத்னியிடம் சேரவேண்டும்).

1. சராசரங்களாகிற பூதங்களுக்குள் ப்ருதிவி ஸாரமாயிருக்கிறது. இதைக் காட்டிலும் ஜலம் ஸாரமாயிருக்கிறது. (ஏனெனில் ஜலத்தில் ப்ருதிவி கோர்க்கப்பட்டிருக்கிறது). ஜலத்தைக் காட்டிலும் ஓஷதிகள் ஸாரம்; இவைகளைக்காட்டிலும் புஷ்பங்கள் ஸாரம்; இவைகளைக் காட்டிலும் பலங்கள் ஸாரம்; இவைகளைக் காட்டிலும் புருஷன் ஸாரம்; இதைக்காட்டிலும் ரேதஸ் ஸாரம். (இந்த ரேதஸ்ஸுக்கு ப்ரதிஷ்டை யென்னவென்றால்).

2. இதற்கு ப்ரதிஷ்டை உண்டாக்குவோமென்று ப்ரஜாபதி நினைத்தார். ஸ்த்ரீயை அவர் ஸ்ருஷ்டித்தார். அவளை அவர் கீழே படுக்கவைத்தார். ஆனதால் நீங்கள் ஸ்த்ரீகளை கீழே படுக்கவையுங்கள். பிறகு, ப்ரஜாபதி, அந்த ஸ்த்ரீ வ்யஞ்சனத்தில், ஸோம லதையை இடிக்கிற கல்லுக்கு ஸமானமாயிருக்கிறதான ப்ரஜனனேந்த்ரியத்தை உள்ளேவிட்டு நிரப்பினார். (ஸம்ஸர்க்கம் செய்தார்).

3. (இந்த மைதுன க்ரியை வாஜபேய யாகத்திற்கு ஸமானம்; எப்படியெனில்).

அவளுடைய உபஸ்தம்—யாகதிட்டாணி; மயிர்கள்—தர்ப்பைகள்; தோல்—ஸமித்; விருஷணங்கள்—யாகத்தில் அதிஷ்டான பலகங்கள், ஸ்நாக பலகைகள். இந்தப் ப்ரகாரம் அறிந்து மைதுனக்ரியை செய்கிறவன் வாஜபேயயாகம் செய்தவர்களுடையும் லோகத்திற்குப் போகிறான்; ஸ்த்ரீகளின் ஸுக்ருதங்களையும் அபகரித்துக் கொள்கிறார்கள். இவ்விதம் அறியாமல் மேற்படி க்ரியைச் செய்கிறவர்களின் ஸுக்ருதத்தை ஸ்த்ரீகள் அபகரித்துக் கொள்கிறார்கள்.

4–5. உத்தாலகரும், நாகரும், குமாரஹாரிதரும் இவ்விதமே சொல்லியிருக்கிறார்கள். (எப்படியெனில்) மேற்சொல்லியபடி யறியாமல் மைதுனம்செய்கிற மனிதர்கள் இந்த்ரியங்களற்றவர்களாகவும் ஸுக்ருதமில்லாதவர்களாகவும் இவ்வுலகத்தைவிட்டுப் போகிறார்கள். (அதாவது, அவர்களுக்கு நல்லகதி கிடையாது).

(அதிக காமத்தால்) ஜாக்ரத்திலாவது, ஸ்வப்னத்திலாவது (ஸ்திரீ ஸம்போகமன்றி) ரேதஸை நழுவவிடுகிறவர்கள் (என்ன செய்யவேண்டியது, எனில்).

அதை தொட்டு 'யந்மே' என்ற மந்திரத்தைச் சொல்லவேண்டியது; பிறகு 'புனர்மா' வென்ற மந்திரத்தைச்சொல்லி கடை பவித்ரவிரல்களால் அதையெடுத்து இரண்டு புருவத்திற்கு நடுவில் அல்லது இரண்டு ஸ்தனங்களுக்கு நடுவில் வைக்கவேண்டியது.

(முதல் 'யந்மே' மந்திரத்திற்கு பாவம்—என்னிடமிருந்து வெளிப்பட்ட இந்த இந்திரியம், அதற்கு மூலங்களான பிருதிவி, ஓஷதிகள், ஜலம் இவைகளைப்போய் சேரட்டும்; மறுபடியும் என்னை யடையட்டும்; அதை நான் இப்பொழுது கைகளால் எடுக்கிறேன்.

இரண்டாவது 'புநர்மா' என்ற மந்திரத்திற்கு பாவம்—மறுபடியும் இந்திரியமும், தேஜஸும், பாக்கியமும், அக்னியும் என்னை யடையட்டும். யதாஸ்தானம் போகட்டும்).

6. ஜலத்தில் தன் சாயையை பார்க்கிறவன் (அந்த தோஷ நிவர்த்திக்காக) 'மயிதேஜ' என்ற மந்திரத்தைச் சொல்லவேண்டியது. ரஜஸ்வலையாயிருக்கிற பத்னீ, ஸ்திரீகளுள் ஸ்ரீமதியாயிருப்பவளிடத்தில் மூன்று ராத்திரிகள் கழித்து புத்ரோத்பத்தி நிமித்தம் பிரவேசிக்கவேண்டும்.

7. காமத்தை தீர்க்க அவள் புருஷனுக்கு இடம் கொடாவிடில், ஆபரணம் முதலானதுகள் கொடுத்து அவளை ஞாபகப்படுத்த வேண்டியது. அப்படிசெய்தும் அவள் இடம் கொடாவிடில், அவளை கழியினாலாவது, கையினாலாவது 'அடித்து' அவளிடம் புணரவேண்டும். அவள் யசஸ் இல்லாதவள்; கெட்டஸ்திரீ; அப்பொழுது 'இந்திரியேணதே' என்ற மந்திரத்தைச் சொல்லவேண்டியது.

8. அவள் பர்த்தாவின் மனதின்படி நடந்து காமத்திற்கு இடம் கொடுத்தால், அப்பொழுது, 'இந்திரியேந' என்ற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு அவளுடன் பிரவேசிக்க வேண்டியது. இரண்டுபேர்களும் யசஸ்விகளாக விருப்பார்கள்.

9. தன்னை அவள் இச்சிக்கிறாள் என்று நினைக்கிற புருஷன் அவளை இச்சித்தால் (பரஸ்பர இச்சையிருந்தால்), அப்பொழுது புருஷன் தன் பிரஜனேந்திரியத்தைவைத்து, முகத்துடன் முகம் வைத்து, அவளுடைய உபஸ்தத்தை தொட்டு, 'அங்காதங்காத்' என்ற மந்திரத்தை ஜபிக்கவேண்டியது.

10. அவள் கர்ப்பவதியாக வேண்டாமென்று யிச்சிக்கிற புருஷன், அவளிடத்தில் முன்சொன்னபடிசெய்து, 'இந்திரியேண ரேத' என்ற மந்திரத்தை சொல்லவேண்டியது. அப்படிச்செய்தால் கர்ப்பவதியாகமாட்டாள்.

11. கர்ப்பமுள்ளவளாக வேண்டுமென்று இச்சிக்கிற புருஷன், முன்சொல்லியபடி அவளிடத்தில் செய்து 'இந்திரியேண—ரேத ஆததாமி' என்ற மந்திரத்தை சொல்லவேண்டியது. அப்படிசெய்தால் கர்ப்பவதியாவாள்.

12. எவனுடைய பத்னிக்கு ஜார புருஷனிருந்து, அவனை சொந்த புருஷன் துவேஷித்தால் அவன் செய்யவேண்டிய தென்னவென்றால்—சுடாத மண்பாத்திரத்தில் அக்னியை யெடுத்து தர்ப்பை முதலியதை தலைகீழாகப் போடவேண்டியது. சருந்து கழிகளையும், தெர்ப்பையையும் நெய்யில் நனைத்து அந்த அக்னியில் 'மம ஸமித்தே' என்ற மந்திரத்தைச்சொல்லி ஹோமம் செய்ய வேண்டியது. அப்படி செய்தால் ஜார புருஷன் நிரிந்திரியனாகவும், ஸுகிருத மற்றவனாகவும் இவ்வுலகத்தை விடுவான். இப்படியறிந்து நடக்கும் பிராமணனை பரிஹாசம் செய்யக்கூடாது; அப்படி பரிகாசம் செய்கிறவன் அவருக்கு சத்துரு ஆவான் (அதாவது கெடுதலுண்டு).

13. ஒருவனுடைய பத்னீ ரஜஸ்வலையானால் அவள் மூன்று தினங்கள் கம்ஸ பாத்திரத்தில் (மடக்கில்) அன்னம், ஜலம் சாப்பிடவேண்டியது. வஸ்திரத்தை தோய்க்காமலிருக்கவேண்டியது. இவளை சூத்திரனாவது, சூத்திரஸ்திரீயாவது தொடக்கூடாது. மூன்று நாள்கள் கழித்த பிறகு ஸ்நானம் செய்து, நெல்லுகுத்த வேண்டியது.

14. ஒருவனுக்கு வெண்நிறமுள்ளவனும், ஒரு வேதம் தெரிந்தவனும் இருக்கிற குமாரன் பிறக்கவேணுமென்று இச்சையிருந்தால், இரண்டுபேர்களும் பால் அன்னம் சமைத்து நெய்யில் கலந்து சாப்பிடவேண்டியது. இவர்கள் அப்படிப்பட்ட குமாரனை பெற தகுந்தவர்கள்.

15. மஞ்சள் வர்ணமுள்ளவனும், இரண்டு வேதங்கள் தெரிந்தவனும் இருக்கிற புத்திரனை இச்சித்தால் தயிர் அன்னம் சாப்பிடவேண்டியது.

16. கருப்பு வர்ணமுள்ளதும், மூன்று வேதங்கள் தெரிந்த குமாரனை இச்சித்தால் ஜலம்சேர்ந்த அன்னத்தை மேல்கண்டபடி சாப்பிடவேண்டியது.

17. புத்திசாலியான புத்திரியை அபேக்ஷித்தால் எள்ளு அன்னத்தை சாப்பிடவேண்டியது.

18. பண்டிதனாகவும், ஸபைக்கு அர்ஹனாகவும், எல்லா வேதங்களும் தெரிந்த புத்திரனை இச்சித்தால் மாம்ஸத்துடன் சேர்ந்த அன்னத்தை சாப்பிடவேண்டும்.

(இதனால் எல்லோரும் மாம்ஸம் சாப்பிடலா மென்பதில்லை; தேசத்திற்கு தக்கபடியும், காலத்திற்கு தக்கவாறும், எவர் எவர் சாப்பிடலாமோ அவர்கள்மட்டும் சாப்பிடலாம்; மற்றவர்கள் சாப்பிடக்கூடாது).

19. பிறகு காலையில், யேற்கனவே குத்தியிருந்த அரிசியை ஸ்தாலியில் பாகம்செய்து, அந்த அன்னத்தை 'அக்னயேஸ்வாஹா' என்ற மந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டியது. பிறகு மீதி அன்னத்தை தான் சாப்பிட்டு, பத்னிக்கும் கொடுக்கவேண்டியது. பிறகு கையை அலம்பி, உதபாத்திரத்தில் ஜலம்யெடுத்து, அந்த ஜலத்தால் அவளை 'உத்திஷ்டாதோ' வென்ற மந்திரத்தால் மூன்றுதரம் ப்ரோக்ஷிக்கவேண்டும்.

20. பிறகு ருத்திரி, முன் சொன்ன பிரஜா இச்சைக்குத் தக்கவாறு க்ஷீரான்ன முதலியதை சாப்பிட்டு, 'மோஹமஸ்மி' என்ற மந்திரத்தைச் சொல்லி அவளிடத்தில் சேரவேண்டியது.

21–22. பிறகு, 'விஜிஹீதாம்' என்ற மந்திரத்தைச் சொல்லி அவளுடைய தொடைகளைப் பிரிக்கவேண்டியது. பிறகு, தன் பிரஜனேன்திரியத்தை அவளுடையதில் வைத்து, முகத்துடன் முகம்சேர்த்து, மூன்று தடவை தலையிலிருந்து கீழாக கால்வரையில் தொட்டு, 'விஷ்ணுர்யோநிம்' என்ற மந்திரத்தைச் சொல்லவேண்டியது. (இப்படிசெய்து ஸங்கமம் செய்தால் கர்பமுண்டாகும்).

23. பிறகு, பிரஸவகாலத்தில் 'ஸொஷ்யந்தி' என்ற மந்திரத்தை சொல்லவேண்டியது. ஸுகபிரஸவமாகும்.

24. குழந்தை பிறந்தபிறகு 'ஜுஹோத்யஸ்மின்' என்ற மந்திரத்தைச் சொல்லி ஹோமம் செய்து, ஜாதகர்மம் செய்ய வேண்டியது.

25. பிற்பாடு, மேற்படி சிசுவின் வலதுகாதில், பிதா தன் முகத்தை வைத்து, 'வாக்' என்று மூன்றுதரம் சொல்லவேண்டியது. தயிர், நெய், தேன் மூன்றையும் கலந்து, 'பூஸ்தேததாமி' என்ற மந்திரத்தைச் சொல்லி அன்ன பிராசனம் செய்துவைக்க வேண்டியது.

26. பிற்பாடு, மேற்படி சிசுவுக்கு 'உனக்கு வேதம் என்று பெயர்' என்று சொல்லி நாமகரணம் செய்யவேண்டியது. இது ரஹஸ்யப் பெயர். (வெளிப் பெயர் வேறு, ராமன், கிருஷ்ணன் முதலியவை).

27. பிறகு, சிசுவை 'யஸ்தேஸ்தன:' மந்திரத்தைச் சொல்லி, மாதாவிடம் கொடுத்து, ஸ்தன்யபானம் கொடுக்கச் செய்யவேண்டியது.

28. பிறகு, அந்த மாதாவைத்தொட்டு, 'இலாஸி' என்ற மந்திரத்தைச் சொல்லவேண்டியது.

(இப்படியெல்லாம் செய்தால், பிறந்த புத்திரன், பிதாவைக் காட்டிலும் மேலானவனாக, ஸ்ரீ, யசஸ், பிரம வர்ச்சஸ்களுடன் கூடினவனாக ஆவான்).

பிராமணம் 5.

இதில் வேதங்களைச் சொல்லியிருக்கிற ரிஷிகளின் வம்சம் சொல்லப்பட்டிருக்கிறது.

1–4. பௌதிமாஷீ புத்திரன் முதல் மேல் மேல் பிரமன் வரையில் வம்சம் சொல்லப்படுகிறது.

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

பிருஹதாரண்யகோபநிஷத் முற்றிற்று.

(III) ஸாமவேதம்.

7. கேநோபநிஷத் என்ற தலவகாரோபநிஷத்.
8. சாந்தோக்யோபநிஷத்.

ஓம்.

ஓம் தத்ஸத்.

ஸாமவேதீய கேநோபநிஷத்

என்ற

தலவகாரோபநிஷத்.

சாந்தி.

ஓம். உபநிஷத்தால் பிரதிபாதிக்கப்பட்ட பிரமமானது என்னுடைய அங்கங்கள், வாக், கண், பிராணன், காது, பலம், இந்திரியங்கள் முதலானவைகளை திருப்திசெய்யட்டும். பிரமம் என்னை நிராதரவு செய்யவேண்டாம். நான் பிரமத்தை நிராதரவு செய்யவில்லை. என் விஷயத்தில் அநிராதரவு இருக்கட்டும். ஆத்மா என்னால் அறியப்பட்டவுடன் உபநிஷத்தில் சொல்லப்பட்ட தர்மங்கள் என்னிடம் இருக்கட்டும். ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

கண்டம் 1.

1. எவரால் இச்சிக்கப்பட்டு, ஏவப்பட்டதாய்க் கொண்டு மனஸ் (ஸ்வவிஷயத்தில்) விழுகிறது (பிரவேசிக்கிறது)?. முதல் பிராணன் எவரால் ஏவப்பட்டு (தன் வியாபாரத்தைச் செய்ய) போகிறது?. எவரால் இச்சிக்கப்பட்ட வாக்கை (லோகத்திலுள்ளோர்கள்) சொல்லுகிறார்கள்?. எந்த தேவன் கண்ணையும், காதையும் (வேலை) ஏவுகிறான்?.

2. (எது உன்னால் கேட்க்கப்பட்டதோ) அது காதுக்கு காதாயும் (காதுக்கு கேட்கும் சக்தியை கொடுக்கிறதாயும்), மனஸுக்கு மனஸாயும் (மனஸுக்கு நினைப்பு சக்தியை கொடுப்பதாயும்), வாக்கிற்கு வாக்காயும் (பேசுகிற சக்தியை கொடுக்கிறதா

ஓம்.

ஓம் தத்ஸத்.

ஸாமவேதீய கேநோபநிஷத்

என்ற

தலவகாரோபநிஷத்.

சாந்தி.

ஓம். உபநிஷத்தால் பிரதிபாதிக்கப்பட்ட பிரமமானது என்னுடைய அங்கங்கள், வாக், கண், பிராணன், காது, பலம், இந்திரியங்கள் முதலானவைகளை திருப்திசெய்யட்டும். பிரமம் என்னை நிராதரவு செய்யவேண்டாம். நான் பிரமத்தை நிராதரவு செய்யவில்லை. என் விஷயத்தில் அநிராதரவு இருக்கட்டும். ஆத்மா என்னால் அறியப்பட்டவுடன் உபநிஷத்தில் சொல்லப்பட்ட தர்மங்கள் என்னிடம் இருக்கட்டும். ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

கண்டம் 1.

1. எவரால் இச்சிக்கப்பட்டு, ஏவப்பட்டதாய்க் கொண்டு மனஸ் (ஸ்வவிஷயத்தில்) விழுகிறது (பிரவேசிக்கிறது)?. முதல் பிராணன் எவரால் ஏவப்பட்டு (தன் வியாபாரத்தைச் செய்ய) போகிறது?. எவரால் இச்சிக்கப்பட்ட வாக்கை (லோகத்திலுள்ளோர்கள்) சொல்லுகிறார்கள்?. எந்த தேவன் கண்ணையும், காதையும் (வேலை) ஏவுகிறான்?.

2. (எது உன்னால் கேட்க்கப்பட்டதோ) அது காதுக்கு காதாயும் (காதுக்கு கேட்கும் சக்தியை கொடுக்கிறதாயும்), மனஸுக்கு மனஸாயும் (மனஸுக்கு நினைப்பு சக்தியை கொடுப்பதாயும்), வாக்கிற்கு வாக்காயும் (பேசுகிற சக்தியை கொடுக்கிறதா

யும்), பிராணனுக்கு பிராணனாயும் (வியாபார சக்தியை கொடுக்கிறதாயும்), நேத்திரத்திற்கு நேத்திரமாயும் (பார்வை சக்தியை கொடுக்கிறதாயும்) இருக்கிறபடியால், (அதையறிந்து வெறுங் காதினிடத்தில் ஆத்ம பாவத்தை) விட்டுவிட்ட புத்திமான்கள் (இந்த தேகத்தைவிட்டு) அமிருதர்களாகிவிடுகிறார்கள்.

3. அந்த பிரமத்தினிடம் கண் போகமாட்டாது (கண் அறியாது); வாக்குப் போகாது (வாக்கு எட்டாது); மனஸ் போகாது (மனஸாலும் கண்டுபிடிக்கமுடியாது); அது (இன்னதென்று) நமக்குத் தெரியவில்லை. அதை எவ்விதமாய் (சிஷ்யனுக்கு) காட்டிக்கொடுக்கிறதென்றும் தெரியவில்லை. (அதாவது, அறியப்பட்டதெல்லாம் விகாரவஸ்து; அது விகாரவஸ்துவாகிய ஜகத் அன்று, வேறு). அது அறியப்படாததைக் காட்டிலும் உயர்ந்தது (வேறு); (அறியப் படாதது அவ்யாகிருதமான மாயை; அதற்கு மேற்பட்டது, வேறு). எந்த பூர்வத்திலுள்ள பெரியவர்கள் நமக்காக வசனத்தை செவ்வையாக சொல்லியிருக்கிறார்களோ, அவர்களுடைய (இப்படிப்பட்ட) வசனத்தை கேட்கிறோம். (தாத்பரியம்—பிரமம் காணங்களுக்கு அகோசரமாயிருக்கிறது; வேதம், குரு, உபதேசம் இவைகளுக்கு மாத்திரம் கோசரம்; இவைகளால் மட்டும் அறியப்படத் தகுந்தது).

4. எது வாக்கால் சொல்லப்பட முடியாதோ, எதனுல் வாக்கு பிரகாசிக்கப் படுகிறதோ (பேசும்படியான சக்தியை யடைகிறதோ) அதுதான் பிரமமென்று அறி. எது, இது என்று குறிப்பிட்டு (லோகத்தோர்கள்) உபாஸிக்கிறார்களோ அது பிரமமல்ல. (அதாவது, உபாதியுடன் கூடியிருக்கிற சகுண ஈசுவரர்களையும், அநாத்மாவாயிருக்கிற வஸ்துக்களையும் பிரமமென்று சொல்லக்கூடாது).

5. எதை மனஸால் எண்ண முடியாதோ, எதனுல் மனஸ் எண்ணப்படுகிறது (விஷயீகரிக்கப்படுகிறது) என்று (பெரியோர்கள்) சொன்னார்களோ அதுதான் பிரமம் என்று அறி. (மைற்றது முன்போல்).

6. எதைக் கண்ணால் பார்க்கமுடியாதோ, எதனால் நேத்திரங்கள் பார்க்கப்படுகிறதோ (விஷயீகரிக்கப்படுகிறதோ) அது தான் பிரமம் என்று அறி.

7. எது காதால் கேட்கப்படமுடியாதோ, எதனால் காது கேட்கப்படுகிறதோ (விஷயீகரிக்கப்படுகிறதோ) அதுதான் பிரமம் என்று அறி.

8. எது கிராணத்தால் முகர்ந்துபார்க்கமுடியாதோ (அறிய முடியாதோ), எதனால் கிராணம் விஷயீகரிக்கப்படுகிறதோ (கிராண சக்தியை யடைகிறதோ) அதுதான் பிரமம் என்று அறி. (பிராணன் என்பதற்கு கிராணமென்று பாஷ்யத்தில் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது).

கண்டம் 2.

9. (ஒருக்கால் நீ) பிரமத்தை நன்றாக யறிந்துவிட்டேன் என்று நினைப்பாயாகில், எது இந்த பிரமத்தின் ரூபமோ அதை அல்ப்பமாகமாத்திரம் நீ அறிந்திருப்பது நிச்சயம் (அதாவது, மனுஷ்ய தேகத்தில், தகராகாசத்தில் அத்யாத்ம உபாதி பரிச்சின்னமாயிருக்கிற ஆத்மாவைமட்டும் நீ அறிந்தாய்). எந்த பிரம ரூபம் தேவர்களிடத்தில் இருக்கிறதோ அதையும் நீ அறிந்திருப்பதும் நிச்சியம் (அதாவது, அதிதேவதோபாதி பரிச்சின்னமாயிருக்கிற ஆத்மாவைமட்டும் நீ அறிந்திருக்கிறாய்). (ஆனால், ஸர்வோபாதி ரஹிதமாயிருக்கப்பட்ட அத்வைத பிரமத்தை நீ இன்னம் அறியவில்லை). ஆகையால், உன்னால் அறியப்பட்டதாக சொல்லப்படுகிற பிரமம் இன்னமும் விசாரிக்கப்படவேண்டியது தான், (என்று குரு சொன்னார்). (தாத்பரியம்—நான் அதை யறிந்தேன் என்று சொல்லுவது பிசகு; நீ வேறு யென்றும், அறியப்படுகிற வஸ்து வேறு யென்றும் ஆகிறது. எல்லாம் ஒன்றுதான் என்ற ஞானம் வரவேண்டும்).

10. (சிஷ்யன் சொல்லுகிறான்). பிரமத்தை நன்றாக அறிந்தேன் என்று நான் நினைக்கவில்லை. நான் அறியவில்லை யென்ப

தும் இல்லை; அறிந்தேன் யென்பதும் இல்லை. எங்களுக்குள் (பிரமசாரிகளுக்குள்) யார் அதை 'நோ, நவேதேதி வேதச' என்று என்னால் சொல்லப்பட்டதை அறிகிறானோ அவன் பிரமத்தை அறிகிறான்.

11. (இவ்விதம் குரு சிஷ்யர்கள் ஸம்வாதம்செய்ய சுருதி போதிக்கிறதாவது).

எவனுக்கு பிரமம் அறியப்பட வில்லையோ (அது அறியப்படாத வஸ்துவென்று அபிப்பிராயம் கொண்டிருக்கிறவனுக்கு) அவனுக்கு அது அறியப்பட்டது. எவனுக்கு அறியப்பட்டதோ (தன்னால் அறியப்பட்டதென்று அபிப்பிராயத்தை யுடையவனோ) அவன் அதை யறியாதவன். பிரமம் அறிந்தவர்களுக்கு அறியப்படாததாயும், அறியாதவர்களுக்கு அறியப்பட்டதாயும் இருக்கிறது. (அதாவது, அறிந்தவர்கள் பிரமத்தை இந்திரியங்களுக்கு அகோசரமாயிருக்கிற அகண்ட ஸ்வரூபமென்றும், அறியாதவர்கள் இந்திரியங்களுக்கு கோசரமாயிருக்கிற கண்ட ஸ்வரூபமென்றும் நினைக்கிறார்கள். இவ்விடத்தில், அறியாதவர்கள் என்றால் சுத்த மூடஜனங்கள் என்று அர்த்தமன்று; கொஞ்சம் ஞானமுடையவர்கள் என்று பொருள்).

12. பிரமம் ஒவ்வொரு போதத்திலும் அறியப்பட்ட வஸ்துவென்று அபிப்பிராயம். (போதம் என்றால் விசுவாசம், நம்பிக்கை; எது எதை அதாகவிருக்கிறதென்று விசுவாசம் வைக்கிறோமோ அது அதிலேயும் அவர் விளங்குகிறார். ஸர்வ வியாபியாயும், விசுவாசத்தால் அறியப்பட தகுந்தவராயுமிருக்கிறார்).

(இதனால் என்ன? இப்படியறிவதால் என்ன பிரயோஜனம்?) மோக்ஷத்தை யடைகிறான். ஆத்மாவினால் (தன் ஸ்வரூபத்தால்) மோக்ஷத்தை யடையும்படியான ஸாமர்த்தியத்தை யடைகிறான். (ஆத்ம விஷயமாயிருக்கிற) வித்தையால் மோக்ஷத்தை யடைகிறான்.

13. (ஒருவன்) இவ்விடத்தில் (இந்த மனுஷ்ய ஜன்மத்தில்) பிரமத்தை மேற்கண்டபடி அறிந்தால் (அவனுக்கு) ஸத்யம் (அவி

நாசம், ஸத்பாவம்) இருக்கிறது. அறியாவிடில் பெரிய நஷ்டம் (உண்டாகிறது). புத்திமான்கள் ஒவ்வொரு பூதத்தினிடமும் பிரமத்தையறிந்து இந்த் லோகத்தினின்றும் திரும்பி அமிருதர்களாகி விடுகிறார்கள்.

கண்டம் 3.

14. பிரமமே தேவர்களின் பொருட்டு (தேவசுர யுத்தத்தில்) ஜயத்தை யடைந்தது. அந்த பிரமத்தின் ஜயவிஷயத்தில் தேவர்கள் பெருமைகொண்டு, இந்த ஜயம் நம்முடையது, இந்த மகிமை நம்முடையது என்று பார்த்துக்கொண்டார்கள் (நினைத்துக்கொண்டார்கள்).

15. இவர்களின் இக்கருத்தை பிரமம் யறிந்து, அவர்களின் பொருட்டு (ஒரு யக்ஷரூபமாக) எதிரில் வந்தது. அதை அத்தேவர்கள் அறியவில்லை. இது என்ன? யக்ஷஸா? (என்று சம்சயப்பட்டார்கள்).

16. அவர்கள் அக்னியைப்பார்த்து சொன்னதாவது:—'ஹே! ஜாதவேத! இந்த யக்ஷஸ் இன்னதென்று அறி'. அப்படியே ஆகட்டும் என்று அக்னி சொன்னார்.

17. (அக்னி) யக்ஷஸின் சமீபத்தில் சென்றார். 'நீ யார்' என்று இவரை யக்ஷஸ் கேட்டது. 'நான் அக்னி, நான் ஜாதவேதன்' என்று அக்னி சொன்னார்.

18. அப்படிப்பட்ட உன்னிடம் என்ன ஸாமர்த்யம் இருக்கிறது என்று யக்ஷஸ் கேட்டது. பூமியில் எது எது இருக்கின்றதோ அதையெல்லாம் எரித்துப்போடுவேன் என்று அக்னி சொன்னார்.

19. 'இதை எரித்துப்போடு' வென்று, (யக்ஷஸ்) ஒரு திருணத்தை யெடுத்து, (அகினியின்) முன்னில் போட்டது. அக்னி முழுவேகத்துடன் அந்த திருணத்தில் பிரவேசித்தார். அதை எரிக்க முடியவில்லை. அதனிடமிருந்து திரும்பி, தேவர்களிடம் சென்று, இந்த யக்ஷஸ் இன்னதென்று அறியப்படக் கூடவில்லை என்று அக்னி சொன்னார்.

20–23. (மேற்கண்டதுபோல் வாயுதேவன் சென்று யக்ஷஸை அறியமுடியவில்லை யென்று, அக்னி ஸங்கதிபோல், சொன்னார்).

24. பிறகு, தேவர்கள் இந்திரனைப் பார்த்து, ஹே! மகவானே! இந்த யக்ஷஸ் இன்னதென்று நீ அறி என்று சொன்னார்கள். அப்படியே ஆகட்டும் என்று இந்திரன் சொல்லி, அதற்கு சமீபத்தில் சென்றார். உடனே (யக்ஷஸ்) மறைந்துவிட்டது.

25. அவர் அந்த ஆகாசத்தில் (யக்ஷஸ் மறைந்துபோன ஆகாசத்தில்) வெகு சோபையுள்ளவளாயும், உமையாயும், ஹிமவானுடைய புத்ரீயாயும், ஸ்திரீரூபமாயும் ஆவிர்பவித்திருக்கிறவளிடம் சென்று, அவளை இந்த யக்ஷஸ் என்னவென்று கேட்டார்.

கண்டம் 4.

26. அது பிரமமென்றும், அந்த பிரமத்தினுடைய ஜயத்தில் (நீங்கள்) மகிமையை யடைந்திருக்கிறீர்கள் என்றும அவள் சொன்னாள். இந்த உபதேசத்தால் இந்திரன் அதை பிரமமென்று அறிந்தார்.

27. எதனால் அக்னி, வாயு, இந்திரன் இவர்கள், சமீபத்திலிருந்த பிரமத்தை ஸம்பந்தித்தார்களோ, பிரதான தேவர்களாக அதை பிரமமென்று அறிந்தார்களோ, அந்த காரணத்தால் இந்த மூன்று தேவர்களும் மற்ற தேவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர்கள்.

28. எதனால் இந்திரன் ஸமீபத்திலிருந்த பிரமத்தை ஸம்பந்தித்தாரோ, பிரதான தேவனாக அதை பிரமமென்று அறிந்தாரோ, அக்காரணத்தால் இந்திரன் மற்ற தேவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்.

29. பிரமத்திற்கு இது ஆதேசம் (உபதேசம் அல்லது குறிப்பு); மின்னல் கொடியின் மின்னல்போலவும், கண்ணின் எமைக்கொட்டல் போலவும் (குறிப்பு). இது அதிதைவதமான உபதேசம். (தாத்பரியம்:—மின்னல்கொடி எப்படி பிரகாசித்து

உடனே மறைந்துபோகிறதோ, கண் எப்படி கொட்டி உடனே திறந்துபோகிறதோ அப்படி அதிசீக்கிர பிரகாச மறைதலுடையது பிரமம்; அல்லது, மின்னல்கொடியின் மின்னல் என்பதில் மின்னல்கொடியில்லாமல் மின்னல் இல்லை, மின்னல் இல்லாமல் மின்னல்கொடி இருக்கமாட்டாது; இரண்டும் அபேதம்; விவகாரத்திற்குமட்டும் இரண்டாக யேற்படுத்தப்படுகிறது; அப்படிப் போல், பிரமும் சக்தியும் ஒன்று; இப்படியே கண் கொட்டல் விஷயத்திலும் பார்த்துக்கொள்க).

30. இனி அத்யாத்ம உபதேசம்; யாதொரு இந்த பிரமத்தை மனஸ் விஷயீகரிக்கிறதோ, (அதாவது) மனஸால் பிரமத்தை (ஒருவன்) மிகவும் ஸ்மரிக்கிருன்; ஸங்கல்பம் (உண்டாகிறது); அதுபோல் இருக்கிறது. (மனஸினுடைய நம்பிக்கையால் பிரமம் விசிதமாகிறது; அதாவது, பிரமம் மனஸினுடைய நினைப்புப்போல் தோன்றுகிறது).

31. அந்த பிரமம் 'தத்வநம்' என்று சொல்லப்படுகிறது. (தஸ்ய—பிராணி ஜாதஸ்ய, வநம், தத்வநம்; பிராணிக் கூட்டத்தின் வநமாய், பஜனீயமாயிருக்கப்பட்டது. அல்லது, வநம், காடு என்றும் சொல்லலாம்; விருக்ஷங்களின் கூட்டம் காடு; அப்படிப்போல், பிராணிகளின் கூட்டம் பிரமம்; விருக்ஷங்களில்லாமல் வநம் என்று பெயர் வருது; வநம் என்ற பெயர்கொள்ளாமல் விருக்ஷங்கள் சேரு). தத்வனமென்று அதை உபாசிக்கவேண்டியது. யாதொருவன் அவ்விதமாக அதை உபாசிக்கிருனே அவனை எல்லா பூதங்களும் பிரார்த்திக்ருர்கள் (பணிவிடைசெய்கிருர்கள்).

32. (சிஷ்யன் சொல்லுவதாவது):—ஹே! பகவன்! (எனக்கு) உபநிஷத்தைச் சொல்லுங்கள். (குருவசனம்) உனக்கு உபநிஷத் (யேற்கனவே) சொல்லப்பட்டிருக்கிறது. (இன்னமும்) பரமாத்ம ஸம்பந்தமான உபநிஷத்தையே சொல்லுகிறேன்.

33. அந்த உபநிஷத்தின்பொருட்டு (பிரமவித்தையின்பொருட்டு) தபஸ் (கார்ய இந்திரிய, மனஸுகளுடைய ஸமாதானம், அதாவது, பிரமத்தினிடத்தில் ஏகாக்ரசித்தம்), தமம் (இந்திரிய

நிக்கிரகம்), கர்மம் (கர்மானுஷ்டானம்) முதலியவை உபாயங்கள். வேதங்களும், அவைகளின் அங்கங்களும் (பிரமவித்தையின்) ஆதாரம் (அதாவது, வேத சாஸ்திரங்களை அறிந்துகொள்ளவேண்டியது முக்கியம்). ஸத்யம் (பிரமவித்தையின்) இருப்பிடம் (ஆயதனம்). (ஆதாவது, ஸத்யம் எல்லாவற்றைக்காட்டிலும் முக்கியம்).

34. யாதொருவன் இந்த பிரமவித்தையை இவ்விதம் (மேல் சொல்லப்பட்டபிரகாரம்) அறிகிறானோ, அவன் பாபங்களைப் போக்கடித்து அநந்தமாயும், எல்லாவற்றிற்கும் சிரேஷ்டமாயுமிருக்கிற ஸ்வர்க்கலோகத்தில் (பிரமத்தினிடத்திலேயே) ஸ்தாபித்து நிற்கிறான். (மோக்ஷத்தை யடைகிறான்; பிரமத்தினிடத்தில் ஸாயுஜ்ய பதவியை யடைகிறான்).

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

கேநோபநிஷத் முற்றிற்று.

ஓம்

ஓம் தத்ஸத்.

ஸாமவேதீய

சாந்தோக்யோபநிஷத்.

சாந்தி.

ஓம். இது ஸாமவேதத்தின் உபநிஷதானதால் முன் சொல்லிய கேநோபநிஷத்தின் சாந்தியே இதற்கும் சாந்தி.

முதல் பிரபாடகம் (அத்தியாயம்).

கண்டம் 1.

1. உத்கீதம் என்று பெயருள்ள 'ஓம்' என்ற அக்ஷரத்தை உபாஸிக்கவேண்டும்; 'ஓம்' என்று (எங்கும், மிகவும்) கானம் செய்யப்படுகிறபடியால் (உச்சரிக்கப்படுகிறபடியால்) உத்கீதம் என்று சொல்லப்படுகிறது. அதனுடைய விபரம் (சொல்லப்படும்).

2. (சராசரங்களாயிருக்கிற இந்த) பூதங்களுக்குள் பிருதிவீயானது ரஸமாய் (ஸாரம், உத்தமம், உயர்ந்தது) இருக்கிறது. பிருதிவிக்குள் ஜலம் ரஸம். ஜலத்திற்கு ஓஷதிகள் ரஸம். ஓஷதிகளுக்கு புருஷன் ரஸம். புருஷனுக்கு வாக் ரஸம். வாக்கிற்கு ருக்வேதம் ரஸம். ருக்வேதத்திற்கு ஸாமவேதம் ரஸம். ஸாமத்திற்கு உத்கீதம் (ஓம்காரம்) ரஸம்.

3. (இப்படி) எட்டாவதாயிருக்கிற எந்த உத்கீதமுண்டோ அது ரஸங்களுக்கெல்லாம் ரஸமாயிருக்கப்பட்டது. உத்தமமானது. பிரமத்திற்கு இருப்பிடமாயிருக்கப்பட்டது.

4. ரிக்கு எப்படிப்பட்டது; ஸாமம் எப்படிப்பட்டது; உத்கீதம் எப்படிப்பட்டது என்பதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

5. வாக்குத்தான் ரிக்கு; பிராணன்தான் ஸாமம்; ஓம் என்ற அக்ஷரம்தான் உத்கீதம். ரிக்கிற்கும் ஸாமத்திற்கும் காரணங்களாயிருக்கிற வாக்கும் பிராணனும் இரட்டை (மிதுனம், ஒன்றோடொன்று பிரியாமலிருக்கிறது).

6. இந்த மிதுனம் (இரட்டை) ஓம் என்ற அக்ஷரத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறது. (உலகத்தில்) மிதுனங்கள் ஒன்றுடன் ஒன்று சேரும்பொழுது பரஸ்பரம் இச்சையை எப்படி யடைகின்றனவோ அப்படி (மேற்படி வாக்கு பிராணன் இரண்டும் சேர ஓம்காரம் ஸர்வ காமங்களையும் கொடுக்கும்).

7. உத்கீத அக்ஷரத்தை எந்த வித்வான் இந்தப் பிரகாரம் உபாஸிக்கிறாரோ அவன் எல்லா இச்சைகளையு மடைகிறான்.

8. உலகத்தில் ஏதற்கும் ஓம் என்று அனுமதிகொடுக்கப் படுவதால் அதற்கு அநுஞா அக்ஷரமென்று பெயர்; ஸம்ருத்தி (நிறைவு) என்றும் பெயர்; எந்த வித்வான் இந்த அக்ஷரத்தை இவ்விதமாக உபாஸிக்கிறாரோ அவனுக்கு காமங்களை ஸம்ருத்தி யாக கொடுப்பதால் (இந்த பெயர் வழங்குகிறது).

9. அதனால் இந்த மூன்று வித்தைகள் இருக்கின்றன. (இந்த ஓம் அக்ஷரத்தின் பூஜார்த்தம்). (ஸோமயாகத்தில்) ஓம் என்று சொல்லி (தேவர்கள்) கேட்கும்படி செய்கிறது; ஓம் என்று ஸ்தோத்திரம் செய்யப்படுகிறது; ஓம் என்று காணம் செய்யப் படுகிறது. அதன் மகிமையாலும், ரஸத்தாலும் (இவ்விதம் யேற் பட்டிருக்கிறது).

10. தெரிந்தவன் தெரியாதவன் இருவர்களும் கர்மத்தைச் செய்கிறார்கள். வித்தை (ஞானம்) நாநாவிதம்; அவித்தை (அஞா நம்) நாநாவிதம்; ஞானத்துடனும், சிரத்தையுடனும், விதிப்படிக் கும் செய்யப்படுகிற கர்மத்திற்கு அதிக வீர்யமுள்ள பலன் உண்டு; இப்படி இந்த (உத்கீத) அக்ஷரத்தின் விவரமாயிருக்கிறது (அர்த்த மாயிருக்கிறது).

கண்டம் 2.

1. தேவர்களும் (பிரகாசமுள்ளவர்கள், இந்திரியங்களின் ஸத்விருத்திகள்), அஸுரர்களும் (தங்கள் பிழைப்பு விஷயத்தில் அதிக ஆஸக்தியுள்ளவர்கள், இந்திரியங்களின் அஸத் விருத்தி கள்) ஒருவரை மற்றொருவர் ஜயிக்கக் கருதி யுத்தம் செய்தார்கள். இருவகையாரும் பிராஜாபதியின் பிள்ளைகள்; (ஆத்மாவினிட மிருந்து உண்டானவர்கள்). தேவர்கள் அஸுரர்களை யடிக்கும் பொருட்டு உத்கீத உபலக்ஷிதமாயிருக்கப்பட்ட யாகாதி கர்மத் தைக் கைகொண்டார்கள்.

2. தேவர்கள் (அஸுரர்களை ஜயிக்கும்பொருட்டு) கிருணேந்திரிய பிராணனை உத்கீத கர்த்தாவாக (உத்கீதத்தால் சொல்லப்படும் ஆத்மாவாக) உபாஸித்தார்கள். அதை அஸுரர்கள் பாபத்தால் அடித்தார்கள். ஆதலால், மேற்படி கிராணேந்திரிய பிராணன் பாபத்தால் அடிபட்டு நல்ல கந்தத்தையும் துர் கந்தத்தையும் முகர்ந்து பார்க்கிறது.

3–6. பிறகு (கிரமமாக) வாக் இந்திரியம், சக்ஷுரிந்திரியம், ச்ரோத்ர இந்திரியம், மன இந்திரியம் இவைகள் மேற்கண்டபடி யடிபட்டு அது அதற்கு குறித்த நல்லதையும் கெட்டதையும் யடைந்தன.

7. பிறகு முக்கிய பிராணனை (ஆத்மாவை) உபாஸித்தார்கள். கல்லைக்குடைய எவ்விதம் முடியாதோ அவ்விதம் அதை நிர்பந்திக்கமுடியாமல், அசுரர்கள் அதனிடம் தாங்களே சிதறிப் போய்விட்டார்கள்.

8. இப்படி முக்கிய பிராணனை யறிந்தவனுக்கு எவன் தீங்கு செய்ய இச்சிக்கிறானோ, எவன் ஹிம்ஸிக்கிறானோ அவன் அப்படி சிதறிப்போவான். மேற்படி யறிந்தவன் கெல்லப்படக்கூடாத கல்லைப்போல் ஒத்தவன் (அடிபடாதவன்).

9. அந்த முக்கிய பிராணனால் நல்ல வாஸனை, கெட்டவாஸனை இரண்டும் அறியப்படுகிறதில்லை; அது பாபமற்றது; அது எதை உண்ணுகிறதோ எதை குடிக்கிறதோ அததால் மற்ற பிராணங்களை ரக்ஷிக்கிறது; இதை மரணகாலத்தில் கிராணாதி இந்திரியங்கள் படையாமல் வெளிக்கிளம்புகின்றன; வாயைத் திறக்கின்றன.

10. அந்த உத்கீதத்தை 'அங்கிரஸ்' என்ற ரிஷி (தன் பிராணனாகவே) உபாஸித்தார். அதனால் உத்கீதம் 'அங்கிரஸ்' என்றும் சொல்லப்பட்டது. (பிராணன்) அங்கங்களுக்குள் ரஸமுள்ளதானதால் (இந்த பெயர் கிடைத்தது).

11. அதனால் அந்த உத்கீதத்தை பிரகஸ்பதியும் அப்படியே உபாஸித்தார். அதனால், அது 'பிரகஸ்பதி' என்றும் சொல்லப் பட்டது; வாக்குக்கெல்லாம் பதியானதால்.

12. அதனால், அந்த உத்கீதத்தை ஆயாஸ்யர் என்ற ரிஷியும் உபாசித்தார்; அதனால், 'ஆயாஸ்யம்' என்றும் சொல்லப்பட்டது, வாயில் நின்றும் உண்டானதால்.

13. அதனால், தல்பருடைய புத்திரராகிய பகர் என்ற ரிஷி அந்த உத்கீதத்தை இப்படிப்பட்டதென்று யறிந்தார்; அவ்விதம் அறிந்து (ஸத்ரயாகத்தில்) நைமிசாரண்ய ரிஷிகளுக்கு உத்காதாவாகவிருந்து அவர்களுக்கு இச்சையுள்ளவைகளையெல்லாம் காணம் செய்தார்.

14. எந்த வித்வான் இப்படியறிந்து உத்கீதத்தை உபாஸிக்கிறானோ அவன் எல்லா காமங்களையும் காணம் செய்கிறவனாக (யடைகிறவனாக) ஆகிவிடுவான்; ஆத்மசம்பந்தமாக (இதுவரையில்) சொல்லப்பட்டது.

கண்டம் 3.

1. இனி அதிதைவதம் (தெய்வ ஸம்பந்தமாக சொல்லப் படும்). எந்த (இதோ காணப்படுகிற) இந்த சூரியன் தபிக்கிறாரோ அவரை உத்கீதமாக உபாஸிக்கவேண்டும்; உதயமாகி பிரஜைகளின் நிமித்தம் உயர்க்கிளம்பிப்போகிறார்; உதயமாகி இருளையும், அதனால் உண்டாகிற பாபத்தையும் போக்கடிக்கிறார்; எவன் இப்படி அறிகிறானோ அவன் (ஜனன மரணாதி) பயத்தையும், (அதற்கு காரணமாயிருக்கிற அஞ்ஞானமாகிய) இருளையும் போக்கடிக்கிறான்.

2. இந்த சூரியனும் அந்த பிராணனும் ஸமானமானவை; இதுவும் உஷ்ணமுள்ளது; அதுவும் உஷ்ணமுள்ளது; அதர்க்கும் ஸ்வரம் (போகிறது, வெளியே போகிறது) என்று பெயர்; இதர்க்கும் (சூரியனுக்கும்) ஸ்வரம் (போகிறது), ப்ரத்யாஸ்வரம் (திரும்பி

வருகிறது) என்று பெயர் (ஆதலால், குணத்தாலும் பெயராலும் ஸமமாயிருக்கின்றன). ஆதலால் அதையும் இதையும் உத்கீதமாக உபாஸிக்கவேண்டும்.

3. வ்யாநவாயு பிராணனை உத்கீதமென்று உபாஸிக்கவேண்டும்; எது பிழைத்திருக்கும்படி செய்கிறதோ (ச்வாசம் மேலே போய்க்கொண்டிருக்கிறதோ) அது பிராணவாயு; எது கீழ்நோக்குகிறதோ அது அபாநவாயு; இந்த இரண்டிற்கும் மத்தியில் எது இருக்கிறதோ அது வ்யாநவாயு. எது வ்யாநவாயுவோ அதுவே வாக்; அந்த வாயு மேல் நோக்காமலும் கீழ் நோக்காமலும் வாக்கை உச்சரிக்கிறது.

4. வாக்கே ரிக்கு; ஆதலால் மேல் போகாமலும் கீழ் போகாமலும் ரிக்கை உச்சரிக்கிறது. ரிக்கே ஸாமம்; அப்படியே ஸாமத்தை காணம் செய்கிறது. ஸாமமே உத்கீதம்; அப்படியே உயர்ந்து காணம் செய்கிறது.

5. அக்னியைக் கடைகிறது, குறிப்பிட்ட எல்லைக்கு ஓடுகிறது, கெட்டியான தனுஸை வளைக்கிறது முதலான வீர்யமுள்ள காரியங்கள் எவையுண்டோ அவைகளையெல்லாம் (வ்யாநவாயு) மேல்போகாமலும் கீழ்போகாமலும் (ச்வாஸ நிரோதத்தால்) செய்கிறது. ஆதலால் வ்யாநத்தை உத்கீதமாக உபாஸிக்கவேண்டும்.

6. மேலும், உத்கீத சப்தத்தின் ஒவ்வொரு அக்ஷரத்தையும் உத்கீதமாக உபாஸிக்கவேண்டும். 'உத்' என்றால் பிராணன்; பிராணனால் அன்றோ உயரக்கிளம்புகிறது. 'கீ' என்றால் வாக்கு; வாக்கு 'கீ:' என்று சொல்லப்படுகிறது. 'தம்' என்றது அன்னம்; அன்னத்தில் அன்றோ இந்த ஜகத்தெல்லாம் நிலைத்திருக்கிறது.

7. 'உத்' ஆகாசம் (உயரவிருப்பதால்); 'கீ' அந்தரிக்ஷம் (உலகங்களை யடைக்கி வைத்துக்கொண்டிருப்பதால்); 'தம்' பிருதிவி (பிராணிகளுடைய ஸ்தானமானதால்).

'உத்' சூரியன் (உயரவிருப்பதால்); 'கீ' வாயு (அக்னியாதிகளை கக்குகிறபடியால்); 'தம்' அக்னி (கர்மத்தை வைத்துக்கொண்டிருப்பதால்).

'உத்' ஸாமம் (ஸ்வர்கத்தை ஸ்துதிப்பதால்); 'கீ' யஜுர்வேதம் (தேவர்களுக்கு ஹவிஸைக் கொடுப்பதால்); 'தம்' ரிக்குவேதம் (இதில் ஸாமம் அடங்கியிருப்பதால்). (இப்படி உபாஸிக்கிறவனுக்கு பலன்) எந்த வித்வான் உத்கீத அக்ஷரங்களை உத்கீதமென்று உபாஸிக்கிறானோ அவனுக்கு வேதத்தால் சொல்லப்பட்ட கர்மத்தாலுண்டாகும் பலன் எதுவுண்டோ அந்த பலனாகிய பாலைக் கறந்து கொடுக்கிறது. அவன் அன்னமுள்ளவனாயும் அதை புஜிக்க வல்லமையுள்ளவனாயு மிருப்பான்.

8. இனி காமத்தினுடைய ஸம்ருத்தி (சொல்லப்படும்). தியானிக்கத் தகுந்ததையெல்லாம் உபாஸிக்கவேண்டும். எந்த ஸாமத்தால் ஸ்தோத்திரம்செய்ய இச்சிப்பானோ அந்த ஸாமத்தை சிந்திக்கிறான் (அதாவது, அதை த்யானம் செய்வதால் அதற்கு சொல்லப்பட்டிருக்கிற பலங்களை யடைகிறான்).

9. எந்த ரிக்கில் எந்த ரிஷியை, எந்த தேவதையை ஸ்தோத்திரம்செய்ய உத்தேசிப்பானோ அந்த ரிக்கை, ரிஷியை, தேவதையை சிந்திக்கிறான்.

10. எந்த சந்தஸால் எந்த ஸ்தோமத்தால் ஸ்தோத்திரம் செய்ய உத்தேசிப்பானோ அந்த சந்தஸை, ஸ்தோமத்தை சிந்திக்கிறான்.

11. எந்த திக்கை ஸ்தோத்திரம்செய்ய இச்சிப்பானோ அந்த திக்கை (திக்தேவதையை) சிந்திக்கிறான்.

12. எவன் பிரமாதத்தை யடையாதவனாயும், தியானித்துக் கொண்டும், தன்னுடைய ஆத்மாவையே உள் அடைந்து எந்த காமத்தை உத்தேசித்து ஸ்தோத்திரம் செய்கிறானோ அந்த காமம் அவனுக்கு ஸம்ருத்தியாய் கிடைக்கும்.

கண்டம் 4.

1. 'ஓம்' என்ற அக்ஷரத்தை உபாஸிக்கவேண்டும்; 'ஓம்' என்று காணம் செய்கிறது. அதன் விவரம் (என்னவென்றால்).

2 தேவர்கள் மிருத்யுவிற்குப் பயந்து வேத வித்தையை (வேதங்களால் சொல்லப்பட்டிருக்கிற கர்மங்களை) அடைந்தார்கள் (அநுஷ்டித்தார்கள்). அவர்கள் சந்தஸ்களால் (வேத மந்திரங்களால்) கர்மங்களைச்செய்து தங்களை மறைத்துக்கொண்டுவிட்டபடியால் (தங்கள் ஆத்மாக்கள் இன்னதென்று அறியாமல் கர்மங்களிலே திருஷ்டி வைத்துக்கொண்டிருந்ததால்) வேதங்களுக்கு 'சந்தஸ்' (மறைவு) என்ற பெயர் உண்டாயிற்று.

3. எப்படி மீன் பிடிக்கிறவன் ஜலத்தில் மீனை (தூண்டிலை போட்டு தான் பிடிக்கவேண்டுமென்று நினைத்து) பார்க்கிறானோ அப்படிப்போல் மிருத்யுவானவர் தேவர்களை மூன்று வேத கர்மங்களிலே (கர்மங்கள் நஷ்டமாய்போனால்தான் தனக்குள் அகப்படுவார்கள் என்று நினைத்து) பார்க்கிறார். (மிருத்யுவின் இக்கருத்தை) அறிந்து தேவர்கள் மேற்படி மூன்று வேதங்களுக்கு மேலாக விருக்கிற 'ஓம்' காரத்தை பிரவேசித்தார்கள் (அந்த உபாஸனை செய்தார்கள்).

4. எப்பொழுது ரிக்கையடைகிறானோ (அத்யயநம்செய்து ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளுகிறானோ) அப்பொழுது 'ஓம்' என்று அதிஸ்வரம் செய்யவேண்டும் (பலத்தி சப்திக்கவேண்டும்). அப்படியே ஸாமத்தையும், யஜுஸையும் செய்யவேண்டும். எது அக்ஷரமாயும், அமிருதமாயும், அபயமாயு மிருக்கிறதோ அது தான் ஸ்வரம் (ஓம்). அதையடைந்து தேவர்கள் அமிருதர்களாயும், பயமற்றவர்களாகவு மிருக்கிறார்கள்.

5. எந்த வித்வான் இப்படி அக்ஷரமாயும், அமிருதமாயும் அபயமாயுமிருக்கிற ஸ்வரத்தை (ஓம்காரத்தை) உபாஸிக்கிறானோ அவன் தேவர்கள் ஒப்பந்தம் அமிருதனாய் விடுகிறான்.

கண்டம் 5.

1. உத்கீதம் எதுவோ அதே பிரணவம்; எது பிரணவமோ அதே உத்கீதம்; இந்த (காணப்படுகிற) சூர்யனும் உத்கீதம்; இவரே பிரணவம்; இவர் 'ஓம்' என்று உச்சரித்துக்கொண்டுபோகிறார்.

2 'இந்த சூர்யனை (அவருடைய ரச்மிகளுக்கும் இவருக்கும் பேதமில்லாமல்) நான் உபாஸித்தேன்; அதனால் நீ ஒரு பிள்ளை எனக்கு உண்டாயிற்று. ரச்மிகளை நீ பேதமாய் உபாஸி; உனக்கு அனேக புத்திரர்கள் உண்டாவார்கள்' என்று கௌஷீதகி என்ற ரிஷி தன் புத்திரனைப்பார்த்துச் சொன்னார். இப்படி அதிதைவதம்.

3. இனி அத்யாத்மம் (சொல்லப்படும்). எந்த முக்ய பிராணன் உண்டோ அதை உத்கீதமாக உபாஸிக்கவேண்டும். இந்த பிராணன் 'ஓம்' என்றுஉச்சரித்துக்கொண்டு மேலே கிளம்புகிறது.

4. 'இதை (இந்த முக்ய பிராணனை) (மைற்ற பிராணங்களுக்கும் இதர்க்கும் பேதமன்றி) உபாஸித்தேன்; நீ ஒரு புத்திரன் எனக்கு உண்டாயிற்று; (வாகாதி பிராணங்களை) பேதமாய் நீ உபாஸி; உனக்கு வெகு பிள்ளைகள் உண்டாவார்கள்'; என்று கௌஷீதகி என்ற ரிஷி தன் புத்திரனைப்பார்த்து சொன்னார்.

5. பிறகு, எது உத்கிதமோ அது பிரணவம்; எது பிரணவமோ அது உத்கீதம் என்ற ஏகத்வதர்சனமானது (யாகத்தில்) ஹோதா கர்மங்களில் பிசகாக உத்கானம் செய்யப்படும் வாக்கை திருத்திப்போடுகிறது.

கண்டம் 6.

1. இந்த பிருதிவீ ரிக்கு; அக்னி ஸாமம்; ரிக்கில் ஸாமம் உள்ளேயிருக்கிறது; ஆதலால், ஸாமம் ரிக்கில் இருக்கிறதாக கானம் செய்யப்படுகிறது. பிருதிவீயே 'ஸா' ('ஸாம' என்ற சப்தத்தில் பாதியாகிய 'ஸா') அக்னி 'அம' (மைற்ற பாதியாகிய 'அம'). அது (இரண்டு பாதிகளும் சேர்ந்தது) 'ஸாம'.

2. மேற்படிபோல் அந்தரிக்ஷம், வாயு விஷயத்தில் இரண்டும் சேர்ந்தது 'ஸாம'.

3. மேற்படிபோல் ஸ்வர்க்கம், சூரியன் இரண்டும் சேர்ந்தது 'ஸாம'.

4. மேற்படிபோல் நக்ஷத்திரம், சந்திரன் இரண்டும் சேர்ந்தது 'ஸாம'.

5. மேற்படிபோல் ஆதித்யனுடைய சுக்லகாந்தி, கிருஷ்ண காந்தி இரண்டும் சேர்ந்தது ஸாம.

6. இந்த ஆதித்யனுக்குள் ஹிரண்மயமான (ஜ்யோதிர் மயமான) புருஷன் காணப்படுகிறான்; ஜ்யோதிர் மயமான மீசியுள்ளவர்; ஜ்யோதிர் மயமான மயிர் உள்ளவர்; கால் கட்டைவிரல் நகத்தின் நுனிமுதற்கொண்டு ஜ்யோதியுள்ளது.

7. அவருடைய கண்கள் இரண்டும் குரங்கின் ஆஸனம் போல் சிவந்த தாமரை புஷ்பம்போலொத்தது. அவருக்கு 'உத்' என்று பெயர், ஸர்வ பாபங்களில் நின்றும் உயரக்கிளம்பிப் போகிறபடியால். எவன் இப்படி அறிகிறானோ அவனும் ஸர்வ பாபங்களிலே நின்றும் உயரக்கிளம்பிப் போகிறான்.

8. அவருக்கு ரிக்கும் ஸாமமும் தேஷ்ணங்கள் (பர்வங்கள், கணுக்கள், அவயவங்கள்). அதனால் அவரே உத்கீதம். அதனால் உத்காதா இவரையே கானம் செய்கிறான். இந்த ஆதித்ய மண்டலத்திற்கு மேல்பட்டு எந்த லோகங்களிருக்கின்றனவோ அந்த லோகங்களுடையவும், தேவர்களுடைய இஷ்டங்களுடையவும் ஈசராயிருக்கிறார்; இப்படி அதிதைவதம் (சொல்லப்பட்டது).

கண்டம் 7.

1. இனி அத்யாத்மம் (சொல்லப்படும்). (6-வது கண்டம் முதல் ரிக்குப்போல்) வாக்கு, பிராணன் விஷயத்தில் இரண்டும் சேர்ந்தது 'ஸாம'.

2. மேற்படிபோல், சக்ஷுஸ், ஆத்மா இரண்டும் சேர்ந்தது 'ஸாம'.

3. மேற்படிபோல், ச்ரோத்திரம், மனஸ் இரண்டும் சேர்ந்தது 'ஸாம'.

4. மேற்படிபோல் அக்ஷியின் (கண்ணின்) சுக்கிலகாந்தி கிருஷ்ணகாந்தி 'ஸாம'.

5. அக்ஷிக்குள் எந்த புருஷன் காணப்படுகிறானோ அவனே ரிக்கு, ஸாம, உக்தம், யஜுஸ், பிரமம்; ஆதித்யனுக்கு எந்த ரூபம், பர்வங்கள், நாமம் உளதோ அவைகளே இவனுக்கும் (அக்ஷி புருஷனுக்கும் உளது).

6. அப்படிப்பட்ட இவர் (அக்ஷிபுருஷன்) தனக்கு மேலிருக்கிற லோகங்களுக்கும், மனுஷ்ய இச்சைகளுக்கும் ஈசன். காணம் செய்கிறவர்கள் இவரையே காணம் செய்கிறார்கள். ஆதலால் அவர்கள் தனமுள்ளவர்கள்.

7. இப்படி எந்த வித்வான் ஸாமத்தை காணம் செய்கிறானோ அவன் இவ்விரண்டுபெயர்களையும் (ஆதித்ய புருஷனையும், அக்ஷி புருஷனையும்) காணம் செய்கிறான். அவன் இவரால் (ஆதித்யனால்) அவருக்கு மேலான லோகங்களையும், தேவகாமங்களையும் அடைகிறான்.

8. இவரால் (அக்ஷி புருஷனால்) தனக்கு மேலான லோகங்களையும், மனுஷ்ய காமங்களையும் அடைகிறான். ஆதலால், உத்காதா யஜமானனைப் பார்த்து சொல்லுகிறதாவது (அடியில் வருமாறு).

9. "உனக்கு என்ன இச்சையிருக்கிறதோ அதைக் கொடுக்கிறேன்". இப்படி எந்த வித்வான் அறிந்து காணம் செய்கிறானோ அவன் எல்லாக் காமங்களையும் அடைகிறான்.

கண்டம் 8.

1. உத்கீத விஷயத்தில் ஸமர்த்தர்கள் மூன்று பெயர்கள் இருந்தார்கள். அவர்களாவன, (i) சாலாவத்யர் என்ற ஸிலகர்; (ii) சைகிதாயனர் என்ற தால்ப்பியர்; (iii) ஜைவலி என்ற பிரவாஹனர். 'நாம் உத்கீத விஷயத்தில் ஸமர்த்தர்களாக விருக்கிறோ

மே, அதைப்பற்றி ஸம்வாதம் செய்வோம்' என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

2. அந்தப்படி சரிதான் என்று எல்லோரும் (ஒரு இடத்தில்) உட்கார்ந்தார்கள். 'பிராமணர்களாகிய உங்கள் வசனத்தை நான் கேட்கிறேன், நீங்கள் சொல்லுங்கள்' என்று பிரவாஹனர் மற்றிருவரையும் பார்த்து சொன்னார்.

3. 'நான் உம்மை கேள்வி கேட்கிறேன்,' என்று ஸிலகர் தால்ப்பியரை நோக்கிச் சொன்னார். (ஸிலகர் கேட்கிறார், தால்ப்பியர் பதில் சொல்லுகிறார்).

4. ஸாமத்திற்கு கெதி (இருப்பிடம், மூலம், காரணம்) எது? ஸ்வரம் (ஓம்).

ஸ்வரத்திற்கு கெதி எது? பிராணன்.

பிராணத்திற்கு கெதி எது? அன்னம்.

அன்னத்திற்கு கெதி எது? ஜலம்.

5. ஜலத்திற்கு கெதி எது? ஸ்வர்க்கலோகம்.

ஸ்வர்க்க லோகத்திற்கு கெதி எது? ஸ்வர்க்கத்தைத் தாண்டி ஒருவரும் ஸாமத்தை நயிப்பிவிக்கிறதில்லை (அதற்குமேல் ஒன்றுமில்லை). ஸாமத்தை ஸ்வர்க்கத்தில் ஸ்தாபிப்போம்; ஸாமம் ஸ்வர்க்கத்தைப்பற்றி ஸ்தோத்திரம் செய்கிறதன்றோ!

6. அதற்கு ஸிலகர் சொல்லியதாவது. 'ஸாமம் பிரதிஷ்டிதமன்று; பிரதிஷ்டிதம் என்று எவன் விபரீதமாய் சொல்லுகிறானோ அவனுக்கு உன் தலை வெடித்துப்போகும் என்று சொல்'.

7. தால்ப்பியர்—ஹந்த! (கஷ்டம்); இதை உம்மிடமிருந்து அறிந்துகொண்டேன்.

ஸிலகர்—அறி. (இப்பொழுது இதற்கு பதில் சொல்).

ஸ்வர்க்கலோகத்திற்கு கெதி எது? இந்த லோகம். இந்த லோகத்திற்கு கெதி எது? இந்த லோகத்திற்குமேல் ஸாமத்தை ஒருவரும் நயிப்பிவிக்கவில்லை. (இந்த லோகத்திற்குமேல் ஒன்

றும் இல்லை). இந்த பிரதிஷ்டையான லோகத்தில் ஸாமத்தை ஸ்தாபிப்போம், ஸாமம் பிரதிஷ்டையை ஸ்தோத்திரம் செய்கிறதல்லவோ.

8. இதற்கு பிரவாஹணர் சொல்லுகிறார்—'அப்படி சொல்லாதே! அப்படி சொல்லுகிறவனுக்கு உன் தலை வெடித்துப்போகும் என்று சொல்'.

(தால்ப்பியர்) ஹந்த! (கஷ்டம்) இதை உம்மிடமிருந்து அறிந்து கொண்டேன்.

(பிரவாஹணர்) அறி.

கண்டம் 9.

1. (ஸிலகர் கேள்வை) இந்த லோகத்திற்கு கெதி எது?. (பிரவாஹணர் உத்திரம்) ஆகாசம்; ஆகாசத்திலேயே எல்லா பூதங்களும் உண்டாகின்றன; லயிக்கின்றன; ஆகாசம் பெரிது; அதே பராயணம் (இருப்பிடம்).

2. இந்த உத்கீதம் பரோவரீயம் (பரமாத்ம ஸம்பன்னம்); அநந்தம்; எவன் இப்படி யறிந்து அதை உபாஸிக்கிறானோ அவனுக்கு பரோவரீயமான ஜீவனம் உண்டாகிறது; பரோவரீயங்களாயிருக்கிற லோகங்களையும் ஜயிக்கிறான்.

3. இதைப்பற்றி சௌநகர் உதர சாண்டில்லியருக்குச் சொல்லி, பிறகு சொன்னதாவது—'உன்னுடைய பிரஜைகள் எக்காலம் வரையில் இந்த உத்கீதத்தை உபாஸிக்கிறார்களோ அந்தக் காலம் வரையில் அவர்களுக்குபரோவரீயமாயிருக்கிற ஜீவனம் இருக்கும்'.

4. அப்படியே இந்த லோகத்தில் எவன் உத்கீதத்தை உபாஸிக்கிறானோ அவனுக்கு பரோவரீயமான ஜீவனமுண்டாகும்.

கண்டம் 10.

1. குருதேசம் இடியினால் நாசமாய்ப் போனபொழுது (அதாவது, துர்பிக்ஷ காலத்தில்), சாக்ராயணர் என்ற உஷஸ்தியா

னவர் (பசியால்) தள்ளாடி நடக்கிறவராக ஆடிகி என்ற தன் பத்னியுடன் ஒரு யானைக்காறர்கள் கிராமத்தில் வஸித்தார்.

2. அவர் (அன்னார்த்தம் போய்க்கொண்டிருக்கும்பொழுது) கொள்ளுத்தின்றுகொண்டிருந்த ஒரு யானைக்காறனை (கண்டு) யாசித்தார்; 'எச்சிலாகப் போய்விட்ட இதோவிருக்கிற கொள்ளுகளைத்தவிற வேறொயில்லை' என்று அவன் பதில் சொன்னான்.

3. அந்தக் கொள்ளுகளையாவது எனக்குக் கொடுவென்று உஷஸ்தி கேட்டார். அவைகளை யவன் கொடுத்தான். குடிக்க ஜலத்தையும் கொடுத்தான். அந்த ஜலம் உச்சிஷ்டம், எனக்கு தேவையில்லை என்றார்.

4. இந்தக் கொள்ளுகளும் எச்சில்தானே! (அவைகளை மட்டும் சாப்பிடலாமாவென்று யானைக்காறன்) கேட்டான். அவைகளைத் திங்காவிடில் என் உயிர் போயிருக்கும் (ஆதலால் அப்படிப்பட்ட விஷயத்தில் எச்சில் தோஷமில்லை), எனக்கு குடிக்க ஜலம் அகப்படும் (இப்பொழுது வேண்டியதில்லை) என்று உஷஸ்தி சொன்னார்.

5. அந்தக் கொள்ளுகளை சாப்பிட்டு மிஞ்சியதை தன் ஸ்திரிக்கு கொடுத்தார். அப்பொழுது அவளுக்கு பசிதீர்ந்ததால் புருஷன் கொடுத்த அன்னத்தை (பத்திரப்படுத்தி) வைத்திருந்தாள்.

6. அவர் காலமே எழுந்து "எனக்கு கொஞ்சம் அன்னம் அகப்பட்டால், அதை சாப்பிட்டு, பலங்கொண்டு கொஞ்சம் பணம் ஸம்பாதிப்பேன், எப்படியெனில் இதோ ஸமீபத்தில் ராஜா யாகம் செய்கிறார், ரித்விக்காக என்னை வரிப்பார், அதனால் பணம் வரும்" என்று தன் ஸ்திரிக்குச் சொன்னார்.

7. '(நேற்றிய தினம் நீங்கள் கொடுத்த) கொள்ளுகள் இருக்கின்றன; அவைகளை தின்றுவிட்டு யாகத்திற்குப் போகுங்கள்' என்று தன் புருஷனுக்கு அந்த ஸ்திரி சொன்னாள்.

8. (அந்தப்படி சாப்பிட்ட பிறகு, யாக விடத்திற்குப்போய்) ஸ்தோத்திரம் செய்யப்போகிற உத்காத்தாக்கள் இருக்கிற விடத்

திற்குப்போய், உட்கார்ந்து, ப்ரஸ்தோத்தாவைப் பார்த்துச் சொன்னதாவது.

9. எந்த தேவதையைக்குறித்து நீ ஸ்தோத்திரம் செய்கிறாயோ அந்த தேவதையை நீ அறிந்துகொள்ளாமல் ஸ்தோத்திரம் செய்வாயாகில் உன் தலை வெடித்துப்போகும் என்று சொன்னார்.

10. இவ்விதமே உத்காதாவுக்குச் சொன்னார்.

11. இப்படியே ப்ரதிஹர்த்தாவுக்குச் சொன்னார். மூன்று பெயர்களும் கூடி பேசாமல் இருந்துவிட்டார்கள்.

கண்டம் 11.

1. பிறகு, உஷஸ்தியைப்பார்த்து ராஜா 'உங்களைத் தெரிந்துகொள்ள இச்சைப்படுகிறேன்' என்று சொல்ல, 'நான் சாக்ராயணரென்கிற உஷஸ்தி' என்று இவர் சொன்னார்.

2. 'இந்த ரித்விக்களுடன் உங்களையும் தேடினேன்; நீங்கள் அகப்படாததால் அன்னியர்களை வரித்தேன்' என்று ராஜா சொன்னான்.

3. '(இப்பொழுது) தாங்களே இந்த எல்லா ரித்விக்களுடன் கூடவிருந்து யாகத்தை நடத்தவேண்டும்' என்றும் சொன்னான். 'அப்படியே ஆகட்டும், இவர்களும் என் அனுமதிப்படி ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கட்டும்; அவர்களுக்கு எவ்வளவு தனம் கொடுக்கப்போகிறாயோ அவ்வளவு தனம் எனக்கும் கொடுக்க வேண்டும்' என்று ராஜாவுக்கு உஷஸ்தி சொன்னார்.

4. பிறகு இவருக்கு சமீபத்தில்வந்து ப்ரஸ்தோதா சொன்னதாவது—'எந்த தேவதையைக்குறித்து ஸ்தோத்திரம் செய்கிறாயோ, அந்த தேவதையை அறியாமலிருந்தால் உன் தலை வெடித்துப்போகும் என்று முன் எனக்குச் சொன்னீர்களே! அந்த தேவதை யார்' என்று கேட்டான்.

5. 'பிராணன்' என்று சொன்னார். (ஏனெனில்) இந்த எல்லா பூதங்களும் (அந்த காலத்தில்) பிராணனிலேயே லயிக்கின்

றன; (உத்பத்திகாலத்தில்) அதனிடமிருந்தே உண்டாகின்றன; இந்த பிராண தேவதையை ஸ்தோத்திரம் சேருகிறது; அதை யறியாமல் ஸ்தோத்திரம் செய்தால் உன் தலை வெடித்துப்போகும் என்று முன் நான் உனக்குச் சொன்னதற்கு (இதுதான் பதில்);

6. பிறகு (ப்ரஸ்தோதா கேட்டதுபோல்) உத்காதா (தனக் குத்தக்கவாறு) எந்த தேவதையென்று உஷஸ்தியைக் கேட்டான்.

7. 'ஆதித்யன்' என்று சொன்னார். (ஏனெனில்) இந்த எல்லா பூதங்களும் உயரவிருக்கிற ஆதித்யனையே கானம் செய்கி றார்கள். (மற்றும் 5-வது ரிக்கில் சொல்லியதுபோல்).

8. பிறகு, ப்ரதிஹர்த்தா (தனக்குத் தகுந்தபடி) எந்த தே வதையென்று உஷஸ்தியை கேட்டான்.

9. 'அன்னம்' என்று சொன்னார்; (ஏனெனில்) இந்த எல்லா பிராணிகளும் அன்னத்தையே பிடித்துக்கொண்டு ஜீவிக்கின்றன. (மற்றது முன் சொல்லியிருக்கிறபடி).

கண்டம் 12.

1. இனி சௌவ (சுவா சம்பந்தமான) உத்கீதம் (சொல்லப் படும்). பகர், தால்ப்யர், க்லாவர், மைத்ரேயர் என்று இன்னுங்கு பெயர்களுள்ள ஒரு ரிஷி (ஸாமத்தை) அத்யயனம் (செய்யும்பொ ருட்டு) வெளியில் போனார்.

2. அவருக்கு அனுக்கிரகம் செய்யும்பொருட்டு வேத புரு ஷன் (அல்லது முக்கிய பிராணன்) மற்ற தேவதைகளை (அல்லது இந்திரியங்களை) தன் குட்டிகளாக அழைத்துக்கொண்டு ஒரு வெள்ளை நாய் வேஷம் தரித்துக்கொண்டு, இந்த ரிஷியின் ஸமீ பத்தில் வந்தது. அந்தக் குட்டிகள் எங்களுக்குப் பசிக்கிறது, அன்னம் கொடுவென்று மேற்படி வெள்ளை நாயைக் கேட்டன.

3. அவைகளுக்கு மேற்படி நாய் 'காலமே ஆகட்டும்' என் று பதில் சொல்லிற்று. இதைக் கேட்டு மேற்படி ரிஷி அந்த சமயத்தை எதிர்ப்பார்த்திருந்தார்.

4. (அப்படியே காலமே நாய்கள் ரிஷி முன்பாக வந்தன). அப்பொழுது அந்தக் குட்டிகள் பகிஷ்பவ மானமென்கிற ஸாமத்தால் (அன்னத்திற்காக) ஸ்தோத்திரம் செய்யப்போகிறவர்களாக ஒன்றுக்கொன்று மேலேவிழுந்து நக்கி விளையாடிக்கொண்டு, உட்கார்ந்து, 'ஹிம்' என்று சப்தம் செய்தன.

5. (பிறகு இந்த அடியில்கண்ட ஸாமத்தை சொல்லியன) 'ஓம்! திங்கப்போகிறோம்! குடிக்கப்போகிறோம்! தேவனும், வருணனும், பிரஜாபதியுமா யிருக்கப்பட்ட சூர்யன் அன்னத்தைக் கொண்டுவந்து கொடுக்கட்டும். ஹே! அன்னத்திற்குப் பதியே? அன்னத்தை எங்களுக்குக் கொண்டுவா, கொண்டுவா,' என்று, (தாத்பரியம். இந்த ஸாமத்தை காணம் செய்தால் அன்னம் கிடைக்குமென்ற தாத்பரியத்தை ரிஷிக்குத்தெரியும்படி தன்குட்டிகளைக்கொண்டு மேற்படி வெள்ளை நாயாகிற வேத புருஷன் உபதேசித்தார்).

கண்டம் 13.

1. (ஸாமத்தில் பிரயோகிக்கபடுகிற ஸ்தோபாக்ஷரங்களுக்கு, அடையாளாக்ஷரங்களுக்கு அர்த்தம் சொல்லப்படுகிறது).

ஹா உ—லோகம்; ஹா இ—வாயு; அத—சந்திரன்; இஹ—ஆத்மா; ஈ—அக்னி.

2. உ—சூரியன்; ஏ—கூப்பிடுகிறது, ஸம்போதனம்; ஔஹோ இ—விச்வேதேவர்கள்; ஹிம்—பிரஜாபதி; ஸ்வரம்—பிராணன்; யா—அன்னம்; வாக்—விராட் அல்லது அன்னம்.

3. ஹூம்—சொல்லப்படாத பதிமூன்றுகளுடைய அடையாளம்.

4. எந்த வித்வான் இந்த அர்த்தங்களோடுகூட உபநிஷத்தை யறிகிறானோ அவனுக்கு நல்ல வாக்கு உண்டாகும். அதனால் அவன் அன்ன வானாகவும், அன்னத்தைப் புஜிக்கிறவனாயு மிருப்பான்.

இரண்டாம் ப்ரபாடகம்.

கண்டம் 1.

1. எல்லா ஸாமத்தினுடைய உபாஸனமும் ஸாது (நல்லது); எது ஸாதுவோ அதுவே ஸாமம்; எது அஸாதுவோ அதுவே அஸாமம்.

2. இவ்விஷயத்தில் லோகத்தில் அடியில்கண்டபடி சொல்லப்படுகிறது—இவனை (இந்த ராஜாவை அல்லது ஒரு பிரபுவை) ஸாமத்தால் (நல்ல வார்த்தையால், ஸ்தோத்திரத்தால்) அடைந்தான். அஸாமத்தால் (அஸாதுவால்) இவனை (இந்த துஷ்டனை) யடைந்தான், (ஸாது சப்தத்திற்கும் ஸாம சப்தத்திற்கும் ஒரே அர்த்தம் என்று தாத்பர்யம்).

3. இன்னமும் லோகத்தில் சொல்லப்படுகிறதாவது; 'ஸாது (நல்லது) எங்களுக்கு பத (இருக்கட்டும், ஐயோ போகட்டும், நல்லதுதான் எங்களுக்கு வேண்டுமென்று இரக்கத்தால் சொல்லப்படுகிறது). எது ஸாதுவோ அதுவே (ஸாது) இருக்கட்டும். அஸாது (கெட்டது) எங்களுக்கு பத (கஷ்டம், வேண்டாம்). எது அஸாதுவோ அது (அஸாதுத்தான்) எங்களுக்கு வேண்டாம்'.

4. எந்த வித்வான் 'ஸாது' 'ஸாம' இவ்விரண்டு சப்தங்களையும் ஒன்றாகப் பாவித்து உபாஸிக்கிறானோ அவனுக்கு உடனே நல்ல தர்மங்கள் வந்தடைந்து பணிவிடை செய்யும்.

கண்டம் 2.

1. லோகங்களை ஐந்துவித ஸாமமாக உபாஸிக்கவேண்டியது; பிருதிவீ—ஹிம்காரம்; அக்னி—ப்ரஸ்தாவம்; அந்தரிக்ஷம்—உத்கீதம்; சூரியன்—ப்ரதிஹாரம்; ஆகாசம்—நிதநம். இந்தப்படி மேல் நோக்கிப்போகிற லோகங்களை உபாஸிக்க வேண்டியது.

2. அந்தப்படியே தலைகீழாக; அதாவது, ஆகாசம்—ஹிங்காரம்; சூர்யன்—ப்ரஸ்தாவம்; அந்தரிக்ஷம்—உத்கீதம்; அக்னி—ப்ரதிஹாரம்; பிருதிவீ—நிதநம். இந்தப்படியும் உபாஸிக்கவேண்டியது.

இந்தப்படி உபாஸிக்கிறவன் ஸமர்த்தனாய் மேற்படி லோகங்களை ஜயிப்பான்.

கண்டம் 3.

1. விருஷ்டியையும் ஐந்துவித ஸாமமாக உபஸிக்கவேண்டும். கீழ்காற்று (அதாவது மழையைக் கொண்டுவருகிற காற்று)—ஹிங்காரம்; மேகம்—ப்ரஸ்தாவம்; வர்ஷம் (தூரல்)—உத்கீதம்; மின்னல் இடி—ப்ரதி ஹாரம்.

2. மழை நிற்கிறது—நிதநம்; இப்படி உபாஸிக்கிறவனுக்கு அவனுடைய இச்சைக்குத் தகுந்தபலன்களை வருஷிக்கும்.

கண்டம் 4.

1. ஜலத்தை ஐந்துவித ஸாமமாக உபாஸிக்கவேண்டும். மேகத்திற்குள்ளிருக்கிற ஜலம்—ஹிங்காரம்; மழை விழுகிற ஜலம்—ப்ரஸ்தாவம்; நதிகளின் ஜலம்—உத்கீதம்; நதங்களின் ஜலம்—ப்ரதி ஹாரம்; ஸமுத்திர ஜலம்—நிதநம்.

2. இந்தப்படி உபாஸிக்கிறவனுக்கு ஜலத்திற்கு குறைவில்லை.

கண்டம் 5.

1. ருதுக்களை ஐந்துவித ஸாமமாக உபாஸிக்கவேண்டும். வஸந்த—ஹிங்காரம்; க்ரீஷ்ம—ப்ரதிஹாரம்; வர்ஷா—உத்கீதம்; சரத்—ப்ரதிஹாரம்; ஹேமந்த—நிதநம்.

2. இப்படி உபாஸிக்கிறவன் ருதுமானாக ஆவான் (ருதுக்கள் அவனுக்கு உதவிசெய்யும்).

கண்டம் 6.

1. யாக பசுக்களை ஐந்துவித ஸாமமாக உபாஸிக்கவேண்டியது. வெள்ளாடு—ஹிங்காரம்; செம்மறியாடு—ப்ரஸ்தாவம்; பசுமாடு—உத்கீதம்; குதிரை—ப்ரதிஹாரம்; நரன்—நிதனம்.

2. இந்தப்படி உபாஸிக்கிறவனுக்கு பசுக்கள் கிடைக்கும்.

கண்டம் 7.

1. பிராணங்களை (ஞானேந்திரியங்களை) ஐந்துவித ஸாமமாக, மேல் மேல் சிலாக்கியமாயிருக்கிற அவைகளை உபாஸிக்க வேண்டும். பிராணம் (நாஸிகா)—ஹிங்காரம்; வாக்—ப்ரஸ்தாவம்; சக்ஷுஸ்—உத்கீதம்; ச்ரோத்ரம்—ப்ரதிஹாரம்; மனஸ்—நிதனம்.

2. இந்தப்படி யார் உபாஸிக்கிறாரோ அவனுடைய ஜீவனம் மேன்மேல் சிலாக்கியமாகும்; மேலான லோகங்களை ஜயிக்கிறான்.

கண்டம் 8.

1-2. இனி ஸப்தவிதம் (ஏழுவித ஸாமம்) சொல்லப்படுகிறது. வாக்கை ஏழுவித ஸாமமாக உபாஸிக்கவேண்டும்; எதாகிலும் ஒரு வார்த்தைக்கு விசேஷமாயிருக்கிற ஹும் என்றது—ஹிங்காரம்; ப்ர—ப்ரஸ்தாவம்; ஆ—ஆதி (ஓம்); உத்—உத்கீதம்; ப்ரதி—ப்ரதிஹாரம்; உப—உபத்ரவம் (என்ற ஒரு ஸாமம்); நி—நிதனம்.

3. இப்படி உபாஸிக்கிறவனுக்கு வாக் உண்டாகும்; அதனால் அன்னவானாயும், அன்னாதனாயுமாவான்.

கண்டம் 9.

1. ஸூர்யனை ஏழுவித ஸாமமாக உபாஸிக்கவேண்டும்; எப்பொழுதும் ஸமரூபமாயிருப்பதாலும், ஒவ்வொரு பிராணிக்கும் ஸமமாயிருப்பதாலும் அந்த ஸூர்யன் 'ஸாம' என்று சொல்லப்பட்டது.

2. அவனிடத்தில் இனி சொல்லப்படப்போகிற எல்லா பூதங்களும் அநுஸரித்து ஜீவிக்கிறதென்றறிய வேண்டியது.

3. ஸூர்ய உதயத்திற்கு பூர்வமுள்ள ரூபம் (அதாவது, அருண உதயவேளை)—ஹிங்காரம்; அதை மிருகங்கள் அநுஸரிக்கின்றன; அவ்வேளையில் 'ஹிம்' என்று சப்திக்கின்றன; (அதாவது அந்தவேளையில் எழுந்திருந்து அதனின் வேலையை பார்க்கின்றன).

4. முதலில் உதயமாகிறபொழுதுள்ள ரூபம்—ப்ரஸ்தாவம்; அதை மனுஷ்யர்கள் அனுஸரிக்கிறார்கள் (அதாவது, அந்த வேளையில் அவரவர் கர்மங்களைச்செய்ய ஆரம்பிக்கிறார்கள்).

5. கிரணங்கள் பரவுகிறவேளை (அதாவது, உதயத்திற்கு பின்பட்டகாலவேளை) ரூபம்—ஆதி; அதை பக்ஷிகள் அனுஸரிக்கின்றன; ஆகாசத்தில் பிடிப்பை விட்டுவிட்டு கீழேவிழுகின்றன.

6. மத்தியாந்தரூபம்—உத்கீதம்; அதை தேவர்கள் அனுஸரிக்கிறார்கள்; பிரஜாபதியின் புத்திரர்களுக்குள் உத்தமமானவர்கள்; அந்தக் காலத்தில் அவர்கள் ஸஞ்சரிக்கிறார்கள்.

7. மத்தியாந்தத்திற் கடுத்தவேளை ரூபம்—ப்ரதிஹாரம்; அதை கர்ப்பங்கள் (கிரணங்கள்) அனுஸரிக்கின்றன. அவை கீழேயிருந்து மேலேபோகின்றன.

8. ஸாயங்காலவேளை ரூபம்—உபத்ரவம்; அதை அரண்ய மிருகங்கள் அனுஸரிக்கின்றன; மனிதர்களைப்பார்த்து பயந்து காடு குகைகளில் போய் ஒளிந்து கொள்ளுகின்றன.

9. அஸ்தமன ரூபம்—நிதநம்; அதை பிதிருக்கள் அனுஸரிக்கிறார்கள்; அவர்கள் ஸஞ்சரிக்கிறார்கள். இப்படி உபாஸிக்கிறவனுக்கு பலன் அகுது கிடைக்கும்.

கண்டம் 10.

1. தன்னுடைய அவயவங்களின் எண்ணிக்கையால் அளக்கப்பட்டதும், மிருத்யுவை ஜயிக்கிறதாயுமிருக்கிற ஸாமத்தை உபாஸிக்கவேண்டும். அதாவது, ஸப்தவித பக்தி நாமாக்ஷரங்களை மும்மூன்றாக வகுத்து அதனை ஒவ்வொரு பிரிவாக உபாஸிக்கிறது. எப்படியென்றால், ‘ஹிம்காரம்’ மூன்று அக்ஷரங்கள், ஒரு பங்கு; ‘ப்ரஸ்தாவம்’ மூன்று அக்ஷரங்கள், இது ஒரு பங்கு.

2. ‘ஆதி,’ இரண்டு அக்ஷரங்கள்; ‘ப்ரதிகாரம்’ நான்கு அக்ஷரங்கள்; ஆக ஆறு அக்ஷரங்களில் மும்மூன்றாக இரண்டு பங்குகள்.

3. 'உத்கீதம்' மூன்று அக்ஷரங்கள்; 'உபத்ரவம்' நான்கு அக்ஷரங்கள்; ஆக ஏழு அக்ஷரங்களில் மும்மூன்றாக இரண்டு பங்குகள்போக ஒரு அக்ஷரம் மிச்சமாயிருக்கிறது. அந்த மீதி அக்ஷரத்தை மூன்றாக பாவித்து அது ஒரு பங்கு.

4. 'நிதநம்' மூன்று அக்ஷரங்கள், ஒரு பங்கு; எல்லாம் மொத்தம் 22 அக்ஷரங்கள்.

5. ஆதித்யன் 21 அக்ஷரமுள்ளது; அவ்விதம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (எப்படியென்றால், மாதங்கள் 12; ருதுக்கள் 5; லோகங்கள் 3; ஆதித்யன் 1; ஆக 21). இந்த ஸாமம் 21க்கு மேல் 22 ஆக ஆகிவிட்டதால், ஸங்க்யையால் ஆதித்யனை ஜயித்துவிட்டது. அதுதான் நாகம், சோகமற்றது.

6. இப்படி யறிந்து உபாஸிக்கிறவனுக்கு பலன், ஆதித்ய ஜயத்திற்குமேலாக ஜயத்தை யடைகிறான்.

கண்டம் 11.

1. மனஸ்—ஹிங்காரம்; வாக்—ப்ரஸ்தாவம்; சக்ஷுஸ்—உத்கீதம்; ச்ரோத்ரம்—ப்ரதிஹாரம்; பிராணன்—நிதநம்; இது காயத்ரியம் ஸாமம், பிராணங்களில் கோர்க்கப்பட்டிருக்கிறது.

2. இப்படி எவன் அறிகிறானோ அவன் பிராணனுள்ளவன்; தீர்க்காயுஸ் உள்ளவன்; பிரகாசத்தையுடையவன்; பசுக்களுடனும், பிரஜைகளுடனுங்கூட மகா பெருமைகளிருப்பான்; மகா கீர்த்தியுள்ளவன்; மகா மனஸுள்ளவன். இது விரதம் (அனுஷ்டிக்க வேண்டியது, மகா மனஸுள்ளவனாக இருக்கவேண்டியது).

கண்டம் 12.

1. (அக்னி) கடைப்படுவது—ஹிங்காரம்; புகையுண்டாகும்போது—ப்ரஸ்தாவம்; ஜ்வலிக்கும்போது—உத்கீதம்; கனலாயிருக்கும்போது—ப்ரதிஹாரம்; அணையும்போதும், அணைந்தபிறகும்—நிதநம். இது ரதந்தரஸாமம்; அக்னியில் கோர்க்கப்பட்டிருக்கிறது.

2 (பலன் முன்சொல்லப்பட்டிருப்பதுபோல்); அக்னியை பின்புரத்தில் வைத்துக்கொண்டு சாப்பிடவும் கூடாது (இது விருதம்); சளி முதலானவைத விஸர்ஜனம் செய்யவும் கூடாது; இது விருதம்.

கண்டம் 13.

1. (ஸ்திரியிடம்) முதலில் ஸங்கேதம் செய்தல்—ஹிங்காரம்; ஞாபகப்படுத்துகிறது—ப்ரஸ்தாவம்; இருவரும் சேர்ந்து ஓரே சயனத்திற்குப் போகிறது—உத்கீதம்; ஸ்திரிக்கு நேர்முகமாகவிருந்து (ஸம்பாஷிப்பது)—ப்ரதிஹாரம்; சேர்க்கையால் காலம் கழித்தலும், முடிவையடைதலும்—நிதநம்; இது வாமதேவ்யம் ஸாமம்; மிதுனத்தில் கோறக்கப்பட்டிருக்கிறது.

2. (பலன்) ஸ்திரியுள்ளவனாயிருப்பான்; (விருதம்) தானைக படுக்கைக்கு வருகிற ஒரு ஸ்திரியையும் தள்ளக்கூடாது.

கண்டம் 14.

1. (சூர்யன்) உதிக்கும்போது—ஹிங்காரம்; உதித்தபிறகு—ப்ரஸ்தாவம்; மத்யாஹ்நத்தில்—உத்கீதம்; அபராஹ்நத்தில்—ப்ரதிஹாரம்; அஸ்தமனத்தில்—நிதநம்; இது ப்ரகத்ஸாமம்; ஆதித்யனிடத்தில் கோறக்கப்பட்டிருக்கிறது.

2. (பலன் முன்போல்); தபிக்கிற சூர்யனை நிந்திக்கக் கூடாது; இது விருதம்.

கண்டம் 15.

1. (முதலில்) ஆகசத்தில் மெதக்கிற மேகங்கள்—ஹிங்காரம்; ஒன்றாகச் சேர்ந்த மேகம்—ப்ரஸ்தாவம்; மழை—உத்கீதம்; மின்னல் இடி—ப்ரதிஹாரம்; மழை நிக்குதல்—நிதநம்; இது வைரூப்ய ஸாமம்; மேகங்களில் கோறக்கப்பட்டிருக்கிறது.

2. (பலன்) பலவிதமான நல்ல பசுக்களை யடைவான்; மழையை நிந்திக்கக்கூடாது; இது விருதம்.

கண்டம் 16.

1. வஸந்த ருது—ஹிங்காரம்; க்ரீஷ்மம்—ப்ரஸ்தாவம்; வர்ஷா—உத்கீதம்; சரத்—ப்ரதிஹாரம்; ஹேமந்த—நிதனம்; இது வைராஜ ஸாமம்; ருதுக்களில் கோர்க்கப்பட்டிருக்கிறது.

2. (பலன்) நன்றாக விளங்குவான் (மற்றது முன்போல்); ருதுக்களை நிந்திக்கக்கூடாது; இது விரதம்.

கண்டம் 17.

1. ப்ருதிவி—ஹிங்காரம்; அந்தரிக்ஷம்—ப்ரஸ்தாவம்; ஸ்வர்க்கம்—உத்கீதம்; திக்குகள்—ப்ரதிஹாரம்; ஸமுத்திரம்—நிதனம்; இது சக்கர்ய ஸாமம்; லோகங்களில் கோர்க்கப்பட்டிருக்கிறது.

2. (பலன்) லோகமுள்ளவன் (மற்றது முன்போல்); லோகங்களை நிந்திக்கக்கூடாது; இது விரதம்.

கண்டம் 18.

1. வெள்ளாடு—ஹிங்காரம்; செம்மியாடு—ப்ரஸ்தாவம்; பசுமாடு—உத்கீதம்; அச்வம்—ப்ரதிஹாரம்; புருஷன்—நிதனம்; இது ரேவத்ய ஸாமம்; பசுக்களில் கோர்வை.

2. (பலன்) பசுக்களுள்ளவனாயிருப்பான் (மற்றது முன்போல்); பசுக்களை நிந்திக்கக்கூடாது; இது விரதம்.

கண்டம் 19.

1. மயிர்—ஹிங்காரம்; தோல்—ப்ரஸ்தாவம்; மாம்ஸம்—உத்கீதம்; எலும்பு—ப்ரதிஹாரம்; மஜ்ஜை (எலும்புக்குள்ளிருக்கிறது)—நிதனம்; இது யஜ்ஞா யஜ்ஞீய ஸாமம்; அங்கங்களில் கோர்வை.

2. (பலன்) அங்கஹீனமாயிருக்கமாட்டான் (மற்றது முன்போல்); மாம்ஸத்தை உண்ணக்கூடாது; இது விரதம்.

கண்டம் 20.

1. அக்னி—ஹிங்காரம்; வாயு—ப்ரஸ்தாவம்; சூர்யன்—உத்கீதம்; நக்ஷத்திரங்கள்—ப்ரதிஹாரம்; சந்திரன்—நிதநம்; இது ராஜனம் ஸாமம்; தேவதைகளில் கோர்வை.

2. (பலன்) தேவதைகளுக்கு ஸமான லோகத்தையும், விருத்தியையும், ஸாயுஜ்யத்தையும் படைவான் (மற்றது முன் போல்); பிராமணனை நிந்திக்கக்கூடாது.

கண்டம் 21.

1. மூன்று வேதங்கள்—ஹிங்காரம்; மூன்று லோகங்கள்—ப்ரஸ்தாவம்; அக்னி, வாயு, ஆதித்யன் மூன்றும்—உத்கீதம்; நக்ஷத்திரங்கள், பக்ஷிகள், கிரணங்கள் மூன்றும்—ப்ரதிஹாரம்; ஸர்பங்கள், கெந்தர்வர்கள், பிதிருக்கள் மூன்றும்—நிதநம்; இது ஸமூதாய ஸாமம்; எல்லாவற்றிலும் கோர்வை.

2. (பலன்) எல்லாமாக விருக்கிறான் (ஸர்வேச்வரனு யிருக்கிறான்).

3. இந்த மும்மூன்று ஐந்து விதமாக சொல்லப்படுகிறது. இதைக்காட்டிலும் உயர்ந்தது வேறில்லை.

4. (பலன்) எல்லாம் தெறிந்தவன்; இவனுக்கு எல்லா திக்குகளும் பலியை கொடுக்கின்றன; 'எல்லாம் நான் ஆகவிருக்கிறேன்' என்று உபாஸிக்கவேண்டும்; இது விருதம்.

கண்டம் 22.

1. (இதில் ஸாமகானத்திற்கு ஸ்வரபேதம் சொல்லப்படுகிறது; பிரமஞானத்திற்கு தேவையில்லை).

2. 'தேவர்களுக்கு அமிருதத்வத்தையும், பிதிர்க்களுக்கு ஸ்வதாவையும், மனிதர்களுக்கு ஆசையையும், பசுக்களுக்கு புல் ஜலம் இவைகளையும், யஜமானனுக்கு ஸ்வர்க்கலோகத்தையும், தனக்கு அன்னத்தையும் ஸாதிப்பிவிக்கிறேன்' என்று மனஸால் தியானம்செய்துகொண்டு அப்பிரமத்தனாக (ஸாமத்தால்) ஸ்தோத்திரம் செய்யவேண்டும்.

3. எல்லா அச்சு அக்ஷரங்களும் இந்திராத்மாக்கள்; எல்லா ஊஷ்மாக்களும் (ச, ஷ, ஸ முதலியவை) பிரஜாபதி ஆத்மாக்கள்; எல்லா ஸ்பர்சங்களும் (கமுதலான அக்ஷரங்கள்) மிருத்யு ஆத்மாக்கள்; எவன் அச்சுக்களை சரியாக உச்சரிக்கவில்லையோ அவனுக்கு இந்திரன் பதில் சொல்லுவார் (கண்டிப்பார்).

4. ஊஷ்மாவை எவன் சரியாக உச்சரிக்கவில்லையோ அவனை பிரஜாபதி பொடிப்பொடியாக்குவார்; ஸ்பர்சாக்ஷரத்தை எவன் சரியாக உச்சரிக்கவில்லையோ அவனை யமன் சாம்பலாக்கிவிடுவார்.

5. (மேற்படி அக்ஷரங்களை என்னென்ன விதமாக உச்சரிக்கவேண்டியதென்று இதில் சொல்லப்படுகிறது).

கண்டம் 23.

1–2. தர்ம ஸ்கந்தங்கள் மூன்று (தர்மத்தில் பிடிப்புள்ள ஆச்ரமங்கள் மூன்று). யக்ஞம், வேத அத்யயனம், தானம் இவை சேர்ந்தது ஒன்று (கிரகஸ்த ஆச்ரமம்); தபஸ் இரண்டாவது (வான ப்ரஸ்தாச்ரமம், ஸந்யாச்ரமம்); எப்பொழுதும் ஆசார்ய குலத்தில் வஸித்துக்கொண்டு இருக்குகை மூன்றாவது (பிரமசர்ய ஆச்ரமம்); இவைகளில் அந்தந்த ஆச்ரமத்திலிருக்கிறவர்கள் (அத தற்குறித்தான) புண்ய லோகத்தை யடைகிறார்கள். (ஆனால்) பிரமஸம்ஸ்தன் (பிரமத்தை யறிந்தவன்) அமிருதத்வத்தை யடைகிறான்.

[இதில், ஸந்யாஸி என்றால் கர்மானுஷ்டானமுள்ள ஸந்யாஸி; பரிவ்ராட் அல்ல; (எல்லாவற்றையும் விட்டவன் அல்ல); கர்மம் யாவற்றையும் விட்டு பிரமஸம்ஸ்தனாயிருக்கிறவனே பரிவ்ராட்; மேற்படி நான்கு ஆச்ரமங்களில் ஒவ்வொன்றி லிருக்கிறவனும் பிரமஸம்ஸ்தனாகலாம்; ஸந்யாஸிதான் ஆகவேண்டுமென்று சொல்லக்கூடாது; ஒவ்வொரு ஆச்ரமத்திலிருக்கிறவன் எப்பொழுது பிரமத்தை யறிந்து கர்மத்தை விடுகிறானோ அப்பொழுது அவனுக்கு பரிவ்ராட் என்ற பெயர் தானாக கிடைத்துவிடுகிறது; எல்லா கர்மத்தையும் விட்டால்தான் பரிவ்ராட் என்று பெயர்கிடைக்கும்; வாஸ்தவத்தில் பிரமத்தை யறிந்தவன்தான் கர்மத்தை விடலாம்; ஸாக்ஷாத்

காரம் வராமல் கர்மத்தை விடக்கூடாது; அப்படிவிடின் ப்ரத்யவாயம் (தோஷம்) உண்டாகும்; ஸாக்ஷாத்காரம் வந்தபிறகு கர்மத்தை விட்டால் ப்ரத்யவாயம் இல்லை; கர்மங்களை விட்டுவிட்டால் பிரமஸம்ஸ்தனுய் விடலாமென்கிற எண்ணத்தின்மேல், அப்படி ஆகாமலிருக்கும்பொழுது கர்மத்தை விடுகிறது பிசகு. இந்தப்படி சங்கரபாஷ்யத்தின் கருத்து].

3. லோகங்களை உத்தேசித்து அவைகளுக்குள் எது ஸாரம் என்று பிரஜாபதி (விராட் புருஷன், அல்லது காச்யப பிரஜாபதி, அல்லது பிரமன்) த்யானித்தார் (தபித்தார்). அவைகளுக்குள் மூன்று வேதங்கள் ஸாரமென்று தோற்றமுண்டாயிற்று. அவ்வேதங்களில் எது ஸாரமென்று மறுபடியும் தியானித்தார்; பூ:, புவ:; ஸுவ: என்ற இம்மூன்று வ்யாஹிருதிகள் (பிரமத்தின் ஜகதாகார ஸ்வரூபம், அதாவது, பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் இம்மூன்றுக்குள் எல்லா ஜகத்தும் அடக்கம்; வ்யாஹிருதி என்றால் எல்லாவற்றையும் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறது) ஸாரமென்று தோற்றம் உண்டாயிற்று.

4. அவைகளுக்குள் எது ஸாரம் என்று மறுபடியும் தியானித்தார். 'ஓம்' என்ற ப்ரணவம் ஸாரம் என்றறிந்தார். (ஓம் என்ற நாதம் பிரமத்தின் சரீரம், அதாவது அதற்குள் பிரமம் ஜ்யோதிர்மயமாய் தோற்றப்படுகிறது; அதாவது, ஓம் என்ற சக்தி, அதற்குள் பிரமம் பிரகாசிக்கிறது). ஒரு காம்பில் இலைகள் கட்டுப்பட்டிருப்பதுபோல் இந்த ப்ரணவத்தில் எல்லா வாக்குகளும் (பேச்சுக்கள், பாஷைகள்) கட்டுப்பட்டிருக்கின்றன. எல்லாம் ஓம்காரமே.

கண்டம் 24.

1–16. (யாகத்தில் ப்ராத ஸவநம், மாத்யந்தின ஸவநம், ஸாயம் ஸவநம் இவைகளை அக்னி, வாயு, ஆதித்யன் இம்மூன்று தேவர்களின்பொருட்டு கொடுப்பதைப்பற்றிய விதம் முதலானது சொல்லப்படுகிறது. பிரமஞானத்திற்கு வேண்டியதில்லை).

மூன்றாம் ப்ரபாடகம்.

கண்டம் 1.

1. இந்த ஆதித்யன் தேவமது (தேவர்களுக்கு தேன், அமிருதம்); அதற்கு ஸ்வர்க்கலோகம் குறுக்கு மூங்கில் கழி (அதாவது, தேனை வைக்கப்பட்டிருக்கிற ஸ்தானம்); அந்தரிக்ஷலோகம் தேனடை; பூமியிலிருந்து சூரியனால் இழுக்கப்படும் ஜலங்களாகிற கிரணங்கள் புத்திரர்களாக விருக்கிறார்கள். (தேனடைக்கு தேன் ஈக்கள் போல் ஹிதர்களாக விருக்கிறவர்கள்).

2. அவருடைய கிழக்கு கிரணங்கள் கிழக்கு தேனடை ஓட்டைகள்; ரிக்குகள் ஆடையில் தேன் கொண்டுவந்து வைக்கிற ஈக்கள்; ரிக்கு வேதோக்தமாய் செய்யப்படும் கர்மம் தேன் எடுக்கப்படுகிற புஷ்பம்; அந்த யாக கர்மத்திலிருக்கிற நெய், ஸோமம் முதலான ரஸம் புஷ்பத்திலிருக்கிற தேன் ரஸம்.

3. ரிக்குகளாகிற தேன் ஈக்கள், யாக கர்மமாகிற புஷ்பத்தில், ஆஜ்ய ஆஹுதியாகிற தேன் ரஸத்தை எடுத்து, யாகமாகிற புஷ்பத்தை தபிக்கச் செய்கின்றன (பழுக்கின்றன, வாடச் செய்கின்றன); அப்படி தபிக்கப்பட்ட கர்மமாகிய புஷ்பத்தில் நின்றும் யசஸ், தேஜஸ், இந்திரிய பலம், வீர்யம், அன்னாத்யம் (அன்னத்தை கொடுக்கும் சக்தி) யாகிற ரஸமாகிற தேன் உண்டாகிறது.

4. அந்த ரஸமாகிற தேன் சென்று ஆதித்யனை சுற்றி ஆச்ரயிக்கிறது (அதாவது, ஆதித்யன் தேனாக ஆகிறார்); இந்த தேன் ரூபந்தான் அவருடைய சிகப்பு ரூபம்.

கண்டம் 2.

1–3. ஸூர்யனுடைய தெற்கு கிரணங்களைப்பற்றி, மேல் கண்டபடி, யஜுஸ்ஸுக்கள் தேன் ஈக்கள்; யஜுர்வேத கர்மம் புஷ்பம்; இது அவருடைய வெளுப்பு ரூபம்.

கண்டம் 3.

1–3. அவருடைய மேற்கு திக்கு கிரணங்களைப்பற்றி, மேல் கண்டபடி, ஸாமங்கள் தேன் ஈக்கள்; ஸாமவேதகர்மம் புஷ்பம்; இது அவருடைய கருப்பு ரூபம்.

கண்டம் 4.

1–3. அவருடைய வடக்கு கிரணங்களைப்பற்றி, மேல்கண்டபடி, அதர்வ அங்கிரஸ் தேனீக்கள்; இதிஹாஸ புராணம் புஷ்பம்; இது சுத்த கருப்பு ரூபம்.

கண்டம் 5.

1–3. அவருடைய ஊர்த்வ கிரணங்களைப்பற்றி, மேல்கண்டபடி, ரஹஸ்யமான ஆதேசங்கள் (வேதாந்த ரகஸ்யங்கள்) தேனீக்கள்; ஓம் புஷ்பம்; சலித்துக்கொண்டிருக்கிற ஜ்யோதிர்மய ரூபம்.

4. இவை (மேற்சொல்லப்பட்ட சிகப்பு ரூபாதி ரஸங்கள்) ரஸங்களுக்கெல்லாம் ரஸங்கள்; தேவர்கள் ரஸங்களாயிருக்கிறார்கள்; அவர்களுக்குள் மேற்சொல்லப்பட்டன ரஸங்கள். அவ்விதமே அமிருதங்களுக்குள் அமிருதங்கள்.

கண்டம் 6.

1. இவைகளுக்குள் முதலாவது அமிருதத்தை வஸுக்கள், அக்னிமுகமாய் புஜித்து, பிழைத்திருக்கிறார்கள்; தேவர்கள் உண்கிறதுமில்லை குடிக்கிறதுமில்லை; அமிருதத்தைப் பார்த்த மாத்திரத்தில் திருப்தியடைகிறார்கள்.

2. அந்த அமிருத ரூபத்தில் பிரவேசிக்கிறார்கள்; அதனால் உத்ஸாகத்தை யடைகிறார்கள்.

3. மேற்படி அமிருதத்தை இப்படிப்பட்டதென்று எவன் அறிகிறானோ அவன் வஸுக்களுடன் ஒன்றாய்ச்சேர்ந்து, அக்னி முகமாக அந்த அமிருதத்தையே பார்த்து திருப்தியடைகிறான். அந்த ரூபத்தையே அடைகிறான்; அதனால் உத்ஸாகப் படுகிறான்.

4. அவன் ஆதித்யன் கிழக்கே உதயமாகி மேற்கே அஸ்தமிக்கிற பரியந்தம் வஸுக்களுடைய ஆதிபத்தியமாகிற ஸ்வாராஜ்யத்தை யடைகிறான்.

கண்டம் 7.

1–4. இரண்டாவது அம்ருதத்தைப்பற்றி (முன்போல்) ருத்ர தேவர்கள்; இந்திரமுகமாய் த்ருப்தி; ஆதித்யன் கிழக்கே உதயமாகி மேற்கே அஸ்தமிக்கிற பர்யந்தமும், தெற்கே உதயமாகி வடக்கே அஸ்தமிக்கிற பர்யந்தமும் போக காலம்.

கண்டம் 8

1–4. மூன்றாவது அம்ருதத்தைப்பற்றி (முன்போல்) ஆதித்ய தேவர்கள்; வருணமுகமாய் த்ருப்தி; ஆதித்யன் தெற்கே உதயமாகி வடக்கே அஸ்தமிக்கிற பர்யந்தமும், மேற்கே உதயமாகி கிழக்கே அஸ்தமிக்கிற பர்யந்தமும் போக காலம்.

கண்டம் 9.

1–4. நான்காவது அம்ருதத்தைப்பற்றி (முன்போல்) மருத் தேவர்கள்; ஸோமமுகமாய் த்ருப்தி; ஆதித்யன் மேற்கே உதயமாகி கிழக்கே அஸ்தமிக்கிற பர்யந்தமும், வடக்கே உதயமாகி தெற்கே அஸ்தமிக்கிற பர்யந்தமும் போக காலம்.

கண்டம் 10.

1–4. ஐந்தாவது அம்ருதத்தைப்பற்றி (முன்போல) ஸாத்ய தேவர்கள்; பிரம்மமுகமாய் த்ருப்தி; ஆதித்யன் வடக்கே உதயமாகி தெற்கே அஸ்தமிக்கிற பர்யந்தமும், உயர உதயமாகி கீழ் அஸ்தமிக்கிற பர்யந்தமும் போக காலம்.

கண்டம் 11.

1. ஆதித்யன் (முன்சொன்னபடி) மேல் உதயமாகி (பிராணிகளுடைய கர்மபல போகத்தை அதிகாரி ஒழித்துவிட்டு) பிறகு

உதயமாகிறதுமில்லை, அஸ்தமிக்கிறதுமில்லை; அத்விதீயனாய் நடுவில் இருந்துகொண்டு பிரகாசிக்கிறார். (மேற்படி ஸாத்யர்களுடைய லோகத்திற்குமேல் பிரமலோகம்; அதில் உதயாஸ்தமனம் கிடையாது; எப்பொழுது பிரகாசம்). இந்த விஷயத்தில் அடியில் கண்ட மந்திரம் இருக்கிறது.

2. (அந்த பிரமலோகத்தில் இவ்விடம்போல் உதயாஸ்தமனமாகி பிராணிகளுடைய ஆயுளை குறையச்செய்யுமா அல்லது எப்படி என்று கேட்ட ஒருவனுக்கு பதில்).

அவ்விடத்தில் இப்படிப்போல் இல்லை; ஒரு காலமும் உதயாஸ்தமயமில்லை; (பிரதிஜ்ஞையாய் சொல்லப்படுகிறது); ஹே! தேவர்களே! (நீங்கள் ஸாக்ஷிகளாகவிருந்து கேளுங்கள்) இந்த ஸத்ய வசனத்தால் பிரமத்தோடு நான் விரோதப்படமாட்டேன் (பிரமத்வம் எனக்குக் கிடையாமல் போகாது). (என்றது ச்லோகம்).

3. இந்த உபநிஷத் ஞானத்தையறிந்த வித்வானுக்கு உதயாஸ்தமயமில்லை; எப்பொழுதும் பிரம ஸ்வரூபம் பிரகாசித்துக் கொண்டிருக்கும், (ஸ்வப்ரகாசனாகவே, பிரமமாகவே ஆகிறான்).

4. இந்த மது ஞானத்தை ஸாக்ஷாத் பிரமன் (ஹிரண்யகர்ப்பர், ஸகுண பிரமம்) பிரஜாபதிக்கு (சிருஷ்டிகர்மத்தை வகித்தவருக்குச்) சொன்னார். அவர் மனுவுக்குச் சொன்னார். அவர் இக்ஷ்வாகு முதலான பிரஜைகளுக்குச் சொன்னார். உத்தாலகருடைய பிதா தன் ஜ்யேஷ்ட புத்திரனாகிய மேற்படி உத்தாலகருக்குச் சொன்னார்.

5. இந்த பிரமவித்யையை ஒருவன் தன் ஜ்யேஷ்ட புத்திரனுக்கு உபதேசிக்கவேண்டும்; அல்லது யோக்யனான சிஷ்யனுக்கு உபதேசிக்கவேண்டும்.

6. மற்றோர்களுக்கு உபதேசிக்கக் கூடாது; இதற்கு விலையில்லை; பூமியை முழுவதும் கொடுத்தாலும் போதாது; அதைக்காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை.

கண்டம் 12.

1. இந்த எல்லா பூதமும் (காணப்படுகிற ஸ்தாவர ஜங்கமாத்மகமாயிருக்கிற ஜகத்) காயத்ரீயாகவே விளங்குகிறது. (எப்படியென்றால்) வாக்குத்தான் காயத்ரீ; இந்த எல்லா பூதமும் வாக்காக விருக்கிறது; வாக்கே இவைகளெல்லாம் சப்திக்கிறது (சொல்லுகிறது); ரக்ஷிக்கிறது (ஆனதால் காயத்ரீ என்ற பெயர்).

2. அப்படிப்பட்ட இந்த காயத்ரீ இந்த பிருதிவியாகவுமிருக்கிறது; (எப்படியென்றால்) இந்த பிருதிவியில் இந்த எல்லா பூதமும் வைக்கப்பட்டிருக்கிறதல்லவா? இந்த பிருதிவியை விட்டு அப்புறம் போகிறதில்லை.

3. அப்படிப்பட்ட இந்த பிருதிவி இந்த புருஷனிடத்திலிருக்கிற சரீரமாக விருக்கிறது; (எப்படியென்றால்) இந்த சரீரத்தில் பிராணங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன; இந்த சரீரத்தை விட்டு அப்புறம் போகிறதில்லை.

4. அப்படிபட்ட இந்த சரீரம் இந்த புருஷனுக்குள்ளிருக்கிற ஹிருதயமாயிருக்கிறது; (எப்படியென்றால்) இந்த ஹிருதயத்தில் பிராணங்கள் வைக்கப்பட்டிருக்கின்றனவன்றோ? இந்த ஹிருதயத்தை விட்டு அப்புறம் போகிறதில்லை.

5. அப்படிப்பட்ட காயத்ரீ நான்கு பாதங்கள் உடையது; ஆறுவிதமுள்ளது (வாக், பூதம் பிருதிவி, சரீரம், இருதயம், பிராணன்); இப்படி ரிக்காலும் சொல்லப்பட்டிருக்கிறது.

6. அப்படிப்பட்ட காயத்ரீயால் சொல்லப்பட்ட புருஷன் மிகவும் பெரிது; அவ்வளவு மகிமையுள்ளது; (எப்படிப்பட்டதென்றால்) அவருடைய ஒரு பாதம் (கால் பங்கு) இந்த எல்லா பூதங்களுமாயிருக்கிறது. மற்ற மூன்று பாதங்களும் அவருடைய ஜ்யோதிர்மய அமிருத ஸ்வரூபம்.

7. அவர்தான் பிரமமென்று சொல்லப்படுகிறது; அவர்தான் புருஷனுக்கு வெளிப்பட்ட ஆகாசமாகவுமிருக்கிறார்; அப்பொழுது 'பகிர்தா புருஷா தாகச:' என்று சொல்லப்படுகிறது (ஜாக்ரதாவஸ்தை).

8. அவர்தான் புருஷனுக்குள்ளிருக்கிற ஆகாசமாயுமிருக்கிறது; அப்பொழுது 'அந்த: புருஷ ஆகாச:' என்று சொல்லப்படுகிறது (ஸ்வப்னவஸ்தை).

9. அவர்தான், ஹிருதயத்துக்குள்ளிருக்கிற ஆகாசமாயுமிருக்கிறார்; அது பூர்ணம் (எங்கும் நிறைந்திருக்கிறது); அப்ரவிருத்தி (ஒரு இடத்திலும் சலிக்கிறதில்லை); (ஸுஷுப்தி யவஸ்தை); இப்படி எவன் அறிகிறானோ அவன் பூர்ணமாயும் அப்ரவிருத்தி யுள்ளதாயுமிருக்கிற மங்களத்தை (பிரமத்தை) யடையுவான்.

கண்டம் 13.

1. இப்படிப்பட்ட இந்த ஹிருதயத்திற்கு (பிரமத்தின் இருப்பிடத்திற்கு) ஐந்து தேவதுவாரங்கள் (வாசல்கள்) உள; கிழக்கு வாசல் பிராணவாயு; அதுதான் நேத்திரம் (நேத்திரேந்திரியம்); அதுதான் ஆதித்யன் (தேவதை); அதை தேஜஸ், அன்னாத்யம் இக்குணங்களுடன் உபாஸிக்கவேண்டும்; இப்படியறிகிறவன் தேஜஸ்வியாகவும், அன்னாதனாயு மாகிறான்.

2. தெற்கு வாசல் வ்யானவாயு; அது ச்ரோத்திரம் (இந்திரியம்); அது சந்திரன் (தேவதை); ஸ்ரீ, யசஸ் இக்குணங்களுடன் உபாஸிக்கவேண்டும்; இப்படி யறிகிறவன் ஸ்ரீமானாயும், யசஸ்வியாகவு மாகிறான்.

3. மேற்கு வாசல் அபானவாயு; அதுதான் வாக் (இந்திரியம்); அதுதான் அக்னி (தேவதை); பிரமவர்சஸம், அன்னாத்யம் இக்குணங்களுடன் உபாஸிக்கவேண்டும்; இப்படி யறிகிறவன் பிரமவர்சஸ் உள்ளவனாயும், அன்னாத்யனாகவு மிருப்பான்.

4. வடக்கு வாசல் ஸமான வாயு; அதுதான் மனஸ் (இந்திரியம்); அதுதான் பர்ஜன்யன் (வருண தேவதை); கீர்த்தி, வ்யஷ்டி (காந்தி) இக்குணங்களுடன் உபாஸிக்கவேண்டும்; இப்படியறிகிறவன் கீர்த்தி, காந்தி உள்ளவனாவான்.

5. ஊர்த்வவாசல் உதானவாயு; அதுதான் வாயு (தேவதை); அதுதான் ஆகாசம் (இந்திரியங்களை தாண்டிவிட்டதால் இந்திரிய விஷயம் சொல்லப்படவில்லை); ஓஜஸ் (பலம்), மஹ: (மஹத்வம்) இக்குணங்களுடன் உபாஸிக்கவேண்டும். இப்படி யறிகிறவன் பலமுள்ளவனும் மகானுமாயிருப்பான்.

6. இந்த ஐந்து பிரமபுருஷர்களும் ஸ்வர்க்க லோகத்திற்கு துவார பாலகர்கள்; இவர்களை இப்படி யறிகிறவன் ஸ்வர்க்கத்தை யடைவான். இவன் குலத்தில் வீரன் (பரமயோகி) பிறப்பான்.

7. இந்த ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் மேலாயிருக்கிற ஒரு ஜ்யோதிஸ் பிரகாசிக்கிறது; இந்த ஜகத், ஸம்ஸாரம், இவைகளைக் கடந்து உத்தமமாயிருக்கிற லோகங்களில் (ஸத்யலோக முதலான லோகங்களில்) பிரகாசிக்கிறது; (ஆனால் பிரமத்திற்கு இருப்பிடமுமில்லையே, ரூபமுமில்லையே, அப்படியிருக்க இப்படிச் சொல்லலாமாவென்றால், ஹிரண்ய கர்ப்பாதி கார்ய பிரமத்தின் ஸ்தானமென்றறிந்தால் ஸமாதானமாகும்). அப்படிப்பட்ட வஸ்துவாகிய ஜ்யோதிஸ் இந்த புருஷனுக்குள்ளேயும் பிரகாசிக்கிறது; (அதைப் பார்க்கவும் பார்க்கலாம், கேழ்க்கவும் கேட்கலாம்); அதன் பார்வை எப்படியென்றால் (பின்னால் சொல்லப்படுகிறது).

8. இந்த சரீரத்தைத் தொடுவதால் ஒரு உஷ்ணபாவம் அறியப்படுகிறதல்லவா? அந்த ஜ்யோதிஸ் இருப்பதால் தேகத்தில் இந்த சூடுகை இருக்கிறது; அப்படியிருக்கிறது ப்ரத்யக்ஷமாய் காணப்படுகிறதல்லவா? அதனால் அது பார்க்கப்படத் தகுந்தது; கேட்கப்படத் தகுந்ததாயுமிருக்கிறது; (எப்படியென்றால்) இரண்டு காதுகளை விரல்களால் மூடிக்கொண்டு, கவனமாய் கேட்டால், ரதத்தினுடையதுபோல் ஒரு ஓசையாவது (நினதம்), ருஷபத்தின் கர்ஜனையைப்போல் ஒரு ஓசையாவது (நதது:), அக்னி எறிதலினுடையதுபோல் ஒரு ஓசையாவது கேட்கப்படுகிறதல்லவா? அதனால்தான் பார்க்கப்படுகிறது, கேட்கப்படுகிறது; இப்படி அறிகிறவன் பார்க்கப்படத் தகுந்தவனும் (ரூபவானும்), கேட்கப்படத் தகுந்தவனும் (கீர்த்தியுள்ளவனும்) இருப்பான்.

கண்டம் 14.

1. நாமரூபமுள்ளதாயிருக்கிற இந்த ஜகத் எல்லாம் பிரமம். (எப்படியெனில்) ஜகத் அதனிடமிருந்தே உண்டாகிறது; அதனிடத்திலேயே லயிக்கிறது; இருக்கும்பொழுது அதனாலேயே பிழைத்திருக்கிறது. இந்தப்படி (ராகத்வேஷாதிகளை விட்டுவிட்டு) சாந்தனாக பிரமத்தை உபாஸிக்கவேண்டும் (அறியவேண்டும்). (எப்படி உபாஸிக்கிறதெனில்) முதலில் ஒரு நிச்சயம் செய்துகொள்ளவேண்டும்; ஏனென்றால், ஜீவன் அத்யவஸாயாத்மக: (நிச்சயமயன், புத்தி நிச்சயமே ஜீவன்); இந்த லோகத்தில் எப்படிப்பட்ட நிச்சயமுள்ளவனோ ஜீவன், இந்த தேகத்தை விட்டுப் போன பிறகு, அப்படிப்பட்ட நிச்சயமுள்ளவனாகவே இருப்பான் (அதாவது, அவனவன் நிச்சயத்திற்குத் தகுந்த பலன் கிடைக்கும்); (ஆதலால் ஒருவிதமான நிச்சயம் செய்யவேண்டும்; எவ்வித நிச்சயமென்றால் சொல்லப்படுகிறது).

2. (ஸகுண பிரம உபாஸ்தை சொல்லப்படுகிறது). (பிரமம் எப்படிப்பட்டதென்றால்) மனோமயன் (மனஸாகவே, அதாவது, மனஸால் அறியப்படுகிறவனாகவே யிருக்கிறான்); பிராண சரீரன் (சூக்ஷ்ம சரீரமுள்ளவன், அதாவது, நம்மைப்போல் ஸ்தூல சரீரமில்லாதவன்); பாரூப: (பிரகாசரூபி, அதாவது எப்பொழுதும் பிரகாசித்துக்கொண் டிருக்கிறவர்); ஸத்ய ஸங்கல்ப: (வ்யர்த்தமாய்ப் போகாத ஸங்கல்பத்தை யுடையவர்); ஆகாச ஆத்மா (ஆகாச ஸ்வரூபி, அதாவது, எங்கும் பரவியிருப்பவர்); ஸர்வகர்மா (எல்லாவற்றையும் உண்டுசெய்தவர்); ஸர்வகாம: (எல்லா இச்சைகளையும் உடையவர், அதாவது, யாதொரு குறைவுமற்றவர்); ஸர்வகந்த:, ஸர்வரஸ: (எல்லா நல்ல வாஸனை யுடையவன், எல்லா ரஸத்தை யுடையவன், அதாவது, பாபஸம்பந்தமாயிருக்கிற கெட்டவாஸனை, கெட்ட ரஸமில்லாதவர்); ஸர்வ மிதமப்யாத்த: (இந்த ஜகத் முழுதிலும் வ்யாபித்திருக்கிறவன்); அவாகீ (வாக்கில்லாதவன், அதாவது தசேந்திரயங்க ளில்லாதவன்); அநாதர: (ஸம்பிரமம் இல்லாதவன், அதாவது, கிடைக்காதவஸ்து கிடைப்பதாலுண்டாகும் ஒரு பரபரப்புமில்லாதவன்; அவனுக்கு யாதொரு குறைவு இல்லாததால்).

3. இந்த என்னுடைய ஆத்மா (ஜீவாத்மா) ஹிருதயத்திற்குள் நெல், யவம், கடுகு, சாமை, சாமை அரிசி இவைகளைக் காட்டிலும் சிறிது (அதி ஸூக்ஷ்மமானது); ஹிருதயத்திற்குள் பிருதிவி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் இந்த லோகங்களைக் காட்டிலும் பெரிது.

4. ஸர்வகர்மா, ஸர்வகாமா, ஸர்வகந்த, ஸர்வரஸ, ஸர்வமிதமப்யாத்தா, அவாகீ, அநாதர (இவைகளுக்கு யேற்கனவே அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது) இந்த என்னுடைய ஆத்மா, ஹிருதயத்திற்குள்ளிருக்கிற ஆத்மா, பிரமம்; இந்த பிரமத்தையே சரீரத்தைவிட்ட பிறகு (நான்) அடையப்போகிறேன். இந்தப்படி எவனுக்கு நிச்சயமிருக்கிறதோ அவனுக்கு ஸம்சயமில்லை; (இந்தப்பிரகாரம்) சாண்டில்யர் சொன்னார்.

கண்டம் 15.

1. (பிரதானம், மாயை அதாவது ஜகத்தாக பரிணமித்திருக்கிற பிரமோபாஸனம் சொல்லப்படுகிறது).

இது ஒரு பெரிய பை (சாக்கு); அதற்கு அந்தரிக்ஷம் வயிர் (உள்வெளி); பூமி அடியிலிருக்கிறது; நாசமடையாதது; திக்குகள் அதற்கு மூலைகள் (ஓரங்கள்); ஸ்வர்க்கம் அதற்குமேல் ஓட்டை (வாய்); பிராணிகளின் கர்மபலன் அதற்குள் வைக்கப்பட்டிருக்கிற பணம்; அந்த பலத்துடன் இந்த ஜகத் முழுதிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

2. அதனுடைய கிழக்கு திக்கிற்கு ஜுஹூ என்று பெயர் (கிழக்கே பார்த்து ஹோமாதி கர்மங்கள் செய்யப்படுகிறது); தெற்கிற்கு ஸஹமாநா என்று பெயர் (பாபிகள் தெற்கே யமபட்டணத்தில் பாபபலன்களை ஸகித்து அனுபவிக்கிறார்கள்); மேற்கு திக்கிற்கு ராஜ்ஞீ என்று பெயர் (வருண ராஜா, அல்லது ஸந்தியாராகத்துடன் சேர்ந்திருக்கிறது); வடக்கு திக்கிற்கு ஸுபூதாவென்று பெயர் (குபேரன் முதலானவர்களுடைய விபூதி ஐச்வரியமிருக்கிறது); இத்திக்குகளின் பிள்ளை வாயு; இப்படி வாயுவை அறிந்தால், அறிந்தவனுக்கு புத்திர சோகமில்லை; புத்திரன் தீர்க்காயுஸாயிருப்பான்.

3. (இப்படி அறிந்தவன் அடியில்கண்டபடி சொல்லுகிறான்) இந்த புத்திரனால் (மூன்றுதரம்) நாசமில்லாத கோசத்தை யடைகிறேன்; பிராணத்தை யடைகிறேன்; (பூ:) பூமியை யடைகிறேன்; (புவ:) அந்த ரிக்ஷத்தை யடைகிறேன்; (ஸ்வ:) ஸ்வர்க்கத்தை யடைகிறேன்.

4. பிராணனை யடைகிறேன் என்று சொல்லப்பட்டதே, இந்த எல்லா பூதமும் பிராணனாகவே யிருப்பதால் அப்படிச் சொன்னேன்.

5. பூ: அடைகிறேன் என்றதற்கு அர்த்தம் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்று சொன்னதாக எண்ணவேண்டியது.

6. புவ: என்றதற்கு அக்னி, வாயு, ஆதித்யன் என்று சொன்னதாக எண்ணவேண்டியது.

7. ஸ்வ: என்று சொன்னதற்கு ரிக்கு, யஜுஸ், ஸாமம் இவ்வேதங்கள் என்று எண்ணவேண்டியது.

கண்டம் 16.

1. (ஒருவன் தன்னுடைய ஆயுஸ் விருத்திக்காக செய்ய வேண்டிய உபாஸனையும் ஜபமும் சொல்லப்படுகிறது).

புருஷன் (ஜீவாத்மா) யஞ்ஞமாகவே யிருக்கிறான் (யஞ்ஞமாக பாவிக்கப்படவேண்டும்). அவனுடைய 24 வயதுவரையுள்ள ஆயுஸ் ப்ராதஸ்ஸவனம்; காயத்ரீ 24 அக்ஷரங்கள்; காயத்ரீ ஸம்பந்தமே ப்ராதஸ்ஸவனம்; அதற்கு வஸுக்கள் தேவதைகள்; பிராணங்களே வஸுக்கள்; இவைதான் எல்லாவற்றையும் பிழைப்பிவிக்கிறார்கள்.

2. இந்த 24 வயதுக்குள் ஏதாகிலும் ஆபத்து வந்தால் அப்பொழுது இந்த ஜபத்தை சொல்லவேண்டியது. "ஹே! பிராணங்களாகிற வஸுக்களே! ப்ராதஸ்ஸவனம் மாத்யந்தின ஸவனத்தை அநுஸரிக்கட்டும்; பிராணங்களுடைய மத்தியில் எனக்கு யாதொரு குறைவும் வரவேண்டாம்" என்று. அப்பொழுது அவன் அந்த ஆபத்திலிருந்து விடுபட்டு அரோகனாகவிருப்பான்.

3. அந்த 24 வயதுக்கு மேற்பட்டு 44 வருஷம் (அதாவது 68 வயது பரியந்தம்) மாத்யந்தின ஸவனம்; த்ருஷ்டுப் 44 அக்ஷரங்கள்; ருத்திரர்கள் தேவதைகள்; (முதலாவது பாராவில் கண்டதுபோல் இதற்கு தக்கபடி பார்த்துக்கொள்க).

4. இரண்டாவது பாராவில் சொல்லியதுபோல் இதற்கு தக்கபடி ஜபம்.

5. அந்த வயதுக்குமேல் 48 வருஷம் (அதாவது 116 வயதுவரையில்) ஸாயம்ஸவனம்; ஜகதீச்சந்தஸ்; 48 அக்ஷரங்கள்; ஆதித்யர்கள் தேவதைகள் (மற்றது முன்போல்).

6. இதற்கு தக்கபடி ஜபம், இரண்டாவது பாராவில் சொல்லியதுபோல்.

7. இப்படி நிச்சயம் வந்த மஹிதாஸர் என்ற ரிஷி "ஹே! ரோகமே! உன்னால் என்ன செய்யக்கூடும்? என் வீண் சிரமப்பட்டு என்னை வருத்தப்படுத்த உத்தேசிக்கிறாய்" என்று சொன்னார். அவர் 116 வயதை அடைந்தார்; இப்படி யார் உபாஸிக்கிறாரோ அவனுக்கும் 116 வயதுண்டு.

கண்டம் 17.

1. (இன்னமும் புருஷனுக்கும் யக்ஞத்திற்கும் ஸாம்யம் சொல்லப்படுகிறது).

எதை உண்ண இச்சிக்கிறானோ, குடிக்க இச்சிக்கிறானோ, எது கிடைக்காததால் துக்கப்படுகிறானோ, அதுதான் யக்ஞத்தில் தீக்ஷை (விரதம்).

2. எதை உண்கிறானோ, குடிக்கிறானோ, எது கிடைத்தபோது சந்தோஷப்படுகிறானோ, அது யக்ஞத்தில் உபஸதம் (அல்ப ஆகாரம், பால் முதலியதுபோல்).

3. சிரிக்கிறதும், பக்ஷிக்கிறதும், மைதுனம் செய்கிறதும் யக்ஞத்தில் ஸ்துதசஸ்திரங்கள் (ஸ்தோத்திரம் முதலியவை).

4. தபஸ், தானம், ருஜுபாவம், அஹிம்ஸை, ஸத்யவசனம் இவை யக்ஞத்தில் தக்ஷிணைகள்.

5. ஸோஷ்யதி, அஸோஷ்டா என்று இரண்டிலும் சொல்லப்படுகிறது. (புருஷ யாகத்தில் பெறப்போகிறான், பெற்றான்; யஞ்ஞயாகத்தில் ஸோம ரஸத்தை குடிக்கப்போகிறான், குடித்தான் என்று சொல்லப்படுகிறது; சப்த ஸாம்யம்). மரணம் யஞ்ஞத்தில் அவபிருத ஸ்நாநம் (முடிவு).

6. இந்த வித்தையை தேவகீ புத்ரனாகிய கிருஷ்ணனுக்கு கோரராகிய ஆங்கிரஸர் உபதேசித்தார்; அவர் மற்ற வித்தையை வேண்டவில்லை (அதாவது, இதையே உத்கிருஷ்டமென்று நினைத்தார்). இந்த புருஷ யஞ்ஞவித்தையை அறிந்தவன் மரணகாலத்தில் இந்தப்படி ஜபம்செய்யவேண்டும். அக்ஷிதமஸி (குறைவில்லாமலிருக்கிறாய்); அச்யுதமஸி (நழுவுதல் இல்லாமலிருக்கிறாய்); பிராண ஸம்சிதமஸி (ஸூக்ஷ்ம பிராணனாயிருக்கிறாய்) என்று; இந்த விஷயத்தில் இரண்டு ரிக்குகள் உள.

7. புராணராயும், காரணராயுமிருக்கிற (பிரமத்தினுடையதாயும்) தமஸுக்கு மேல்பட்டதாயும் உத்கிருஷ்டமாயும், தேவர்களுக்கு உயர்ந்ததாயும் உத்தமமாயுமிருக்கிற ஜ்யோதியை பார்த்தவர்களாக விருக்கிறோம்; அடைந்தவர்களாக விருக்கிறோம்.

கண்டம் 18.

1. மனதை பிரமமாக உபாஸிக்கவேண்டும்; இது அத்யாத்மம் (ஆத்மசம்பந்தமானது); ஆகாசத்தை பிரமமாக உபாஸிக்க வேண்டும் (இது தைவஸம்பந்தம்).

2. அந்த மனோமய பிரமம் நான்கு பாதங்களுடையது (பங்குள்ளது); வாக், பிராணன், சக்ஷுஸ், ச்ரோத்ரம்; ஆகாசமய பிரமம் நான்கு பங்கு; அக்னி, வாயு, ஆதித்யன், திக்குகள்.

3. வாக் ஒரு பங்கு; அது அக்னி ஜ்யோதிஸால் விளங்குகிறது. (பலன்) இப்படியறிந்தவன் கீர்த்தி, யசஸ், பிரமவர்சஸ் இவைகளுடன் விளங்குகிறான்.

4. பிராணனுக்கும் வாயுவுக்கும் ஸம்பந்தம்; மற்றது 3-வது பாராவைப்போல்.

5. சக்ஷுஸ்ஸுக்கும் ஆதித்யனுக்கும் ஸம்பந்தம்; மற்றது முன்போல்.

6. ச்ரோத்ரத்திற்கும் திக்குக்கும் ஸம்பந்தம்; மற்றது முன்போல்.

கண்டம் 19.

1. ஆதித்யனே பிரம்மமென்று உபதேசம் சொல்லப்படுகிறது. அதன் விஸ்தார வ்யாக்யானமாவது—முன்னால் (ஆதிகாலத்தில்) இந்த ஜகத் அஸத் ஆகவே இருந்தது. (இல்லாததைப் போல், அதாவது, நாம ரூபங்களால் வ்யக்தமாய்த் தோணப்படாமலிருந்தது). பிறகு அது ஸத் ஆயிற்று; (தோணப்பட்டது); (முளையைப்போல் முளைகண்டது); வரவர கொஞ்சம் கொஞ்சம் பெருத்தது; அது ஒரு முட்டையாயிற்று; அது ஸம்வத்ஸரகாலம் இருந்தது; பிறகு அது வெடித்தது; (பிளந்தது); அந்த இரண்டு பிளப்புகளில் ஒன்று வெள்ளியாகவும், மற்றொன்று தங்கமாகவும் இருந்தது.

2. வெள்ளியைப் பிளப்பு இந்த பூமி ஆயிற்று; தங்கமய பிளப்பு ஸ்வர்க்கமாயிற்று; கர்ப்ப ஸ்தூலப்பை பர்வதங்களாயிற்று; மேற்படி சூக்ஷ்மப்பை மேகம் பனி இவைகளாயிற்று; நாடிகள் நதிகளாயின; மூத்திரப்பை ஜலம் ஸமுத்ரமாயிற்று.

3. அந்த முட்டையிலிருந்து எது (எந்த சிசு) உண்டாயிற்றோ அதுதான் இந்த சூர்யன். (அந்த சிசு பிறந்தவுடன்) எல்லா பூதங்களும் அவரவர்களுடைய இச்சைகளும் கோஷங்களாகவும், பெரும் சப்தங்களாகவும் ஆயின. அப்படி பிரதி சூர்ய உதயம் சப்தாதிகள் உண்டாகின்றன. (அதாவது, சூர்ய உதயமானவுடன் எல்லா பூதங்களும் எழுந்திருந்து தன் தன் காரியத்தை நடத்துகிறார்கள்).

4. (இந்த வித்தைக்கு பலன்). இப்படியறிந்து பிரமத்தை உபாஸிக்கிறவர்கள் நல்ல கோஷங்களை (இச்சைகளை) அடைகிறார்கள், அனுபவிக்கிறார்கள்.

நான்காம் ப்ரபாடகம்.

கண்டம் 1.

1. ஓர்காலத்தில், சிரத்தையுடன் தானம் செய்தவரும், அதிகமாக கொடுத்தவரும், அதிகமாக பிரர்களுக்கு போஜனம் தன் வீட்டில் செய்து வைத்தவருமான பவுத்ராயனர் என்கிற ஜானச்ருதி என்று ஒரு ராஜா இருந்தார்; அவர் தன் அன்னத்தையே இதரர்கள் புஜிக்கும்பொருட்டு அநேக விடங்களில் சத்திரங்களை கட்டிவைத்தார்.

2. (இப்படி யிருக்கும்பொழுது, ஒரு நாள், இவனுடைய அன்னதானத்தால் சந்தோஷத்தை யடைந்து ரிஷிகள் அல்லது தேவர்கள் இவனை ரக்ஷிக்கும்பொருட்டு) ஹம்ஸங்களாக ராத்திரியில் (அவனுக்கு சமீபத்தில்) உப்பரிகையின்பேரில் வந்து இறங்கினார்கள். அவைகளில் ஒரு ஹம்ஸம் மற்றொன்றை பார்த்து சொன்னதாவது:—அடே! அடே! பல்லாக்ஷ (ஒரு ஹம்ஸத்தின் பெயர்)! ஸ்வர்கத்திற்கு அல்லது பகலுக்கு ஸமானமான இந்த ஜானச்ருதியின் ஜ்யோதியை (கீர்த்தியை) ஸம்பந்தப்படாதே! (அதைப்பற்றி குற்றமாய் பேசாதே). அது உன்னை தகிக்காமலிருக்கட்டும்; (மேற்படி கீர்த்தி அப்படிப்பட்ட மகிமையுள்ளது).

3. பல்லாக்ஷன் பதில் சொன்னதாவது:—அடே! யாரைப் பார்த்து சொல்லுகிறாய்! இந்த அல்பனைப்பற்றி ஏதோ ஸயுக்வான் என்கிற றைக்வனைப்பற்றி சொல்வதுபோல் ச்லாகித்துக் கொள்ளுகிறாயே!

(கேட்ட ஹம்ஸம் சொன்னதாவது) அந்த றைக்வன் என்கிறவர் எவர்? அவர் எப்படிப்பட்டவர், சொல் (என்று).

4. (பல்லாக்ஷன் சொல்லுகிறான்); (சொக்கட்டான் விளையாட்டில் காயின் நான்கு புள்ளியுள்ள பக்கமாகிற) கிருதாயமென்று பெயருள்ளது விழுந்து, ஜயித்தால், மற்றவை (மூன்று,

இரண்டு, ஒன்று புள்ளியுள்ள அயங்கள்) அப்படி உள்ளடங்கிப் போகின்றனவோ, அப்படிப்போல், ரைக்வர் செய்யும் ஸுக்ருதத்தில் மற்ற பிரஜைகள் செய்யும் ஸுக்ருதங்கள் எல்லாம் உள்ளடங்கிப் போகின்றன. (அதாவது, இவருடைய ஸுக்ருதம் எல்லோருடையதைக் காட்டிலும் அதிகம்). இவருடைய அறிவில் மற்றவர்களுடைய அறிவுகளும் அடங்கியிருக்கின்றன. இப்படிப்பட்டவரைப்பற்றி என்னால் சொல்லப்பட்டது.

5. ஜானச்ருதியானவர் இந்தப்படி ஹம்ஸ வசனத்தை கேட்டு படுக்கையைவிட்டு எழுந்திருந்து ஸாரதியை கூப்பிட்டுச் சொன்னதாவது:—அடே! ஸாரதி! ரைக்வருக்குச் சொல்லி (அவரை அழைத்துக் கொண்டுவா) என்று; அவர் எவர் என்று ஸாரதி கேட்டான்.

6. (நான்காவது மந்திரத்தில் கண்டபிரகாரம் ஜானச்ருதி சொன்னார்).

7. ஸாரதி தேடிப்பார்த்து அவரைக் காணாமல் திரும்பி வந்தான். அவனுக்கு மறுபடியும் ஜானச்ருதி சொன்னதாவது:— எங்கு பிராமணனை (பெரியோர்களை) தேடவேண்டுமோ அங்கே போய் (தேடு) என்று.

8. அவர் (ரைக்வர்) ஒரு வண்டியின் கீழ், சொறிகளை சொறிந்துகொண்டு உட்கார்ந்திருந்தார். 'ஐயா! நீர்தானோ ரைக்வர்' என்று அவரிடம்போய் ஸாரதி கேட்டான். அதற்கு 'நான் நீதான்' என்று பதில் சொன்னார். இவர்தான் ரைக்வர் என்று தெரிந்துகொண்டு திரும்பிவந்தான்.

கண்டம் 2.

1. இதையறிந்து ஜானச்ருதி அறுநூறு பசுக்களையும், ஒரு ஹாரத்தையும், ஒரு ரதத்தையும் எடுத்துக்கொண்டு ரைக்வரிடம் சென்றான்.

2. அவரைப் பார்த்துச் சொன்னதாவது:—'இவைகளை கிரகித்துக்கொண்டு எந்த தேவதையை நான் உபாஸிக்கவேண்டியதோ அதை எனக்கு உபதேசம் செய்யுங்கள்' என்று.

3. அதற்கு றைக்வர் 'அடே! சூத்திர! (சோகத்தையடைந்து உருகிறவனே), இந்த பசுக்கள் முதலியவையெல்லாம் உன்னிடமே இருக்கட்டும்' என்றார். மறுபடியும் ஜானச்ருதி ஆயிரம் பசுக்களையும், ஒரு ஹாரத்தையும், ஒரு ரதத்தையும், தன் பெண்ணையும் அழைத்துக்கொண்டு றைக்வரிடம் சென்றான்.

4. சொன்னதாவது:—'இதோ! ஆயிரம் பசுக்கள், ஹாரம், ரதம், பார்யை, தாங்கள் வஸிக்கிற கிராமம் இவைகளை யெல்லாம் கிரகித்துக்கொண்டு எனக்கு உபதேசம் செய்யுங்கள்' என்று.

5. றைக்வர் இந்த பெண்ணுடைய முகத்தைப் பார்த்து, ஏற்றுக்கொண்டு, மற்றவைகளையும் கிரகித்துக்கொண்டு சொன்னதாவது:—'இந்த முகமாக என்னைப் பேசும்படி செய்துவிட்டாய்; நான் வஸிக்கும் இந்த கிராமங்கள் மகாவ்ருஷமென்ற தேசத்தில் றைக்வ பாணமென்று ப்ரசித்தமான பெயர் பெற்றிருக்கட்டும்' என்று; மறுபடியும் சொன்னார் (வித்தையை உபதேசித்தார்).

கண்டம் 3.

1. வாயுவே ஸம்வர்க்கம் (எல்லாவற்றையும் இழுத்துக் கொள்ளுகிற குணமுள்ளது). (எப்படியெனில்) எப்பொழுது அக்னி அணைகிறதோ அப்பொழுது வாயுவை சேருகிறது (அதாவது, வாயுவாகவே ஆகிவிடுகிறது). சூர்யனும் சந்திரனும் அஸ்தமிக்கும்போது அவைகள் வாயுவை சேருகின்றன. (வாயுவால் அசைக்கப்பட்டு அஸ்தமனத்தை யடைகின்றன).

2. ஜலம் வற்றும்பொழுது வாயுவையே சேருகிறது. வாயுவே இவைகளை யெல்லாம் இழுக்கிறது. இது அதிதைவதம்.

3. இனி அத்யாத்மம்; ப்ராணன் (முக்கிய பிராணன்) ஸம்வர்க்கம்; (எப்படியென்றால்) தூங்கும்பொழுது வாக் பிராணனையே சேருகிறது. சக்ஷுஸ், ச்ரோத்ரம், மனஸ் இவைகளும் அப்படியே (சேருகின்றன).

4. இந்த இரண்டு ஸம்வர்கங்களாகிற வாயுவும், பிராணனும் தேவர்களிடத்திலும் (பூதங்களிடத்திலும்) ப்ராணங்களிடத்திலும் (இந்திரியங்களிடத்திலும்) இருக்கின்றன.

5. பிறகு, சௌனகர் என்ற காபேயர், அபிப்ரேதாரின் என்ற காக்ஷஸேனி இவர்கள் சாப்பிட உட்கார்ந்தபோது, ஒரு பிர்ம்மசாரி பிக்ஷைக்கு வந்தான். அவனுக்கு பிக்ஷைபோடவில்லை (இவன் என்ன சொல்லப்போகிறான், அதையறிவோம் என்ற எண்ணத்துடன் போடவில்லை).

6. அந்த பிர்மசாரி மேற்படி இரண்டு பேர்களைப்பார்த்து சொன்னதாவது:—'எவரோ ஒரு தேவன் இருக்கிறான்; அவன் எல்லாவற்றையும் பக்ஷிக்கிறான்; புவனத்தை ரக்ஷிக்கிறான்; வெகுப் பிரகாரமாயிருக்கிறவன்; இப்படிப்பட்டவனை மனுஷ்யர்கள் (தெரியாதவர்கள்) பார்க்கிறதில்லை; இந்த அன்னமெல்லாம் அவனுக்கேயிருக்க அவனுக்கு அன்னம் கொடுக்கப்படவில்லையே' என்று.

7. அதைக்கேட்டு சௌனகர் யோஜித்து பிர்மசாரியிடம் சென்று சொன்னதாவது:—'தேவர்களுடையவும், பிரஜைகளுடையவும் ஜனிதா; கெட்டிப் பல்லுடையவர்; உண்கத்தகுந்தவர்; அதிமேதாவி; இப்படிப்பட்டவர் அவர் மகிமை மிகவும் உயர்ந்தது; அன்னமும் அவர்தான்; அத்தா (உண்கிறவனும்) வும் அவர்தான் என்று எங்களுக்குத் தெரியும்; பிக்ஷை போடுகிறோம்' என்று.

8. பிக்ஷை போட்டார்கள்; இந்த ஐந்தும் (அத்தாவாகிற வாயு ஒன்று; அன்னங்களாகிற அக்னி, சூர்யன், சந்திரன், ஜலம் நான்கு; ஆக ஐந்து), மற்ற ஐந்தும் (அத்தாவாகிற பிராணன் ஒன்று; அன்னங்களாகிற வாக், சக்ஷுஸ், ச்ரோத்ரம், மனஸ் நான்கு; ஆக ஐந்து) சேர்ந்து பத்தாயிற்று. இதுதான் விராட்; அன்னாதி; இதனால் எல்லாம் காணப்படுகிறது; இதற்கு எல்லாம் காணப்படுகிறது; இப்படி எவன் அறிகிறானோ அவன் அன்னாதனாகிறான்.

கண்டம் 4.

1. ஜாபாலன் என்ற ஸத்யகாமன் தன் தாயாராகிய ஜபலாவைப் பார்த்து பிர்மசர்யத்தை அனுஷ்டிக்கப்போகிறேன்; என் கோத்ரம் (வம்சம்) என்னவென்று கேட்டான்.

2. அவன் சொன்னதாவது:—'அப்பா! உன் கோத்ரம் எனக்குத் தெரியாது; வெகு இடங்களில் வேலை செய்துகொண்டிருந்தேன்; யௌவன காலத்தில் உன்னைப் பெற்றேன்; உன் பெயர் ஸத்ய காமன்; என் பெயர் ஜபாலா; அந்தப்பிரகாரம் சொல்லு போ' என்று.

3. (இதைக்கேட்டு) அவன் ஹாரித்ருமதர் என்ற கௌதமரிடத்திற்கு சென்று பிர்ம சர்யத்தை அனுஷ்டிக்க தங்களிடம் வந்திருக்கிறேன் என்றான்.

4. அவர் 'உன் கோத்ரம் என்ன' வென்று கேட்டார். அவன் 'எனக்குத் தெரியாது; என் தாயைக் கேட்டேன்; இந்தப்படி (இரண்டாவது மந்திரத்தில் கண்டபடி) சொன்னாள்' என்றான்.

5. பிராமணன் இல்லாவிடில் இப்படி சொல்லமாட்டான். (இவன் பிராமணன் தான் என்று நினைத்தார்). 'ஸமித்தைக் கொண்டுவா, உனக்கு உபநயனம் செய்துவைக்கிறேன்' என்று அவர் சொன்னார். அந்தப்படி உபநயனம் செய்து வைத்து, மறுபடியும் சொன்னதாவது:—'இந்த இளைத்த நானூறு மாடுகளுடன் கூடப்போய், அவைகளை ஓட்டிக்கொண்டிரு; அவை ஆயிறம் ஆக பெருகிற வரையில் இவ்விடம் வாராமலிரு' என்று. அந்தப்படி ஆயிறம் ஆகிறவரையில் அநேக வருஷகாலம் மாடோட்டிக்கொண்டிருந்தான்.

கண்டம் 5.

1. (இப்படியிருக்கையில் ஒரு நாள், வாயுபகவான் ஒரு விருஷபத்தில் புகர்ந்துகொண்டு) விருஷபரூபம் சொன்னதாவது:—'ஹே! ஸத்யகாம!' என்று; 'ஏன் பகவான்!' என்று இவன் கேட்டான்; (விருஷபம்) 'ஆயிறம் ஆகிவிட்டோம்; குருவிடத்திற்கு எங்களைக் கொண்டுபோ' என்று.

2. (விருஷபம்) 'பிரமத்தினுடைய (ஒரு) பாதத்தை (நான் கின் ஒரு பங்கை) சொல்லுகிறேன்'

(ஸத்யகாமன்) சொல்லுங்கள்.

(விருஷபம்) மேற்படி பாதத்திற்கு நான்கு கலைகள்; அதாவது, கிழக்குதிக்கு ஒரு கலை; தெற்கு ஒரு கலை; மேற்கு ஒரு கலை; வடக்கு ஒரு கலை; இந்த நான்கு கலைகளும் சேர்ந்து ஒரு பாதம்; இதற்கு பிரகாசவான் என்று பெயர்.

3. (இப்படியறிந்து உபாஸிப்பவனுக்கு பலன்) இந்த உலகத்தில் பிரகாசவானாயிருப்பான்; பிரகாசமுள்ள லோகங்களை ஜயிப்பான்.

கண்டம் 6.

1. இன்னொரு பாதத்தை அக்னி உனக்குச் சொல்லும் என்று விருஷபம் பேச்சை முடித்தது; பிறகு, மறுநாள் காலையில் குரு வீட்டை நோக்கி எல்லா பசுக்களை ஓட்டிக்கொண்டு புறப்பட்டான். சாயங்காலம் ஒரு இடத்தில் தங்கி, அக்னியை மூட்டி அதற்குப் பின்புறம் அதைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்தான்.

2–3. அக்னி (முன் விருஷபம் சொல்லியது போல்) சொல்லி, பிருதிவி ஒரு கலை, அந்தரிக்ஷம் ஒரு கலை, ஸ்வர்க்கம் ஒரு கலை, ஸமுத்ரம் ஒரு கலை, ஆக நான்கு கலைகளுள்ள பாதத்திற்கு அநந்தவான் என்று பெயர் என்று சொல்லிற்று.

4. இவ்விதம் அறிந்தவன் இவ்வுலகத்தில் அநந்தவானாகவும், அநந்த லோகங்களை ஜயிப்பவனாகவும் இருப்பான்.

கண்டம் 7.

1. ஹம்ஸம் இன்னொரு பாதத்தைச் சொல்லும் என்று அக்னி பேச்சை முடித்தது. (மற்றது 6-வது கண்டம் முதல் மந்திரம் போல்).

2-3. ஹம்ஸம் (முன் போல்சொல்லி):—அக்னி ஒரு கலை, சூரியன் ஒரு கலை, சந்திரன் ஒரு கலை, மின்னல் ஒரு கலை, ஆக நான்கு கலைகளுள்ள (பிரமத்தினுடைய மூன்றாவது) பாதம்; இதற்கு ஜ்யோதிஷ்மான் என்று பெயர்.

4. (பலன்) வெகு ஜ்யோதியுள்ளவனாயிருப்பான்.

கண்டம் 8.

1. நீர் கோழி மைற்றொரு பாதத்தைச் சொல்லும் என்று ஹம்ஸம் பேச்சை முடித்தது. (மைற்றது முன்போல்).

2–3. நீர் கோழி சொன்னதாவது:—(முதலில் முன்போல் சொல்லி) பிராணன் ஒரு கலை, சக்ஷுஸ் ஒரு கலை, ச்ரோத்ரம் ஒரு கலை, மனஸ் ஒரு கலை, ஆக நான்கு கலைகளுள்ள பாதம் (பிரமத்தின் நான்காவது பாதம்); இதற்கு ஆயதநவான் என்று பெயர்.

4. பலன், எல்லோருக்கும் இருப்பிடமாக விருப்பான்.

கண்டம் 9.

1. குருவினிடம் போய் ஸத்யகாமன் சேர்ந்தான்; குரு இவனைப் பார்த்து சொல்லுகிறார். (அடியில் வருமாறு).

2. நீ பிரமத்தை யறிந்தவன்போல் விளங்குகிறாயே, யார் உபதேசித்தான்?.

ஸத்யகாமன்—மனுஷ்யர்கள் அல்லாதவர்கள் சொன்னார்கள்; ஆகிலும் தாங்கள் எனக்கு சொல்லவேண்டும்.

3. குருவால் உபதேசிக்கப்பட்டால் தான் வித்தை ஸாதுத்வத்தை யடையுமென்று தங்களைப்போலொத்த பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

குரு இவனுக்கு ஷோடசகலா வித்தையை கொஞ்சங்கூட விடாமல் உபதேசித்தார்.

கண்டம் 10.

1. உபகோஸலர் என்ற காமலாயனர் மேற்படி ஸத்யகாமனை குருவாக வடைந்தான்; அவரிடமிருந்து 12 வருஷகாலம் அக்னிகளுக்கு சிச்ருஷை செய்தான் (பிர்மசாரிய விருதத்தில் அக்னியை உபாஸித்தான்). ஸத்யகாமர் இவனைத்தவிர மைற்ற சிஷ்யர்களுக்கு மட்டும் உபதேசம் செய்து, ஸமாவர்த்தனம் செய்து (முடிவுக்குக் கொண்டுவந்து) அவனவன் கிரகத்திற்கு அனுப்பி விட்டார்.

2 'இந்த பிரம்மசாரி (உபகோசலர்) அக்னிகளை செவ்வையாக உபாஸித்திருக்கிறானே (அவனுக்கு இன்னும் பிரஸாதம் செய்யாமலிருக்கலாமா) அக்னி உங்களை கோபித்துக் கொள்ளாமலிருக்க வேண்டுமே' என்று ஸத்ய காமனைப் பார்த்து அவர் பார்யை கேட்டாள். அதற்கு யாதொரு பதிலும் சொல்லாமல், சிஷ்யனிடத்தில் மேலும் மேலும் வேலை வாங்கினார்.

3. அவன் மனோ வ்யாதியால் சாப்பாட்டை நிறுத்திவிட்டான். 'சாப்பாடு அப்பா!, சாப்படாமலிருப்பானேன்' என்று குரு பத்னி கேட்டாள். 'இந்த புருஷனிடத்தில் (என்னிடத்தில்) அனேக காமங்கள் (அனுபவிக்க வேண்டிய பல துக்கங்கள்) இருக்கின்றன; அவைகளாகிற வ்யாதிகளால் நிறைந்திருக்கிறேன்; அதனால்தான் சாப்பிடவில்லை' என்று சிஷ்யன் பதில் சொன்னான்.

4. பிறகு, இவனிடத்தில் அக்னிகள் ஸந்தோஷப்பட்டு, இவன் நம்மை மிகவும் சுச்ரூஷை செய்திருக்கிறான், இவனுக்கு உபதேசம் செய்ய வேண்டுமென்று நினைத்து, அவனுக்கு உபதேசம் செய்தன.

5. பிராணன்—பிரமம்; கம் (ஸுகம்)—பிரமம்; க்கம் (ஆகாசம்)—பிரமம்; என்று அக்னிகள் சொல்லியன; பிறகு இவன் சொன்னதாவது:—பிராணன் என்றது தெரிந்தது; கம், க்கம் என்றது தெரியவில்லை, என்று. (அக்னிகள்) எது கம் என்றதோ அதே க்கம் (அதாவது, ஸுகமாயிருக்கிற ஆகாசம், அதாவது ஹிருதயாகாசம், பௌதிகா காசம் அன்று); எது க்கம் என்றதோ அதே க்கம் (அதாவது, ஆகாசமாகிற ஸுகம், ஸ்வச்ச ஸுகம், விஷய ஸுகமன்று, அதாவது ஆநந்தம்). முடிவில் பிராணனும், ஆகாசமும் பிரமமென்று அக்னிகள் சொல்லியன.

கண்டம் 11

1. பிறகு இவனைப்பார்த்து கார்ஹபத்யாக்னி சொன்னதாவது:—பிருதிவி, அக்னி, அன்னம், ஆதித்யன் இவை நான்கும் என் சரீரங்கள்; இவைகளில் ஆதித்யனிடத்தில் எந்த புருஷன் தோனப்படுகிறானோ அவன் தான் நான்; நான் தான் அவன்.

2. இப்படி யறிந்து எவன் உபாஸிக்கிறானோ அவன் பாபத்தில் நின்றும் விடுபட்டு, லோகமுள்ளவனாகிறான்; தீர்க்காயுஸ் உள்ளவனாகிறான்; ஜோதிஸ் உள்ளவனாகிறான்; அவனுடைய வம்சம் குறைவுபடுகிறதில்லை; அவனை இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் நாங்கள் காப்பாற்றுகிறோம்.

கண்டம் 12.

1. பிறகு தக்ஷிணாக்னி உபதேசித்தது; ஜலங்கள், திக்குகள், நக்ஷத்திரங்கள், சந்திரன் இவைகள் என் சரீரங்கள்; சந்திரனிடத்திலிருக்கிற புருஷன் நான்தான்.

2. (பலன் முன் கண்டத்தில் சொல்லியதுபோல்).

கண்டம் 13.

1. பிறகு ஆஹவநீயாக்னி உபதேசித்தது; பிராணன், ஆகாசம், ஸ்வர்கம், மின்னல் இந்த நான்கும் என் சரீரங்கள்; இவைகளில் மின்னலில் தோணப்படுகிற புருஷன் நான்தான்.

2. (பலன் முன் போல்).

கண்டம் 14.

1. இந்த அக்னி வித்தை ஆத்மவித்தை என்றும், உனக்கு குருவந்து கதியைச் சொல்லுவார் என்றும் அக்னிகள் சொல்லிவிட்டு நின்றன; குரு வந்து இவனை கூப்பிட்டார்.

2. 'ஏன்' என்று இவன் கேட்டான். அவர் சொன்னதாவது:—பிரம வித்தினுடைய முகம்போல் உன் முகம் விளங்குகிறதே! எவர் உனக்கு உபதேசித்தார்?

சிஷ்யன்—எனக்கு யார் உபதேசிப்பார் என்று (ஸடாசாரத்தை) மறைத்தும், இந்த அக்னிகள் (உங்களைப் பார்த்தபிறகு) இப்படிப்பட்டதாக விருக்கின்றனவே, முன் வேறு விதமாக இருந்தனவே, என்றும் சொன்னான்.

குரு—இந்த அக்னிகள் உபதேசித்தனவோ வென்று கேட்டார்.

3. அக்னிகள் உபதேசித்தபடி இவன் சொன்னான்; குரு சொன்னதாவது:—லோகங்களைப்பற்றி (கர்மத்தைப்பற்றி) அக்னிகள் சொல்லியன; தாமரை இலே ஜலத்தைப்போல் ஸம்பந்திக்காததும், பாபம், கர்மம் இவைகளில் சேராததுமான (பிரமத்தை குறித்து) (வித்தையை) உனக்கு நான் சொல்லுகிறேன், என்று சிஷ்யனுக்கு சொல்லத் தொடங்கினார்.

கண்டம் 15.

1. அக்ஷியில் (கண்ணில்) ஒரு புருஷன் காணப்படுகிறதல்லவா! அவன்தான் பிரமம், ஆத்மா; அது அமிருதமாயும், அபயமாயுமிருக்கப்பட்ட பிரமம்; (இந்த புருஷனுடைய ஸ்தானமாகிற) அக்ஷியில் நெய் அல்லது ஜலத்தை போட்டால், அதில் ஒட்டாமல், கண்மூடிகள் வழியாக வழிந்து ஓடிப்போகிறது (ஸம்பந்திக்கிறதில்லை, தாமரையிலே ஜலம்போல்). (பிரமஸ்தானமே இப்படி இருக்கும்போது, பிரமத்தைப்பற்றி கேட்பானேன்! நிர்லேபம், நிரஞ்சனமே).

2. இதை (இந்த அக்ஷிபுருஷனென்கிற பிரமத்தை) 'ஸம்யத்வாம' என்று சொல்லுகிறார்கள். எப்படியென்றால், எல்லா வாமங்களையும் (சோபனங்களையும்) சேர்த்துவைக்கிறது; இப்படியறிந்து உபாஸிப்பவனுக்கு எல்லா சோபனங்களும் சேரும்.

3. இவருக்கு (இந்த ஆத்மாவிற்கு) 'வாமநீ:' என்றும் பெயர்; ஏனெனில், எல்லா வாமங்களையும் (புண்ய கர்ம பலங்களையும்) நயிப்பிக்கிறார்; இப்படியறிகிறவன் எல்லா வாமங்களையுமடைகிறான்.

4. இவருக்கு 'பாமநீ:' என்றும் பெயர்; எல்லா லோகங்களிலேயும் விளங்குகிறார், (சூரிய சந்திராதி ஜ்யோதிஸ்வரூபமாக விளங்குகிறார், அதாவது, அவர்களை பிரகாசிக்கும்படி செய்கிறார்). இப்படியறிகிறவன் எல்லா லோகத்திலும் விளங்குவான்.

5. (இப்படி அறிந்த வித்வானுக்கு கதிசொல்லப்படுகிறது).

இப்படிப்பட்ட வித்வான், அவன் இறந்தபிறகு அவனுடைய பிரேதத்திற்கு கர்மங்கள் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும்

சரி, (முதலில்) அர்ச்சிஸை (காந்தியை) யடைகிறான்; பிறகு பகல் அபிமான தேவதை, சுக்லபக்ஷ தேவதை, உத்தராயண தேவதை, வருஷ தேவதை, ஆதித்ய தேவதை, சந்திர தேவதை, மின்னல் தேவதை, இப்படி வரிசைக்கிரமமாக யடைகிறான்; அமானவனாக (மனுஷ்யனல்லாதவனாக, தேவனாக) ஆகிவிடுகிறான்.

6. இந்த புருஷன் இவைகளையும் (மேல்சொன்னவைகளையும்) கடையில் பிரமத்தையும் அடையும்படி செய்கிறார். இது தான் தேவமார்க்கம்; இந்த மார்க்கத்தின் வழியாக பிரமத்தை யடைந்து மறுபடியும் திரும்பமாட்டார்கள் (புனர் ஜனன மறண மில்லை).

கண்டம் 16.

1. இந்த வாயு யஞ்ஞத்திற்கு ஸமானமாயிருக்கிறது; அந்த வாயு சலித்துக்கொண்டு எல்லாவற்றையும் பரிசுத்தம் செய்கிறது; ஆதலால் அதற்கு யஞ்ஞம் என்று சொல்லப்பட்டது. அதற்கு இரண்டு மார்க்கங்கள்; வாக் ஒன்று, மனஸ் ஒன்று, ஆக இரண்டு.

2–3. அவைகளுக்குள் வாக்கை மனஸால் பிர்மா என்ற ரித்விக் ஸம்ஸ்காரம் செய்கிறான். மனஸை வாக்கால் ஹோதா, அத்வர்யு, உத்காதா இவர்கள் ஸம்ஸ்காரம் செய்கிறார்கள். பிராத ரனுவாக ஆரம்பத்திற்கு பிறகு பரிதானீய கிரியைக்குமுன், பிர்மா மௌனமாக விராமல் பேசிவிட்டால், ஒருவழி ஸம்ஸ்கரிக்கப்படு கிறது; அப்பொழுது யஞ்ஞம் கெட்டுப்போகிறது; யஜமானனும் பாபியாகிவிடுகிறான் (ஒரு காலால் நடக்கிற புருஷனும், ஒற்றைச் சக்கிர வண்டியும் எப்படி கெட்டுப்போகுமோ அப்படிப்போல்).

4–5. மௌனமாயிருந்தால் இரண்டு வழிகளும் ஸம்ஸ்கரிக் கப்படுகிறது; அப்பொழுது யஞ்ஞம் பலத்தை யடைகிறது; யஜ மானனும் ச்ரேயஸ் உள்ளவனாகிறான்; இருகாலால் நடக்கிற புரு ஷனும், இருசக்கிர வண்டியும்போல செம்மைப்படுகிறது.

கண்டம் 17.

1. பிரஜாபதி லோகங்களைக்குறித்து அவைகளில் எது ஸாரங்கள் என்று கண்டுபிடிக்க உத்தேசித்து தபித்தார் (த்யானம் செய்தார்); பிருதிவியினிடத்திலிருந்து அக்னி ரஸமென்றும், அந்தரிக்ஷத்தினிடத்திலிருந்து வாயு ரஸமென்றும், ஸ்வர்க்கத்தினிடத்திலிருந்து ஆதித்யன் ரஸமென்றும் கண்டு பிடித்தார்.

2. கண்டு பிடிக்கப்பட்டவைகளுள் எது ரஸமென்று மறுபடியும் யோஜித்தார்; அக்னியிடமிருந்து ரிக்வேதத்தையும், வாயுவிடமிருந்து யஜுர் வேதத்தையும், ஆதித்யனிடமிருந்து ஸாம வேதத்தையும் கண்டுபிடித்தார்.

3. அவைகளுக்குள் ரஸங்களைப்பற்றி மறுபடியும் யோஜித்தார்; ரிக்கில் 'பூ:' என்ற வ்யாஹ்ருதியும், யஜுஸிலிருந்து 'புவ:' என்ற வ்யாஹ்ருதியும், ஸாமத்திலிருந்து 'ஸ்வ:' என்ற வ்யாஹ்ருதியும் ரஸங்களாக கண்டு பிடித்தார்.

4–6. யஜ்ஞத்தில் ரிக்கில் தோஷம் வந்தால் 'பூ:' என்று ஹோமம் செய்தால் ப்ராயச்சித்தம்; அப்படியே யஜுஸ் விஷயத்தில் 'புவ:' என்றதும், ஸாமவிஷயத்தில் 'ஸ்வ:' என்றதும் ப்ராயச்சித்தம்.

7–10. (யஜ்ஞத்தில் பிரம்மாவென்ற ரித்விக்கினுடைய லக்ஷணம் முதலானது சொல்லப்படுகிறது, அமுக்யமானதால் எழுதப்படவில்லை).

ஐந்தாம் ப்ரபாடகம்.

கண்டம் 1.

1. ஜ்யேஷ்டமாயும், ச்ரேஷ்டமாயும் இருக்கிறதை எவன் அறிகிருனே அவன் ஜ்யேஷ்டனுயும், ச்ரேஷ்டனுயும் இருப்பான். ப்ராணன் தான் ஜ்யேஷ்டமாயும் ச்ரேஷ்டமாயுமிருக்கிறது.

2. வஸிஷ்டமாயிருப்பதை (எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டு தான் முன்னிட்டு பிழைத்திருக்கிற தன்மையுள்ளதை) எவன் அறிகிருனே அவன் தன் கூட்டத்தாருக்குள் வஸிஷ்டனு யிருப்பான். வாக்குத்தான் அப்படிப்பட்டதாயிருக்கிறது.

3. ப்ரதிஷ்டை யுள்ளதை (நிலைத்திருக்குகை யுள்ளதை) எவன் அறிகிருனே அவன் இஹபரலோகங்களில் ப்ரதிஷ்டையுள் ளவனுயிருப்பான். சக்ஷுஸ் தான் ப்ரதிஷ்டையாக விருக்கிறது.

4. ஸம்பத்துள்ளதை (ச்ரோத்ரத்தால் வேத ச்ரவணம், பிறகு கர்மானுஷ்டானம், பிறகு பலன் அதாவது ஸம்பத்து) எவன் அறிகிருனே அவன் ஸம்பத்துள்ளவனுக விருப்பான். தேவர்களும், மனுஷ்யர்களும் அவனுக்கு காமங்களை யடைவிப் பார்கள். ச்ரோத்ரம்தான் ஸம்பத்து.

5. எவன் ஆயதனத்தை (இருப்பிடத்தை) அறிகிருனே அவன் தன்னைச் சார்ந்தவர்களுக்குள் இருப்பிடமாக (ஆச்ரயஸ் தானமாக) விருப்பான். மனஸ்தான் ஆயதனம்.

6. இந்த (ஐந்து) பிராணங்களும் (அதாவது, பிராணன் சக்ஷுஸ், ச்ரோத்ரம், மனஸ்) ஒன்றற்கொன்று நான்தான் பெரிது நான் பெரிது என்று சொல்லிக்கொண்டு, பிரஜாபதியிடம்போய் எங்களுக்குள் எது பெரிது என்று கேட்டன. எது இந்த சரீ ரத்தைவிட்டு வெளிப்பட்டால் சரீரம் உபயோகமில்லாமல் போகு மோ, அதுதான் பெரிது என்று அவர் பதில் சொன்னுர்.

7. வாக் வெளிப்புறப்பட்டு, ஒரு வருஷகாலம் இருந்து, மறுபடியும் திரும்பிவந்து, என்னையன்றி எப்படி பிழைத்திருந்தீர்கள் என்று மற்றவைகளை கேட்டது; ஊமையன் எவ்விதம் பேசாமல், பிராணனை வைத்துக்கொண்டும், காதால் கேட்டுக்கொண்டும், கண்ணால் பார்த்துக்கொண்டும், மனஸால் நினைத்துக்கொண்டும் இருப்பானோ அவ்விதம் இருந்தோம் என்று சொல்லியன. பிறகு வாக்கு உள்ளே புகுந்தது.

8. பிறகு சக்ஷுஸ் வெளிப்பட்டது; (இதற்கு தக்கபடி முன்போல் கேட்டு புகுந்தது).

9. பிறகு ச்ரோத்ரம் வெளிப்பட்டது; (இதற்கு தக்கபடி முன்போல் கேட்டு புகுந்தது).

10. பிறகு மனஸ் வெளிப்பட்டது; (இதற்கு தக்கபடி முன்போல் கேட்டு புகுந்தது).

11. பிறகு பிராணன் வெளிக்கிளம்ப இச்சித்து, குதிரை முளைகளைப் பிடுங்கிக்கொண்டு புறப்படுவதுபோல், மற்ற பிராணங்களை கிளப்பிக்கொண்டு புறப்படும்பொழுது, 'இரு,' 'எங்களுக்குள் நீதான் ச்ரேஷ்டன்,' 'இந்த சரீரத்தைவிட்டு போகாதே' என்று பிராணனைப் பார்த்து மற்றவை சொல்லியன.

12–13. 'நான் வஸிஷ்டன், அந்த வஸிஷ்டன் நீதான்'. என்று வாக்கும், மற்றவை அதற்கு தக்கவாறு சொல்லியன.

14. வாக்கும், நேத்ரமும், ச்ரோத்திரமும், மனஸும் பிராணனாகமாட்டா; பிராணன் தான் எல்லாமாக விருக்கிறது.

கண்டம் 2.

1. எனக்கு அன்னம் எதுவென்று பிராணன் கேட்டது; எல்லாப் பிராணிகளும் எந்தெந்த அன்னத்தை புசிக்கின்றனவோ அந்தந்த அன்னமே உனக்கென்று மற்றவை சொல்லியன; இதுதான் பிராணனுக்கு அன்னம்; 'அந' என்று பிராணனுக்கு பெயர்; இப்படி யறிந்தவனுக்கு அநன்னம் (போஜனம் இல்லாமை) இருக்கமாட்டாது.

2. எனக்கு வஸ்திரம் எதுவென்று பிராணன் கேட்டது; ஜலங்கள் வஸ்திரம் என்று மைற்றவை சொல்லியன; பிராமணர்கள் போஜனத்திற்கு முந்தியும், பிந்தியும் ஆசமன ஜலத்தால் அன்னத்தை மூடுகிறார்கள்.

3. ஸத்யகாமர் என்ற ஜாபாலர் கோச்ருதிக்கு சொன்னதாவது, 'இந்த வித்தையை காய்ந்துபோன கட்டைக்குச் சொன்னாலும் அது துளிர்க்கும்' என்று.

4–9. (மகத்வத்தை யடைவதற்கு மந்தம் என்ற யாகம் விவரமாக சொல்லப்படுகிறது; பிரமஞானத்திற்கு முக்கியமல்ல).

கண்டம் 3.

(வைராக்கிய மடையும்பொருட்டு பிராணிகளின் ஸம்ஸார கதி ஒரு கதை ரூபமாக சொல்லப்படுகிறது).

1. ச்வேதகேது வென்பவன் பஞ்சாள தேசத்தாருடைய கூட்டத்தை (ஸபையை) போய்ச்சேர்ந்தான். அந்த ஸபையிலுள்ள ப்ரவாஹணர் என்பவர் 'ஹே! குமாரா! உன் பிதாவால் உபதேசிக்கப்பட்டிருக்கிறாயா' என்று கேட்டார்; 'ஸ்வாமி! ஆம்' என்று ச்வேதகேது பதில் சொன்னான்.

2. ப்ரவாஹணர்—நீ அப்படி உபதேசிக்கப்பட்டிருந்தால் (i) பிரஜைகள் இவ்வுலகத்தில் நின்றும் எவ்விடத்திற்குப்போய் சேருகிறார்கள் என்பது தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

ப்ரவாஹணர்—(ii) அவர்கள் எவ்விதமாக மறுபடியும் திரும்ப வருகிறார்கள் என்பது தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

ப்ரவாஹணர்—(iii) ஞானமுள்ள கர்மிகளுக்கு தேவயாந மார்க்கம், கேவல கர்மிகளுக்கு பித்ரியாந மார்க்கம் என்று இரண்டு ஏற்பட்டிருக்கின்றனவே; இந்த இரண்டு மார்க்கங்களிலும் கூடச்

சேர்ந்து போகிறவர்களுக்கு எவ்விடத்தில் வியோகஸ்தானம் (பிரிபடவேண்டிய இடம்) என்பது தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

3. ப்ரவாஹணர்—(iv) இந்த பித்ருஸம்பந்தமுள்ள லோகம் எந்த பிரகாரத்தால் நிறப்பிவிக்கப்படவில்லை என்பது தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

ப்ரவாஹணர்—(v) ஐந்தாவது ஆஹுதியில் அப்புக்கள் (ரஸவஸ்துக்கள்) எப்படி புருஷவாச்யங்களாக (புருஷன் என்று கூப்பிடப் படுகின்றனவாக) ஆகின்றன என்பது தெரியுமா?

ச்வேதகேது—தெரியாது.

4. ப்ரவாஹணர்—அப்படியிருக்க, இவைகளை யெல்லாம் தெரியாமலிருக்க, உபதேசிக்கப்பட்டிருக்கிறேன் என்று எப்படிச் சொன்னாய்?

ச்வேதகேது இவ்விதம் கேட்கப்பட்டவனாக, ஆயாஸத்தை யடைந்து, பிதாவிடம் சென்று எனக்கு உபதேசிக்காமலிருக்கும் பொழுது எப்படி உபதேசித்ததாக சொன்னீர் என்று கேட்டான்.

5. மறுபடியும் சொன்னதாவது—ப்ரவாஹணர் என்னை ஐந்து கேள்விகள் கேட்டார். ஒன்றுக்காவது பதில் சொல்ல எனக்கு முடியவில்லை. பிதா சொல்லுகிறார்—இந்த கேள்விகளை இப்பொழுதுதான் நான் கேள்விப்பட்டேன்; இதற்குமுன் தெரியாது; அவைகளுக்கு பதில் சொல்லவும் எனக்குத் தெரியாது.

6. இப்படிச் சொல்லிவிட்டு மேற்படி பிதா கௌதமர் ராஜாவாகிய ப்ரவாஹணரிடம் சென்றார்; மனுஷ்ய ஸம்பந்தமான வித்தம் வேண்டியதைக் கேட்டுக்கொள்ளும்படி ப்ரவாஹணர் சொன்னார். அவையெல்லாம் இருக்கட்டும், என் புத்திரனை கேட்ட ஐந்து கேள்விகளுக்கு பதில் எனக்கு உபதேசிக்கவேண்டுமென்று கௌதமர் சொன்னார்.

7. வெகுநாள் காத்திருந்தால் உபதேசிக்கப்படும் என்றும், இதற்குமுன் இந்த வித்யை பிராமணர்களுக்கு உபதேசிக்கப்பட

வில்லை, க்ஷத்ரியர்களுக்குள் பரம்பரையாக உபதேசிக்கப்பட்டு வந்ததென்றும், அதை உனக்கு சொல்லுகிறேன், கேள்! என்றும் ப்ரவாஹணர் சொன்னார்.

கண்டம் 4.

1–2. (ஐந்தாவது கேள்விக்கு பதில்) இந்த லோகம் (ஸ்வர்க்க லோகம்) அக்னி; அதற்கு ஆதித்யன் ஸமித்; கிரணங்கள் பொகை; பகல் பிரகாசம்; சந்திரன் தணல்; நக்ஷத்ரங்கள் பொறிகள்; இந்த அக்னியில் தேவர்கள் (பிராணாதி இந்திரியாபிமானி தேவர்கள்) ச்ரத்தையை (ச்ரத்தாவாகிற ஜலத்தை) ஹோமம் செய்கிறார்கள். அதிலே நின்றும் ஸோமராஜா (சந்திரமண்டலம்) உண்டாகிறார்.

கண்டம் 5.

1–2. பர்ஜன்யன் (மழை தேவதை, இந்திரன்) அக்னி; அதற்கு வாயு ஸமித்; மேகம் பொகை; மின்னல் பிரகாசம்; இடி தணல்; சப்தங்கள் பொறிகள்; இந்த அக்னியில் தேவர்கள் ஸோமனை ஹோமம் செய்கிறார்கள்; அதிலே நின்றும் மழை உண்டாகிறது.

கண்டம் 6.

1–2. பிருதிவி அக்னி; அதற்கு ஸம்வத்ஸரம் ஸமித்; ஆகாசம் பொகை; ராத்திரி பிரகாசம்; திக்குகள் தணல்; மூலை திக்குகள் பொறிகள்; இந்த அக்னியில் தேவர்கள் மழையை ஹோமம் செய்கிறார்கள்; அதிலே நின்றும் அன்னம் உண்டாகிறது.

கண்டம் 7.

1–2. புருஷன் அக்னி; அதற்கு வாக்கு ஸமித்; பிராணன் பொகை; நாக்கு பிரகாசம்; நேத்ரம் தணல்; ச்ரோத்ரம் பொறிகள்; இந்த அக்னியில் தேவர்கள் அன்னத்தை ஹோமம் செய்கிறார்கள்; அதிலே நின்றும் ரேதஸ் உண்டாகிறது.

கண்டம் 8.

1–2. ஸ்திரீ அக்னி; உபஸ்தம் ஸமித்; ரதிக்கு ஸ்திரியை கூப்பிடுதல் புகை; யோனி பிரகாசம்; உள்ளே செய்கிறது (ஸம்யோகம்) தணல்; உண்டாகும் ஆனந்தம் பொறிகள்; இந்த அக்னியில் தேவர்கள் ரேதஸை ஹோமம் செய்கிறார்கள்; கர்ப்பம் உண்டாகிறது.

கண்டம் 9.

1. இப்படி ஐந்தாவது அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட ஜலம் புருஷனாக ஆகிறது; இந்த கர்ப்பம், கர்ப்பபையில் சுத்தப் பட்டு, அதிக கஷ்டப்பட்டு, ஒன்பது அல்லது பத்து மாதங்கள் வயிற்றுக்குள் இருந்து பிறகு வெளிப்பட்டு உண்டாகிறது.

2. அப்படி பிறந்தவன் ஆயுஸுள்ளவரையில் இருக்கிறான். இறந்துபோன பிறகு அவன் ப்ரேதத்தை எந்த அக்னியிலிருந்து ஆதியில் உண்டானானோ அந்த அக்னியில் போட்டு எரிக்கும் பொருட்டு கொண்டுபோகிறார்கள்.

கண்டம் 10.

1–2. (முதல் கேள்விக்கு பதில் சொல்லப் படுகிறது).

இந்த பஞ்சாக்னி வித்தையை அறிந்த கிரஹஸ்தர்களும், ஆரண்யவாஸிகளான வானப்ரஸ்தர்களும், ஸந்யாஸிகளும், நைஷ்டிக பிரம்மசாரிகளும் சிரத்தையையும் தபஸையும் உபாஸிக்கிறார்கள் (அனுஷ்டிக்கிறார்கள்). அவர்கள் (இறந்தபிறகு) அர்ச்சிஸை (காந்தியை, ப்ரகாசரூபமான தேவதையை) அடைகிறார்கள்; அதிலே நின்றும் பகலையும், அதினின்றும் வரிசையாக சுக்லபக்ஷம், உத்தராயணம், ஸம்வத்ஸரம், ஆதித்யன், சந்திரன், மின்னல் அபிமானி தேவதைகளை அடைகிறார்கள்; அப்பொழுது அமானவன் (தேவர்கள்) ஆகிறார்கள்; பிரமத்தை (ஸத்ய லோகத்தை) யடைகிறார்கள்; இதுதான் தேவயானம் என்கிற வழி.

3–4. கேவலம் கர்மடர்களாக விருக்கிற கிரஹஸ்தர்கள் இஷ்டா (யக்ஞம்), பூர்த்தம் (குளம் வெட்டுகிற முதலிய தர்மம்)

தானம் முதலிய தர்மங்களை அனுஷ்டிக்கிறார்கள். அவர்கள் தூமாபிமானி தேவதையை யடைகிறார்கள்; அதினின்றும் வரிசையாக ராத்திரி, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம், பிதிருலோகம், ஆகாசம், சந்திரன், இப்படி அந்தந்த அபிமானி தேவதைகளை அடைகிறார்கள். அந்த ஸோமராஜா தேவர்களுக்கு அன்னம்; அதை பக்ஷிக்கிறார்கள் (அதாவது, அதை தங்கள் அதிகாரத்திற்குள் வைத்துக்கொள்கிறார்கள்).

5–6. (இரண்டாவது கேள்விக்கு பதில்).

அந்த சந்திரனிடத்தில் கர்மபலன் நசிக்கும்வரையில் இருந்துவிட்டு, பிறகு, சொல்லப்போகிற வழியாக மறுபடியும் திரும்புகிறார்கள். எப்படியென்றால், முதலில் ஆகாசமாகிறது; பிறகு, வரிசையாக, வாயு, தூமம், அப்ரம் (மழை பொழிய தயாராக விருத மேகம்), மேகம் (மழைக்குத் தயாராக விருக்கிறது), மழை, விரீஹி முதலான அன்னம், இப்படி ஆகிறது. அந்த அன்னத்தை உண்ணுகிறவனுக்கு ரேதஸ் உண்டாகிறது. அந்த ரேதஸ் ஸ்திரீயிடத்தில் ருதுகாலத்தில் விடப்படுகிறது. அப்பொழுது மறுபடியும் உண்டாகிறது.

[மூன்றாவது கேள்விக்கு பதில்—மூன்றாவது, நான்காவது மந்திரங்கள்படி வ்யாக்யானத்தில் சொல்லப்படுகிறது; அதாவது, தேவயானம், பிதிருயானம் இவ்வழிகளில் ஏககாலத்தில் புறப்பட்டுப் போகிறவர்கள் அயநங்கள் வரைக்கும் கூடச்சேர்ந்து போகிறார்கள்; அப்பொழுது பிரிந்து, ஞானி உத்திராயணத்திலிருந்து ஸம்வத்ஸரத்திற்கு போகிறான்; கர்மி தக்ஷிணாயணத்திலிருந்து பிதிரு லோகத்திற்குப் போகிறான்].

7–8. புண்ய சாலிகள் சீக்கிரத்தில் ரமணீயமாயிருக்கிற (ச்லாக்கியமாயிருக்கிற) யோநியை, அதாவது, பிராமண, க்ஷத்திரிய, வைச்ய யோநியை யடைகிறார்கள். பாபிகள் கெட்ட யோநிகளை, அதாவது, நாய், பன்றி, சண்டாளன் இவர்களுடைய யோநியை அடைகிறார்கள்; இவர்களுக்கு மேற்சொன்ன இரண்டு மார்க்கங்களும் இல்லை; அடிக்கடி சீக்கிற இறப்பு பிறப்பு தன்மை என்

கிற மூன்றாவது ஸ்தானத்தை (மார்க்கத்தை) யுடையவர்கள்; அடிக்கடி கெட்ட ஜன்மத்தை யடைகிறார்கள்.

[நான்காவது கேள்விக்கு பதில்; மேற்படி பாபிகளுக்கு பித்ருலோகங்கூட இல்லாமலிருப்பதால்] பித்ருலோகம் நிறப்பிவிக்கப்படவில்லை. (அதாவது, பித்ருலோகத்திற்கு எல்லோரும் வருகிறதில்லை; சில பேர்கள்மட்டுந்தான் வருகிறார்கள்).

ஆதலால், இந்த மூன்றாவது வழிக்கு கூசப்படவேண்டியது (பாபத்திற்குப் பயப்படவேண்டியது). அதைக்குறித்து (அடியில்கண்ட) ச்லோகம் இருக்கிறது.

9. பிராமண ஸொத்தை திருடுகிறவன் (i), ஸுராபானம் செய்கிறவன் (ii), குருதல்பகமனம் செய்கிறவன் (iii), பிரமஹத்தி செய்கிறவன் (iv), மேற்படியார்களுடன் சேருகிறவன் (v), இவர்கள் விழுகிறார்கள். (ஜனனமரணத்தில் விழுகிறார்கள்; அதாவது, பாபிகளாக இரண்டு வழிகளுமற்று கெட்ட ஜன்மத்தை அடிக்கடி அடைந்து கஷ்டப்படுகிறார்கள்).

10. இப்படி பஞ்சாக்னி வித்தையை அறிந்தவர்களுக்கு பாபமில்லை; புண்ய லோகத்தை யடைகிறார்கள்.

கண்டம் 11.

1. ப்ராசீன சாலர் என்ற ஔபமன்யவர் (ஒன்று), ஸத்ய யஜ்ஞர் என்ற பௌலுஷி (இரண்டு), இந்திரத்யும்னர் என்ற பால்லவேயர் (மூன்று), ஜனர் என்ற சார்க்கராக்ஷ்யர் (நான்கு), புடிலர் என்ற ஆச்வதராச்வி (ஐந்து), கிரஹஸ்தர்களாயும், மஹாச்ரோத்ரியர்களாயுமிருக்கிற இவ்வைந்துபேர்களும், ஒன்றுகூடி, நம்முடைய ஆத்மா எவர்? பிரமம் என்றது எது? என்ற ஸங்கதியைப்பற்றி வ்யவஹரித்துக்கொண்டிருந்தார்கள்.

2. உத்தாலகர் என்ற ஆருணியானவர் இந்த வைச்வாநர ஆத்மாவை அறிந்திருக்கிறார். அவரிடம்போய் கேட்போம் என்று எல்லோரும் ஓர் முடிவு செய்துகொண்டு அவரிடம் சென்றார்கள்.

3. அவர் இவர்கள் வரும் ஸங்கதியை அறிந்துகொண்டு நமக்கு தெரிந்ததை யெல்லாம் இவர்களுக்கு சொல்லக்கூடாது வேறு ஒருவரை கைகாட்டிவிடுவோம் என்று நிச்சயத்துக்கொண்டார்.

4. வந்த இவர்களைப் பார்த்து அவர் சொன்னதாவது—அச்வபதி என்ற கைகேயர் ஆத்மாவை அறிந்தவராக விருக்கிறார்; அவரிடம் எல்லோரும் போய் கேட்போம் என்று: எல்லோரும் அவரிடம் சென்றார்கள்.

5. அவர் இவர்களுக்கு தக்கவாறு மரியாதை செய்தார்; மறுநாள் எழுந்து (வந்தவர்களுக்கு அநேக தனத்தை கொடுக்கப் போனார்; அவர்கள் அங்கீகரிக்கவில்லை; ஏதோ நம்மிடத்தில் குற்றம் இருக்கிறது, அதனால்தான் பெற நிராகரிக்கிறார்கள் என்று நினைத்து, மனஸ்தாபத்துடன்) இவர் சொன்னதாவது—என் ராஜ்யத்தில் திருடன் இல்லை; கொடாதவன் இல்லை; ஸுராபானம் செய்கிற பிராமணன் இல்லை; யாகம் செய்யாதவன் இல்லை; அவித்வான் இல்லை; வ்யபிசாரம் செய்கிறவன் இல்லை; செய்கிறவளும் இல்லை; நான் யாகம் செய்யப்போகிறேன்; ருத்விக்களின் பொருட்டும் தங்களின் பொருட்டும் மிகுந்த தனம் கொடுக்கிறேன்; இருங்கள்; இருந்து யஞ்ஞத்தைப் பாருங்கள், என்று.

6. இதற்கு அவர்கள் சொன்னதாவது—(எங்களுக்கு தனம் வேண்டாம்) எந்த பிரயோஜனத்திற்காக புருஷன் ஸஞ்சரிக்கிறானோ, அதை, அந்த வைச்வாநர ஆத்மாவை நீர் அறிந்திருக்கிறீர்; அதை எங்களுக்கு உபதேசம் செய்யும், என்று.

7. 'காலமே சொல்லுகிறேன்' என்று சொல்லி, மறுநாள் காலையில் அவர்களுக்கு சொல்லத் துடங்கினார்.

கண்டம் 12.

1–2. ஹே! ஔபமன்யவ! நீ எதை வைச்வாநர ஆத்மாவாக உபாஸிக்கிறாய்?

ஔபமன்யவர்— ஸ்வர்கத்தை.

அச்வபதி—இது தேஜஸ் உள்ளது; வைச்வா நரன்; நீ இதை ஆத்மாவாக உபாஸிக்கிறபடியால் உன்குலத்தில் யாகக்கிரியை ஸபலமாக காணப்படுகிறது; அன்னத்தை புஜிக்கிறாய்; பிரியவஸ்துவைப் பார்க்கிறாய்; அப்படியே எவனும் செய்கிறான்; எவன் இப்படி வைச்வாநர ஆத்மாவை உபாஸிக்கிறானோ அவனுடைய குலத்தில் பிரமவர்ச்சஸ் உண்டாகும்; இதுதான் (ஸ்வர்க்கலோகந்தான்) ஆத்மாவினுடைய தலை; என்னிடம் வந்து இப்படி அறியாவிட்டால் உன் தலை கீழேவிழுந்துபோய் இருக்கும்.

கண்டம் 13.

1–2. ஸத்ய யக்ஞனைக் கேட்டார்; ஆதித்யனை வைச்வாநரனாக உபாஸிக்கிறதாக சொன்னார்; (மற்றது இதற்கு தக்கபடி மேற்கண்டவாறு); பலன், விச்வரூபம்; ஆதித்யன் வைசவாநரனுடைய சக்ஷுஸ்.

கண்டம் 14.

1–2. சத்திரத்யும்னனைக் கேட்டார்; அவர் வாயுவை உபாஸிப்பதாக சொன்னார்; (மற்றது முன்போல் இதற்கு தக்கவாறு); பலன்—நாநாவிதமான வஸ்திராதி ஸொத்துக்கள்; வாயு வைச்வாநரனுடைய பிராணன்.

கண்டம் 15.

1–2. ஜனரைக் கேட்டார்; ஆகாசத்தை உபாஸிப்பதாகச் சொன்னார் (மற்றது முன்போல் இதற்கு தக்கபடி); பலன்—பிரஜையும், தனமும் விசேஷமாக விருக்கும்; ஆகாசம் வைச்வாநரனுடைய நடு தேகம்.

கண்டம் 16.

1–2. புடிலரைக் கேட்டார்; ஜலத்தை உபாஸிப்பதாகச் சொன்னார்; (மற்றது இதற்கு தக்கபடி முன்போல்); பலன்—ரயி (ஐச்வர்யம்); ஜலம் வைச்வா நரனுடைய மூத்திரப்பை.

கண்டம் 17.

1–2. உத்தாலகரைக் கேட்டார்; பிருதிவியை உபாஸிப்பதாகச் சொன்னார்; (மற்றது முன்போல் இதற்கு தக்கவாறு); பலன்—பிரஜையாலும், பசுக்களாலும் பிரதிஷ்டை (மேன்மை); பிருதிவி வைச்வா நரனுடைய பாதங்கள்.

கண்டம் 18.

1. எல்லோரையும் பார்த்து சொன்னார்—பிரதக்போல் மாத்திரம் தோணப்படுகிறதும், ஒரே வஸ்துவாய் இருக்கிறதுமான ஆத்மாவை வைச்வாநரன் என்று அறிந்து அன்னத்தை புஜிக்கிறீர்கள்; எவன் இப்படிப்பட்ட ஆத்மாவை, ப்ராதேச மாத்திரன் என்றும் (பலவிதமாக பகுத்து அறியப்படுகிறவனாக மாத்திரம்), அபிவிமானன் என்றும் (நான் என்று அறியப்பட்டவனாயும்), அறிந்து உபாஸிக்கிறானோ அவன் எல்லா லோகங்களிலும், எல்லா பூதங்களிலும், எல்லா ஆத்மாக்களிலும் (இந்திரயங்களிலும்) இருந்து அன்னத்தைப் புஜிக்கிறான்.

2. இப்படிப்பட்ட ஆத்மாவிற்கு தலை ஸுதேஜஸ்; நேத்ரம் விச்வரூபம்; பிராணன் பிரதக்வர்த்தாத்மா; நடுதேகம் பகுளம்; வஸ்தி ரயி; பிருதிவி பாதங்கள்; (இந்த வைச்வாநர வித்தையை அறிந்தவர்கள் புஜிக்கும் பொழுது, இதை யாகமாக பாவிக்க, வர்ணிக்கப்படுகிறது). மார்—யாகவேதி; ரோமங்கள்—தர்ப்பைகள்; ஹிருதயம்—கார்ஹபத்யாக்னி; மனஸ்—தெக்ஷிணாக்னி; வாய்—ஆஹவனீயாக்னி.

கண்டம் 19–24.

(இவைகளில் பஞ்சப்ராண ஆஹுதியைப் பற்றியும், வைச்வாநர வித்தையை அறிந்தவனுக்கு பலனும் சொல்லப்பட்டிருக்கிறது; அமுக்யம்).

ஆறாம் ப்ரபாடகம்.

கண்டம் 1.

1. ச்வேதகேது வென்ற ஆருணேயர் ஒருவர் இருந்தார். அவருடைய பிதா 'ஒரு தக்க குருவையடைந்து பிரம சர்யத்தை அநுஷ்டி; நம்முடைய குலத்தில் ஒருவரும் அப்படி அநுஷ்டியாமல் கேவலம் பிரமபந்துவாக மட்டும் (விருத்தியால் பிராமணனன்று, கேவலம் பெயருக்கு மாத்திரம் பிராமணன் ஆக) இருக்கவில்லை' யென்று அவருக்குச் சொன்னார்.

2. அப்பொழுது பன்னிரண்டு வயதுள்ள ச்வேதகேது ஒரு குருவையடைந்து 24 வயது வரையில் எல்லா வேதங்களையும் அத்யயநம் செய்து முடித்தார். பிறகு, ஆழ்ந்த மனமுள்ளவனாயும், அத்யயநம் செய்திருக்கிறோம் என்ற பெருமையுள்ளவனாயும் கர்வமுள்ளவனாயும் ஆகி தன் வீட்டிற்கு வந்தான்.

3. அவனைப் பார்த்து பிதா கேட்டதாவது—என்ன! அப்பா, இம்மாதிரியுள்ளவனாக இருக்கிறாயே! எந்த உபதேசத்தால் கேட்கப்படாதது கேட்கப்படுகிறதோ, எண்ணப்படாதது எண்ணப்படுகிறதோ (தர்க்கிக்கப் படுகிறதோ), அறியப் படாதது அறியப்படுகிறதோ (நிச்சயிக்கப்படுகிறதோ), அந்த உபதேசத்தைச் செய்யும்படி குருவை கேட்டாயா? என்று.

4. ச்வேதகேது—அந்த உபதேசம் எப்படியிருக்கும்.

பிதா—எப்படியென்றால், சொல்லுகிறேன்; கேள்; ஒரு மண் கட்டியால் மண்மயமாயிருக்கிற (சட்டி பானை முதலான பண்டங்கள்) எல்லாம் அறியப்படுகிறதோ, பெயரால் மாத்திரம் வித்தியாசமாயிருக்கிறதோ, எல்லாம் மண்ணே என்கிறது ஸத்யமோ, அப்படியும்;

5. ஒரு தங்கக்கட்டியால் எப்படி தங்கமயமாயிருக்கிற எல்லாம் அறியப்படுகிறதோ, பெயரால் மட்டும் வித்தியாஸமாயிருக்கிறதோ, எல்லாம் தங்கமே என்றது ஸத்யமோ, அப்படியும்;

6. ஒரு இரும்பு முள்வாங்கியால் இரும்பு மயமாயிருக்கிற தெல்லாம் அறியப்படுகிறதோ, பெயரால் மட்டும் வித்தியாஸப்படு கிறதோ, எல்லாம் இரும்பு என்றது ஸத்யமோ, அப்படியும் அறி விக்கிற உபதேசம்தான்.

7. ச்வேதகேது—இது நான் அடைந்திருந்த குருக்களுக்கு தெரியாதுபோல இருக்கிறது; தெரிந்திருந்தால் எனக்கு சொல்லி யிருக்க மாட்டார்களா? ஸ்வாமி! எனக்கு தாங்கள் சொல்லுங்கள்.

பிதா—அப்படியே சொல்லுகிறேன்; கேளப்பா!.

கண்டம் 2.

1–2. நாமரூப விசேஷங்களோடுகூட காணப்படுகிற இந்த ஜகத், உத்பத்திக்குமுன், ஸத்தாகவே (ஸூக்ஷ்மமாயும், நிர்வி சேஷமாயும், ஸர்வகதமாயும், நிரஞ்சனமாயும், நிரவயவமாயும், விஞ்ஞானமாயும், 'இருக்கிறது' என்று சொல்லப்படுகிறதாக மாத் திரம் இருக்கிற வஸ்துவாகவே), ஏகமாயும், அத்விதீயமாயும் இருந்தது. இது (இந்த ஜகத்) அஸத்தாகவே (இல்லாமையாக வே), ஏகமாயும், அத்விதீயமாயு மிருந்தது; அந்த அஸத்திலே நின்றும் ஸத் உண்டாயிற்று, என்று சிலர் சொல்லுகிறார்கள்; (அது சரியன்று) அது எப்படி கூடும்?; அதற்கு என்ன பிரமா ணம்?; அஸத்திலே நின்றும் ஸத் உண்டாகுமா?; ஆகாது. ஆன தால் இந்தஜகத் ஸத்தாகவேதான் முன்னே இருந்தது; ஏகமாயும், அத்விதீயமாயுமிருந்தது.

3. அந்த ஸத் பகுப்பிரகாரமாக உண்டாகுவோம் என்று பார்த்தது (நினைத்தது). தேஜஸை சிருஷ்டித்தது. அப்படி தே ஜஸ்ஸாகப்போன ஸத் பகுப்பிரகாரமாக ஆவோம் என்று மறுபடி யும் பார்த்தது; ஜலத்தை சிருஷ்டித்தது. ஆதலால்தான் ஒரு புருஷன் தபித்தால் வேர்வை விடுகிறான்; அதனால் அக்னியி லிருந்து ஜலம் உண்டாகிறதென்று சொல்லப்படுகிறது.

4. அப்படி ஜலமாய்ப்போன ஸத் பகுப்பிரகாரமாக ஆ வோம் என்று மறுபடியும் பார்த்தது; அன்னத்தை (பிரதிவியை)

ஸிருஷ்டித்தது. ஆதலால்தான் எங்கு அதிகமழை பொழிகிறதோ அங்கு அன்னம் மிகுதியாய் உண்டாகிறது. அதனால் ஜலத்திலிருந்து அன்னம் உண்டாகிறதென்று சொல்லப்படுகிறது.

கண்டம் 3.

1. இதோ காணப்படுகிற (பசு, பக்ஷி, ஸ்தாவராதிகள்) பூதங்களுக்கு எல்லாம் மூன்று விதைகள் (காரணங்கள்) உள. **(i)** முட்டையினின்றும் உண்டான பக்ஷிஜாதி; **(ii)** கெர்ப்பப்பையிலிருந்து உண்டான மனுஷ்ய பசுவாதி ஜாதி; **(iii)** பூமியைப் பிளந்துகொண்டு கிளம்புகிற மலை, மரம் முதலான ஸ்தாவராதிகள்.

2–4. இப்படிப்பட்ட (தேஜஸ், ஜலம், பூமி இவைகளுக்கு காரணமாயும், ஸத் என்று பெயருள்ளதுமான) தேவதை, இப்பொழுது நாம் மேற்படி மூன்று தேவதைகளுக்குள் இந்த ஜீவாத்மாவை (ஸ்வபுத்திஸ்தமாயும், பூர்வ ஸிருஷ்டி அநுபூதமாயும், தன் ஆபாஸமாயும், கண்ணாடியில் புருஷன் போலும், ஜலத்தில் சூரியன் போலும் தன் பிரதி பிம்பரூபியாயும், சாயாமாத்திர ரூபியாயும் இருக்கிற ஜீவன் என்று பெயருள்ள தன் அம்சத்தை) பிரவேசிக்கச்செய்து, பலவித நாமரூபங்களைச் செய்வோமென்றும், அந்த மூன்று தேவதைகளையும் ஒவ்வொன்றையும் மும்மூன்றாகச் செய்வோம் என்றும் மனப்படியும் நினைத்தது. பிறகு அப்படியே செய்தது. இந்த த்ரிவித்கரணத்தை எப்படி செய்தது என்பதை என்னிடமிருந்து அறிந்துகொள் என்று சிஷ்யனுக்கு குரு சொன்னார்.

(த்ரிவித்கரணம் என்றால், மேற்படி மூன்று பூதங்களில் ஒவ்வொன்றை முதலில் இரண்டு இரண்டு பாகங்களாக ஆக்கி, அதில் ஒரு பாகத்தை வைத்துக்கொண்டு, மற்றொரு பாகத்தை இரண்டாகப் பிரித்து, அவைகளில் ஒவ்வொன்றை மற்ற பூதங்களில் ஒவ்வொன்றிலும் கொடுத்து சேர்ப்பது).

கண்டம் 4.

1. த்ரிவித்கிருதமான அக்னியின் சிகப்பு ரூபம் எதுவுண்டோ அது அத்ரிவித்கிருதமான தேஜஸின் ரூபம்; வெளுப்பு ரூப

மானது ஜலத்தின் ரூபம்; கருப்பு ரூபமானது அன்னத்தின் ரூபம்; இப்படி யறிந்தபிறகு அக்னியின் அக்னித்வமானது போய்விடுகிறது. அக்னியென்றது வாய்ப்பேச்சு மாத்திரம்; பெயர் மாத்திரமான விகாரம்; மேற்படி மூன்று ரூபங்கள் மாத்திரம் ஸத்தியம்.

2–4. இவ்விதமே சூர்யன், சந்திரன், மின்னல் இவைகள் விஷயங்களில் சொல்லப்படவேண்டியது.

5. இப்பொழுது நமக்குள் ஒருவனுலாவது கேட்கப்படாததையும், நினைக்கப்படாததையும், அறியப்படாததையும் உதாஹரிக்கவேண்டாம் என்று முன்னிருந்த மஹாயோக்யாளாகவிருந்த பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இவைகளைக் கொண்டு (மேற்சொன்ன திருஷ்டாந்தங்களைக் கொண்டு) அறிந்தார்கள்.

6–7. எது சிகப்பு ரூபம்போல் தோன்றுகிறதோ அதை தேஜஸின் ரூபமென்றும், எது வெளுப்பு ரூபம்போல் தோன்றுகிறதோ அதை ஜலத்தின் ரூபமென்றும், எது கருப்புரூபம்போல் தோன்றுகிறதோ அதை அன்னத்தின் ரூபமென்றும், எது செவ்வையாக அறியப்படாமலிருக்கிறதோ அதை மேற்படி மூன்று ரூபங்களின் சேர்க்கை யென்றும் அறிந்தார்கள். எப்படி மேற்படி மூன்று தேவதைகளும் புருஷனை யடைந்து மும்மூன்றாக விருக்கின்றனவோ அதை என்னிடமிருந்து அறிந்துகொள் என்று குரு சொன்னார்.

கண்டம் 5.

1. உண்ணப்படுகிற அன்னம் ஜாடராக்னியால் பக்குவப்பட்டு மூன்றுவிதமாக ஆகிறது. அதன் ஸ்தூல அம்சம் மலமாகவும், மத்யம அம்சம் ரஸவத்தாக பரிணமித்து மாம்ஸமாகவும் (அதாவது, மாம்சத்துடன் சேர்ந்தும்), ஸூக்ஷ்ம அம்சம் (ஸத்தாக விருக்கிற அம்சம்) மேல் போய் இருதயத்தை யடைந்து, ஹிதமென்று பெயருள்ள நாடிகளுக்குள் பிரவேசித்து வாக் முதலிய காரணத்தை தொழில் செய்யும்படி செய்துகொண்டிருக்கிற மனஸ் ஆகிறது (அதாவது, மனதை பலப்படுத்துகிறது).

2. குடிக்கப்பட்ட ஜலம், ஜீர்ணமாகி, மூன்றுவிதமாக ஆகிறது; எப்படியென்றால், ஸ்தூல அம்சம் மூத்திரமாகவும், மத்யம அம்சம் ரக்தமாகவும் (ரக்தத்துடன் சேர்கிறது), ஸூக்ஷ்ம அம்சம் ப்ராணனாகவும் (ப்ராணனை பலப்படுத்தியும்) ஆகிறது.

3. புஜிக்கப்பட்ட தேஜஸ் (தைலம், நெய் முதலான தேஜஸ் ஸம்பந்தமுள்ள வஸ்துக்கள்) ஜீர்ணமாகி, மூன்றுவிதமாகிறது. எப்படியென்றால், ஸ்தூலாம்சம் இலும்பாகவும் (இலும்புடன் சேர்கிறது), மத்யமாம்சம் இலும்புக்குள்ளிருக்கிற மஜ்ஜையாகவும் (மஞ்சள் நிறமான ஸைவாபாகம்), ஸூக்ஷ்மாம்சம் வாக்காகவும் (வாக்கிற்கு பேசும்படியான ஸாமர்த்யத்தை யுண்டுபண்ணியும்) ஆகிறது.

4. இந்தப்படி மனஸ் அன்னமயமாயும், ப்ராணன் அப்மயமாயும், வாக் தேஜோமயமாயுமிருக்கிறது, ஹே! ஸோம்ய! என்று குரு சொல்ல, எனக்கு இன்னும் புரியவில்லை, செவ்வையாகச் சொல்லவேண்டுமென்று சிஷ்யன் கேட்க, குரு சொல்லுகிறார்.

கண்டம் 6.

1–4. கடையப்பட்ட தயிரிலிருந்து ஸூக்ஷ்மாம்சம் வெண்ணையாக உயரக்கிளம்பி எப்படி கெட்டியாகிறதோ, அப்படிப்போல் அன்னத்தின் ஸூக்ஷ்மாம்சம் உயரக்கிளம்பி மனஸாகவும், ஜலத்தின் மேற்படி அம்சம் பிராணனாகவும் தேஜஸின் மேற்படி அம்சம் வாக் ஆகவும் ஆகிறது.

5. (5-வது கண்டத்தின் நான்காம் மந்திரம்போல்).

கண்டம் 7.

1. ஒரு புருஷன் 16 கலைகள் உள்ளவன்; 15 நாள் சாப்பிடாமலிரு; உன் இச்சைப்படி ஜலத்தைக்குடி; ப்ராணன் ஜலமயமானதால் ஜலம் குடிக்கிறவனுடைய ப்ராணன் போகமாட்டாது.

2. அந்தப்படி அவன் (சிஷ்யனாயிருக்கிற புத்திரன்) 15 நாள் சாப்பிடவில்லை; குருவினிடம்வந்து 'நான் என்ன சொல்ல' என்று கேட்டான். ருக், யஜுஸ், ஸாமம் இவ்வேதங்களைச்

சொல் என்றார். அவைகள் என் மனதில் இப்பொழுது தோணப் படவில்லையென்று பதில் சொன்னான்.

3. குரு—எப்படி பெரிதாக மூட்டப்பட்ட நெருப்பிலிருந்து, மினுமினுப்பூச்சி மாத்திரம் காத்ரமுள்ளதாய் மிஞ்சியிருக்கிற ஒரு பொறி (மைற்ற நெருப்பு அணைந்துபோயிருக்க) பகு வஸ்துக்களை எறிக்கமுடியாதோ, அப்படி, உனக்குள்ள 16 கலைகளில் ஒரு கலை மாத்திரம் மிஞ்சியிருக்கிறதால் நான் வேதங்களைச்சொல்ல முடிய வில்லை; ஆதலால் சாப்பிடு.

4. பிறகு என்னிடமிருந்து அறிவாய். பிறகு சிஷ்யன் சாப்பிட்டு குருவினிடம் மறுபடியும் வந்தான். அப்பொழுது (வேதங்களில்) சில பாகத்தைக் கேட்டார். எல்லாவற்றையும் சரியாகச் சொன்னான். மறுபடியும் குரு சொல்லுகிறார்.

5. எப்படி மேற்கண்ட படியுள்ள நெருப்புப் பொறியை, த்ருணங்களைக்கொண்டு மூட்டி, ஜ்வாலை செய்தால், அப்பொழுது அதனால் பகுசை எறித்துப்போடுமோ, அப்படி.

6. உன்னிடம் மிஞ்சியிருந்த ஒரு கலையானது, நீ சாப்பிட்ட அன்னத்தால், மனஸ் பலத்தையடைந்து அதனால் வேதங்களைச் சொல்ல கூடிற்று. ஆதலால், மனஸ் அன்னமயம், ப்ராணன் ஜல மயம், வாக் தேஜோமயம். இந்தப்படி சிஷ்யன் அறிந்தான்.

கண்டம் 8.

1. உத்தாலகர் தன் புத்திரன் ச்வேதகேதுவைப் பார்த்து (அடியில் கண்டபடி) சொன்னார்; 'ஸுஷுப்தியை என்னிட மிருந்து அறிந்துகொள்; ஒரு புருஷன் தூங்குகிறபொழுது ஸத்துடன் ஸம்பன்னனாக கூடியிருக்கிறான்; தன்னைத்தானே சேருகிறான்; (அதாவது, பிரதிபிம்பியாயிருக்கிற ஜீவன், ஸகல வ்யவஹாரங்களைவிட்டு, சுத்த ஆத்மாவுடன் சேர்ந்துபோகிறான்). அதனால் தான் தூங்குகிறான் என்று சொல்லப்படுகிறது.'

2. எப்படி கயற்றால் கட்டப்பட்ட ஒரு பக்ஷியானது, திக்கு தோறும் கிளம்பிப்போய் விழுந்து, வேறு இருப்பிடம் அகப்படா

மல், மறுபடியும் கட்டுக்கயிறிடம் வந்து சேருகிறதோ, அப்படி அந்த மனஸ் (மனஸ்தமாயிருக்கிற ஆத்மா, ஜீவன்) திக்கு தோறும் விழுந்து (ஜாக்ரத ஸ்வப்ன அவஸ்தைகளில், சுக துக்காதி லக்ஷணமுள்ள கர்மங்களை யநுபவித்து, மிக சிரமப்பட்டு கடைசியில்) வேறு இடம் அகப்படாமல், (சுழுப்தி காலத்தில்) ப்ராணனையே (ப்ராணன் என்று பெயர்பெற்ற பரமாத்மாவையே, ஸத்தையே) வந்தடைகிறது. மனஸ் ப்ராணனால் (ஜீவன் ஸத்தினால்) கட்டுப்பட்டிருக்கிறதல்லவா.

3. (அன்னாதி காரிய காரண பரம்பரையினால் ஜகத்மூலம் காட்டப்படுகிறது)

குரு மறுபடியும் சொல்லுகிறார்; பசி, தாகம் இவைகளின் வரலாறைக் கேள். அப்பா!; ஒரு புருஷன் சாப்பிட இச்சிக்கிறான் என்ற பெயரானது முக்கியமல்ல, கௌணம்; (அதாவது, புருஷன், ஜீவன், சாப்பிட இச்சிக்கவில்லை, அடியில் கண்டபடி ஜலம் அன்னத்தை வேண்டுகிறது); சாப்பிட்ட அன்னத்தை ஜலம் நடத்துகிறது. (கரைத்து, பக்குவப்படுத்தி, மலத்தை நீக்கி ஸாரத்தை தன்னோடு சேர்த்துக்கொள்ளுகிறது; அன்னத்தை ஜீர்ணப்படுத்துகிறது); மாட்டை நடத்துகிறவன், குதிரையை நடத்துகிறவன், ஜனங்களை நடத்துகிறவன் என்று சொல்லப்படுகிறதுபோல அன்னத்தை நடத்துகிறது என்று ஜலத்திற்கு சொல்லப்படுகிறது. அந்த அன்னத்தால் முளைத்த முளை இந்த சரீரம் (அதாவது, அன்ன ரஸம் வரிசைக்கிரமமாய் சுக்கில சோணிதமாய் தேகமாகிறது); இதற்கு மூலம் இல்லாமலிருக்கவில்லை.

4. சிஷ்யன்—இதற்கு அன்னத்தைக்காட்டிலும் வேறு எது மூலம்?

குரு—அன்னம் முளையாயிருப்பதால் (அழிவுள்ளதால்) அதற்கு அப்பு மூலம் என்றறி; அப்பு முளையாயிருப்பதால் அதற்கு தேஜஸ் மூலமென்றறி; அதுவும் முளையாயிருப்பதால் அதற்கு ஸத் மூலம் என்றறி. இந்த பிரஜைகள் ஸத்திலிருந்து உத்பத்தியானவை; ஸத்தினால் பிழைத்திருக்கின்றன; ஸத்தையே கடையில் அடைகின்றன.

5. அப்படியே 'குடிக்க இச்சையுள்ளவனாயிருக்கிறான் புருஷன்' என்கிற பெயரும் கௌணம்தான்; 'புருஷன்' என்கிற பெயரும் கௌணம்தான்; புருஷன் குடிக்கவில்லை; தேஜஸ் குடிக்க இச்சிக்கிறது; எப்படியென்றால், குடிக்கப்பட்ட ஜலத்தை தேஜஸ் நடத்துகிறது (வத்த அடிக்கிறது); (முன் சொன்ன திருஷ்டாந்தம் சொல்லப்படுகிறது; ஜலத்தை நடத்துகிறது என்று தேஜஸுக்கு பெயர் கிடைத்தது; அதனால்தான் இந்த சரீர முளை முளைத்தது; அதற்கு மூலம் உண்டு.

6. சிஷ்யன்—அந்த மூலம் ஜலத்தை தவிர வேறாக இருக்கக்கூடுமா?.

குரு—முன் சொன்னபடி வரிசைக் கிரமமாக ஸத்தே மூலம் என்றறி. எல்லாம் ஸத்திலிருந்து உண்டாகி, அதனால் பிழைத்து அதிலேயே லயத்தையடைகிறது. இந்த மூன்று தேவதைகளும் புருஷனையடைந்து மும் மூன்றாக ஆகிறதென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறதல்லவா; இறந்துபோன புருஷனுடைய வாக் மனஸைப்போய் சேருகிறது; மனஸ் ப்ராணனையும், ப்ராணன் தேஜஸையும், தேஜஸ் பரமாத்மாவையும் அடைகின்றன. (இவ்விதமாக மனஸ்தமாயிருக்கிற ஜீவன், ஆத்மஞனன், ஸுஷுப்தி காலத்திலேபோல ஸத்தோடு கலந்துபோகிறான்; அவன் மறுபடியும் வேறு தேகத்தை எடுக்க, ஸுஷுப்தியிலிருந்து எழுந்திருக்கிறதுபோல எழுந்திருந்து வருகிறதில்லை; ஆனால், அனாத்மஞனாயிருப்பவன், லோகத்தில் ஒருவன் ஒரு பயப்பிரதேசத்தைவிட்டு பயமில்லாத இடத்திற்கு போகிறதுபோல, ஸத்திலே நின்று மறுபடியும், ஸுஷுப்தியிலிருந்து கிளம்புகிறதுபோல, கிளம்பி செத்து, மறுபடியும் வேறு தேகத்தையடைகிறான்). இந்த பரமாத்மாதான் ஸர்வ ஜகத்திற்கும் காரணமான அணுப்ரமாண வஸ்து (அதாவது, அதி ஸூக்ஷ்மமான வஸ்து).

7. இந்த எல்லா ஜகத்தும் இந்த ஆத்மாவுள்ளது; அது ஸத்ய வஸ்து; அதுதான் ஆத்மாவென்று சொல்லப்பட்டது; அது தான் நீயாயிருக்கிறாய்.

சிஷ்யன்—(ஒவ்வொரு நாளும் எல்லா ஜீவர்களும் ஸுஷுப்தி அவஸ்தையில் ஸத்துடன் கலந்துபோகிறார்கள் என்று சொல்லி

யிருக்கிறீரே, அப்படியிருந்தால், ஸத்மயமாகிவிட்டவர்கள் அப்படி ஸத்மயமாகிவிட்டோம் என்று ஏன் அறியவில்லை? பிறகு விழித்துக்கொண்டு விடுகிறார்கள்; ஆகையால் இந்த ஸந்தேகம் இருக்கிறது) இன்னொருதரம் திருஷ்டாந்தத்துடன் செவ்வையாகச் சொல்லும்.

குரு—அப்படியே என்று சொல்லுகிறார்.

கண்டம் 9.

1. நாநாவிடங்களிலிருக்கிற விருக்ஷங்களுடைய ரஸங்களை ஒன்றாகச்சேர்த்து, ஒரே ரஸமாக ஆக்கி, தேனை தேன் ஈக்கள் உண்டுபண்ணுகின்றன.

2. அந்த ரஸங்களில் ஒவ்வொன்றும் நான் இன்ன விருக்ஷத்தின் ரஸமாய் இருக்கிறேன் என்று அறிகின்றனவா? இல்லையே; அப்படிப்போல் இந்த எல்லா பிரஜைகளும் ஸத்தையடைந்தும் ஸத்தினிடத்தில் சேர்ந்துவிட்டோம் என்பதை அறியவில்லை (ஸுஷுப்தி, மரணம், பிரளயம், மூர்ச்சை முதலான காலங்களில் அறியவில்லை).

3. (ஆனால் அவைகள் எப்படியாகின்றன வென்றால்) அவரவர்கள் கர்மானுஸாரப்படி இவ்வுலகத்திற்கு திரும்பிவந்து வ்யாக்ரம், ஸிம்ஹம் முதலான ஜந்துக்களாக ஆகின்றன.

4. அப்படிப்பட்ட பரமாத்மா, இந்த எல்லா ஜகத்தும் அவரால் நிறைக்கப்பட்டிருக்கிறது; அவர்தான் ஸத்யம்; அவர்தான் ஆத்மாவென்று சொல்லப்பட்டது; அவர் நீயாயிருக்கிறாய் என்று குரு சொல்ல, சிஷ்யன் (ஒருவன் தூங்கி எழுந்திருந்தபிறகு ஒரு இடத்திற்கு போகிறபோது தான் வீட்டிலிருந்து வருகிறதாகச் சொல்லுகிறான்; ஸத்தினிடமிருந்து வருவதாகச் சொல்லாமல் இப்படிச் சொல்லக் காரணமென்ன, அதனால் எனக்கு ஸந்தேகமாயிருக்கிறது) இன்னொருதரம் தெளிவாகச் சொல்லும் என்று கேட்டான்.

குரு—அப்படியே சொல்லுகிறேன்.

கண்டம் 10.

1–2. ஸமுத்திரத்தினின்றும் மேகவழியாக வுண்டான நதிகளும் நதங்களும், அந்த ஸமுத்திரத்தையே மறுபடியுமடைந்து ஸமுத்திரமாக கலந்துபோய், பிறகு இன்ன நதியாக நாம் இருந்தோம் என்பதை எப்படி அவைகள் அறியவில்லையோ, அப்படி இந்த ப்ரஜைகள் எல்லாம், ஸத்தினிடத்திலிருந்து வந்திருந்தபோதிலும், ஸத்தினிடமிருந்து வந்தோம் என்பதை அறியாமலிருக்கிறார்கள். புலி முதலானவைகளாய் மறுபடியும் ஜன்மத்தை எடுக்கிறார்கள்.

3. அவர்தான் அணுப்பிரமாணவஸ்து; இந்த எல்லா ஜகத்தும் இந்த ஆத்மாவுள்ளது; அது ஸத்யவஸ்து; அதுதான் ஆத்மாவென்று சொல்லப்பட்டது; அவர் நீயாகவிருக்கிறாய்.

சிஷ்யன்—(ஜீவர்கள் அவைகளின் காரண பாவத்தை, ஸத்தை, தினந்தோறும் அடைந்தபோதிலும், ஸுஷுப்தி, மரணம், பிரளயம் இவ்வஸ்தைகளில் நசித்துப்போகின்றன வில்லையென்று சொல்லப்படுகிறதே! அதற்கு திருஷ்டாந்தமென்னவென்று) இன்னொருதரம் தெளிவாகச் சொல்லும்.

குரு—அப்படியே சொல்லுகிறேன்.

கண்டம் 11

1. ஒரு பெரிதான மரத்தின் அடியில் ஓர் பக்கத்தில் ஒரு வெட்டு வெட்டினால் அந்த மரம் சாகிறதில்லை; பிழைத்துக்கொண்டிருந்தே ஸாரம் வடிகிறது; நடுவில் வெட்டினாலும் அப்படியே; நுனியில் வெட்டினாலும் அப்படியே; அது ஜீவனால் வ்யாபித்துக் கொள்ளப்பட்டு பூஸம்பந்தமான ஜலத்தை குடித்து ஸந்தோஷமாயிருக்கிறது.

2. அந்த மரத்தில் ஒரு கிளையிலிருக்கிற ஜீவன் போய்விட்டால் அந்தக்கிளை பட்டுப்போகிறது; இரண்டாவது, மூன்றாவது கிளைகளும் அப்படியே; எல்லாவற்றையும் ஜீவன் விட்டுவிட்டால் எல்லாம் பட்டுப்போகிறது, அப்படிப்போல் அறி.

3. ஜீவனால் விடப்பட்ட இந்த தேகம் நசிக்கிறதேயல்லாது ஜீவன் சாகிறதில்லை. அவர்தான் அணுப்பிரமாணவஸ்து; இந்த

எல்லா ஜகத்தும் இந்த ஆத்மாவுள்ளது; அது ஸத்யவஸ்து; அது தான் ஆத்மாவென்று சொல்லப்பட்டது; அவர் நீயாயிருக்கிறாய்.

சிஷ்யன்—(அத்யந்தம் ஸூக்ஷ்மமாயிருக்கிற ஸத்தினிடமிருந்து இந்த மஹத்தான ஜகத் எப்படி உண்டாயிற்று; அதை திருஷ்டாந்தத்துடன் சொல்ல) இன்னொருதரம் தெளிவாகச் சொல்லும் என்றான்.

குரு—அப்படியே சொல்லுகிறேன்.

(ஒரு காரியம் செய்துகொண்டிருந்தவன் தூங்கியெழுந்த பிறகு, அந்தக் காரியம் பாக்கி இருக்கிறது அதைச் செய்யவேணுமென்று சொல்லுகிறான்; இதனால் ஜீவனுக்கு ஞாபகமிருப்பதாக தெரியவருகிறது; மேலும், ஒரு குழந்தை பிறந்தவுடன் ஸ்தன்யபான ஆசையும் பயமும் இருக்கிறது; இதனால் பூர்வஜன்ம வாஸனையிருக்கிறதென்றும் தெரியும்; மேலும் ஸ்வர்காதி போகத்திற்காக யாகம் செய்யப்படுகிறது; தேகம் போனபிறகு ஜீவன் ஸ்வர்கத்திற்குபோய் அநுபவிக்கிறான். இப்படி காரணங்களால் ஜீவன் சாகிறதில்லை).

கண்டம் 12.

1–3. குரு—ஒரு ஆலம்பழத்தை கொண்டுவா.

சிஷ்யன்—இதோ கொண்டுவந்தேன்.

குரு—அதைப் பிள.

சிஷ்யன்—பிளந்தேன்.

குரு—அதில் என்ன பார்க்கிறாய்?

சிஷ்யன்—அத்யந்தம் அணுக்களாகவிருக்கிற விதைகளைப் பார்க்கிறேன்.

குரு—அவைகளில் ஒரு விதையையெடுத்துப் பிள.

சிஷ்யன்—பிளந்தேன்.

குரு—அதில் என்ன பார்க்கிறாய்?

சிஷ்யன்—ஒன்றுமில்லை.

குரு—இப்படி ஒன்றுமாகத் தோணப்படாத ஸூக்ஷ்மத்திலிருந்து இந்த மகா பெரிய ஆலமரம் எப்படி வெளிப் புறப்பட்டதோ

அப்படிப்போல் அதி சூக்ஷ்மமாயிருக்கிற ஸத்தினிடமிருந்து இந்த மஹா ஜகத் உண்டாயிற்று என்று அறி. அதுதான் அணுப்பிரமாணவஸ்து; இந்த எல்லா ஜகத்தும் இந்த ஆத்மாவுள்ளது; அது ஸத்யவஸ்து; அதுதான் ஆத்மாவென்று சொல்லப்பட்டது; அவர் நீயாயிருக்கிறாய்.

சிஷ்யன்—(இப்படி இந்த சூக்ஷ்மமான ஸத்வஸ்து ஜகத்திற்கு மூலமாகவிருந்தால் ஏன் அது அறியப்படவில்லை, திருஷ்டாந்தத்துடன் கேட்கக்கருதி) இன்னொருதரம் தெளிவாச்சொல்லும், என்றான்.

குரு—அப்படியே சொல்லுகிறேன்.

கண்டம் 13.

1–3. ஒரு உப்புக்கட்டியை ஒரு சொம்புஜலத்தில் போட்டுவிட்டு காலமே என்னிடம்வா வென்று குரு சொன்னார்; சிஷ்யன் அப்படியே செய்தான். எந்த உப்பை ராத்ரியில் ஜலத்தில் போட்டனையோ அதை இப்பொழுது எடுத்துவா வென்று குரு சொன்னார்; அதை சிஷ்யன் ஜலத்தில் தேடிப்பார்த்தான்; அகப்படவில்லை, ஜலத்தில் கரைந்துபோயிற்று. குரு—(அது ஜலத்தில் கரைந்து மறைந்துபோயிற்று; அதைக் கண்ணால் பார்க்க முடியாது, தொட்டுப் பார்க்கவும் முடியாது; வேறு விதமாக அறியலாம் பார் என்று) மேல் ஜலத்தைக் குடித்துப்பார் என்றார்.

சிஷ்யன்—உப்பாயிருக்கிறது.

குரு—நடுவில் எடுத்து குடித்துப்பாரு.

சிஷ்யன்—உப்பாயிருக்கிறது.

குரு—அடியில் எடுத்துக்குடி.

சிஷ்யன்—உப்பாயிருக்கிறது.

குரு—அந்த ஜலத்தை விட்டுவிட்டு இங்குவா சொல்லுகிறேன்.

சிஷ்யன்—அப்படியே வந்தான்.

குரு—ஜலத்தில் உப்பு எப்பொழுதும் இருக்கிறது; எப்படி இந்த உப்பு (கண்ணால் பார்க்கப்படக் கூடாமலும், கையால் தொடப்படக் கூடாமலும் நாக்கு ருசியால்மட்டும் அறியப்பட்டதாக

ஜலத்தில்) மறைந்திருக்கிறதோ, அப்படியே ஸத் (இந்த தேகத்தில்) மறைந்திருக்கிறது. (இந்திரியங்களால் அறியப்படக் கூடாதது; வேறு விதமாக அறியவேண்டும்). அதுதான் அணுப்பிரமாணவஸ்து; இந்த எல்லா ஜகத்தும் இந்த ஆத்மாவுள்ளது; அது ஸத்யவஸ்து; அதுதான் ஆத்மாவென்று சொல்லப்பட்டது; அவர் நீயாகவிருக்கிறாய்.

சிஷ்யன்—(அப்படி வேறுவிதமாக அறிவதற்கு உபாயமென்ன என்று கேட்க) இன்னொருதரம் தெளிவாகச் சொல்லும், என்றான்.

குரு—அப்படியே சொல்லுகிறேன்.

கண்டம் 14.

1–3. கெந்தார தேசத்திலிருந்து ஒருவனை கண்ணைக்கட்டியும், கையைக்கட்டியும் கொண்டுவந்து, ஜனமில்லாத ஒரு காட்டில் விட்டுவிட்டால் அவன் ஒரு திக்கிலும் போகக்கூடாமல், அங்கிருந்து கண்கட்டப்பட்டவனாக 'இவ்விடத்தில் கொண்டுவரப்பட்டு விடப்பட்டிருக்கிறேன் (யாராகிலும் என்னை அவிழ்த்து விடுங்கள்),' என்று எப்படிக் கதறுகிறானோ, அப்பொழுது, (தெய்வ வசாத்) தயவுள்ள ஒருவன் வந்து, அந்தக் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, கெந்தாரதேசம் இன்ன திக்கிலிருக்கிறது, இன்ன திக்குவழியாக போ, என்று சொல்ல, அதைக் கேட்டு அறிந்தவனாயிருக்கிற இவன் கிராமத்திற்கு கிராமம் வழிகேட்டுக்கொண்டே போய் கடையில் தன் தேசத்தை எப்படி யடைகிறானோ, அப்படிப்போல் [புருஷன் ஸத்தினிடமிருந்து கிளம்பி தேஜோபன்னாதிமயமாயிருக்கிற தேகாரண்ணியத்தை யடைந்து (வாத, பித்த, கப, ரக்த, மேதோமாம்ஸ, அஸ்தி, மஜ்ஜை, சுக்ல, கிரிமி, மூத்ர, புரீஷைவத்தேகம்) மோகபடத்தினால் கட்டப்பட்ட கண்ணுள்ளவனாகவும், பார்யா புத்திர பசு பந்த்வாதி திருஷ்டாதிருஷ்ட அநேக விஷயங்களாயிருக்கிற ஆசையாகிற கயிற்றால் கட்டப்பட்டவனாகவும், புண்ய பாபங்களாகிற திருடர்களால் கொண்டுவரப்பட்டவனாகவும், நான் இன்னவன் புத்திரன், இவர்கள் என் பந்துக்கள், என் தனம் நஷ்டமாகப் போயிற்று, நான் எப்படி பிழைத்திருக்கப் போகி

றேன் என்ற முதலான அநேக வார்த்தைகளைப்பேசி கதறுகிறவனாகவும் ஆகி, பிறகு, எதோ புண்யவசத்தால் கருணையுள்ள ஒரு குருவால் வழி காட்டப்பட்டு, ஸம்ஸாரத்தில் விரக்தனாய், கடைசியில் ஸத்தை யடைகிறான்].

ஆசார்யவானாகவிருக்கிற புருஷன் (பிரமத்தை) தெரிந்துகொள்ளுகிறான். அவன் தெரிந்துகொண்ட பிறகு ஸத்ஸம்பத்திற்கு (மோக்ஷத்திற்கு, ஸத்துடன் சேருவதற்கு) தாமதம் எல்லாம் கூடி, ஆரப்த கர்மத்தால் எதுவரை அநுபோகமிருக்கிறதோ அந்த அநுபோகமானவுடன் தேகபாதம் வருகிறது; அதுதான் மோக்ஷகாலம் (அந்த மோக்ஷகாலம் வரையில்தான் தாமஸம்); உடனே ஸத்ஸம்பத்தி கிடைக்கிறது.

(பிரமஞானம் வந்தவுடன் ஸஞ்சித கர்மங்களும், ஆகாமி கர்மங்களும் நசித்தபோதிலும் ஆரப்த கர்மாநுபவம்மட்டும் உண்டு; வில்லினிடத்திலே நின்றும் விடப்பட்ட ஒரு பாணமானது லக்ஷ்யத்தில்பட்டு, அதனால் தடைபட்டபோதிலும், வேகமிச்சத்தால் மறுபடியும் லக்ஷ்யத்தைவிட்டு இன்னமும் போகிறதோ அப்படிப் போல் என்றறிக).

4. அப்படிப்பட்ட இவர் அணுப்பிரமாணவஸ்து; இந்த எல்லா ஜகத்தும் இந்த ஆத்மாவுள்ளது; அது ஸத்யவஸ்து; அது தான் ஆத்மாவென்று சொல்லப்படுகிறது; அவர், ஹே! ச்வேதகேது! நீயாயிருக்கிறாய்.

சிஷ்யன்—(அப்படி ஆசாரியவானாயிருக்கிறவன் எந்தக்கிறமமாக ஸத்தை யடைகிறான், அதை திருஷ்டாந்தத்துடன் அறிய) இன்னொருதரம் தெளிவாகச் சொல்லும், என்றான்.

பிதா (குரு)—அப்படியே சொல்லுகிறேன்.

கண்டம் 15.

1–2. மரணாவஸ்தை உபாதியுள்ள ஒரு புருஷனை பந்துக்கள் சுற்றிக்கொண்டு, என்னைத்தெரியுமா?, என்னைத்தெரியுமா? என்று கேட்க, எதுவரையில் அவனுடைய வாக்கு மனஸிலும்,

மனஸ் ப்ராணனிடத்திலும், ப்ராணன் தேஜஸினிடத்திலும், தேஜஸ் பரமாத்மாவினிடத்திலும் அடைகிறதில்லையோ, அதுவரையில் 'உன்னைத் தெரியும்,' 'உன்னைத் தெரியும்' என்று சொல்லுகிறான். பிறகு அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை.

3. அப்படிப்பட்ட இவர் அணுப்பிரமாணவஸ்து; இந்த எல்லா ஜகத்தும் இந்த ஆத்மாவுள்ளது; அது ஸத்யவஸ்து; அது தான் ஆத்மாவென்று சொல்லப்படுகிறது; அவர், ஹே! ச்வேதகேது! நீயாயிருக்கிறாய்.

சிஷ்யன்—(ஸத்ஸம்பத்தியானவுடன் வித்வான் திரும்புகிறதில்லை, அவித்வான் திரும்புகிறான் என்று சொல்லப்படுகிறதே, அதற்கு என்ன காரணம், திருஷ்டாந்தம் என்னவென்றறிய) இன்னொருதரம் தெளிவாகச் சொல்லும், என்றான்.

குரு—அப்படியே சொல்லுகிறேன்.

கண்டம் 16.

1–2. ஒரு புருஷனை ராஜபுருஷர்கள் கைபிடித்துக்கொண்டு வந்தார்கள்; இவன் என்னசெய்தான் என்று ஒருவன் கேட்க, திருடினான் என்று சொன்னார்கள். பிடிபட்டவன் தான் திருடவில்லை என்று சொன்னால், 'ஒரு கோடாலியை பழுக்க காய்ச்சி அவன் கையில் கொடு, அவன் திருடியிருந்தால் அது அவனை எரித்துவிடும், பொய்யாகவிருந்தால் எரிக்கமாட்டாது' என்று ஒருவன் சொல்ல, அப்படி செய்யப்பட்டது. திருடியிருந்தால் அவனை சுட்டுப் போகிறது; இல்லாவிடில் சுடவில்லை. அப்படிப் போல் பிரம்மஞானி திரும்பிவாராமல் ஸத்திலேயே இருந்துவிடுகிறான், (அஞ்ஞானித் திரும்புகிறான்).

3. அப்படிப்பட்ட இவர் அணுப்பிரமாணவஸ்து; இந்த எல்லா ஜகத்தும் இந்த ஆத்மாவுள்ளது; அது ஸத்யவஸ்து; அது தான் ஆத்மாவென்று சொல்லப்படுகிறது; அவர், ஹே! ச்வேதகேது! நீயாயிருக்கிறாய்.

இப்படிச் ச்வேதகேது அறிந்துகொண்டார்.

ஏழாம் ப்ரபாடகம்.

கண்டம் 1.

1. நாரதர் ஸநத்குமாரரிடம்போய் அத்யநம் செய்துவைய்யுங்கள் என்று கேட்டார். உனக்கு தெரிந்ததை சொல், அதற்கு மேல் உனக்கு சொல்லுகிறேன் என்று ஸநத்குமாரர் சொன்னார்.

2. நாரதர்—ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், நான்காவதாகிய அத்ர்வண வேதம், ஐந்தாவது வேதமாகிய இதிஹாஸ புராணம், வேதங்களுக்கு வேதம் (வ்யாகரணம்), பிதிருக்கள் ஸம்பந்தமான கல்பம், ராசி கணித சாஸ்திரம், தைவசாஸ்திரம் (வால் நக்ஷத்ர முதலான உத்பாதங்களை பற்றியது), நிதி சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், ஏகாயநம், நீதி சாஸ்திரம், தேவ வித்தை (வேதங்களைப்பற்றிய சுருக்கமான தாத்பர்ய கிரந்தம்), பிரம வித்தை (சிக்ஷா, கல்பம் முதலியவை), பூதவித்யா (பஞ்சபூதங்களைப் பற்றிய சாஸ்திரம்), க்ஷத்ரவித்தை (தநுர்வேதம்), நக்ஷத்ரவித்யா (ஜ்யோதிஷம்), ஸர்ப்பவித்தை, கந்தர்வவித்தை (கீத, நர்த்தனம் முதலானது), இவைகளை நான் அத்யநம் செய்திருக்கிறேன், தெரியும்.

3–4. அப்படித் தெரிந்த நான் மந்திர வித்தாய் மாத்திரமிருக்கிறேன் (கர்மத்தை யறிந்தவனாக மாத்திரம், சப்தார்த்தத்தைமாத்திரம் அறிந்தவன், உள்கருத்தறிந்தவன் அன்று); ஆத்மவித்தாக விருக்கவில்லை. ஆத்மவித்தே சோகத்தை கடக்கிறான் என்று உங்களைப்போன்ற பெரியோர்களிடத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் சோகத்தை யடைந்திருக்கிறேன். அந்த சோக சமுத்ரத்தை கரையேறும்படி செய்யுங்கள் (அதாவது, ஆத்மவித்தையை போதியுங்கள்).

இப்படிச் சொல்ல ஸநத்குமாரர் சொல்லுகிறதாவது—நீ எது எதை அத்யநம்செய்து தெரிந்துகொண் டிருக்கிறாயோ அது எல்

லாம் நாமந்தான் (பெயர்மாத்திரந்தான்); ரிக் வேதாதிகள் எல்லாம் நாமமே (நாமத்தால்மட்டும் ரிக்வேதாதிகளை அறிந்திருக்கிறாய்); ஆதலால் நாமத்தை பிர்மமாக உபாஸி (நாம பஜனம் செய்).

5. (பலன் என்னவெனில்) நாமத்தை பிர்மமாக உபாஸிக்கிறவன் அந்த நாமத்திற்கு எவ்வளவு விஷயம் கோசரமாயிருக்கிறதோ அவ்வளவு விஷயங்களிலேயும் அவனுக்கு காமசாரணம், ஸ்வேச்சானுபவம் இருக்கும். (அதாவது, அந்த விஷயங்களெல்லாம் அவனுக்குத் தெரியும்; கர்மத்தைச்செய்து அதன் பலத்தை யடைவான்).

நாமத்தைக் காட்டிலும் பெரிது இருக்கிறதாவென்று நாரதர் கேட்க, உண்டு என்று ஸநத்குமாரர் சொல்ல, அப்படியிருந்தால் சொல்லுங்கள் என்று நாரதர் கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 2.

1. நாமத்தைக்காட்டிலும் வாக் பெரிது; வாக்குத்தான் ரிக்வேதத்தை தெரியவைக்கிறது; அப்படியே யஜுர்வேத முதலான முன் சொல்லப்பட்டவைகளையும் தெரியவைக்கிறது; மேலும், ஸ்வர்க்கம், பிருதிவி, வாயு, ஆகாசம், ஜலம், தேஜஸ், தேவர்கள், மனுஷ்யர்கள், மிருகங்கள், பக்ஷிகள், செடி மரங்கள், கெட்டஜந்துக்கள், தர்மம், அதர்மம், ஸத்யம், அநிருதம், ஸாது, அஸாது, இருதயத்திற்கு பிரியமுள்ளவை, அப்படி இல்லாதவை, இவைகளையும் தெரிவிக்கிறது. வாக்கில்லாவிட்டால் தர்மம் இன்னதென்றும், அதர்மம் இன்னதென்றும் தெரியமாட்டாது (எப்படியென்றால், வாக்கில்லாவிட்டால் சொல்லுகிறவனில்லை; சொல்லுகிறவனில்லாதபொழுது கேட்கிறவனில்லை; அப்பொழுது தர்மாதர்மம் எப்படி தெரியும்). அப்படியே ஸத்யம் முதலானது இன்னதென்றும், அஸத்ய முதலானது இன்னதென்றும் தெரியமாட்டாது; வாக்குத்தான் எல்லாவற்றையும் தெரிவிக்கிறது. ஆனதால் வாக்கை பிர்மமாக உபாஸி.

2. (பலன்) முன்போல் வாக்கிற்கு எவ்வளவு விஷயம் கோசரமோ அவ்வளவில் இவனுக்கு ஸ்வேச்சானுபவமிருக்கும். வாக்

கைக் காட்டிலும் பெரிதுண்டாவென்று நாரதர் கேட்க, உண்டென்று ஸநத்குமாரர் சொல்ல, அப்படியிருந்தால் சொல்லும் என்று நாரதர் கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 3.

1. வாக்கை பார்க்கிலும் மனஸ் பெரிது; எப்படி இரண்டு நெல்லிக்காய்களையாவது, இரண்டு இலந்தைப்பழங்களையாவது, இரண்டு தானிக்காய்களையாவது ஒரு கைமுஷ்டி தனக்குள் அடைக்கிக்கொண்டிருக்கிறதோ, அப்படி நாமத்தையும் வாக்கையும், மனஸ் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கிறது; மந்திரங்களை அத்யயநம் செய்யவேணுமென்று மனஸால் நினைத்தபிறகுதான் அத்யயநம் செய்யப்படுகிறது. அப்படியே முதலில் நினைத்து பிறகு கர்மங்கள் செய்யப்படுகிறது. அப்படியே நினைத்துத்தான் புத்திராதிகளையும், லோகங்களையும் அடைகிறான். மனஸ்தான் ஆத்மா, லோகம், பிர்மம். ஆதலால், மனஸை பிர்மமாக உபாஸி.

2. (பலன் முன்போல் இதற்குதக்கபடி) மனஸைக்காட்டிலும் பெரிது உண்டோவென்று நாரதர் கேட்க, உண்டென்று ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 4.

1. மனஸைக்காட்டிலும் ஸங்கல்பம் பெரிது. (ஸங்கல்பம்—மனஸினுடைய விர்த்தி; விர்த்தி இல்லாவிட்டால் மனஸ் இருக்கமாட்டாது, உஷ்ணபாவமில்லாவிட்டால் அக்னியென்பது எப்படியிருக்கமாட்டாதோ அப்படிப்போல்). எப்பொழுது ஸங்கல்பிக்கிறதோ அப்பொழுது நினைக்கிறது; மனஸ் உண்டாகிறது; பிறகு வாக்கை கிளப்பிவிடுகிறது; வாக்கை நாமத்தில் (நாமங்களை உச்சரிக்கும்படி) கிளப்பிவிடுகிறது; நாமங்களில் மந்திரங்கள் அடங்கியிருக்கின்றன; மந்திரங்களில் கர்மங்கள் அடங்கியிருக்கின்றன; (அதாவது, மந்திரங்களால் கர்மங்கள் சொல்லப்படுகிறது).

2. இவைகள் (மனஸ் முதலானது) ஸங்கல்பத்தில் லயத்தையடைகின்றன; ஸங்கல்பத்தில் உத்பத்தியானவை; ஸங்கல்பத்தில்

இருக்கின்றன; ஸ்வர்க்கமும், ப்ருதிவியும் ஸங்கல்பிக்கின்றன; அப்படியே வாயுவும், ஆகாசமும்; அப்படியே அப்பும், தேஜஸும்; இவைகள் ஸங்கல்பித்ததினால் மழை ஸங்கல்பித்தது (உண்டாயிற்று); மழையால் அன்னம், அன்னத்தால் ப்ராணன், ப்ராணனால் மந்திரம், மந்திரத்தால் அக்னிஹோத்ராதி கர்மம், அக்கர்மத்தால் ஸ்வர்காதிலோக பலன்; அந்த பலத்தால் ஸர்வம் (எல்லாம்) ஸங்கல்பிக்கிறது (உண்டாகிறது); ஆனதால் எல்லாம் ஸங்கல்பமூலமாயிருக்கிறது. ஆனதால் ஸங்கல்பத்தை பிரம்மமாக உபாஸி.

3. (பலன்) அப்படி உபாஸிப்பவனுக்கு, ஏற்பட்டிருக்கின்றனவைகளும் த்ருவமாயிருக்கின்றனவாகவுமான லோகங்கள் கிடைக்கின்றன. இவனும் த்ருவமாக ப்ரதிஷ்டிதனாகிறான் (உபகரண ஸம்பன்னனாகிறான்). இவனும் ப்ரதிஷ்டிதனாய் அவ்யதமானமாயிருக்கிறவைகளை (பசுமற்ற மித்திர முதலானவர்களை) அடைகிறான். இவன் அவ்யதமானனாக எல்லாவற்றையும் அடைகிறான். (மற்றது முன்போல்).

ஸங்கல்பத்தைக்காட்டிலும் பெரிது உண்டோவென்று நாரதர் கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 5.

1. ஸங்கல்பத்தைக் காட்டிலும் சித்தம் பெரிது; (சித்தம் என்றால் சேதயித்ருத்வம், அறிவு; ஒரு வஸ்து கிடைத்தகாலத்தில் அதுரூபமாயுண்டான ஓர் அறிவு; சென்றதும் இனிவரப்போகிறதுமான விஷய ப்ரயோஜனத்தை நிரூபணம் செய்யும்படியான ஸாமர்த்யம்; அதாவது, முதலில் உண்டாகிற வஸ்து ஞானம்; ஒரு வஸ்து கிடைத்த உடனே இது இப்படி கிடைத்தது என்ற அறிவு உண்டாகிறதே, அதுதான் சித்தம்). சித்தம் உண்டான பிறகு (இந்த வஸ்துவை ஏற்றுக்கொள்வோமா அல்லது தள்ளிவிடுவோமா என்பதைப்பற்றி) ஸங்கல்பிக்கிறது; உடனே மனஸாகிறது; பிறகு படிவரிசையாக மேல்கண்டபடி மந்திரம், கர்மம் முதலானவை.

2. இவைகள் (ஸங்கல்பம் துவக்கி கர்மம்வரை) சித்தத்தில் லயிக்கின்றன; அதில் உத்பத்தியாகின்றன; அதில் ஸ்திதியுள்ளவைகள்; ஆனதால், ஒருவன் வெகு சாஸ்திரம் தெரிந்தவனாகவிருந்தாலும் இல்லாதவன் ஒப்பாந்தம் இருக்கிறான் என்று சொல்லப்படுகிறது; அவனுக்கு ஏதாகிலும் தெரிந்திருக்கிறதும் வ்யர்த்தமாய்போகிறது; ஒரு வித்வான் அசித்தனாயிருந்தால் அவன் வித்வானல்லவென்றே சொல்லுகிறார்கள். ஒருவன் ஸ்வல்பத்தை அறிந்தவனா யிருந்தாலும், சித்தமுள்ளவனா யிருந்தால் அவனுடைய உபதேசத்தை எல்லோரும் கேட்க விரும்புகிறார்கள். ஆதலால் சித்தம் எல்லாவற்றிற்கும் மூலம்; ஆதலால் அதை உபாஸி.

3. (பலன்) அப்படிப்பட்டவன் சித்தவானாகவிருப்பான். (மைற்றது முன்போல்).

சித்தத்தைக் காட்டிலும் பெரிதை நாரதர் கேட்க ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 6.

1. சித்தத்தைக் காட்டிலும் த்யாநம் பெரிது; (த்யாநமென்றால், சித்தத்தின் விர்த்தி; சாஸ்த்ரோக்த தேவதாதியை பிடிப்பாக வைத்துக்கொண்டு அதில் நிச்சலமானதும் வேறு வஸ்துவில் அண்டாததுமான ஒரு விசுவாஸம் வைப்பது). பிருதிவி, அந்தரிஷம், ஸ்வர்க்கம், பர்வதங்கள், தேவர்கள், மனுஷ்யர்கள் அல்லது தேவமனுஷ்யர்கள் (அதாவது, சமாதிகுண ஸம்பந்நர்கள்) த்யாநம் செய்கிறவர்கள்போல காணப்படுகிறார்கள்; (அதாவது, நிச்சலமாயிருக்கிறார்கள்; அதாவது, நிச்சலத்தால், அடக்கத்தால், ஒரு பெருமை, மகத்வம் உண்டாகிறது). ஆனதால் இவ்வுலகத்தில் தனம், வித்தை, குணம் இவைகளால் மனுஷ்யமகத்வத்தை யடைந்தவர்கள் த்யானபலாம்சத்தை யடைந்தவர்களாக காணப்படுகிறார்கள் (அடக்கமுள்ளவர்களாயிருக்கிறார்கள்); மைற்றவர்கள் அல்பர்கள்; கலகக்காரர்களாகவும், கோள்சொல்லுகிறவர்களாகவும், புறவர்களை தூஷிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்; பரோபகாரிகளும் த்யாந பலாம்சத்தை யடைந்தவர்கள். ஆதலால், த்யாநம் பெரிது, அதை உபாஸி.

2. (பலன் முன்போல் இருந்து தக்கபடி). த்யாநத்தைவிட பெரிதை கேட்க ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 7.

1. த்யாநத்தைக்காட்டிலும் விஞ்ஞானம் பெரிது. (விஞ்ஞானம் என்றால் சாஸ்திரார்த்த விஷயஞானம்; ஞானம் என்றால் இதர விஷய நைபுண்யம்; சாஸ்திரார்த்தத்தை முதலில் தெரிந்து கொண்டுதான், பிறகு, அதனால் அறியப்பட்ட ஒரு தேவதையை பிடிப்பாக வைத்துக்கொண்டு த்யானம் செய்யலாம்). விஞ்ஞாநத்தால்தான் ருக்வேதம் முதலானது அறியப்படுகிறது; ஆதலால் விஞ்ஞானத்தை பிரமமாக உபாஸி.

2. (பலன்) விஞ்ஞானமுள்ளவைகளாயும், ஞானமுள்ளவைகளாயுமிருக்கிற லோகங்களை யடைகிறான். (மற்றது முன்போல்). விஞ்ஞானத்தைக் காட்டிலும் பெரிதை நாரதர்கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 8.

1. விஞ்ஞானத்தைக் காட்டிலும் பலம் பெரிது. (பலம் என்றால் அன்ன பானங்களை உபயோகப்படுத்துவதால் உண்டாகிறதும், மனதில் தோற்றப்பட்டதனுவைத்து ஸாமர்த்தியத்தை கொடுப்பதுமான தன்மையுள்ளது). விஞ்ஞானவான்கள் நூறுபெயர்களிருந்தாலும் பலவானாயிருக்கிற ஒருவன் மற்றவர்களை நடுங்கச் செய்கிறான். பலமுள்ளவனாயிருந்தால் எழுந்திருக்க சக்தி உண்டாகிறது; எழுந்திருந்து ஆசாரியர்களுக்கும், குருக்களுக்கும் சிச்ருஷை செய்கிறான்; அப்படிச்செய்து அவர்கள் சமீபத்தில் சேருகிறான் (அவர்களுக்குப் பிரியமுள்ளவனாயிருக்கிறான்); அப்படிப்போய் அவர்களைப் பார்க்கிறவனாகிறான் (தனக்கு உபதேசம் செய்யும்பொருட்டு பார்க்கிறான்); அப்படிப்பார்த்து அவர்கள் உபதேசிப்பதை கேட்கிறவனாகிறான்; கேட்டு, கேட்டதை நினைக்கிறவனாகிறான்; அப்படி நினைத்து அறிந்தவனாகிறான்! அப்படியறிந்து சொல்லப்பட்ட கர்மங்களை செய்கிறவனாகிறான்; அப்படி

செய்து பலத்தை அனுபவிக்கிறவனாகிறான்; பிருதிவீ முதலானது பலத்தினாலேயே இருக்கின்றன; பலத்தினாலேயே லோகமிருக்கிறது; ஆதலால் பலத்தை பிர்மமாக உபாஸி.

2. (பலன்) முன் சொன்னதுபோல; பலத்தைக் காட்டிலும் பெரிதை நாரதர் கேட்க ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 9.

1. பலத்தைக் காட்டிலும் அன்னம் பெரிது; அன்னபானத்தாலேயே பலம் உண்டாகிறது; ஒருவன் பத்து நாள்கள் சாப்பிடாமலிருந்தால் பலம்போய் இறந்துபோவான்; ஒருக்கால் பிழைத்திருந்தாலும் திருஷ்டா (பார்க்றவன்) முதலானதாக விருக்கமாட்டான்; அன்னத்தை சாப்பிட்டால் அப்படி யிருப்பான். அன்னத்தை உபாஸி.

2. (பலன்) அன்னமுள்ளதுகளாகவும், பானமுள்ளதுகளாயுமிருக்கிற லோகங்களை யடைகிறான். (மைற்றது முன்போல்). அன்னத்தைவிட பெரிது உண்டோவென்று நாரதர் கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 10.

1. அன்னத்தை (பிருதிவியை)க் காட்டிலும் ஜலம் பெரிது. (அன்னத்திற்கு காரணமாயிருப்பதால்) நல்ல மழை இல்லாதபொழுது (இந்த வருஷம் விளைவு இல்லை) அன்னம் குறைந்துபோய்விடும் என்று ப்ராணிகள் வருத்தப்படுகிறார்கள்; மழையிருக்கும்பொழுது வெகு அன்னம் உண்டாகப் போகிறதென்று ஸந்தோஷப்படுகிறார்கள்; ஜலமே இதோ காணப்படுகிற மூர்த்தங்களாக (உருப்படிகளாக) பரிணமித்திருக்கிறது; ஜலமே பிருதிவி முதலான மூர்த்தங்களாக பரிணமித்திருக்கிறது. ஆதலால் ஜலத்தை பிரமமென்று உபாஸி.

2. (பலன்) எல்லா காமத்தையும் அடைந்து திருப்தியாகவிருப்பான். (மைற்றது முன்போல்). ஜலத்தைக் காட்டிலும் பெரிதை நாரதர் கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 11.

1. ஜலத்தைக்காட்டிலும் தேஜஸ் பெரிது; (ஜலத்திற்கு காரணமாயிருப்பதால்). தேஜஸானது வாயுவை சலிக்காமல் செய்துகொண்டு, ஆகாசத்தில் பரவி, தபிக்கச்செய்கிறது; இறுக்கமுண்டாயிருக்கிறது. மழைபொழியப்போகிறது என்று சொல்லுகிறார்கள்; முதலில் தன்னை காண்பித்துக்கொண்டு பிறகு தேஜஸ் ஜலத்தை உண்டாக்குகிறது; ஆனதால் மேகங்கள் உயரப்போகிறதுகளும், குறுக்குப்போகிறதுகளுமான மின்னல்களுடன் சஞ்சரிக்கின்றன; ஆதலால் லோகத்தார்கள் மின்னுகிறது, இடிக்கிறது, மழை வரப்போகிறது என்று சொல்லுகிறார்கள். ஆதலால் தேஜஸை பிரமமாக உபாஸி.

2. (பலன்) தேஜஸ்வியாக, பிரகாசமுள்ளதும், இருள் இல்லாததுமான லோகங்களை யடைகிறான். (மற்றபடி முன்போல்).

தேஜஸைக்காட்டிலும் பெரிது உண்டோவென்று நாரதர் கேட்க ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

(இதனால், பிரத்யேகமாக சொல்லப்படாததாகிலும், தேஜஸைக்காட்டிலும் வாயு பெரிதென்று ஏற்படுகிறது, தேஜஸுக்கு காரணமாயிருப்பதால்; வாயுவில்லாவிட்டால் தேஜஸுக்கு விருத்தி இல்லை).

கண்டம் 12.

1. (வாயு ஸஹிதமாயிருக்கிற) தேஜஸைக்காட்டிலும் ஆகாசம் (வெட்டவெளி) பெரிது; (வாயு முதலானதற்கு காரணமாயிருப்பதால்), சூரியன், சந்திரன், மின்னல், நக்ஷத்ரங்கள், அக்னி இத்தேஜஸ்களெல்லாம் ஆகாசத்திற்குள் அடங்கியிருக்கின்றன; ஆகாசத்தினால் கூப்பிடுகிறான், கேட்கிறான், பதில் சொல்லுகிறான் (அதாவது, வெளியில்லாவிட்டால் சப்தம் கேட்கப்படமாட்டாது), விளையாடுகிறான், விளையாடாமல் இருக்கிறான், உண்டாகிறது (வெளியில்லாவிட்டால் சிசு எப்படி உத்பத்தியாகும், தடையிருந்தால் வெளிவராது), மூளைகள் வெளியிலேயே கிளம்புகின்றன, கீழ் முளைக்கிறதில்லை. ஆதலால் ஆகாசத்தை பிரமமாக உபாஸி.

2. (பலன்) ஆகாசவத்துக்களாகவும், பிரகாசமுள்ளதுகளாகவும், நெருக்கமில்லாததுகளாயும், விஸ்தீரணங்களாகபரவி இருக்கிறதுகளுமான லோகங்களையடைகிறான். (மற்றது முன்போல்). இதைவிட பெரிதை கேட்க ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 13.

1. ஆகாசத்தைக்காட்டிலும் ஸ்மரணம் பெரிது (ஸ்மரணம்—நினைப்பு; அறிவு; அந்தக்கரண தர்மம்; ஏர்க்கனவே அறிந்திருப்பதை மறவாமலிருக்கிற ஞானம்; ஞாபகப்படுத்திக்கொள்ளும் அறிவு; ஞாபகசக்தி). ஸ்மரணையிருந்தால் அன்றோ ஆகாசாதிகள் ப்ரயோஜனப்படும்; அனுபவிக்கலாம்; ஸ்மரணையில்லாவிட்டால் இருக்கிறதும் இல்லாதிருப்பது ஒப்பந்தமே; ஸ்மரணையில்லாவிட்டால் ஆகாசிதகளை அறிவதற்கும் கூடாது; எப்படியெனில், ஒரு பக்கத்தில் அனேகம் பெயர்கள் கூட்டமாய் உட்காருகிறார்கள்; ஸ்மரணையில்லாவிட்டால் ஒருவருக்கொருவர் சொல்வதை கேட்க முடியாது; நினைத்துப்பார்க்க முடியாது; அறிந்து நடக்கமுடியாது; ஸ்மரணையினாலேயே தன் புத்ரன், பசு முதலானவைகளை ஒருவன் அறிகிறான். ஆதலால், ஸ்மரணையை பிரமமாக உபாஸி.

2. (பலன்) மேல்கண்டபடி ஸ்மரணையை விட பெரிதைக் கேட்க சநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 14.

1. ஸ்மரணத்தைக் காட்டிலும் ஆசைபெரிது; (ஆசை—கிடைக்காத வஸ்து விஷயத்தில் கிடைக்கவேணுமென்ற இச்சை; காமம்; திருஷ்ணை). அந்தக்காரணஸ்தமாயிருக்கிற ஆசையினாலேயே ஸ்மரிக்கவேண்டியதை ஸ்மரிக்கிறான்; அதாவது, பல இச்சையால் வேதத்தை அத்தியயநம் செய்யவேணுமென்று ஸ்மரிக்கிறான்; அத்தியயநம் செய்து கர்மங்களைச் செய்கிறான்; பிறகு புத்ராதிக்களை அடைய இச்சிக்கிறான். லோகாதிகளை இச்சிக்கிறான். ஆதலால் ஆசையை பிர்மமென்று உபாஸி.

2. (பலன்) எல்லா இச்சைகளும் கைகூடும்; எல்லா பிரார்த்தனைகளும் நிறைவேறும். (மற்றது முன் போல்).

ஆசையை விட பெரிதை நாரதர் கேட்க, ஸநத்குமாரர் சொல்லுகிறார்.

கண்டம் 15.

1. ஆசையைக் காட்டிலும் ப்ராணன் பெரிது; (ப்ராணன்—முக்கிய ப்ராணன்; தேகத்திலிருக்கிற ப்ரஜ்ஞாத்மா; எதில், கண்ணாடியில் போல, பரமாத்மா ப்ரதிபிம்பப்பட்டிருக்கிறதோ அதுவே பிராணன்; எது, ஒரு ராஜாவினுடைய ஸர்வாதிகாரி புருஷன் போல், பரமாத்மாவுக்கு ஸர்வாதிகாரியாயிருந்து காரியங்களை நடத்துகிறதோ அது; எது, நிழல் போல, பரமாத்மாவை பின்தொடர்ந்துகொண்டிருக்கிறதோ). அது ஒரு வண்டிச்சக்கிர குடத்தில் ஆரங்கள் எப்படி கோர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படி ப்ராணனிடத்தில் ஆசை முதலானது கோர்க்கப்பட்டிருக்கிறது; ப்ராணனில்லாவிடில் ஆசை முதலானது எங்கே யிருக்கும்; ப்ராணன் ஸ்வதந்திரன்; தானே போகிறது; ப்ராணன் தன்னையே கொடுத்துக்கொள்ளுகிறது (எல்லாம் தன் மயமாயிருக்கிறது) ப்ராணன் தனக்கே கொடுத்துக்கொள்ளுகிறது; பிதா, மாதா முதலானவர்களும் ப்ராணனே.

2. ஒருவன் தன் பிதா முதலானவர்களில் யாரையாவது, கொஞ்சம் அவமரியாதையாய் பேசினால், அவனை உலகத்தோர், நீ கெட்டாய்! நீ பிதுருஹத்தி முதலானது பண்ணினவன்! உன்னைச்சுடு! என்று சொல்லுகிறார்கள்.

3. ப்ராணன் போன பிறகு பிதா முதலானவர்களுடைய தேகத்தை சேர்த்துவைத்து எரிக்கிறான்; இதுக்ரூர கர்மமாகவிருந்தபோதிலும் இவனை பிதிருஹத்தி செய்கிறவன் என்று ஒருவரும் சொல்லவில்லை.

4. ப்ராணனே எல்லாமாயிருக்கிறது; எவன் இந்தப்படி (ப்ராணனே எல்லாவற்றிற்கும் பெரிதென்று) பார்த்து, நினைத்து, அறிந்து அனுபவிக்கிறானோ அவன் அதிவாதியாகிறான் (கீழ்ப்

பட்ட ஆகாசிதகளைக்கடந்து ப்ராணனே உயர்ந்ததென்று சொல்லுகிறவனாகிறான்). நீ அதிவாதியாய் இருக்கிறாய் என்று அவனைச் சொன்னால், அவன், ஆம்! அப்படியே யிருக்கிறேன்! என்று சொல்லுகிறான். அவனை நிந்திக்கக்கூடாது.

கண்டம் 16.

[இந்தப்படி கேட்டுக்கொண்டுவந்த நாரதர், வழக்கமாய் கேட்டுவந்ததுபோல், ப்ராணனைக்காட்டிலும் ஏதாவது பெரிது உண்டோ வென்பதைக் கேட்காமல், ப்ராணனே உயர்ந்த வஸ்து, அதைக்காட்டிலும் பெரிது ஒன்றுமில்லை யென்று நினைத்துக் கொண்டு சும்மாயிருக்க, விகாரமாயும், அநிருதமாயு மிருப்பதை பிர்மமென்று அறிந்து சந்தோஷத்தை யடைந்திருக்கிறவரும், பரமார்த்த ஸத்யவாதி தான் என்று எண்ணிக்கொண் டிருக்கிற வரும், அநிருதார்த்தரும், யோக்யருமான நாரதரிடத்தில் தயவு வைத்து ஸநத்குமாரர் மறுபடியும் சொல்லுகிறார்].

1. ஸநத்குமாரர்—ப்ராணனை யறிந்தவன் அதிவாதியாக மாட்டான்; நாமாதியை அபேக்ஷித்து அவன் அதிவாதிதான். ஆனால், பரமார்த்தப்படி அவன் அதிவாதியன்று; ஆனால், எவர் அதிவாதி யென்றால், எவர் ஸத்தியத்துடன் (பரமார்த்த ஸத்ய வஸ்துவை யறிந்து, அந்த அறிவுடன்) சொல்லுகிறாரோ அவர் தான் அதிவாதி (உயர்ந்த வஸ்துவை சொல்லுகிறவன்; பிரம ஞானி; பிர்மவித்; ஆத்மவித்).

நாரதர்—அந்த ஸத்யத்துடன் அதிவாதியாய் இருக்கும்படி என்னை செய்யும்.

ஸநத்குமாரர்—அப்பொழுது ஸத்யம்அறியப்படவேண்டியது.

நாரதர்—ஸத்யத்தைதங்களிடமிருந்து அறியவிரும்புகிறேன்.

கண்டம் 17.

1. ஸநத்குமாரர்—எப்பொழுது ஒருவன் (ஸத்வஸ்துவை) அறிகிறானோ (அநிருதமாயும், விகாரஜாதமாயுமிருக்கிற ஜகத்தை தள்ளி ஸத் ஒன்றே ஸத்ய மென்ற விசேஷித்த ஞானம் எப்பொ

ழுது உண்டாகிறதோ), அப்பொழுது ஸத்யத்தை சொல்லுகிறவனாகிறான்; செவ்வையாக அறியாமல் ஸத்யத்தை சொல்லமாட்டான்; அறிந்தே சொல்லுவான். ஆகையால் அப்படிப்பட்ட விஞ்ஞானம் அறியப்படவேண்டும்.

நாரதர்—அப்படிப்பட்ட விஞ்ஞானத்தை தங்களிடமிருந்து அறிய இச்சிக்கிறேன்.

கண்டம் 18.

1. ஸநத்குமாரர்—(விஞ்ஞானத்திற்கு ஹேதுமதி, மனனம், செவ்வையாக விசாரித்து பார்க்குகை); எப்பொழுது விசாரிக்கிறானோ அப்பொழுது அறிகிறான். (மற்றது முன்போல்).

நாரதர்—மதியை அறியவிரும்புகிறேன்.

கண்டம் 19.

1. ஸநத்குமாரர்—(மதிக்கு ஹேது சிரத்தை, விசுவாசம், ஆஸ்திக்யபுத்தி ஆவல்); எப்பொழுது சிரத்தைப்படுகிறானோ அப்பொழுது மநநம் செய்கிறான். (மற்றது முன்போல்).

நாரதர்—சிரத்தையை அறிய விரும்புகிறேன்.

கண்டம் 20.

1. ஸநத்குமாரர்—(சிரத்தைக்கு ஹேது நிஷ்டை; பிரம விஞ்ஞானத்தின் பொருட்டு குரு சுச்ரூஷை முதலான காரியம்); எப்பொழுது நிஷ்டாகார்யத்தை செய்கிறானோ அப்பொழுது (நல்ல ஸஹவாஸத்தால்) சிரத்தையையடைகிறான். (மற்றது முன்போல் இதற்குத்தக்கவாறு).

நாரதர்—நிஷ்டையை அறிய விரும்புகிறேன்.

கண்டம் 21.

1. ஸநத்குமாரர்—(நிஷ்டைக்கு ஹேது க்ருதி; இந்திரிய ஸம்யமம்; சித்தைகாக்ரதா; இந்திரியங்களை, பகிர் வ்யாபாரங்களில் ப்ரவேசிக்க வொட்டாமல், அடக்கிவைத்துக்கொள்ளுதல்; அப்படி அடக்கிவைத்துக்கொண்டால் தான் பிரமத்தை அறியும்

படி நிஷ்டாகார்யத்தில் ப்ரவேசிப்பான்; எப்பொழுது க்ருதி செய்கிருனோ அப்பொழுது நிஷ்டையை செய்கிருன். (மைற்றது இதற்கு தக்கபடி முன்போல்).

நாரதர்—க்ருதியை அறிய விரும்புகிறேன்.

கண்டம் 22.

1. ஸனத்குமாரர்—(சுகத்தை உத்தேசித்து க்ருதிக்கு இடம் உண்டாகிறது); (இனி சொல்லப்படப்போகிற நிரதிசயமான) சுகம் என்றால் அடையப்படவேண்டியது என்று எப்பொழுது நினைக்கிருனோ அப்பொழுது க்ருதியை செய்கிருன்; ஒரு சுகத்தை உத்தேசிக்காமல் ஒருவனும் ஒரு காரியத்தை செய்யமாட்டான். (மைற்றது முன்போல் இதற்கு தக்கபடி).

நாரதர்—சுகத்தை யறிய இச்சிக்கிறேன்.

கண்டம் 23.

1. பூமா (பெரிது, மகத்) என்றது சுகம்; (ஆனந்தம், பிர்மம், ஆத்மா). அல்பத்தில் சுகம் இருக்கமாட்டாது. ஆனதால் பெரிதே சுகம்; ஆதாலால் பூமா என்றது அறியப்படவேண்டியது.

நாரதர்—பூமாவை அறிய விரும்புகிறேன்.

கண்டம் 24.

1. ஸனத்குமாரர்—எதனிடத்தில் அதையே தவிற மைற்றதொன்றும் காணப்படவில்லையோ, கேட்கப்படவில்லையோ, (நினைக்கப்படவில்லையோ), அறியப்படவில்லையோ அதுவே பூமா; இதற்கு அன்யமாயிருக்கிறது அல்பம்; பூமாவிற்கு நாசமில்லை; அல்பத்திற்கு நாசமுண்டு.

நாரதர்—அப்படிப்பட்ட பூமா எதில் ப்திஷ்டிதமாயிருக்கிறது?

ஸநத்குமாரர்—அதன் சொந்த மகிமையில் ப்ரதிஷ்டிதமாயிருக்கிறது என்று சொல்லாமோவெனில், அப்படியுமன்று.

2. உலகத்தில், ஒருவனுக்கு இருக்கும் கோ, அச்வம் முதலான ஸம்பத்துக்களில் அவனுக்கு மகிமையுண்டு; அப்படிப்போல்

இந்த பூமா விஷயத்தில் அந்யத்தில் அந்யம் ப்ரதிஷ்டிதமாயிருக்கிறது என்று சொல்லக்கூடாது (பின்னையோவென்றால், சொல்லுகிறேன், கேள்!).

கண்டம் 25.

1. அந்த பூமாவே கீழும், மேலும், பின்னும், முன்னும், தெற்கிலும், வடக்கிலும் இருக்கிறது; இதோ காணப்படுகிற எல்லாம் அதுவே. பிறகு, அஹங்காரத்தால் உபதேசம் (சொல்லப்படுகிறது); அதுவே நான்; நானே கீழும், மேலும் முதலான எங்கும் இருக்கிறேன்; எல்லாமாகவும் இருக்கிறேன்.

2. ஆத்மாவாக ஆதேசம் (சொல்லப்படுகிறது). கீழும், மேலும் முதலான எங்கும் ஆத்ம ஸ்வரூபமாயிருக்கிறது; எங்கும் ஆத்மா; எல்லாம் ஆத்மா; இப்படி பார்த்து, இப்படி நினைத்து, இப்படி அறிகிறவன் ஆத்மாவிடத்தில் ரதியுள்ளவன் (ஆத்மாவினிடத்தில் தேகஸம்பந்தமான விளையாட்டுள்ளவன்; அதாவது, தன்னிடத்திலேயே ஆத்மா இருக்கிறதென்று அறிந்து ஆநந்தப்படுகிறவன்); ஆத்மாவிடத்தில் க்ரீடையுள்ளவன் (வெளி ஸம்பந்தமான விளையாட்டுள்ளவன்; அதாவது, வெளியில் காணப்படுகிறதெல்லாம் ஆத்மாவென்று அறிந்து ஸந்தோஷப்படுகிறவன்); ஆத்மாவிடத்தில் மிதுனமுள்ளவன் (ஆத்மாவிடத்திலேயே சேர்ந்து சுகப்படுகிறவன்); ஆத்மாநந்தன் (அவனுடைய ஆனந்தம் ஆத்மமயமாயிருக்கும்); தானே ராஜாவாயிருப்பான்; எல்லா லோகங்களிலும் தன் இஷ்டப்படி நடப்பான். எவன் வேறுவிதமாக அறிகிறானோ (அறிவான்), அவன் வேறு ராஜாவுக்குள்பட்டிருப்பான்; நாசமுள்ள லோகங்களை யடைவான்; எல்லா லோகங்களிலும் தன்னிச்சைப்படி நடக்க முடியாது.

கண்டம் 26.

1. இப்படி பார்த்து, நினைத்து, அறிந்தவனுக்கு ப்ராணன் முதலான யாவற்றையும் ஆத்ம ஸ்வரூபமாக பார்க்கிறான். ஆத்மாவிடத்திலிருந்து வந்ததாகவே தோணுகிறது.

2. இதைப்பற்றி ஒரு ச்லோகம் இருக்கிறது. (அதாவது) இப்படி பார்க்கிறவன் மிருத்யுவை (மரணத்தை) பார்க்கமாட்டான்; ரோகத்தை பார்க்கமாட்டான்; துக்கத்தை பார்க்கமாட்டான்; எல்லாவற்றையும் ஆத்மாவாக பார்க்கிறான்; எல்லாவற்றையும் எல்லாப் பிரகாரமாகவும் அடைகிறான்; ஸ்ருஷ்டிக்குமுன் அவனே ஒன்றாகவிருந்தான், அதாவது, அவனே ஆத்மா. பிறகு மூன்று ஆனான்; ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று முதலான வெகுவாக ஆனான்.

முதலில், ஆகார சுத்தமாயிருக்கவேண்டும் (ஆகாரம் என்றால் ரஸனாதி இந்திரியங்களின் விஷயங்கள்); (சுத்தமான அன்னத்தை சாப்பிடவேண்டும், சுத்தமாயிருப்பதை பார்க்கவேண்டும், சுத்தமாயிருப்பதை கேட்கவேண்டும், சுத்தமாயிருப்பதை முகரவேண்டும், சுத்தமாயிருப்பதை தொடவேண்டும்). அப்படி செய்தால் அந்தக்கரணசுத்தி உண்டாகும்; அதனால் நிச்சியமான ஸ்மரண சக்தியுண்டாகும்; அதனால் எல்லா ஸந்தேகங்களும் நிவிர்த்தியாகும்.

ராகத்வேஷாதி கல்மஷமற்றுப்போன நாரதருக்கு அஞ்ஞானத்தின் பாரத்தை (முடிவை) இப்பிரகாரம் ஸநத்குமாரர் காண்பித்தார். மேற்படி ஸநத்குமாரரை ஸ்கந்தர் என்று சொல்லுவார்கள், ஸ்கந்தர் என்று சொல்லுவார்கள்.

எட்டாம் ப்ரபாடகம்.

கண்டம் 1.

[முன் அத்யாயத்தில் சொல்லிய பிரகாரம் பிரமம் திக்தேச காலாதிபேத சூன்யமுள்ள வஸ்துவாக விருந்தபோதிலும், அவ்விதம் எளிதில் அறியக்கூடாத மந்தபுத்தி யுடையவர்களுக்கு, மனதை ஓர் இடத்தில் நிலைநிறுத்தும் பொருட்டு, இந்த தேகத்தி லேயே ஓர் இடத்தில் அந்த பிரமம் இருக்கிறது என்று குறித்துக் காட்டி, அதை அறியவேணுமென்று இந்த அத்யாயத்தில் சொல்லப்படும்; இது யோகிகள் கொள்கை. ஞானிகளை அபேக்ஷித்து யோகிகள் மந்தபுத்தி யுள்ளவர்கள்; அப்படியிருந்தாலும் ஞானிகளாவதற்கு யோகம் உத்தமமான வழி].

1. பிறகு, இந்த தேகத்தில் பிர்மபுரம் என்று பெயருள்ள (பிர்மம் இருக்கிற பட்டணம்; இந்திரியாதிகள் ஜனங்கள், பிர்மம் ராஜா), அல்பமாயிருக்கிறதும், தாமரை புஷ்பம்போ லிருக்கிறது மான ஒரு வீடு (இருப்பிடம், ஸ்தானம்) இருக்கிறது. அந்த வீட்டுக்குள் மிகவும் அல்பமாயிருக்கிற ஒரு ஆகாசம் (வெளி ஓட்டை) இருக்கிறது; அந்த ஆகாசத்தில் எது (எந்த பிர்மவஸ்து) இருக்கிறதோ அதை தேடவேண்டும், அறியவேண்டும்.

2. இப்படிச் சொன்ன குருவைப் பார்த்து, 'இது என்ன, அளவிடப்பட்டிருக்கிற இந்த சரீரத்தில், அல்பமாயிருக்கிற ஒரு வீடு, அதில் மிகவும் அல்பமான ஆகாசம், அதற்குள் எப்படி ஒரு மகத்தான பிர்மவஸ்து இருக்கக்கூடும்; அதைத் தேடவாவது, அறியவாவது, எப்படிக் கூடும்' என்று சிஷ்யன் கேட்டால், அதற்கு பதில் சொல்லப் படுகிறது.

3. அந்த ஹிருதயாகாசம் எப்படி யிருக்கிறதெனில், அள வுக்குள்பட்டு இதோ காணப்படுகிற பௌதிக ஆகாசம் ஒப்பந்தம் பெரிதாயிருக்கிறது; இன்னமும் விஸ்தாரம், எப்படியெனில், இந்த

ஸ்வர்க்கம், பூமி, அக்னி, வாயு, சூர்யன், சந்திரன், மின்னல், நக்ஷத்ரங்கள், இவைகளும், இவ்வுலகத்தில் இன்னும் எதெது தேகமுள்ளதா யிருக்கின்றனவோ அவைகளும், அப்படியில்லாமல் எவைகளிருக்கின்றனவோ அவைகளும் அந்த ஹிருதயாகாசத்தில் அடங்கியிருக்கின்றன.

(இந்த சரீரத்திற்குள்ளிருக்கிற அல்பமான புண்டரீக ஆகாசத்தில் இந்த மகத்தான பூதாதிகள் எப்படியிருக்கக் கூடுமென்றால், ஒரு ஸ்வச்சமான சிறிய கண்ணாடியில் அல்லது ஒரு பாத்திர ஜலத்தில் இந்த பெரிய ஆகாசம், அதிலிருக்கிற சந்திர, சூர்ய, நக்ஷத்ராதிகளுடன் பிரதிபிம்பப்பட்டு எப்படி காணப்படுகிறதோ, அப்படிப்போல், ஸ்வச்ச அந்தக்காணமாகிய கண்ணாடியில், அது அல்பமாயிருந்தபோதிலும், முன் சொல்லியவைகளெல்லாம் பிரதிபிம்பப்பட்டு யோகிகளுக்கு காணப்படுகிறது).

4. இந்த பிர்மபுரமாகிய தேகத்தில், எல்லா பூதங்களும், எல்லா காமங்களும், மற்றுமுள்ள எல்லாம் இருக்கிறது என்று சொல்லப்பட்டால், இந்த தேகம் ஜரையடைந்து நசித்துப்போய் விட்டால், அப்பொழுது, அதற்குள்ளிருக்கின்றனவெல்லாம் போய் விடுமே, அப்பொழுது என்ன மிஞ்சியிருக்கும்? என்று சிஷ்யன் கேட்டால், அதற்கு குரு பதில் சொல்லுகிறார்.

5-6. இத்தேகத்தின் ஜரையினால் அந்த பிர்மம் ஜரையையடைகிறதில்லை; தேகம் அடிபட்டால் பிர்மம் அடிபடுகிறதில்லை; இந்த பிர்மபுரம் (பிர்மமாகிறபுரம்) ஸத்யம்; தேகமாகிற பிர்மபுரம் ஸத்யமல்ல; இந்த ஸத்யமுள்ள பிர்மபுரத்தில் இச்சைகளெல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது; இந்த பிர்மம் (ஆத்மா) பாபமற்றவர், ஜரையில்லாதவர், மிருத்யுவற்றவர், சோகமற்றவர், பசியற்றவர், தாகமற்றவர், ஸத்யகாமர் (இச்சித்த ப்ரகாரம் நடக்கும்), ஸத்ய ஸங்கல்பர் (ஸங்கல்பித்தபடி நடக்கும்), இப்படி அந்த பிர்மத்தை அறியவேண்டியது. அப்படி யறியாவிட்டால் என்ன தோஷமெனில், இவ்வுலகத்தில் பிரஜைகள் தங்களுக்கு அன்னியனாக ஒரு ஸ்வாமி இருக்கிறதென்று நினைத்துக்கொண்டு (அதாவது,

தானே ப்ரம்மமென்று அறியாமல்), அந்த ஸ்வாமியால் இடப்பட்ட கட்டளைகளிருக்கின்றன, அவைகளின்படி நடக்கவேணுமென்று, அவைகளை எப்படி அனுஸரிக்கிறார்களோ; அப்படி நடந்து எந்த முடிவை, எந்த தேசத்தை, எந்த ஸ்தலத்தை அடையவேணுமென்று இச்சிக்கிறார்களோ அப்படி அந்த முடிவை, தேசத்தை, இடத்தை யடைகிறார்களே யல்லாது, (ப்ரம்மனிஷ் டாப்பாந்தம்) எல்லாவற்றையும் ஸ்வதந்திரமாக யடையமாட்டார்கள்.

மேலும், இப்படிப்பட்டவர்களுக்கு இவ்வுலகத்தில் ஸேவாதி கர்மத்தால் ஜயிக்கப்பட்ட (அடையப்பட்ட) பலனும், பாரதீன உபபோகங்களும் க்ஷயத்தை யடையும்; அப்படியே பரலோகத்தில் யாகாதி கர்மத்தால் அடையப்பட்ட ஸ்வர்காதி போகங்களும் க்ஷயத்துப்போய்விடும்; ஆகையால், இவ்வுலகத்திலியாதொருவன் தன் ஆத்மா, மேற்கனவே சொல்லப்பட்டிருக்கிற லக்ஷணமுள்ளதென்றும், ஸத்ய ஸங்கல்பங்களும், இச்சைகளும் தன் ஆத்மஸ்தங்களாகவே இருக்கின்றன வென்றும் அறியாமல் ஸ்வசரீரத்தை விட்டுப்போகிறானோ அவன் ஸர்வலோகங்களிலும் அகாமசாரனாய் (இச்சைப்படி நடக்கக் கூடாதவனாய்) ஆகிவிடுவான். அவ்விதமாய் அறிந்தவன் எல்லா லோகங்களிலும் காமசாரனாயிருப்பான். (ஆகையால், ஆத்மவிசாரணை செய்யவேண்டியது அவச்யமாயிருக்கிறது).

கண்டம் 2.

1. அப்படி தஹராகாசத்தில் ப்ரம்மத்தை கண்டறிந்தவன் பித்ருலோகத்தை (பிதா ஸம்பந்தமான சுகத்தை; பிதாவாகிற லோகத்தை, சுகத்தை; ஒருவனுடைய புத்திரனாயிருந்து அதனால் அடையப்படும் சுகத்தை) இச்சிப்பானேல், அவன் நினைத்தமாத்திரத்தில் அந்த சுகம் கிடைத்து அதனால் மகிமையை யடைவான்.

2–9. அப்படியே மாத்ரு, ப்ராத்ரு, ஸ்வஸ்ரு, ஸகி (ஸ்நேக), கந்தமால்ய, அன்னபான, கீதவாதித்ர, ஸ்திரீலோக சுகங்களை இச்சித்தால் அந்தந்த சுகம் கிடைத்து அதனால் மகிமையை யடைவான்.

10. எந்தெந்த பிரதேசத்தை இச்சிக்கிறானோ, இன்னும் எதெதை இச்சிக்கிறானோ அவையெல்லாம் அவனுக்கு ஸங்கல்பமாத்திரத்தில் கிடைத்து அவைகளால் மகிமைப்படுவான்.

கண்டம் 3.

1. இந்த ஸத்யமாயிருக்கப்பட்ட காமங்கள் தன்னாத்மாவிலேயே கிடைக்கப்படக் கூடியதாயிருந்தாலும் அவைகள் அந்ருதத்தால் மூடப்பட்டிருக்கின்றன; அவைகட்கு அந்ருதந்தான் மறைவு. (அந்ருதம் என்றால் எதனால் பாஹ்ய விஷயங்களாகிற ஸ்திரீயாதிகளில் இச்சையும், அதனிமித்தம் இஷ்டப்படி நடைவடிக்கைகளும் உண்டாகின்றனவோ அந்த மித்யாஞானம்; அவித்யை). இந்த அஞ்ஞானம்தான் ஸத்யகாமங்களை மறைத்துக்கொண்டிருக்கிறது. (அஞ்ஞானம் இருந்தால் மேற்படி காமங்கள் எப்படி கிடைக்காதென்றால்) அவித்வானுக்கு எவன் எவன் இஷ்டனோ அவனவன் இறந்துபோய்விட்டால் அவனவனை மறுபடியும் இவ்வுலகத்தில் பார்க்கவேணுமென்று நினைத்தால் கிடைக்குமா? கிடைக்காது (ஹிருதயாகாசத்தில் எல்லோரையும் பார்க்கலாம்).

2. மேலும், இவ்வுலகத்தில் ஒருவன் ஜீவனுள்ள புத்திராதிகளையும், இறந்துபோனவர்கள் மறுபடியும் திரும்பிவரவேணுமென்றும், இன்னும் வேண்டிய வஸ்துக்களையும் இச்சித்தால் அவைகளை அடையாமலிருக்கிறான்; இருதயாகாசத்தில் எல்லாம் போயடைந்திருக்கிறது. ஆனால் அந்ருதத்தால் மறைக்கப்பட்டிருக்கிறது. அதெப்படியென்றால், பூமியிலிருக்கப்பட்ட ஸ்வர்ண புதையலின் ஸ்தலத்தை யறியாதவன் அந்த புதையலிருக்கிற ஸ்தலத்தின் பேரிலேயே அடிக்கடி ஸஞ்சரிக்கிறவன் எப்படி அதை அறியாமலிருக்கிறானோ அப்படிப்போல் இந்த பிரஜைகள், தினந்தோறும், ஸுஷுப்தி காலத்தில் பிரமத்தை தன்னிடத்திலேயடைந்தபோதிலும், அஞ்ஞானத்தால் இழுக்கப்பட்டவர்களாக அந்த பிர்மலோகத்தை யறிகிறதில்லை.

3. அப்படிப்பட்ட இந்த ஆத்மா ஹிருதயத்தில் இருக்கிறார்; அதற்கு இது (இனி சொல்லப்படப்போகிறது) சப்தார்த்தம்;-

ஹிருதி—அயம் (இந்த ஆத்மா) என்று ஹிருதயமாயிற்று. இப்படியறிந்தவன் தினந்தோறும் ஸ்வர்க்கத்தை யடைகிறான் (பிர்மத்தை சேருகிறான்).

4. இப்படி அறிந்தவனுக்கு ஸம்ப்ரஸாத: என்று பெயர்; ஸம்ப்ரஸாதத்தை பெற்றவன் (பிரஸாதத்தை பெற்றவன், பிர்மத்துடன் கலந்து ஆநந்தப்பட்டவன்). அவன் இந்த சரீராத்மபாவம் முதலான அஞ்ஞானத்தை விட்டுவிலகி பரஞ்ஜோதியையடைந்து, தன் ரூபத்துடன், அத்துடன் சேர்ந்துவிடுகிறான். அதுவேதான் இந்த ஜீவனுக்கும் ஆத்மாவென்று சொல்லப்பட்டது. அந்த ஆத்மா அம்ருதமாயும், அபயமாயும், பிர்மமாயும் இருக்கிறது; இப்படிப்பட்ட இந்த பிர்மத்திற்கு ஸத்யம் என்று பெயர்.

5. 'ஸத்யம்' என்ற இந்த மூன்று அக்ஷரங்களுக்கு அர்த்தம் சொல்லப்படுகிறது ஸ—அம்ருதம்; தி—மர்த்தியம்; யம்—மேற்படி இரண்டையும் சேர்க்கிறது. ஒன்று செய்கிறது, வசீகரம் செய்கிறது. (ஸ—ஜலம், சக்தி; த—அக்னி, சிவன்; யம்—வாயு, சேர்க்கை ஆனந்தம்). இப்படியறிந்தவன் தினந்தோறும் ஸ்வர்க்கலோகத்தையடைகிறான்.

கண்டம் 4.

1–2. அப்படிப்பட்ட ஆத்மா ஸேது (கரையைப்போல, ஜலத்தைப் போகவொட்டாமல் அடைத்துக்கொண்டிருக்கிற கரையைப்போல் இருக்கிறது). மேலும், விதிருதியாயு மிருக்கிறது (எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டிருக்கிறது). (லோகங்களை அந்தந்த வர்ணாச்ரம முதலிய தர்மங்களைவிட்டு நழுவாமல்) கட்டுப்பாடாக வைத்துக்கொண்டிருப்பதால் (அதற்கு ஸேது என்று பெயர்). இந்த ஸேதுவென்ற ஆத்மாவை பகல் ராத்திரி தாண்டுகிறதில்லை (காலத்தால் பரிச்சேத்யமில்லை). அதை ஜரை அடையாது; மிருத்யு, சோகம், ஸுகிருதம், துஷ்கிருதம் இவைகளும் அடைகிறதில்லை. எல்லா பாபங்களும் போய்விடுகின்றன; ஆதலால், இந்த பிர்மலோகமென்ற ஆத்மா (ஹிருதயாகாச ஆத்மா, ஸம்ப்ரஸாதத்தை யடைந்த ஜீவன்) பாபமற்றவர். ஆனதால்,

இந்த ஸேதுவைக் கடந்தால் (அறிந்தால்) அந்தன் அநந்தனுய் விடுவான் (சரீரமுள்ளபோது அஞ்ஞானத்தால் மூடப்பட்டு பொட்டையனுயிருப்பவன் ஞானம் கிடைத்து கண்தெரியும்); தேகமிருக்கும்பொழுது அதினுடைய கார்யங்களால் அடிபட்டு தொந்திரவுபட்டவன், சரீரம்போன பிறகு அடிபடாதவனுகிருன். ஸங்கடப்பட்டவன், ஸங்கடப்படாதவனுகிருன். இந்த ஸேதுவை கடந்தால் அவனுக்கு ராத்திரியும் பகல் ஆகிவிடுகிறது (அதாவது பிரகாசத்தைக் காணுகிருன்). எப்பொழுதும் பிரகாசமுள்ளவனுய் பிர்மலோகமாகிருன்.

3. எவர்கள் இந்த பிர்மலோகத்தை பிர்மசரியத்தினுல் அடைகிருர்களோ, அவர்களுக்குத்தான் இந்த பிர்மலோகம் (மைற்றவர்களுக்கு இல்லை). எல்லா லோகங்களில் காமசாரனுய் இருப்பான். (பிர்மசரியம் என்றுல் ஸ்திரீவிஷய திருஷ்ணுதி த்யாகம்; பிர்மசரியம் இருந்தால்தான் பிர்மலோகம் கிடைக்கும்; ஆதலால் பிர்மவித்துக்கு பிர்மசரியம் அவசியம் வேண்டும்; பிர்மத்தையறிந்த ஞானியாயிருந்தாலும் பிர்மசரியம் அகத்தியம் வேண்டும், பரலோகஸாதனம்).

கண்டம் 5.

1. (ஞானத்திற்கு ஸாதனமாயிருக்கிற பிர்மசரியம் என்பது யஞ்ஞம் முதலான சப்தத்தினுல் ஸ்துதிக்கப்படுகிறது; அதை அவச்யம் அநுஷ்டிக்கவேண்டியதாயிருப்பதால் ஸ்துதிக்கப்படுகிறது).

யஞ்ஞமென்றதும் பிர்மசர்யமே; ஞானி அந்த பிர்மசர்யத்தால் யஞ்ஞபலத்தை யடைகிருன். இஷ்டமும் (தேவபூஜை முதலானது) பிர்மசர்யமே; அந்த பிர்மசர்யத்தால் ஆத்மாவை யடைகிருன்.

2. ஸத்ராயணம் என்றதும் பிர்மசர்யமே (ஆத்ம ரக்ஷணம், அல்லது, வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதும் வெகு யஜமானர்களுள்ளதுமான ஒருவித யாகம்); இந்த பிர்மசர்யத்தால் ஸத்தாகவிருக்கிற ஆத்மாவிற்கு ரக்ஷணத்தை யடைகிருன். மௌனம் என்

றதும் பிரம்மசர்யமே (சாஸ்திரம், குரு விடங்களிலிருந்து அறிந்து கொண்டு நினைத்துப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருக்குகை). இந்த பிரம்மசர்யத்தால், ஆத்மாவை அறிந்து, நினைக்கிறான்.

3. அநாசகாயநம் என்றதும் பிரம்மசர்யமே (உபவாஸம் இருக்குகை முதலானது); இந்த பிரம்மசர்யத்தால் எந்த ஆத்மா அடையப்படுகிறதோ அந்த ஆத்மாவிற்கு நாசமில்லை (இறப்புப் பிறப்பில்லை). அரண்யாயநம் என்றதும் பிரம்மசர்யமே (அரண்யவாஸம் முதலானது). (இவ்விடத்தில் பிரம்மலோகம், இருதயாகாசம் வர்ணிக்கப்படுகிறது, அதையடைகிறதற்கு ஒரு ருசி காட்டவேண்டிய நிமித்தம்); பிரம்மலோகத்தில் 'அர' என்றும், 'ண்ய' என்றும் இரண்டு ஸமுத்ரங்கள் உண்டு; மூன்றாவது லோகமாகிய, ஸ்வர்க்கமாகிய, பிரம்மலோகத்தில் அன்னமயமாயிருக்கிற மத ரஸகுளம் இருக்கிறது; அச்வத்த விருக்ஷம் ஒன்றுமிருக்கிறது; அமிருதஸ்ரவமிருக்கிறது; அபராஜிதா (ஒருவராலும் ஜயிக்கப்படாத) ஒரு பட்டணமிருக்கிறது; பிரம்மலோகம் ஹிரண்மயமுமாயிருக்கிறது.

4. மேற்கண்ட இரண்டு ஸமுத்ரங்களையும் (அமிருதத்தை), பிரம்மசர்யத்தால் பிரம்மலோகத்தில் அடைகிறான். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் மேற்படி பிரம்மலோகம்; அப்படியறிந்தவன் எல்லாலோகங்களிலும் காமசாரனாயிருப்பான்.

கண்டம் 6.

1. (ஹிருதயாகாச பிரம்மத்தை உபாஸிப்பவனுக்கு ஸுஷும்நா நாடிவழியாக கதியென்று சொல்லப்படுகிறது.

ஹிருதயபுண்டரீகத்தில் நின்றும் பரவிப்போகிற நாடிகள் நானாவர்ணமுள்ள ஸூக்ஷ்ம ரஸத்தினால் நிறைந்திருக்கின்றன; அப்படியே சுக்ல ரஸத்தாலும், நீல ரஸத்தாலும், மஞ்சள்வர்ண ரஸத்தாலும், சிகப்பு ரஸத்தாலும் நிறைந்திருக்கின்றன. (பித்தத்துடன் கபம் கொஞ்சம் சேர்ந்தால் பிங்களவர்ணம்; பித்தத்துடன் வாயு ஜாஸ்தியாய் சேர்ந்தால் நீலம்; பித்தத்துடன் கபம் ஜாஸ்தியாய் சேர்ந்தால் சுக்லம்; பித்தத்துடன் கபம் ஸமமாயி

ருந்தால் பீதம்; பித்தத்துடன் ரக்தம் ஜாஸ்தியாய் சேர்ந்தால் லோகிதம்). இந்த ஆதித்யன் பிங்கள, சுக்ல, நீல, பீத, லோகித வர்ணமுள்ளவர். (சூர்யனுக்கு நாடிகள் எப்படி ஸம்பந்தமென் றால் சொல்லப்படுகிறது).

2. ஒரு பெரிய விஸ்தாரமான ரஸ்தாமார்க்கம், ஒருபக்கத்தில் ஸமீபத்திலுள்ள ஒரு ஊருக்கும், மற்றொரு பக்கத்தில் தூரத்திலுள்ள ஒரு ஊருக்கும், இந்த இரண்டு ஊர்களுக்கும் எப்படி மார்க்கமாய் இருக்கிறதோ, அப்படி விஸ்தாரங்களாயிருக்கிற சூர்ய கிரணங்கள், அந்த ஆதித்ய லோகத்தையும், இந்த புருஷலோகத்தையும் போய் சேருகின்றன; ஆதித்யனிடத்திலிருந்து கிளம்பி பரவி, இந்த புருஷ நாடிகளில் வந்து பிரவேசிக்கின்றன; மறுபடியும் அவைகள் இந்த நாடிகளிலிருந்து கிளம்பி, பரவி, ஆதித்யனிடத்தில் பிரவேசிக்கின்றன.

3. இந்த புருஷன் சுழுப்தி தசையில் கரணமடங்கினவனாய், பாஹ்ய விஷயங்களினாலுண்டாகும் காலுஷ்யமற்றவனாய், எப்பொழுது ஸ்வப்னத்தை அனுபவிக்காம லிருக்கிறானோ, அப்பொழுது மேற்கண்ட நாடிகள் வழியாக ஹிருதய கமலத்தைப் போய் சேருகிறான். அப்பொழுது அவனை பாபம் தொடுகிறதில்லை; தேஜஸ்ஸுடன் ஸம்பந்தனாயிருக்கிறான்.

4. ஒரு புருஷன் அபலத்தை (மரண சமயத்தை) யடைந்த பிறகு, அவனைச்சுற்றி ஞாதிகள் உட்கார்ந்துகொண்டு, 'என்னைத் தெரியமா, என்னைத் தெரியுமா' வென்று கேட்கிறார்கள். சரீரத்திலிருந்து ஆத்மா வெளிப்படும்வரை தெரிந்துகொள்ளுகிறான்.

5. பிறகு, இந்த சரீரத்திலிருந்து கிளம்பி, சூர்ய கிரணங்களுடன் சேர்ந்து, உயரப்போகிறான். (அவித்வான் அவனுக்குத் தகுந்த லோகத்திற்குப்போகிறான்); வித்வானோ, ஓங்காரத்தால், ஆத்மாவை த்யானம் செய்துகொண்டு, உயரப்போகிறான் : மனஸ் ஒழிந்தவுடன் ஆதித்யனைப்போய்ச் சேருகிறான்; அந்த ஆதித்யனே பிர்மலோகத்திற்கு த்வாரம்; வித்வான்கள் யடைகிற இடம்; அவித்வான்கள் தடுக்கப்படுகிற விடம்.

6. இதைப்பற்றி ஒரு மந்திரம் இருக்கிறது; அதாவது, 'ஹிருதயத்தில் நூற்றி ஒன்று நாடிகள் இருக்கின்றன; அவைகளில் ஒன்று மூர்த்தாவைப்போய் அடைகிறது (அதாவது, சுழும்னாநாடி); அதன் வழியாக (வித்வான், ஏறி) உயரப்போய் அமிருதத்வத்தை யடைகிறான். மற்ற நாடிகள் சூழவும் நடுவுமாய் இருக்கின்றன; அவைகள் உத்க்ரமண நிமித்தமாகமட்டும் இருக்கின்றன.'

கண்டம் 7.

1. யாதொரு ஆத்மா உளதோ, அவர் அபஹதபாப்மா, விஜர:, விம்ருத்யு விசோகன், அவிஜிகத்ஸன், அபிபாஸன், ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன், இப்படிப்பட்டவராயிருக்கிறார்; இவரைத் தேடவேண்டியது; இவரை அறியவேண்டியது; இப்படியறிந்தவன் எல்லாக்காமங்களையும், எல்லாலோகங்களையும் அடைவான், என்று பிரஜாபதி சொன்னார்.

2. இந்த பிரஜாபதி வசனத்தைத் தேவர்கள், அஸுரர்கள், இவ்விருவகையாரும் கேட்டறிந்தார்கள். எந்த ஆத்மாவைக் கண்டுபிடித்தால் எல்லா லோகங்களும், எல்லாக் காமங்களும் கிடைக்கின்றனவோ, அந்த ஆத்மாவை தேடுவோம் என்று, அவரவர் கூட்டத்தில் பேசிக்கொண்டு, தேவராஜாவாகிய இந்திரனும், அஸுரராஜாவாகிய விரோசனனும், ஒருவருக்கொருவர் தெரியாமல், ஸமித்பாணிகளாய் பிரஜாபதியிடம் சென்றார்கள்.

3. அவ்விடத்தில் முப்பத்திரண்டு வருஷங்கள் பிரமசரியத்தை அனுஷ்டித்துக்கொண்டு (குரு சுச்ரூஷை முதலானது செய்துகொண்டு) வஸித்தார்கள்.

பிரஜாபதி—எதற்காக வஸிக்கிறீர்கள்? இருவர்களும்—'எந்த ஆத்மா, அபஹதபாப்மா, விஜர' முதலானது தாங்கள் சொன்னதாக பெரியோர்கள் சொல்லுகிறார்களே! அந்த ஆத்மாவை அறிய வேண்டிய நிமித்தம் இவ்விடத்தில் வஸிக்கிறோம்.

4. பிரஜாபதி—கண்ணில் எந்த புருஷன் தோணப்படுகிறதோ (எது கண்ணில் இருந்துகொண்டு பார்க்கும்படியான சக்தியை

கொடுக்கிறதோ; எது பார்க்கிறதோ) அந்த புருஷன் ஆத்மா; அதுவே அமிருதவஸ்து; அபயவஸ்து; பிர்மம் என்று சொல்லப் பட்டது.

(இப்படிச் சொல்லப்பட்டதை சாயா புருஷன், பிரதிபிம்ப புருஷன், அதாவது ஜீவன் என்று நினைத்துக்கொண்டு இருவர்களும் கேட்டார்கள்).

இருவர்கள்—ஜலத்தில் ஆத்மப் பிரதிபிம்பம் தோணப்படுகிறதே; தாங்கள் ஒன்று சொன்னீர்கள்; இவைகளுக்குள் எது ஆத்மா? அல்லது எல்லாவற்றிலும் தோணப்படுகிறது ஒன்றுதானா?

பிரஜாபதி—எல்லாவற்றிலும் தோணப்படுகிறது ஒன்றுதான், அந்த ஆத்மா.

கண்டம் 8.

1. ஜலமுள்ள ஒரு பாத்ரத்தில் ஆத்மாவை (உங்கள் தேகத்தை) பார்த்துக் கொள்ளுங்கள்; ஒன்றும் தெரியாவிட்டால் பிறகு கேளுங்கள்;

அவர்கள் அந்தப்படி பார்த்தார்கள். பிரஜாபதி—என்ன பார்த்தீர்கள்? இருவரும்—நகம் முதற்கொண்டு எல்லா அவயவங்களுடன் தேகத்தை (ஆத்மாவை) பார்த்தோம்.

2–3. பிரஜாபதி—நல்ல வஸ்திரம் கட்டிக்கொண்டு, அலங்காரஞ்செய்துகொண்டு, க்ஷவரம் முதலானதால் பரிஷ்காரம் செய்துகொண்டு, பிறகு, உதசராவத்தை (ஜலமுள்ள பாத்ரத்தை)ப் பாருங்கள்.

இருவரும்—அந்தப்படிப் பார்த்தோம்.

பிரஜாபதி—இப்பொழுது எதைப் பார்க்கிறீர்கள்?

இருவரும்—முன் அலங்காரமில்லை, இப்பொழுது அலங்காரத்துடன் தேகத்தைப் பார்க்கிறோம்.

பிரஜாபதி—அதுதான் ஆத்மா! அமிருதம், அபயம், பிர்மம்.

இப்படி இருவர்களும் கேட்டுக்கொண்டு சாந்த ஹிருதயமுள்ளவர்களாய் போனார்கள்.

4. அப்படிப்போன இருவர்களைப் பார்த்து, பிரஜாபதி சொல்லுகிறதாவது—ஆத்மாவை அறியாமல், அடையாமல், போகிறீர்கள்; இந்தப்படி தேகம் ஆத்மாவென்ற கொள்கை இருந்தால் (அப்படி அபிப்பிராயப்படுகிறவர்கள்), தேவர்களாகட்டும் அல்லது அஸுரர்களாகட்டும், அவமானத்தை யடைவார்கள்.

இப்படிச் சொல்லியும் விரோசனன் சாந்த ஹ்ருதயனாய் அசுரர்களிடம் சென்றான். இந்த தேகமே ஆத்மாவென்றும், அதுவே பூஜிக்கப்படத் தகுந்ததென்றும், பரிசர்யம் செய்யப்படத் தகுந்ததென்றும், அப்படிச் செய்தால் இவை இரண்டுலோகங்களும் கிடைக்கும் என்றும், இப்படி உபநிஷத்தை அஸுரர்களுக்குச் சொன்னான்.

5. ஆதலாலே, அஸுரர்களின் கொள்கை பகுத்தறிவில்லாமையும், சிரத்தையில்லாமையும், யாகாதிகர்மமில்லாமையுமாய்ப் போய்விட்டது; ஜீவனற்ற சரீரத்தை அலங்கார முதலானது செய்து கொண்டாடுகிறார்கள்; அதனால் அந்த லோகத்தை ஜயித்துப்போடலாமென்று எண்ணுகிறார்கள்.

கண்டம் 9.

1. இந்திரன் தேவர்களிடம் போகாமலே யோஜித்துப் பார்த்ததில் அவனுக்கு பயம் (ஸந்தேகம்) உண்டாயிற்று. உதசாவத்திலே இந்த பிரதிபிம்பம் சரீரம் அலங்காரம் செய்யப்பட்டால் அப்படியே காணப்படுகிறது; கொண்டை, பொட்டை எப்படி இருக்கிறதோ அப்படியே காணப்படுகிறது; அப்பொழுது சரீரத்திற்கு நாசமுண்டே! போக்யம் ஒன்றும் காணவில்லையே! என்று ஸந்தேகித்தான்.

2. மறுபடியும், ஸமித்பாணியாக பிரஜாபதியிடம் வந்தான். சாந்த ஹ்ருதயனை, விரோசனனுடன், போய்விட்டீர்களே! நீ ஏன் திரும்பவந்தாய்? என்று அவர் கேட்டார். அதற்கு (முன் சொன்னபடி) தன் ஸந்தேகத்தைச் சொன்னான்.

3. ஸரிதான்; ஹே! இந்திர! சாயாத்ம ஞானம் கூடாது தான்; நான் செவ்வையாக உபதேசம் செய்கிறேன்; இன்னும்

முப்பத்திரண்டு வருஷங்கள் பிர்மசாரியம் உபாஸி என்றார். அந்தப்படியே முப்பத்திரண்டு வருஷங்கள் இருந்தான். பிறகு, பிரஜாபதி சொல்லுகிறார்.

கண்டம் 10.

1-2. பிரஜாபதி—எந்த ஆத்மா ஸ்வப்நதசையில் மகிமையையடைந்து, எல்லாபோகங்களையும் அனுபவிக்கிறானோ அவனே ஆத்மா; அமிருதம், அபயம், பிர்மம்.

இந்திரன் இதைக்கேட்டு சாந்த ஹிருதயனாய் போனான். தேவர்களிடம் போகாமலே, ஆலோசித்துப் பார்த்ததில், அவனுக்கு இந்த பயம் வந்தது. (ஏதென்றால்) இந்த சரீரம் பொட்டையாயிருந்தாலும், ஊனமாயிருந்தாலும் ஸ்வப்நாத்மா பொட்டையுமல்ல ஊனமுமல்ல; சரீரத்திற்குப்போல இந்த ஆத்மாவிற்கு தோஷமில்லை; அடியினால் அடிபடவுமில்லை; ஊனத்தினால் பாதிக்கப்படவுமில்லை; அப்படியிருந்தாலும், அது சிலரால் அடிக்கப்படுகிறது போலவும், துரத்தப்படுகிறது போலவும், அழுகிறதுபோலவும், காணப்படுகிறது; (அப்படியிருக்க அதற்கு அமிருதத்வமும் அபயத்வமும் எவ்விதம் ஸித்திக்கும்). இந்த விஷயத்தில் போக்யத்தை பார்க்கவில்லை. (ஸ்வப்நாத்மா விஷயத்திலும் தோஷமிருக்கிறது என்று).

3-4. (இந்த ஸந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள) மறுபடியும், இந்திரன், ஸமித்பாணியாக பிரஜாபதியிடம் சென்றான். ஏன் மறுபடியும் வந்தாய்? என்று அவர் கேட்டார். தான் ஸந்தேகித்தபடி இந்திரன் சொன்னான். அதை மறுபடியும் உனக்கு செவ்வையாக சொல்லுகிறேன், அப்பா! கேள்!, ஆனால் இன்னம் உன்னிடத்தில் தோஷமிருக்கிறது; அதைப்போக்கடிக்க இன்னம் முப்பத்திரண்டு வருஷங்கள் பிர்ம சர்யமாயிருவென்று சொன்னார். இந்திரன் அப்படியே யிருந்தான். பிறகு பிரஜாபதி சொன்னார்.

கண்டம் 11.

1. பிரஜாபதி—எந்த ஆத்மா ஸுஷுப்த தசையில், ஸமஸ்த காரணங்களும் அடங்கிப்போய், பாஹ்ய விஷயங்களால் பாதிக்கப்

படாமல், ஸம்ப்ரஸந்நமாயிருக்கிறதோ, ஸ்வப்ந விஷயங்களையும் அநுபவிக்கிறதில்லையோ அதுவே ஆத்மா; அபயம், அமிருதம், பிர்மம்.

இதைக்கேட்டு இந்திரன் சாந்த ஹிருதயனாய்ப் போனான்; தேவர்களிடம் செல்லாமல், யோசித்துப் பார்த்ததில், இந்த பயம் உண்டாயிற்று. (எதென்றால்) இந்த ஸுப்தாத்மா, ஸுஷுப்தி காலத்தில் தான் இன்னான் என்றாவது, இந்த பூதங்களையாவது ஒன்றும் தெரிந்துகொள்ளவில்லை; நாசமடைந்துபோனவன்போல் இருக்கிறது. (அறிவேயில்லை, அறிவிருந்தால் அன்றோ ஸத்பாவமிருக்கும்; ஒன்றுமில்லையே; அப்படியிருக்க அதை எப்படி அமிருதாத்மா வென்று சொல்லலாம்). (ஆதலால் ஸுப்தாத்மா விஷயத்திலும் தோஷமிருக்கிறது என்று).

2. இந்த ஸந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள, மறுபடியும், இந்திரன், ஸமித்பாணியாக, பிரஜாபதியிடம் சென்றான். ஏன் திரும்பி வந்தாய்? என்றார். இந்திரன் ஸந்தேகித்தபடி சொன்னான்.

3. பிரஜாபதி—ஸரிதான் அப்பா! ஜாக்ரத, ஸ்வப்ந, ஸுஷுப்தி இம்மூன்று தசை ஆத்மாவும் ஆத்மாவல்ல; இவைகளைத் தாண்டி வேறு வஸ்து இருக்கிறது; அதைப்பற்றி நன்றாய் உனக்குச் சொல்லப் போகிறேன், கேள்!. ஆனால், இன்னம் உன்னிடத்தில் கொஞ்சம் தோஷம் இருக்கிறது; அதைப் போக்கடிக்க இன்னும் ஐந்து வருஷங்கள் பிர்மசர்யமாயிரு என்றார். அந்தப்படி இந்திரன் இருந்தான். இந்தப்படி நூற்றொரு வருஷங்கள் காலம் இந்திரன் பிர்மசர்யமாயிருந்தான். அதனால்தான் இந்திரன் பிரஜாபதியிடத்தில் நூற்றொருவருஷகாலம் பிர்மசர்ய உபாஸனைசெய்தான் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். பிறகு பிரஜாபதி சொன்னார்.

கண்டம் 12.

1. பிரஜாபதி—இந்த சரீரம் நாசத்தையடையத் தகுந்தது; மிருத்யுவால் பிடிக்கப்பட்டதாயிருக்கிறது (மரணம் ஸித்தம், எப்பொழுது ஸம்பவிக்குமோ, காலம் தெரியாது, க்ஷணம்தோறும்

மரணம் வரும் என்று நினைக்கவேணும்). இந்த சரீரம், அமிருதமாயும் அசரீரமாயுமிருக்கிற ஆத்மாவிற்கு (பரபிர்மத்திற்கு) இருப்பிடம். (எப்பொழுது அந்த வஸ்து சரீரத்தில் வந்து உட்காருகிறதோ, அதாவது சரீரத்துடன் கூடுகிறதோ, அப்பொழுது அதற்கு ஜீவன் என்று பெயர்; ஸசரீரன் என்றும் சொல்லப்படுகிறது). ஸசரீரன் பிரியாப்பிரியங்களால் (பாபபுண்யங்களுக்கு காரணங்களாயிருக்கிற தர்மாதர்மங்கள், பாஹ்யவிஷய ஸம்யோக வியோகங்களால்) தொடப்படுகிறான். சரீரத்தோடிருக்கிற ஸத்வஸ்துவைத் தொட்டிருக்கிற பிரியாப்பிரியங்களுக்கு போக்கு கிடையாது. அசரீரமுள்ள ஸத்வஸ்துவைப் பிரியாப்பிரியங்கள் தொடுகிறதில்லை.

2–3. வாயு, அப்ரம் (வெண்மேகம்), மின்னல், நீருண்ட மேகம் இவை (கோடைகாலத்தில்) சரீரமற்றவைகளாக ஆகாசத்தில் அடங்கி கட்டுப்பட்டு நிற்கின்றன. (மாரிகாலத்தில்) இவை, ஆகாசத்திலிருந்து கிளம்பி, பரஞ்சோதியை யடைந்து (சூர்ய பிரகாசத்தால் தபிக்கப்பட்டு), தன் தன் ரூபத்துடன் உண்டாகின்றன. (அதாவது, கீழ்காற்று முதலான வாயு ரூபம்; மலையானை முதலான மேகரூபம்; சலிக்கிற ஜோதிக்கொடி மின்னல் ரூபம்; கர்ஜனம், இடி முதலான நீர்மேகரூபம்). இப்படிப்போல், இந்த ஸம்ப்ரஸாதனாயிருக்கிற ஆத்மா (கோடைகாலமாகிய அவித்யா காலத்தில் கட்டுப்பட்டு கிடந்தவன்), இந்த சரீரத்தில் நின்றும் (மழைகாலமாகிய ஆத்மஞானகாலம் வந்தவுடன்) கிளம்பி, பரஞ்சோதியையடைந்து (ஆத்மபிரகாசத்தை தரிசித்து), தன் சொந்த ரூபத்தோடு, அசரீர ஸச்சிதாநந்த ரூபியாய் ஆய்விடுகிறான். இவனே உத்தமபுருஷன்; எங்கும் போகிறான்; பக்ஷிக்கிறான் (நினைத்தமாத்திரத்தில் வேண்டியதை அனுபவிக்கிறான்); விளையாடுகிறான் (ஸங்கல்ப மாத்திரத்தில் பாஹ்யலோக வஸ்துக்களுடன் சேர்ந்து விளையாடுகிறான்); ஸ்திரீ, வாகனம், ஞாதிஜனம் இவர்களுடன் நினைத்தமாத்திரத்தில் ரமிக்கிறான் (சந்தோஷிக்கிறான்); மறுஜன்மத்தையும், இந்த சரீரத்தையும் நினைக்கிறதில்லை (அதாவது, ஜநந மரணத்திற்கு இடமில்லாமல் செய்துகொள்ளுகிறான்,

அதாவது அவனுக்கு அவைகள் சம்பந்தியா); அப்படிப்பட்ட இந்த ஆத்மா, ரதத்தில் குதிரை கட்டப்படுகிறதுபோல், இந்த சரீரத்தில் (நடத்துவதற்காக) பிராணனைக் கட்டப்பட்டிருக்கிறான்.

4. நேத்திரத்தில் தோணப்படுகிற கிருஷ்ணதாரகையால் உபலக்ஷிதமாயிருக்கிற ஒரு ஆகாசத்தில் (சிறிய வெளியில்) இருந்துகொண்டு, எந்த வஸ்து சக்ஷுஸ் என்று பெயர்கொண்டு பார்க்கிறதோ, அந்தவஸ்து சாக்ஷுஷ புருஷன் (சக்ஷுஸ் சம்பந்தமான ஆத்மா). (அதாவது, அந்த ஆத்மா அவ்விடத்தில் இல்லாவிட்டால் சக்ஷுஸுக்கு பார்வை சக்தி இருக்கமாட்டாது). (ஆனால்) பார்க்கும் பொருட்டு சக்ஷுரிந்திரியம் இருக்கிறது.

இதை முகர்ந்து பார்க்கிறேன் என்று எது அறிகிறதோ அது ஆத்மா; முகர்ந்து பார்க்கும்பொருட்டு க்ராணேந்திரியம்.

இதை சொல்லப்போகிறேன் என்று எது அறிகிறதோ அது ஆத்மா; சொல்லும்பொருட்டு வாக் இந்திரியம்.

இதை கேட்கப்போகிறேன் என்று எது அறிகிறதோ அது ஆத்மா; கேட்பதற்காகச் ச்ரோத்ரேந்திரியம்.

5–6. இதை நினைக்கிறேன் என்று எது அறிகிறதோ அது ஆத்மா; மனஸ் தான் தைவ சக்ஷுஸ் (உயர்ந்த இந்திரியம்); இந்த மனஸினாலே பிரமலோகத்திலுள்ள எல்லாக் காமங்களையும் (ஸங்கல்ப மாத்திரத்தில் கிடைக்கிற போகங்கள்) அனுபவித்துக் கொண்டு ஸந்தோஷிக்கிறான்.

இப்படிப்பட்ட ஆத்மாவை உபாஸித்து தேவர்களெல்லாம், எல்லா லோகங்களையும், எல்லாக் காமங்களையும் அடைந்தார்கள். (அப்படியே மனுஷ்யர்களும் அடைவார்கள்). எந்த மனுஷ்யன் இப்படி ஆத்மாவை அறிகிறானோ அவன் (தேவர்கள் ஒப்பாக) எல்லா லோகங்களையும், எல்லா காமங்களையும் அடைகிறான் என்று பிரஜாபதி சொன்னார்.

கண்டம் 13.

1. ச்யாமத்தால் (பெரிய இருள் வர்ணத்தால், எளிதில் கண்டு பிடிக்கப்படக்கூடாத ஹிருதய பிர்ம ஞானத்தைக்

சபலப்ர்மத்தை ப்ரகிருதி
கொண்டு), சபலத்தை (பலவர்ணத்தை, அடைகிறேன் (அறிகிறேன்).
ஸ்வரூப ஆத்மாவை, ப்ர்மத்தை) ப்ர்மலோகத்தால்),
சபலத்தால் (நாமரூப வ்யாகரணாத்மாவால், அடைகிறேன். எப்படி
ச்யாமத்தை (ஹிருதய ப்ர்ம பாவத்தை) தன் தேகத்தி
யென்றால், ஒரு குதிரை, மயிர்களை உதரிக்கொண்டு, போக்கடிக்கிறதுபோல,
லுள்ள ஸ்ராமம், புழுதி முதலானதைப் சந்திரன் விடு
பாபத்தைப் போக்கடித்து, ராகு முகத்திலிருந்து நித்யமா
படுகிறதுபோல, சரீரத்தைவிட்டு, க்ருதக்ருத்யனாய், (என்று இதொரு மந்தி
யிருக்கிற ப்ர்மலோகத்தை யடைகிறேன்; உபயோகம்).
ரம், ப்ர்மஞானிகளின் அநுபவ மனனத்திற்காக

கண்டம் 14.

ஆகாசம் என்றும் பெயர்;
1. அப்படிப்பட்ட ப்ர்மத்திற்கு அந்தப் பெயர்).
(ஸூக்ஷ்மமாயும், ஸர்வகதமாயு மிருப்பதால் அடங்கி
அது நாமரூபங்களை வஹிக்கிறது; அதற்குள் நாமரூபங்கள் ஆத்மா.
நிற்கின்றன; அதுதான் ப்ர்மம், அம்ருதம், (ப்ர்ம
"(இப்படியறிந்து) ப்ர்மலோகத்தை யடைகிறேன்; ப்ராமணர்க
வித்தையால் கிடைக்கும்) யசஸ் ஆக ஆகிறேன்; யசஸ்
ளுடையவும், ராஜாக்களுடையவும், வைச்யர்களுடையவும் விரும்புகிறேன்;
ஆக ஆகிறேன்; அப்படிப்பட்ட யசஸை அடைய யசஸாயிருக்கிறேன்;
அப்படிப்பட்ட நானே யசஸ்களுக்கெல்லாம் தக்கதாயும்
வெளுப்பாகவும், (பல்லில்லாவிட்டாலும்) பக்ஷிக்கத் நாசம்
(தேஜஸ், பலம், வீர்யம், விஞானம், தர்மம் இவைகளை வ்யஞ்ஜனத்
செய்யத் தக்கதாயும்) இருக்கிற விந்துவை (ஸ்திரீ அடையவேண்
தை, ரேதஸை) நான் அடையவேண்டாம், நான் இச்சை
டாம்! (மேற்கண்டபடி அநர்த்தகமாயிருக்கிற ஸ்திரீ இது ஒரு
எனக்கு வரவேண்டாம்." (13-வது கண்டம்போல்
மந்திரம், மனனத்திற்கு உபயோகம்). இதுவரை

கண்டம் 15.

1. இந்த ப்ர்மவித்தையை, ப்ர்மா, தன் புத்திரனாகிய காச்
யப ப்ரஜாபதிக்குச் சொன்னார் ; அவர் மனுவுக்குச் சொன்னார்;

அவர் எல்லா மனுஷ்யர்களுக்கும் சொன்னார். (இந்தப் பிரகாரம் ஞானகாண்டமிருந்தபோதிலும் கர்மத்தை விடக்கூடாது என்பதைப்பற்றி சொல்லப்படுகிறது).

குருவிடத்தில், விதிப்படி, குரு சுச்ரூஷா காலம்போக மற்ற காலங்களில் வேதங்களை அத்யயனம்செய்து, ஸமாவர்த்தனம் (முடிவு) செய்து, பிறகு, குடும்பத்தில் (கிருஹஸ்தாச்ரமத்தில்) சேர்ந்து, சுத்தமானவிடத்தில் உட்கார்ந்துகொண்டு, நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்துகொண்டு, தார்மிகர்களாயிருக்கிற புத்திர சிஷ்யாதிகளை படைத்துக்கொண்டு, தன்னிடத்திலேயே இந்திரியங்களை யெல்லாம் அடக்கிக்கொண்டு, சாஸ்திரங்களால் சொல்லப்பட்டதைத் தவிர மற்ற விஷயங்களில் பிறருக்கு யாதொரு ஹிம்ஸையும் செய்யாமல் — இந்தப்படி யாரொருவன் ஆயுஸ் பரியந்தம் இருக்கிறானோ அவன் பிரம்மலோகத்தை யடைவான். அவனுக்கு புனர்ஜன்மமில்லை, புனர்ஜன்மமில்லை.

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

சாந்தோக்யோபநிஷத் முற்றிற்று.

(IV) அதர்வண வேதம்.

---

9. நிருஸிம்ஹதாபனீ உபநிஷத்.
10. ப்ரச்நோபநிஷத்.
11. முண்டகோபநிஷத்.
12. மாண்டூக்யோபநிஷத்.

ஓம்.

ஓம் தத்ஸத்.

அதர்வண வேதீய

நிருஸிம்ஹதாபனீ உபநிஷத்

பூர்வ தாபனீ.

முதலாவது உபநிஷத்.

கண்டம் 1.

1. (சாந்தி சொல்லப்படுகிறது). நாம் தேவர்களாக (பிரகாசமுள்ளவர்களாக) விருந்து, கலியாணத்தை (சுபத்தை) காதுகளால் கேட்போமாக; யஜன சீலமுள்ளவர்களாக விருந்து மங்களத்தை கண்களால் பார்ப்போமாக; அங்கங்களோடு சேர்ந்த (அடியில் கண்ட) மந்திரங்களால் தேவரை ஸ்தோத்திரம்செய்து (எல்லா சுகங்களேயும்) அடையுவோமாக; (இந்த உபநிஷத்தில் பிரஸ்தாபிக்கப்படுகிற நிருஸிம்ஹதேவரை) ஸ்துதிக்க யோக்கியமான ஆயுளை அடையுவோமாக.

பிரஹஸ்பதி யிடமிருந்து கேட்டு, அறிந்த இந்திரன் நமக்கு ஸ்வஸ்தியை (நாசமற்ற ஆயுளை) கொடுக்கட்டும்; எல்லா தேவர்களாயிருக்கின்ற சூரியன் நமக்கு ஸ்வஸ்தியை (உபாஸனை செய்வதில் முக்கியமாயிருத்தலை) கொடுக்கட்டும்; வஜ்ராயுதத்தா லடிபடாத கெருடன் நமக்கு ஸ்வஸ்தியை (பூஜைசெய்ய யோக்யதையை) கொடுக்கட்டும்; பிரஹஸ்பதி பகவான் நமக்கு ஸ்வஸ்தியை (சோபனத்தை) கொடுக்கட்டும்; ஓம், சாந்தி, சாந்தி, சாந்தி. (அடியில்கண்ட வித்தையின் அனுஷ்டானத்தில் விக்னம் வாராமலிருக்கவேண்டிய நிமித்தம், 'ஓம், சாந்தி' என்று மூன்று தரம் சொல்லப்பட்டது).

ஓம்.

ஓம் தத்ஸத்.

அதர்வண வேதீய

நிருஸிம்ஹதாபனீ உபநிஷத்

பூர்வ தாபனீ.

முதலாவது உபநிஷத்.

கண்டம் 1.

1. (சாந்தி சொல்லப்படுகிறது). நாம் தேவர்களாக (பிரகாசமுள்ளவர்களாக) விருந்து, கலியாணத்தை (சுபத்தை) காதுகளால் கேட்போமாக; யஜன சீலமுள்ளவர்களாக விருந்து மங்களத்தை கண்களால் பார்ப்போமாக; அங்கங்களோடு சேர்ந்த (அடியில் கண்ட) மந்திரங்களால் தேவரை ஸ்தோத்திரம்செய்து (எல்லா சுகங்களையும்) அடையுவோமாக; (இந்த உபநிஷத்தில் பிரஸ்தாபிக்கப்படுகிற நிருஸிம்ஹதேவரை) ஸ்துதிக்க யோக்கியமான ஆயுளை அடையுவோமாக.

பிரஹஸ்பதி யிடமிருந்து கேட்டு, அறிந்த இந்திரன் நமக்கு ஸ்வஸ்தியை (நாசமற்ற ஆயுளை) கொடுக்கட்டும்; எல்லா தேவர்களாயிருக்கின்ற சூரியன் நமக்கு ஸ்வஸ்தியை (உபாஸனை செய்வதில் முக்கியமாயிருத்தலை) கொடுக்கட்டும்; வஜ்ராயுதத்தா லடிபடாத கெருடன் நமக்கு ஸ்வஸ்தியை (பூஜைசெய்ய யோக்யதையை) கொடுக்கட்டும்; பிரஹஸ்பதி பகவான் நமக்கு ஸ்வஸ்தியை (சோபனத்தை) கொடுக்கட்டும்; ஓம், சாந்தி, சாந்தி, சாந்தி. (அடியில்கண்ட வித்தையின் அனுஷ்டானத்தில் விக்னம் வாராமலிருக்கவேண்டிய நிமித்தம், 'ஓம், சாந்தி' என்று மூன்று தரம் சொல்லப்பட்டது).

2. ஓம். (ஸ்ருஷ்டிக்கு முன்) இதோ காணப்படுகிற பல வித ஜலங்கள் (ஒரே மொத்த) ஜலமாகவிருந்தது. அந்த பிரஜாபதியானவர் (பிரமனானவர்) ஒருவராக, தாமரை தலத்தில் (மகா விஷ்ணுவின் இருதய கமலத்திலிருந்து) உண்டானார். அவருக்கு (பிரமனுக்கு) ஸ்ருஷ்டிப்போமென்ற ஓர் இச்சை மனதில் உண்டாயிற்று.

அதனால், ஓர் புருஷன் எதை மனதால் இச்சிக்கின்றானோ அதை வாக்கால் சொல்லுகின்றான்; அதை கர்மத்தால் செய்கின்றான்; இந்த விஷயத்தில் அடியில்கண்ட ரிக்கு (மந்திரம்) இருக்கின்றது.

“எக்காலத்தில் முந்தி ஜலமிருந்ததாக சொல்லப்பட்டிருக்கின்றதோ அக்காலத்தில் பிரஜாபதிக்கு மனதில் மேற்படி இச்சை உண்டாயிற்று; வித்வான்கள் சிரத்தா புத்தியால் தங்கள் இருதயத்தில் பிரத்யகாத்மாவைப் பார்த்தறிந்து, பிரமத்தினுடைய பந்துவாகிய (பிரமத்திலிருந்துண்டான) மேற்படி பிரஜாபதியை அசத்தினிடம் அவ்வியாகிருத வஸ்துவாக பார்க்கின்றார்கள் (அறிகின்றார்கள்).” (என்று ரிக்கு).

இவ்விதம் இச்சையடைந்த பிரஜாபதியினிடமிருந்து, இச்சிக்கப்பட்ட வஸ்து (ஜகத்) உண்டாகின்றது. அவர் தபசைச் செய்தார் (மனத்தையும் இந்திரியங்களையும் ஒரேயிடத்திலிருக்கும்படி செய்தார்). அப்படிச் செய்து, இந்த (அடியிற் கண்டதும்) இந்த பிரகரணத்திலுள்ள மந்திரங்களுக்கெல்லாம் முக்கியமானதும், நரஸிம்ஹ தேவ சம்பந்தமானதும், அநுஷ்டுப்பினால் (முப்பத்திரண்டு அக்ஷரங்களுள்ள சுலோகத்தால்) சொல்லப்பட்டதுமான மந்திரத்தைக் கண்டார் (ஜபித்தார்). அதனால், இதோ காணப்படுகின்ற, எது, எது உண்டோ அவைகள் எல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்தார். ஆகையால், இவைகள் எல்லாவற்றையும் அநுஷ்டுப் சம்பந்தமுள்ளதென்று (பெரியோர்கள்) சொல்லுகின்றார்கள்.

அநுஷ்டுப்பில் நின்றும் இந்த பூதங்களெல்லாம் உண்டாயின; அதனால் பிழைத்திருக்கின்றன; அதிலேயே லயத்தை யடை

கின்றன. இந்த விஷயத்திலடியிற்கண்ட ரிக்கு (மந்திரம்) இருக்கின்றது.

"மேற் சொல்லப்பட்ட அநுஷ்டுப்பானது முதன்மையாகவும், உத்தமமாகவுமிருக்கின்றது; அநுஷ்டுப் என்பது வாக்குத்தான்; (எல்லா பூதங்களும்) வாக்கில் அடங்கியிருக்கின்றன; அதினின்றும் உண்டாகின்றன; வேதங்களுக்கெல்லாம் உத்தமமானது." (என்று ரிக்கு).

கண்டம் 2.

அந்த ஸாம மந்திரத்தின் முதற்பாதமாக, சமுத்திரம், பர்வதம், ஏழுதீவுகளுடன் கூடிய பூமியையும்; இரண்டாவது பாதமாக, யக்ஷர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ் கூட்டங்களுடன் கூடிய அந்தரிக்ஷத்தையும்; மூன்றாவது பாதமாக, வஸுக்கள், ருத்திரர்கள், ஆதித்தியர்களுடன் சேர்ந்த ஸ்வர்க்கத்தையும்; நான்காவது பாதமாக, நிர்குணமாயும், பிரகாசமாகிய இருதயாகாசத்திலுள்ளதுமான பிரம சுவரூபத்தையும் அறியவேண்டியது. இவ்விதமறிகிறவன் அமிருதத்வத்தை யடைகின்றான். மேலும், அங்கங்களோடும், சாகைகளோடும் கூடிய ரிக்கு, யஜுஸ், ஸாமாதர்வண வேதங்களந்த மந்திரத்திற்கு நான்கு பாதங்களாயிருக்கின்றன.

அந்த மந்திரத்திற்கு, தியானம் எது? தைவம் என்ன? அங்கங்கள் எவை? அவ்வங்கங்களின் தேவதைகள் எவர்கள்? சந்தஸ் எது? ரிஷி எவர்? (இவைகளுக்கு உத்திரங்கள் பின் சொல்லப்படும்).

கண்டம் 3.

அந்தப் பிரஜாபதி சொல்லியதாவது:—ஸவிதிரு (சூரிய) சம்பந்தமான எட்டு அக்ஷரங்களுள்ளதும், "ஸ்ரீ" என்ற பீஜா அக்ஷரத்துடன் கூடிய மந்திரம் மேற்படி ஸாம மந்திரத்தின் ஒரு அங்கம்; இவ்விதம் அறிந்தவன் ஸ்ரீயுடன் சேருவான். எல்லா வேதங்களும் பிரணவத்தை முதன்மையாக வுடையன; அந்தப் பிரணவம் மேற்படி ஸாமத்திற்கு ஒரு அங்கம்; அதை யறிந்தவன்

மூன்றுலகத்தையும் ஜயிக்கிறான். இருபத்திநான்கு அக்ஷரங்களுள்ள மகா லக்ஷ்மீ யஜுர் மந்திரம் மேற்படி ஸாமத்தின் ஒரு அங்கம்; அதையறிந்தவன் ஆயுள், கீர்த்தி, யசஸ், ஞானம், ஐஸ்வரியம் இவைகளை யடைகின்றான். ஆதலால், இந்த ஸாமத்தை அங்கங்களுடன் இருப்பதாக அறியவேண்டியது. அங்கமறிந்தவன் அமிருதத்வத்தையும் யடைகின்றான். மேற்படி மந்திரங்களை ஸ்திரீகளுக்கும், சூத்திரர்களுக்கும் சொல்லக்கூடாது. முப்பத்திரண்டு அக்ஷரங்களுள்ள ஸாமத்தை அறியவேண்டும்; அதையறிந்தவன் அமிருதத்வத்தை யடைகின்றான். ஸ்திரீகளாவது சூத்திரர்களாவது ஸாவித்ரீ, லக்ஷ்மீ, யஜு:, பிரணவம் இவைகளை ஜபித்தால், இறந்தபின் நரகத்தை யடைவார்கள்; ஆனதால், அவர்களுக்கு ஒருபொழுதும் சொல்லக்கூடாது. அவ்விதம் எவனேனும் சொல்லிக்கொடுத்தால் அவன் பிருதுவைப் நரகத்தை யடைவான்.

கண்டம் 4.

மேலும், பிரஜாபதி சொல்லியதாவது:—அக்னியே, இவ்வெல்லா வேதங்களாகவும், எல்லா பூதங்களாகவும், பிராணன்களாகவும், இந்திரியங்களாகவும், பசுக்களாகவும், அன்னமாயும், அமிருதமாயும், ஸம்ராட்டாயும், ஸ்வராட்டாயும், விராட்டாயும், இவைகள் எல்லாமாகவும் இருக்கின்றது; அப்படிப்பட்ட அக்னி மேற்படி ஸாமத்தினுடைய முதல் பாதமாயிருக்கின்றது (அதாவது, முதல் பாதத்திற்கும், அதன் அங்கமாகிய பிரணவத்திற்கும், இருதயமந்திரத்திற்கும் தேவதையாக இருக்கின்றது).

சூரியனே, ரிக்கு, யஜுஸ், ஸாம, அதர்வ வேதங்கள் ஸ்வரூபமாகவும், அந்தராதித்யராகவும், இரண்மய புருஷராகவுமிருக்கின்றார்; இவ்விதம் சூரியன் மேற்படி ஸாமத்தின் இரண்டாவது பாதமாயிருக்கின்றது (அதாவது, இரண்டாவது பாதத்திற்கும், அதனங்கமாகிய சவித்ருக்கும், சிரோ மந்திரத்திற்கும் தேவதையாக இருக்கின்றது).

சந்திரனே, ஓஷதிகளுக்கும், நக்ஷத்திரங்களுக்கும் பதியாக இருக்கின்றான்; அப்படிப்பட்ட சந்திரன் மேற்படி ஸாமத்தின்

மூன்றாவது பாதமாக விருக்கின்றார். (அதாவது, மூன்றாவது பாதத்திற்கும், அதனங்கமாகிய லக்ஷ்மீ மந்திரத்திற்கும், சிகாமந்திரத்திற்கும் தேவதையாக விருக்கின்றது).

பிரமன், சிவன், விஷ்ணு, இந்திரன், அக்னி, அக்ஷரன், பாமன், ஸ்வராட் இத்தகைய பிரமஸ்வருவானது மேற்படி ஸாமத்தின் நான்காவது பாதம் (அதாவது, நான்காவது பாதத்திற்கும், அதன் அங்கமாகிய நிருஸிம்ஹகாயத்ரீ மந்திரத்திற்கும், கவசமந்திரத்திற்கும் தேவதையாக விருக்கின்றது). இவ்விதமிதையறிந்தவன் அமிருதத்வத்தை யடைகிறான்.

அந்த ஸாமமந்திரத்தின்,

முதல் பாதத்தின் முதல் சப்தம்... உக்ரம்;
இரண்டாவது ,, ... ஜ்வலம்;
மூன்றாவது ,, ... நிருஸிம்ஹம்;
நான்காவது ,, ... மிருத்யுயும்;

இதையறிந்தவன் அமிருதத்வத்தையும் அடைகின்றான். ஆதலால், இந்த ரகசியமான ஸாமத்தை ஒருவரிடமும் சொல்லக்கூடாது. அப்படி உபதேசிப்பதாயின், சிச்ருஷைசெய்யும் புத்திரனுக்காவது, அல்லது அத்தகைய சிஷ்யனுக்காவது சொல்லவேண்டியது.

கண்டம் 5.

மேற்படி ஸாமத்தை, பாற்கடலில் படுத்திருப்பவராகவும், நரசிம்ஹ மூர்த்தியாகவும், யோகிகளால் தியானம் செய்யப்பட்டதாகவுமிருக்கின்ற பரமபதமாக அறியவேண்டியது. அப்படியறிந்தவன் அமிருதத்வத்தையும் யடைகின்றான்.

அந்த ஸாமமந்திரத்தின்,

முதற்பாத பாதியின் முடிவு சப்தம்... வீரம்;
இரண்டாம்பாத ,, ... தம்ஸ;
மூன்றாம்பாத ,, ... ஹம்பீ;
நான்காம்பாத ,, ... மிருத்யும்;

இவ்விதம் ஸாமத்தை யறியவேண்டியது.

அவ்விதமறிந்தவன் அமிருதத்வத்தை யடைகின்றான். ஆதலால், மேற்படி ஸாமத்தை எந்த ஆசாரிய முகமாய் கேட்டபோதிலும் ஒருவன் சம்ஸாரத்தினின்றும் விடுபடுகின்றான். மற்றோர்களுக்கும் உபதேசிக்கின்றான். மோக்ஷத்தையடைய விருப்பமுள்ளவனாகவு மிருக்கின்றான். அப்பொழுதிருக்கின்ற சரீரத்துடன் தேவதைகளை தரிசிக்கின்றான். ஆகலால், இம்மந்திரமே இக்கலியுகத்தில் மோக்ஷவழியாக விருக்கின்றது. ஆகல்பற்றி, இந்த ஸாமத்தை அங்கங்களுடன் அறியவேண்டும். அப்படியறிந்தவன் முமுக்ஷுவாக ஆகின்றான் (அதாவது, சகுண பிரம உபாஸனை வித்தையானது மோக்ஷத்திற்கு வழி).

கண்டம் 6.

மேற்கூறிய ஸாமத்தை பிரணவ ஸஹிதமாகவும், ரிதமாகவும், ஸத்தியமாகவும், பரப்பிரமமாகவும், புருஷனாகவும், நரஸிம்ஹ விக்கிரகமாகவும், கிருஷ்ண பிங்கள வர்ணமுள்ளவராகவும், ஊர்த்துவ ரேதஸ் உள்ளவராகவும், திருநேத்திரராகவும், சங்கரராகவும், நீலலோஹிதராகவும், உமாபதியாகவும், பசுபதியாகவும், பினாகமென்ற தனுஸை யுடையவராகவும், அமிதமான பிரகாசத்தை யுடையவராகவும், ஸர்வவித்தைகளுக்கும் ஈசுவரராகவும், எல்லா பூதங்களுக்கும் ஈசுவரராகவும், தபசுக்கு அதிபதியாகவும், பிரமனுக்கு அதிபதியாகவும், யஜுர்வேதத்தில் கூறிக்கப்பட்டவராயு மிருக்கின்ற பிரமமாக வறியவேண்டியது. அவ்விதமறிந்தவன் அமிருதத்வத்தையும் அடைகின்றான்.

அந்த ஸாமமந்திரத்தின்,

முதற்பாத பின்பாதியின் ஆதிசப்தம்		... மஹா ;
இரண்டாம்பாத	,,	... ர்வதோ ;
மூன்றாம்பாத	,,	... ஷணம் ;
நான்காவதுபாத	,,	... நமா ;

என்றறியவேண்டியது.

அவ்விதமறிந்தவன் அமிருதத்வத்தையுமடைகின்றான். ஆதலால் இந்த ஸாமத்தை சச்சித் ஆனந்தமயமான பரபிரமமாக அறி

யவேண்டியது. அங்ஙனமறிந்தவன் இவ்வுலகத்தில் மேன்மையுள்ளவனாக விருக்கின்றான். ஆதலால், இந்த ஸாமத்தை ஸாங்கமாக அறியவேண்டியது. அப்படியறிந்தவன் அமிருதத்வத்தையடைகின்றான்.

பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவர்கள் இந்தஸாமத்தைக்கொண்டே அவ்விதம் சிருஷ்டித்தனர். ஆதலால், இதை உபாசிக்கின்றவர்கள் பிரமத்தினுடைய ஸாயுஜ்யத்தையும், ஸாலோக்யத்தையும் யடைவார்கள். ஆதலால், இந்த ஸாமத்தை அங்கங்களோடு அறியவேண்டியது. அப்படி யறிந்தவன் அமிருதத்வத்தையும் யடைகின்றான்.

மேற்படி ஸாமத்தின்,

முதல் பாதத்தின் கடைப்பாக, சப்தம்	...	விஷ்ணும்;
இரண்டாம்	,, ...	முகம்;
மூன்றாவது	,, ...	பத்ரம்;
நான்காம்	,, ...	ம்பஹம்;

என்றறியவேண்டியது.

அப்படியறிந்தவன் அமிருதத்வத்தையுமடைகின்றான்.

இதை பிரஜாபதி யறிந்தவர். பிரம சுவரூபமாகிய தன்னிடத்திலேயே இந்த மந்திரத்தை யறியவேண்டியது. அப்படியறிந்தவன் அமிருதத்வத்தையு மடைகின்றான். இவ்விதமறிந்த ஸ்திரீகளாகிலும், புருஷர்களாகிலும், இவ்வுலகத்திலிருக்க இச்சிக்கிறவர்களுக்கு எல்லா ஐசுவரியங்களையும் கொடுக்கின்றார்கள். எவ்விடம் மரிக்கினும் மரணகாலத்தில் பிரமதாரகத்தை உபதேசிக்கின்றார். அதனால் அமிருதர்களாகின்றார்கள். ஆதலால், ஸாமவேதமத்தியிலிருக்கப்பட்ட இந்த மந்திரத்தை ஜபிக்கவேண்டும். ஆதலால், இந்த ஸாமாங்கத்தை எவனறிகின்றானோ அவனே பிரஜாபதி, அவனே பிரஜாபதி. இது மஹோபநிஷத். இதையறிந்தவனும், இம்மந்திரத்தை உருவேற்றினவனும் மகாவிஷ்ணுவாகின்றான், மகாவிஷ்ணுவாகின்றான்.

இரண்டாவது உபநிஷத்.

கண்டம் 1.

மிருத்யு, பாபம், ஸம்ஸாரம் இவைகளுக்குப் பயந்து தேவர்கள் பிரஜாபதியினிடம் ஓடினார்கள். அவர்களுக்கு இந்த முக்கிய மந்திரமான இந்த நாரஸிம்ஹ அநுஷ்டுப் மந்திரத்தை உபதேசித்தார். அதனால் தேவர்களெல்லோரும் மிருத்யுவையும், பாபத்தையும், ஸம்ஸாரத்தையும் ஜயித்தார்கள். ஆனதால், (உலகத்தில்) எவன் மேற்படி மூன்றிற்கும் பயப்படுகின்றானோ அவன் மேற்படி மந்திரத்தை (குருமுகமாய்) கிரஹிக்கட்டும். அவன் அவைகளை ஜயிப்பான்.

(அந்த மந்திரத்திலிருக்கப்பட்ட பீஜாக்ஷரமாகிய) பிரணவத்திற்கு முதல் மாத்திரை, 'அ' காரம்; அது பிருதிவி ஆகாசம், ருக் வேதம், பிரமன், வஸுக்கள், காயத்திரி சந்தஸ், கார்ஹபத்யாக்னி. இப்படிப்பட்டது முதல் பாதம். இரண்டாவது மாத்திரை 'உ' காரம்; அது அந்தரிக்ஷம், யஜுர்வேதம், விஷ்ணு, ருத்திரர்கள், திருஷ்டுப் சந்தஸ், தக்ஷிணாக்னி. இப்படிப்பட்டது இரண்டாவது பாதம். மூன்றாவது மாத்திரை 'ம' காரம்; அது த்யுலோகம்; ஸாமவேதம், ருத்திரன், ஆதித்யர்கள், ஜகதீசந்தஸ், ஆஹவனீயாக்னி. இப்படிப்பட்டது மூன்றாவது பாதம். கடைமாத்திரை நான்காவது அர்த்த மாத்திரை 'ஓம்' காரம்; அது சந்திரலோகம், அதர்வண வேதம், ஏகரிஷி (பிரமம்), மருத்துக்கள், ஸம்வர்த்தக அக்னி, விராட் சந்தஸ். இப்படிப்பட்டது நான்காவது பாதம்.

கண்டம் 2.

ஒவ்வொரு பாதமும் எட்டு அக்ஷரங்கள் அடங்கியது; இப்பிரகாரம் (இந்த அநுஷ்டுப் மந்திரம்) முப்பத்திரண்டு அக்ஷரங்களுள்ளது; இப்படிப்பட்ட அநுஷ்டுப்பினால் எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டன; எல்லாம் அடங்கிப்போகின்றன; இதற்கு ஐந்து அங்

கங்களுண்டு; மேற்படி நான்கு பாதங்களும், பிரணவம் ஒன்றும் (சேர்ந்து ஐந்து); 'ஓம் இருதயாய நம:', 'ஓம் சிரஸேஸ்வாஹா;' 'ஓம் சிகாயை வஷட்,' 'ஓம் கவசாய ஹும்,' 'ஓம் அஸ்த்ராயபட்' என்ற ஐந்தில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அங்கத்தோடு சேருகின்றது. இவ்வுலகங்கள் ஒன்றற்கொன்று சம்பந்தமுள்ளன; அவ்விதமே அங்கங்களும் சம்பந்தமுள்ளன. 'ஓம்' என்றது எல்லாமாக இருக்கின்றது. ஆதலால், ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் இருபக்கத்திலும் 'ஓம்' காரம் வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரகாரம் பிரமவித்துக்கள் அக்ஷர நியாஸங்களை சொல்லுகின்றார்கள்.

கண்டம் 3.

மூலமந்திரத்திற்கு 'உக்ரம்' முதலாவது ஸ்தானம்; 'வீரம்' இரண்டாவது; 'மஹாவிஷ்ணும்' மூன்றாவது; 'ஜ்வலந்தம்' நான்காவது; 'ஸர்வதோமுகம்' ஐந்தாவது; 'நிருஸிம்ஹம்' ஆறாவது; 'பீஷணம்' ஏழாவது; 'பத்ரம்' எட்டாவது; 'மிருத்யு மிருத்யும்' ஒன்பதாவது; 'நமாமி' பத்தாவது; 'அஹம்' பதினொன்றாவது; இப்படி பதினொறு ஸ்தானங்கள். இவ்விதமறிந்தவன் அமிருத்வத்தையும் அடைகின்றான். இந்த பிரகாரம் அனுஷ்டுப்பினால் எல்லாம் உண்டாகின்றது, நசிக்கின்றது; ஆதலால், எல்லாம் அனுஷ்டுப்தான். இந்தப்படி யறிந்தவன் அமிருத்வத்தையும் அடைகின்றான்.

தேவர்கள் பிரஜாபதியை அடியில் கண்டபடி பிரச்னம் செய்தார்கள். "(இந்த மந்திரத்தில்) 'உக்ர' மென்று எக்காரணத்தினால் சொல்லப்படுகிறது?"

பிரஜாபதி (பகல்) சொல்லுகிறதாவது:—எக்காரணத்தால் நிருஸிம்ஹ மூர்த்தியானவர் தன் மகிமையால் (மாயையினால்) எல்லா உலகங்களையும், தேவர்களையும் ஆத்மாக்களையும், பூதங்களையும் உயரக்கிளப்புகின்றாரோ, எப்பொழுதும் சிருஷ்டிக்கின்றாரோ, வாஸம்செய்யும்படி சேய்கிறாரோ கிரகிக்கப்படுகிறாரோ, கி கிக்கப்படும்படி செய்கிறாரோ அக்காரணத்தால் 'உக்ர' மென்று சொல்லப்படுகின்றது. இதற்கு சுருதியில் சொல்லப்பட்டிருக்கி

தாவது "கேழ்க்கப்பட்டதும், குகையிலிருப்பதும், சக்கிரத்திற் குளிருப்பதும், யுவாவாயும், பயமற்றதாயும், மிருகரூபமாயும் உக்கிரமாயுமிருக்கிற மூர்த்தியை ஸ்தோத்திரம் செய். ஹே! ஸிம்ஹமே! அவ்விதம் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட நீ ஸ்தோத்திரம் செய்கிறவனை சுகப்படுத்து. உன் ஸேனைகள் எங்கள் விரோதிகளை நாசப்படுத்தட்டும்."

'வீரம்' என்று எக்காரணத்தால் சொல்லப்படுகின்றது ?

எக்காரணத்தால் தன் மகிமையினால் எல்லா உலகங்களையும், தேவர்களையும், ஆத்மாக்களையும், பூதங்களையும் கொண்டு விளையாடுகிறாரோ, இடைவிடாமல் சிருஷ்டிக்கிறாரோ, விட்டுவிடுகிறாரோ, வலிக்கும்படி செய்கிறாரோ அக்காரணத்தால் சொல்லப்பட்டது. (இதற்கு சுருதி) வீரரையும் (சூரரையும் அல்லது பலவித அவதாரங்கள் எடுப்பதால் விளையாடுகிறவரையும்), (அந்தந்த அவதாரத்திற்குரிய) கர்மங்களைச் செய்யக்கூடியவரையும், ஸோமயாகத்தில் அத்வர்யு முதலான ரூபரையும், தேவகாமரையும் (பிரமனாதி தேவர்களை தன் சுவரூபத்தின் பிரகாரம் அடைவிக்கும்படி செய்ய இச்சையுள்ளவரையும்) ஆகிறார். எக்காரணத்தால் 'மகாவிஷ்ணு'வென்று சொல்லப்படுகின்றது ?

எக்காரணத்தால் எல்லா உலகங்களிலும் வியாபித்திருக்கின்றாரோ, வியாபிக்கும்படி செய்கின்றாரோ, மாம்ஸபிண்டத்தில் கலந்த எண்ணெய்போல எதிலேயும் சம்பந்தப்பட்டு கலந்திருக்கின்றாரோ, எவனைக் காட்டிலும் அன்னியமென்பது ஒன்றுமில்லாமலிருக்கின்றாரோ, எல்லா பூதங்களிலும் பிரவேசித்திருக்கின்றாரோ அக்காரணத்தால் சொல்லப்பட்டது. (இதற்கு ரிக்கு மந்திரம்) "பிரஜாபதியானவர் பிரஜையுடன் கூட மூன்று அக்னிகளையும் ஸேவித்து பதினாறாவது கலையாகின்ற நிராகார பிரமமாகவே ஆனார்."

'ஜ்வலந்தம்' என்று எக்காரணத்தால் சொல்லப்படுகிறது?

எக்காரணத்தால் தன்னுடைய மகிமையாகிற மாயையால் எல்லா உலகங்கள் முதலியனவைகளை தன் தேஜஸைக்கொண்டு

ஜ்வலிக்கின்றாரோ, ஜ்வலிக்கும்படியும் செய்கின்றாரோ அக்காரணத்
தால் சொல்லப்பட்டது. (இதற்கு ரிக்கு மந்திரம்) "சூரியாகார
ராயும், எல்லாக் கர்மங்களுக்கும் அநுஜ்ஞை கொடுக்கின்றவராயும்,
வருத்தப்படுத்தாதவராயும், இச்சையை உண்டுசெய்கிறவராயும்,
சோபனராயும், சோபனமானவராயும், கலியாணராயு மிருக்கிறார்."

'ஸர்வதோமுகம்' என்று எக்காரணத்தால் சொல்லப்படுகி

றது?

எக்காரணத்தால் இந்திரிய மற்றவராயிருந்தாலும் எங்கும்
பார்க்கிறாரோ, எங்கும் கேட்கிறாரோ, எங்கும் போகிறாரோ,
எங்கும் கிரகிக்கிறாரோ, எங்கு மிருக்கிறாரோ அக்காரணத்தால்
சொல்லப்படுகிறது. (இதற்கு ரிக்குமந்திரம்) 'எந்த ஒருவரே
முதலில் இந்த ஜகத்தானாரோ, எவரிடமிருந்து இப்புவனத்திற்கு
கோப்தாவான விஷ்ணுவாக வானாரோ, பிரளய காலத்தில் எதில்
இப்புவனம் போய்ச்சேருகின்றதோ அப்படிப்பட்ட ஸர்வதோ
முகரை நமஸ்கரிக்கின்றேன்."

எக்காரணத்தால் 'நிருஸிம்ஹம்' என்று சொல்லப்பட்டது?

எக்காரணத்தால் எல்லா பூதங்களுக்குள் நரனும், ஸிம்ஹமும்
வீரியதமமாயும், சிரேஷ்டதமமாயும் இருக்கின்றார்களோ அக்கா
ரணத்தால் சொல்லப்படுகின்றது. ஆனதால் பரமேசுவர் உலகத்
தின் ஹிதத்தின்பொருட்டு இந்த நிருஸிம்ஹ ரூபத்தை யெடுத்
தார். (இதற்கு ரிக்குமந்திரம்) "விஷ்ணுவானவர் தன் வீரியத்
தால் ஸிம்ஹமாக ஸ்துதியை அடைகின்றார். பயங்கரமில்லாதவர்,
எங்கும் போகின்றவர், பருவத குகையிலிருக்கின்றவர், தன்னு
டைய பிரமன், விஷ்ணு, மகேசுவரன் என்ற மூன்று பெரிய சுவ
ரூபங்களிலிருந்துகொண்டு புவனங்களை வசிக்கும்படி செய்கின்
றவர்."

"பீஷணம்" என்று எக்காரணத்தால் சொல்லப்படுகிறது?

எக்காரணத்தால் இவருடைய மகாபிரகாசமுள்ள ரூபத்தைப்
பார்த்து எல்லா உலகங்களும், தேவர்களும், பூதங்களும் பயந்து

ஓடுகின்றார்களோ, தான் ஒன்றிற்கும் பயப்படாமலிருக்கின்றாரோ அக்காரணத்தால் சொல்லப்படுகிறது. (இதற்கு ரிக்கு மந்திரம்) 'இவரிடத்தினின்றும் பயத்தினால் வாயு' வடிக்கிறார்; சூரியன், உதயமாகிறான். அக்னி, சந்திரன், மிருத்யு தத்தம் காரியத்தைச் செய்கின்றார்கள்."

'பத்ரம்' என்று ஏன் சொல்லப்படுகிறது?

எக்காரணத்தால் தான் கல்யாண ரூபமாயிருந்து எப்பொழுதும் கல்யாணத்தைக் கொடுக்கின்றாரோ, ரோசனராயும், ரோசமானராயும், சோபனராயும், சோபமானராயும், கல்யாணராயும் இருக்கின்றாரோ அக்காரணத்தால் சொல்லப்படுகிறது. (இதற்கு ரிக்குமந்திரம்) இவ்வுபநிஷத்திற்கு சொல்லப்பட்ட சாந்திமந்திரம்.

'மிருத்யு மிருத்யும்' என்று ஏன் சொல்லப்படுகிறது? எக்காரணத்தால் பகவான் தன் பக்தர்களால் தான் ஸ்மரிக்கப்பட்ட மாத்திரத்தில் அவர்களுடைய மிருத்யுவையும், அபமிருத்யுவையும், நாசப்படுத்துகின்றாரோ அக்காரணத்தால் சொல்லப்படுகிறது. (இதற்கு ரிக்கு) "எவர் தேவர்களுக்கு தத்தம் ஸ்வரூபத்தை கொடுக்கின்றாரோ, ஸாமர்த்தியத்தையும் கொடுக்கின்றாரோ எவருடைய மகாசக்தியை எல்லா தேவர்களும் உபாஸிக்கின்றார்களோ எவர் மிருத்யுவிற்கும் மிருத்யுவாக விருக்கின்றாரோ அவரின்பொருட்டு ஹவிஸைக்கொடுக்கின்றோம்."

'நமாமி' என்று ஏன் சொல்லப்பட்டது?

எக்காரணத்தால் அவரை எல்லா தேவர்களும், முமுக்ஷுக்களும், பிரமவாதிகளும் வணங்கி நமஸ்காரம் செய்தார்களோ அக்காரணத்தால் சொல்லப்படுகிறது. (இதற்கு ரிக்கு மந்திரம்).

"பிரமணஸ்பதியா யிருக்கின்ற மந்திரத்திற்கு தேவர்கள் வணங்குகிறார்கள். அந்த மந்திரத்தில் இந்திரன் முதலான தேவர்கள் உபாஸனையின் பொருட்டு கிரகங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள்."

"அகம்" என்று ஏன் சொல்லப்பட்டது?

உபாஸிக்கப்படுகிற ஈச்வரனை தானாக பாவிக்கவேண்டுமாதலால் 'அகம்' என்று சொல்லப்பட்டது. (இதற்கு ரிக்கு) "நான் முந்தியிருந்தவன்; மூர்த்தா மூர்த்தமாகிய ஜகத்திற்கு முந்தியவன்; பிராணிகளுடைய நாபியில் அமிருதத்திற்கிடம்; என்னை யார் அன்னமாக ஸ்வீகரிக்கின்றார்களோ அவருக்கு அன்னம் கொடுப்பேன். நான் எல்லா புவனமாயும், சூரிய ஜோதி ரூபமாயும் இருக்கின்றேன்."

மூன்றாவது உபநிஷத்.

‘மந்திர ராஜமாகிய அநுஷ்டுப் மந்திரத்தின் பீஜத்தையும், சக்தியையும் எங்களுக்கு சொல்லும்’ என்று பிரஜாபதியை தேவர்கள் வினவினார்கள்.

அதற்கு பிரஜாபதி சொல்லுகிறதாவது:—

இந்த நரசிம்ஹ சம்பந்தமாகிய மாயையானது மேற்படி மந்திரத்தின் சக்தியாக இருக்கின்றது. அது எல்லா வற்றையும் சிருஷ்டிக்கின்றது, ரக்ஷிக்கின்றது, சம்ஹரிக்கின்றது. ஆதலால் இந்த மாயையே சக்தி, இவ்விதமறிந்தவன் பாபத்தைத்தாண்டுகிறான், மிருத்யுவைத் தாண்டுகிறான், அமிருதத்வத்தையுமடைகின்றான். மகத்தான சம்பத்தை யடைகிறான். பிரமவித்துக்கள் அடியில் கண்டபடி விசார நிர்ணயம் செய்கின்றார்கள் இந்த சக்தி ஹ்ரஸ்வமாயும், தீர்க்கமாயும், ப்லுதமாயும் இருக்கின்றது. ஹ்ரஸ்வமாக உச்சரித்தால் பாபத்தை போக்கி அமிருதத்வத்தையுமடைகின்றான். தீர்க்கமாக உச்சரித்தால் மகத்தான சம்பத்தையும் அமிருதத்வத்தையும் அடைகின்றான். ப்லுதமாக உச்சரித்தால் ஞானவானாகி அமிருதத்வத்தை யடைகின்றான்.

இதைக்குறித்து வேதத்தில் அடியில் கண்டபிரகாரம் நிதர்சனமாய் சொல்லப்பட்டிருக்கின்றது.

“எவன் ருஜு மார்க்கத்திலிருக்கின்றானோ, சம்ஸார ஸாகரத்தைத்தாண்ட வல்லமையுள்ளவனோ அவன் ‘ஈம்’ சக்தியை காப்பாத்துகின்றான். விஷ்ணுசக்தியாகிய ஸ்ரீயையும், நரசிம்ஹ சக்தியாகிய லக்ஷ்மியையும், பரமேசுவரசக்தியாகிய கௌரியையும், பிரமனின் சக்தியாகிய ஸரஸ்வதியையும் சுப்ரமண்யசக்தியாகிய இந்திரசேனையையும், பிரமவேதியாகிய வித்தையையும் ஆயுளின் பொருட்டு நான் சரணமடைகின்றேன்”.

இவ்வெல்லா பூதங்களுக்கும் ஆகாசம் இருப்பிடம். ஏனெ
னின், இவை ஆகாசத்திலிருந்து உண்டாகின்றன. ஆகாசத்தில்
பிறைத்திருக்கின்றன.' ஆகாசத்திலேயே சேருகின்றன. ஆத
லால், ஆகாச வாசகமான 'ஹ' என்ற அக்ஷரம் இந்த மந்திரத்
திற்கு பீஜம் (மூலகாரணம்), என்று அறியவேண்டியது. இது
திர்சனமாய் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. "ஹம்ஸ:
(பரமாத்மா) புத்தியிலிருக்கின்றவர், தேவன், அந்தரிக்ஷத்திலிருக்
கப்பட்டவர், யாககர்த்தர், யாக வேதியில் (மேடையில்) இருக்கப்
பட்டவர், தாண்டக்கூடாத யிடங்களில் இருக்கப்பட்டவர், மனு
ஷியனிடத்திலிருப்பவர், சிலாக்யமான இடங்களிலிருப்பவர், ஸத்
யத்திலிருப்பவர், இருதயாகாசத்திலிருப்பவர், ஜலத்திலுபாஸிக்
கப்பட்டவர், வாக்குகளில் உபாஸிக்கப்பட்டவர், ஸத்தியத்தில்
உண்டானவர், வேதத்திலுண்டானவர், ஸத்யவஸ்து, பெரிதான
வஸ்து என்றறிந்தவன்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

நான்காவது உபநிஷத்.

கண்டம் 1.

ஓம்! 'ஹே! பகவானே! மந்திரராஜமாகிய நாரஸிம்ஹ அநுஷ்டுப் மந்திரத்தின் அங்க மந்திரங்களை எங்களுக்குச் சொல்லும்' என்று தேவர்கள் பிரஜாபதியை கேட்டார்கள்.

பிரஜாபதி சொன்னதாவது 'பிரணவம், ஸாவித்ரிகாயத்ரி, யஜுர் லக்ஷ்மீ காயத்ரீ, ந்ருஸிம்ஹ காயத்ரீ இவைகளை அங்கங்களாக அறியவேண்டியது.' இப்படியறிகிறவன் அமிருதத்வத்தையடைகிறான்.

இவையெல்லாம் (காணப்படுகின்ற பதார்த்தங்கள் எல்லாம்) 'ஓம்' என்ற எழுத்து. அதனுடைய அர்த்தத்தை தெரிந்து கொள்ளவேண்டும். உண்டானது, இருக்கிறது, உண்டாகப்போகிறது எல்லாம் 'ஓம்'காரம். மூன்றுகாலத்தையும் தாண்டியது எதுண்டோ (அவ்யக்தத்துவம், பிரகிருதி) அதுவும் 'ஓம்'காரம் தான். இந்த எல்லா ஜகத்தும் பிரமம். இந்த ஜீவாத்மாவும் பிரமம். இந்த ஆத்மா நான்குபாதமாக (பங்குகளாக) விருக்கின்றது. ஒன்று, ஜாக்ரத காலத்திலுள்ளவர்; வெளியில் பிரஞ்ஞையுடையவர்; ஏழு சக்திகளையுடையவர்; பத்தொன்பது முகங்களையுடையவர்; ஸ்தூலமான (பிரதிவியை) புஜிக்கிறவர் (ஸேவிக்கிறவர்); வைச்வாநரரென்று பெயர் (எல்லாரிடத்திலுமிருக்கும் அவர்களை நடத்துகின்றவர்) இப்படிப்பட்ட ஆத்மா முதல் பாகம்.

இரண்டாவது, ஸ்வப்னாவஸ்தையில் உள்ளவர்; உள்பிரஞ்ஞையுடையவர்; ஏழு சக்திகள் (அங்கங்கள்) உள்ளவர்; பத்தொன்பது முகமுள்ளவர்; தனித்தனியாய் புஜிக்கிறவர்; தைஜஸனென்று பெயர்; இப்படிப்பட்ட ஆத்மா இரண்டாவது பங்கு.

மூன்றாவது, எந்த அவஸ்தையில் ஒரு காமத்தையும் இச்சிக்கிறதில்லையோ, ஒரு ஸ்வப்னத்தையும் காணுகிறதில்லையோ அந்த

அவஸ்தை ஸுஷுப்தி; அதில் இருக்கப்பட்டவர்; ஒன்ருகச் சேர்ந்த
வர்; கனப்பட்ட பிரஜ்ஞான முள்ளவர்; ஆனந்தமயர்; ஆனந்தத்தை
யனுபவிக்கிறவர்; சேதஸ்ஸை முகமாக வுடையவர்; பிராஜ்ஞரென்று
பெயர்; இப்படிப்பட்ட ஆத்மா மூன்ருவது பங்கு. இவரே ஸர்
வேசுவரர், ஸர்வஜ்ஞர், அந்தர்யாமி, எல்லாவற்றிற்கும் காரண
வஸ்து, பூதங்களுக்கு உத்பத்தி ஸ்தானமும், லயஸ்தானமும்.

நான்காவது, வெளி பிரஜ்ஞனுமன்று, உள் பிரஜ்ஞனுமன்று,
இரண்டிலுமல்லன், பிரஜ்ஞனுமன்று, அப்ரஜ்ஞனுமன்று, பிரஜ்ஞானகனமு
மன்று, பார்க்கப்படாதது, வியவகரிக்கமுடியாதது, கிரகிக்கப் படா
தது, லக்ஷணமில்லாதது, சிந்திக்கப்படாதது, வ்யபதேசிக்கப்
படாதது, ஏகாத்ம பிரத்யயஸாரம், பிரபஞ்சத்திற்கு உபசமஸ்தா
னம், மங்களகரம், அத்வைதம், இப்படிப்பட்ட வஸ்து நான்காவது
பங்கு. இந்த ஆத்மா அறியப்படவேண்டியது.

(இதனுல் பிரணவத்தின் மகிமை சொல்லப்பட்டது. 'ஓம்' என்றது
பிரணவம்; அதில் முதல் பாகம் 'அ'காரம் மேற்சொன்ன விசுவாத்மா;
இரண்டாம் பாகம் 'உ'காரம் தைஜஸாத்மா; மூன்ருவது பாகம் 'ம'காரம்
பிராஜ்ஞாத்மா; நான்காவது பாகம் எல்லாம் சேர்ந்தது, பரபிரமம்; ஆதலால்,
பிரணவம் பிரமஸ்வரூபம்).

கண்டம் 2.

பிறகு ஸாவிதா சம்பந்தமான மந்திரம் சொல்லப்படுகிறது.
அதற்கு ஸாவித்ரீ என்று பெயர்; அது காயத்ரீ சந்தஸ்; யஜுர்
வேதத்தால் சொல்லப்படுகிறது; அதினுல் இவையெல்லாம் வியா
பிக்கப்பட்டிருக்கிறது. அந்த மந்திரமானது, 'க்ரணி ஸூர்யா
தித்ய ஓம்' என்றது. 'க்ரணி' என்றது இரண்டு அக்ஷரங்கள
டங்கியது; 'ஸூர்ய' என்றது மூன்று அடங்கியது; 'ஆதித்ய:'
என்றது மூன்று அடங்கியது; ஆக எட்டு அக்ஷரங்களுள்ள பதம்
இந்த மந்திரம்; 'ஹ்ரீம்' என்ற பீஜாக்ஷரத்தோடு சேர்ந்திருக்கின்
றது. இப்படியறிந்தவன் ஸம்பத்தால் நிறைக்கப்படுவான். இச்
சங்கதி அடியில்கண்ட ரிக்கினுல் சொல்லப்பட்டிருக்கிறது.

'நசிக்காததாயும், உயர்ந்ததாயு மிருக்கின்ற எந்த ஆகாசத்திலே எந்த வஸ்துவை எல்லா தேவர்களும், வேதங்களும் இருப்பதாக ஸேவிக்கின்றார்களோ அதை யறியாதவனுக்கு வேதத்தால் என்ன பிரயோஜனம்? அறிந்தால் சுகியாயிருப்பான். இந்த ஸாவித்ரீ மந்திரத்தை யறிந்தவனுக்கு ரிக்கு, யஜுஸ், ஸாமங்களினால் யாதொரு பிரயோஜனமுமில்லை (அதாவது இம் மந்திரம் வெகு சிலாக்கியமுள்ளது).

மகா லக்ஷ்மீய மந்திரம் இருபத்து நான்கு அக்ஷரமுள்ளது. 'ஸத்தாயும், பிரமத்தினுடைய வியாபகசக்தியாகவும், பிரமத்தின் காரணமாத்திர சக்தியாகவும், பிரமத்தின் எங்கும் தன்ரூபமாக விருக்கும் சக்தியாகவு மிருக்கின்ற மகாசக்தியானது எங்களை ஏவுதல் செய்யுக. இந்த காயத்ரீ எல்லாமாக விருக்கின்றது. இதை உபாசித்தவன் மகத்தான ஸம்பத்தை யடைகின்றான்.

(பிறகு நிருஸிம்ஹ காயத்ரீ சொல்லப்படுகிறது). 'அந்த பரமேஸ்வர ஸம்பந்தமான நகசாங்கத்தை தியானிக்கின்றோம்; அது நிருஸிம்ஹ தேவரின் பொருட்டென்று அறிகின்றோம்; அப்படிப்பட்ட தேவர் எங்களை ஏவட்டும்.' இந்த காயத்ரீ தேவர்களுக்கும் வேதங்களுக்கும் காரணமாக விருக்கிறது. இப்படி இதை ஸேவிக்கின்றவன் காரணமுள்ளவனவன்.

கண்டம் 3.

'எந்த மந்திரங்களால் நரஸிம்ஹ தேவர் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு பிரீதியுள்ளவராகி தன்னை தெரிசிப்பிக்கின்றாரோ அந்த மந்திரங்களை எங்களுக்குச் சொல்லும்' என்று தேவர்கள் பிரஜாபதியைக் கேட்டார்கள்.

அதற்கு பிரஜாபதி சொல்லுகிறதாவது; 'எந்த நரஸிம்ஹ தேவர் பிரமன் சுவரூபமாக விருக்கின்றாரோ அவருக்கு நமஸ்காரம்' என்ற முதலான முப்பத்திரண்டு மந்திரங்கள். (அடியில் குறிக்கப்படும் பெயர்களை வரிசையாக 'பிரமன்' என்றதற்கு பதலாக சொல்லிக்கொள்ளவேண்டியது). விஷ்ணு, மகேசுவரன்

புருஷன், ஈச்வரன், ஸரஸ்வதீ, ஸ்ரீ, கௌரீ, பிரகிருதி, வித்யா, ஓங்காரம், வேதங்கள், பங்க்திகள், ஏழு வியாகிருதிகள், எட்டு உலகபாலர்கள், ஆதித்யர்கள், எட்டு வஸுக்கள், எட்டு கிரகங்கள், ஐந்து மகா பூதங்கள், ஏழு உலகங்கள், காலன், மனு, மிருத்யு, யமன், அந்தகன், வருணன், சூரியன், சோமன், ஜீவன், விராட், எல்லாம்.

இந்த மந்திரத்தின் மந்திரங்களால் தேவர் ஸ்துதிக்கப் பட்டு பிரீதியுள்ளவளாக தன்னை தெரிசிப்பிவிக்கின்றாள். ஆனதால், எவன் நித்யம் இம்மந்திரங்களால் தேவியை ஸ்தோத்திரம் செய்கின்றானோ அவன் அவளை அடைகின்றான்; அமிருதத்வத்தையும் அடைகின்றான்.

ஐந்தாவது உபநிஷத்.

1. பிறகு தேவர்கள் பிரஜாபதியை அருகில் வருமாறு கேட்டார்கள்.

“எல்லாக் காமங்களையும் கொடுக்கின்றதையும், மோக்ஷத்திற்கு துவாரமாயும், எதை யோகிகள் சொல்லுகின்றார்களோ அந்த மகா சக்கிரமென்று பெயருள்ள சக்கிரத்தை எங்களுக்குச் சொல்லும்.”

அதற்கு பிரஜாபதி சொல்லுகிறதாவது; இந்த மகாசக்கிரம் ஆறு ஆரங்களுள்ளது; ‘ஸுதர்சனம்’ என்று பெயர் கொண்டது; ஆறு ருதுக்களும் ஆறு பத்திரங்களாக விருக்கின்றன; மத்தியில் நாபி யிருக்கின்றது; அந்த நாபியில் இந்த ஆரங்கள் கோர்க்கப்பட்டிருக்கின்றன. மாயையினால் இது எல்லாம் சூழப்பட்டிருக்கின்றது. மாயை ஆத்மாவை தொடுகிறதில்லை. ஆகலால், இந்த ஜகத் மாயையால் வெளியில் சூழப்பட்டிருக்கின்றது.

அந்த சக்கிரம் எட்டு ஆரங்களுள்ளதாகவும், எட்டு பத்திரமுள்ளதாகவும் இருக்கின்றது. காயத்ரீ எட்டு அக்ஷரமுள்ளது; அதுடன் சேர்ந்திருக்கின்றது. ஆகையால் வெளியில் மாயையால் எல்லாம் சூழப்பட்டிருக்கின்றது. இந்த மாயை எல்லா இடங்களையும் அடைகின்றது.

இந்த சக்கிரம் பன்னிரண்டு ஆரங்களுள்ளதாகவும், பத்திரங்களுள்ளதாகவும் இருக்கின்றது. புருஷன் பதினாறு கலைகளுடையவன். இதெல்லாம் புருஷன்; புருஷனுடன் சேர்ந்திருக்கின்றது. வெளியில் மாயையால் சூழப்பட்டதாக விருக்கின்றது.

இந்த சக்கிரம் முப்பத்திரண்டு ஆரங்களும் பத்திரங்களுமுள்ளது. அனுஷ்டுப் மந்திரம் முப்பத்திரண்டு அக்ஷரங்களுள்ளது. அதுடன் சேர்ந்திருக்கிறது. வெளியில் மாயையால் சூழப்பட்டிருக்கின்றது.

இந்த ஸுதர்சன சக்கிரம் அரங்களால் ஸ்திதியுள்ளது. தேவர்கள்தான் அரங்கள்; இந்த சக்கிரம் பத்திரங்களால் சேர்ந்திருக்கின்றது. பத்திரங்கள் சந்தஸ்கள்.

2. இந்த சக்கிரமே ஸுதர்சனமென்று பெயருள்ள மகா சக்கிரம். அதின் மத்தியத்தில் நாபியில் தாரகம் (பிரணவம்) இருக்கின்றது. நாரஸிம்ஹமாகின்ற ஏகாக்ஷர மெதுவுண்டோ அதுவே இருக்கின்றது. அந்த சக்கிரத்தின் ஆறு பத்திரங்களில் ஆறு அக்ஷரமுள்ள ஸுதர்சன மந்திரமிருக்கின்றது. எட்டு பத்திரங்களில் எட்டு அக்ஷரங்களுமுள்ள நாராயணமந்திரம் இருக்கின்றது. பன்னிரண்டு பத்திரங்களில் பன்னிரண்டு அக்ஷரங்களுள்ள வாஸுதேவ மந்திரமிருக்கின்றது. பதினாறு பத்திரங்களில், பிந்துக்களுடன் கூடிய பதினாறு மாத்ருகா அக்ஷரங்களான பதினாறு கலைகளிருக்கின்றன. முப்பத்திரண்டு பத்திரங்களில் முப்பத்திரண்டு அக்ஷரங்களுள்ள மந்திர ராஜ நாரஸிம்ஹ அனுஷ்டுப் மந்திரம் இருக்கின்றது.

இதுதான் சர்வகாமங்களையும் கொடுப்பதாகவும், மோக்ஷ த்வாரமாகவும், ருக், யஜுஸ், ஸாம, அதர்வணவேத மயமாகவுமிருக்கின்ற மகாசக்கிரம். இதற்கு முன்பக்கத்தில் வஸுக்களும், பின்பக்கத்தில் ஆதித்யர்களும், இடது பக்கத்தில் விச்வேதேவர்களும், வலப்பக்கத்தில் பிரமன், விஷ்ணு, மகேசுவரர்களும் இருக்கின்றார்கள். ஸூரிய சந்திரர்கள் பக்கத்திலும் இருக்கின்றார்கள்.

இதற்கு ரிக்கு, முன் 5-வது உபநிஷத்தின் இரண்டாவது கண்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த மகா சக்கிரத்தை அறிகின்ற பாலனாகட்டும், யுவாவாகட்டும் அவன் மகானாயும், குருவாயும், எல்லா மந்திரங்களையும் உபதேசிக்கக் கூடியவனாகவுமாகின்றான். இந்த அனுஷ்டுப் மந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டும். இது ராக்ஷஸர்களை நாசம் செய்கின்றது; மிருத்யுவைத் தாண்டச் சக்தியைக் கொடுக்கின்றது. குருவிடமிருந்து கிடைத்த இந்த சக்கிரத்தை கழுத்திலாவது, கைகளிலாவது, சிகையிலாவது கட்டிக்கொள்ளவேண்

டும். இதற்கு ஏழு தீவுகளுள்ள பூமியே தக்ஷிணையாக ஏற்படும். ஆதலால் இதற்காக சிரத்தையுடன் எதைக் கொடுப்பினும் அது தக்ஷிணையாகும்.

3. 'இம் மந்திரத்தின் பலனைச் சொல்லும்' என்று பிரஜாபதியை தேவர்கள் கேட்டார்கள். அவர் சொல்லுகிறதாவது, இந்த மந்திரத்தை நித்யம் அத்தியயநம் செய்கிறவன் அக்னி, வாயு, பிரமன், விஷ்ணு, ருத்திரன், ஆதித்யன், ஸோமன், ஸத்யம், உலகம், தேவன், எல்லாம் இவர்களால் பரிசுத்தப்படுகிறான்.

4. இந்த மந்திரத்தை நித்யம் அத்தியயநம் செய்கிறவன் பாபம், மிருத்யு, கர்பஹத்தி, பிரமஹத்தி, ஸர்வஹத்தி, ஸம்ஸாரம், ஸர்வம் இவைகளைத் தாண்டுகிறான்.

5. அக்னி, வாயு, ஆதித்தியன், ஸோமன், உதகம், தேவர்களெல்லாம், கிரகங்களெல்லாம், விஷம்—இவைகளை ஸ்தம்பனம் செய்கிறான்.

6. பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், மஹ, ஜன, தப, ஸத்ய—உலகங்களையும் மற்றைய பாதாலமுதலிய கீழ் உலகங்களையும் ஜயிக்கின்றான்.

7. மனிதர்கள், தேவர்கள், நரர்கள், கிரகங்கள், யக்ஷர்கள் முதலான எல்லோரையும் வசப்படுத்திக்கொள்ளுகிறான்.

8. அக்னிஷ்டோமம் முதலிய எல்லா யாகங்களையும் செய்கின்றான் (அதாவது, எல்லா யாகங்களின் பலன்கள் இவனுக்கு கிடைக்கின்றது).

9. ரிக்கு முதலான எல்லா வேதங்களையும் அத்தியயநம் செய்தவனாகிறான். பிரணவத்தையும் அத்தியயநம் செய்தவனாகிறான். பிரணவத்தை அத்தியயநம் செய்தவன் எல்லாவற்றையும் அத்தியயநம் செய்தவனாகிறான் (இதனால் பிரணவமும் நாரஸிம்ஹ மந்திரமும் ஸமமென்று காட்டப்படுகிறது).

10. நூறு அபிரமசாரிகளுக்கு ஒரு பிரமசாரி ஸமம். நூறு பிரமசாரிகளுக்கு ஒரு கிரகஸ்தன் ஸமம். நூறு கிரகஸ்தர்களுக்கு ஒரு வாநபிரஸ்தன் ஸமம். நூறு வாநபிரஸ்தர்களுக்கு ஒரு யதி ஸமம். நூறு யதிகளுக்கு ஒரு ருத்திர ஜபம் செய்கிறவன் ஸமம்.

நூறு ருத்திர ஜபங்களுக்கு ஒரு அதர்வண சிகாமந்திரங்களை ஜபிக்கிறவன் ஸமம். நூறு அதர்வண சிகாமந்திர ஜபங்களுக்கு ஒரு இந்த மந்திரராஜத்தை ஜபிக்கிறவன் ஸமம். இந்தப் பிரகாரம் நாரஸிம்ஹ மந்திரம் நிரம்ப உயர்ந்தது. இந்த மந்திரத்தை ஜபிக்கிறவனுக்கு மேலான பதவி கிடைக்கும். (எப்படிப்பட்ட பதவி யெனில்) எந்த ஸ்தானத்தில் சூரியன் தபிக்கவில்லையோ, வாயு வீசுகின்றதில்லையோ, சந்திரன் தபிக்கவில்லையோ, நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கின்றதில்லையோ, அக்னி தகிக்கவில்லையோ, மிருத்யு பிரவேசிக்கின்றதில்லையோ, துக்கம் உண்டாகவில்லையோ, எது ஸதானந்தமாயும், பரமானந்தமாயும், சாசுவதமாயும், சாந்தமாயும், சதாசிவமாயும், பிரமன் முதலானவர்களால் வந்திக்கப்பட்டதாயும், யோகிகளால் தியானிக்கப்பட்டதாயும், எதனிடத்தில் சென்று யோகிகள் திரும்பி வருவதில்லையோ அப்படிப்பட்ட ஸ்தானமாயிருக்கின்றது.

இதற்கு ரிக்கு மந்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது. "விஷ்ணுவின் பரமபதத்தை உபாஸகர்கள் எப்பொழுதும் பார்க்கின்றார்கள். (அத்தகைய பதமெங்ஙனமெனில்) ஆகாசத்தில் விஸ்தாரமாக வைக்கப்பட்டிருக்கின்ற சூரிய மண்டலம்போலிருக்கின்றது. இப்படிப்பட்ட பதத்தை மேதாவிகளாகவும், ஜாக்ராமுதலிய அவஸ்தைகளை கடந்தவர்களாகவும், பிராமணர்களுமான உபாஸகர்கள் பூர்ணமாக அடைகின்றார்கள். நிஷ்காமனுக்கே இப்பதமுளது."

பூர்வதாபனீ முற்றிற்று.

[இவ்வுபநிஷத்தின் பின் பாகமான உத்தரதாபனீ உபநிஷத்தில் அநேகமாக பூர்வதாபனீயில் சொல்லப்பட்டதே இருப்பதாலும், ஆசாரியர்களால் பாஷ்யம் செய்யப்படாமலிருப்பதாலும் மொழிபெயர்க்கப்படவில்லை].

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

நிருஸிம்ஹதாபனீ முற்றிற்று.

ஓம்.

அதர்வண வேதீய

ப்ரச்நோபநிஷத்.

சாந்தி.

(இது அதர்வண வேத உபநிஷத்தானபடியால் முன் ந்ருஸிம்ஹதாபனீ உபநிஷத்தின் சாந்தியே இதற்கு சாந்தியாகும்).

முதல் ப்ரச்நம்.

---

1. பாரத்வாஜர் என்ற ஸுகேசர் (i), சைப்யர் என்ற ஸத்யகாமர் (ii), ஸௌர்யாயணி என்ற கார்க்யர் (iii), கௌசல்யர் என்ற ஆச்வலாயனர் (iv), பார்க்கவர் என்ற வைதர்பி (v), கபந்தி என்ற காத்யாயனர் (vi). இந்த ஆறு பெயர்களும் அபர பிர்ம பரர்களாகவும் (பரப்பிரமத்தை அறியாமல் கர்மபரர்களாகவும்), அந்த பிரம நிஷ்டர்களாகவும் (கர்மிஷ்டர்களாகவும்), பரபிர்மத்தை அறிய வேண்டும் என்று இச்சையுள்ளவர்களாகவும், கைகளில் ஸமித்துக்களை எடுத்துக்கொண்டு பிப்பலாத ரிஷியிடத்திற்கு, இவர் எல்லாம் சொல்லத்தக்கவர் என்று நினைத்து, போனார்கள்.

2. அந்த (பிப்பலாத) ரிஷி அவர்கட்கு சொன்னதாவது— தபஸுடனும் (இந்திரிய நிக்ரகத்துடனும்), ச்ரத்தையுடன் பிரமசரியத்துடனும் (ஆஸ்திக்கிய புத்தியுடனும்), ஒரு வருஷகாலம் (குரு சுச்ரூஷை செய்துகொண்டு) இருங்கள்; (பிறகு) இஷ்டப்படி கேட்டால் தெரியப்படுத்துகிறோம்; எல்லாவற்றையும் சொல்வோம் என்று.

3. பிறகு (அப்படி ஒரு வருஷம் சென்ற பிறகு) கபந்தீ காத்யாயனர் அணுகி கேட்டதாவது; ஹே! பகவானே! இந்த பிரஜைகள் எதனிடத்தில் நின்றும் உத்பத்தியாயின?

ஓம்.

அதர்வண வேதீய

ப்ரச்நோபநிஷத்.

சாந்தி.

(இது அதர்வண வேத உபநிஷத்தானபடியால் முன் நருஸிம்ஹதாபநீ உபநிஷத்தின் சாந்தியே இதற்கு சாந்தியாகும்).

முதல் ப்ரச்நம்.

---

1. பாரத்வாஜர் என்ற ஸுகேசர் (i), சைப்யர் என்ற ஸத்யகாமர் (ii), ஸௌர்யாயணீ என்ற கார்க்யர் (iii), கௌசல்யர் என்ற ஆச்வலாயனர் (iv), பார்க்கவர் என்ற வைதர்பி (v), கபந்தி என்ற காத்யாயனர் (vi). இந்த ஆறு பெயர்களும் அபர பிர்ம பரர்களாகவும் (பரப்பிரம்மத்தை அறியாமல் கர்மபரர்களாகவும்), அந்த பிரம்மநிஷ்டர்களாகவும் (கர்மடர்களாகவும்), பரபிர்மத்தை அறியவேண்டுமென்று இச்சையுள்ளவர்களாகவும், கைகளில் ஸமித்துக்களை எடுத்துக்கொண்டு பிப்பலாத ரிஷியிடத்திற்கு, இவர் எல்லாம் சொல்லத்தகுந்தவர் என்று நினைத்து, போனார்கள்.

2. அந்த (பிப்பலாத) ரிஷி அவர்களுக்கு சொன்னதாவது—தபஸோடும் ப்ரமசர்யத்துடனும் (இந்திரிய நிக்கிரகத்துடனும்), ச்ரத்தையுடன் விச்வாஸத்துடனும் (ஆஸ்திக்கிய புத்தியுடனும்), ஒரு வருஷகாலம் (குருசுச்ருஷை செய்துகொண்டு) இருங்கள்; (பிறகு) இஷ்டப்படி கேட்டால் தெரியப்படுத்துகிறோம்; எல்லாவற்றையும் சொல்வோம்' என்று.

3. பிறகு (அப்படி ஒரு வருஷம் சென்ற பிறகு) கபந்தீ காத்யாயனர் அவரை கேட்டதாவது; ஹே! பகவானே! இந்த பிரஜைகள் எதனிடத்தில் நின்றும் உற்பத்தியாயின?.

4. அவர் பதில் சொன்னதாவது; பிரஜாபதியானவர் (பரமாத்மா) பிரஜைகளை ஸிருஷ்டிக்கவேணுமென்ற இச்சையுள்ளவராக, (அப்படியாகட்டும் என்று) தபித்தார் (நினைத்தார்); தபித்து ரயி, ப்ராணன் (சந்திரன், சூரியன்) ஆகிற இரட்டையை, இவர்கள் எனக்கு வெகுவிதமான பிரஜைகளை உண்டுபண்ணப் போகிறார்கள் என்று (நினைத்து), ஸிருஷ்டித்தார்.

5. ப்ராணன் என்பது சூரியன், (அக்னி, தின்னுகிறவன்); ரயி என்பது சந்திரன் (தாவரமானது, அன்னம்); ரயியானது எதெது ஸ்தூலமாயும், சூக்ஷ்மமாயுமிருக்கிறதோ அந்த இதெல்லாம் (இந்த ஜகத்தெல்லாம்) ஆகவிருக்கிறது; ஆனதால் ரயிமூர்த்தமுள்ளது (உருப்படியுள்ளது).

6. சூரியன் உதயமாகி, எதனாலே (எந்த தன் பிரகாசத்தால்) கிழக்கு திக்கை பிரகாசப்படுத்துகிறாரோ, அதனால் (அந்த பிரகாசத்தால்) அந்த திக்கிலுள்ள ப்ராணன்களை (தன்) கிரணங்களில் தரிக்கிறார் (அந்த திக்கிலுள்ள ப்ராணிகளுக்கு தன் கிரணங்களால் ப்ராணனை கொடுக்கிறார்); அப்படியே தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், மூலை இந்த திக்குகளிலுள்ளவர்களுக்கும், (இன்னமும் மற்ற) எல்லாவற்றிற்கும் (கொடுக்கிறார்).

7. இவரே (சூர்யனே) ஸர்வாத்மா, விச்வரூபர்; ப்ராணன்; அக்னியாக உண்டாக்கப்படுகிறார்.

8. (இவரை) விச்வரூபராகவும், கிரணமுள்ளவராகவும், ஞானமுள்ளவராகவும், ஸர்வப்ராண ஆச்ரயராகவும், ஜ்யோதியாகவும், ஏகராயும், (பெரியோர்கள்) பார்க்கிறார்கள். (இவர்) அநேக கிரணமுள்ளவர்; அநேகவிதமாய் இருக்கப்பட்டவர்; ப்ராணன்; பிரஜைகளுக்கு உதயமாகிறவர் (பிரஜைகளுக்காக உதயமாகிறவர்).

9. ஸம்வத்ஸரம் என்பது (வருஷம்) பிரஜாபதி (காலாத்மா, பிரம்மம்); அதற்கு இரண்டு அயனங்கள் (மார்க்கங்கள்), தக்ஷிணாயனம், உத்திராயணம் என்று; எவர்கள் அதை (வருஷத்தை) இஷ்டம் பூர்த்தம் இவைகளைச்செய்து உபாஸிக்கிறார்களோ அவர்

கள் சந்த்ரலோகத்தை யடைகிறார்கள்; அவர்கள் மறுபடியும் திரும்புகிறார்கள்; ஆனதால் இந்த ரிஷிகள் (பெரியவர்கள்) ப்ரஜா காமர்களாக தக்ஷிணாயனத்தை (தக்ஷிணாயன உபலக்ஷித சந்த்ரனை) அடைகிறார்கள். இந்த ரயி (சந்த்ரனே) பித்ருயாணம் (பித்ரு லோக மார்க்கம்).

(இஷ்ட மென்பது—அக்நி ஹோத்ரம், தபஸ், ஸத்யம், தேவ பூஜை, அதிதி பூஜை, வைச்வதேவம்; பூர்த்தமென்பது—வாபீகூப தடாகங்கள் வெட்டுகிறது, கோவில் கட்டுகிறது, அன்னதானம்).

10. பிறகு, உத்தராயணத்தால் (உத்தராயணத்தில்) தபஸினாலும், ப்ரஹ்மசர்யத்தினாலும், ச்ரத்தையினாலும், ஆத்மவித்தையினாலும் ஸூர்யனை யடைகிறார்கள்; இதுதான் (ஸூர்யன்தான்) ஸர்வ ப்ராணிகளுடைய இருப்பிடம்; இதுதான் அம்ருதம், அபயம், பராயணம்; இதனின்றும் மறுபடி திரும்பமாட்டார்கள்; இது (அவித்வான்களுக்கு) தடை. (அவித்வான்கள் இதை அடைய மாட்டார்கள்); இந்த விஷயத்தில் இந்த ச்லோகமுள்ளது.

11. ஐந்து பாதங்களுள்ளவரும் (ஆறு ருதுக்களில் ஹேமந்த சிசிர ருதுக்களை ஒன்றாய்ச் சேர்த்து, பாக்கி ஐந்து ருதுக்களாகிற பாதங்கள்); பன்னிரண்டு விதமான ஆக்ருதியை உடையவரும் (12 மாதங்கள் ஆக்ருதிகள்); பிதாவாயும் (எல்லோரையும் ஜனிப்பிக்கிறவர்), உதகமுள்ளவராயும் இருக்கிறவரை (காலாத்மாவை) த்யுலோகத்திற்கு மேலே (எல்லாவற்றிற்கும் உயர) இருப்பதாக (இருக்கிற பரமாத்மாவென்று) காலத்தை யறிந்த சிலர் சொல்லுகிறார்கள்; மற்ற சிலர் ஸர்வஜ்ஞராயிருக்கிறவரை ஆறு ஆரங்களையுடைய (6 ருதுக்கள் ஆரங்கள்), ஏழு குதிரைகள் கட்டின சக்ரத்தில் (ரதத்தில்) வைக்கப்பட்டிருக்கும் வஸ்துவாக (ஆதித்யனாகிற காலாத்மாவாக) சொல்லுகிறார்கள்.

(ப்ரம்மமாகிய, ப்ரஜாபதியாகிய, காலாத்மாவாகிய, ஸூர்ய சந்த்ர மிதுனமாகிய இந்த வஸ்துவே ஜகத்திற்கு காரணம் என்று கேள்விக்கு உத்தரம்).

12. மாஸமே பிரஜாபதி (காலாத்மா, ஆதித்யன், பிரமம்); அதனுடைய கிருஷ்ணபக்ஷம் ரயி (சந்திரன், அன்னம்); சுக்ல பக்ஷம் ப்ராணன் (சூரியன், அத்தா); ஆனதால் இந்த ரிஷிகள் (ப்ராணதரிசிகள்) சுக்ல பக்ஷத்தில் முக்யமாய் யாகத்தை செய்கிறார்கள்; அப்படியே மற்றவர்கள் மற்ற பக்ஷத்தில் செய்கிறார்கள்.

13. பகல் ராத்திரியுள்ள தினமும் பிரஜாபதிதான்; அதன் பகல் ப்ராணன்; ராத்திரி ரயி; எவர்கள் பகலிலே ரதி காரணபூதை யாயிருக்கிற ஸ்திரீயுடன் சேர்கிறார்களோ அவர்கள் ப்ராணனை வெளிக்கிளப்பிப் போகும்படி செய்கிறார்கள் (அல்ப ஆயுளாய்ப் போகிறார்கள்); எவர்கள் ராத்திரியில் அப்படி செய்கிறார்களோ அவர்களுக்கு பிரமசரியம், தானம் கிடைக்கும்.

14. அன்னமே பிரஜாபதி; அதிலேயிருந்து ரேதஸ் உண்டாகிறது; அதிலே நின்றும் இந்த பிரஜைகள் உண்டாகிறார்கள்.

15. எந்த கிரகஸ்தர்கள் அந்த ப்ரஜாபதி விரதத்தை (ருது காலங்களில் பார்யாகமனத்தை) செய்கிறார்களோ, அவர்கள் மிதுனத்தை (புத்ரன், புத்ரியை) உண்டுபண்ணுகிறார்கள். எவர்களிடத்தில் தபஸும், பிரமசரியமும் இருக்கிறதோ, எவர்களிடத்தில் ஸத்யம் ஸ்தாபித்திருக்கிறதோ, அவர்களுக்கு இந்த பிரமலோகம் (சந்திரலோகம் பித்ருயானம்) கிடைக்கும்.

16. எவர்களிடத்தில் ஜிம்மம் (வக்ரபுத்தி), அந்ருதம் (பொய்), மாயை (வஞ்சனை) இல்லையோ அவர்களுக்கு சுத்தமாயிருக்கிற பிரமலோகம் (சூரியலோகம், தேவயானம்) கிடைக்கும்.

(கேவல கர்மிகளுக்கு சந்திரலோகம்; ஞானத்தோடு கூடின கர்மிகளுக்கு சூரியலோகம்).

இரண்டாவது ப்ரச்னம்.

1. பிறகு, இவரை பார்கவர் என்ற வைதர்பியானவர் கேட்
டார்; ஹே! பகவானே! சரீரமாயிருக்கிற பிரஜையை எத்தனை
தேவர்கள் தரிக்கிறார்கள்? (ஆதரிக்கிறார்கள்?); இவர்களில் எவர்
கள் (எந்த தேவர்கள்) இந்த சரீரத்தை பிரகாசப் படுத்துகிறார்
கள்? மேற்படி தேவர்களுக்குள் ச்லாக்யன் யார்?.

2. இவர் பதில் சொன்னதாவது—ஆகாசம், வாயு, அக்னி,
ஜலம், ப்ருதிவி இந்த பஞ்ச பூதங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள்
ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு, ஆக
பத்தொன்பது தேவர்கள் (தத்வங்கள் சரீரத்தை தாங்குகிறார்
கள்); (இவர்களுக்குள் ஐந்து பூதங்களைத் தவிர மற்ற 14
தத்வங்கள்) பிரகாசித்துக்கொண்டு சொல்லுகின்றனவாவது—நாங்
கள் இந்த சரீரத்தை பிடித்துக்கொண்டு தாங்குகிறோம்.

3. (இப்படி கர்வம் கொண்ட) இவர்களைப்பார்த்து, ச்லா
க்யமாயிருக்கிற ப்ராணன் (வாயு) சொன்னதாவது—(இந்தப்படி)
தெரியாத்தனத்தை படையவேண்டாம்; நானே என்னை ஐந்து
விதமாக பாகித்துக்கொண்டு இந்த சரீரத்தை பிடித்துக்கொண்டு
தாங்குகிறேன்.

4. (அப்படிச் சொல்ல) இவர்கள் (கவனிக்காமல்) அலக்ஷ
யமாயிருந்தார்கள். அவர் (ப்ராணன்) அவர்களிடமிருக்கிற அபி
மானத்தால் (சரீரத்தைவிட்டு, தான்) உயரக்கிளம்பி போய்விட்
டதுபோல் (காண்பித்தார்); அப்படிச்செய்த உள்ளளவில் மற்
றதெல்லாம் (மற்ற தத்துவங்களெல்லாம்) உயரக் கிளம்பிவிட்
டன; (மறுபடியும்) அவர் (ப்ராணன்) சரீரத்தை வந்தடைந்தவு
டன் மற்றவைகளும் வந்து சேர்ந்தன; அது எப்படிப் போல
வென்றால், தேனீக்கள், அவைகளின் தலைவன் (புஷ்பத்தைவிட்டு)

வெளிக்கிளம்பிப் போகிறபொழுது, கூடவே போகின்றன; மறுபடியும் அது வந்து சேருகிறபொழுது அவைகளும் வந்து சேருகின்றன; இப்படிப்போல்; (இந்தப்படி வாயு காட்டிக்கொடுத்த பிறகு இந்த 14 இந்திரியங்களும் வாயுவின் மகிமையை அறிந்து) விசுவாசமுள்ளவர்களாக ப்ராணனை ஸ்தோத்ரம் செய்கிறார்கள்.

5. "இவர் (ப்ராணன், வாயு) அக்னியாயிருந்து தபிக்கிறார்; இவரே ஸூர்யன்; இவரே மேகம்; இவரே இந்திரன்; இவரே வாயு; இவரே ப்ருதிவி; இவரே சந்திரன்; இவரே இருக்கிறவஸ்து (உருப்படியாய் தெரிகிறவஸ்து); இவரே இல்லாதவஸ்து (அப்படி தெரியாதவஸ்து)."

6. "சக்கிரத்தின் குடத்தில் ஆரங்கள் போல, ப்ராணனிடத்தில் எல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது; இவைதான் ரிக்குவேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், யக்ஞம் (பூஜை), க்ஷத்ரம் (யாகம்), பிரம்மம்."

7. "நீர்தான் பிரஜாபதி; கர்ப்பத்திலிருக்கிறவர்; ப்ரதியாய் வந்து பிறக்கிறவர்; ஹே! ப்ராணா! இந்த பிரஜைகள் உனக்கு பலியை (இந்திரியங்கள் வழியாக) கொண்டுவந்து கொடுக்கிறார்கள்; ப்ராணங்கள் (இந்திரியங்கள்) ஸஹிதமாய் இருக்கிறீர்."

8. "தேவர்களுக்கு உத்தம அக்னியாயும் (அக்னி முகமாய் தேவர்கள் ஹவிஸ்ஸை அடைகிறார்கள்), பித்ருக்களுக்கு முந்தின ஸ்வதாவாயும் (பித்ருக்கள் அக்னி முகமாய் ஸ்வதா கொடுக்கப்பட்ட அன்னத்தை புஜிக்கிறார்கள்), ரிஷிகளுக்கு (இந்திரியாதிகளுக்கு) தொழிலாயும் (தொழிலைச் செய்யும்படி ஏவுகிறதாயும்), அதர்வண வேதத்திற்கு ஸத்யமாயும் (அதர்வண வேதமாயும்) இருக்கிறீர்."

9. "ஹே! ப்ராணா! தேஜஸால் நீர் இந்திரன்; ருத்ரனாயிருக்கிறீர்; ரக்ஷிக்கிறவர் நீர்; நீரே ஜ்யோதிகளுக்கு பதியாக, ஸூர்யனாக, ஆகாசத்தில் ஸஞ்சரிக்கிறீர்."

10. "எப்பொழுது நீர் வர்ஷிக்கிறீரோ, அப்பொழுது, ஹே! ப்ராண! உம்முடைய இந்த பிரஜைகள் ஆநந்த ரூபர்களாக ஆகிறார்கள்; அவர்களுடைய இச்சையின்பொருட்டு அன்னம் கிடைக்கிறது."

11. "ஹே! ப்ராண! நீ ஸ்வபாவ சுத்தன்; (அதர்வண வேதங்களுக்கு ப்ரசித்தமாயிருக்கிற) ஏகரிஷி; அத்தா (திங்குகிறவன், அக்னி); ஜகத்திற்கு ஸத்பதி; நாங்கள் உனக்கு திங்கப்படும் வஸ்துவை கொடுக்கிறவர்கள்; ஹே! வாயு! நீ எங்களுடைய பிதாவாயிருக்கிறாய்."

12. "வாக்கில் (அபாந ரூபமாக) எந்த உன்னுடைய சரீரம் வைக்கப்பட்டிருக்கிறதோ, ச்ரோத்ரத்தில் (வ்யாந ரூபமாக), நேத்திரத்தில் (ப்ராண ரூபமாக), மனஸில் (ஸமான ரூபமாக) எது சேர்ந்திருக்கிறதோ அந்த சரீரத்தை சிவமாக (மங்களகரமாக, சாந்தமாக) செய்; உத்க்ரமிப் போய்விடாதே!."

13. "இந்த ஜகத் முழுவதும், தேவலோகத்திலிருக்கிறதும் (தேவர்களும்), ப்ராணனுடைய வசத்திலிருக்கிறது; தாயாரைப்போல் புத்திரர்களை (எங்களை) ரக்ஷி; ஸம்பத்தையும், ஞாநத்தையும் எங்களுக்குக் கொடு."

மூன்றாவது ப்ரச்னம்.

1. பிறகு, இவரை (பிப்பலாதரை) கௌசல்யர் என்ற ஆச்வலாயனர் கேட்டதாவது— ஹே! பகவானே! இந்த ப்ராணன் எங்கிருந்து உண்டாகிறான்? இந்த சரீரத்தில் எப்படி வருகிறான்? தன்னை எப்படி பிரித்துக்கொண்டு இருக்கிறான்? எதனால் உயரக் கிளம்புகிறான்? வெளிப்பட்டதை (அதிபூத. அதிதைவம்—பூதங்களிடத்திலும், தேவர்களிடத்திலும்) எப்படி அடக்கிருக்கிறான்? அத்யாத்மத்தை (ஜீவனை) எப்படி அடக்கிருக்கிறான்?. (ஆறு கேள்விகள் கேட்டார்).

2. அவர் பதில் சொன்னதாவது— அதிக கேள்விகள் கேட்கிறாய்! பிரமிஷ்டனாயிருக்கிறாய்; ஆகையால், உனக்கு நான் சொல்லுகிறேன்.

3. இந்த ப்ராணன் ஆத்மாவினிடத்தில் நின்றும் (பிரமத்தினிடத்திலிருந்து) உண்டாகிறான்; புருஷனிடத்தில் நிழல்போல் உண்டாகிறான்; பிரமத்தினிடத்தில் இது (ப்ராணனென்று பெயருள்ள நிழலாகிற ஒரு பொய் ரூபம்) வைக்கப்பட்டிருக்கிறது; மனதின் தொழிலால் (சங்கல்பம், இச்சை இவைகளாலுண்டான கர்ம நிமித்தத்தினால்) இந்த சரீரத்தில் வருகிறான்.

4. ஒரு ராஜா, கீழ்ப்பட்ட அதிகாரிகளை, இந்த இந்த கிராமத்தில் நீங்கள் இருந்து அதிகாரத்தை நடத்துங்கள் என்று உத்திரவு கொடுப்பதுபோல, இந்த ப்ராணன் மற்ற ப்ராணங்களை தனித்தனியாக ஆக்ஞாபிக்கிறது.

5. பாயு, உபஸ்தம் இவைகளில் அபானவாயுவும்; கண்கள் காதுகள், மூக்குகள், வாய் இவைகளில் தானே ஸ்வயமாய் ப்ராண வாயுவும்; மத்தியில் (நாபியில்) ஸமான வாயுவும் வைக்கப்பட்

டிருக்கின்றன; இது (ஸமானவாயுவும்) புஜித்த அன்னத்தை ஸமானப்படுத்துகிறது (மூத்ர புரீஷங்களாக பக்குவப்படுத்தி விடுகிறது); ஆனதால், இவைகள் (மேற்படி நேத்ரங்கள் முதலான ஏழு இந்திரியங்கள்) ஏழு ப்ரகாசங்களாக வெளிப்பட்டிருக்கின்றன.

6. ஹ்ருதயத்தில் (புண்டரீகார மாம்ஸ பிண்டத்தில்) இந்த ஆத்மா (லிங்காத்மா, ஜீவாத்மா) இருக்கிறார். இவ்விடத்தில் (ஹ்ருதயத்தில்) நூற்றி ஒன்று பிரதான நாடிகள் உள; அவைகளில் ஒவ்வொன்றிற்கும் 100,100 பேதங்கள் (சாகா நாடிகள்); இவைகளில் ஒவ்வொன்றிற்கும் 72,000, 72,000 பேதங்கள் (ப்ரதிசாகா நாடிகள்); இவைகளில் வ்யானவாயு ஸஞ்சரிக்கிறது (எங்கும் வ்யாபித்துக்கொண்டு இருப்பதால் வ்யானவாயு என்று பெயர்).

7. இந்த நாடிகளில் முக்யமான ஒன்றாகிய ஸுஷும்நா நாடி வழியாய் உதானவாயு (உயரக்கிளம்புகிற வாயு) ஸஞ்சரிக்கிறது; புண்யம் செய்தவர்களை புண்யலோகத்திலும், பாபம் செய்தவர்களை நரகத்திலேயும் (திர்யக்ஜன்ம ரூபமாயும்), இரண்டையும் ஸமமாய் செய்தவர்களை மனுஷ்யலோகத்திலேயும் (மனுஷ்ய ரூபமாயும்) இந்த வாயு சேர்ப்பிக்கிறது.

8. ஸூர்யன் (அக்னி மண்டலம்) வெளிப்பட்ட ப்ராணன்; (ப்ராணன்களுடைய அதிதேவதையாக சொல்லப்படுகிறது); உயரக் கிளம்புகிறான்; சக்ஷுஸ்ஸம்பந்தமான (அத்யாத்மமான) ப்ராணனை (பார்வை, கேள்வை முதலான சக்தியை கொடுத்து) அநுகிரக்கிறான்; பூமி தேவதை (பூமண்டலம்) அபானவாயு; சரீரத்திலுள்ள அபானவாயுவை (கீழே விழாமலும் உயர பறந்து போகாமலும் மனுஷ்யனைப் பிடித்து இழுத்துக்கொண்டு) அநுகிரக்கிறது; அந்தரிக்ஷம் (வெளி) ஸமானவாயு; சரீரத்திலுள்ள ஸமானவாயுவை (வெளி கொடுத்து) அநுகிரக்கிறது; வாயு (காற்று) வ்யானவாயு; சரீரத்திலுள்ள வ்யானவாயுவை (எங்கு புகரச்செய்து) அநுகிரகக்கிறது.

9. தேஜஸ் (சக்ஷுஸ், மின்னல் முதலான தேஜஸ்கள்) உதானவாயு; (சரீரத்திலுள்ள உதானவாயுவை அநுக்ரஹிக்கிறது); உதானவாயு போனவுடனே தேஜஸ் போய்விட்டதென்று சொல்லுகிறார்கள். (தேஜஸ் என்றால் கண்; உதானவாயு பிரிந்த உடனே உயிர் போய்விட்டது, ப்ரேத மாய்விட்டதென்று சொல்லப்படுகிறது); இந்த தேஜஸ்தான் மனதில் அடங்கப்பட்ட வாகாதி இந்திரியங்களோடு மறுபடியும் ஜனிக்கிறது.

10. மரண காலத்தில் எந்த ஸங்கல்பத்துடன் உயிரை விடுகிறானோ, அந்த ஸங்கல்ப ஸஹிதனாய் முக்ய ப்ராண விருத்தியோடு சேருகிறான்; (ப்ராணவாயுவினிடத்தில் அடங்கியிருக்கிறான்); அந்த ப்ராணவாயு தேஜஸோடு (உதான வாயுவுடன்) சேர்ந்து கொண்டு மஹாத்மாவினால் ஸங்கல்பிக்கப்பட்ட லோகத்தை யடைகிறான் (அதாவது, மரண காலத்தில் அவனவனுடைய ஸங்கல்பத்துக்குத் தக்கபடி லோகம் கிடைக்கிறது).

11. ப்ராணனை இப்படி அறிந்தவனுக்கு பிரஜைகள் குறையமாட்டா; அம்ருதத்தை யடைவான்; இந்த விஷயத்தில் (அடியில்கண்ட) இந்த மந்திரம் இருக்கிறது.

12. இப்படி ப்ராணனுடைய (பரமாத்மா விடத்திலே நின்றும்) உத்பத்தியையும், (மனஸ் ஸங்கல்பத்தால்) வரவையும், (சக்ஷுஸ் முதலான) இருப்பிடத்தையும், (அதின் தொழிலால் உண்டான) அதிகாரத்தையும், ஐந்து விதமாக பிரிந்து இருக்குகையும், அத்யாத்மத்தையும் யார் அறிகிறானோ அவன் அம்ருதத்தை யடைவான், அவன் அம்ருதத்தை யடைவான்.

நான்காவது ப்ரச்னம்.

1. பிறகு இவரை (பிப்பலாதரை) ஸௌர்யாயணர் என்ற கார்க்யர் கேட்டதாவது—ஹே! பகவானே! இந்த புருஷனிடத்தில் எவைகள் தூங்குகின்றன? எவைகள் விழித்துக்கொண்டிருக்கின்றன? எந்த தேவன் ஸ்வப்னத்தைப் பார்க்கிறான்? யாருக்கு இந்த சுகம் (ஸுஷுப்தி சுகம்) இருக்கிறது? யாரிடத்தில் எல்லோரும் அடங்கியிருக்கிறார்கள்? (இந்த கேள்விகள்).

2. இவர் பதில் சொன்னதாவது—எப்படி அஸ்தமயத்தையடையும் சூர்யனுடைய கிரணங்கள் ஒன்றாய்ச் சேர்ந்துபோய் சூர்ய மண்டலத்தை யடைகின்றனவோ, எப்படி மறுபடியும் சூர்யன் உதயமாகும்பொழுது கிரணங்கள் பரவுகின்றனவோ, அப்படி எல்லாம் (தசேந்த்ரியங்களும்) உத்க்ருஷ்டமான தேவனாகிய (ஜ்ஞானமாகிய) மனதிலே ஒன்றாய்ப்போய் சேருகின்றன. அதனால்தான் இந்த புருஷன் கேட்கிறதில்லை; பார்க்கிறதில்லை; மோருகிறதில்லை; ருசிபார்க்கிறதில்லை; தொடுகிறதில்லை; பேசுகிறதில்லை; எடுக்கிறதில்லை; ஆனந்தப்படுகிறதில்லை; கீழேவிடுகிறதில்லை; போகிறதில்லை; அப்பொழுதுதான் தூங்குகிறான் என்று சொல்லப்படுகிறது.

3. இந்த பட்டணத்தில் (நவத்வாரமுள்ள சரீரத்தில்), ப்ராணங்களாகிற (ஐந்து ப்ராணங்கள்) அக்னிகள் விழித்துக்கொண்டிருக்கின்றன; (ஒருவன் தூங்கும் காலத்தில்கூட இந்த ப்ராணங்கள்மட்டும் அதனின் வேலையை செய்துகொண்டிருக்கின்றன). அபானவாயுவுக்கு கார்ஹபத்யாக்னி என்று பெயர் (யாகத்தில் யஜமானன் ஸமீபத்திலிருக்கிற அக்னி); எப்படி யாகத்தில் கார்ஹபத்யாக்னியிடத்திலே நின்றும் ஆஹவனீயாக்னி எடுக்கப்படுகிறதோ அப்படி அபானவாயுவிடத்திலேயிருந்து கிளம்பி, ப்ராணவாயுவாகிய ஆஹவனீயாக்னி, வாய், மூக்கு இவைகள் வழியாக, சஞ்சரிப்பதனால் ப்ராணனுக்கு ஆஹவனீயாக்னி யென்றுபெயர்;

வ்யாநவாயு இருதயத்திற்கு வலதுபுறமுள்ள ஸுஷிரத்துவாரத்தின் வழியாய் எங்கும் நிறைந்திருக்கிறதோ, அதனால் வ்யாநவாயுவுக்கு தக்ஷிணாக்னி என்று (யாகத்தில் தெற்கே வைக்கப்பட்டிருக்கிற அக்னி யென்று) பெயர்.

4. உச்வாஸ நிச்வாஸங்களாகிற இரண்டு ஆஹுதிகளை ஸமமாக நயிப்பிக்கிறபடியால் ஸமாநவாயு (அக்னி ரூபமாயிருந்தாலும்) (யாகத்தில்) ஹோதாவாயிருக்கிறது; மனஸ்தான் (யாகத்தில்) யஜமானன்; உதாநவாயு யாகத்தின் பலன்; இதுதான் யஜமானனை (மனஸை) நாள்தோறும் பிரம்மத்தினிடத்தில் கொண்டுபோய் (ஸுஷுப்தி காலத்தில்) சேர்க்கிறது; (அதாவது, தூக்ககாலத்தில் பஞ்சப்ராணங்களும், மனஸும் மாத்திரம் தொழிலை செய்கின்றன; ஒரு யாகமாகிற தொழிலை செய்கின்றன).

5. இவர்களுக்குள் இந்த தேவன் (மனஸ்) ஸ்வப்நத்தில் மஹிமையை அனுபவிக்கிறது; பார்க்கப்பட்டதை பார்க்கிறது, கேட்கப்பட்டதை கேட்கிறது. எங்கெங்கு இடத்திலும் எங்கெங்கு திக்கிலும் எது அனுபவிக்கப்பட்டதோ அதை அனுபவிக்கிறது. மேலும், பார்க்கப்பட்டதையும், பார்க்கப்படாததையும், கேட்கப்பட்டதையும், கேட்கப்படாததையும், அனுபவிக்கப்பட்டதையும், அனுபவிக்கப்படாததையும் எல்லாவற்றையும் எல்லாமாகவிருந்து ஸ்வப்நத்தில் (மனஸ்) பார்க்கிறது.

6. அவன் (மனஸ்) எப்பொழுது (சித்ரூபமான பிரமமாகிற) தேஜஸினால் எங்கும் பரவிப்பட்டுப்போகிறதோ (அப்பொழுது தான் ஸுஷுப்திகாலம்); அப்பொழுது இந்த தேவன் (மனஸ்) ஸ்வப்நத்தைப் பார்க்கிறதில்லை; அப்பொழுதுதான் இந்த சரீரத்தில் இந்த ஸுகம் (ஸுஷுப்திஸுகம்) உண்டாகிறது.

7. எப்படி பக்ஷிகள் வஸிக்கும்பொருட்டு விருக்ஷத்தை யடைகின்றனவோ அப்படி (அடியில்கண்ட) எல்லாம் பரமாயிருக்கிற ஆத்மாவிடத்தில் (ஜீவாத்மாவிடத்தில்) போய் சேருகின்றன.

8. (அவைகளாவன) பஞ்சபூதங்கள், அதனின் மாத்திரைகள் (ஸூக்ஷ்ம பூதங்கள்), தசேந்திரியங்களும் அதனின் விஷயங்

களும், காமும் அஹங்காரங்களும் அதின் விஷயங்களும், தேஜஸும் (தேகத்தின் ப்ரகாசம், உஷ்ணபாவம்) அதன் விஷயமும், ப்ராணனும் அதன் விஷயமும், எல்லாம் (கார்ய காரண ஸங்காதம்); (ஜீவாத்மாவிடத்தில் போய்ச் சேருகின்றன).

9. இந்த புருஷன்தான் பார்க்கிறவன், கேட்கிறவன், முகர்ந்து பார்க்கிறவன், ருசி பார்க்கிறவன், நினைக்கிறவன், அறிகிறவன், செய்கிறவன், விஞ்ஞாநாத்மா (ஜீவாத்மா), இவன் பரமாயும், அக்ஷரமாயுமிருக்கிற (பரப்ரம்மத்தினிடத்தில்) வைக்கப்பட்டிருக்கிறான்.

10. எவன் இவனை (பரப்ரம்மத்தை) அஞ்ஞானமில்லாதவனும், அசரீரனும், குணரஹிதனும், சுப்ரனும், நாசரஹிதனுமிருப்பதாக அறிகிறானோ அவன் பரப்ரம்மத்தையடைகிறான்; ஸர்வஞ்ஞனுமிருக்கிறான்; எல்லாமாயிருக்கிறான்; இந்த விஷயத்தில் இந்த (அடியில்கண்ட) மந்திரம் இருக்கிறது.

11. விஞ்ஞாநாத்மா (ஜீவாத்மா) எல்லா தேவர்களோடும் (சக்ஷுராதியாகிய அக்னிமுதலான தேவர்களுடன்) கூட, ப்ராணங்களும், பூதங்களும் எதனிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதோ அதை அக்ஷரமாகிய ப்ரம்மமென்று எவன் அறிகிறானோ அவன் ஸர்வஞன், எல்லாவற்றிலும் ப்ரவேசிக்கிறான்.

ஐந்தாவது ப்ரச்னம்.

1. பிறகு, இவரை (பிப்பலாதரை) சைப்யர் என்ற ஸத்யகாமர் கேட்டதாவது—ஹே! பகவானே! மனுஷ்யர்களுக்குள் எவன் ஆயுள் பர்யந்தம் ஓம்காரத்தை த்யாநம் செய்கிருனோ அவன் எந்த லோகத்தை யடைகிருன்?.

2. இவர் பதில் சொன்னதாவது—ஹே! ஸத்யகாமா! எக்காரணத்தால் ஓம்காரமானது பரபிர்ம ஸ்வரூபமாயும், அபர பிர்ம (ஜீவாத்மா) ஸ்வரூபமாயு மிருக்கிறதோ, அக்காரணத்தால் இந்த ப்ரணவமாகிற பிர்ம இருப்பிடத்தினுலே முக்கியமாயிருக்கிற லோகத்தை யடைகிருன்.

3. ஏக மாத்திரையுள்ள ஓம்காரத்தை எவன் த்யாநம்செய்கிருனோ அவன் அதனுல் செவ்வையாக போதிக்கப்பட்டவனுக சீக்கிரத்தில், ஜகத்திலேயே அடைகிருன்; அதாவது, ப்ரணவ ஏக மாத்ரா ஸ்வரூபமாகிய ரிக்வேதம் இவனை மனுஷ்யலோகத்தில் சேர்க்கிறது (உத்தம மனுஷ்ய ஜன்மத்தை யடையும்படி செய்கிறது); அவ்விடத்திலிருந்து, தபஸோடும், பிர்மசர்யத்தோடும், ச்ரத்தையோடும் ஸம்பன்னனுகி (மனுஷ்யலோக) மகிமையை அனுபவிக்கிருன்.

4. இரண்டு மாத்திரைகளுள்ள ஓம்காரத்தை மனஸிலே எவன் த்யானிக்கிருனோ அவன் அப்படிப்பட்ட ஓம்கார ஸ்வரூபமாகிய யஜுர் வேதமானது, அந்தரிக்ஷமாகிய சந்திரலோகத்தை யடையும்படி செய்கிறது. அந்தரிக்ஷமாகிய சந்திரலோகத்திலிருந்து அவன், அதற்குரிய ஐச்வர்யங்களை அனுபவித்து, மறுபடியும் திரும்புகிருன் (பிறக்கிருன்).

5. எவன் இந்த பரமபுருஷனை (பிர்மத்தை) மூன்று மாத்திரைகளுள்ள ஓம்காரத்தால் த்யானிக்கிருனோ அவன் சூர்ய தேஜஸில் ஸம்பன்னனுகி (சூர்யலோகத்தையடைந்து), ஸர்ப்பம் தோலை

உரிக்கிறதுபோல், பாபத்திலே நின்றும் விடுபட்டவனாகி (மூன்று மாத்திரை ஓம்கார ஸ்வரூபமாகிய) ஸாம வேதத்தால் பிர்மலோகத்துக்கு அனுப்பப்படுகிறான். அவன் அந்த ஜீவகனமாகிய ஹிரண்ய கர்ப்பரிடத்திலே நின்றும் பராபரமாகிய புருஷனை அறிவான்; இந்த விஷயத்தில் இரண்டு மந்திரங்கள் இருக்கின்றன.

6. (மேற்படி ஓம்காரத்தின்) மூன்று மாத்திரைகள் மிருத்யுவுடன் கூடினவை; ஆத்மத்யானத்தில் சேர்ந்தவை; ஒன்றுக்கொன்று ஸம்பந்தமுள்ளவை, விட்டுப்பிரியாதவை; செவ்வையாக சேர்க்கப்பட்டிருக்கிற வெளி, உள், நடு இவைகளிலுள்ள கிரியைகளிலே (யோக கிரியைகளில்) தெரிந்தவன் நடுங்கமாட்டான் (பயப்படமாட்டான்).

7. ரிக் வேதத்தால் இந்த (மனுஷ்ய) லோகத்தையும், யஜுர் வேதத்தால் அந்தரிக்ஷலோகத்தையும், ஸாம வேதத்தால் அந்த பிர்மலோகத்தையும் அடைகிறதாக, எந்த ஓம்காரத்தின் மகிமையை பெரியோர்கள் தெரிந்துகொள்ளுகிறார்களோ, அந்த ப்ரணவமாகிய பிர்ம இருப்பிடத்தால் தெரிந்தவன், எது சாந்தமாயும், அஜரமாயும், அமிருதமாயும், அபயமாயும், பரமாயுமிருக்கிறதோ அந்த பிர்மத்தை அடைகிறான்.

ஆறாவது ப்ரச்னம்.

1. பிறகு, இவரை (பிப்பலாதரை) ஸுகேசர் என்கிற பாரத்வாஜர் கேட்டதாவது—ஹே! பகவானே! கோஸல தேசியாகிய ஹிரண்யநாபன் என்ற (ஒரு) ராஜபுத்திரன் என்னிடத்தில் வந்து பதினாறு கலைகளுள்ள புருஷனை அறிவீரா என்ற இந்தக் கேள்வியை கேட்டான்; அதற்கு அவனை நான் அறியமாட்டேன் என்றும், அறிந்திருந்தால் எப்படி உனக்குச் சொல்லாமலிருப்பேன் என்றும், யார் பொய் பேசுகிறாரோ (தெரியாமலிருக்க தெரிந்ததாய் சொல்லுகிறாரோ) அவன் அடியோடு நாசத்தை யடைவான் என்றும், ஆனதால் நான் பொய்சொல்லமாட்டேன் என்றும் பதில் சொன்னேன். பிறகு, அவன் பேசாமல் ரதத்தில் யேறிக்கொண்டு போய்விட்டான். இப்பொழுது அந்தக் கேள்வியை உம்மைக் கேட்கிறேன். அந்த புருஷன் எங்கு இருக்கிறார்?.

2. இவர் பதில் சொன்னதாவது—அந்த புருஷனிடத்தில் இந்த (அடியில்கண்ட) பதினாறு கலைகள் உண்டாயினவோ, அந்த புருஷன் இவ்விடத்திலேயே, சரீரத்திற்குள்ளேயே, இருக்கிறார்.

3. 'எந்த கர்த்தாவினிடத்திலே (யாரை கர்த்தாவாக வைத்துக்கொண்டு) நாம் (தேகத்திலிருந்து) உயரக் கிளம்புகிறோம், (அல்லது) உயரக்கிளம்பப்போகிறோம்; பிரதிஷ்டிதமாயிருக்கிற எந்த சரீரத்தில் பிரதிஷ்டிதனாயிருக்கப்போகிறோம்' என்று அவர் (அந்த புருஷன்) பார்த்தார் (யோஜித்தார்).

4. அவர் (ஹிரண்யகர்பர் என்று பெயருள்ள) ப்ராணன், சிரத்தை, ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பிருதிவி, இந்திரியம் (தசேந்திரியங்கள்), மனஸ், அன்னம், பலம், தபஸ், வேதங்கள், கர்மம், (அதன் பலனாகிய) ஸ்வர்காதி லோகங்கள், நாமம் இவைகளை (இந்த பதினாறு கலைகளை) சிருஷ்டித்தார்.

5. எப்படி, ஸமுத்திரத்திலிருந்து உத்பத்தியான இந்த ந்திகள் பெருகா நின்றுகொண்டு, மறுபடியும் ஸமுத்ரத்தை யடைந்து பெயர், ரூபம் இவைகளை இல்லாமல் செய்து, (அப்படி கலந்த பிறகு) ஸமுத்திரமென்றே சொல்லப்படுகிறதோ, அப்படி புருஷனிடத்திலே நின்றும் உண்டான இந்த பதினாறு கலைகளும், மறுபடியும் புருஷனை யடைந்து அதனின் நாம ரூபங்களைப் போக்கடித்து, பிறகு புருஷன் என்றே சொல்லப்படுகின்றன. அந்த இந்த புருஷன் அகலனாயும், அமிருதனாயும் இருக்கிறான்; அதற்கு இந்த ச்லோகம் இருக்கிறது.

6. 'ரத சக்கிரத்திலுள்ள ஆரங்கள்போல இந்தக் கலைகள் எந்த புருஷனிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, வேத்யனை யிருக்கிற அந்த புருஷனை அடையுங்கள்! உங்களை மிருத்யு பீடிக்காமல் இருக்கட்டும்.!'

7. இவர் (பிப்பலாதர்) அவர்களுக்கு (மேற்கண்ட ஆறு ரிஷிகளுக்கு) சொன்னதாவது—இந்த பரபிர்மத்தை இதுவரையில்தான் நான் அறிந்திருக்கிறேன்; அதற்குமேல் ஒன்றும் இல்லை.

8. அவர்கள் சொன்னதாவது—எவர் எங்களை அவித்தையில் நின்றும் (மோக்ஷமாகிற) கரையை தாண்டுவிப்பித்தார்களோ, அவர்களாகிய நீங்கள் எங்களுக்கு பிதா.

பிர்ம ரிஷிகளின்பொருட்டு நமஸ்காரம்! பிர்ம ரிஷிகளின் பொருட்டு நமஸ்காரம்!

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

ப்ரச்னோப நிஷத் முற்றிற்று.

ஓம்.

அதர்வண வேதீய

முண்டகோபநிஷத்.

சாந்தி.

(இதுவும் அதர்வண வேதத்தில் சேர்ந்தபடியால் முன் ந்ருஸிம்ஹதாபனீ உபநிஷத்தின் சாந்தியே இதற்கு சாந்தியாகும்).

முதல் முண்டகம்.

கண்டம் 1.

1. (இத்யாதி) தேவர்களுக்கு முந்தினவர் பிர்மா; எல்லா ஜகத்தையும் படைத்தவர்; புவனத்தை ரக்ஷிக்கிறவர்; அவர், எல்லா வித்தைகளுக்கும் இருப்பிடமாகிய பிர்மவித்தையை, தன்னுடைய ஜ்யேஷ்ட புத்ரனுகிய அதர்வர் என்பவருக்குச் சொன்னார்.

2. அதர்வர் அங்கி என்றவருக்குச் சொன்னார்; அங்கி பாரத்வாஜ வம்சஸ்தரான ஸத்ய வாக்ருக்குச் சொன்னார்; இவர் அங்கிரஸனுக்குச் சொன்னார்.

3. சௌனகர் என்பவர் மேற்படி அங்கிரஸரிடத்தில் சென்று கேட்டதாவது; 'எது அறியப்பட்டால் இந்த ஜகத் எல்லாம் அறியப்படும்?'

4. அங்கிரஸ் பதில் சொன்னதாவது—'பரா' வென்றும், 'அபரா' வென்றும் எதை பிர்மவித்துக்கள் சொல்லுகிறார்களோ, அந்த இரண்டு வித்தையும் அறியப்படவேண்டும், (பராவென்றது பிர்மத்தைக்குறித்த உபநிஷத்; அபராவென்றது ஸ்வர்கமுதலான பலனைக் கொடுக்கும் கர்மகாண்டம்).

5. அதில் அபரா வித்தையானது என்னவெனில்—ரிக்வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வண வேதம், சிக்ஷா

ஓம்.

அதர்வண வேதீய

முண்டகோபநிஷத்.

சாந்தி.

(இதுவும் அதர்வண வேதத்தில் சேர்ந்தபடியால் முன் ந்ருஸிம்ஹதாபனீ உபநிஷத்தின் சாந்தியே இதற்கு சாந்தியாகும்).

முதல் முண்டகம்.

கண்டம் 1.

1. (இந்திராதி) தேவர்களுக்கு முந்தினவர் பிர்மா; எல்லா ஜகத்தையும் படைத்தவர்; புவனத்தை ரக்ஷிக்கிறவர்; அவர், எல்லா வித்தைகளுக்கும் இருப்பிடமாகிய பிர்மவித்தையை, தன்னுடைய ஜ்யேஷ்ட புத்ரனாகிய அதர்வர் என்பவருக்குச் சொன்னார்.

2. அதர்வர் அங்கி என்றவருக்குச் சொன்னார்; அங்கி பாரத்வாஜ வம்சஸ்தரான ஸத்ய வாக்ருக்குச் சொன்னார்; இவர் அங்கிரஸனுக்குச் சொன்னார்.

3. சௌநகர் என்பவர் மேற்படி அங்கிரஸரிடத்தில் சென்று கேட்டதாவது; 'எது அறியப்பட்டால் இந்த ஜகத் எல்லாம் அறியப்படும்?'

4. அங்கிரஸ் பதில் சொன்னதாவது—'பரா' வென்றும், 'அபரா' வென்றும் எதை பிர்மவித்துக்கள் சொல்லுகிறார்களோ, அந்த இரண்டு வித்தையும் அறியப்படவேண்டும், (பராவென்றது பிர்மத்தைக்குறித்த உபநிஷத்; அபராவென்றது ஸ்வர்கமுதலான பலனைக் கொடுக்கும் கர்மகாண்டம்).

5. அதில் அபரா வித்தையானது என்னவெனில்—ரிக்வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வண வேதம், சிக்ஷா

(அக்ஷரங்களுடைய உத்பத்தி முதலானதைப்பற்றிய சாஸ்திரம்), கல்பம் (கர்மங்களுக்கு விதிகள்), வ்யாகரணம், நிருக்தம் (வேதவ்யாக்யானம்), சந்தஸ் சாஸ்திரம், ஜ்யோதிஷ சாஸ்திரம், இவைகளே, பரா என்பது, எதனால் அந்த அக்ஷரம் (பிரமம்) அடையப்படுகிறதோ, அதுதான்.

6. (அந்த அக்ஷரமென்பது எதுவெனில்) எது பார்க்கப்படாததோ (ஞானேந்திரியங்களுக் கெட்டாததோ), கிரகிக்கப்படாததோ (கர்மேந்திரியங்களுக் கெட்டாததோ), கோத்ரமில்லாததோ (மூலமில்லாததோ), வர்ணமில்லாததோ (குணமில்லாததோ), கண் காதில்லாததோ (ஞானேந்திரியமில்லாததோ), கைகால் இல்லாததோ (கர்மேந்திரியமில்லாததோ), நித்தியவஸ்துவோ, விபுவோ (நானாவித பிராணிபேதங்கள் உள்ளதோ), எங்கும் நிறைந்ததோ, அதி சூக்ஷ்ம வஸ்துவோ, நாசமில்லாததோ, பூதங்களுக்கு காரணமோ அதை, புத்திசாலிகள், எங்கும் பார்க்கிறார்கள்.

7. எப்படி பட்டுப்பூச்சி நூல்களை சிருஷ்டிக்கிறதோ, (மறுபடியும்) இழுத்துக்கொள்ளுகிறதோ; பூமியில் எப்படி ஔஷதிகள் முளைக்கின்றனவோ; எப்படி உயிருள்ள புருஷனிடத்தில் மயிர்கள் முளைக்கின்றனவோ; அப்படி மேற்படி அக்ஷர பிரமத்தினிடமிருந்து இந்த ஜகத் உண்டாகிறது.

8. பிரமம் (முதலில்) ஞானத்தோடு (உத்பத்திசெய்ய வேணுமென்ற அறிவுடன்) ஸம்பந்தப்பட்டது; (அதாவது, சிருஷ்டிசெய்ய வேணுமென்ற இச்சை உண்டாயிற்று; அதாவது நிர்குண பிரமம் ஸகுண பிரமம் ஆயிற்று); அப்படிப்பட்ட பிரமத்தினிடமிருந்து அவ்யாகிருத தத்வம் (அன்னம்) (மாயை, சக்தி) உண்டாயிற்று; அதில் நின்றும் ஹிரண்யகர்பர் (பிராணன்) உண்டானார்; அவரிடமிருந்து மனஸ் உண்டாயிற்று; அதிலே நின்றும் ஸத்யம் என்று பெயருள்ள பஞ்சபூதங்கள் உண்டாயின; அதிலே நின்றும் பூராதிலோகங்கள் உண்டாயின; அவைகளில் (மனுஷ்யர்களுக்குத் தகுந்த) கர்மங்கள் உண்டாயின; அவைகளில் (ஸ்வர்க்காதி கர்ம பலமாகிற) அமிருதம் உண்டாயிற்று.

9. எவர் (எந்த ப்ரமம்) (பொதுவாய்) எல்லாவற்றையும் அறிந்தவரோ, (விசேஷித்து) எல்லாவற்றையும் அறிந்தவரோ, யாருடைய தபஸ் ஞானமயமோ, அவரிடத்திலிருந்து மேற்படி ஹிரண்ய கர்ப்பனும், நாமமும், ரூபமும், (நெல், யவம் முதலான) அன்னமும் உண்டாயின.

கண்டம் 2.

1. இது ஸத்யம் (இப்பொழுது சொல்லப்படுவது நிச்சயம்); எவை எந்த கர்மங்கள் வேதங்களால் சொல்லப்படுகின்றனவோ, எவைகளை கவி புத்திசாலிகள் அனுஷ்டிக்கிறார்களோ, எவைகள் (ஹோதா, அத்வர்யு, உத்காதா என்று) மூன்று அதிகாரிகளிடமிருந்து வெகுவிதமாய் ப்ரவிர்த்திக்கின்றனவோ அந்த கர்மங்களை பல இச்சையுள்ளவர்களாக நியதமாய் செய்யுங்கள். ஸுக்ருதத்தின் பலவிஷயத்தில் (கர்மபலன் அடைவதற்கு) இதுதான் வழி.

2 செவ்வையாக மூட்டப்பட்ட அக்னியில், எப்பொழுது கொழுந்துவிட்டு எரிகிறதோ, அப்பொழுது, விதிப்படி, ஆஜ்யம் (நெய்) முதலான ஆஹுதிகளை அதில் போடவேண்டியது (ஹோமம் செய்யவேண்டியது).

3. எவனுடைய அக்னிஹோத்ரம், அமாவாஸை, பவுர்ணமி, சாதுர்மாஸ்யம், சரத்காலம் இவைகளில் செய்யப்படாததாயும், அதிதிவர்ஜிதமாயும், காலத்தில் செய்யப்படாததாயும், விதிப்படி செய்யப்படாததாயும் இருக்கிறதோ அது அவனுக்கு ஏழு லோகங்களையும் கடைப்படுத்தும்.

4. அக்னிக்கு ஏழு நாக்குகள் (ஜ்வாலைகள்); (அவைகளாவன) காலீ, கராலீ, மனோஜவா, ஸுலோஹிதா, ஸுதூம்ரவர்ணா, ஸ்புலிங்கிநீ, விச்வரூபி (என்று).

5 இவைகள் ஜ்வலித்துக்கொண்டிருக்கும்பொழுது, காலப்படி செய்யப்படும் ஆஹுதிகள், ஸூர்யகிரணங்களாக, எஜமானனை தூக்கிக்கொண்டுபோய் இந்திரனிருக்கிற ஸ்வர்க்கலோகத்தில் சேர்க்கும்.

6. நல்ல வர்ச்சஸ் உள்ள இந்த ஆஹுதிகள் யஜமானனை வா! வா! வென்று அழைத்து, ஸூர்ய கிரணங்களைக்கொண்டு வகித்துக்கொள்ளுகின்றன; நல்ல வார்த்தையை சொல்லுகின்றன; மரியாதை செய்கின்றன; இந்த ஸ்வர்க்கம் உங்களுடைய புண்ணியம் என்று சொல்லுகின்றன.

7. யக்ஞ ரூபமாயிருக்கப்பட்ட இந்த கர்மங்கள் நாசமுள்ளன; பதினெட்டு அதிகாரிகளுள்ள கர்மம் (யாகம்) ச்லாக்யமில்லாதது; (ஞானமார்க்கத்தை யபேக்ஷித்து ச்லாக்யமில்லாதது என்று அர்த்தம்); (ருத்விக் முதலானவர்கள் 16; யஜமானன் 1; பத்னி 1; ஆக 18); இதை (இந்தக் கர்மத்தை) ச்ரேயஸ் என்று எந்த மூடர்கள் நினைக்கிறார்களோ அவர்கள் ஜனன மரணத்தை யடைகிறார்கள்.

8. அவித்யா மத்தியிலிருக்கப்பட்டவர்களும், பண்டிதர்கள் என்று தாங்களே கொண்டாடிக்கொண்டிருக்கப்பட்டவர்களுமான மூடர்கள், (ஜரை முதலானவற்றால்) பீடிக்கப்பட்டவர்களாய்க் கொண்டு, குருடனுக்கு குருடன் வழிகாட்டினால் போல் அலைகிறார்கள்.

9. அவித்தையில் வெகு பிரகாரமாக இருப்பவர்களும், தாங்கள் கிருதார்த்தர்களாகி விட்டோமென்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும், கர்மத்தை விடாதவர்களுமான அவிவேகிகள் வருத்தப்பட்டவர்களாகவும், கர்மபலன் குறைந்து போனவர்களாகவும் ஆகி ஸ்வர்க்கத்தில் நின்றும் நழுவி விழுந்துவிடுவார்கள்.

10. இஷ்டா பூர்த்தத்தை (ச்ரௌதகர்மத்தையும், ஸ்மார்த்த கர்மத்தையும்) ச்லாக்யமென்றும், வேறு ஒன்றும் ச்லாக்யமில்லையென்றும் நினைக்கிற முழு மூடர்கள் ஸ்வர்க்கத்தில் அநுபவித்துப் போட்டு மறுபடியும் ஹீநதரமாயிருக்கிற லோகத்திற்கு திரும்புவார்கள்.

11. எந்த வித்வான்கள் அரண்யவாஸிகளாகவும், சாந்தர்களாகவும், பிக்ஷாசர்யமுள்ளவர்களாகவு மிருக்கிறார்களோ அவர்

க்கள் (வானப்ரஸ்த, ஸந்யாஸ ச்ரமிகள்) ஸூர்யன் வழியாக, விரஜர்களாய் (புண்ணிய பாப கர்மங்களில்லாதவர்களாய்), எவ்விடத்தில் அமிருதமாயும் அவ்யய ஆத்மாவாயிருக்கிற புருஷனிருக்கிறானோ அந்த இடத்திற்கு (பிரம்மலோகத்திற்கு) போகிறார்கள்.

12. பிராமணன், கர்மத்தினாலே ஸம்பாதிக்கப்பட்ட லோகங்களை பரீக்ஷித்துப் பார்த்து, இந்த ஸம்ஸாரத்தில் பதார்த்தங்கள் ஒன்றுமில்லை என்று அறிந்து, வைராக்யத்தை யடையவேண்டியது. அவன் அதை (பிரம்மத்தை) அறியவேண்டியதற்காக ஸமித்பாணியாக, ச்ரோத்ரியனாயும் பிரம்மநிஷ்டனாயுமிருக்கிற குருவைப் போய் அடையவேண்டியது.

13. அப்படி ஸமீபத்தில் போனவனையும், சாந்த சித்தமுள்ளவனையும், சமத்தோடு கூடினவனையுமிருக்கிற இந்த சிஷ்யனுக்கு, அந்த குரு, எதனால் அக்ஷரமாயும் ஸத்யமாயுமிருக்கிற பிரம்மம் அறியப்படுகிறதோ அதாகிய பிரம்மவித்தையை சொல்லவேண்டியது.

இரண்டாவது முண்டகம்.

கண்டம் 1.

1. அது (அந்த பிரமவஸ்து) ஸத்யம்; எப்படி மிகவும் ஜ்வாலையுள்ள அக்னியிலிருந்து அக்னிபொறிகள் அநேகங்களாக கிளம்புகின்றனவோ, அப்படி அக்ஷர பிரமத்திலிருந்து நாநாவித ஜீவன்கள் உண்டாகின்றன; அதிலேயே அடங்குகின்றன.

2. அந்த புருஷன் திவ்யர், அமூர்த்தர், உள்ளும் புறமும் இருக்கப்பட்டவர், பிறக்காதவர், பிராணனில்லாதவர், மனமில்லாதவர், சுத்தர், அக்ஷரமாகிய அவ்யாகிருதத்திற்கு மேல்பட்டவர்.

3 இவரிடத்தில் நின்றும் பிராணன், மனம், எல்லா இந்திரியங்கள், ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், விச்வத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிற பூமி, இவைகள் உண்டாயின.

4. இவருக்கு தலை அக்னி; நேத்திரம் சந்திர ஸூர்யர்கள்; காதுகள் திக்குகள்; வாக் வேதங்கள்; பிராணன் வாயு; ஹிருதயம் ஜகத்; பாதங்களிலிருந்து பிருதிவி உண்டாயிற்று (பாதங்கள் பிருதிவி); இவர் ஸர்வபூத அந்தராத்மா.

5. அவரிடத்திலிருந்து அக்னி (உண்டாயிற்று); அதற்கு ஸமித் ஸூர்யன்; (அதனிடமிருந்து உண்டான) சந்திரனிடத்திலிருந்து மேகம்; அதனிடமிருந்து பூமியில் ஓஷதிகள்; அவைகளிடமிருந்து புருஷரேதஸ்; அது ஸ்திரீயிடத்தில் ஸம்பந்தப்பட்டு அநேக பிரஜைகள்; இப்படி புருஷனிடத்திலிருந்து (ஆத்மாவினிடத்திலிருந்து) உண்டாகிறார்கள்.

6. அவரிடத்திலிருந்து ரிக்வேதம், ஸாமவேதம், யஜுர்வேதம், தீக்ஷாவிதிகள், யக்ஞங்கள் (அக்னி ஹோத்ராதிகள்), க்ருதுக்கள் (யாகங்கள்), தக்ஷிணைகள், காலங்கள், யஜமானன், ஸூர்ய சந்திர லோகங்கள், இவைகள் உண்டாயின.

7\. அவரிடத்திலிருந்து தேவர்கள், ஸாத்யர்கள் என்கிற தேவர்கள்; மனுஷ்யர்கள், மிருகங்கள், பக்ஷிகள், ப்ராண அபான வாயுக்கள், விரீஹியவங்கள் (தானியங்கள்), தபஸ், சிரத்தை, ஸத்யம், பிரம்மசர்யம், விதிகள், இவைகளும் உண்டாயின.

8\. அவரிடத்திலிருந்து ஏழு பிராணங்கள் (இந்திரியங்கள், காது 2, கண் 2, மூக்கு 2, வாய் 1, ஆக 7); அவைகளின் ஏழு அர்ச்சிஸ்கள் (பிரகாசங்கள்); ஏழு ஸமித்துக்கள் (விஷயங்கள்); ஏழு ஹோமங்கள் (மேற்படி விஷய ஞானங்கள்); ஏழு லோகங்கள் (இடங்கள்) உண்டாயின. அவைகள் ஹிருதயத்தில் எவ்வேழாக வைக்கப்பட்டன.

9\. அவரிடத்திலிருந்து ஸமுத்ரங்கள், பர்வதங்கள், பலவித நதிகள், எல்லா ஓஷதிகள், ரஸம் (ருசி) இவைகளும் உண்டாயின; ரஸத்தால் பூதங்களோடு அந்தராத்மா இருக்கிறார் (அவைகளால் தெரியப்படுகிறார்).

10\. புருஷனே (பரமாத்மாவே) இந்த ஜகத், கர்மம், தபஸ்; பிரம்மம் என்றது பரமாம்ருதம் என்றது; எல்லாம் அதுவே; அப்படிப்பட்ட ஆத்மா (நம்முடைய) ஹிருதயத்தில் இருப்பதாக யார் அறிகிறாரோ அவன், இவ்விடத்திலேயே, அவித்யா முடிச்சை அவிழ்த்து விடுகிறான்.

கண்டம் 2.

1\. (அந்த பிரம்மமானது) ஜ்யோதிஸ்; ஹிருதயத்தில் இருக்கப்பட்டது; குஹாசரன் என்று பெயருடையது; மகத்தான பதம்; அதில் இந்த ஜகத் வைக்கப்பட்டிருக்கிறது; சலிக்கிறதுகள் (பக்ஷிகள்) அதுவே; பிராணிகள் அதுவே; கண் இமைகொட்டுள்ளதுகளும் அதுவே; மூர்த்தமுள்ளதும் அதுவே; மூர்த்தம் இல்லாததும் அதுவே; ச்லாக்யமுள்ளது; பிரஜைகளுடைய விஞானத்தைக் காட்டிலும் பரமானது; மிகவும் உயர்ந்த வஸ்து; இப்படிப்பட்ட வஸ்துவை அறியுங்கள்.

2. எது காந்தியுள்ளதோ, அணுவைக்காட்டிலும் அணுவோ, எதில் இந்த லோகங்களும் ஜனங்களும் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அது அக்ஷரமாயிருக்கிற ப்ரம்மம்; ப்ராணன், வாக், மனஸ், ஸத்யம், அம்ருதம் (எல்லாம் அதுவே); அதை (மனதால்) அடிக்கவேண்டும் (அறியவேண்டும்); அறி.

3. உபநிஷத்திலே நின்றுண்டான தநுஸைப் பிடித்து, மகாஸ்திரமாயும், உபாஸனையால் தீட்டப்பட்ட பாணத்தை அதில் வைத்து, அந்த ப்ரமத்திலே பாவனையுள்ள அறிவினாலே இழுத்து அந்த அக்ஷர வஸ்துவாகிய லக்ஷியத்தை பேதி.

4. மேற்படி தநுஸ் ப்ரணவம்; பாணம் ஆத்மா (ஜீவன்); லக்ஷியம் பிரமம்; ஜாக்கிரதையாக அடிக்கவேண்டியது; பாணம்போல் ஆத்மா லக்ஷியமயமாய்ப் போகும்.

5. எதனிடத்தில் ஸ்வர்க்கம், பிருதிவி, அந்தரிக்ஷம், எல்லா பிராணன்களுடன் மனஸ், இவைகள் கோர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அந்த ஏகமாயிருக்கிற ஆத்மாவை அறியுங்கள்; மற்ற வார்த்தைகளைத் தள்ளுங்கள். இது அம்ருதத்தை அடைவதற்கு பாலம்.

6. எதனிடத்தில் நாடிகள், சக்கிர ஆரங்கள் போல சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அது வெகுப்பிரகாரமாக உண்டாகி, உள்ளே ஸஞ்சரிக்கிறது; ஆத்மாவை ஓம் என்று த்யானம்செய்; தமஸைத் தாண்டுவதில் உங்களுக்கு மங்களமாம் இருக்கட்டும்.

7. எவர் ஸர்வஜ்ஞரோ, ஸர்வவித்தோ, எவருக்கு பூமியில் இப்படிப்பட்ட மகிமையிருக்கிறதோ, அவர் திவ்யமான பிரமபுரமாகிய மனஸிலே, தகராகாசத்திலே, ப்ரதிஷ்டையாயிருக்கிறார்; மநோமயர்; ப்ராணனையும் சரீரத்தையும் நடத்துகிறவர்; அன்னத்திலிருக்கிறவர்; புத்தியை நிதானித்து அதை அறிவதினால் விவேகிகள் ஆநந்த ரூபமாய் விளங்குவதை எங்கும் பார்க்கிறார்கள்.

8. அந்த பராவரவஸ்து (கார்ய காரணாத்மா) பார்க்கப்பட்டவுடன் ஹிருதய முடிச்சு (காமம்) பிளந்துபோகிறது; ஸம்சயங்கள் நிவிர்த்தியாகிவிடுகின்றன; கர்மங்கள் நசித்துப்போகின்றன.

9. ஜ்யோதிர்மயமான கட்டிலே (ஹிருதயத்திலே) இருக்கிறவரும், அவித்யாதி தோஷரஹிதராயும், நிரவயவராயும், சுத்தராயும், ஜ்யோதிகளுக்கெல்லாம் ஜ்யோதியாயும் இருக்கிற பிர்மத்தை எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் ஆத்மவித்துக்கள்.

10. அதனிடத்தில் சூரியன் பிரகாசிக்கமாட்டாது; அப்படியே சந்திர, நக்ஷத்திரங்கள்; அப்படியே மின்னல் கொடியும்; அக்னி எந்த மூலை; இவைகள் அதை யனுசரித்து விளங்குகின்றன; அதனாலே இந்த ஜகத் விளங்குகிறது.

11. இந்த ஜகத்தும் பிர்மம்; அமிருதம் பிர்மம்; முன்னேயும் பிர்மம்; பின்னேயும் பிர்மம்; வலது பக்கமும் பிர்மம்; இடது பக்கமும் பிர்மம்; கீழும் பிர்மம்; மேலும் பிர்மம்; இந்த விச்வமும் பிர்மம்; அது எங்கும் பரவியிருக்கிறது, வரிஷ்டமாயிருக்கிறது.

மூன்றாவது முண்டகம்.

கண்டம் 1.

1. இரண்டு பக்ஷிகள் (ஜீவாத்மா, பரமாத்மா) எப்பொழுதும் விட்டுப் பிரியாதவைகளை; ஸமான க்யாதியுள்ளவை; ஒரே விருக்ஷத்தை (சரீரத்தை) அடைந்திருக்கின்றன. அவைகளில் ஒன்று (ஜீவன்), (புண்ய பாப) பலத்தை ருசியோடு புஜிக்கிறது; மற்றொன்று அப்படி புஜிக்காமல் தனியாய் விளங்குகிறது.

2. ஸமான விருக்ஷத்தில் மூழ்கி ஜீவன் மாயையால் மோகத்தை அடைந்தவனாய்க்கொண்டு துக்கப்படுகிறான்; எப்பொழுது இவன் மற்றொரு ஈசனை (பரமாத்மாவை) பார்க்கிறானோ, அப்பொழுது துக்கமற்றுப்போனவனாக பரமாத்மாவின் மகிமையை யடைகிறான்.

3. எப்பொழுது பார்க்கிறவன் (ஸாதகன், யோகீ) ஜ்யோதிர் மயமாயும், கர்த்தாவாயும், ஈசனாயும், பிரம யோனியாயுமிருக்கிற புருஷனை (பரமாத்மாவை) பார்க்கிறானோ, அப்பொழுது அந்த வித்வான் புண்ணிய பாபங்களை உதறிவிட்டு, நிர்லேபனாய், பரம ஸாம்யத்தை யடைகிறான்.

4. எவர் பூதமயங்களாய் விளங்குகிறாரோ, அவர் ப்ராணன் அவரை அறிந்தவன் அதிவாதி (அவரைத் தவிர மற்றொன்றையும் பேசமாட்டான்) ஆகமாட்டான்; ஆத்மாவினிடத்திலேயே விளையாட்டையுடையவன்; ஆத்மாவினிடத்திலேயே விச்வாசத்தை யுடையவன்; (ஆத்ம ஸம்பந்தமான) தொழிலையே செய்கிறவன்; பிரம வித்துகளுக்குள் ச்லாக்யன்.

5. இந்த ஆத்மா நித்யமுள்ள ஸத்யத்தினாலேயும், நித்யமுள்ள தபஸினாலேயும் (இந்திரிய நிக்ரகத்தால்), நித்யமுள்ள நல்லறிவினாலேயும், நித்யமுள்ள பிரமசரியத்தினாலேயும் அடையப்படத்தக்கவர்; எவரை, பாபமற்ற யதிகள் பார்க்கிறார்களோ, அந்த ஆத்மா, சரீர மத்தியில், ஜ்யோதிர் மயமாயும், சுத்தமாயுமிருக்கப் பட்டவர்.

6. ஜயிக்கிறவன் ஸத்யவானே யல்லாது பொய்யன் அல்ல; ஸத்யத்தின் பரம நிதானமாகிய அந்த (மோக்ஷத்திற்கு) ஆசையற்ற ரிஷிகள் எந்த மார்க்கத்தால் போகிறார்களோ, அந்த தேவயாந மார்க்கமானது ஸத்யத்தால் விஸ்தாரம் செய்யப்படுகிறது.

7. (அந்த பிர்மம்) பெரிது; ஸ்வயம் பிரகாசமுள்ளது; எண்ணப்படாத ஸ்வரூபமுள்ளது; ஸூக்ஷ்மத்தைக்காட்டிலும் ஸூக்ஷ்மமாய்; (அவித்வான்களுக்கு) தூர இருக்கப்பட்டது; (வித்வான்களுக்கு) ஸமீபத்திலிருக்கப்பட்டது; பார்க்கிறவர்களிடத்தில் ஹ்ருதயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

8. கண்ணாலாவது, வாக்காலாவது, மற்ற இந்திரியங்களாலாவது, தபஸினாலாவது, கர்மத்தினாலாவது கிரகிக்கப்படத்தக்கதல்ல; சுத்த அந்தக்கரணமுள்ளவனான த்யானிக்கிறவன் நிரவயவமாயிருக்கிற அதை (பிர்மத்தை) தெளிவான ஞானத்துக்கொண்டு பார்க்கிறான்.

9. இந்த ஆத்மா அணு; எதில் ப்ராணன் ஐந்துவிதமாக ப்ரவேசிக்கிறதோ அந்த சரீரத்தில் சித்தத்தினால் அறியப்படத்தக்கது; (எப்படிப்பட்ட சித்தம் என்றால்) பிரஜைகளின் எந்த ஸகல சித்தமும், ப்ராணன்களுடன், ஒன்றாய் சேருகிறதோ, எந்த விசுத்தமாயிருக்கிற சித்தத்தில் ஆத்மா விளங்குகிறாரோ (அந்த சித்தத்தால் அறியப்படத்தகுந்தது).

10. விசுத்த அந்தக்கரணத்தையுடையவன் எந்தெந்த லோகத்தை மனதால் ஸங்கல்பிக்கிறானோ அந்தந்த லோகத்தையும், காமங்களையும் ஜயிக்கிறான் (அடைகிறான்). ஆனதினால் பூதிகாமன் (ஐச்வர்யத்தை இச்சிக்கிறவன்) ஆத்மஞ்ஞனை பூஜிக்கவேண்டியது.

கண்டம் 2.

1. அவர், இந்த பரபிர்மம் (ஸர்வகாமங்களுக்கும்) இருப்பிடம்; அவரிடத்தில் விச்வம் வைக்கப்பட்டிருக்கிறது; சுப்ரமாய் விளங்குகிறார்; அவரையும், அவரையறிந்த புருஷனையும் இச்சையற்ற எவர்கள் உபாஸிக்கிறார்களோ அவர்கள் சுக்ரத்தை (நரபீஜத்தை) தாண்டிவிடுவார்கள் (பிறப்பில்லை).

2. யாதொருவன் காமங்களை நினைத்துக்கொண்டு எந்தெந்த விஷயத்தில் இச்சிக்கிறானோ அவன் அந்தந்த விஷயத்தில் காமங்களையடைகிறான். எல்லா காமத்தையும் அடைந்தவனும், ஆத்மாவை அறிந்தவனுமாயிருக்கப்பட்டவனுக்கு இவ்விடத்திலேயே காமங்கள் நசித்துப்போகின்றன.

3. இந்த ஆத்மா வேத சாஸ்திர படிப்பினாலாவது, தாரக சக்தியினாலாவது, வெகுவாய்க் கேட்பதினாலாவது, அடையத் தக்கவர் அல்ல; இந்த வித்வான் எதை அடையவேணுமென்று இச்சிக்கிறானோ அந்த ஆத்மஞானத்தினாலேயே அடையப்படத் தக்கவர்; அந்த ஆத்மா இவனுக்கு தன்னுடைய ஆத்மதத்வ ரூபமாயிருக்கிற தேகத்தை பிரகாசப்படுத்திவைக்கிறார்.

4. இந்த ஆத்மா பலஹீனனாலாவது (ஆத்மஞானத்தில் வீர்யமில்லாதவனாலாவது), பிரமாதத்தினாலாவது (லோக இச்சை விட்டு விட்டோமென்கிற மலைப்பினாலாவது), ஸந்நியாஸமில்லாத ஞானத்தினாலாவது அறியப்பட மாட்டார். எந்த வித்வான் இவைகளால் (பலம், அப்ரமத்தம், ஸந்நியாஸ ஸஹித ஞானம்) பிரயத்தனம் செய்கிறானோ அவனுடைய பிரம்மஸ்தானத்தில் (இருதயத்தில்) பிரவேசிக்கிறார் (தர்சனம் கொடுக்கிறார்).

5. ஞான திருப்தியுள்ளவர்களும், ஆத்மமயமாய் தங்களை ஆக்கினவர்களும், இச்சையற்றவர்களும், இந்திரியங்களை யடக்கினவர்களும், தீரர்களும், ஆத்மாவுடன் கலந்தவர்களுமான ரிஷிகள், ஆத்மாவை செவ்வையாக அறிந்து, எங்குமுள்ள வஸ்துவை எங்கும் அடைந்து, எல்லாவற்றிலும் பிரவேசிக்கிறார்கள் (பிரம்மமாகவே ஆய்விடுகிறார்கள்).

6. வேதாந்த விஞ்ஞானத்தால் உண்டான அர்த்தத்தை (ஆத்மாவை) நிச்சயமாய் அறிந்தவர்களும், ஸந்நியாஸத்துடன் கூடினவர்களும், சுத்த ஞானமுள்ளவர்களுமான எல்லோரும் அந்தக் காலத்தில் பிரம்மத்தினிடம் ஐக்யமாகி விடுபட்டுப் போகிறார்கள்.

7. (மோக்ஷகாலத்தில்) பதினைந்து கலைகளும் அதனதின் இருப்பிடத்தை (காரணத்தை) அடைகின்றன; எல்லா இந்திரியங்களும்

அதின் தேவதைகளைப் போய்ச்செல்லுகின்றன; கர்மங்கள், விஞ்ஞாந மயமான ஆத்மா (ஜீவன்) எல்லாம் பரப்ரமத்தினிடத்தில் ஒன்றாய்ச் சேர்ந்து போகின்றன.

8. எப்படி ஓடுகிற நதிகள் நாமரூபங்களைவிட்டு ஸமுத்திரத்தில் அஸ்தமயத்தை அடைகின்றனவோ அப்படி வித்வான் (மோக்ஷகாலத்தில்) நாமரூபங்களில் நின்றும் விடுபட்டு பரத்தைக் காட்டிலும் (அவ்யக்த தத்வத்தைக்காட்டிலும்) பரமாயிருக்கிற திவ்ய புருஷனை அடைகிறான்.

9. எவன் அந்த பிரமத்தையறிகிறானோ அவன் பிர்மமாகவே ஆகிறான். அவன் குலத்தில் அப்பிர்மவித்து இருக்கமாட்டான். சோகத்தை தாண்டுகிறான். பாபத்தை தாண்டுகிறான். ஹிருதய முடிச்சிலிருந்து (ஆசையிலிருந்து) விமுக்தனாகிறான்; அமிருதனாகிறான்.

10. இந்த விஷயம் வேதத்தினாலே சொல்லப்பட்டிருக்கிறது. கர்மானுஷ்டானமுள்ளவர்களுக்கும், வேதாத்யயநம் செய்தவர்களுக்கும், பிர்மநிஷ்டர்களுக்கும், சிரத்தையுள்ளவர்களுக்கும், ஏகர்ஷி என்ற அக்னி ஹோமம் செய்கிறவர்களுமாயிருக்கப்பட்டவர்களுக்கும், விதிப்படி சிரோவிருதம் (அக்னியை தலையில் போட்டுக்கொள்ளுகிறது, விபூதி பூசிக்கொள்ளுகிறது முதலானது) செய்தவர்களுக்கும் பிர்மவித்யையை சொல்லவேண்டியது.

11. அதுதான் (அந்த பிர்மந்தான்) ஸத்யம்; இப்படி அங்கிரஸ் என்ற ரிஷி முன்னாலே சொன்னார்; விருதத்தை அனுஷ்டிக்காதவன் இதை அத்யயநம் செய்யக்கூடாது. பிர்மரிஷிகளுக்கு நமஸ்காரம்; நமஸ்காரம்.

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

முண்டகோபநிஷத் முற்றிற்று.

ஓம்.

அதர்வண வேதீய

மாண்டூக்யோபநிஷத்.

சாந்தி.

(மூன்று நருஸிம்ஹதாபனீ உபநிஷத்தின் சாந்தி, அதர்வண
வேத உபநிஷத் ஆனதால் இதற்கு சாந்தியாகும்).

(காணப்படுகிற பதார்த்தங்கள் எல்லாம்)
1. இது எல்லாம் (காணப்படுகிற பதார்த்தங்கள் எல்லாம்) ஓம் என்ற
'ஓம்' என்ற எழுத்து. (பிரணவநாதத்தில் அடக்கம்; ஓம்
நாதம் பிர்மசரீரம்; அதற்குள்ளிருக்கிற ஜ்யோதிஸ் பிர்மம்; ஓம்
என்ற அக்ஷரத்திலிருந்து உலகத்தில் எல்லாசப்தங்களும் உண்டா
யின; அந்த சப்தங்களால் எல்லா பதார்த்தங்களும் பெயரிடப்பட்
டிருக்கின்றன; 'ஓம்' ஆகிற சப்தங்கள் வாசகங்கள்; அந்த வாச
கங்களுக்கும் வாச்சியங்களுக்கும் அபேதம்; ஆனதால், எல்லாம்
ஓம் என்று சொல்லப்பட்டது). அதனுடைய அர்த்தம் தெரிந்து
கொள்ளவேணும். உண்டானது, இருக்கிறது, உண்டாகப்போ
கிறது எல்லாம் ஓம்காரம்; மூன்றுகாலத்தையும் தாண்டியிருக்கி
றது எதெது உண்டோ (அவ்யக்தம், பிரகிருதி) அதுவும் ஓம்க
ாரந்தான்.

2. ஓம்காரம் என்று சொல்லப்பட்ட இது எல்லாம் பிர்மம்;
இந்த ஆத்மாவும் (ஜீவனும்) பிர்மம்; அப்படிப்பட்ட இந்த ஆத்ம
நான்கு பங்குள்ளவர்.

3. ஜாக்ருத் தசையிலிருக்கப்பட்டவர்; தன்னாத்மாவுக்
வேறாக வெளியிலிருக்கிற விஷயங்களில் பிரஜ்ஞையுடையவர்; ஏ
அங்கமுள்ளவர் (i. ஸ்வர்க்கம்—தலை; ii. சூர்யன்—நேத்திர
iii. ... பிராணன்; iv. ஆகாசம்—உடல்; v. அன்னம், ஜல

ஓம்.

அதர்வண வேதீய

மாண்டூக்யோபநிஷத்.

சாந்தி.

(மூன் ந்ருஸிம்ஹதாபனீ உபநிஷத்தின் சாந்தி, அதர்வண
வேத உபநிஷத் ஆனதால் இதற்கு சாந்தியாகும்).

1. இது எல்லாம் (காணப்படுகிற பதார்த்தங்கள் எல்லாம்)
'ஓம்' என்ற எழுத்து. (பிரணவநாதத்தில் அடக்கம்; ஓம் என்ற
நாதம் பிர்மசரீரம்; அதற்குள்ளிருக்கிற ஜ்யோதிஸ் பிர்மம்; ஓம்
என்ற அக்ஷரத்திலிருந்து உலகத்தில் எல்லாசப்தங்களும் உண்டா
யின; அந்த சப்தங்களால் எல்லா பதார்த்தங்களும் பெயரிடப்பட்
டிருக்கின்றன; 'ஓம்' ஆகிற சப்தங்கள் வாசகங்கள்; அந்த வாச
கங்களுக்கும் வாச்சியங்களுக்கும் அபேதம்; ஆனதால், எல்லாம்
ஓம் என்று சொல்லப்பட்டது). அதனுடைய அர்த்தம் தெரிந்து
கொள்ளவேணும். உண்டானது, இருக்கிறது, உண்டாகப்போ
கிறது எல்லாம் ஓம்காரம்; மூன்றுகாலத்தையும் தாண்டியிருக்கி
றது எதேது உண்டோ (அவ்யக்தம், பிரகிருதி) அதுவும் ஓம்க
ாரந்தான்.

2. ஓம்காரம் என்று சொல்லப்பட்ட இது எல்லாம் பிர்மம்
இந்த ஆத்மாவும் (ஜீவனும்) பிர்மம்; அப்படிப்பட்ட இந்த ஆத்ம
நான்கு பங்குள்ளவர்.

3. ஜாக்ருத் தசையிலிருக்கப்பட்டவர்; தன்னாத்மாவுக்
வேறாக வெளியிலிருக்கிற விஷயங்களில் பிரஜ்ஞையுடையவர்; ஏ
அங்கமுள்ளவர் (i. ஸ்வர்க்கம்—தலை; ii. சூர்யன்—நேத்திர
... ப்ராணன்; iv. ஆகாசம்—உடல்; v. அன்னம், ஜல

மூத்ரஸ்தானம்; vi. பிருதிவீ—பாதம்; vii. ஆஹவனீயாக்னி—முகம்); பத்தொன்பது முகமுள்ளவர் (இந்திரியங்கள் பத்து, பிராணன்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு, ஆக பத்தொன்பது) சப்தாதி ஸ்தூலவிஷயங்களை புஜிக்கிறவர்; வைச்வாநரன் என்று பெயருள்ளவர் (எல்லா நரர்களையும் நடத்துகிறவர்); இவர்தான் முதல் பங்கு;

4. ஸ்வப்ன அவஸ்தையிலுள்ளவர்; உள் அறிவுள்ளவர் (வெளியறிவற்றவர்); ஏழு அங்கமுள்ளவர்; பத்தொன்பது முகமுள்ளவர்; ஸூக்ஷ்மத்தைப் பார்க்கிறவர்; தைஜஸர் (தேஜஸ் ஸம்பந்தமுள்ளவர்) என்று பெயருள்ளவர் இவர்தான் இரண்டாவது பங்கு;

5. எந்தக்காலத்தில் ஸுப்தனாக ஒரு காமத்தையும் இச்சிக்கிறதில்லையோ, ஒரு ஸ்வப்னத்தையும் பார்க்கிறதில்லையோ அது தான் ஸுஷுப்தி என்பது; இந்த ஸுஷுப்தி அவஸ்தையுள்ளவர்; ஒன்றாய்ச் சேர்ந்தவர்; பிரஜ்ஞானச் சேர்க்கையாயே இருக்கப்பட்டவர்; ஆனந்தமயர்; ஆனந்தத்தை புஜிக்கிறவர் (துக்கமில்லாதவர்); சித்தத்தை முகமாய்க்கொண்டவர் (அதாவது சித்தத்தின் வழியாய் ஸ்வப்னம், ஜாக்ரத் இவ்வவஸ்தைகளுக்கு வந்துபோக போக்கியங்களை அனுபவிக்கிறவர்); ப்ராஜ்ஞனென்று (ப்ரஜ்ஞையாய் மாத்திரம் கலப்பன்றி நிற்கிறவர்) பெயருள்ளவர்; இவர்தான் மூன்றாவது பங்கு.

6. இவர்தான் ஸர்வேச்வரர்; ஸர்வஜ்ஞர்; அந்தர்யாமி; எல்லா பூதங்களுடைய உத்பத்தி நாசம் இவை விஷயத்தில் எல்லாவற்றிற்கும் காரணபூதர்.

7. தைஜஸனுமல்ல, விச்வனுமல்ல, இருவருக்கும் மத்தியிலுள்ள அவஸ்தையுள்ளவனுமல்ல, ப்ராஜ்ஞனுமல்ல, ப்ரஜ்ஞனுமல்ல, அப்ரஜ்ஞனுமல்ல, (ஆகையால் எப்படிப்பட்டவன் என்றால்) காணப்படாதவன், வ்யவஹரிக்கப்படக்கூடாதவன், (கர்மேந்திரியங்களுக்கு) எட்டாதவன், அடையாளமில்லாதவன், நினைக்கப்படக்

கூடாதவன், சுட்டிக்காட்டிச்சொல்லடாதவன், ஒரே ஆத்மா வென்ற நம்பிக்கை ஸாரத்தையுடை உலக வ்யவஹாரமற்ற வன், சாந்தன், மங்களகரன், ருக்கிறவன், இவர்தான் நான்காவது பங்கு. அந்த ஆத்ம அறியப்படத்தகுந்தவன்.

8. அப்படிப்பட்ட ஆத்மவர் அக்ஷரத்தினுல் சொல் லப்பட்டவர்; அந்த அக்ஷரம் ஓ; அது மாத்திரைகள் உள் ளது; மாத்திரைகளாவது பா (பங்குகள்); (அவைகளா வன) 'அ'கார, 'உ'கார, 'ம'கார

9. ஜாக்ரதஸ்தானமான நரர்தான் 'அ'காரம்; முத மாத்திரையுள்ளது (முதல் ப வ்யாபித்துக்கொண்டிரு தால் ('அ'காரம் எல்லா வாக்கை விச்வன் எல்லா ஜகத்தை வ்யாபித்துக்கொண்டிருப்பதா அல்லது, முதன்மையால் (காரம் எல்லா அக்ஷரத்திற்கு விச்வன் எல்லா ச்ருஷ்டிக் முதன்மையால்). இவ்விதமா வன் அறிகிருனே அவன் லா இச்சைகளையும் அடைகி; (மகான்களுக்குள்) மு ருகிருன்.

10. ஸ்வப்நஸ்தானமா தைஜஸர்தான் 'உ'காரம்; டாவது மாத்திரையுள்ளது (ண்டாவது பாகம்); உத்கர் ளதாயிருப்பதால் ('அ'காரத்க்காட்டிலும் 'உ'காரமும், ளைக்காட்டிலும் தைஜஸனும் லானது); அல்லது இரட் ளதாயிருப்பதால் ('உ'காரம் அ'காரத்திற்கும் 'ம'காரத் மத்தியிலும், தைஜஸன் விச் வுக்கும் ப்ராஜ்ஞனுக்கும் ம மாக இரண்டை யுடைத் ருப்பதால்). இவ்விதமா அறிகிருனே அவன் ஞானஸ்டத்தை விர்த்திசெய்கிரு ஞானத்தை யடைகிருன்), ஸமானன் ஆகிருன் (ஒரு சத்ருவில்லாதவனுக ஆகிருன்; இவன் குலத்தில் அப்பி இருக்கமாட்டான்.

11. ஸுஷுப்த ஸ்தானரான ப்ராஜ்ஞன்தான் மூன்ருவது மாத்திரையுள்ளது (மூண்ருவது பாகம்

மூத்ரஸ்தானம்; vi. பிருதிவீ—பாதம்; vii. ஆஹவனீயாக்னி—முகம்); பத்தொன்பது முகமுள்ளவர் (இந்திரியங்கள் பத்து, ப்ராணன்கள் ஐந்து; அந்தக்கரணங்கள் நான்கு, ஆக பத்தொன்பது) சப்தாதி ஸ்தூலவிஷயங்களை புஜிக்கிறவர்; வைச்வாநரன் என்று பெயருள்ளவர் (எல்லா நரர்களையும் நடத்துகிறவர்); இவர் தான் முதல்பாதம்;

4. ஸ்வப்ந அவஸ்தையிலுள்ளவர்; உள் அறிவுள்ளவர் (வெளியறிவற்றவர்); ஏழு அங்கமுள்ளவர்; பத்தொன்பது முகமுள்ளவர்; ஸூக்ஷ்மத்தைப் பார்க்கிறவர்; தைஜஸர் (தேஜஸ் ஸம்பந்தமுள்ளவர்) என்று பெயருள்ளவர் இவர்தான் இரண்டாவது பாதம்;

5. எந்தக்காலத்தில் ஸுப்தனாக ஒரு காமத்தையும் இச்சிக்கிறதில்லையோ, ஒரு ஸ்வப்நத்தையும் பார்க்கிறதில்லையோ அது தான் ஸுஷுப்தி என்ற தசை; இந்த ஸுஷுப்தி அவஸ்தையுள்ளவர்; ஒன்றாய்ச் சேர்ந்துபோனவர்; ப்ரஜ்ஞானச்சேர்க்கையாயே இருக்கப்பட்டவர்; ஆனந்தமயர்; ஆனந்தத்தை புஜிக்கிறவர் (துக்கமில்லாதவர்); சித்தத்தை முகமாய்க்கொண்டவர் (அதாவது சித்தத்தின் வழியாய் ஸ்வப்ந, ஜாக்ரத் இவ்வவஸ்தைகளுக்கு வந்துபோக போக்யங்களை அநுபவிக்கிறவர்); ப்ராஜ்ஞனென்று (ப்ரஜ்ஞையாய் மாத்திரம் வ்யாபரிக்கிறவர்) பெயருள்ளவர்; இவர்தான் மூன்றாவது பாதம்.

6. இவர்தான் ஸர்வேச்வரர்; ஸர்வஜ்ஞர்; அந்தர்யாமி; எல்லா பூதங்களுடைய உத்பத்தி நாசம் இவை விஷயத்தில் எல்லாவற்றிற்கும் காரணபூதர்.

7. தைஜஸனுமல்ல, விச்வனுமல்ல, இரண்டுக்கும் மத்தியிலுள்ள அவஸ்தையுள்ளவனுமல்ல, ப்ராஜ்ஞனுமல்ல, ப்ரஜ்ஞனுமல்ல, அப்ரஜ்ஞனுமல்ல, (ஆனால் எப்படிப்பட்டவன் என்றால்) காணப்படாதவன், வ்யவஹரிக்கப்படக்கூடாதவன், (கர்மேந்திரியங்களுக்கு) எட்டாதவன், அடையாளமில்லாதவன், நினைக்கப்படக்

கூடாதவன், குறிப்பிட்டுச்சொல்லப்படக்கூடாதவன், ஒரே ஆத்மா வென்ற நம்பிக்கை ஸாரத்தையுடையவன், உலக வ்யவஹாரமற்ற வன், சாந்தன், மங்களகரன், ஒன்ருயிருக்கிறவன், இவர்தான் நான்காவது பங்கு. அந்த ஆத்மாதான் அறியப்படத்தகுந்தவன்.

8. அப்படிப்பட்ட ஆத்மாவானவர் அக்ஷரத்தினுல் சொல் லப்பட்டவர்; அந்த அக்ஷரம் ஓம்காரம்; அது மாத்திரைகள் உள் ளது; மாத்திரைகளாவது பாதங்கள் (பங்குகள்); (அவைகளா வன) 'அ'கார, 'உ'கார, 'ம'காரங்கள்.

9. ஜாக்ரதஸ்தானரான வைச்வாநரர்தான் 'அ'காரம்; முதல் மாத்திரையுள்ளது (முதல் பாகம்), வ்யாபித்துக்கொண்டிருப்ப தால் ('அ'காரம் எல்லா வாக்கையும், விச்வன் எல்லா ஜகத்தையும் வ்யாபித்துக்கொண்டிருப்பதால்); அல்லது, முதன்மையால் ('அ' காரம் எல்லா அக்ஷரத்திற்கும், விச்வன் எல்லா ச்ருஷ்டிக்கும் முதன்மையால்). இவ்விதமாய் எவன் அறிகிருனே அவன் எல் லா இச்சைகளையும் அடைகிருன்; (மகான்களுக்குள்) முதல்வ ஞகிருன்.

10. ஸ்வப்நஸ்தானரான தைஜஸர்தான் 'உ'காரம்; இரண் டாவது மாத்திரையுள்ளது (இரண்டாவது பாகம்); உத்கர்ஷமுள் ளதாயிருப்பதால் ('அ'காரத்தைக்காட்டிலும் 'உ'காரமும், விச்வ னைக்காட்டிலும் தைஜஸனும் மேலானது); அல்லது இரட்டையுள் ளதாயிருப்பதால் ('உ'காரம், 'அ'காரத்திற்கும் 'ம'காரத்திற்கும் மத்தியிலும், தைஜஸன் விச்வனுக்கும் ப்ராஞ்ஞனுக்கும் மத்தியிலு மாக இரண்டை யுடைத்தாயிருப்பதால்). இவ்விதமாய் எவன் அறிகிருனே அவன் ஞானக்கூட்டத்தை விர்த்திசெய்கிருன் (அதிக ஞானத்தை யடைகிருன்); ஸமாநன் ஆகிருன் (ஒருவனுக்கும் சத்ருவில்லாதவனுக ஆகிருன்); இவன் குலத்தில் அப்பிர்ம வித்து இருக்கமாட்டான்.

11. ஸுஷுப்த ஸ்தானரான ப்ராஞ்ஞன்தான் 'ம'காரம்; மூன்ருவது மாத்திரையுள்ளது (மூன்ருவது பாகம்); அளப்ப

தால் (முதலில் இழுத்து, பிறகு விடுவதால்). (ப்ரணவத்தை பல் தடவை உச்சரிக்கும்பொழுது 'அ'கார 'உ'காரங்கள் 'ம'காரத்தில் முடிவை அடைகிறது போலும், பிறகு அதில் நின்றும் புறப்படுகிறதுபோலும், தோற்றப்படுகிறது; அப்படியே, விச்வனும் தைஜஸனும் ப்ராஜ்ஞனிடத்தில் அடங்கி மறுபடியும் வெளிப்படுகிறார்கள்); அல்லது, லயப்படுத்திக்கொள்வதால் ('அ' 'உ' இவை 'ம'காரத்தில் போய் அடங்கி ஒன்றாய்ப்போகின்றன; அப்படியே விச்வனும் தைஜஸனும் ப்ராஜ்ஞனிடத்தில் போய் அடங்கி ஒன்றாய்ப் போகிறார்கள்). இவ்விதமாய் எவன் அறிகிறானோ அவன் இந்த ஜகத்தை முழுதும் அளக்கிறான் (அறிகிறான். ஜகத்காரண ஆத்மாவாக ஆகிறான்).

12. நான்காவது பாகமாகிய ஆத்மா மாத்திரையில்லாதவன் (அளவுக்கெட்டாதவன்), வ்யவஹரிக்கப்படத்தகாதவன், ப்ரபஞ்ச ஒழிவிடம், மங்களகரன், ஒன்றுபட்டவன், இப்படிப்பட்ட 'ஓம்'கார ஸ்வரூபன் எவன் இப்படி அறிகிறானோ அவன் ஆத்மாவினிடத்திலேயே ஆத்மாவாக கலந்து போய்விடுகிறான்.

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி.

மாண்டூக்யோபநிஷத் முற்றிற்று.

த்வாதசோபநிஷத் முற்றிற்று.